 

**நான்காம் தமிழ்ச் சங்கம் - மதுரை**

**செந்தமிழ் கலை மற்றும் கீழ்த்திசைக் கல்லூரி**

*(தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின் A தரம் பெற்றது.*
*மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைப்பு பெற்றது)*

**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்**

**அரண் தமிழ் அறக்கட்டளை**

**இணைந்து நடத்தும்**

# தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்

**கருத்தரங்க நாள்: 17.10.2024 வியாழக்கிழமை**

**இடம்: வைரவிழா அரங்கம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை**


**பதிப்பாசிரியர்கள்**

முனைவர் **கி.வேணுகா**
இணைப்பேராசிரியர். ஆங்கிலத் துறைத்தலைவர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

முனைவர் **பூ.பூங்கோதை**
இணைப்பேராசிரியர், துறைத்தலைவர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

முனைவர் **பிரியா கிருஷ்ணன்**
நிர்வாக ஆசிரியர், அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்

## தொகுதி - 2


**கருத்தரங்க ஆலோசனைக் குழு**

முனைவர் **ஜெ.போ.சாந்திதேவி**
முதல்வர் (பொ..)
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

**கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்**

முனைவர் **கி.வேணுகா**
இணைப்பேராசிரியர். ஆங்கிலத் துறைத்தலைவர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

முனைவர் **பூ.பூங்கோதை**
இணைப்பேராசிரியர், துறைத்தலைவர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

முனைவர் **பிரியா கிருஷ்ணன்**
நிர்வாக ஆசிரியர், அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

**கருத்தரங்க இணை ஒருங்கிணைப்பாளர்கள்**

முனைவர் **பா.நேருஜி**
முனைவர் **சு.மலர்விழி**
முனைவர் **பெ.இந்துராணி**
முனைவர் **சா.கணேசன்**
உதவிப்பேராசிரியர்கள், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

**ஒருங்கிணைப்பு குழு**

முனைவர் **கோ.சுப்புலெட்சுமி**
முனைவர் **மா.செல்வத்தரசி**
முனைவர் **பி.ஆறுமுகம்**
முனைவர் **அ.நந்தினி**
முனைவர் **மு.செந்தில்குமார்**
முனைவர் **ஜெ.கோகிலா**
முனைவர் **தி.பிருந்தா**
திரு **வீ.அதிவீரபாண்டியன்**
திரு **உ.இராஜீவ்காந்தி**


---


மொத்த பக்கம் : xii+252= 264

ISSN : 2582 & 399x

# வாழ்த்துரை

**வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி**
செயலாளர்,
நான்காம் தமிழ்ச்சங்கம்,
மதுரை

பழமையும் பெருமையும் ஒருங்கே அமைந்த மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் தமிழ்க் காப்புப் பணியை முதன்மை நோக்கமாகக் கொண்டு வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவரின் பெரும் முயற்சியால் 1901ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. தொடங்கப்பட்ட நோக்கம் குன்றாமல் 123 ஆண்டுகளாகத் தொடர்ந்து தொய்வின்றி செயல்பட்டு வருகிறது. பழைய ஏடுகளைத் தொகுத்தும் பதிப்பித்தும் அறிஞர்களின் ஆய்வுத் திறத்தினைப் பரப்பும் நோக்கோடு 1902ஆம் ஆண்டு செந்தமிழ்த் திங்கள் இதழ் தொடங்கப்பட்டது. செம்மொழியாக அங்கீகரிக்க காரணமாய் அமைந்த பரிதிமாற் கலைஞரின் உயர்தனிச் செம்மொழி எனும் கட்டுரை வெளிவந்தது இவ்விதழில்தான். அறிஞர்களின் ஆய்வுத் திறத்தினைச் சிறப்பாக வெளியிட்டும் நற்றமிழ் கல்வியளித்தும் தமிழுக்கு அணி சேர்த்து வருகிறது. ஒரு மொழியின் பெருமை தொன்மையால் மட்டும் ஆகாது தொடர்ச்சியால் அமையப்பெறும். எனவே மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கல்லூரி தமிழ் வளர்ச்சிப் பணியின் தொடர்ச்சியாய் பல கருத்தரங்கம், பயிலரங்கம் நடத்தி தமிழாராய்ச்சிப் பணிகளுக்கு அணிசேர்த்து வருகிறது. உலகின் மூத்த மொழியாகத் தமிழும் பண்பாட்டில் சிறந்தவர்கள் தமிழராகவும் இருந்துள்ளனர் என்பது ஆய்வாளர்கள் வழி அறியப்படுகிறது. அத்தகைய சிறப்புமிக்க பண்பாட்டினை எடுத்தியம்பும் வகையில் ஐந்து நாள் ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடத்தி அதன் தொடர்ச்சியாய் பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்தத் திட்டமிட்டு பண்பாட்டு விழுமியங்கள் அடங்கி கருத்துப்பேழையாக அமைந்த ஆய்வுக் கோவையினை வெளிக்கொணர்ந்திருக்கும் ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியர் முனைவர் கி.வேணுகா மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் இணைப்பேராசிரியர் முனைவர் பூ.பூங்கோதை ஆகியோர் மேலும் பல கருத்தரங்குகள் நடத்த வாழ்த்துகள். இணை ஒருங்கிணைப்பாளர்களாச் செயல்பட்ட உதவிப் பேராசிரியர்கள் முனைவர் பா.நேருஜி, முனைவர் சு.மலர்விழி, முனைவர் பெ.இந்துராணி, முனைவர் சா.கணேசன் ஆகியோருக்கும் பாராட்டுகள். இக் கருத்தரங்கில் இணைந்து சிறப்பாக ஆய்வுக்கோவை வெளிவர துணைநின்ற அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் மற்றும் அரண் தமிழ் அறக்கட்டளை நிருவாகத்தினருக்கு நன்றியும் பாரட்டுகளும்.

# வாழ்த்துரை

**திருமதி இராணி இலக்குமி குமரன் சேதுபதி,**
செயலர்,
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை - 625 001

எம் நான்காம் தமிழ்ச் சங்கம் செந்தமிழ்க் கல்லூரியில் பணியாற்றும் இணைப் பேராசிரியர்கள் முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் கி.வேணுகா ஆகியோர் மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், முதல்வர் ஆகியோர் அரண் பன்னாட்டுத் தமிழாய்விதழோடு இணைந்து 17.10.2024 அன்று நடத்தும் "தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்" என்னும் பொருண்மையிலான கருத்தரங்கில் வெளியிட இருக்கும் மலரைக் கண்டு பெருமிதமும் மட்டற்ற மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழு (NAAC) நமது கல்லூரிக்கு 'A' தரச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்துள்ளது. இதற்காகக் கடுமையாக உழைத்த நான்காம் தமிழ்ச் சங்கச் செயலாளர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி, முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோருக்கு நன்றிகூறக் கடப்பாடுடையேன். நம் கல்லூரி இத்தகுதியைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டு மென்மேலும் வளரவும், நன் மாணாக்கர்களை உருவாக்கவும், தமிழ்ச் சமுதாயத்திற்கு அர்ப்பணிப்பு உணர்வோடு செயலாற்றவும் தொடர் முயற்சிகளிலும் கடின உழைப்புகளிலும் ஈடுபட வேண்டியுள்ளது.

இத்தருணத்தில் 'தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்' என்னும் தலைப்பிலான, ஆழமாக ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய இந்த ஆய்வு மலரைக் கண்டேன். 'ஈன்ற பொழுதை விடத் தன் மகனைச் சான்றோனாகக் கேட்டவல்ல; கண்ட நற்றாயாகப் பெருமகிழ்ச்சி' அடைகின்றேன். இதற்காக கடினமாக உழைத்த கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் பூ.பூங்கோதை, முனைவர் கி.வேணுகா ஆகியோரை பாராட்டுகிறேன். இதுபோன்ற ஆய்வரங்குகளும் ஆய்வுக் கட்டுரைகளும் செம்மொழியாகிய நம் தாய்மொழியின் இலக்கியச் சிறப்புக்களையும், தமிழ்ப் பண்பாட்டின் தனித்துவங்களையும் உலகறியச் செய்யப் பயன்படும் என்பதில் துளியளவும் ஐயமில்லை.

"தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்" என்னும் இந்த ஆய்வு மலரில் மொத்தம் 110 ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் அனைத்தும் சங்கச் செவ்வியல் இலக்கியங்கள் காட்டும் தொல்தமிழர்களின் வாழ்வியல் பண்பாட்டின் பன்முகத் தன்மைகளை வெளிப்படுத்துவதாக உள்ளன; இவை என்றும் பயனுள்ளவை; இனிவரும் இளைய தலைமுறையினர்க்கு நம் முன்னோர்களின் வாழ்வியல் பண்பாட்டினை அறிமுகப்படுத்துபவை.

படித்துப் பயன் பெறுக! வாழ்த்துக்கள்!!

# வாழ்த்துரை

**முனைவர் ஜெ.போ.சாந்திதேவி**
முதல்வர் (பொ,.)
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

*தமிழ் இலக்கியச் சிந்தனைகள் – உலகம் வியந்து போற்றும் சிறப்புக்குரியனவாகும். தமிழ்ப் பண்பாட்டின் கருவூலமாக விளங்கும் புறநானூற்றில் இடம்பெற்றுள்ள கனியன் பூங்குன்றனார் பாடலின் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற வரி ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே பொதுவுடமை பேசி இருப்பதை அறியலாம். தொடர்ந்து தமிழ் இலக்கியங்கள் பல்வேறு நிலைகளில் பரிணாமம் பெற்று மொழி வளச்சிந்தனைக்கும் பண்பாட்டினை பறைசாற்றிடவும் பயன்படுவதை அறியலாம். அவ்வகையில் சங்க காலம் முதல் சமகால இலக்கியப் படைப்புகளில் வெளிப்படும் பண்பாட்டுப் பதிவுகளை வெளிக்கொணரும் வகையில் கட்டுரைகள் பெறப்பட்டு தொகுத்துள்ள பணி பாராட்டுதலுக்குரியது.*

*காதல், வீரம், கொடை, கல்வி, அறம், விருந்தோம்பல், பக்தி, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், உணவு, உடை, கலைகள் என்ற பல்வேறு கருப்பொருளைத் தாங்கி தமிழரின் பண்பாட்டு விழுமியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலக்கியங்கள் மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டுவதுடன் மனித மனங்களில் அன்பு, இரக்கம், கருணை, பொறுமை என்ற நல்உணர்வு பெருகிடப் பெருந்துணையாக விளங்குகின்றன. இத்தகைய இலக்கியத் தரவுகளைக் கொண்டு தமிழரின் பண்பாட்டுக் கூறுகளை ஆய்வுக்குட்படுத்தி ஆவணப்படுத்தும் நோக்குடன் இக்கருத்தரங்கை நடத்தத் திட்டமிட்டுச் சிறப்பாக ஒருங்கிணைத்த பேராசிரியர்கள் முனைவர் கி.வேணுகா மற்றும் முனைவர் பூ.பூங்கோதை ஆகியோருக்கு வாழ்த்துகள். மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க் கல்லூரி, அரண் பன்னாட்டுத் தமிழாய்விதழ் மற்றும் அரண் தமிழ் அறக்கட்டளை இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கம்*

# அணிந்துரை

**முனைவர் வை.இராமராஜபாண்டியன்**
புலத்தலைவர்,
தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை.

*மதுரை, நான்காம் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கல்லூரி, தமிழ் உயராய்வு மையத்தினர் நடத்தும் 'தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்' என்னும் ஆய்வு மலரைப் படித்துப் பார்த்தேன்; மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். இந்த ஆய்வு மலரில் மொத்தம் 112 ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.*

*தொல்தமிழர்களின் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகள் தலைமைப் பொருளுக்கேற்ப இவ்ஆய்வு மலர்க் கட்டுரைகளின் மையப் பொருள்களாக இழையோடியுள்ளன. தொல்தமிழரின் விருந்தோம்பல் பண்பாடு, திருமந்திரத்தில் வாழ்வியல் பண்பாடு, தொல்காப்பியத்தில் இசைப்பண்பாடு, நாட்டுப்புறச் சிறுவர்களின் விளையாட்டுக்களில் காணலாகும் தமிழர் பண்பாட்டுச் சிந்தனைகள், பண்பாட்டுப் பார்வையில் சங்க அக இலக்கியத் தோழி, பழந்தமிழ் இலக்கியங்களின் உணவுப் பண்பாடு, பெரும்பாணாற்றுப்படையில் பரிசில் மற்றும் உணவுப் பண்பாடு, அன்றாட வாழ்க்கையின் வாழ்வியல் பண்பாட்டு விழுமியங்கள், ஆற்றுப்படை நூல்களில் உணவுப் பண்பாடு, கலித்தொகையில் பழந்தமிழர் வீரப் பண்பாடும் காதலும், குறும்பர் இனமக்களின் உறவுமுறைப் பண்பாடு, சிறுபாணாற்றுப்படையில் புலவர்களின் பண்பாடு, புறநானூற்றில் தமிழர் பண்பாடு, அகநானூற்றில் பழந்தமிழர் பண்பாடு, சங்க இலக்கியத்தில் கொல்லரின் தொழில்முறைகள், புறப்பண்பாட்டின் போர்நெறிகள், பண்டைய மன்னர்களின் வீரப்பண்பாடு, பழந்தமிழ் இலக்கியங்களில் மகளிரின் வளையல் அணியும் பண்பாடு, பழந்தமிழ்க் கூத்துக் கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும், சங்கத் தமிழர்களின் தொழில் பண்பாடு, ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல் பண்பாடு ஆகியன இவ்ஆய்வு மலர்க் கட்டுரைகளின் மையப் பொருள்களாக அமைந்திருப்பது மிகச்சிறப்பாகும்.*

*'தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்' என்னும் ஆய்வரங்கினைக் காலத்தின் தேவையறிந்து முயன்று நடத்திய செந்தமிழ்க் கல்லூரித் தமிழ் உயராய்வு மையத்தின் இணைப் பேராசிரியர் முனைவர் பூ.பூங்கோதை, ஆங்கிலத் துறைத்தலைவரும் இணைப் பேராசிரியருமான முனைவர் கி.வேணுகா ஆகியோரைப் பாராட்டி, இதுபோன்ற பணிகளை அவர்கள் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.*

# பதிப்புரை

**முனைவர் கி.வேணுகா**
**முனைவர் பூ.பூங்கோதை**
**முனைவர் பிரியா கிருஷ்ணன்**

மதுரை, செந்தமிழ்க் கல்லூரியின் தமிழ் உயராய்வு மையத்தில் தொல் தமிழர்களின் பண்பாட்டுப் பதிவுகளை வெளிப்படுத்தும் விதமாக 17.10.2024 வியாழக்கிழமை அன்று **"தமிழிலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்"** என்னும் கருத்தரங்கினை நடத்துவதற்கு முன் அனுமதியும் வாழ்த்துரையும் வழங்கிய செந்தமிழ்க் கல்லூரியின் செயலர் திருமதி **இராணி இலக்குமி குமரன் சேதுபதி** அவர்களுக்கும் இக்கருத்தரங்கம் செவ்வனே நடைபெறுவதற்கு ஆக்கப்பூர்வமான நல்லுரைகளை வழங்கியதோடு தேவையான பொருள் உதவி உட்பட அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்து ஊக்கப்படுத்திய மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தின் ஆற்றல்மிகு செயலாளர் வழக்கறிஞர் **ச.மாரியப்பமுரளி** ஐயா அவர்களுக்கும் இக்கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள் என்ற முறையில் முதற்கண் எம் பணிவான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இக்கருத்தரங்க ஆய்வு கோவை உருவாக்கத்தில் பல்வேறு நிலைகளில் தோன்றா துணையாக நின்று ஊக்கப்படுத்திய செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெ.போ.சாந்தி தேவி அவர்களுக்கு எம் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இக்கருத்தரங்க மலர்களின் கட்டுரைகளைப் படித்துப் பார்த்து அக் கட்டுரைகளின் ஆய்வுப் போக்குகளையும் திறன்களையும் தரத்தையும் மதிப்பீடு செய்து நல்லதொரு அணிந்துரை வழங்கிய மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழியற் புலத்தலைவர் **முனைவர் வை.இராமராஜபாண்டியன்** அவர்களுக்கு எம் மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கருத்தரங்க ஆய்வு கோவை உருவாக்கத்தில் துணைநின்று உதவிய அரண் பன்னாட்டு தமிழ் ஆய்விதழ் நிருவாக ஆசிரியர் **முனைவர் பிரியா கிருஷ்ணன், திருமிகு வீ.அதிவீரபாண்டியன், திருமிகு உ.ராஜீவ்காந்தி, திருமிகு அருண்** மற்றும் அன்பார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். கணினி வடிமைப்பு செய்துதவிய **பி.கி.இராம்குமார் (ஜெயஸ்ரீ கிராபிக்ஸ்)** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கருத்தரங்க நிகழ்வில் இணை ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்ட பேராசிரியர்கள் **முனைவர் பா.நேருஜி, முனைவர் சு.மலர்விழி, முனைவர் பெ.இந்துராணி, முனைவர் சா.கணேசன்** அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களின் வேண்டுதல் மற்றும் அழைப்புக்களை ஏற்றுத் "தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்" என்னும் பொதுமைத் தலைப்பிற்கேற்பப் பழந்தமிழ் இலக்கியங்களில் காணலாகும் பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை விளக்கி, உரிய காலத்தில் பண்பாட்டுப் பொருண்மைகளில் தரமான ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய தமிழ்நாட்டின் பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், முனைவர்பட்ட ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், சிந்தனையாளர்கள், முதுகலை மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் எம் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இக்கருத்தரங்க ஆய்வுக்கோவை செம்மையாக அமைவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பொருளடக்கம்


1. சிலப்பதிகாரத்தில் பொருள் சார் பண்பாடு 1
   - வீ.அதிவீரபாண்டியன்

2. நாட்டுப்புற இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள் 7
   - இரா. ஆறுமுக ஜோதி

3. தாலாட்டுப் பாடல்களில் இலக்கணக் கூறுகள் 11
   - முனைவர் பெ.இந்துராணி

4. சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாட்டுப் பதிவுகள் 14
   - வ.இன்பமேரி

5. ஆசாரக்கோவையில் பண்பாட்டுப் பதிவுகள் 18
   - ப.இராமுத்தாய்

6. சங்கத்தமிழ் கூறும் தங்கத் தமிழ்நாடு 23
   - ஈ. இராஜா

7. புழங்குப்பொருள் பண்பாட்டில் தமிழும் தமிழரும் 27
   - உ.இராஜீவ்காந்தி

8. தமிழக கோவில் கட்டடக்கலையின் அமைப்பு முறை 35
   - அ.இலட்சுமணன்

9. நம்மாழ்வாரும் திருவேங்கடத்தானும் 40
   - வெ.கலாவதி

10. சங்ககாலக் குறிஞ்சிப் பாடல்களில் தமிழ்ப்பண்பாட்டுப் பதிவுகள் 43
    - சி.கிருஷ்ணமூர்த்தி

11. பெரியபுராணத்தில் உணவுக்கொடை 47
    - முனைவர் ச.கோகுல்கிருஷ்ணன்

12. நாலடியார் கூறும் தமிழர் மரபில் அறக்கோட்பாடுகள் 51
    - சு.கோபாலகிருஷ்ணன்

13. பரிபாடலில் தமிழரின் வழிபாடும் பண்பாட்டு வெளிப்பாடும் 56
    - முனைவர் கா. சந்தானலெட்சுமி

14. கவிஞர் அ.வெண்ணிலாவின் கவிதைகளில் பண்பாட்டுப் பதிவுகள் 61
    - லெ.சாமுண்டீஸ்வரி

15. ஔவை நாடகத்தில் தமிழர் பண்பாட்டுப் பதிவுகள் 64
    - முனைவர் கோ.கருணாகரன்

| | | |
|---|---|---|
| 16. | புறநானூற்றில் பண்பாடு<br>- கி.இரா.சிந்து | 71 |
| 17. | சங்க இலக்கியத்தில் பழந்தமிழரின் பண்பாடு<br>- முனைவர் இரா. சுகுமார் | 75 |
| 18. | பழந்தமிழர் பண்பாடு<br>- முனைவர் சு சுதா | 79 |
| 19. | சங்க இலக்கியங்கள் உணர்த்தும் பண்பாடும் கலைகளும்<br>- கோ. சுந்தரி | 83 |
| 20. | சங்க இலக்கியங்களின் பெண்ணியச் சிந்தனைகள்<br>- ஆ.சுரேஷ் | 87 |
| 21. | எட்டுத்தொகை அக இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்<br>- பா. சுரேஷ் | 92 |
| 22. | சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல்<br>- முனைவர் ஞா.செல்வராக்கு | 96 |
| 23. | தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்<br>- வெ. தனலட்சுமி | 100 |
| 24. | கணியான்<br>- கு.திருமுருகானந்தன் | 106 |
| 25. | புது வாழ்க்கை - சிறுகதை தொகுப்பில்<br>- எளிய மக்களின் பண்பாடும் வாழ்க்கை முறையும்<br>- ம.தேவி | 109 |
| 26. | போர்க்கள மெய்ப்பாடுகள்<br>- அ. தேன்மொழி | 112 |
| 27. | சங்க இலக்கியங்களில் தமிழர் பண்பாடு<br>- முனைவர் அ.தேனமுது | 119 |
| 28. | தரணி போற்றும் தமிழர் பண்பாடு<br>- பா.நித்யா | 124 |
| 29. | நாயன் மார்களின் அருளியல் பண்பாடு<br>- முனைவர் தி. நெல்லையப்பன் | 127 |
| 30. | தமிழர் பண்பாடும் கலாச்சாரமும்<br>- மு.பவித்ரா | 131 |
| 31. | குருசாமிக்கோனாரின் அழகர் வர்ணிப்புப் பாடலில்<br>நாட்டுப்புறப் பண்பாடுகள்<br>- ஆய்வாளர் கு.பவுர்ணமி | 135 |

32. புறநானூற்றில் பண்பாட்டுப் பதிவுகள் 138
- கூ.பழனியம்மாள்

33. சங்க இலக்கியத்தில் உணவு 141
- பேரா.சி.பாக்கிய செல்வரதி

34. ஏலாதியில் வாழ்வியல் அறம் 145
- முனைவர் சு. பால் மோகன்

35. சங்க இலக்கியத்தில் ஒப்பனைக்கலை 151
- முனைவர் பா.பிரியா

36. அறம் மறந்த பேகனுக்கு அறம் உணர்த்திய புலவர்கள் 155
- முனைவர் சு.பெர்சியாஜீவபாய்

37. இன பண்பாட்டில் மாயர்கள் 159
- அ.பைசுநிஷா

38. காலந்தோறும் பண்பாடு 163
- பொ.பொன்னுவேல்

39. தமிழ் வரலாற்றில் பண்பாட்டுப் பதிவுகள் 167
- இரா. மணிமேகலை

40. இரமணிச்சந்திரன் புதினங்களில் பெண்களின் அறப்பண்பாடு 171
- வி.மதி

41. அகநானூற்றில் பண்பாட்டுப் பதிவுகள் 176
- மு.மயில்

42. மோகனாங்கி - தஞ்சைப்படையெடுப்பு (சமயங்களை முன்வைத்து) 180
- ப. மரியதேவநேசம்

43. குறுந்தொகையில் மக்கள் வாழ்வியல் 184
- சே. மலையரசன்

44. அப்துல் ரகுமானின் ஆலாபனை கவிதையில்
பண்பாட்டு மானிடவியல் பதிவுகள் 188
- முனைவர் பே.மஹேஸ்வரி

45. மல்லர் இனமக்களின் வாழ்வியல் 194
- முனைவர் சோ.முகுந்தன்

46. சங்கத் தமிழ் காட்டும் தமிழர் பண்பாடு 202
- மு. முத்து முருகன்

47. பண்பாட்டியல் நோக்கில் நற்றிணை 205
- முனைவர் சு.முருகவேல்

48. தமிழர் பண்பாட்டு 209
- அ.முருகேஸ்வரி

49. தமிழ் இலக்கிங்களில் பண்பாட்டு வளங்கள் 213
- முனைவர் போ.முனியாண்டி

50. தமிழர் வாழ்வியலில் அடைக்கலம் போற்றல் 217
- முனைவர் பீ. மெர்சிகுளோரி

51. நற்றிணையில் பண்பாட்டுப் பதிவுகள் 221
- சு.ராஜலட்சுமி

52. இலக்கியங்கள் உணர்த்தும் பண்பாட்டு விழுமியங்கள் 224
- க.ரேவதி

53. அகநானூற்றில் குறிஞ்சித் திணை ஒழுக்காறு 228
- ரா. லோக தர்ஷினி

54. தமிழர் பண்பாட்டில் தொன்மத்தின் மீதான நம்பிக்கை 234
- முனைவர் மா.லோகநாயகி

55. பொருநராற்றுப் படை உணர்த்தும் பண்பாடு 240
- முனைவர் கு.வாணி ஜமுனா

56. அகநானூறு காட்டும் பண்பாடு 247
-கோ.விஜயராஜன்

# சிலப்பதிகாரத்தில் பொருள் சார் பண்பாடு

நெறியாளர்
**முனைவர் கோ.சுப்புலெட்சுமி,**
துணைமுதல்வர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

ஆய்வாளர் **வீ.அதிவீரபாண்டியன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

தமிழ் மொழி இலக்கிய வளமிக்கது, சங்க இலக்கியங்களை அடுத்து மக்களின் வாழ்வியல் நிலைகளின் சிறப்பினை வெளிப்படுத்தும் பேரிலக்கியமாக விளங்குவது காப்பியங்கள் ஆகும். காப்பியங்கள் சமுதாயத்தை இணைக்கும் பாலம் போன்ற தன்மை உடையன. தமிழில் தோன்றிய முதல் காப்பியமாக விளங்குவது சிலப்பதி காரம் ஆகும். நற்கருத்துக்களை நவின்றுள்ள இக்காப்பியம் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் விரவப் பெற்றதால் முத்தமிழ்க் காப்பியம் என்றும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும் வழங்கப் படுகிறது. மக்களின் வாழ்வியல், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், கலைகள் போன்ற பல விழுமியங்களைச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கின்றது. மக்களின் தேவைகளுக்காக பொருள்கள் உருவாக்கப்பட்டன. அப்பொருள்களின் மூலம் பழந்தமிழ் மக்களின் பண்பாட்டு விழுமியங்களை அறிய இயலுகிறது. எனவே குடிமக்கள் காப்பியமாகப் போற்றப்படும் சிலப்பதிகாரத்தைப் பொருள்சார் பண்பாட்டின் அடிப்படையில் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்பாடு

பண்பாடு என்பது மனிதர்களின் வாழ்க்கை முறையாகும். மக்கள் அனைவரும் கூட்டாகச்சேர்ந்து செயல்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமே பண்பாடாகும் என்பர். மொழி, உணவு, கலை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், தொழில் சார் தெரிவுகள், கருவிகள் போன்ற விழுமியங்கள் அந்தச் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறுகள் எனப்படும். பண்பாடு எனும் சொல் ஆங்கிலத்தில் ‘கல்சர்’ (Culture) என வழங்கப்பட்டு வருகிறது. பண்படு எனும் வினைச் சொல்லிலிருந்து பண்பாடு எனும் சொல் தோன்றியதாகக் கூறுவர். பண்படு என்றால் பக்குவப்படு, சீர்படுத்து, திருத்தமுறு என்பது பொருளாகும். பண்பாடு பற்றி மொழியறிஞர் பாவாணர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்,

**“பண்படுவது பண்பாடு. பண்படுதல், சீர்படுதல் அல்லது திருந்துதல், திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண் படுத்தப்பட்ட நிலமென்றும்” (பாவாணர், பண்டைத்தமிழ நாகரிகமும் பண்பாடும், ப.5)** எனக்கூறுகிறார். கலைக்களஞ் சியத்தில் ‘பண்பாடு’ என்பதற்கு,

“மனிதனை விலங்கினத்திலிருந்து வேறுபடுத்துவது பண்பாடே, பண்பாடு மக்களின் கலைகளிலும் காவியங்களிலும் காணப்படும். இது பாரம்பரியம் வாயிலாக ஒரு சந்ததியரிடமிருந்து அடுத்த சந்ததியினருக்கு வந்து சேருவதன்று; கல்வியாலும் பயிற்சியாளும் கிடைப்பது. ஆனால் பாரம்பரியமான கல்வி அல்லது பயிற்சி பெறுவதற்கான ஆற்றலை

அளிப்பதாகும்." (கலைக்களஞ்சியம், தொகுதி – 6, 1959, பக்,690 – 691) என விளக்கமளிக்கிறது.

## பொருள் சார் பண்பாடு

மானுடச் சமூகங்கள் எல்லாம் தாம் வாழும் சுற்றுச்சூழலுக்கும் காலத்திற்கும் ஏற்ப வாழ்ந்தாக வேண்டும். இந்தப் படிமுறையில் சமூகங்கள் தத்தம் சொந்த நோக்கத்திற்கேற்ப இயற்கை உலகை வடிவமைக்க பல்வேறு அணுகுமுறைகளை வளர்த்தெடுத்துள்ளன. இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும் கலைப் படைப்புகளாகவும் மாற்றிக் கொள்வதையே 'புழங்கு பொருள் சார் பண்பாடு' என்கின்றனர். மக்கள் தங்கள் வாழ்க்கைத் தேவையை நிறைவு செய்துகொள்ள பயன்படுத்தும் அனைத்து பொருள்களும் பொருள் சார் பண்பாட்டின் (Material Culture) வகைமையில் அடங்கும். "இயந்திரங்கள், கருவிகள், மரச் சாமான்கள், வீட்டுப் பொருள்கள், உடைகள், அணிகலன்கள், போக்கு வரத்து சாதனங்கள், சாலைகள், வேளாண் நிலங்கள், எழுதுகோல், அழகுப் பொருள்கள், போர்க்கருவிகள் போன்ற எண்ணற்ற பொருள்கள் பொருள்சார் பண்பாட்டைச் சார்ந்தவையாகும்" (சி.பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், பக்.175,176)

### உடை

மனிதன் அடிப்படைத்தேவைகளுள் ஒன்றானது உடை. "உண்பது நாழி உடுப்பவை இரண்டே" என்கிறது புறநானூறு. பண்டைக் காலத்தில் மக்கள் இலை தழைகளையும் விலங்குகளின் தோலையும் ஆடையாக அணிந்தனர். மக்களது வாழ்வு மேம்பட்ட போது அவர்களது ஆடையில் நேர்த்தியும் அழகும் மேம்பட்டது.

"சிலப்பதிகாரத்துக்கு முந்திய தமிழ் இலக்கியங்களில் பெண்கள் மார்பு கச்சை அணிந்ததற்கான சான்றுகள் இல்லை" என்கிறார் தொ.பரமசிவன். (தொ. பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், ப.46)

சமுதாயத்தில் ஒவ்வொருவரும் தங்களின் பொருள் வளத்திற்கும் மரபிற்கும் ஏற்ப வெவ்வேறு வகையான ஆடைகள் அணிந்துள்ளனர். அக் காலத்தில் மக்கள் பட்டு, விலங்கின் மயிர், பருத்திப் பஞ்சு ஆகியவற்றிலிருந்து அமைக்கப்பட்ட ஆடையினை அணிந்துள்ளனர். இதனை,

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்"
(சிலம்பு 5:16)

"பொங்கொளி அரத்தப் பூம்
பட்டுடையினன்" (சிலம்பு 22:46)

"உரைசால் பொன்னிறம் கொண்ட
உடையினன்" (சிலம்பு 22:67)

எனும் பாடலடிகளால் அறியமுடிகிறது. "அரசர்க்கும் அரசியல் அதிகாரிகட்கும் அரண்மனை அலுவலர்களுக்குமே, சட்டையணியும் உரிமையிருந்தது. சட்டை உடம்பிற்குப் பை போன்றிருப்பதால் இது மெய்ப்பை என்றும் பெயர்பெறும்." என்கிறார். (பாவாணர், பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும், ப.47) இதனை,

"நுண்வினைக் கொல்லர், நூற்றுவர் பின் வர,
மெய்ப்பை புக்கு, விலங்கு நடைச்
செலவின்
கைக் கோல் கொல்லனைக் கண்டனனாகி"
(சிலம்பு 16:106-108)

என்னும் சிலப்பதிகார வரிகள் உணர்த்தும். இதன் மூலம் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பெயரில் அமைந்த மக்கள் பொருளாதார நிலைக்கேற்பவும் சமூகத்தில் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட இடத்தைப் பொருத்தும் ஆடைகள் அணிந்திருந்தமையை அறிய முடிகிறது.

## அணிகலன்கள்

பண்டைக்கால மக்கள் விரும்பி அணிந்து கொள்ளும் வகையில் அணிகலன்கள் செய்வதற்கான பொருள் களும் அதனைக் கவினுறச் செய்வதற்கு பொற்கொல்லர்களும் இருந்தனர். அணிகலன்களையும் ஆடைகளையும் மக்கள் தங்களின் பொருள் வளத்திற்கு ஏற்ப அணிந்து தங்களை அழகுபடுத்திக் கொண்டனர். தலையணிகளில் முதன்மை பெற்றது மன்னனின் முடிமணியாகும். இதனை,

**"அடியேன் அறியேன் ஆயினும் வேந்தர்**
**முடிமுதற் கலங்கள் சமைப்பேன் யான்**
**என"** (சிலம்பு:16:114)

அரசர்க்கு மணிமுடி முதலான ஆபரணங்களைச் செய்து தருபவன் என்று பொற்கொல்லன் தன்னைப் பற்றிக் கூறும் கருத்தின் வழி மன்னன் தம் தலையில் மணி அணிந்த செய்தி புலனாகின்றது.

**"ஒண்கதிர் நித்திலம் பூணொடு புனைந்து"**
(சிலம்பு 22:18)

**"குன்றாமணிபுனை பூணினன் பூணொடு**
**முடிமுதல் கலன்கள் பூண்டனன்"**
(சிலம்பு 22:38:39)

**"மன்னிய சிறப்பின் மறவேல் மன்னவர்**
**அரைசு முடியொழிய அமைந்த பூணினன்"**
(சிலம்பு 22:65-64)

**"வெண்ணிறத் தாமரை அறுகை**
**நந்தியென்று**
**இன்னவை முடித்த நன்னிறச் சென்னியன்"**
(சிலம்பு 22:19:20)

**"வட்டிகை இளம்பொரி வன்னிகைச் சந்தனம்**
**கொட்டமொடரைத்துக் கொண்ட**
**மார்பினன்"** (சிலம்பு 19:28)

என வரும் அடிகள் மன்னன் மற்றும் மக்கள் அணிந்த அணிகலன்களையும் அலங்காரப் பொருட்களையும் குறிப்பிடு கின்றன. கண்ணகி இடையில் மேகலை எனும் அணிகலன் அணிந்த செய்தியை,

**"அம்துகில் மேகலை அசைந்தன**
**வருத்த"** (சிலம்பு 4 : 30)

என்றும், காதில் வைரங்கள் பதிக்கப்பட்ட நீலக் குதம்பையாக அமைந்த காதணியை அணிந்திருந்தமையை,

**"அணித்தோட்டுத் திருமுகத்து ஆயிழை**
**எழுதிய"** (சிலம்பு 8 : 111)

என்றும், மாதவி காலில் அணிந்திருந்த அணிகலன்களாகப் பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, அரியகம் என பலவற்றைக் குறிப்பிடுகிறார்.

**"நலத்தகு மெல்விரல் நல்அணி செறீஇப்,**
**பரியகம் நூபுரம் பாடகம் சதங்கை**
**அரியகம் காலுக்கு அமைவுற அணிந்து"**
(சிலம்பு 6 : 63 - 65)

எனக் குறிப்பிடுவதன் வாயிலாக பண்டைத் தமிழர்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர் எனத் தெரிகிறது. இவர்கள் தலைமுதல் பாதம் வரை பலவிதமான அணிகலன்களை அணிந்துள்ளனர்.

## இசைக் கருவிகள்

தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் ஒப்பற்ற இலக்கியமாக முத்தமிழின் மாண் பினை எடுத்துரைக்கும் சிறப்புமிக்கது சிலப்பதிகாரம். இக்காப்பியத்தில் இசைக் கூறுகள் மிகுதியாகப் புலப்படுவதையும் பல இசைக் கருவிகள் பற்றிய குறிப்பு களும் காணப்படுகின்றன. யாழ், குழல், தண்ணுமை போன்ற பல கருவிகள் தனியாகவும், பக்கவாத்தியமாகவும் இசைப்பதற்குப் பயன்பட்டன.

யாழ் என்பது பண்களை இனிமையாக இசைக்கும் நரம்புக் கருவி வகையைச் சேர்ந்தது. இவை நரம்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பேரியாழ்,

மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டு யாழ் என அழைக்கப்படுகிறது.

"யாழ் மேற்பாலை இட முறை மெலிய,
குழல்மேல் கோடி வல முறை மெலிய,
வலிவும், மெலிவும், சமனும் எல்லாம்
பொலியக் கோத்த புலமையோன்
உடன்" (சிலம்பு 3: 91-94)

பண் நீர்மை குறைவுபடாமல் எல்லாம் செப்பமாக சீராகமைந்து யாழ் நரம்புகளைப் பிணைத்து இணைத்து இசைமீட்ட யாழாசிரியன் இருந்தான் என்ற செய்தியின் மூலம் யாழ் எனும் இசைக் கருவி பயன்படுத்தப்பட்டமை அறிய முடிகிறது. மாதவி யாழை வாங்கிக் கொண்டு இனிய ஓசையினையுடைய மதுர கீதம் பாடினாள் என்பதை,

"அதிரா மரபின் யாழ்கை வாங்கி
மதுர கீதம் பாடினள் மயங்கி
ஒன்பான் விருத்தியுள் தலைக்கண் விருத்தி
நன்பால் அமைந்த இருக்கைய ளாகி"
(சிலம்பு 8: 23-26)

என்ற வரிகள் குறிப்பிடுகின்றது. யாழிசைக் கருவி குறித்தும் யாழ் கொண்டு பிழையில்லாமல் இசைத்த இசைச் சிறப்பு குறித்தும் சிலம்பில் குறிப்பிடப்பட்டுள்ளமை அறிய முடிகிறது.

## குழல்

குழல் என்பது ஒன்பது துளைகள் கொண்ட இனிமையான இசைக் கருவியாகும். எல்லாத் துளைகளையும் திறந்து பின் ஒவ்வொன்றின் முறையே விரல்களினால் மூடி வாசித்து வரும் பொழுது ஏழு சுரங்களும் பிறக்கும். குழலை வங்கியம் என்றும் அழைப்பர். குழல் கருவி மூங்கில், சந்தனம், வெண் கலம்,செங்காலி,கருங்காலி ஆகியவற்றால் செய்யப்படுகிறது. மூங்கில் மரத்தால் செய்யப்பட்ட குழலே அனைத்திலும் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. இளமையும் மூப்பும் இல்லாமல் நடுவயதில் வளர்ந்துள்ள மூங்கில் மரத்தை வெட்டி நிழலிலே ஓராண்டு வைத்த பிறகு குழல் செய்வர். குழலிசை வல்லோன் குறித்தும் குழலிசைக் கருவி குறித்தும் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. இசை நூற்கள் வகுத்துள்ள முறையில், இசை கொள்ளும் எழுத்துகள் மேல் வல்லொற்று வருமாயின் அதனை மெல்லொற்றுப் போல இசைக்கும் பண்ணீர்மையாகிய சித்திரப் புணர்ப்பும், இசை கொள்ளா எழுத்துக்கள் மேல் வரும் வல்லொற்றினை மெல்லொற்றாக இசைக்கும் வஞ்சனைப் புணர்ப்பு என்னும் இரண்டினையும் அறிந்து இசைக்க வல்லவன். குழல் வாசிப்பில் சுட்டு விரல் முதலாகத் துளைகளை விட்டுப் பிடிக்கும் ஆரோகணத்தையும், சிறுவிரல் முதலாகத் துளை விட்டுப் பிடிக்கும் அவரோகணத்தையும் பிழையறக் கற்றவன். குரல், இளி எனும் இரு வகை இசை நரம்புகள் ஒலிக்கும் இசைக்கு ஏற்ப, குழல் ஊத வல்லவன். மேள ஒலிக்கு ஏற்பத் தாளம் தவறாது இசைக்கும் மத்தள இசையோடு பொருந்தக் குழல் வாசிப்பவன் எனக் குழலிசைப்போன் குறித்து சிலம்பில் கூறப்பட்டுள்ளதை,

"சொல்லிய இயல்பினில் சித்திர வஞ்சனை
புல்லிய அறிந்து புணர்ப்போன் பண்பின்
வர்த்தனை நான்கும் மயல் அறப் பெய்து,
ஆங்கு,
ஏற்றிய குரல், இளி என்று இரு நரம்பின்
....................................
வழு இன்று இசைக்கும் குழலோன்"
(சிலம்பு 3.56-69)

என்ற சிலப்பதிகாரப் பாடலடிகள் சான்று பகர்கின்றன.

## தாளக் கருவிகள்

பழந்தமிழர் உருவாக்கிய தாளக் கருவிகள் ஏராளம். இவை தோற் கருவிகள் எனப்படும். சிலப்பதிகார

உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் பழந்தமிழர் பயன்பாட்டில் இருந்த சில தாளக் கருவிகளைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்,

“பேரிகை பாடகம் இடக்கை உடுக்கை
சீர்மிகு மத்தளம் சல்லிகை கரடிகை
திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகம் தண்ணுமை தாவில் தடாரி
அந்தரி முழவொடு சந்திர வளையம்
மொந்தை முரசு கண்விடு தூம்பு
நிசாளம் துடுமை சிறுபறை அடக்கம்
ஆசில் தகுணிச்சம் விரலேறு பாகம்
தொக்க உபாங்கம் துடிபெரும் பறை.”

தண்ணுமை ஆசிரியரானவர் இசை, நடனம் என்பவற்றின் எல்லா பண்புகள் பற்றியும் இசைநரம்புகள் பற்றியும் தாளம் பற்றியும் அறிந்திருத்து மொழி அறிவுடையவராயும் திகழ்ந்து பாட்டிற்கேற்ப யாழும் குழலும் வாய்ப் பாட்டும் இசைந்து கேட்குமாறும், நிகழ்கின்ற கூத்தின் குறிப்பினை அறிந்து இதமாக வாசிக்கவேண்டும். அத்துடன் மற்றைய கருவிகளின் நாதக்குறைவினை நிறைவுசெய்தும், பிறவும் இனிது கேட்குமாறும் தன் ஒலிமிகாமலும் கைத் தொழிற்கரணம் சிதைவின்றிச் செலுத்தும் திறமையானவனாகவும் இருத்தல் வேண்டும். அவ்வாறு சிறந்தமைந்த தண்ணுமை ஆசிரியர் குறித்து சிலப்பதிகாரத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளமையை,

“ஆடல், பாடல், இசையே, தமிழே,
பண்ணே, பாணி, தூக்கே,முடமே,
தேசிகம் என்று இவை ஆசின் உணர்ந்து,
....................................
சித்திரக் கரணம் சிதைவு இன்று செலுத்தும்
அத்தகு தண்ணுமை அரும் தொழில்
முதல்வனும்” (சிலம்பு 3.45-55)

என்ற சிலப்பதிகாரப் பாடலடிகள் புலப் படுத்துகின்றன. தண்ணுமை அல்லது மிருதங்கம் என்பது தென்னிந்தி யாவில் பயன்படுத்தப்படும் ஒரு தாள வாத்தியமாகும். மிருதங்கம் தொன்மையான வரலாற்றைக் கொண்ட ஒரு இசைக்கருவி எனக் கருதப்படுகிறது. பெரும்பாலும் பலாமரக் குற்றியைக் குடைந்து இக்கருவி செய்யப்படுகிறது. இதன் வட்ட வடிவ முனைகளில் ஒரு முனை, மற்றமுனையிலும் சற்றுப் பெரிதாகவும் நடுப்பாகம் இவ்விரு முனைகளின் அளவிலும் சற்றுப் பெரிய விட்டமுள்ளதாகவும் அமைந்த ஒரு பொள் உருளை வடிவினதாக அமைந்துள்ளது. இதுபோன்ற தாளக் கருவிகள் மக்கள் பயன்படுத்தியமை குறித்த செய்திகளைச் சிலப்பதிகாரத்தின் மூலம் அறியமுடிகிறது.

## முடிவுரை

மக்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அவர்கள் பயன்படுத்திய பொருள்கள் மூலம் எளிதில் அறிய முடிகின்றது. சிலப்பதிகாரத்தைப் பொருள் சார் பண்பாட்டின் நோக்கில் ஆராயும்போது அக்காலத்தில் பெரும்பாலான பொருள்கள் மக்களால் செய்யப்பட்ட கைவினைப் பொருள்களாக இருப்பதையும் அறியமுடிகிறது. குறிப்பாக தமிழர்கள் தங்களை அழகு படுத்திக் கொண்டு வாழ்வதற்காகத் தங்களது பொருளியல் வளத்திற்கேற்ப ஆடைகளையும் அணிகலன்களையும் பயன்படுத்தி யுள்ளமை அறியமுடிகின்றது. இசைக் கலையில் சிறந்திருந்து பல இசைக் கருவிகளைப் பயன்படுத்தி இசைக்கும் புலமை பெற்றவர்களாக தமிழர்கள் இருந்துள்ளமையைச் சிலப்பதிகாரம் புலப்படுத்துகிறது.

## துணை நூற்பட்டியல்

1. மாணிக்கவாசகன், சிலப்பதிகாரம் தெளிவுரை, உமா பதிப்பகம், சென்னை 2022

2. பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை 1990.

3. பாவாணர், பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும், தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை, 2009

4. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், 2021

5. ம.பொ.சிவஞானம், சிலப்பதிகாரத் திறனாய்வு, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 2012

6. தெ.பொ.மீனாட்சி சுந்தரம், சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம், காவ்யா வெளியீடு, சென்னை, 2005.

# நாட்டுப்புற இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்

**திருமதி.இரா. ஆறுமுக ஜோதி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஆலம்பட்டி, திருமங்கலம்

## முன்னுரை

இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்றால் நாட்டுப்புறவியல் சமுதாய வளர்ச்சியைக் காட்டும் கண்ணாடி எனலாம். ஒரு நாட்டு மக்களின் நாகரீகத்தைப் பண்பாட்டைப் பழக்கவழக்கங்களை வரலாற்றை நாட்டு நடப்பை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுவது நாட்டுப்புறவியல் ஆகும். நாட்டுப்புற இலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகள் இடம் பெற்றுள்ள விதத்தை அறிந்து கொள்வது அவசியமாகிறது.

நாட்டுப்புற இலக்கியம் என்பது மக்களின் இலக்கியம். அது தோன்றிய காலத்தை அறுதியிட்டு கூற முடியாது. ஒரு நாட்டின் வாழ்வையும் வரலாற்றையும் குறைகளையும் நிறைகளையும் தெளிவாகக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியம். நாட்டுப் புற இலக்கியங்கள் நாட்டுப்புற மக்களின் உணர்வுகளையும் கவிதை உணர்வுகளையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் புலப்படுத்துகின்றன. அன்றாட வாழ்வில் வாய்மொழியாக வழங்கி வந்த பாட்டுகள் கதைகள், பழமொழிகள், விடுகதைகள், நம்பிக்கைகள், விளையாட்டுகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் மூலம் வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகளை இங்கு காண்போம்.

## நாட்டுப்புற பாடல்கள்

நாட்டுப்புற பாடல்கள் நேற்று தோன்றியவை அல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் பேசத் தொடங்கிய நாள் முதலாக நாட்டுப்புறப் பாடல்களும் தோன்றின. தொடக்க கால மனிதர்கள் ஏடும் எழுத்தாணியும் கொண்டு கவிதை புனைவதற்கு முன்பே நாட்டுப்புறப் பாடல்கள் தோன்றி விட்டன எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. தொல்காப்பியர் ஏழு யாப்பு வகைகளைக் குறிப்பிடும்போது நாட்டுப்புற இலக்கியங்களைப் பற்றிக் கூறுகிறார்.

'பாட்டு உரைநூலே வாய்மொழி
பிசியே அங்கத முது
சொல்லோடு அவ்வேழு விளக்கம்'
(தொல்.செய்.79)

## நாட்டுப்புறப் பாடல்களின் அமைப்பு முறை

நாட்டுப்புறப் பாடல்கள் நெகிழ்ந்த தொடர் அமைப்பைக் கொண்டவை. எழுத்திலக்கியத்தைப் போன்று நாட்டுப் புறப்பாடல்களிலும் எதுகை, மோனை, இயைபு, இரட்டைக்கிளவி போன்ற தொடை நயங்களைக் காணலாம். நாட்டுப் புறப் பாடலுக்கு அடிவரையறை இல்லை.

"கிண்ணிலே போட்ட சோற்றைக்
கீறித் தின்னப்பிள்ளை இல்லை
ஊருக்குப் போகையிலே

உடன் வரப் பிள்ளை இல்லை."
-(தமிழர் நாட்டுப்புற பாடல்கள் ப.-45)

என்ற நாட்டுப்புறப் பாடலில் மோனை என்பது பொருந்தியுள்ளது. நாட்டுப்புற பாடல்கள் தாலாட்டு, குழந்தை, காதல், தொழில், கொண்டாட்டம், ஒப்பாரி எனப் பலவகையில் பாடப்படுகின்றன.

### தாலாட்டுப் பாடல்.

தாலாட்டுப் பாடல் மூன்று பாடப் பெறும். அவை குழந்தை பற்றியன குழந்தைகள் கூறிய கருவிகள் பற்றியன குழந்தைகள் உறவினர் பற்றியன.

'மாசி பிறையோ நீ வைகாசி
மாங்கனியும்க' (த.நா.பா.ப.-46)

'வெள்ளியால் செய்த ஏட்டில்
வைர எழுத்தாணி கொண்டெழுத
பள்ளியில் சேர்க்க மாமன்
பரிவுடன் வந்திடுவார்' த..நா.பா.(ப-46)

### குழந்தைப் பாடல்

குழந்தைப் பாடல்கள் குழந்தை உள்ளத்தைப் புலப்படுத்துவனவாக அமைந்திருக்கும். பெரும்பாலான குழந்தைப் பாடல்களில் பொருள் உள்ள பாடல்களைக் காண முடியாது. ஓசை நிறைவுள்ள பாடல்கள் அதிகம்.

'சடுகுடு மலையிலே ரெண்டானே
தவறி விழுந்தது கிழட்டானே
தூக்கி விட்டது இளவட்டம்
இளவட்டம்இளவட்டம்' த.நா.பா(பக்-48)

### காதல் பாடல்கள்

இலக்கியக் காதலும் நாட்டுப்புற காதலும் சில வகையில் ஒன்றுபட்டு சில வகையில் வேறுபட்டு நிற்கின்றன. தலைவன் தலைவி வனப்பு நோக்கிக் காதல் உண்டாவது இலக்கியக் காதல். உறவின் அடிப்படையில் எழுவது நாட்டுப்புறக் காதல்.

"அன்ன நடையழகி
அலங்கார உடையழகி
பின்னல் நடயழகி- செல்லம்மா
புறப்படம்மா தேரு பார்க்க"
த.நா.பா-(பக்-51)

### தொழில் பாடல்கள்

உலகத்தை இயக்கும் சக்தியாக உருவெடுத்துள்ளது தொழிலே. தொழிற்பாடல்கள் சில குறியீடுகளுடன் தொடங்குகின்றன. ஏலேலோ, ஐலேசா, சல சல போன்றவை. தொழிற்பாடல்கள் மூலம் மக்கள் செய்த தொழில்களைப் பற்றியும் அதனால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளைப் பற்றியும், சமுதாய அமைப்பு பற்றியும் அறிகிறோம்.

'விடிவெள்ளி நம் விளக்கு -ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம்- ஜலசா'
த.நா.பா(பக்-54)

### கொண்டாட்டப் பாடல்

மனிதன் தன் மகிழ்வினைப் பாட்டாகவும் கூத்தாகவும் வெளியிடு கிறான். அவ்வாறு வெளியிடும் போது தொன்மையான கலைச்சிறப்பையும்நமது நாட்டின் பண்பாட்டு சிறப்பினையும் அறிய முடிகிறது கும்மி, கோலாட்டம், சடங்கு திருமணம் போன்றவற்றில் பாடுவது கொண்டாட்டப் பாடல்கள்.

'பிள்ளைப் பதினாறும் பெற்றுப்
பெருவாழ்வு வாழ்ந்திருங்கள்
மக்கள் பதினாறும் பெற்று
மங்கலமாய்வாழ்ந்திருங்கள்!'
த.நா.பா.(ப-56)

### ஒப்பாரிப் பாடல்

இறந்தவர்களை நினைத்துப் பாடப்படுவது ஒப்பாரி. இறந்தவர் களையும் தம்மையும் ஒப்பிட்டுப் பாடுவது ஒப்பாரி. வாழ்வில் முன்னுரை தாலாட்டு என்றால் முடிவுரை ஒப்பாரி ஆகும். தமிழ் அகராதி ஒப்பாரியை ஒப்பு+ஆரி எனப் பிரித்து ஒப்புச்சொல்லி அழுதல் எனப் பொருள் தருகிறது.

இறந்தவரின் பெருமையும் அவரது குண நலன்களும் பிறரால் போற்றப்பட்ட முறையும் பேசப்படும்.

ஒப்பாரி பாடுகின்றவர்கள் இறந்த வரை நேசித்த முறையும் தன்னுடைய நிலைமை பற்றியும் குடும்பத்தின் நிலைமை பற்றியும் பாடுகின்றனர்.

ஈமச்சடங்குகள் பற்றிய விவரங் களும் கூறப்படுவதுண்டு.

எமனது கொடுமையும் விதியின் வலிமையும் விதவையின் வேதனையும் இறந்தவரால் அடைந்த இழப்பும் ஒப்பாரிப் பாடல் பொருளாகின்றன.

## கதைகள்

இந்தியா ஒரு கதைக் களஞ் சியம். தமிழ்நாடு கதைகளின் கருவூலம். ஆதிகால மக்கள் உலகத்தைப் பற்றியும் உலகத் தோற்றத்தைப் பற்றியும் கதைகள் புனைந்தனர். இவைகளே, காலப் போக்கில் கற்பனைக் கதை களாகவும் இதிகாசங்களாகவும் புராணங்களாகவும் மாறின. பழங்கால சமுதாயத்தை அறிய கதைகள் பெரிதும் உதவுகின்றன. கதைகள் தொல்காப்பியர் காலத்திலே வழக்கிலிருந்ததை அறிகிறோம்.

“பொருள் மரபில்லா பொய் மொழி யானும்
பொருளோடு புணர்ந்த
நகைமொழியானும்“ (தொல்.செய்.173)

நாட்டுப்புறக் கதைகள் வாய் மொழியாக பரப்பப்படுவதாகும் மரபு வழிப் பட்டதாகும் பல நூற்றாண்டு காலமாக வாய் மொழியாக மக்களி டையே வழங்கி வருவதால் மாற்றத்தைக் காண்கிறோம். மூல ஆசிரியர் யாரென அறிய முடியாதன நாட்டுப்புறக் கதைகள்.

## கதைகளில் பண்பாட்டுக் கூறுகள்

1. கதைகளின் நோக்கம் மக்களுக்கு அறக்கோட்பாட்டை உணர்த்துவ தாகும்.
2. வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அறிவூட்டி ஆக்க வழிப்படுத்து கின்றது.
3. அற நெறியைப் போதித்து வளரும் குழந்தைகளுக்கு நீதி போதனைக் களஞ்சியமாகத் திகழ்கின்றது.
4. நீதிகளை உணர்த்தவும் சமூக வரலாற்றினை அறியவும் பெரிதும் துணைபுரிகின்றன.
5. பண்பாட்டுக் கூறுகளை மீட்டுரு வாக்கம் செய்ய பெரிதும் துணை புரிகின்றன.
6. வாழ்க்கைப் பிரச்சினை, ஆசை, துன்பம், சாதிப்பூசல், காதல், ஒழுக்கம், வேதனை, முட்டாள் தனம், பொறாமை, மன உணர்வெழுச்சி, கள்ள நட்பு, மந்திரம், புத்திசாலித்தனம், நீதி முதலிய பொருண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.

## பழமொழிகள்

மூதறிவிலிருந்து தோன்றிய மொழி பழமொழி. தமிழில் பழமொழிக்கு மூதுரை, முதுமை, வலிமை, முன்சொல், முதுசொல், பழஞ்சொல் என்னும் ஆறு பொருட்கள் இருப்பதாகச் சேந்தன் திவாகரம் கூறுகின்றது.

## தமிழ் இலக்கியங்களில் பழமொழிகள்

தொல்காப்பியர் பழமொழியை ‘முதுசொல்’, ‘முதுமொழி’ என்று குறிப்பிடுகிறார்.

‘அங்கதம் முது சொல்லோடு
அவவ்வேழ் நிலத்தும்’
(தொல்.செய்.165)

‘ஏத முதலிய முது மொழி என்ப’
(தொல்.செய்165)

முன்றுறை அரையனாரின் 'பழமொழி நானூறு' என்பது முதல் தொகுப்பாகும். இதனைத் தொடர்ந்து 'பழமொழி விளக்கம்' அல்லது 'தண்டலையார் சதகம்' என்பதைக் குறிப்பிடலாம்.

## பழமொழியின் பொருண்மை

உலகில் காணப்படும் அனைத்து பொருள்கள் பற்றியும் பழமொழி பேசுகின்றது. மனித சமுதாயத்தில் காணப்படும் நம்பிக்கை பழக்க வழக்கங்களையும் பழமொழி விளக்கு கின்றது. மனித சமுதாய வரலாற்றை விளக்கும் வாயிலாகவும் உள்ளன.

1. சூரியனைக் கண்ட தாமரை போல– இயற்கை
2. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்– மனித உலகம்.
3. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ் சாது.–விலங்குகள்
4. தென்னை வைத்தவன் தின்று சாவான் பனை வைத்தவன் பார்த்து விட்டுச் சாவான்–

   – மரம் செடி கொடிகள் (பழ.ப.116)

## முடிவுரை

நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் நடவடிக்கைகளையும் எடுத்துக்காட்டும் விதமாக நாட்டுப்புற இலக்கியங்கள் உருவெடுத்துள்ளன. அந்த வகையில் நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், பழமொழிகள் தமிழர்களின் பண்பாடு களையும் வாழ்வியலையும் எடுத்துக் காட்டும் காலக்கண்ணாடியாகத் திகழ்கின்றன.

## தமிழ் அகராதி

வ.பெருமாள் – பல நோக்கில் பழமொழிகள்

டாக்டர் சு.சக்திவேல் – நாட்டுப்புற இயல் ஆய்வு

பேரா.முனை. ச.இராமலட்சுமி –– தமிழ் இலக்கியங்களில் தமிழர் அடையாளங்கள்

முனைவர் க.த.திருநாவுக்கரசு – தமிழ்ப்பண்பாடு

புலியூர்க்கேசிகன் – பழமொழி நானூறு

இளம்பூரணர் உரை – தொல்காப்பியம்

# தாலாட்டுப் பாடல்களில் இலக்கணக் கூறுகள்

**முனைவர் பெ.இந்துராணி**
உதவிப் பேராசிரியர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

## முன்னுரை

மனிதனுடைய வாழ்க்கையில் இசையானது சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்ச்சியாக உடன் வருவது இசை. இசைக்கு மயங்காத உயிர்களே இல்லை எனலாம். அதிலும் சிறப்பாக நாட்டுப்புறப் பாடல்கள் தனித்தவிடம் பெற்றுத் திகழ்கின்றன. பாடுபவருக்கு இலக்கணம் தேவையில்லை என்றாலும் பாடப்படும் கருத்துக்களில் இலக்கணக் கூறுகள் இழையோடி இருப்பதைக் காணமுடிகிறது. இக்கூறுகளை வெளிப் படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## தாலாட்டுப் பாடல்கள்

குழந்தைகளைப் பராமரித்து வளர்க்கின்ற சூழலில் குழந்தைப் பாடல்கள் சில நாட்டுப்புறப் பாடல் களாக மக்களிடத்தில் வழங்கி வருகின்றன. குறிப்பாகத் தாலாட்டுப் பாடல்கள், குழந்தைகளின் வளர்கின்ற பல்வேறு நிலையில் பாடுகின்ற பாடல்களே இன்றும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளன. 'தால்' என்றால் நாக்கு என்றும் நாக்கினை ஆட்டி ரா ரா ரா ரா, லு லு லு லு என்று தொடங்கிப் பாடுவதால் இது தாலாட்டு என்று பெயர் பெற்றது என்றும் கூறுவர். மக்கள் வழக்கில் ஆராட்டு, ரோராட்டு, தாலாட்டு, ஓராட்டு, தாராட்டு, தொட்டிப் பாட்டு, தூரிப்பாட்டு என்று தாலாட்டுப் பலவாறாகச் சுட்டப்படுகின்றது. பாடலின் தொடக்கத்தில் இடம் பெறும் ஒலிக்குறிப்புச் சொற்களை அடிப் படையாகக் கொண்டு இவ்வாறு சுட்டப் படுகின்றது.

## தாலாட்டின் அளவும், பண்ணும்

தாயின் அன்பு வெளிப்பாடே தாலாட்டு. அவர்கள் தங்கள் மனத்தின் பாரங்களான மகிழ்ச்சி, துக்கம் இவைகளை வெளிப்படுத்த தாலாட்டு அவர்களுக்கு ஒரு ஊடகமாகப் பயன்படுகிறது. தாலாட்டுப் பாடல்கள் குறிப்பிட்ட கடவுளையோ, உறவினரையோ பாடவேண்டும் என்ற வரையறை இல்லை. தாயின் மன இயல்புக்கு ஏற்றவாறும், குழந்தையின் உறக்கத்திற்கு ஏற்றவாறும் தாலாட்டின் அளவும், ஓசையும் கூடுதலும் குறைதலும் உண்டு. தாலாட்டின் பண் ''நீலாம்பரி'' என்று கூறுவார்கள். தாலாட்டுப் பாடும் பெண்கள், ஒரே பண்ணிலே பாடுவது இல்லை. ஒவ்வொருவருடைய பேச்சு ஒலிக்கு ஏற்பவும் மாறுபாடு அடைவதுண்டு. இவ்வாறே பல்வேறு விதமாகத் தாலாட்டின் அளவும் பண்ணும் அமைந்துள்ளன.

## தாலாட்டுப் பாடல்களில் குழந்தை வருணனை

தாய் தன் குழந்தையை பல்வேறு மொழிகளில் வருணிக்கின்றாள்.

இவ்வருணணையே தாலாட்டுப் பாடல்களில் வருணணையாக இடம் பெறுகிறது.

“கண்ணே கண்ணுறங்கு
கான மயிலே நீ உறங்கு”

என்றும்

“வைகைப் பெருகி வர
வாந்த மணல் ஊறி வர
ஊறி வந்த தண்ணியில
ஒட்டி வந்த கட்டி முத்தே
பெருகி வந்த தண்ணியிலே
பின் அணைந்த சந்தனமோ”

வருணனை தாலாட்டில் தெளிவுபடுத்து கின்றது.

## தொட்டில் வருணனை

தாய் தாலாட்டு பாடும் போது தன் குழந்தைக்குரிய தொட்டில், சங்கு முதலியவற்றையும் வருணித்து பாடுவாள். இது போன்ற கருவிகளும் அணிகலன்களும் பிற பயன்பாட்டு கருவிகளும் பாடுபொருளாகின்றன.

“வெள்ளி வளை பூட்டி
விலாசமாய்த் தொட்டில் கட்டி”

என்ற நாட்டுப்புறத் தாலாட்டுப் பாடல் தொட்டில் வருணனையாகின்றது.

## சங்கு வர்ணனை

தொட்டிலுக்கு அடுத்த நிலையில் குழந்தைக்கு பயன்படும் மற்றொரு பொருள் சங்கு ஆகும். சங்கு என்னும் உபகரணம் மக்களின் வாழ்க்கை பொருளாதாரத்திற்கு ஏற்ப வெவ்வேறு தனிமங்களால் செய்யப்பட்டதாக கருதுவர். சங்கு பற்றிய வருணனை ஒரு தாலாட்டில் இடம்பெற்று இருப்பதை,

“பொற் சங்கால் புகட்டினால்
புத்தி குறையும் என்று”

என்ற வரிகள் படம் பிடித்து காட்டுகின்றன.

## எதுகை

இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது எதுகை எனப்படும் தாய்மார்கள் பாடும் பாடல்களில்,

“சித்திரைப் பூ மெத்தையிலே
நித்திரை செய் கண்மணியே”

என்ற நாட்டுப்புறப்பாடல் எதுகையை நமக்கு புலப்படுத்துகிறது.

## மோனை

மோனை என்பது எதுகையை விட தமிழில் மிகுந்த செல்வாக்கினை பெற்றிருந்தது. முதல் எழுத்து ஒன்றி வருவதாகிய மோனை அமைப்பு தாய்மார்கள் பாடும் தாலாட்டுப் பாடல்களில் சிறப்பாக அமைந்து காணப்படுகின்றது.

“அரும்பா மலர் மனமே
ஆறுமுகனே கண் வளராய்”

என்றும்

“அரிவாள் பிடிவாள் இரும்பாக்குவேன்
அம்மி குலவியைக் கல்லாக்குவேன்”

“பச்சைமலை ஓரத்துல - சொல்லி
பனங்கிழங்கு வைத்திருந்தேன்
பனங்கிழங்கு தின்னு போட்டு
பாராமல் போறயடி”

“தெக்கத்தி கர்ணனடா
தென்மதுரை பாண்டி என்னடா”

என்னும் பாடல் அடிகள் மோனையைப் புலப்படுத்துகின்றன.

## அடி எதுகை

இலக்கணத்தில் பாட்டில் அடிதோறும் இறுதி சீர் இயைந்து வருவதை அடி இயைபு என்பர். இவ்வடி இயைபு செய்யுளின் ஓசையைப் புலப்படுத்துகின்றது. தாய்ப்பாடும் தாலாட்டில் இயற்கையாகவே அடி இயைபு அமைந்து காணப்படுகிறது. ஓசை

நயம் மிகுந்து இருப்பதால் அதன்பால் குழந்தைகளின் கவனம் ஈர்க்கப்படுவது இயல்பாகவே அமைந்துவிடுகிறது.

**"கண்ணே நவமணியே**
**கற்பகமே முக்கனியே"**

**"சித்திரை மெத்தையிலே**
**நித்திரை செய் கண்மணியே"**

என்றும்

நாட்டுப்புற தாலாட்டுப் பாடல் இயைபு ஓசை நயத்தை இனிமையாக வெளிக்காட்டுகிறது. இந்நயமே குழந்தைகள் துயில் கொள்வதற்கு தூண்டுகோலாக அமைகின்றது.

## தனிச்சொல் பெற்று வரல்

முதல் மற்றும் மூன்றாவது வருகின்ற அடிகளில் தாலாட்டு பாடல்கள் தனிச்சொல் பெற்று வருகின்றன அடிகளில் தாலாட்டுப் பாடல்கள் தனிச்சொல் பெற்று வருகின்றன. கர்நாடக இசையில் நான்கு அடிகளை கொண்ட பகுதி பல்லவி என்று அழைக்கப்படுவது போல் நாட்டுப்புற பாடல்களில் அமைவது உண்டு. தனிச்சொல் அமைவதை,

**"முத்தான முத்தே என் கண்ணே**
**மூவர்கள் ஆண்ட முத்தோ?**
**கோத்தோரு முத்தோ - என் கண்ணே**
**குறத்தி கையில் தாழ் வடமோ"**

**"ஆன போறத பாருங்கடி - ஆன**
**அசஞ்சு போறத பாருங்கடி**
**ஆனத்தடம் போல நம்மூருமாரிக்கு**
**அட்டியல் மின்னல்ப் பாருங்கடி"**

## முடிவுரை

தாலாட்டுப் பாடலுக்கு வடிவம் இல்லையென்றாலும் ஓசை நயம், உணர்ச்சி, வெளிப்பாடு போன்றவை தாயின் உள்ளக் கருத்தை வெளிக் கொணர்கின்றன. மோனை, எதுகை, இயைபு, தனிச்சொல் போன்ற இலக்கணக் கூறுகளும் தாலாட்டுப் பாடல்களில் இழையோடிருப்பதை இக் கட்டுரையில் காணமுடிகிறது.

# சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாட்டுப் பதிவுகள்

**திருமதி வ.இன்பமேரி எம்.ஏ.,பி.எட்.**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை
அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஆலம்பட்டி, திருமங்கலம்

## முன்னுரை

பண்டைய தமிழ் மக்களின் பண்பு, நாகரிகம், சமயம், அரசியல், தொழில் முதலியவற்றை அறிவதற்கு தமிழ்நாட்டில் உள்ள கல்வெட்டுகள் பண்டைய நாணயங்கள் பிற நாட்டார் எழுதி வைத்த நூல்கள் முதலியன கருவியாக விளங்குகின்றன இவற்றைக் காட்டிலும் பண்டைய தமிழ் மக்களின் பண்பினை அறிவதற்கு தமிழ் இலக்கியங்களே சிறந்த சான்றாக அமைகின்றன. உலகம் நல்வழியில் இயங்குவதற்கு பண்பாடு அல்லது பண்புடையார் வாழ்தல் காரணமாக உள்ளது.

பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்

என்பது வள்ளுவர் வாய்மொழி.

அன்பும் அறனும் எங்கெங்கும் பரவி பெருகி வாழும் வாழ்க்கைக்குப் பண்பும் பயனுமாக மிளிர்வது பண்பாட்டின் நோக்கமாகும். இதனை

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது”

என்னும் குறளின் மூலம் வள்ளுவர் விளக்குகின்றார்.

தனிமனிதனின் ஒழுக்கமும் பண்பும் மிகவும் இன்றியமையாததாகும். இத்தகைய பண்பாட்டுப் பதிவுகளை நம் முன்னோர்கள் வடிவமைத்த சங்க இலக்கியங்கள் வாயிலாக பகிர்ந்து கொள்வதே ஆய்வின் நோக்கமாக அமைகின்றது.

## தனிமனித பண்பாடு:

பண்பாடு என்பது பண்பட்ட எண்ணமும் சொல்லும் செயலும் ஒருங்கிணைந்து திருந்திய நிலையாகும். எல்லோருடைய இயல்புகளும் அறிந்து ஒத்த நன்னெறியில் ஒழுகுபவர் பண்பாடு உடையவர் ஆகின்றார். சங்க காலத்தில் தனிமனித வாழ்க்கையில் நட்பும், பகையும், விருப்பும், வெறுப்பும், அன்பும், அன்பின்மையும் ஆகிய பல்வேறு உணர்ச்சிகளும் இடம் பெற்றன. ஆனால் சங்கப் புலவர்கள் சமுதாய பொதுமைக்காகவும் பண் பாட்டைக் காப்பாற்றுவதற்காகவும் பிறர் பழிதூற்றாமல் இருப்பதற்காகவும் தனி மனிதனின் உயர்ந்த பண்பினையே தேர்ந்தெடுத்துக் கூறியுள்ளனர் இதனையே

“நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்”

என்று குறிப்பிடுவதன் மூலம் அறியலாம். நல்வினை செய்யவில்லை என்றாலும் தீவினையைச் செய்யாதீர்கள் என்று தனிமனிதப் பண்பாட்டைச் சங்க நூல்கள் குறிப்பிடுவதனை அறிய முடிகிறது.

### சங்க கால விருந்தோம்பலும் பண்பாடும்:

பண்டைய தமிழரின் வாழ்க்கை அறத்தின் அடிப்படையில் அமைந்தது. அறவாழ்க்கையின் முழுமை அன்பு என்ற பண்பால் மேன்மை அடைந்தது அன்பு ஒன்றே அனைத்திற்கும் ஆதார மாக அமைந்தது. அறம் பொருள் இன்பம் வீடு பேறு அடைதல் நூற் பயன் என்பர். இந்நான்கினுள்; அறம் வலிமை உடையதாக கருதப்படுகின்றது இவ்வறத்தினை மேற்கொள்ள பொருள் வேண்டப்படுகின்றது இப்பொருளைத் தேடுவதற்குத் தலைவன் தலைவியைப் பிரிந்து பொருளீட்டும் தன்மையையும் அப்பொருளைக் கொண்டு தலைவி விருந்து என்னும் அறம் புரிந்த பண்பும் சங்க பாடல்களில் புலவர்கள் பதிவு செய்துள்ளனர். சங்ககால மக்கள் பசித்து வரும் புதியவர்களுக்காகச் சிறந்த உணவை நாள்தோறும் அளித்தனர்.

> "கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
> மெல்லியியல் குறையும் நிறையும் வல்லிதின்;
> விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
> பிறவும் அன்ன கிழவன் மாண்புகள்"

என்று தொல்காப்பியர் சங்க காலத் தலைவியின் மாண்புகளில் விருந்து புறந்தருதலை ஒரு செயலாகக் குறிப்பிடு வதைக் காணலாம். விருந்தோம்பல் வேண்டி சிறந்த பொருளை ஈட்டி வருதல் தலைவனுக்குரிய கடமையாக அமைந்தது. இதனை

> "செழுநகர் நல்விருந்து அயர்மார் ஏமுற
> விழுநிதி எளிதின் எய்துக தில்ல
> கல்பிறங்க ஆரிடை விலங்கிய
> சொல் பெயர் தேஎத்த சுரனிறந்தோரே"

அகநானூற்று பாடல் வழி சங்க கால மக்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக மட்டுமல்லாது விருந்தினருக்கு உணவு கொடுப்பதற்காகப் பொருளீட்ட செல்லுதல் அக்கால மக்களின் தலைசிறந்த பண்பாட்டுப் பதிவாக அமைகின்றது. இதனையே வள்ளுவர்

> "செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
> நல்விருந்து வானத் தவர்க்கு"[5]

விருந்தோம்பல் சிறப்பினைக் குறள்வழி தெளிவுபடுத்தியுள்ளார்.

### பண்பட்ட நாகரிகப் பதிவுகள்

விருந்தினர் தன் இல்லத்திற்கு வரும் பொழுது தலைவி தலைவனோடு ஊடி இருந்த பொழுதும் அதை மறைத்து முறுவல் கொண்ட முகத்தினராய் இருந்தனர். என்பதை நற்றிணைப் பாடலில் தமிழரின் பண்பட்ட நாகரிக வாழ்க்கையை எடுத்துரைக்கின்றது இதனை

> "அந்துகில் தலையில் துடையினள்;
> நட்புலத்து
> அட்டி லோளே அம்மா அரிவை
> எமக்கே வருதல் விருந்தே சிவப்பான்று
> சீறுமுள் எயிறு தோன்ற
> முறுவல் கொண்ட முகம்காண் அம்மே"[6]

இப்பாடல் வழி அறிய முடிகிறது. அளவற்ற உணவுப் பொருளை விருந்தினருக்குப் படைத்ததைச் சங்கப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

### தமிழரின் காதல் வாழ்க்கையில் பண்பாட்டுக் கூறுகள்

தமிழருக்குக் காதலும் வீரமும் இரு கண்களாக விளங்கின சங்க காலத் தமிழர் களவு வாழ்க்கையையும் கற்பு வாழ்க்கையையும் மேற்கொண் டொழுகினர். இதில் தாங்கள் மேற் கொண்ட களவு வாழ்க்கையிலும் நமது பண்பாட்டினைப் பதிவு செய்துள்ளனர்.

தலைவன்மீது காதல் கொண்ட தலைவி தன் தலைவனைப் பற்றியும் அவனது அன்பைப் பற்றியும் அதன் அளவு எத்தகையது என்பது பற்றியும்

குறிப்பிடும் இடங்கள் இன்னும் நாம் கண்டு வியப்புறும்படி அமைந்துள்ளது சிறப்பாகும். தலைமகள் தோழியிடம் தலைவனின் அன்புடையமையை வற்புறுத்தும் சூழலில் காதல் நிலத்தை விட பரந்ததாக வானைவிட உயர்ந்ததாக கடலைவிட ஆழமானதாகத் திகழ் கின்றது எனக்கூறித் தன் அன்பின் அளவை வெளிப்படுத்துகிறாள்.

**"நிலத்திலும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரள வின்றே சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு**
**பெருந்தே னிழைக்கும் நாடனொடு நட்பே"[7]**

இச்சங்கப்பாடலால் அறிய முடிகின்றது.

### தலைவன் மடலேறுதல்:

பெண்கள் மடலேறுதல் இல்லை என்று கூறி, ஆண்கள் மடலேறுதல் உண்டு என்பதை விளக்குகிறார் தொல் காப்பியர். பொருளதிகாரத்தில் உள்ள அகத்திணையியல் மற்றும் களவியல் ஆகிய இரண்டு இயல்களிலும் மடல் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. அவற்றை மடன்மா கூறல், மடலேறுதல் என்ற இருநிலைகளில் குறிப்பிடலாம்.

தோழியின் மூலம் தலைவியைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படாத நிலையில் தலைவன் மடலேறுவதாகக் கூறுவான். தோழியின் அன்புகிடைத்துத் தலைவியைப் பெறும் வாய்ப்பு ஏற்படின் தலைவன் மடல்மா கூறான் என்பதையும் அறிய முடிகிறது.

**"..........................தோழி**
**நீக்கலி னாகிய நிலைமையும் நோக்கி**
**மடல்மா கூறும் இடனுமாருண்டே"[8]**

என்னும் நூற்பா வாயிலாகத் தலைவனின் நிலைப்பாட்டை அறிய முடிகிறது.

தொல்காப்பியத்தின் மூலம் மடற் கூற்று அன்பின் ஐந்திணைக்குரியது என்பதையும், மடலேறுதல் பெருந் திணைக்குரியது என்பதைப் பெருந் திணைக்குரிய பொருண்மைகளுள் ஒன்றாக, 'ஏறிய மடல்திறம்' என்பதைக் குறிப்பிடுவதன் வாயிலாகவும், பெண் மடலேறுதல் இல்லை ஆண் மடலேறுதல் உண்டு என்பதையும் அறிய முடிகிறது.

தலைவன் தலைவியைக் காணும் வாய்ப்பு தோழியால் தடைபடும்போது மடல் கூற்று நிகழும் என்பதை,

**"விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்**
**.....................................................**
**தெருவின் இயலவும் தருவது கொல்லோ**
**கலிழ்கவின் அசைநடைப் பேதை**
**மெலிந்திலள் நாம் விடற்கு அமைந்த தூதே"[9]**

என்னும் குறுந்தொகை பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது.

### மடலேறலின் நோக்கம்

தலைவன் மடலேறலின்போது தன் எண்ணங்களை வெளிப் படுத்துவதால், அவனது எண்ண வெளிப்பாட்டிற்கு ஒரு களனாக மடலேற்றம் அமைகிறது. தான் விரும்பும் பெண்ணை அடைவற்கு ஒரு வழியாகவும் மடலேற்றம் பயன்பட்டதை அறிய முடிகிறது.

**"மா மேலேன் என்று மடல்புணையா நீந்துவேன்**
**தே மொழி மாதர் உறாது உறீஇய**
**காமக் கடல் அகப்பட்டு"[10]**

என்னும் கலித்தொகை பாடலடிகள் தலைவனின் எண்ண நிலையை வெளிப்படுத்துகிறன்றன.

### மடலேறும் முறை:

பனை மடலால் செய்த குதிரையைத் தலைவன் மடலூரப் பயன் படுத்தியதை,

**"படரும் பனை ஈன்ற மாவும் - சுடர் இழை**
**நல்கியான் நல்கியவை"[11]**

என்பதன் மூலமும்,

**"பனை ஈன்ற மா ஊர்ந்த"[12]**

என்பதன் மூலமும் அறிய முடிகிறது. தலைவியை எப்படியேனும் மணம் புரிய வேண்டும் என்ற எண்ண வெளிப்பாடே மடலேறுதல் ஆகும்.

## முடிவுரை:

தமிழர்கள் எண்ணம்போல் வாழாது தமக்கென்ற ஓர் எல்லையை வகுத்து வாழ்ந்தனர். மனிதகுல வாழ்க்கைக்குக் கல்வி என்பது மிக முக்கியமானதாகும். சங்க இலக்கிய நூல்கள் அனைத்தும் மக்களின் வாழ்வாதார அடிப்படைக் கூறுகளை உள்ளடக்கிச் சிறந்த பண் பாட்டுக் கருத்துக்களை எடுத்து இயம்புகின்றன. தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு தான் மட்டும் இல்லறம் நடத்தாமல் அவ்வில்லறம் நடத்துவதே வறியவர்களுக்கு ஈதல் என்னும் கோட்பாட்டைக் கொண்டு தன்னால் இயன்றதை மட்டும் முறையாக விருந்தோம்பல் செய்து சங்க கால மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தியுள்ளனர் என்பதை இதன் வாயிலாக அறிய முடிகிறது அகப் புற வாழ்வின் வழி தமிழர் பண்பாட்டை உணர்த்தியுள்ளனர் உயரிய பண்பாக தமிழரின் பண்பு சிறப்பு பெறுவதாக அமைகின்றது.

## அடிக்குறிப்புகள் :

1. திருக்குறள் 996
2. புறநானூறு பா.195
3. தொல்.கற்பியல் நூ –11
4. அகநானூறு பா.205
5. திருக்குறள் –86
6–. நற்றிணை பா.120
7. குறுந்தொகை பா – 3
8. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா எண் : 19
9. குறுந்தொகை, பா.எண் : 182
10. கலித்தொகை பா.எண் : 139
11. கலித்தொகை பா.எண் : 139
12. கலித்தொகை பா.எண் : 147

# ஆசாரக்கோவையில் பண்பாட்டுப் பதிவுகள்

**திருமதி.ப.இராமுத்தாய்** எம்.ஏ., எம்ஃபில்., எம்.எட்., டி.ஜி.டி.,
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஆலம்பட்டி, திருமங்கலம், மதுரை - 625 706

இலக்கியங்கள் மக்கள் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். மனிதன் வாழ்ந்த, வாழும் வாழ்வியலைப் பதிவு செய்யும் மூலங்களுள் குறிப்பிடத்தக்கது இலக்கியங்கள் ஆகும். அந்த வகையில் சங்க இலக்கியங்கள் சங்ககால மக்களின் வாழ்வியல்களையும் பண்பாடுகளையும் பிரதிபலிக்கின்றன. மனிதன் தான் வாழும் புவியியல் சூழலுக்கு ஏற்ப வாழ்க்கை முறைகளை வகுத்துக்கொள்கின்றான். "வாழும் நிலத்தின் இயல்பிற்கு ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும் பண்பாடும் அமையும் என்பது வரலாற்று ஆய்வாளர்களின் முடிபாகும். நிலம் சார்ந்த வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட சங்க இலக்கியங்களில் பண்பாடு கலாச்சாரம் பற்றிய கருத்தாக்கங்கள் ஏராளமாக உள்ளன. நீதி இலக்கியங்களில் ஒன்றான ஆசாரக்கோவையில் இடம் பெற்றுள்ள பண்பாட்டுப் பதிவுகளை எடுத்தியம்புவதே இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கம்.

பண்படுவது பண்பாடு ஆகும். மனம், சொல், செயல்களால் பிறருக்குத் தீங்கு செய்யாது பொதுநலத்துடன் வாழ்வதே பண்பாடாகும். உள்ளத் தளவால் திருத்தம் பெற்று ஒழுக் கத்துடன் வாழ்வதையே பண்பாடு என்று கூறலாம்.

1937–இல் டி.கே.சிதம்பரநாத முதலியார் 'Culture' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாகத் தமிழில் பண்பாடு என்னும் சொல்லாட்சியை உருவாக்கினர் என்பர் பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை. "பண்படுவது பண்பாடு. பண்படுதல் அல்லது சீர்படுதல் அல்லது திருந்துதல். திருந்திய ஒழுக்கம் பண்பாடாகும்."[1]

## பண்பாட்டுக்கூறுகள் :

சமூகத்தை நன்னெறிப்படுத்துவதே அற இலக்கியங்களின் நோக்கமாகும். மனம், சொல், செயல்களால் பிறருக்குத் தீங்கு செய்யாது வாழ்வதே பண்பாடு என்பர். தனிமனிதனின் எண்ணத்தை, சொல்லை, செயலைச் செப்பம் செய்வதில் அற இலக்கியங்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றன. ஆசாரக்கோவை அகத் தூய்மை, புறத்தூய்மை இரண்டையும் வலியுறுத்துகிறது. காலையில் துயிலெழுதல் தொடங்கி இரவு உறங்கச் செல்லுதல் வரை அன்றாட நிகழ்வுகளைக் எடுத்தியம்பும் விதமாக உயர்நெறிகளைக் கற்பிக்கின்றது.

## முந்தையோர் கண்ட நெறி :

விடியற்காலையில் எழுந்து, அன்று ஆற்ற வேண்டிய அறச்செயல்களையும், பொருள் திரட்டுவதற்குரிய நன்னெறி களையும் சிந்தித்துப் பார்த்து, விடிந்தபின்பு தவறாமல் தாயையும் தந்தையையும் தொழுது அன்றைய

செயலைச் செய்ய வேண்டும் என்பது முந்தையோர் கண்ட நெறிமுறை என்பதனை

"நன்றி யறிதல் பொறையுடைமை
இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிற்கும் செய்யாமை
கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல்" ஆ.கோ-1

என்ற பாடலில் ஆசாரக்கோவை பதிவு செய்துள்ளது.

### ஒழுக்கம் விழுப்பம் தரலான் :

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்"[2] என்ற வான்புகழ் வள்ளுவனின் வாக்கிற்கு ஏற்ப ஒழுக்கம் உடையார் உயர்ந்த குடிப் பிறப்பு, நீண்ட ஆயுள், செல்வம், வனப்பு, நிலக்கிழமை, செல்வாக்கு, கல்வி, நோயின்மை ஆகிய எட்டு சிறப்பு களையும் அடைவர் என்பதனை

'பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோயின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப
என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்' ஆ.கோ-2

என்ற பாடலால் அறியலாம்.

### உணவு உண்ணும் முறை :

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"[3] என்ற வரிகள் உணவின் மேன்மையை உணர்த்தும். வான்புகழ் வள்ளுவரும்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
அருந்தியது
அற்றது போற்றி உணின்"[4] என்பார்.

உணவே மருந்து என்பது தமிழர் கண்ட உடல்நல மருத்துவ உண்மை. உண்ணும் உணவு, உண்ணும் காலம், உண்ணும் முறை என அனைத்திலும் பண் பாட்டைக் கையாண்டனர் பழந்தமிழர். படுத்துக்கொண்டும், நின்று கொண்டும், திறந்த வெளியிலும் உண்ணக்கூடாது. விரும்பி அதிகமாக உண்ணக்கூடாது. கட்டிலில் அமர்ந்தபடி உண்ணக்கூடாது. நெறிமுறைகளைக் கடந்து எதனையும் உண்ணக்கூடாது என்பதை

"கிடந்துண்ணார் நின்றுண்ணார்
வெள்ளிடையும் உண்ணார்
சிறந்து மிகவுண்ணார் கட்டில்மேல் உண்ணார்
இறந்தொன்றும் தின்னற்க நின்று"
- ஆ.கோ. 23

என்ற பாடலில் ஆசாரக்கோவை பதிவு செய்துள்ளது.

மேலும் சுவையின் அடிப்படையில் எந்தெந்த உணவினை எப்படி உண்ண வேண்டும் என்பதனை, 'கசக்கும் உணவு வகைகளை இறுதியிலும் இனிக்கும் உணவு வகைகளை முதலிலும் எஞ்சிய உணவுப் பொருட்களை இடையிலும் உண்ண வேண்டும் என்கிறது ஆசாரக் கோவை. இதனை

"கைப்பன எல்லாம் கடைதலை தித்திப்ப
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க முறைவகையால் ஊண்"
ஆ.கோ-68

என்ற பாடலடிகள் புலப்படுத்துகிறது.

### உறங்கும் காலம் :

ஒரு மனிதன் இரவில் எட்டு மணி நேரம் உறங்க வேண்டும். பகலில் உறங்குதல் கூடாது. பகலில் உறங்கினால் நோய்கள் ஏற்படும் என்பன போன்ற கருத்துக்களை நீதி இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. பகல் பொழுதிலும் கதிரவன் மறையும் அந்தி வேளையிலும் கண்ணுறங்கக் கூடாது. நோயினை விரும்பி ஏற்றுக் கொள்பவரே பகலில் உறங்குவார் என்றும் ஆசாரக்கோவை குறிப்பிடுகின்றது. இதனை

'பகல் வளரார் நோயின்மை வேண்டுபவர்'
ஆ.கோ-57

'அந்திப் பொழுது கிடவார்' ஆ.கோ. 29 என்ற பாடலடிகளால் அறியலாம்.

**உறங்கும் திசை :**

உறங்கும் நேரத்தைப் போலவே உறங்கும் திசைகளையும் வகுத்துள்ளது. ஆசாரக்கோவை வடக்கிலும் வடகிழக்கு போன்ற கோண திசைகளிலும் புவியின் காந்த சுழற்சி அதிகமாக இருக்கும். எனவே அந்தத் திசைகளில் தலைவைத்துப் படுக்கும் உயிரினங்களின் மூளையின் செயல் பாதிக்கப்படும் என்பதும் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிவியல் உண்மை. இதனை ஆசாரக்கோவை

'கிடங்குங்கால் கைகூப்பித் தெய்வம் தொழுது
வடக்கொடு கோணம் தலைசெய்யார் மீக்கோள்
உடற்கொடுத்துச் சேர்தல் வழி'
ஆ.கோ-30

என்ற பாடலடிகளில் பதிவு செய்துள்ளது.

**பிறர் பொருளை பயன்படுத்தாமை:**

ஒரு கண்ணுக்கு எழுதிய கோலைத் தூய்மை செய்யாமல் மறு கண்ணில் செலுத்தமாட்டார். ஒருவர் கண்ணுக்கு எழுதிய கோலைத் தூய்மை செய்யாமல் மற்றொருவர் கண்ணுக்கு எழுத மாட்டார் என்பதை

"கண்ணெச்சில் கண்ணூட்டார்
நுண்ணிய நூல்அறிவினார்"
ஆ.கோ-41

என்ற அடிகளில் பதிவு செய்துள்ளது.

அறிவுடையவர் எப்பொழுதும் பிறர் தலையில் சூடிய பூவைத் தாம் சூடார். பிறர் நுகர்ந்து பார்த்த பூவையும் சூடார் என்பதை

'தலைக்கிட்ட பூமேவார்
மோந்தபூச் சூடார்' ஆ.கோ-30

என்ற அடிகளில் பதிவு செய்துள்ளது.

**உடை உடுத்துவதில் பண்பாடு:**

ஆசாரக்கோவை ஆடை உடுத்த வேண்டிய முறைகள், அவற்றின் தூய்மை, பிறருடைய உடையைப் பயன்படுத்தாமை போன்ற பண்பாடு களை உணர்த்துகின்றது. ஓர் ஆடை உடுத்தாமல் நீராடமாட்டார். ஓராடை உடுத்து உண்ணமாட்டார்கள், ஓராடை உடுத்து கற்றவர் அவைக்குச் செல்ல மாட்டார்கள். என்பதை

'உடுத்தலால் நீராடார் ஒன்றுடுத் துண்ணார்
உடுத்தாடை நீருட் பிழியார் விழுத்தக்கார்
ஒன்றுடுத் தென்றும் அவைபுகார் என்பதே
முந்தையோர் கண்ட முறை'
ஆ.கோ-11

என்ற பாடலால் அறியலாம்.

**சுற்றுப்புறத்தூய்மை பேணல் :**

ஆசாரக்கோவை தனிமனித ஒழுக்கம் பண்பாடு பற்றி எடுத்தியம்பியது மட்டுமன்றிப் பொது நலத்தைப் பேணும் வழிவகைகளையும் வகுத்துள்ளது. இன்று துய்மையே சேவை என்ற திட்டத்தின் கீழ் நாட்டைத் தூய்மைப்படுத்தி வருகின்றோம். ஆனால் இன்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுந்த ஆசாராக்கோவையில் சுற்றுப்புறத் தூய்மை பயன்பாட்டுப் பொருள்களின் தூய்மை பற்றிய கருத்தாக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அறிவுடைய சான்றோர் பல், விளைநிலம், பசுவின் சாணம், சுடுகாடு, வழி, தூய நீர் நிலைகள், வழிபாட்டிற்குரிய இடங்கள், நிழல் உள்ள இடங்கள், பசுக்களின் கொட்டகைகள், சாம்பல் ஆகிய பத்து இடங்களிலும் உமிழ்தலையும் மலம் நிறுநீர் கழித்தலையும் செய்ய மாட்டார்கள். என்பதை

'புல் பைங்கூழ் ஆப்பி சுடலை வழி தீர்த்தம்
தேவகுலம் நிழல் ஆனிலைவெண்பலி என்று
ஈரைந்தின் கண்ணும் உமிழ்வோடு
இருபுலனும்

சோரார் உணர்வுடையார்' ஆ.கோ-32

என்ற பாடலடிகளால் அறியலாம்.

### மனதாலும் நினைக்கக் கூடாதவை

ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்பது அனைவரும் அறிந்ததே. மண், பெண், பொன் மீது ஆசைப்பட்டவர்கள் அடங்கவொண்ணாத துன்பத்திற்கு ஆட் பட்டுள்ளனர். எனவே அறமறிந்தவர்கள் பிறர் மனைவி, மது, திருட்டு, சூது, கொலை செய்தல் இந்த ஐந்தையும் அடைவோம் என்று ஆசைப்பட்டால் ஒழுக்கங்கெட்டவன் என்று சமூகத்தால் இகழப்படுவதுமட்டுமின்றி நரகத்திற்குச் செல்லும் பாதையில் செலுத்திவிடும் என்பதால் இவற்றை மனதாலும் நினைக்கக் கூடாது என்பதை

'பிறர்மனை கள்களவு சூது கொலையோடு
அறனறிந்தார் இவ்வைந்தும் நோக்கார் திறனிலவென்று
எள்ளப் படுவதூஉ மன்றி நிரயத்துச்
செல்வழி உய்த்திடுத லால்' ஆ.கோ-37

என்ற பாடலடிகளால் அறியலாம்.

### சிந்திக்கத்தகாதன :

பொய் சொல்லுதல், பிறரைக் குறை சொல்லுதல், பிறர் பொருளை விரும்புதல், பிறர்செல்வம் கண்டு பொறாமைப் படுதல், ஆகிய நான்கையும் சிந்தித்தல் கூடாது. அவ்வாறு சிந்தித்தால் அவை ஏழ்மையைக் கொடுத்து நரகத்திலும் புகுத்திவிடும் தெய்வமும் கைவிட்டுவிடும் என்பதை

"பொய்குறளை வெளவல் அழுக்காறு இவைநான்கும்
ஐயந்தீர் காட்சியார் சிந்தியார் சிந்திப்பின்
ஐயம் புகுவித்து அரு நிரயத்து உய்த்துவிடும்
தெய்வமும் செற்று விடும்" ஆ.கோ-38

என்ற பாடல் புலப்படுத்துகிறது.

### இல்லம் பொலியச் செய்ய வேண்டியவை

நல்ல செல்வத்தை அடைய விரும்புவர்கள் அதிகாலையில் எழுந்து பாத்திரங்களைக் கழுவி, வீட்டைப் பெருக்கி பசுஞ்சாணம் தெளித்துத் தூய்மை செய்து, குடங்களில் நீர் நிறைத்து, மலரணிந்து இல்லம் விளங்கும் படி அடுப்பில் தீ மூட்டுதல் வேண்டும் என்பதை

'காட்டுக் களைந்து கலங்கழீஇ இல்லத்தை
ஆப்பிநீர் எங்கும் தெளித்துச் சிறுகாலை
நீர்ச்சால் கரகம் நிறைய மலரணிந்து
இல்லம் பொலிய அடுப்பிலுள் தீப்பெய்க
நல்ல துறல்வேண்டு வார்' ஆ.கோ-46

என்ற பாடல் புலப்படுத்துகிறது.

### கல்வி கற்க பொருந்தாத நாட்கள்

அஷ்டமி, அமாவாசை, பௌர்ணமி, சதுர்தசி, ஆகிய நாட்கள் அரசருக்கு நாட்டிற்கு ஆபத்தான காலம் பூகம்பம், இடிமுழக்கம், தமக்குத் தூய்மை போதாத காலம் ஆகிய நாட்கள் கல்வி கற்க பொருந்தாத நாட்கள் என்று கூறுகிறது ஆசாரக்கோவை இதனை

"அட்டமியும் ஏனை யுவாவும் பதினான்கும்
அப்பூமி காப்பார்க் குறுகண்ணும் மிக்க
நிலத்துளக்கு விண்ணதிர்ப்பு வலாமை பார்ப்பார்
இலங்குநூல் ஓதாத நாள்' ஆ.கோ-47

என்ற பாடலால் அறியலாம்.

### தவிர்க்க வேண்டியவை:

பலர் முன்னிலையில் ஒருவரை பழித்துப் பேசுதல் கூடாது. இழித்தும் பேசுதல் கூடாது. பலர் முன்னிலையில் படுத்துறங்குதல் கூடாது. தம்மால் செய்ய முடியாததை செய்வேன் என்று உறுதி அளித்துவிட்டு பின்பு செய்யாமல் இருக்கக் கூடாது. இல்லாதவரைக் கேலி செய்தல் கூடாது. இச்செயல்கள் தவிர்க்கவேண்டிய செயல்களாகும். என்பதை

'பழியார் இழியார் பலருள் உறங்கார்
இசையாத நேர்ந்து கரவார் இசைவின்றி
இல்லாரை எள்ளி இகழ்ந்துரையார்
தள்ளியும்
தாங்கருங் கேள்வி யவர்' ஆ.கோ-50

*என்ற பாடல் புலப்படுத்துகிறது.*

## விருந்தோம்பல் :

*தமிழரின் தலை சிறந்த பண்பாடு விருந்தோம்பலாகும். வான்புகழ் வள்ளுவனும்*

*'செல்விருந்து வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு' என்று குறிப்பிடுவான். ஆசாரக்கோவை விருந்தினருக்கு விருந்து அளித்ததோடு மட்டுமல்லாமல் புன்முறுவலோடு வரவேற்று இன்சொல் பேசி கால் கழுவ நீர் கொடுத்து ஆசனங்கள் கொடுத்து படுக்கை வசதி செய்து தரவேண்டும் என்பதை*

'முறுவல் இனிதுரை கால்நீர் மணைபாய்
கிடக்கையோடு இவ்வைந்தும் என்ப
தலைச்சென்றார்க்கு
ஊணொடு செய்யும் சிறப்பு'
ஆ.கோ-54

*என்ற பாடல் புலப்படுத்துகிறது.*

## மாணவனின் மாண்பு :

*எழுத்தறிவித்த இறைவனாம் ஆசிரியரிடம் மாணவன் நடந்துகொள்ளும் பாங்கினை 'மாணவன் ஆசிரியனிடம் அடங்கி இருக்க வேண்டும், எழுந்து நிற்க வேண்டும், அவர் சொன்னவுடன் எழுந்து செல்ல வேண்டும். அவர் கற்றுக் கொடுக்கும் பாடங்களைச் செவிமடுத்துக் கேட்கவேண்டும். அவர் எதுவும் சொல்லவில்லை என்றால் அவரை வினவாதிருக்க வேண்டும். என்பதை*

'நின்றக்கால் நிற்க அடக்கத்தால் என்றும்
இருந்தக்கால் ஏவாமை ஏகார் பெருந்தக்கார்
சொல்லின் செவி கொடுத்துக் கேட்டீக மீட்டும்
வினா வற்க சொல்லொழிந்தக் கால்'
ஆ.கோ-74

*என்ற பாடலால் அறியலாம்.*

## முடிவுரை :

*ஆசாரக்கோவையில் தனிமனிதன், குடும்பம், சமூகம் என்ற மூன்று நிலைகளில் பண்பாட்டுச் செயல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆசாரக் கோவையில் கூறப்பெறும் ஒழுக்க நெறிகள் மனித இனங்களைப் பண் படுத்தும் வகையில் அமைந்துள்ளது.*

## அடிக்குறிப்புக்கள்

1. *தேவநேயப்பாவாணர் ஞா. பண்டைத் தமிழர் நாரிகமும் பண்பாடும், ப.6*
2. *புலியூர்க் கேசிகன், திருக்குறள் புதிய உரை, ப.33*
3. *புலியூர்க் கேசிகன், புறநானூறு, ப.23*
4. *புலியூர்க் கேசிகன், திருக்குறள் புதிய உரை, ப.197*

## துணைநூற்பட்டியல்


1. *புலியூர்க் கேசிகன், (உ.ஆ), பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தொகுதி 5, சாரதா பதிப்பகம், சென்னை–14*
2. *தேவநேயப்பாவாணர் ஞா. பண்டைத் தமிழர் நாரிகமும் பண்பாடும், சாரதா பதிப்பகம், சென்னை– 108*
3. *புலியூர்க் கேசிகன், (உ.ஆ) திருக்குறள் புதிய உரை, பூம்புகார் பதிப்பகம், 127 பிரகாசம் சாலை, சென்னை–14*
4. *புலியூர்க் கேசிகன், (உ.ஆ), புறநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை– 108*

# சங்கத்தமிழ் கூறும் தங்கத் தமிழ்நாடு

– ஈ. இராஜா
முதுகலை விலங்கியல் துறை
அமெரிக்கன் கல்லூரி

"இலக்கியம் கண்டதற்கிலக்கணம் படைத்து"

மொழி வழி இலக்கிய வடிவங் களையும் படைத்து உலக அரங்கில் தொன்மை படைத்துத் திகழும் பண்பாட்டிற்குரியவர்கள் தமிழர்கள். இலக்கண இலக்கிய வளத்தாலும் சொல் வளததாலும் உயர்தனிச் செம்மொழியாய் விளங்கும் தமிழைத் தம் உயிராக போற்றியதுடன் அமையாது புலமைச் சான்றோரையும் வணங்கி ஆதரித்த பண்பாட்டினர் தமிழர்கள்.

தமிழரின் உயரிய பண்பாடுகள் கலங்கரை விளக்கம் போல் ஒளியுடன் விண்வெளிச் சுடர்களாக இம்மண்ணுக்கு எடுத்துக்காட்டி வருகின்றன பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே நன்னெறிகளை வகுத்து வாழ்வியலைச்சிறப்பாகதம்வசப்படுத்திக் கொண்டவர்கள் தமிழர்கள் என்பதற்குச் சங்க இலக்கியங்கள் அனைத்தும் தக்க சான்றுகள்.

தனக்கென்று ஒரு மரியாதையும் தனக்கென்று ஒரு தன்மானமும் இன்னும் சொல்லப்போனால் தனக்கென உள்ள பண்பாட்டுத் தலைக்கனமும் கொண்டது நம் தமிழும், தமிழ் நாடும் அதன் அடிப்படையில் ஒரு நாட்டின் வரலாற்றை அறிய வேண்டும் எனில் நாட்டு மக்களின் நாகரீக வாழ்வியலை அறிந்து கொள்ளுதலே நலம், ஆகவே நம் பண்டைய தமிழகத்தைத் தெரிந்து கொள்வதற்கு நமக்குப் பெரிதும் துணை புரிவது சங்க இலக்கியம் ஆகும்

## வரலாற்றுச் சான்றுகள்

பண்டைத் தமிழகத்தைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைக் கல்வெட்டு களும் செப்பேடுகளும் நமக்குச் சான்றாக உரைப்பதைக் கண்டுள்ளோம்.

என்றாலும் இவை குறைந்தனவாகவும் சிதைந்தனவாகவும் காணப்பட்டதால் முழுமையான வரலாற்றுப் பின்புலத்தை அறிய முடிய வில்லை. வடநாட்டில் அயலார் படையெடுப்பும் உள்நாட்டுக் குழப்பங்களும் அமைதியைக் குழைத்து கொண்டிருந்த காலத்திலும் தெளிந்த நீரோடை போன்று மொழியையும் மாநிலத்தையும் ஆட்சியையும் திறம்பட மேற்கொண்ட பெருமை தமிழருக்கே உரித்தானது.

"பண்டைத் தமிழகத்தைத் தெளிவாக உள்ளங்கை நெல்லிக்கனி போல காட்ட வல்லன சங்க இலக்கியங் களே" ஆகும்.

சங்ககாலத்தில் மக்கள் கலையும் பண்பாடும் வளர தமிழர்களே அதைப் பின்பற்றி உலக நாகரிகத்தின் முன்னோடிகளாக விளங்கினர் என்பதற்குச் சான்றாக பெரிப்புளூசு, தாலமி, பிளினி போன்றோரின் வரலாற்றுக் குறிப்புகள் தமிழகத்தின் சிறப்பைப் போற்றிப் புகழ்கின்றன.

## நம் தமிழகத்தின் நனிச்சிறந்த எல்லைகள்

குறிப்பிட்ட ஒரு பண்பாட்டுக் குழு உரிமையுடன் வாழ வேண்டுமாயின் தனக்கென்று வரையறுக்கப்பட்ட இதனைக் கொண்ட நிலமும் தலைமையையும் அரசும் முக்கிய மானதாகும்." ஒரு நாட்டை வரை யறுப்பதில் புறவயக் கூறுகளை விட அகவயக்கூறுகளே இன்றி அமையாதது. அமிழ்தினும் இனிய தமிழ் வழங்கும் தமிழகத்தின் எல்லை இன்று போல் அன்று பறந்து விரிந்து கிடந்ததைப் பல்வேறு சான்றுகள் காட்டுகின்றன. தொல்காப்பியர் காலத்தில் தமிழக எல்லையைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார் பனம்பாரனார்.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடை மற்றும் நல்லுலகம்" இதனையே "வடக்கும் தெற்கும் குடக்கும் குணக்கும் வேங்கடம் குமரி பவ்வம் தீம் புனல்" என்கிறார் காக்கைப் பாடினியார்

சங்கப்புலவர்கள் தன் நாட்டின் எல்லைகளை எடுத்துக்காட்டுவதில் விழிப்புடன் இருந்துள்ளனர் என்பதற்குப் பல பாடல்கள் சான்றா கின்றன. செந்தமிழ் வளர்த்த தமிழகத்தின் நிலவியல் வெளித்தோற்றம் பாதுகாப்பு அரணாக விண்ணை முட்டும் மலைகளும் நேர்த்தியான பாதையில் பயணித்து வளம் சேர்க்கும் பேராறுகளும், என்று செழுமையான நிலப்பரப்பைக் கொண்டிருந்தது நம் தமிழ்நாடு. ஒரு நாட்டின் வரலாறு அதன் இயற்கை அமைப்பிற்கேற்பவும் நிலவியல் அமைப்பிற்கேற்பவும் இயைந்து கொடுத்துச் செல்வதாகும்.

சங்ககாலத்தில் அயலவரின் ஊடுருவல் இருந் திருக்கின்றன. குறிப்பாக மௌரியர்கள் மலைகளை உடைத்துக் கொண்டு உட்புகுந்த நிகழ்வை.

"விண் பொரு நெடுங்குடை இயல் நேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக்
குறைத்த" (அகம்-69:10-11)

குறிப்பிடுகிறது. இத்தகைய தக்கச் சான்றுகளும் சங்ககாலத்தில் தமிழகத்தின் நிலையை எடுத்துரைப்பனவாக விளங்கு கின்றன.

## தன்மானத் தமிழின் தொன்மையும் சிறப்பும்

மக்கள் தம் கருத்தைப் பிறர் அறிந்து கொள்வதற்குக் கருவியாக மொழியைப் பயன்படுத்தினர். தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ் மொழியைக் கொண்டு தமிழினம் பெயர் பெற்றிருக்க வேண்டும் என சங்கப் பாடல்களால் உணர முடிகிறது மொழி தன் செல்வாக்கைக் குறிப்பிட்டு ஒரு சமூகத்தில் எத்தகைய ஆழமாக ஊன்றுகிறதோ அதன் அடிப்படையில் இனமும் நாட்டின் பண்பாடும் தோன்றும் என்பதற்குச் செம்மொழியான செந்தமிழ் மொழியே சான்றாகும்.

தமிழிழைச் சிறப்பிக்கும் பொருட்டு முதன்முதலில் செம்மை என்ற அடை சொல்லைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

செம்மை என்பதற்குச் சிவப்பு நேர்மை, ஒற்றுமை, பெருமை, சுத்தம், அழகு, எனப் பேரகராதி பொருள் கூறுகிறது அதோடு செந்தமிழ் கலப்பற்ற தூய தமிழ் மொழி எனக் கூறுவதால் செம்மொழி வரிசையில் தமிழ் மொழியின் நிலைத்த தகுதியை அறிந்து கொள்ள முடியும்.

## தமிழ் இனத்தின் மாண்புகள்

தமிழகத்தைப் பொறுத்த வரையில் மொழி, வழங்கும் எல்லை ஆகியவற்றைக் கொண்டு தமிழனத்தை வரையறச் செய்தனர் பழங்கால உலகில் ஒரு நாட்டினத்தை வரையறுப்பதற்கு

உள்ளத்தின் உணர்வு மற்றும் துணை செய்து விட முடியாது என்ற கூற்று வழியாக அறியலாம்.

சங்க இலக்கியத்தில் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் இனம் என்ற சொல் பயின்று வந்தாலும் தமிழினத்தை குறிக்கும் சொல்லாக எவ்விடத்திலும் இடம்பெறவில்லை ஏனெனில் “”தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டிய காலச் சூழ்நிலை அன்று ஏற்படவில்லை என்பதே உண்மை. “”

தமிழ் மொழியைப் பேசிய மக்களே தமிழன் எனக் குறிப்பிடும் நிலை ஏற்பட்டதை,

“தண்டமிழ் கிழவர்” (புறம்:35)

“தாதின அணையர் தண்டமிழ்
குடிகள்” (பரி. திர.7)

என்று இந்தத் தொடர்கள் குறிப்பிடு கின்றன.

சங்கப் புலவர்கள் அயல்வரிட மிருந்து பாதுகாப்பாக தமிழகம் இருக்க வேண்டும் என்ற கொள்கையுடனும் நாட்டுப்பற்றுடனும் விளங்கியதைக் கீழ்க்காணும் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

மொழிபெயர் தேஎத்தார்
(அகம். 127:211.)

மொழிபெயர் தேஎத்தார் (ஐங்.321)

தமிழ் இன மக்கள் தங்களை மொழியின் மூலமாகவே வெளிப் படுத்தினர் என்பதற்குச் சங்க இலக்கியங் களே பெரும் துணையாகவும் போற்று தலுக்குரிய சான்றாகவும் அமைந்திருக்கின்றன.

## தமிழக வேந்தர்கள்

முத்தமிழ் வளர்த்த மூவேந்தர்கள் முக்குடைக்குக் கீழ் தமிழகத்தை ஆண்டனர்.

“சமூக நலத்திற்கு அரசாட்சியை நிலையாக ஏற்படுத்துதல் இன்றியமை யாதது என்பதைப் பழந்தமிழர் உணர்ந்திருந்தனர்” என்பது இரா. பி. சேதுப்பிள்ளை கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது. வேந்தன் என்பதன் பொருள் முடி அணிதல் முடியணியும் முத்தமிழ் அரசையும் முடி உடை மூவேந்தர் என்று கூறுவது மரபு. மூவேந்தரை சேர, சோழ, பாண்டியன், என அழைக்கும் மரபு எப்பொழுது தோன்றியது எனக் கூற இயலவில்லை அவர்களின் நாட்டு எல்லைகளையும் வரையறுத்துக் கூறுவது அரிதாகவே காணப்படுகிறது.

“மலர்தலை உலகத்து மன்னுயிர்
காக்கும் முரசு முழங்கு தானை மூவர்”
(பெரும் 32-35)

என்ற பாடலால் விளங்கத் தெளிவோம். தொன்று தொட்டு மிகப் பழைய காலத்திலிருந்து மூவேந்தர் தமிழகத்தை ஆட்சி செலுத்தி வந்தனர் எனப் பல அறிஞர்கள் கருத்துரைத்துள்ளனர் என்பது நாம் அறிந்ததே.

**தமிழக மக்களின் வாழ்வியல் முறைகள்**

தமிழ்நாட்டின் நிலப்பரப்பினை மலை
சார்ந்த குறிஞ்சி
காடு சூழ்ந்த முல்லை
உழவுத் தொழில் மேற்கொள்ளும் மருதம்
கடல் சார்ந்த நெய்தல்
ஒன்றும் விளையாத வெப்பம் நிறைந்த
பாலை என

ஐவகையாக குறித்தனர் இந்நில மக்கள் சுற்றுச்சூழலைச் சார்ந்து வாழ்வியல் முறையை அமைத்துக் கொண்டதை சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன சங்க கால வாழ்க்கை நெறிகளை அகம், புறம் எனப் பிரித்தனர்.

காதல் கற்பு இல்லறம் போற்றுதல் புதல்வரைப் பேணுதல் விருந்தினரைக் காத்தல் சுற்றத்தோடு ஒழுகல் போன்ற

பண்புகளைக் கொண்டவர்களாகப் பெண்கள் விளங்கினர். இத்தகைய செய்திகளைச் சங்கப்பாடல்கள் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றன பெண் மகளின் கடமைகள் அறச்செயல்கள் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளையும் இலக்கியங்கள் விவரிக்கின்றன வினையே ஆடவர்க்குயிர் என்ற கூற்றை மெய்ப்பிக்கும் தன்மையில் களவு, வீரம், போர்க்களச் சிறப்பு, இல்லற மாண்பு, பொருளீட்டல், கலை உணர்வு, போன்ற பல்வேறு சிறப்பு உடையவர்களாக பண்டைய தமிழர்கள் விளங்கியதைச் சங்கப் பாடல்களால் நாம் அறிய முடிகின்றது.

"வாழ்க தமிழ் வெல்க தமிழ்"

## அடிக்குறிப்புகள்

1. அ. திருமலை முத்துசுவாமி– தமிழ்நாடும் மொழியும் – பக்கம். 3
2. முனைவர். பா. கிருட்டினன்– தமிழ் நூல்களில் தமிழ் மொழி– தமிழ் இனம், தமிழ்நாடு –பக்கம். 90
3. செய்கைப் பொதுமன் நிலவியல் தமிழக வரலாறு தொல்பழங்காலம் –பக்கம்.27
4. அரங்க இராமலிங்கம் சங்க இலக்கியத்தில் வேந்தர்– பக்கம். 26
5. நா. தேவநேயன். பழந்தமிழாட்சி –பக்கம்.18

# புழங்குப்பொருள் பண்பாட்டில் தமிழும் தமிழரும்

நெறியாளர்
**பேரா.வை.இராமராஜபாண்டியன்,**
புலத்தலைவர்,
இக்கால இலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.

ஆய்வாளர்
**உ.இராஜீவ்காந்தி**
(ப.எ.MKU22FFOL10560)
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
இக்கால இலக்கியத்துறை, தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.

## ஆய்வு அறிமுகம்

இயற்கையில் இருந்து கிடைத்த உணவினை உண்டும், அவற்றினால் கிடைத்த பொருட்களினால் செய்த புழங்கு பொருட்களையும் கொண்டு இயற்கையோடு இணைந்த வாழ்வினை வாழ்ந்தவார்கள் பண்டைய தமிழ் மக்கள். காலப்போக்கில் உணவுத்தேடல் என்பது அறிவுத்தேடலாக பரிணமித்து இலக்கிய வளம் வாழ்வியலோடு உறைவாடிய ஒன்றாக மாற்றம் பெற்றது. “கவிதை என்பது மெய்ம்மையின் நகல்” என்று பிளேட்டோ எனும் அறிஞர் குறிப்பிடுவார். வாழ்க்கையை நகல் எடுத்துக் காட்டுவது இலக்கியம். இலக்கியம் அது படைக்கப்படும் காலத்தில் வாழ்ந்த மக்களின் பண் பாட்டையும் எடுத்துரைக்கிறது. வாய்மொழி வழக்காறுகள், ஏட்டுச் சுவடிகள், கல்வெட்டுக்கள், பாறை ஓவியங்கள் போல புழங்கு பொருட்களும் அந்தந்த நிலமக்களின் பண்பாட்டுச் சூழல் செய்திகளைக் காலங்களின் ஊடாகக் கடத்தும் திறனுடையவை. புழங்கு பொருட்களைப் பற்றியும், அவற்றின் மூலம் பழந்தமிழர்களின் பண்பாட்டினையும் அறிந்து கொள்ளும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

## பண்பாடு

பண்பாடு என்னும் சொல் பண்படுத்துதல் என்ற சொல்லிலிருந்து உருவானது எனலாம். ஏனெனில் பண்பாடு என்ற சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இது பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. பண்பாடு என்னும் கருத்தாக்கம் மக்களின் அறிவு சார்ந்த நிலையில் ஏற்படும் எண்ணற்ற கருத்து வடிவங்களின் முழுமை என்று பக்தவத்சலபாரதி *(1980:160)* குறிப்பிடுகிறார். சமூகத்தின் அங்கம் குடும்பம், குடும்பத்தின் அங்கம் தனிமனிதன், அம்மனிதன் அச்சமூகத்தின் உறுப்பினர் ஆவான். அவன் பயன்படுத்தும் பொருட்கள், மற்றும் அவை பற்றிய கருத்தாடல்களின் கூட்டடினைவே பண்பாடாகும். இஃது புவியியல் பரப்பு, நாடு, மொழி, இனம் போன்றவற்றிற்கு ஏற்றபடி வழங்கும் இயல்புடையது.

## புழங்கு பொருள்

புழங்கு என்பதற்கு கதிரை வேற்பிள்ளை தமிழ் மொழியகராதி *(1990:1047)* வழங்குதல் என்றும், தமிழ் லெக்சிகன் *(1982:2793)* கையாளுதல், புழங்குதல் என்றும் விளக்கம் தருகின்றன. எனவே புழங்கு பொருள் என்பது மக்கள் அன்றாடம் தங்கள் தேவைக்காகப் பயன்படுத்தி வந்த, வருகின்ற பொருட்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். மக்கள் தங்களின் தேவைக்கு ஏற்ப தொன்று தொட்டே

செய்துவருகின்றகைவினைப்பொருட்கள் யாவும் புழங்குபொருள் பண்பாட்டை அடையாளப் படுத்துகின்றன.

லூர்து(1997:297), இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும், கலைப்படைப்பு களாகவும் மாற்றிக் கொள்வதையே புழங்கு பொருள்சார் பண்பாடு என்றும்; மானுடக்குழு ஒன்றின் தொழில் நுட்பத்திறனும் புழங்குபொருள் சார்ந்த கலைத்தொழில் வேலைப்பாடமைந்த பொருட்களும் புழங்குபொருள் பண்பாட்டில் அடங்குகின்றன என்றும் குறிப்பிடுகின்றார். மானுடச் சமூகங்கள் எல்லாம் தாம் வாழும் சுற்றுச் சூழலுக்கும் காலத்திற்கும் ஏற்ப வாழ்ந்தாக வேண்டும். இந்தப் படிமுறையில் தத்தம் சொந்த நோக்கத்திற்கேற்ப இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புக்களாகவும் கலைப்படைப்புக்களாகவும் மாற்றிக் கொள்வதையே புழங்கு பொருள்சார் பண்பாடு என்கிறோம். (நாட். வழக். ப. 357)

பண்பாட்டினைப் பொருள்சார் பண்பாடு (Material Culture), பொருள் சாராப் பண்பாடு (Non Material Culture) என மானிடவியலாளர் வகைப்படுத்துவர். மக்கள், தங்கள் தேவைகளுக்காக உருவாக்கும் அனைத்துப் பொருட்களும் பொருள்சார் பண்பாட்டினுள் அடங்கும். பொருள்சாராப் பாண்பாட்டில் பொருள் வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம்பெறுகின்றன. இவற்றில், "புழங்குபொருட்கள் அனைத்தும் பொருள்சார் பண்பாட்டினை அடையாளப் படுத்துவனவாக விளங்கு கின்றன" (புழ.பண்., ப.2) என்கின்றனர் அறிஞர்கள்.

புழங்கு என்பது பயன்படுத்துதல். மக்கள் தங்கள் அன்றாடத் தேவை களுக்காகப் பயன்படுத்துகிற பொருட்கள் புழங்குபொருள்கள் ஆகின்றன. இப்புழங்கு பொருட்கள் மானிட அறிவின், கலைத்திறனின் வெளிப் பாடுகளாகத் திகழ்கின்றன. கைவினைப் பொருட்கள் மட்டுமல்லாது இயந்திர உற்பத்தியும் இதனை அடியொற்றியே அமைகிறது.

புழங்குபொருட்களின் தன்மை களைக் கொண்டு ஒரு சமூகத்தின் தொன்மையை, உற்பத்தித் திறனை, அறிவு நுட்பத்தை, கலைத்திறத்தை, தொழில் நுட்ப உத்திகளை அடையாளப்படுத்த முடியும். அவ்வடிப்படையில் பண்டைத் தமிழரின் வேளாண் அறிவு, வேளாண் தொழில்நுட்பம், வேளாண் மேலாண்மை, திணைசார் பண்பாடு போன்றவற்றை வேளாண்சார் புழங்குபொருட்கள் அடையாளப்படுத்துகின்றன.

சிலப்பதிகாரம், பரிபாடல், மதுரைக்காஞ்சி போன்ற இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் கல்மணிகள் மட்டுமே அகழ்வாராய்ச்சியில் 600க்கும் மேல் கிடைத்துள்ளன. முத்துமணிகள், பெண்களின் கொண்டை ஊசிகள், பெண்கள் விளையாடிய சில்லு, தாயக் கட்டை, சதுரங்க காய்கள், சிறு குழந்தைகள் விளையாடிய சுடுமண் பொம்மைகள் ஆகிய சங்க காலம் குறிப்பிடும் பல தொல்பொருட்களும் இங்கு அதிகளவில் கிடைத்திருக்கின்றன.

நூல் நூற்கும் தக்ளி, அக்கால மக்கள் நூல் நூற்று ஆடை நெய்து அணிந்து வாழ்ந்திருப்பதை உறுதி செய்கிறது. பட்டினப்பாலையில் குறிப்பிடப்படும் சுடுமண் உறைகேணிகளும் இங்கு கிடைத்திருக்கின்றன. சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகளின் அருகே இக்கேணிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அதிகளவில் செங்கல் வீடுகளும் வீடுகளின் மேற்கூரையில் ஓடுகள் வேயப்பட்டிருந்ததையும் இங்கு

கிடைத்துள்ளன.

பத்துப்பாட்டில் பட்டிணப்பாலை என்ற நூலில் பூம்புகார் நகரத்தின் ஒரு பகுதியில் உறைகிணறுகள் இருந்தது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டிணப்பாலை நூலாசிரியர் உருத்திரங் கண்ணனார் "உறை கிணற்று புறச்சேரி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## கீழடி – அகழ்வாராய்ச்சி

மதுரைக்குக் கிழக்கே 12 கி.மீ தொலைவில் வைகையாற்றின் கரையில் அமைந்துள்ளது கீழடி. பழைய கல்வெட்டுகள் காட்டுகின்ற குந்திதேவி சதுர்வேதி மங்கலம் என்ற கொந்தகை ஊரின் பகுதிகள் தான் இன்றைய கீழடியும், பள்ளிச் சந்தையும் ஆகும். பள்ளிச்சந்தை மேட்டுப் புஞ்சை என்று அழைக்கப்பட்ட மண்மேடுகளில்தான் இன்று அகழ்வாய்வுகள் நடத்தப்பட்டன. கொந்தகை பகுதிகளில் முதுமக்கள் தாழிகள் கிடைத்ததால் அப்பகுதி கீழடியில் வசித்து வந்து பண்டையத் தமிழர் களின் ஈமக் காடாக இருக்கலாம் என்று தொல்லியல் ஆய்வார்க் கூறுகின்றனர்.

## கிடைத்த பொருட்கள்

முதல் இரண்டு கட்ட அகழாய்வுகளில் கிட்டத்தட்ட 5800 பொருட்கள் கிடைத்துள்ளன. கட்டடப் பகுதிகள், தமிழி எழுத்துகளும் கீறல்களும் கொண்ட பாறை ஓடுகள், கறுப்பு, சிவப்பு பானை ஓடுகள், செப்புக் காசுகள், மணிகள், சுடுமண் சிற்பங்கள், தங்க அணிகலன்கள், முத்துகள், தந்தத்தால் செய்யப்பட்ட சீப்புகள் என்று இங்குக் கிடைத்த தொல்லியல் பொருட்கள் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தன. இதுவரை தமிழகத்தில் செய்யப்பட்ட அகழாய்வுகளில் கீழடியில்தான் தந்தத்தால் செய்யப்பட்ட பொருள்கள் அதிகம் கிடைத்துள்ளன. மேலும், தந்தம் கொண்டு அமைக்கப்பட்ட சீப்புகள் முதன்முறையாக தமிழகத்தில் கீழடியில்தான் கிடைத்துள்ளன. கீழடியில் கிடைத்த கட்டட அமைப்புகளில் வர்க்க வேறுபாடு இல்லை. சாதாரண மக்களும் தந்தத்தாலான பொருள்களைப் பயன் படுத்தியுள்ளனர். செல்வச் செழிப்புடன் மக்கள் இங்கு வாழ்ந்திருக்க வேண்டும் என்பது தெரிகின்றது.

## இலக்கியம் காட்டும் புழங்குபொருட்கள் கலன்கள்

உணவுகளைச் சமைப்பதற்கும், அவைகளைப் பாதுகாப்பாகப் பக்குவப் படுத்தி வைப்பதற்கும், உணவுகளை உண்பதற்கும், கால்நடை, பறவைகளுக்கு உணவு கொடுப்பதற்கும் பல்வேறு விதமான கலன்களை எல்லா மக்களும் பயன்படுத்துகின்றனர். இதற்கு சங்க கால மக்கள் விதிவிலக்கன்று அவர்களும் இயற்கையாகக் கிடைத்த இலைகளையும் மரம் மற்றும் மண்ணால் செய்யப்பட்ட கலன்களையும் பயன்படுத்தியுள்ளனர். அது மட்டுமின்றிப் பல்வேறு வகையான உலோகங்களினால் செய்யப்பட்ட கலன்களையும் பயன்படுத்தி உள்ளனர். இஃது அவர்களின் அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சியினை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன. அதிகளவில் மண் கலன்களின் பயன்பாடு இருந்துள்ளன. சங்க கால மக்கள் மரம், மண், இரும்பு, பித்தளை, வெண்கலம், தங்கம், வெள்ளி போன்றவற்றால் செய்த கலன்களைப் பயன்படுத்தி உள்ளனர். தற்போது வெண்கலம், தங்கம், வெள்ளி, மரம் போன்றவற்றால் செய்யப்பட்ட கலன்கள் வழக்கிழந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கலம் என்பது உள்ளீடற்ற, குப்பி போன்ற அமைப்பினைக் கொண்டது ஆகும். இஃது பயன்பாட்டு வடிவம் இவற்றிற்கேற்ப பல்வேறு பெயர்களில் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக,

பொற்கலம் (பரி. 11: 79–80), கறவைக்கலம் (கலி. 108: 30–32) போன்றவற்றைக் குறிப்பிடலாம். சமையல் அறையினை மக்கள் 'அடுக்களை' என்று கூறும் மரபு உள்ளது. அதாவது, அடுத்தல் என்றால் சமைத்தல் என்று பொருள். எனவேதான், சமையல் செய்யும் இடத்தை அடுக்களை என்றழைக்கிறோம். அதைபோன்று சமையல் செய்வதற்குப் பயன்படுத்தும் கலன்களை 'அடுகலம்' என்பர். இதனை,

"கடும்பினடுகல நிறையாக நெடுங்கொடிப்
பூவா வஞ்சியும் தருகுவ னென்றோ"
(புறம். 32: 1-2)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். சமைத்த உணவுகளை மூடியுள்ள கலன்களில் பாதுகாப்பாக வைத்து பயன்படுத்தும் வழக்கத்தையும் நம் முன்னோர் கடைபிடித்து வந்துள்ளனர். இதனை,

"அருங்கடித் தீஞ்சுவை யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் கரப்புடையடிசில்
மீன் பூத்தன்ன வான் கலம் பரப்பி"
(பெரும். 475-477)

என்ற பாடலடிகள் தெளிவு படுத்துகின்றன.

## விதைக்குறு வட்டி:

சங்ககாலத் தமிழர்கள் தானியங்களைச் சேகரித்து வைப்ப தற்கும், தானியங்களை வயல் வெளிகளில் விதைப்பதற்கு எடுத்துச் செல்வதற்கும் விதைக்குறு வட்டியைப் பயன்படுத்தி வந்துள்ளனர். விதைக்குறு வட்டியானது பனங்குருத்தோலைகளால் முடையப்பெற்ற சிறுபெட்டியாகும் இப்பெட்டி புழக்கத்திலிருந்ததை தலைவி கூற்றாக வரும்

'முதைப்புனங் கொன்ற வார்கலி யுழவர்
விதக்குறு வட்டி போதொடு பொதுளப்'
(குறு: 155)

என்ற பாடலால் அறியக்கிடக்கிறது.

விதைப்புக்கூடையின் பயன்பாடு குறுந்தொகையில் மட்டுமல்லாது ஐங்குநுறூறு, நற்றிணை போன்ற சங்கப் பாடல்களிலும் விரவிக்கிடப்பதை ஆங்காங்கே காணமுடிகிறது.

இன்றும் விதைக்குறு வட்டியைப் பல பெயர்களில் அதாவது, விதைப் பெட்டி, பெட்டிக்கூடை, சாட்டுக்கூடை, மக்கிரி, கொடாப்பு என பலவடிவங்களில் பயன்படுத்தி வருகின்றனர். விதைக்குறு வட்டியானது பனையோலைகளாலும், மூங்கிலைப் பயன்படுத்தியும் அதே வடிவில் அதே பயன்பாட்டில் இன்றும் நிலைத்திருப்பதைக் பண்பாட்டுக்கூறாக கருத இடமளிக்கிறது.

## மண்கலமும் பொன்கலமும்

தற்காலத்தில் அன்றாடப் புழங்கு பொருட்களில் பயன்படக்கூடிய பொருட்கள் இரும்பு, செம்பு, ஈயம், பித்தளை போன்ற உலோககங்கள் பயன் படுத்தப்பட்டாலும் பச்சை மண்ணால் செய்யப்பட்ட மட்கலப் புழக்கம் இன்றும் அதன் மதிப்புக்குறையாமல் இருக்கிறது, மட்பாண்ட பயன்பாட்டையும் பொன்னால் ஆன பாத்திரங்களின் பயன் பாட்டையும் குறுந்தொகை சுட்டுகையில்,

"பெயல்நீர்க் கேற்ற பசுங்கலம் போல"
(குறு: 29)

"செம்பொற் புனை கலமும்" (குறு: 356)

எனக் குறிப்பிடுவதை அறியலாம்.

## கைவளைகள்

பல்வேறு அளவுகளில் செய்யப் பட்ட கைவளைகள் விற்பனை செய்பவரை,

"சிறியவு முளவீண்டு விலைஞர்கை
வளையே" (குறு: 117)

என்ற பாடல் காட்டுகிறது.

"கோடீ ரிலிங்குவளை நெகிழத்"
(குறு: 365)

என சங்குகளை அறுத்துச் செய்த வளையல்கள் பயன்பாடு சுட்டப் படுகிறது.

'வளைநெகிழ்தல்' என்பது கைவளை நெகிழ்தல் என்ற இயல்புப் பொருளை மட்டுமின்றி, பிரிவுத்துயர் ஆற்றாமல் உடலும், உள்ளமும் சோர்வுற்று புனையா ஓவியமாகக் காட்சிதரும் தலைவியின் மெலிவைக் கூறும் குறியீடாகவும் விளங்குகிறது. "கைவளை அணிதல்" வரவையும், மகிழ்வையும் குறிப்பதாகவும், 'கைவளை நெகிழ்தல்' பிரிவையும், துன்பத்தையும் குறிப்பதாகவும் அமைந்துள்ளது. கைவளைகள் பொன்னாலும், முத்தாலும் தந்தத்தாலும் சங்குகாளாலும் செய்யப்பட்டதையும், ஆபரணங்களைப் பாதுகாக்க 'பொன்பெய்பேழை (Jewel Box) பயன்படுத்தப்பட்டதையும்,

**"இன்னாக் கானமு மினிய பொன்னோடு**
**மணிமிடை யல்குன் மடந்தை"**

(குறு: 274)

**"பொன்செய் பேழை முய்திறந் தன்ன"**

(குறு: 233)

**"பாம்புமிழ் மணியிற் றோன்றும்"**

(குறு: 239)

ஆகிய பாடல்களால் அறியலாம்.

பொன்னை உரைத்துப் பாரிக்கும் உரைகல் புழக்கத்தை,

**"................. பொன்னின்**
**உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை"**

(குறு: 192)

என்ற வரிகளாலும் அறியலாம்.

பழந்தமிழர்கள் உலோகங்களின் பயன்பாட்டினை நன்கு அறிந்திருந் தமையினால் பல்வேறு விதமானக் கலன்களையும் பயன்படுத்தியுள்ளனர். பொன், வெள்ளியினால் செய்யப்பட்ட கலன்கள் பொற்கொல்லர் கை வண்ணத்தால் அழகுற வடிவமைக்கப் பட்டிருந்ததை,

**"ஆசில் கம்மியன் மாசறப்புனைந்த**
**பொலஞ் செய் பல்காசு அணிந்த அல்குல்"**

(புறம். 353: 1-2)

என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது.

### சாடி

திரவப்பொருட்களைவைப்பதற்குச் சாடிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இஃது கீழ்ப்பாகம் தரையில் நன்கு அழுத்தும்படி தட்டையாகவும், கழுத்துப்பகுதி நீண்டும், நடுப்பகுதி நன்கு பருத்த அமைப்பினதாகவும், மேற்புறம் மூடியினால் மூடப்படும் வகையிலும் இருந்துள்ளது. கள்ளினைக் காய்ச்சுவதற்கும், அதனைப் பதப்படுத்தி எடுத்து வைப்பதற்கும் இச்சாடி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை,

**"வல்வாய்ச் சாடியின் வழைச்சுற**
**விளைந்த"** (பெரும். 280)

**"நன்மரம் குழீஇய நனைமுதிர் சாடிப்**
**பன்னாள் அரிந்த கோஓயுடைப்பின்"**

(அகம். 166: 1-2)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். மேலும், இச்சாடி அழகிய கலை நயத்துடனும்வடிவமைக்கப்பட்டிருந்தன. இதற்கு,

**"கலிமடைக் கள்ளின் சாடி அன்னஎம்"**

(நற். 295:7)

என்ற பாடலடி சான்று பகர்கின்றது.

### தாலம்

உணவுப் பொருட்களை உண்பதற்குத் தட்டு போன்று பயன் படுத்திய கலன் தாலம் ஆகும். தால் என்பது நாக்கினைக் குறிக்கும். நாக்கு போன்று தட்டையான விரிந்த பரப்பினைக் கொண்டதாக இருப்பதினால் தாலம் என்று வழங்கப் பட்டுள்ளது இருக்கலாம். தாலம்

என்பதற்குப் பனை என்றும் பொருள் உண்டு. எனவே, இது பனையோலை போன்று விரிந்த வடிவில் இருந்துள்ளமையால். பழந்தமிழர்கள் தாலத்தில் உணவு உண்ணப் பயன்படுத்தி யுள்ளனர். இதனை,

"நறு நெய்க்கடலை விசைப்பச் சோறட்டுப்
பெருந்தோ டாலம் பூசன் மேவர"
(புறம். 120: 14-15)

என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது.

## பிழா

இதுவும் உணவு உண்ண பயன் படுத்தும் தட்டினைக் குறிப்பதாகும். கொழியலரிசிக் கஞ்சியினை உண்பதற்கு அகன்ற வாயினை உடைய பிழாவினைப் பயன்படுத்தி உள்ளனர். இதனை,

"அவையாவரிசி யங்களித்துழவை
மலர்வாய்ப் பிழாவிற் புலரவாற்றி"
(பெரும். 275-276)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

## வள்ளம்

இஃது தற்காலத்தில் பயன் படுத்துகின்ற கிண்ணம் போன்று உட்பகுதி குழிந்து வட்டவடிவில் உள்ள கலன் ஆகும். இதனை 'வட்டில்' என்று கூறுவதுண்டு. இது பால், மோர், கள் போன்ற நீர்மப் பொருட்களை உண்ணுவதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதனை,

"பால்பெய் வள்ளஞ்சால்கை பற்றி
எம்பாடுண்டனை யாயின்"
(அகம். 219: 5-6)

"கண்பொர ஒளிவிட்ட வெள்ளிய வள்ளத்தால்
தண்கமழ் நறுந்தேறல் உண்பான் முகம் போல" (கலி. 73: 3-4)

என்ற பாலடிகள் சான்று அளிக்கின்றன. இவ்வாறு, தங்கம், வெள்ளி போன்ற உலோகத்தால் செய்யப்பட்ட கலன் களையும் பழந்தமிழர்கள் பயன்படுத்தி யுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.. இதனை,

"பொன்செய் வள்ளத்துப் பால்கிழக்
கிருப்ப" (நற்: 297:1)

என்ற பாடலடி தெளிவுறுத்துகிறது.

## செம்புப்பானை

பழந்தமிழர்கள் செம்பின் பயனை நன்கு அறிந்திருந்தனர் எனவேதான் கம்மியர்கள் செம்பினை வார்த்து பானை யினைச் செய்துள்ளனர். இத்தகைய பானையினைச் செம்பு பானை என்பர். இதனை,

". . . . . . . . . . . கம்மியர்
செம்புசொரி பானை" (நற். 153: 2-3)

என்ற பாடடிகள் மூலம் அறியமுடிகிறது.

## மண் கலன்கள்

பழந்தமிழர்கள் தங்களின் தேவைக்காக பல்வேறுவிதமான தொழில் களைக் கற்றுக் கொண்டனர். அதே போன்று மண்ணின் பயன்பாட்டை அறிந்து அதனைப் பயன்படுத்தி தேவையான மண்பாண்டங்களையும் செய்துள்ளனர். முற்காலத்தில் நீரினைக் கையினால் பருகினர். பின்னர் விலங்குகளின் தோல், தாவரங்களின் இலைகளையும் பயன்படுத்தினர். அதன் பின்னர் மண்பாண்டங்களை செய்த அதன்மூலம் தன்னுடைய தேவைகளைப் பூர்த்திச் செய்துக் கொண்டனர்.

## தாழி

பண்டையத் தமிழர்கள் இறந்தவர்களின் உடலை பாதுகாப்பாகப் புதைப்பதற்கு மண்ணால் செய்யப்பட்ட பெரிய தாழிகள் வனையப்பட்டுள்ளது. இதனை 'முதுமக்கள்தாழி' என்று அழைக்கப் பட்டது. இதனை,

"கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே
. . . . . . . . . . . . . . . . . . . . . .

**வியன் மலர் அகன் பொழில் ஈமத்தாழி**
**அகலிதாக வனைமோ. . . . . . . . . .''**
**(புறம், 256: 1-6)**

என்ற பாடலடிகள் மூலம் இருவருடைய உடலை வைக்கும் அளவிற்கு பெரிய முது மக்கள்தாழி இருந்துள்ளமையை அறிய முடிகின்றது. தற்போது மக்களிடையே தானியங்களைப் பாதுகாத்து வைக்கும் கூனிப்பானைகள் புழக்கத்தில் காணப்படுகின்றன.

மேலும் இத்தாழி மண்ணால் செய்துக் சுடப்பட்டதை,

**"கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த"**
**(புறம், 238: 1)**

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

## பானைகள்

பழந்தமிழ் மக்கள் அளவு, பயன்பாடு, அடிப்படையில் பலவகையான பானைகளைப் பயன்படுத்தி உள்ளனர். அவற்றுள், குழிசி, சாடி, கலன், கன்னல், தசும்பு, குப்பி, தடவு போன்றவற்றை குறிப்பிடலாம்.

## தசும்பு

இப்பானையானது பால், தயிர், கள் போன்றவற்றை நிறைத்து வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. இதனை,

**"இஞ்சிவி விராய பைந்தார் பூட்டிச்**
**சாந்துபுறத் தெறிந்த தசும்பு துளங் கிருக்கை**
**தீஞ்சேறு விளைந்த மணி நிற மட்டம்"**
**(பதிற்று, 42: 10-12)**

என்ற பாடலடிகள் மூலம் 'கள்' நிறைத்து வைக்கும் தசும்புகளை மலர் மாலையாலும், இஞ்சி மாலையாலும் அலங்கரித்து மண்மீது வைத்து அதன் மேற்புறத்தை சந்தனத்தால் பூசி வைக்கப் பட்டமைக் கூறப்பட்டுள்ளது.

## குழிசி

மக்கள் வீட்டில் உணவு சமைக்கப் பயன்படுத்தும் மண்ணால் செய்யப்பட்ட பானையினை 'குழிசி' என்கின்றனர். இதனை,

**"மான்றடி பழுக்கிய புலவுநாறு குழிசி"**
**(புறம், 165:6)**

**"கயறு பிணிக் குழிசி" (அகம், 77:7)**

**"முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி"**
**(பெரும், 99)**

என்ற பாடலடிகள் மூலம் உணரலாம்.

## காடி

நெல்லிக்காய், எலுமிச்சை, புளியங் காய், மாங்காய் முதலியவற்றைப் பக்குவப்படுத்தி செய்யப்பட்ட ஊறுகாய்களை மண்ணால் செய்யப்பட்ட மண்பாண்டத்தைக் காடிகளில் அடைத்து வைக்கின்றனர். இஃது அவை கெடாமல் இருப்பதற்கு பயன்படுகின்றது. இதனை,

**"காடி வைத்த கலனுடை மூக்கின்**
**மகவுடை மகடூஉப் பகடு புறந் துரப்பக்"**
**(பெரும், 57-58)**

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

## முடிவுரை

உலகில் வாழ்கின்ற அனைத்து இன மக்களும் தாங்கள் வாழ்கின்ற புவியியற் சூழலுக்கு ஏற்பத் தங்களைச் சுற்றிலும் காணப்படுகின்ற பொருட்களைப் பயன்படுத்தி தங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர். காலப் போக்கில் அவையாவும் அன்றாட வாழ்வில் தொடர்ந்து பயணம் செய்யத் தொடங்கி அம்மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் அடியொற்றி அமைந்திருக்கின்றன. இலக்கியங்களில் உண்மைத் தன்மை குறித்த ஐயம் எழுந்தாலும், ஒவ்வொரு பாடலையும் ஒப்புநோக்க உரிப்பொருளை விளக்க இயல்பாகக்

காட்டப்பட்டுள்ள புழங்குபொருள்கள் அம்மகளின் வாழ்வியலைப் பிரதிபலித்து நிற்கின்றன என்பதில் ஐயமில்லை.

## பயன்பட்ட நூற்கள்


சங்க இலக்கியத் தொகுதி 1, 2, வர்த்தமானர் பதிப்பகம், சென்னை. 2018

பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1980.

ரெஜித்குமார், த., புழங்குபொருள் பண்பாடு, காவ்யா பதிப்பகம், சென்னை, 2009.

லூர்து, தே., நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, 1997

வெங்கடேசன்.சு, வைகை நதி நாகரிகம், விகடன் பிரசுரம், சென்னை, 2022.

# தமிழக கோவில் கட்டடக்கலையின் அமைப்பு முறை

ஆய்வாளர்
**அ.இலட்சுமணன்,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
சிதம்பரம் - 608 002

## முன்னுரை

மனிதன் தோன்றியதிலிருந்து தனது நாகரிகப் படிநிலை ஒவ்வொன்றாக கடந்து வாழ்ந்து வருகின்றனர். அதன் பின்பு விலங்குகள் பிற உயிரினங்ளின் மூலம் தங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதனை உணர்ந்து மலைகளையும் காடுகளையும் விட்டு ஆற்றுபடுகையில் முதலில் குடிசைப்போன்ற ஒரு வீட்டை உருவாக்கி வசித்து வந்தனர். அங்கு கடவுளை வழிப்பட நடப்பட்ட கற்களையும் கிராமங்களின் எல்லை கற்களையும் தெய்வங்களாக வழிப்பட்டு, நுண்களைகளிலும் தொழில்களிலும் தெய்வத் தன்மையை கண்டறிந்த தமிழர்கள் கோயில்களையும் கட்டி வணங்கிவந்தனர். கட்டடக்கலை என்பது இங்கு வீடுகளை குறிப்பிடவில்லை, கோயில்களையோ குறிப்பிடப்படுகிறது. கோயிற் கட்டடக்கலையை பற்றி ஆராய் கிறது இக்கட்டுரையாகும்.

## கட்டடக்கலை

கட்டடக்கலை அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றாகவே கருதப்பட்டு வந்தது. கலைகள், பண்பாடு, சமயம், இலக்கியம் ஆகிய துறைகளிலும் நம் தமிழினம் மற்ற இனத்திற்கு எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றது. அதற்கு சான்றாக "தென்னிந்தியக் கட்டடக்கலை, வடக்கிந்தியக் கட்டடக்கலையிலலும் வேறுபட்டே இருக்கிறது"[1] என்கிறார் கு.சேதுராமன். 'இன்று நாம் பிரம்மிக்க கூடிய வகையில் இருக்கும் கோயில் கட்டடக்கலைகள் உடனே எழுந்தவை அல்ல சில நூற்றான்டுகளாக சிறிது சிறிதாக முன்னேறி வந்தவையாகும். தமிழரின் அழகு கலைகள் ஐந்து என்கிறார் மயிலை சீனி. வேங்கடசாமி. அவை 'கட்டடக்கலை, சிற்பக்கலை, ஒவியக் கலை, இசைக்கலை, காவியக்கலை' என்று வகைப்படுத்துகிறார். ஐந்து அழகு கலைகளுள் கட்டடக்கலையையே முதன்மை படுத்தி காட்டுகிறார். ஒவ்வொரு கலைகளையும் கற்று அக்கலைகளை வடிப்பதின் மூலம் ஒருவரின் நுண்ணறிவுத் திறன் வெளிப்படும், அக்கலைகளை விரும்பி கற்க வேண்டும். இதனை "அழகுக் கலையை விரும்பாத மனிதனை அறிவு நிறம்பாத விலங்கு என்றே கூற வேண்டும்"[2] என்கிறார்.

பெண்ணின் கருப்பை எவ்வளவு புனிதமானதாக கருப்படுகிறதோ அதைப்போன்றே கட்டடக்கலையையும் அழகுகலைகளுள் முக்கியமானதாக கருதப்படுகிறது. இதனை நா.பாலுசாமி. "இக்கலை நாகரிகத்தின் கருப்பையாக விளங்குகிறது என்பது அறிஞர் பலரின் கருத்தாகும்"[3] என்கிறார். கோயிற் கட்டடக்கலை தவிர்த்து பிற கட்டடகலைகளும் ஏறாளமாக இருக்கின்றன. அவைகளில் அரண்மனை

களும், தேவகோட்டங்கள் குறிப்பிட தக்கவையாகும். அரண்மனைகளில் வாழ்ந்த மன்னர்கள் நல்லாட்சியினை தந்து மக்களை சிறப்பாக வாழச் செய்தமையால் அந்த அரண்மனைகள் நினைவுச் சின்னமாகவும் புனிதத் தன்மையுடையதாகவும் இருக்கின்றன. அவை "சில கட்டிடங்கள் வரலாற்றுத் தொடர்பாலும் புனிதத் தன்மையாலும் மக்களைக் கவருபவைகளாக அமையும்"[4] என்கிறார். இதன் வாயிலாக சங்காலம் முதற்கொண்டே கட்டடக்கலையில் தமிழர்கள் சிறந்து விளங்கினார்கள் என்பது புலனாய்கிறது.

கட்டடக்கலை பிற கலைகளிலிருந்து தனித்துவமான கலையாக இருக்கின்றது. இக்கலைக்கு பல எண்ணிக்கையில் ஆட்களும் பிற உபகரணங்களும் தேவைப்படும், ஆனால் ஒவியக்லைப் போன்று சில கலைகளுக்கு ஒன்று, இரண்டு, மூன்று எண்ணிக்கையில் தான் ஆட்கள் தேவைப்படும். இதனாலே இக்கலை தனித்துவமனாதாகும். இதனை "கட்டடக்கலை பிறகலைகளை ஒருங்கே பெற்ற ஒரு மாறுபட்ட கலையாகும்"[5] என்கிறார் நா.பாலுசாமி. ஒரு நாட்டின் கட்டடக்கலை அந்நாட்டின் சிறப்புகளை எடுத்துக் கூறும், அங்கு அம்மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள், எச்சிறப்புடையவராக இருந்தார்கள் என்பதனையும் அறியலாம். இதனையும் 'கிரேக்கர்களின் கட்டடங்கள் தூய்மைக்கும், உரோமனியர்களின் கட்டடங்கள் அறிவியல் வளர்ச்சிக்ளும், பிரெஞ்சுக்காரர்களின் கட்டடங்கள் மறுமலர்ச்சி அறிவிற்கும், இந்தியரின் கட்டடங்கள் ஆண்மீகத்திற்கும் சான்று களாக விளங்குகின்றன்'. என்றும் கூறுகிறார்.

நெடுநல்வாடையை படைத்த நக்கீரரும் கட்டடக் கலையிலும் ஆர்வம் மிக்கவராக இருந்தார் என்பதனை "நக்கீரர்க்கு ஓவியம், சிற்பம், கட்டடக்கலை ஆகியவற்றில் ஈடுபாடு இருந்ததை நெடுநல்வாடையில் உணரப்படுகிறது"[6] என்கிறார் நா. பார்த்தசாரதி. இதன்வாயிலாக சங்காலம் முதற்கொண்டே கட்டடக்கலையில் தமிழர்கள் சிறந்து விளங்கினார்கள் என்பது புலனாகிறது.

## தொன்மை வரலாற்றை வெளிப்படுத்தும் கட்டடக்கலை

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு நகரங்களும், தன்னுள் சிறப்பையும் தொன்மையும் கொண்டே காலம் கடந்து நிற்கின்றது. அதனை அறிவியல் முறையில் ஆராய கல்வெட்டுகளும் தமிழ் இலக்கியங்களும் நமக்கு உதவியாக இருக்கின்றது. அதற்கு எடுத்துகாட்டாக "மாமல்லபுரம், காஞ்சி, மதுரை, தஞ்சை, புகார், பழையார் முதலான ஊர்களின் தொன்மையான வரலாற்றுகள் வெளிவந்துள்ளன. கல்வெட்டுகளையும் இலக்கியங்களையும் மையமாக வைத்து இவற்றை ஆராய்ந்தனர்"[7] என்று சு.குப்புசாமி கூறுகிறார்.

## தமிழர் கோயில்களின் அமைப்பும் விதமும்

தமிழர்களின் 'சங்க கால கட்டட அமைப்பை மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். அவை 1. கோயில் 2. அரண்மனை 3. பிற கட்டடங்கள்'. தமிழர்களை திராவிடர் என்று அழைப்பர். தமிழர்களின் கோயில்களும் அதன் அமைப்பு முறையும் தூண்களின் அமைப்பு பிற நாட்டு கட்டடக் கலை களிலிருந்து தனித்துவம் உடையதாகவே இருக்கின்றது. இதனை "திராவிடக்கலை எனப் பேசப்படும் தமிழகக் கோயில் தூண்களின் அமைப்பு தனித்துவம் உடையது எனக் கருதலாம்"[8] என்கிறார் இராசு. பவுன்துரை.

கோயிற் கட்டடக்கலையின் தோற்றம் 'ஒற்றைத்தளம்' என்ற மண்டப

வடிவமைப்புடன் தொடங்குகின்றது. குடைவரைக் கோயில்கள் 'ஏகதள' மண்டபமாக பல்லவர், முத்தரையர் காலத்தில் அமைக்கப்பட்டதனால் இதனை உணர முடிகின்றது. "கட்டடக் கலை என்பது வெறும் புறத்தோற்ற உரு அழகு மட்டுமில்லை"[9] என்கிறார் நா. பார்த்தசாரதி. கோயிற் கட்டடக்கலை என்பது வெளித்தோற்றம் மட்டும் சிறப்பாக அமைப்பது இல்லை உட்புறமும் அழகாகவும் கலைநயத்துடனும் அமைக்கப்படுவதாகும்.

தமிழகத்தில் கட்டப்பட்ட கோயில்கள், குடைவறைகள், கற்றளிகள் என இருவகையாக அமைக்கின்றனர். "பாரத (இந்தியா) நாட்டுக் கட்டிடங்களை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித் திருக்கிறார்கள். அவை 1.நாகரம் 2.வேசரம் 3.திராவிடம்"[10] என்றனர். ஆனால் தமிழகத்தில் அதுபோன்று கிடையாது.

## மரக்கோயில்கள்

கோவில் கட்டடங்களை முதன் முதலில் அமைக்கும் போது மரத்தினாலே அமைத்தனர், அதற்கு எடுத்துக்காட்டாக உலக புகழ் பெற்ற தில்லை நடராஜர் கோவிலின் 'சபாநாதர் மண்டபம் இப்போதும் மரத்தினாலேயே அமைக்கப் பெற்றிருக்கிறது. சிதம்பரத்தில் ஊர்த்துவத்தாண்ட மூர்த்தி ஆலயம் பிற்காலத்தில் கருங்கல்லினால் கட்டப் பட்டது. கல்லினால் கட்டப்பட்டாலும் அதன் தூண்கள், கூரை(விதமானம்) முதலிய அமைப்புகள் மரத்தினால் அமைக்கப்பட்டது போலவே காணப்படுகின்றது.'

## செங்கல் கட்டடங்கள்

செங்கல் கட்டடங்கள் சில நூற்றாண்டுகள் மட்டுமே நிலைத்து நிற்கும், அதில் சில மூலப்பொருட்கள் கலந்தும் கட்டப்பட்டிருக்கும். மண்ணாலும் சுட்ட செங்கல்லாலும் எடுப்பிக்கப்பட்ட கோயில்கள் 'மண்டளிகள்' என்றனர். ஆனால் சிறிது காலத்திலே சிதலமடைந்து விடும். "செங்கள் கட்டிடங்கள் ஏறக்குறைய 200 அல்லது 300 ஆண்டுகளுக்கு மேல் நிலைபெறுவதில்லை கி.பி 600க்கு முற்பட்ட காலத்திலே இருந்த நமது நாட்டுக் கோயில் கட்டடங்கள் எல்லாம் செங்கள் கட்டிடங்களே"[11] என்கிறார்.. சிதைந்துபோன கட்டிடங்கள் பற்றி அகநானூறு பாடல்

**"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் விழ்ந்தென**
**முலைப்புறாத் துறந்த மரந்சோர் மாடத்து**
**எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று**
**ஒழுகுபலி னறந்த மெழுகாப் புன்றினை"[12]**
**(அகம்-167)**

சங்க காலத்தில் சோழ மன்னர் களின் ஒருவரான சோழன் செங்கணன் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் கோவில்களை கட்டினார். "சோழன் செங்கணன் அமைத்த பெருங் கோயில்கள் எழுபத்தெட்டும் செங்கற் கட்டிடங்களே"[13] என்கிறார் மயிலை சீனி. வேங்கடசாமி.

## குகைக் கோயில்கள்

பெரிய கற்பாறைகளை குடைந்து அழகான 'குகைக் கோயில்களை' (பாறைக் கோயில்களை) அமைத்தனர். மலையில் குடையப்பட்ட கோயில்கள் 'குடபோகம்' என்றனர். பாறையைச் செதுக்கித் தூண்களையும் முன் மண்ட பத்தையும் அதற்குள் கருவறையையும் (கருப்பக்கிரகத்தையும்) வடித்தனர். "முதன் முதலில் அஜீவகர்களுக்காக அவரும் அவரது பேரன் தசரதரும் கி.மு.3–ஆம் நூற்றாண்டில் குகைக் கோயில்களை வெட்டினார். கி.மு 4–ஆம் நூற்றாண்டு வாக்கில் குப்தப் பேரரசர்கள் காலத்தில் இந்துக் கோயிற்கலை துவக்கப்பட்டது. அம்மன்னர்களைப் பின்பற்றிப் பலரும் இந்துக் கோயிற்கலை,

மற்றும் கட்டடக்கலையை வளர்த்தனர், தமிழகத்தில் அப்பணியைத் தொடங்கியவர்கள் தொண்டை மண்டலத்தை ஆண்ட பல்லவப் பேரரசர்களே ஆவர் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை"[14] என்பதனை தற்போதுள்ள குகைக்கோயில்களை கண்டு அறியலாம். ஒரு கோவிலை அமைப்பதற்கான எந்தவொரு மூலப் பொருளும் இல்லாமல் அதாவது செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் இல்லாமலே கோயில்களை அமைத்தனர். அதற்கு சான்றாக "தமிழகத்தில் முதன்முதலில் குகைக் கோயில்களைக் குடைவித்தவன் முதலாம் மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னனேயாவான்;. விசித்திர சித்தன் முதலிய விருது பெயர்களை உடைய அம்மன்னன் குடைவித்த மண்டப்பட்டுக் கோயிலில் 'செங்கல், மரம், உலோகம், சுண்ணாம்பு முதலிய மூலப் பொருள்களை உபயோகிக்காமல் பிரமன், சிவன், விஷ்ணு என்று மும்மூர்த்திகளுக்கும் அற்புதமான ஆயதனத்தை(கோயிலை) விசித்திரசித்தன் அமைத்தான்' என்று அவறுடைய கல்வெட்டில் காணப்படுகிறது"[15] என்றும் அக்குகை கோயிலகள் வரலாற்று சிறப்புடைய சின்னமாகவும் அமைந்து, பல்லவர்களுக்கே அடையளமாய் அமைந்துள்ளது.

## கற்றளிகள்

மிகப் பழைய காலத்திலே நமது நாட்டுக் கோயில் கட்டடங்கள் மரத்தினால் அமைக்கப்பட்டன. அதன் பிறகு செங்கல்லிலும் சுண்ணாம்பிலும் கட்டடங்கள் அமைத்தனர். அதற்கு பின்னர் பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களாக அமைத்தனர், பிறகு கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி கட்டினர். இதனை 'கற்றளி' என்றனர். "கி.பி. 7ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரசாண்ட இரண்டாம் நரசிம்மவர்மன் இராஜசிம்மன் காலத்தில் கற்றளி என்றால் கற்கோயில் என்பது பொருள். கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படும் கோயில் கட்டிடங்களுக்கு கற்றளி என்பது பெயர். சுண்ணாம்பு சேர்க்காமலே இக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன"16 என்றனர். தமிழகத்தில் கற்கோவில்கள் ஏறாளமாகவும் உள்ளன. அவற்றுள் தஞ்சைப் பெரியகோவில், தில்லை நடராசர் கோவில் போன்று கூறிக் கொண்டே போகலாம். கற்றளி கோவில்கள் பல ஆண்டுகள் நிலைத்து நின்று தற்போதுவரையிலும் உருதித் தண்மையுடன் அமைந்திருக்கின்றது.

## முடிவுரை

தமிழரின் கட்டடக்கலை தொன்மை வரலாற்றுச் செய்தியினை வெளிப்படுத்துவதையும், கோயில்களின் அமைப்பு முறையான, மரக்கோயில், செங்கள் கட்டடங்கள், குகைக்கோயில், கற்றளிகள் போன்ற கோயில்களின் அமைப்பையும் அதன் நிலையையும், ஒவ்வொரு அமைப்பு நிலை கோயில் களின் சிறப்பு பற்றியும் பல்வேறு நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி களையும் கருத்துக்களையும் இவ்வாய்வு கட்டுரையில் மூலம் விவரித்துள்ளேன்.

## சான்றெண் விளக்கம்

1. தமிழகச் சமுதாயம் பண்பாட்டுக் கலை வரலாறு, முனைவர் கு.சேதுராமன், ப.147
2. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மயிலை சீனி.வேங்கடசாமி, ப. 8
3. வாழ்வியல் களஞ்சியம்(தொகுதி ஆறு), முனைவர் நா.பாலுசாமி, ப.494
4. மேலது, ப.494

5. மேலது, ப.494
6. பழந்தமிழரின் கட்டடக்கலையும் நகரமைப்பும், நா.பார்தசாரதி, ப.88
7. வரலாற்று வடிவங்கள், சு.குப்புசாமி, ப.18
8. தமிழகக் கோயிற்கட்டடக்கலை மரபு தூண்கள், இராசு.பவுன்துரை, ப.9
9. பழந்தமிழரின் கட்டடக்கலையும் நகரமைப்பும், நா.பார்தசாரதி, ப.18
10. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மயிலை சீனி.வேங்கடசாமி, ப.16
11. மேலது, ப.13
12. அகநானூறு, பா.167
13. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மயிலை சீனி.வேங்கடசாமி, ப.14
14. தமிழகச் சமுதாயம் பண்பாட்டுக் கலை வரலாறு, முனைவர் கு.சேதுராமன், ப.147
15. சோழர் கலைப் பாணி, எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், ப.24
16. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மயிலை சீனி.வேங்கடசாமி, ப.16

# நம்மாழ்வாரும் திருவேங்கடத்தானும்

நெறியாளர்:
**முனைவர். நளினி (தமிழ் துறை)**
எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரி.
தாம்பரம், -வேளச்சேரி மெயின் ரோடு
கௌரிவாக்கம்,சென்னை- 600 073.

**வெ.கலாவதி,** M.A.,M.Sc.,B.Ed.
எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரி
தாம்பரம், -வேளச்சேரி மெயின் ரோடு
கௌரிவாக்கம், சென்னை- 600 073.

## முன்னுரை;–

பழந்தமிழர் பண்பாடுகளில் ஒன்று இறைவனிடத்தில் பக்தி செலுத்துவது. பக்தி என்பது மனித மனத்தை பக்குவப் படுத்துவது. இறைவனிடத்தில் சரணாகதி செய்வது ஒன்றேவீடு பேறு அடைய வழி எனநம்பினர். இறைவனின் பாதம் ஒன்றே கதி என்று நினைத்து அவனது சரணங்களை மட்டுமே நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இறைவன் நிச்சயம் நற்கதியைஅருள்வான் என்பதில் சிறிதளவும் சந்தேகம் இல்லை. அப்படிப் பட்ட அந்த இறைவனின் பாதத்தை இறுக்கமாக பற்றவேண்டியதுநம் கடமை. "சரணாகத வத்ஸலன்" என்ற திருநாமம் ஸ்ரீ ராமருக்கு உண்டு. திருவேங்கடத் தானிடம் நம்மாழ்வார் சரணடைந்ததைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## சரணாகதியின் விளக்கம்:–

சரணாகதி என்பது எவ்வித பலனும் எதிர்பாராமல் தங்களை உடல் அளவிலும் ஆன்மா அளவிலும் முழுமையாக இறைவனிடத்தில் அர்ப்பணிப்பது ஒருவகையான பக்தியாகும். இதனை சைதன்யரும் ராமானுஜரும் வலியுறுத்தியுள்ளனர். வைணவ அடியார்கள் பரம்பொருளான திருமாலை அடைவதற்கு சரணாகதியே எளிய வழியாகும் என்று கூறியுள்ளனர். இராமனிடத்தில் வீடணனும், பெருமாளிடத்தில் கஜேந்திரனும் செய்த சரணாகதி வைணவ சமயத்தில் பெரிதும் போற்றப்படுகிறது. பாகவதபுராணத்தில் முதலையின் பிடியில் சிக்கிய கஜேந்திரன் எனும் யானையின் அபயக் குரலைக் கேட்டவுடன் விஷ்ணு நேரில் தோன்றி யானைக்கு மோட்சம் அளித்தார்.

## நம்மாழ்வார் அருளிய சரணாகதி பாசுரங்கள்:–

**ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி,**
**வழுவிலா அடிமை செய்ய வேண்டும்நாம்,**
**தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து,**
**எழில்கொள் சோதி எந்தைதந்தை**
**தந்தைக்கே.**

பெரிய ஆரவாரத்தை எழுப்பும் அருவியை உடைய திருவேங்கடம் என்னும் திருமலையில் இருப்பதனாலே அழகிய தங்க ஒளிமயமான திருமேனியை உடைய நம்முடைய குலநாதனுக்கு நாம் ஒழிவில்லாத எல்லாவிடத்திலும் உடனிருந்து, எல்லா நிலைகளிலும் பிரியாமல் நின்று, ஒன்றும் நழுவாதபடி எல்லாத் தொண்டையும் செய்ய வேண்டும்.

**எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கும்**
**முந்தை வானவர் வானவர் கோனொடும்**
**சிந்துபூ மகிழும் திருவேங்கடத்து**
**அந்தஒளமில் புகழ்க்கார் எழில்**

நமது பரம்பரைத் தெய்வமாகத் திகழும் எம்பெருமான், சேனையை

உடைய பரமபதத்தில் வசிப்பவர்களுக்கு தலைவனாகவும் நிலத்தில் தூவின புஷ்பங்கள் மலரும் படியான திருமலையில் வாழ்வதாலே, முடிவில்லாத புகழை உடையவனாய் கருத்த வடிவழகையுடைய திருவேங்கடத் தானாய் விளங்குகிறார்.

**அண்ணல் மாயன் அணி கொள் செந்தாமரைக்**
**கண்ணன் செங்கனி வாய்க் கருமாணிக்கம்**
**தெண்ணிறைச் சுனை நீர்த் திருவேங்கடத்து**
**எண்ணில் தொல் புகழ் வானவர் ஈசனே.**

திருமேனியைப் பார்த்தாலே தெய்வம் என்று தோற்றும்படியாய், ஆச்சர்யமான குணங்கள் மற்றும் அணி கலன்களை உடையவனாய், அழகை உடைய புண்டரீகாக்ஷனாய், சிவந்த கனி போன்ற திருப்பவளஇதழ்களை உடையவனாய், நீல ரத்னம் போல் ஒளிவிடும் திருமேனியை உடையவன் திருவேங்கடத்தான். தெளிந்த நிறத்தை யுடைய சுனைநீரைக் கொண்ட திருமலையில் நிற்பதால் கணக்கற்ற இயற்கையான குணத்தை உடையவனாய் பரமபதத்திலே வசிப்பவர்களுக்கு ஸ்வாமியானவன்.

**ஈசன் வானவர்க்கு என்பதன் என்றால் அது**
**தேசமோ திருவேங்கடத்தானுக்கு**
**நீசனேன் நிறை ஒன்றும் இலேன் என் கண்**
**பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே**

நித்யசூரிகளுக்குத் தலைவன் திருவேங்கடத்தான் என்றும் விண்ணுலகத்தில் வாழும் தேவர்களின் பக்தியை மட்டும் இன்றி என்னைப் போன்ற எளியவர்களின் பக்தியையும் ஏற்றுக் கொள்ளும் பெருமையை உடையவன் திருவேங்கடத்தான் என்று இப்பாசுரம் மூலம் நம்மாழ்வார் விளக்குகிறார்.

**சோதியாகி எல்லா உலகும் தொழும்**
**ஆதி மூர்த்தி என்றால் அளவாகுமோ**
**வேதியர் முழு வேதத்தமுதத்தைத்**
**தீதில் சீர்த் திருவேங்கடத்தானையே.**

வைதிகர்களுடைய எல்லா வேதங்களிலும் கொண்டாடப்படும்படி மிகவும் இனிமையை உடையவனாய் ஆள்பார்த்து அனுபவம் கொடுக்கும் தீமை இல்லாத எல்லாருக்கும் அனுபவத்தைக் கொடுக்கும் குணத்தை உடையவனான ஒளிவிடும் திருவேங்கடம் உடையானைக் கொண்டு எல்லாரும் தொழும்படி எல்லாருக்கும் காரணனான ஸர்வேச்வரன் என்றால் அது ஒரு பெருமையோ? என்று இவ்வாறு வினவுவதன் மூலம் இத்தகைய எல்லா குணங்களையும் உடையவன் திருவேங்கடத்தான் என்பதை நமக்கு எடுத்துரைத்து அவனிடத்தில் சரணாகதி செய்வதே விரும்பியதை பெறும் வழி என்கிறார் நம்மாழ்வார்.

**வைத்த நாள் வரை எல்லை குறுகிச் சென்று**
**எய்த்திளைப்பதன் முன்னம் அடைமினோ**
**பைத்த பாம்பணையான் திருவேங்கடம்**
**மொய்த்த சோலை மொய் பூம் தடம் தாழ்வரே**

ஆதிசேஷனை படுக்கையாக உடைய இறைவன் எழுந்தருளி இருக்கின்ற திருவேங்கடத்தில், நெருங்கின சோலை களும் நெருங்கிய பூக்கள் பொருந்திய நீர் நிலைகளும் உடைய திருமலையில் எழுந்தருளி உள்ள திருவேங்கடத்தானின் பாதங்களை, ஆயுளின் முடிவில் தளர்ச்சி அடைவதற்கு முன் சென்று சேருங்கள்.

**தாள் பரப்பி மண் தாவிய ஈசனை**
**நீள் பொழில் குருகூர்ச் சடகோபன் சொல்**
**கேழில் ஆயிரத்து இப்பத்தும் வல்லவர்**
**வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே**

திருவடிகளைப் பரப்பிஉலகத்தை அளந்துகொண்ட சர்வேசுவரனை, உயர்ந்த சோலையையுடைய ஆழ்வார் திருநகரிக்குத் தலைவரான நம்மாழ்வார் அருளிச்செய்த ஒப்பில்லாத ஆயிரம் பாசுரங்களுள் இந்தப் பத்து பாசுரங்களையும் அர்த்தத்துடன் சொல்ல வல்லவர்கள் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப் பெற்று உலகம் புகழும்படி பேற்றினைஅடைந்து வாழ்வார்கள்.

**முடிவுரை:–**

இறைவனின் அருளால் மானிடப் பிறவி எடுத்த நாம் ஒவ்வொருவரும் திருவேங்கடத்தானை வணங்கி பிறவா பேரின்ப நிலையை அடைவோம். கலியுகத்தில் காக்கும் கடவுளான திருவேங்கடதானுடைய திருவடியை பற்றுவோம். அத்திருவடி நம்மை ஒருக்காலமும் கைவிடாது என உறுதியாக நம்புவோம்.

# சங்ககாலக் குறிஞ்சிப் பாடல்களில் தமிழ்ப்பண்பாட்டுப் பதிவுகள்

**முனைவர் மு.கவிதா**
உதவிப் பேராசிரியர்-நெறியாளர்
தமிழ்த்துறை,
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஈரோடு - 638 009.

**சி.கிருஷ்ணமூர்த்தி**
முனைவர்பட்ட ஆய்வு மாணவர்,
தமிழ்த்துறை,
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஈரோடு - 638 009.

தமிழ்ப் பண்பாட்டின் எச்சங் களையும் அடிச்சுவட்டையும் எடுத்துரைப்பதாக சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. உலக அளவில் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நாகரிகத்திலும் பண்பாட்டிலும் தமிழ்ச் சமூகம் செம்மாந்து விளங்குவதற்கு ஆதாரமாக இவ்விலக்கியங்கள் உள்ளன. அவ்வகையில் மனித இனத்தையும் மனத்தையும் பண்படுத்தும் சங்க இலக்கியங்களுள் காணப்படும் குறிஞ் சிப் பாடல்கள் பதிவு செய்துள்ள பண் பாட்டுச் சிந்தனைகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்பாடு – விளக்கம்

உலகில் வாழும் மக்கள் அனைவரும் இயல்பாகவே சீரும்சிறப்புமாக வாழ விரும்புகிறன்றனர். அமைதியும் மன மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வே நல்வாழ்வு ஆகும். இத்தகைய நல்வாழ்வு வாழ, சமுதாயம் சான்றோர்கள் நிறைந்ததாக இருக்க வேண்டும். இதனாலேயே வள்ளுவப் பெருந்தகை,

> “பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்
> மண்புக்கு மாய்வது மன்”[1]

என்கிறார். செம்மையான வாழ்விற்கு அடித்தளமாய் அமைவது பண்பாடு. இச்சொல் கலாசாரம் என வழங்கப் பெற்றது. கலாசாரம் என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லாக ‘பண்பாடு’ என்ற சொல்லை திரு.டி.கே. சிதம்பரனார் அவர்கள் உருவாக்கினார்.

பண்பாடு பற்றி இ.பிடெய்லர் என்பவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடு கின்றார். “மனிதன் சமுதாயத்தில் ஓர் அங்கத்தினன் இந்நிலையில் அவன் அடைந்துள்ள அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், கோட்பாடுகள், சட்டம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைத் தன்னுள் அடக்கிய ஒரு முழுமையான தொகுப்பே பண்பாடு ஆகும்”[2] எனவே பண்பாடு நிலையான தன்மை கொண்டது. பண்பாட்டுக் கூறுகள் மாறாத, அழியாத தன்மையுடையன. மனிதன் அழிந்தாலும் அழியாத தன்மையுடைய பண்பாடு அவனைத் தொடர்ந்து வரும் எனலாம்.

## இலக்கியங்களில் ‘பண்பாடு’ – சொல்லாட்சி

கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை பண்பாடு குறித்து கீழ்க்கண்டவாறு எடுத்துரைக்கின்றது.

> பண்பெனப்படுவது பாடறிந் தொழுகுதல்’
> ‘பண்பெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்’[3]

என்னும் கருத்துக்கள் மனிதகுலத்திற்கு நீதியைப் புகட்டும் இனியதொரு பண்பாட்டு பதிவு எனலாம். நற்றிணை யிலும் இது போன்ற பதிவுகளைக் காணலாம்.

**"நயனும் நண்பும் நானும் நன்குடைமையும்
பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும்
நும்மினும் உடையேன் மன்னே"[4]**

*யாவருக்கும் இனிமைதரும் பாங்கில் நடத்தல், நயன், வேறுபாடின்றி யாவரிடமும் அன்பு பாராட்டுதல், நண்பு, குற்றம் தீமை இவற்றைக்கண்டு மனம்கூசுதல், நாணம் போன்ற பண்பாட்டுக்கூறுகளை எடுத்தியம்பும் நற்றிணைக் காட்சி போற்றத்தக்கதாகும்.*

## குறிஞ்சிப் பாடல்களில் பண்பாட்டுப் பதிவுகள்

*மலையும் மலை சார்ந்த பகுதியாக விளங்கும் குறிஞ்சி நிலத்தின் கடவுளாக முருகன் போற்றப்படுகின்றார். சங்க இலக்கியங்களுள் குறிஞ்சிப் பாடல்கள் பல்வேறு பண்பாட்டுப் பதிவுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. அவ்வகையில் சில பண்பாட்டுப் பதிவுகளை இங்கு காணலாம்.*

## அன்பு எனும் பண்பு

*குறிஞ்சிப்பாட்டு காட்டும் பண் பாட்டுப் பதிவுகளுள் தனிமனித வளர்ச்சிக்குத் துணைபுரியும் காதலைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இனிய இல்லத்திற்கு அடிப்படையாக அமைவது அன்பு. மனவளர்ச்சியும் அறிவு முதிர்ச்சியும் கொண்டோர் ஒத்த கருத்தோடு, ஒருவர் மீது அன்பு செலுத்துவதே அன்பாகும். இது உயிர் இயற்கையாகும். தலைவனும் தலைவியும் சந்தித்த போது காதல் தோன்றுகிறது. இவருடையதாய், தந்தையரிடையே எவ்வித உறவோ, தொடர்போ இல்லை. இருப்பினும் செம்மண் நிலத்தோடு சேர்ந்த தண்ணீர் போல இவருடைய அன்பு நெஞ்சங்கள் கலந்துவிட்டன. இதனை,*

**'செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சம்தான் கலந்தனவே'[5]**

*என்று குறுந்தொகைப்பாடல் ஒன்று காட்சிப்படுத்தியுள்ளது. மேலும் ஒரு குறிஞ்சிப்பாடலில் தலைவன் உன்னை மறந்துவிட்டான். அவனுக்கு உன்மீது அன்பில்லை என்று கூறும் தோழிக்குப் பதில் கூறும் தலைவி தலைவன் தன்மீது கொண்டுள்ள அன்பு எத்தகையது என்பதைக் கீழ்க்கண்டவாறு தெளிவு படுத்துகிறாள்.*

**"நிலத்தினும் பெரிதே! வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே- சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனோடு
நட்பே"[6]**

*என்னும் பாடலில் குறுந்தொகைத் தலைவி காட்டும் அன்புக் காட்சி பதிவாகியுள்ளது. தனிமனித மேம்பாட்டிற்கு உதவும் இனியப் பண்பினைச் சிறப்பாக படம் பிடித்துள்ளது இப்பாடல்.*

## அறத்தொடு நிற்றல்

*அகத்திணை மாந்தர்களின் மன, மண ஒழுக்கங்களை முறையே களவு, கற்பு என்ற இரு பிரிவுகளில் அடக்குவர். இவ்விரண்டையும் இணைத்து நிற்பது அறத்தொடு நிற்றலாகும். தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என ஒவ்வொருவரும் அறத்தொடு நிற்பதுண்டு. தலைவி விரும்பிய தலைவனுடன் கற்பு வாழ்க்கையில் இணைத்து தலைவனை தலைவிக்கு திருமணம் செய்வித்தலாகும்.*

*"தலைவிக்கு உடனிருந்து பிறர் அறியாமல் களவுக்காதலுக்கு உதவியவள் தோழி, களவுக்காதல் கற்பாகமாற வேண்டும். காதல் வெளிப்பட்டுத் திருமணம் நிகழவேண்டும். ஆதலால் வாய்ப்பு ஏற்படும் பொழுது தோழி செவிலிக்குத் தலைவியின் காதலைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறாள். களவை வெளிப்படுத்தல் என்று கூறாமல் அறத்தொடுநிற்றல் என்று பெயர்*

வைத்துள்ளது சிறப்பாகும். தலைவியின் கற்பு அறத்தைக் காப்பதற்காகக் களவு உண்மையை வெளிப்படுத்துவதால் இது அறத்தொடு நிற்றல் என்று சொல்லப் படுகிறது.[7]

**"அகவன் மகளே! பாடுக பாட்டே!**
**இன்னும் பாடுக பாட்டே !அவர்**
**நன்னொடும் குன்றம் பாடிய பாட்டே!"8**

மேற்கண்ட பாடலில், குறத்தி குறி கூறுமுன் வழக்கப்படி பல மலைகளையும் பற்றிப் பாடத்தொடங்குகிறாள் தலைவனுடைய மலையைப் பாடும் போது தோழி குறுக்கிட்டுக் கூறுகிறாள். குறத்தியே! பாடு, பாடு அவருடைய மலையை மட்டுமே பாடிக்கொண்டேயிரு என்கிறாள். இவ்வாறு குறி கூறுபவனைப் பார்த்து அவர் மலையை மட்டுமே பாடும்! என்பது தாய்க்கு ஐயத்தை உறுதியாக ஏற்படுத்தும் அவர் மலை என்பதில் உள்ள குறிப்பு தலைவியின் மாற்றத்திற்கான காரணத்தை தாய்க்கு வெளிப்படுத்திவிடும். களவு வெளிப் பட்ட பின் திருமண ஏற்பாடுகள் தொடங்கிவிடும் இதுவே தோழியின் எதிர்பார்ப்பு. இவ்வாறு குறிப்பாக நிகழ்வதே அறத்தொடு நிற்றல் நிகழ்ச்சி ஆகும்.

## விருந்தோம்பல்

"விருந்து என்னும் சொல்லுக்கு புதுமை என்பதே பொருள். எனவே முற்றிலும் புதிய வராக தம்மிடம் வந்தோரைப் பேணு தலையே விருந்தோம்பல்"[9] எனத் தமிழரின் விருந்தோம்பல் பண்பினை திருதட்சிணாமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளது கூர்ந்து நோக்கத் தக்கது. விருந்து போற்றுதல் மகளிர் கடமைகளில் தலையாய ஒன்றாக இருந்தது என தொல்காப்பியர் குறிப்பிடு கிறார். தலைமக்களின் பண்புகளை குறிப்பிடும் பொழுது,

**"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்புதலும்**
**பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்"[10]**

என்ற நூற்பாவில் ஆசிரியர் உணர்த்து கின்றார். இதன்மூலம் தமிழர்கள் விருந்தோம்பல் என்பதை இல்லறக் கடமையாகக் கருதி வந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

## குறிஞ்சி நில உணவுகள்

குறிஞ்சி நில மக்கள் தேன், கிழங்கு, மா, பலா, தினைமாவு போன்ற பச்சை உணவுகளையும் உடும்பு கறி, பன்றி கறி, கடமான் கறி போன்ற சமைத்த உணவு களையும், தினை ஐவன நெல், மூங்கலரிசி ஆகிய உணவு வகைகளையும் கள்ளையும் உண்டு வந்துள்ளனர்.

## குறிஞ்சி நில மக்களின் விருந்தோம் பல்பண்பு

குறிஞ்சி நிலத்தில் சமைப்பதற்கு விறகுகளாக சந்தனம் மற்றும் அகில் மரங்களை பயன்படுத்தியுள்ளனர் என்பதை கீழ்க்கண்ட பாடல்வழி அறியமுடிகின்றது.

**"முன்றில் நீடியமுழவு உறழ் பலவில்**
**பிழிமகிழ் உவகையன் கிளையொடு கலிசிறந்**
**சாந்த ஞெகிழியின் ஊன் புழுக்கு**
**அயரும்"[11]**

சந்தன விறகால் தீ மூட்டி சமைக்கப் பட்ட ஊன் கலந்த சோற்றை தம்முடைய சுற்றத்தாருடன் உண்டு ஆடிப்பாடி மகிழ்ந்துள்ளனர் என்பதை மேற்கண்ட பாடலில் அறிய முடிகின்றது. குறிஞ்சி நில மக்கள் பிற நிலம் சார்ந்த மக்களுக்கும் பாகுபாடின்றி ஆட்டிறைச்சியுடன் நெய் கலந்து வெண்மையான சோற்றில் வெள்ளெலியின் சூட்டிறைச்சியைச் சேர்த்து நிறைய தருவதை வழக்கமாக கொண்டிருந்தனர் என்பதைக் கீழ்க்கண்ட பாடல்வழி அறிய முடிகின்றது.

**"மைஊன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்**
**எலிவான் சூட்டொடு மலிய பேணுதல்"[12]**

## முடிவுரை

குறிஞ்சிப் பாடல்கள் சங்ககாலத் தமிழர்களின் பண்பாட்டை வெளிப் படுத்து வதில் சிறந்து விளங்குகின்றது எனலாம். குறிப்பாக, அன்பு செலுத்துதல், அறத்தொடுநிற்றல் என்ற பண்பு, விருந்தோம்பல் என்பனவாகும். இப்பண்பாட்டு நிகழ்வுகளை நிகழ்த்த பெரிதும் துணைபுரிவது பெண்களே என்பது சிறப்பானதாகும். இதன் மூலம் சங்ககாலத்தில் பண்பாட்டு மரபுகளை பேணுவதில் பெண்களின் பங்கு அதிகம் என்பது புலனாகிறது.

## சான்றெண் விளக்கம்


1. திருக்குறள், எண் 996.
2. இந்தியப் பண்பாடு – மேனிலைப் பள்ளி இரண்டாமாண்டு ப. 1 மு.ப.2005
3. கலித்தொகை – பா.133
4. நற்றிணைபா. 166
5. குறுந்தொகை .பா.40
6. குறுந்தொகை .பா.3
7. இளங்கோவன், சங்க இலக்கியத்தில் குறிஞ்சி ப.27
8. குறுந்தொகை. பா.23
9. ஆ.ஜெகதீசன், குறுந்தொகை ஆய்வு இரண்டாம் பகுதி, ப.370
10. தொல். கற்பியல். நூற்.11
11. அகநானூறு, 172–11–13
12. நற்றிணை. பா.83

# பெரியபுராணத்தில் உணவுக்கொடை

**முனைவர் ச.கோகுல்கிருஷ்ணன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 046

## ஆய்வுச்சுருக்கம்

பெரிய புராணம், திருத்தொண்டர் புராணம் என்றும் வழங்கப்பெறுகிறது. சுந்தரர் செய்த திருத்தொண்டத் தொகை மற்றும் நம்பியாண்டார் நம்பிகள் செய்த திருத்தொண்டர் திருவந்தாதி என்ற இருநூல்களையும் முதன்மையாகக் கொண்டு சேக்கிழார் பெரியபுராணம் செய்தளித்தார். சைவசமய அடிகளுள் தனியடியார்கள் அறுபத்து மூவர் மற்றும் தொகை அடியார்கள் ஒன்பதின்மர் வரலாற்றை எடுத்துரைக்கும் காப்பியமாகப் பெரிய புராணம் திகழ்கின்றது. இவர்கள் நாயன்மார்கள் என்று குறிக்கப்படுகின்றனர். நாயன்மார்கள் ஒவ்வொருவரும் தனக்கென தொண்டு நெறியைச் சமயநெறியாகக் கைக் கொண்டு பின்பற்றி இறைவன் அருள் பெற்றனர். அவர்களுள்ளும் உணவிடுதல் கொடையைச் செய்தவர்கள் யார்? உணவளித்தலில் பின்பற்றப்பட்ட வரைமுறை என்ன? என்பதைப் பெரியபுராணம் எடுத்துரைக்கின்றது.

## முன்னுரை

கொடை என்பது வாழ்வியல் அறங்களுள் இன்றியமையாத ஒன்று. தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்ச்சியில் கொடைக்குத் தனித்த இடம் உண்டு. காலம் தோறும் கொடையைக் கொடுத்தல் பெறுதல் என்ற நிலையில் அதன் மையமும் இம்மை மறுமை என்ற அதன் பயனும் பல்வேறு நிலையில் கொடையின் கற்பிதங்கள் மாறிக் கொண்டே வருகின்றன.

வாழ்வின் அடிப்படை ஆதாரங்களுள் ஒன்று உணவு. மணிமேகலை காப்பியம் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே (பாத்திரம் பெற்ற காதை 96) என்று உரைக்கின்றது. பக்தி இயக்க எழுச்சிக்குப் பிறகு உணவுக்கொடை என்ற பண்பாடு பொது அறத்தில் இருந்து மாறி சமய அறம் என்ற தனித்த நிலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. நாயன்மார்கள் உணவுக் கொடையைச் சமய அறமாகவே செய்தனர். எவ்வகையில் அவ்வறம் மேற்கொள்ளப்பட்டது என்பதைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான் எடுத்துரைத்துள்ளார். பெரியபுராணத்தில் இடம்பெறும் உணவுக் கொடையை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## நாயன்மார்களும் உணவுக் கொடையும்

பெரியபுராணம் சுட்டும் அடியார்கள் அறுபத்து மூவரில் இளையான்குடி மாறனார், சிறுத் தொண்டர், கலிக்கம்பர், மூர்க்கநாயனார், சிறப்புலிநாயனார், அப்பூதி அடிகள் முதலியோர் அடியார்களுக்கு உணவு வழங்குதலை முதன்மைத் தொண்டாகப் போற்றினார்கள்.

மேலும் காரைக்கால் அம்மையார் உள்ளிட்ட சிலர் அடியார்களுக்கு உணவிட்ட நிகழ்வுகளையும் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். பஞ்சகாலத்தில் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையில் இறைவனிடம் படிக்காசு பெற்று அனைவருக்கும் உணவு வழங்கிய நிகழ்வும் உண்டு.

சைவ சமயத்தில் யாவருக்கும் உணவிடுதல் என்பது சமய அறமாகவே போற்றப்பட்டது. திருமந்திரத்தில் இறைவனுக்குப் பூசை செய்தலையும் யாவர்க்கும் உணவு வழங்குதலும் ஒரே நிலையில் வைத்துப் போற்றப்பட்டுள்ளது.

**யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணம் போதொரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தாமே**
**(திருமந்திரம் *252*)**

அடியாருக்கு உணவிடுவதற்காக சொக்கநாதப் பெருமான் 'உலவா கோட்டை கொடுத்தமையை' திருவிளை யாடற் புராணம் கூறுகின்றது.

## அடியாருக்கு உணவு வழங்கியமை

அடியாருக்கு உணவிடுதல் என்ற சமய அறம் பெரியபுராணத்தில் எடுத்துரைக்கப் படுகின்றது. உணவுக் கொடை செய்த நாயன்மார்கள் யாவரும் சிவ வேடத்தோடு வரும் அடியாருக்கு உணவு வழங்கியுள்ளனர். உணவு பெறுபவர் சிவன் அடியாராக இருத்தல் வேண்டும் என்பது மட்டும் முக்கியமானதாக இருந்தது.

**ஆரம் என்பு புனைந்த ஐயர் தம் அன்பர் என்பதோர் தன்மையால்**
**நேரவந்தவர் யாவராயினும் நித்தமாகிய பத்திமுன் (பெரியபுராணம், பா.442)**

அடியார்கள் உணவிடுதலில் முறைமைப் போற்றப்பட்டதும் அவர்கள் உண்டால் அன்றி தான் உண்ணுவதில்லை என்ற உறுதியும் நாயன்மார்களில் சிலர் கைக்கொண்டார் எனப் பெரியபுராணம் சுட்டுகின்றது. சிறுத்தொண்ட நாயனார்

**நறை இதழித்திருமுடியார் அடியாரை நாடோறும்**
**முறைமையினில் திருவமுது முன்னூட்டிப் பின்னுண்ணும்**
**(பெரியபுராணம், பா.*3669.*)**

## மூர்க்கநாயனார்

**காதலடியார்க்கு அமுதாக்கி அமுது செய்யக் கண்டுண்ணும்**
**நீதிமுறைமை வழுவாத நியதி பூண்ட நிலைமையார்**
**(பெரியபுராணம். பா. *3618*)**

என்ற பகுதிகளால் அறியலாம்.

அப்பூதியடிகள் திருநாவுக்கரசு நாயனார் மீது பேரன்பு கொண்டவர். அதன் காரணமாக அப் பூதியடிகள் திருநாவுக்கரசர் பெயரில் பெரும் அறப்பணிகளைச் செய்தார். எல்லோருக்குமாகவே அவ்வறப் பணியைச் செய்தார் என்பது

**படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலாயுள்ள**
**முடிவிலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில்**
**(பெரியபுராணம். பா.1784)**

என்பதால் அறிய முடிகின்றது.

## விருந்து எதிர் கொள்ளுதல்

அடியாரை நாயன்மார்கள் உரிய நிலையில் வணங்கி எதிர்கொண்டனர் என்பதை பெரியபுராணம் கட்டு கின்றது. அடியார்களைப் பணிதல் சைவத்தின் ஒழுகலாறுகளில் ஒன்றாகக் கூறப்படுகின்றது. சுந்தரர் திருத் தொண்டத்தொகையில் தான் ஒவ்வொரு நாயன்மாருக்கும் அவர்தம் அடியாருக்கும் அடியேன் என்றே குறிப்பிடுகின்றார். அடியார் நடுவுள்

இருக்கும் அருளை மணிவாசகர் இறைவனிடம் வேண்டுகின்றார். சிவஞான போதம் அடியாருள் இறைவன் வெளிப்பட நிறைந்து நிற்கின்றார். எனவே அடியாரைச் சிவன் எனக்கண்டு வழிபட வேண்டும் என்றே குறிக்கின்றது.

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலங் ககழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே
(சிவஞானபோதம் 12)

அடியாரைப் பணிந்து வணங்கி சிறியராய் நின்ற காரணத்தாலேயே சிறுத் தொண்டர் எனப் பெயர்பெற்றார் என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

நாதனடியார் தம்மை நயப்பாட்டு வழிபட்டார்
மேதகையார் அவர்முன்பு மிகச்சிறியராய் அடைந்தார்
ஆதலினால் சிறுத்தொண்டர் என நிகழ்ந்தார் அவனியின் மேல்
(பெரியபுராணம். பா.3671)

இயற்பகைநாயனார் புராணத்தில் அடியாரை வணங்கி நின்று எதிர்கொண்டு அழைத்து இனிய சொற்களைக்கூறி அமுதிட்ட தன்மை கூறப்பட்டுள்ளது

கூரவந்து எதிர்கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்து
ஈரம் மென்மதுரப் பதம்பரி வெய்த முன்னுரை செய்தபின்
(பெரியபுராணம். பா. 406)

அடியார் உணவு உண்பதற்கு முன்பு அவரது பாதங்களை நீராட்டி சுத்தம் செய்து வழிபாடு செய்த செய்தி கலிக்கம்பர் புராணத்தில்

தொன்மைமுறையே அமுதுசெயத் தொடங்குவிப்பர் அவர்தம்மை
முன்னர்அழைத்துத் திருவடிகள் எல்லாம்விளக்க முயல்கின்றார்
(பெரியபுராணம். பா.4012)

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## உணவு

அடியார்களுக்கு நல்ல தூய்மையான அமுது, காய்கறி, பழங்கள், நெய், பால், தயிர், பருகுவதற்கு அமுதம் போன்ற நீர், அருசுவை உணவு வழங்கப்பட்டது என்ற செய்தி சிறுத் தெண்டர்புராணம் (பாடல் 3670), கலிக்கம்பர் புராணம் (பாடல் 4011), மூர்க்கநாயனார் புராணம் (பாடல். 3619) முதலிய இடங்களில் சேக்கிழார் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

உணவிடும் போது கறியமுது இல்லாமல் சோறுமட்டும் பரிமாறும் மரபு இல்லை என்பதை இளையான்குடி மாறன் நாயனார் புராணம் மற்றும் காரைக்கால் அம்மையார் புராணத்திலும் அறியலாம். பெருமழையில் நடு இரவில் வந்த அடியாருக்கு உணவிட இளையான்குடி மாறனார் முதல்நாள் விதைப்பித்த நெல்லை எடுத்து வந்து தருவார். அதைப் பெற்ற அவர் மனைவி ‘கறிக்கினிஎன் செய்கோ மென்று இறைஞ் சினார் கணவனாரை’ (பெரியபுராணம் 459) என்று கேட்க கீரை அகழ்ந்து எடுத்து வந்து தந்தார் நாயனார். அதைக்கொண்டு உணவு செய்தார் அவர் தம்மனைவியார். காரைக்கால் அம்மையார் வாழ்விலும் அடியாருக்கு உணவிட கறியமுது இல்லை என்ற நிலைவர மாங்கனியை அடியாருக்கு கொடுத்த செய்தி இடம் பெறுகின்றது.

## உணவுக் கொடையின் பயன்

அடியாருக்கு உணவிட்டதன் பயனாக நாயன்மார்களுக்குப் பேரனை ஏவல் செய்யும் உரிமையும், இறைவன் சேவடியின் கீழ் இருக்கப் பெற்ற தன்மையும் பெற்றனர் என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

பெரியபுராணம் உணவு வழங்கும் தொண்டில் யாருக்கு வழங்வேண்டும், எவ்வாறு வழங்க வேண்டும், என்ன வெல்லாம் வழங்க வேண்டும், வழங்கிய மையால் என்ன பயன் என்பதை விரிவாகக் கூறுகின்றது. உணவிடுதல் பொது நிலையில் அனைவருக்கமானதாக இருந்த போதும் பக்தி இயக்ககாலம் அறத்தின் அளவை அடியார் என்ற நிலையில் வரையறை செய்கின்றது. அதோடு ஒட்டியே உணவிட்டதால் உண்டாகும் பயனும் பேசப்படுகின்றது.

## பார்வைநூல்கள்

1. சுந்தரமூர்த்தி.கு. (வி.கு.ஆ)(2014). சேக்கிழார் திருத் தொண்டர் புராணம் – பன்னிரண்டாம் திருமுறை – முதல்காண்டம். ஞான சம்பந்தம் பதிப்பகம். மயிலாடுதுறை.

2. சுந்தரமூர்த்தி.கு. (வி.கு.ஆ)(2014). சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் – பன்னிரண்டாம் திருமுறை – இரண்டாம் காண்டம். ஞான சம்பந்தம் பதிப்பகம். மயிலாடுதுறை.

3. பன்னிருதிருமுறை. (2018). சதுரா பதிப்பகம். சென்னை

# நாலடியார் கூறும் தமிழர் மரபில் அறக்கோட்பாடுகள்

சு.கோபாலகிருஷ்ணன், M.A., M.ED., M.PHIL.,
முதுகலைத் தமிழாசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி,
கருவாக்குறிச்சி, மன்னார்குடி தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

## முன்னுரை:

உலகில் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி. ஒருவன் நல்ல நிலையில் வாழவேண்டும் என்று ஆசைப்பட்டால் அதற்கு நல்ல சிந்தனை, நல்ல எண்ணம், நல்ல செயல்கள் வேண்டும். அறநெறியைப் பற்றி தமிழ்ப் புலவர்கள் பலர் தங்களுடைய பாடல்கள் மூலமாக உலகுக்கு அளித்து உள்ளனர். தனிமனித ஒழுக்மாகவும், வாழ்வியல் நெறியாகவும் இலக்கியங்களில் போற்றப்படுவது அறவுணர்வாகும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான நாலடியார் கூறும் அறக் கோட்பாடுகளை இக்கட்டுரையில் காண்போம்.

## நாலடியார்:

‘நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி’ என்ற பழமொழியில் நான்கு என்பது நான்கு அடிகள் உடைய வெண்பாக்களைக் கொண்ட நாலடி யாரைக் குறிப்பிடுகிறது. இந்தப் பழமொழியின் வாயிலாக திருக்குறளோடு ஒத்த பெருமையுடைய நீதி நூல் என்பதை அறிமுடிகிறது. நாலடியாரும் திருக்குறளைப் போலவே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் போன்ற மூன்று பால்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொர் அதிகாரத்திலும் பத்து பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன. சமண முனிவர்கள் நானூறு பேர் பாடிய பாடல்களைப் ‘பதுமனார்’ என்னும் புலவர் தொகுத்து அளித்த நூலே நாலடியார் என்று கூறுவர். நானூறு வெண்பாக்ளைக் கொண்டுள்ளதால் ‘நாலடி நானூறு’ எனவும் வழங்கப் படுகிறது. இந்நூலை ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். நாலடியாரில் நீதிக்கருத்துக்களை எளிமையாக விவரிப்பதற்கு உலகியல் நிகழ்ச்சிகள், உவமைகள், பழமொழிகள் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழர் அறத்தை இல்லறம், துறவறம் என இரண்டாகப் பகுத்தனர். நாலடியாரின் இல்லற இயலில் பொறையுடைமை, பிறன்மனை, ஈகை, பழவினை, மெய்ம்மை, தீவினையச்சம் ஆகிய ஆறு அதிகாரங்களையும், துறவறஇயலில் செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, அறன் வலியுறுத்தல், தூயதன்மை, துறவு, சினம் இன்மை என்னும் ஏழு அதிகாரங்களைக் கொண்டுள்ளது. அறத்தினை மன விருப்பத்துடன் செய்ய வேண்டும். அவ்விருப்பம் அடுத்த உயர்நிலைக்கு நம்மை இட்டுச் செல்லும் என்பதைச் சான்றோர் அறிந்திருந்தனர். அவ்வகையில் ஔவையார் ‘அறம் செய்ய விரும்பு’ என்று கூறியுள்ளார்.

## செல்வம் நிலையாமை:

செல்வத்தைத் தான் மட்டும் துய்க்கலாம் என்று சான்றோர்கள் எண்ண மாட்டார்கள். செல்வமானது ஒருவரிடம் மட்டுமே நிலைத்து நிற்காது வண்டியின் சக்கரம் போல பலரிடம் சுழன்று செல்லக்கூடியது என்று நாலடியார் கூறுகிறது. பெருஞ் செல்வத்தைத் தேடிச் சேர்த்த பழந்தமிழர்கள் பலரோடு சேர்ந்து உண்டு வாழ்ந்தனர். ஏழை, எளிய மக்களுக்கும், கலைஞர்களுக்கும், புலவர் களுக்கும், 'இல்லை' என்று தம்மிடம் கேட்டவர்களுக்கும் கொடுத்தனர். அவர்கள் செல்வத்தின் நிலையாமையை நன்கு அறிந்தவர்கள். செல்வம் இருக்கும் போதே பிறருக்குக் கொடுத்து அறம் செய்ய வேண்டும் என்று நாலடியார் கூறுகிறது.

**அறுசுவையுண்டி அமர்ந்தில் லால் ஊட்ட**
**மறுசிகை நீக்கியுண் டாரும் - திருவற்றி**
**சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனில் செல்வ**
**மாறுண்டாக வைக்கற்பாற் றன்று.**

(நாலடி : 1)

அதாவது அறுசுவை உணவை, மனைவி அன்போடு பொருந்தி உண்பிக்க, முன்கவளத்தை நீக்கிப் பின் கவளத்தை உண்ட பெருஞ்செல்வரும், அச்செல்வம் அழிய வறுமை உடையவராகி, தன் இடத்தை விட்டு நீங்கி வேறு ஊர் சென்று இழிந்த கூழைப் பிச்சை கேட்டு நிற்பார்கள் என்பதால் செல்வம் நிலை யானதாக எண்ணத்தக்கதல்ல என்கிறது நாலடியார்.

## இளமை நிலையாமை:

இளமை என்பது 'நீர்க்குமிழி' போன்றது. ஆதலால் வாழ்நாள் கழிவதற்கு முன்பே பிறருக்கு உதவி செய்து வாழுங்கள் என்று கூறுகிறது நாலடியார்.

**மற்றறிவாம் நல்வினை யாம்இளையோம் என்னாது**
**கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம்செய்ம்மின்**
**முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்**
**நற்காய் உதிர்தலும் உண்டு.** (நாலடி 19)

அதாவது கடுங்காற்று அடிக்கும்போது முதிர்ந்த பழங்கள் உதிர்கின்றன. அப்போது பிஞ்சுகளும் உதிர்ந்து விடுதல் உண்டு. அதுபோலக் கூற்றுவன் முதியவரை மட்டுமல்லாது இளைஞர்களையும் எடுத்துக் கொள்வ துண்டு. நாம் இளைஞராக இருக்கிறோம் பிறகு அறம் செய்து கொள்ளலாம் என்று காலம் தாழ்த்தாது அறம் செய்ய வேண்டும் என்று இளைஞர்களை எச்சரிக்கிறது.

## யாக்கை நிலையாமை:

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார். பெறுவதற்கரிய உடம்பைப் பெற்ற பயனால் மக்கள் மிகுதியாக அறம் செய்தல் வேண்டும். உடம்பு நிலையற்றது என்பதை உணர்ந்து நன்றே செய்ய வேண்டும். அதுவும் இன்றே செய்ய வேண்டும்.

**யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற**
**யாக்கையா லாய பயன்கொள்க யாக்கை**
**மலைநாடு மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே**
**நிலையாது நீத்து விடும்.** (நாலடி 28)

அதாவது உடம்பை உறுதி யுடையதாக முன் செய்த நல்வினைப் பயனால் பெற்றவர், அதனால் ஆகும் பயனான நற்காரியங்களைச் செய்ய வேண்டும். ஏனெனில் மலை மீது

உலாவும் மேகம்போலக் காணப்பட்டு நிலைபெறாது இவ்வுடல் அழிந்துவிடும் என்று கூறுகிறது.

## அறன் வலியுறுத்தல்:

தருமம் செய்ய காலமோ, இடமோ தேவையில்லை. எல்லா இடத்திலும், இயன்ற அளவு அறம் செய்ய வேண்டும். கம்பஇராமாயணம் பக்தி இலக்கியம் ஆயினும் 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்னும் வகையில் சிறப்பாய் நிறைவு பெற்றுள்ளது.

**இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது**
**பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி**
**ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையான்**
**மருவின் மாண்டார் அறம். (நாலடி 36)**

அதாவது உயிரைக் கொல்லும் எமன் வருவது இளமையிலோ, முதுமையிலோ அல்லது இடைநின்ற காலத்திலோ என்று எண்ணாமல், அவன் உயிரைக் கொண்டு போக பின்னே வந்து மறைந்து நிற்கின்றான் என்று நினைத்து பாவச் செயல்களை நீக்குங்கள். அறிவுடையோர் கூறிய அறத்தை உங்களால் கூடிய மட்டும் செய்யுங்கள் என்கிறது நாலடியார்.

## சினம் இன்மை:

ஒருவன் நாவினைக் காக்காமல் வாய் திறந்து சொல்லும் சினச்சொல் இடைவிடாது தன்னையே வருத்தும் என்பதை உணர்ந்த சான்றோர்கள் எப்பொழுதும் சினம் கொண்டு கடுமையான சொற்களைச் சொல்ல மாட்டார்கள். சினம் கொண்ட நாய் தமது உடம்பைக் கடித்தாலும் அதற்குப் பதிலாக நாயை யாரும் கடிக்க மாட்டார்கள். அதுபோல, தகுதியற்ற கீழ்மக்கள் கீழ்த்தரமான சொற்களைச் சொல்லும்போது மேன்மக்கள் அவர்களுக்கு எதிராக திருப்பி அச் சொற்களைச் சொல்லமாட்டார்கள் என்று நாலடியாரின் எழுபதாவது பாடல் கூறுகிறது.

**இளையான் அடக்கம் அடக்கம் கிளைபொருள்**
**இல்லான் கொடையே கொடைப்பயன் - எல்லாம்**
**ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்**
**பொறுக்கும் பொறையே பொறை. (நாலடி 65)**

அதாவது வாலிபப் பருவம் உடையவனது புலனடக்கமே அடக்கம் எனப்படும். நிறைந்த பொருள் இல்லாதவனது கொடையே பயனுள்ள கொடையாகும். அதுபோல எல்லா எதிர்ப்புகளையும் வெல்லத்தக்க உடல் வலிமையும், உறுதியும் உடையவன் சினத்தைப் பொறுத்துக் கொள்ளும் பொறுமையே சிறந்த பொறுமையாகும்.

## பொறையுடைமை:

பொறுமை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான ஒன்றாகும். 'நல்ல மனிதன் பொறுமையைக் கடை பிடிப்பான்' என்கிறார் மகாவீரர். பிறர் கூறும் பழிச் சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதல், பிறர் நமக்கு கொடிய துன்பங்களைச் செய்தபோதும், சினம் கொள்ளாமல் பொறுமையாக இருத்தலே பொறையுடைமை ஆகும். பண்புகளில் சிறந்த பண்பாக பொறையுடைமைப் பண்பு கருதப்படுகிறது.

**அறிவது அறிந்தடங்கி அஞ்சுவது அஞ்சி**
**உறுவது உலகுவப்பச் செய்து - பெறுவதனால்**
**இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்**
**துன்புற்று வாழ்தல் அரிது. (நாலடி74)**

அதாவது அறிய வேண்டிய நன்மை, தீமைகளை அறிந்து, அடக்க முடையவராகி, அஞ்ச வேண்டிய பழி

பாவங்களுக்கு அஞ்சி, செய்வதை உலகம் மகிழுமாறு செய்து, அறநெறியால் வந்த பொருளால் மகிழ்ந்து வாழும் இயல்புடையவர் எக்காலத்தும் துன்புற்று வாழ்தல் இல்லை என்று நாலடியார் கூறுகிறது.

**பிறன்மனை நயவாமை:**

அறநெறியில் இருப்போருக்கு பிறன்மனை நயத்தல் என்னும் பேதைமை என்றும் இருக்காது. பிறருடைய மனைவியை விரும்பி நோக்காத பெருங் குணமானது சான்றோர்க்கு அறம் மட்டுமன்று. நிறைந்த ஒழுக்கமாகும்.

அறம் புகழ் கேண்மை பெருமை இந்நான்கும்
பிறன் தாரம் நச்சுவார்ச் சேரா பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவம் என்று
அச்சத்தோடு இந்நாற் பொருள்.
(நாலடி பா.2)

பிறன் மனைவியை விரும்புவோரிடம் அறம், புகழ், சான்றோர் நட்பு, பெருமை போன்ற நற்பண்புகள் அமைவதில்லை. பகை, பழி, பாவம், அச்சம் போன்றவையே வந்து சேரும் என்று நாலடியார் கூறுகிறது.அயலாருடைய மனைவியைக் காண்பதில் குருடனாக இருக்க வேண்டும் என்று நாலடியார் கூறுகிறது.

**ஈகை:**

ஈகை என்பது பொருள் உடையவர்கள் இல்லாதவர்களுக்கு வழங்குவது. இது எவ்வித எதிர்பார்ப்பும், திரும்பப் பெறும் தன்மையும் அற்றது. மனித நேயத்தின் அடிப்படையாகத் திகழ்வது அறங்களில் சிறந்த ஈகைப் பண்பாகும்.

இம்மி யரிசித் துணையானும் வைகலும்
நும்மில் இயைவ குடுத்துண்மின்
........... (நாலடி 94)

ஒரு சிறிய அரிசியின் அளவாவது நாள்தோறும் உங்களால் இயன்ற அளவு பிறருக்குக் கொடுத்தபின் உண்ணுங்கள் என்று நாலடியாரின் 94ஆம் பாடல் கூறுகிறது.

இறப்ப சிறிதென்னாது இல்லென்னாது என்றும்
அறப்பயன் யார்மாட்டும் செய்க - முறைப்புவின்
ஐயம் புகூஉம் தவசி கடிஞைபோல்
பைய நிறைத்து விடும். (நாலடி 99)

அதாவது நாம் தருவது மிகவும் சிறியது என்று கருதாது இல்லை என்று சொல்லாது எப்போதும் பயனுடைய அறத்தை அனைவரிடத்தும் செய்ய வேண்டும். அது வாசல் தோறும் சென்று பிச்சை எடுப்போரின் பாத்திரம் சிறிது சிறிதாக நிரம்புவது போல, மெல்ல மெல்ல புண்ணியப் பலனை அதிகரிக்கும் என்று நாலடியார் கூறுகிறது.

**மெய்ம்மை:**

சான்றோரும், சான்றோர் அல்லாதவரும் தத்தம் குணங்களில் எப்பொழும் குறையாமல் இருப்பர் வெல்லத்தை யார் தின்றாலும் கசக்காது. வேப்பங்காயைத் தேவரே தின்றாலும் கசக்கும். அதுபோலத் தக்காரும், தகவிலாரும் தங்களின் இயல்பிலேயே நிலைத்து நிற்பர் என்று நாலடியார் 112ஆம் பாடல் கூறுகிறது.

பொருள் உள்ளவன் அறம், இன்பம் ஆகிய இரண்டையும் பெறுவான் என்று நாலடியார் கூறுகிறது.

தானஞ்செய் வினையல்லால் தம்மொடு செல்வதுமற்று
யாங்கனும் தேரின் பிறிதில்லை ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயமின்றி
கூற்றம் கொண்டுஓடும் பொழுது.
(நாலடி 120)

அதாவது உயிருக்குத் துணையாக வருவது அவரவர் நல்வினைகளேயன்றி வேறில்லை. எமன் உயிரைக் கொண்டு செல்லும்போது அதுவரை ஆடை, அணிகளால் அழகுடன் பாதுகாத்த உடம்பும் உயிருக்குத் துணையாக வராது. நாம் செய்யும் நல்வினைகள் மட்டுமே துணையாக வரும்.

## முடிவுரை:

திருக்குறள் கூறும் கருத்துகளை ஒட்டியே நாலடியார் அறம் கூறினாலும் துறவறத்தையே மிகுதியாக உயர்த்திக் கூறுகிறது. நாலடியார் கூறும் அறத்தின் வழி நின்று உயர்வோம்.

## துணைநூல் பட்டியல்

தமிழர் மரபில் அறக்கோட்பாடுகள், 2024, இந்துசமய அறநிலையத் துறை. நாலடியார்.,

தமிழ் இலக்கிய அறிமுகம், முனைவர்.பெ.சுயம்பு, செப்டம்பர் 2005, இலக்குமி நிலையம், 53–115, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை–14.

# பரிபாடலில் தமிழரின் வழிபாடும் பண்பாட்டு வெளிப்பாடும்

**முனைவர் கா. சந்தானலெட்சுமி,**
இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்,
மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி,
சிவகங்கை

## முன்னுரை

எட்டுத்தொகை நூற்களில் இசைப்பாடலால் அமைந்த இலக்கியம் பரிபாடலாகும். கிடைக்கின்ற இருபத்திரண்டு பாடல்களும் தமிழரின் வாழ்வியலையும் பண்பாட்டினையும் வெளிப்படுத்த வல்லனவாக உள்ளன. அந்த வகையில் பரிபாடல் வாயிலாக தமிழரின் வழிபாட்டு முறைகளையும் அதன் மூலம் அவர்களின் பண்பாடு எத்தகைய அடையாளங்களைப் பெற்றுள்ளது என்பதையும் சமூகவியல் ஆய்வு மற்றும் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறையில் இங்கே ஆராயப் படவுள்ளன.

## பரிபாடலின் பக்தி வெளிப்பாட்டுத் தொன்மை

பரிபாடல் இலக்கியத்தில் காணப்படும் 22 பாடல்களில் 8 பாடல்கள் திருமால் குறித்தனவாகவும் 3 பாடல்கள் செவ்வேள் பற்றியதாகவும் 6 பாடல்கள் வையைக்கு உரியதாகவும் பாடப்பட்டுள்ளன.

கடம்ப வனமாக காணப்பெற்ற மதுரையின் தென்மேற்கில் 18 கி.மீ தொலைவில் அமைந்தது பரங் குன்றமாகும். இங்கும் கடம்ப மரத்தின் அடியில் அருள்தரும் செவ்வேளை மக்கள் வழிபாடு செய்துள்ளனர். பொழுது வேறுபாடின்றி மக்கள் கூட்டம் நிறைந்ததாகக் பரங்குன்றம் பரிபாடலில் வருணிக்கப்படுகிறது.

செவ்வேளின் புகழ் பாடிய அடியவர்களின் வருகைக்காக அவர்கள் கொணர்ந்தக் காணிக்கைகளும், பாடிப் பரவிய வாழ்த்தொலிகளும் வெறியாட்டும் வேண்டுதல்களும் பரி பாடலை பயில்தொறும் அக்கால பக்தி வாழ்வியலை நேரடியாக காட்சிப்படுத்துவதை உணர முடிகிறது. ‘மத்திய தரைக்கடல் நாகரிகத்திற்கும் கி.மு.1150யைச் சார்ந்த தமிழரின் ஆதிச்சநல்லூர் நாகரிகத்திற்கும் பல பண்பாட்டு ஒற்றுமைகள் உள்ளன. தங்க வாய்மூடிகள், திரிசூலத்தில் சேவல் உருவங்களும் காணப்பட்டன. எனவே ஆரம்பகால முருக வணக்கம் இங்கிருந்தது என்பது ம.ம பிள்ளை யவர்களின் கருத்தாகும்.’[1]

பரிபாடலில் செவ்வேள், வேலன், கடம்பன் எனச் சுட்டப்படும் பெயர்கள் தமிழ் பண்பாட்டின் வெளிப் பாடுகளாகும். ‘சங்க பாடல்களில் முருகு எனும் சொல்லாலே முருகன் சுட்டப்படுகிறார். முருகு எனும் சொல்லிற்கு இளமை, அழகு, இளைஞன் நறுமணம் தெய்வத்தன்மை எனும் பல்வேறு பொருள்கள் வழங்கி வருகின்றன. திருமுருகாற்றுப்படை எனும் பாடலில்தான் ஆரியக் கடவுளான சுப்ரமணியனோடு தொடர்புபடுத்தி முருகன் சுட்டப்படுகிறார்.’[2]

எனவே பரிபாடலின் பக்தி வெளிப்பாடுகள் தமிழரின் சுயமான வழிபாட்டின் பண்பாட்டினை வெளிப் படுத்துவதாக அமைகிறது.

தமிழர் பண்பாட்டில் களவும் கற்பும் அகவாழ்வில் இரு வகைப்பாடாக அமைகின்ற களவு வழிபட்ட கற்பே தமிழர் பண்பாட்டின் தனிச்சிறப்பாகும். அந்த வகையில் களவின் நிகழ்வுகளில் ஒன்றாக வேலன் வெறியாட்டு அமைகிறது.

## தமிழர் பண்பாட்டில் வேலன் வெறியாட்டு

சேயோன் மேய மைவரை உலகமும் என்பதில் மலைக்கடவுளாக செவ்வேள் குறிப்பிடப்படுகிறார். 'பண்டைய பழங்குடி மக்களால் குறிப்பாக மலை களிலும் மலை சார்ந்த நிலமாகிய குறிஞ்சிப்பகுதியில் வாழ்ந்தவர்களால் கடைபிடிக்கப்பட்ட இயற்கை வழிபாடு முருக வழிபாடே என்பதை திரு. வி. கவின் முருகன் அல்லது அழகு என்ற படைப்பு உணர்த்துகிறது.'[3] செவ்வேளை வாழ்த்திய ஒலிகள் பரங்குன்றம் முழுவதும் பரவியதை பரிபாடல் வழி உணர முடிகிறது. பரிபாடல் காலத்தில் இசை நடனம் என்பன முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தன.'[4] அதனால் குறிஞ்சி நில மக்களின் வெறியாட்டு நிகழ்வின் கடவுளாக செவ்வேள் போற்றப்படுகிறார். தமிழ்நாட்டில் பழங்கால வணக்கமும் பரிபாடல் கலை வணக்கமும் வேறுபடுகின்றன.'[5] பரிபாடல் இலக்கிய காலகட்டத்தை அடுத்த பண்பாட்டு நகர்விலே முருகன் இரு மனைவியர் கடவுளாக சித்தரிக்கப் படுகிறார். இதற்கு ஆரிய பண்பாட்டின் கலப்பும் ஒரு காரணமாக அமைகிறது.

'பரிபாடல் காலத்திற்கு பின்னரே முருகன் இரு மனைவியரின் கணவனாகச் சித்தரிக்கப்படுகிறார்'[6] என்ற கருத்தானது ஆரியப் பண்பாட்டுக் கலப்பினை உறுதி செய்கிறது. ஆரிய பண்பாட்டிலே கொடுப்ப கொள்ளும் திருமண முறை இருந்தது. அதனாலே வெற்றியின் பரிசாக தேவசேனாவை இந்திரன் கொடுக்க முருகன் மணமுடிப்பதாக உள்ளது. ஆனால் தமிழரின் வாழ்வு களவு வாழ்விற்கு உரியது என்பதால் வள்ளியையே செவ்வேளின் துணைவியாக்கிய பண்பாடு தமிழர் உடையதாகிறது. குறமகளாக, மண்ணின் மகளாக, தமிழ் மகளாக பண்பாட்டோடு இணைந்த வாழ்வியலை வெளிப்படுத்தும் வகையில் செவ்வேள் வள்ளி திருமண வாழ்வு அமைகிறது. அதனால் தான் களவு வாழ்வால் உடலில் வேறுபாடு அடைந்த பெண்களின் வெறியாட்ட நிகழ்விற்கான கடவுளாக செவ்வேள் போற்றப்படுகிறார்.

**'தேம்படு மலர்குழை பூந்துகில் வடிமணி**
**ஏந்திலை சுமந்து சாந்தம் விரைஇ**
**விடையரை அசைத்த வேலன் கடிமரம் பரவினர்**
**உரையொடு பண்ணிய இசையினர்**
**விரிமலர் மதுவின் மரம்நனை குன்றத்து'**
**(பரிபாடல்-17)**

என்ற பரிபாடலின் வரிகளில் அடியவர்களின் செவ்வேள் வழிபாடு தெள்ளிதின் புலப்படுகிறது. மலர் ஏந்தியவர்கள், பூந்துகில் ஆடை கொணர்ந்தோர், மணி ஏந்தியவர்கள், இலை ஏந்தியவர்கள், நறுமணப்பொடி ஏந்தியவர்கள் என அடியவர் கூட்டம் நிறைந்ததாக பரங்குன்றம் திகழ் கிறது. கடம்ப மரத்தடியில் இருந்த செவ்வேளுக்கு வெள்ளாட்டினை பலி தந்து வேலன் அடிமரமாகிய கடம்ப மரத்தின் முன் வெறியாட்டு நிகழ்த்தியதையும் பரிபாடல் வரிகள் நன்கு புலப்படுத்துகின்றன.

## வெறியாட்டும் வள்ளி திருமண நாடகமும்

குறிஞ்சி நில மக்களின் வெறியாட்டுதற்குரிய கடவுளாக செவ்வேள் இருந்துள்ளார்.

வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டயர்ந்த காந்தளும்
(தொல்-பொரு 63-1-2)

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் வெறியாட்டின் இயல்பைச் சுட்டுகிறார். வெறியாட்டு நிகழ்த்துபவர் மீது செவ்வேள் வந்து குறியாக வெளிப்படும் என்பதே வெறியாட்டின் நோக்கமாகும். இதனால் உடல் மாறுபாடுற்ற தலைவி நலம் பெறுவாள் என்பது தமிழரின் வழிபாட்டு நம்பிக்கையாகும். இவ்வாறு வெறியாட்டு நிகழ்த்துதலை 'காந்தள்' என்று தொல்காப்பியர் சுட்டுவதைக் காண முடிகிறது. 'காந்தள்' செவ்விய மலரைக் குறிக்கும். அந்நிறத்தோடும் செவ்வேள் இணைத்துப் பார்க்கப் படுவதால் 'காந்தள்' என பெயரிடப் பட்டது எனலாம்.

வெறியாட்ட களத்தில் வண்ண மயமான மலர்கள் எங்கும் பரவிக் கிடைப்பதை சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. அங்கே நிகழும் இசை பெண்ணின் மனதிற்கு இதமாக இருந்துள்ளதை,

**அகவன் மகளே அகவன் மகளே**
**மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்**
**அகவன் மகளே பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டே அவர்**
**நன்னெடுங்குன்றம் பாடிய பாட்டே.**
(குறுந்தொகை 23)

என்ற பாடல் வரிகள் உணர்த்தும். வெறியாட்டுக்களத்தில் வேலன் வெள்ளிய பனந்தோட்டினைக் கடம்ப மலரோடு சூழ கழற்சி காயை உடம்பில் அணிந்து கொண்டு முருகக் கடவுளின் பெரும் புகழினைத் துதித்து படிமக் கலத்தைக் கையில் தூக்கிக்கொண்டு முருகன் தன் குறையைக் களைய வேண்டுமென்று வேண்டினான்.[7]

வள்ளியொடு களவொழுக்கம் கொண்டு மணந்த செவ்வேள் வெறியாட்டுக் கடவுளாக கொள்ளப் படுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. தங்கள் வாழ்வின் பிரதிபலிப்பாகவே வழிபாட்டுக் கோட்பாடுகளை தமிழர்கள் சுயமாக அமைத்துக் கொண்ட அவர்களின் வாழ்வியல் பண்பாடு இதன் மூலம் அறியக் கிடைக்கிறது. தாய்வழிச் சமூகம் சார்ந்தது திராவிடச் சமூகம் என்பதால்தான் பெண்ணின் பெயரை முதலில் நிறுத்தி 'வள்ளி மணாளன்' என்றே செவ்வேள் குறிப்பிடப்படுகிறார்.

இந்த பண்பாட்டின் தொடர்ச்சியே இன்றுவரை நடைபெறும் 'வள்ளி திருமண நாடகம்' என்றால் அது மிகையல்ல. வள்ளியை மணந்த பரங்குன்றத்தில் தெய்வானையும் மணந்ததாக கூறப்படும் கருத்துரு பிற்காலத்தில் ஆரிய கோட்பாட்டால் உருவானதாகும். எத்தனையோ இடங்கள் இருந்தும் தெய்வானையை முருகன் மணந்த இடமாக திருப்பரங்குன்றம் காட்டப்படுவது இதனால்தான். புதிய பண்பாட்டுக் கருத்துக்கள் ஏற்கனவே உள்ள பண்பாட்டு வாழ்வியலோடு கலக்கும் போது தழுவல் பண்பாடு உருவாகிறது. இந்த அடிப்படையிலே தெய்வானை திருமணம் பரங்குன்றத்தில் நடந்ததாக கட்டமைக்கப்பட்டது. ஆரிய வைதீக முறைகளின் படி தெய்வானை திருமணம் பேசப்பட்டாலும் மக்கள் மனதில் இன்றுவரை நீங்கா இடம் பிடித்தது 'வள்ளி திருமணமே' ஆகும்.

வள்ளி திருமண நாடகம் பொழுதுபோக்கிற்காக மட்டும் நடத்தப் படுவதில்லை. பண்பாட்டின் வளமையை இனக்குழு வாழ்க்கை முறையை ஆண் – பெண் புரிந்துணர்வினை முன்னெடுத்துச் செல்லும் பண்பாட்டுக் கருத்தாடல்களின் வெளிப்பாடாகவே அமைகிறது.

சுதந்திர போராட்டக் காலத்தில்

ஏனைய நாடகங்களை விட வள்ளி திருமண நாடகங்களே காட்சிப் படுத்தப்பட்டன. காவலர்கள் பாதுகாப்புடன் நாடகம் நடத்தப்பட்ட பொழுதிலும் திணைப்புலக் கொக்குகளை விரட்டும் வகையில் 'வெள்ளைக்கார கொக்குகளை' விரட்ட தவறுவதில்லை. மக்கள் தங்களது சுதந்திர உணர்வினையும், போராட்ட உணர்வினையும் வள்ளி திருமண நாடகத்தின் வாயிலாக வெளிப்படுத்த தவறவில்லை என்பதே தமிழர் பண்பாடு உணர்த்தும் கருத்தாகும்.

மக்களின் மண்சார்ந்த பண்பாட்டு தொடர்புடையது என்பதால்தான் வள்ளி திருமண நாடகம் இன்று வரை மக்களால் விரும்பி பார்க்கப் படுகிறது. அந்நிய பண்பாட்டு மாற்றங்கள் நம்முடன் கலக்கும் போது முற்றிலுமாக நமது சுவடுகள் அழிக்கப் படுவதில்லை. மாற்றத்திற்கு உட் படுமேயன்றி அனைத்தையும் மாற்ற முடியாது என்பதை இவ்வாய்வு உறுதிப் படுத்துகிறது.

## செவ்வேளும் சுப்பிரமணியரும்

பரிபாடல் காலத்தில் கடம்ப மலர்களைச் சூடி வேலையுடையராக கடம்ப மரத்தடியில் வெள்ளாட்டினை பலியேற்பவராகவெறியாட்டக்கடவுளாக மக்கள் பண்பாட்டின் கடவுளாக செவ்வேள் வழிபடப்பட்டுள்ளார்.

ஆரிய வைதீக முறையில் கால மாற்றத்தினால் செவ்வேள் சுப்பிர மணியர் ஆகிறார். தெய்வானையை மணந்தவராக மீசையற்று, பூனூல் அணிந்து அவிர்பலி ஏற்பவராக வேதக் கடவுளாக மாற்றப்படுகிறார். வெறியாட்டக் கடவுள் சத்ரு சம்ஹார மூர்த்தியாகிறார். யாகங்களின் மந்திர ஒலியில் மக்களின் மொழிக்கு அப்பாற்பட்டவராக அருள் பாலிக்கிறார். எத்தனை மாற்றங்களைக் கொண்டு புதிதாக கட்டமைக்கப்பட்டாலும் மக்களின் தொன்மையான பண்பாட்டு கூறுகள் மாறாது இருப்பதால்தான் வெற்றிவேல், வீரவேல் வாழ்த்தொலிகள் பல கோயில்களில் இன்றும் விண்ணின் உச்சம் தொடுகின்றன. பாத யாத்திரை களும் பால் காவடிகளும் பலியேற்பு நேர்த்தி கடன்களும் மக்களால் நிறை வேற்றப்பட்டுக் கொண்டிருப்பதை இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது.

## முடிவுரை

கி.மு.விலிருந்தே வழிபாட்டிற்குரிய கடவுளாக செவ்வேள் விளங்கியதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது. மக்களால் மக்கள் கடவுளாக பண்பாட்டின் அடையாளமாக பாதுகாக்கும் கடவுளாக செவ்வேள் வழிபாடு இருந்துள்ளதை இவ்வாய்வு விளக்கியுள்ளது. ஆரிய வைதீக கலப்பு மக்கள் பண்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்திய பொழுதிலும் தொன்மை பண்பாட்டின் சுயம்பு கடவுளாக செவ்வேள் இன்றும் மக்களால் வழிபடப்படுவதை இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது.

## குறிப்புகள்

1. நா. வானமாமலை தமிழர் பண்பாடும் – தத்துவமும் ப.13
2. க.த திருநாவுக்கரசு, தமிழ்ப்பண்பாடு ப.76
3. ஜி. ஜான் சாமுவேல் செவ்வேளும், செந்தமிழும் ப.14
4. ஆ. கந்தையா செவ்வேள் ப.24
5. நா. வானமாமலை மேலது ப.9
6. மேலது ப.18
7. அ. கலைவாணி – சங்க இலக்கியத்தில் வெறியாட்டயர்தல் ISSN–2454–3993 சன்லாக்ஸ் பன்னாட்டுத்தமிழியல் ஆய்விதழ்

## துணைநூற்பட்டியல்


1. கந்தையா ஆ – செவ்வேள், இலங்கைத் திறந்த பல்கலைகழகம், 1985
2. திருநாவுக்கரசு. க.த, தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 13, முதல் பதிப்பு 2009
3. பரிமேலழகர், பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், உ.வே சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை 41, ஐந்தாம் பதிப்பு 1980
4. வானமாமலை நா, தமிழர் பண்பாடும் தத்துவமும், NCBH சென்னை – 2 முதல் பதிப்பு 1973
5. ஜான் சாமுவேல். ஜி., செவ்வேளும் செந்தமிழும், ஆசியாவியல் நிறுவனம் சென்னை – 19, முதல்

# கவிஞர் அ.வெண்ணிலாவின் கவிதைகளில் பண்பாட்டுப் பதிவுகள்

நெறியாளர் **முனைவர் மு.செந்தில்குமார்**
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க்கல்லூரி,
மதுரை - 625001

ஆய்வாளர் **திருமதி. லெ.சாமுண்டீஸ்வரி**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
உதவிப் பேராசிரியர்,
மதுரைக்கல்லூரி
மதுரை - 625011.

## முன்னுரை

இயல்பாகவே மனிதன் தெளிந்த அறிவும் கலைத்திறனும் படைத்தவன். அவனின் நல்வாழ்விற்கும் வளமான இன்பத்திற்கும் திறவுகோலாக இருப்பது பண்பும், மரபும் ஆகும். பண்பட்ட அறிவினால் மனிதனிடம் இருக்கும், உணர்வுகள் பகட்டில்லாத வாழ்வு, பெருந்தன்மையான மனம், சுயஒழுக்கம், அழகுணர்ச்சி, தெளிவான அறிவு போன்றன வெளிப்படும்.

மனிதனின் மரபு மாறாத பழக்கவழக்கங்களே பண்படாக பின் பற்றப்படுகிறது. அத்தகைய மரபுகள் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட நடை முறைகள், சமூகக் கட்டமைப்புகள், திருவிழாக்கள், பொழுதுபோக்கு நிகழ்வுகள், போன்ற அனைத்தும் பண்பாட்டினைக் குறிக்கின்றன. இலக்கியங்களில் கவிதை வழியில் பண்பாட்டுச் செய்திகள் வெகுவாக மக்களுக்கு எடுத்துரைக்க முடிகிறது. கவிஞர். அ. வெண்ணிலாவின் கவிதை களில் பண்பாட்டுப்பதிவுகளை அடையாளப்படுத்துவது இக் கட்டுரையின் நோக்கமாகும்

## நட்பு

உள்ளன்புக் கொண்டு நடைமுறை வாழ்வில் மனஉணர்வுகளை வெளிப் படுத்த உதவும் பண்பட்ட நட்பினை வள்ளுவர்,

"முகநக நட்பது நட்பன்று, நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு." (குறள் - 786)

என்று கூறியுள்ளார். முகம் மட்டும் மலரும் படியா நட்பு செய்வது நட்பு அன்று, நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்ட நட்பு செய்வதே நட்பு ஆகும்.

கவிஞர் அ. வெண்ணிலா அவர்களின் கவிதையில்,

**"எதிர்ப்படும் நண்பரின்
முகம் பார்த்துப்
புன்னகைக்கும்
அளவிற்கேனும்
சந்தோஷ மனநிலை
வாய்த்தால்
போதுமென்றிருக்கிறது
வாழ்க்கை....!**

**(ஆதியில் சொற்கள் இருந்தன, ப-எண்-3)**

இயந்திரத்தனமான வாழ்க்கையில் மனிதனின் பண்பட்ட மனமானது, சிதைந்து புண்பட்ட மனநிலையிலேயே வாழ்வியலை மேற்கொள்ளும் நிலை அறியப்படுகிறது. மகிழ்ச்சி என்பது நமது மனம் மட்டுமே வைத்திருக்கும் புதையல், அதனை உணர்ந்தால் வாழ்வு வசப்படும் என்பதனை நுண்மையாய் கவிஞர் வெளிப்படுத்துகிறார்.

அனைத்து இயற்கைச் செல்வங் களும் நட்புச்செல்வத்தைப் பாதுகாக்கக்

கூடியதே, நண்பன் என்பவன் இல்லா உலகத்தை பாலைவனமாகக் கருதியும், மனிதப் பண்பினை வெறுத்தவன் இயற்கையை உணரத் தெரியாத விலங்குகளுக்கு ஒப்பானவன்.

"நட்பு என்பது
சூரியன் போல்
எல்லா நாளும்
பூரணமாய் இருக்கும்
..............................
நட்பு என்பது
காற்றைப் போல்
எல்லா இடத்திலும்
நிறைந்து இருக்கும்."
(இன்னொரு தேசிய கீதம்- 54)

மனிதர்களின் நட்பிற்கு உவமையாகக் கூறப்பட்ட சூரியன், கடல் அலை, அக்னி, தண்ணீர், நிலம், காற்றைத் தனது கவிதையில் உவமையாக்கி உரம் சேர்க்கிறார் கவிஞர் வைரமுத்து.

### வறுமை

இயற்கை தந்த வரங்களின் நிறைகளை அனுபவிப்பவர்கள் பணம் படைத்தோர். குறைகளை அனுபவிப்பவர்கள் ஏழைச் சமூகத்தினர்... ஐந்தறிவு உயிராகப் பிறந்திருந்தால் உணவு, உடை, உறைவிடம் என்ற போராட்டம் மிகுதியாக இருந்திருக்காது. ஆறறிவு மனிதனின் பார்வையில் உலகம் இருவேறு சமூகமாக பிரிந்துதான் கிடக்கிறது.

காட்டுப் பூவின் வாசம்
நுகர்வதேயில்லை
நாற்று நட்டவர்களும்
வேர்க்கடலை பிடுங்கியவர்களும்
என்ன செய்கிறார்களோ
ஜீவனத்திற்கு...... (ஆதியில் சொற்கள்
இருந்தன, ப- எண்-74)

பசியின் துயரை,

"நானும் அந்த நாயும்
குழந்தைக்குச் சோறூட்டும்
மையப்புள்ளியில் சந்தித்துக் கொள்கிறோம்
கையில் எடுக்கும் ஒவ்வொரு கவளமும்
உள்ளிறங்க வேண்டும் என நானும்
கீழே விழ வேண்டும் என நாயும்
அவரவர் எதிர்பார்ப்பில்.
(நீரில் அலையும் முகம், ப- எண்-31)

உலக உயிர்களின் படைப்பில் ஒன்று உணவுக்காக ஏங்கி நிற்பதும், ஒன்று உணவைப் பத்திரபடுத்துவதும் முரணாகும்.

### பெண்வாழ்வில் மரபுகளின் இயல்பு

மண்ணில் மனிதனை உருவாக்க, கரு சுமந்து வாழும் விலை மதிப்பற்ற செல்வம், பெண்.பெண்களின் அறிவுத்திறத்தால் சாதனை வாழ்வியலைத் தொடங்கி அடியெடுத்து வைத்தாலும், மரபுகள் எனும் விலங்கு தொடர்ந்து பூட்டப்பட்டே அவள் மனம் சிறைப்பட்டு உள்ளது. இதனைக் கவிஞர் அ.வெண்ணிலா,

"தலை வாருகிறேன்
புடவை மாற்றுகிறேன்
வேகவேகமாக
பைக்குள் பொருட்களை அடைக்கிறேன்
இவையெல்லாம்
குழந்தைக்குச் சொல்கின்றன
என் பிரிவை...."
(நீரில் அலையும் முகம், ப.எண்-47)

வேலைக்குச் செல்லும் பெண்களின் மனம் கூசும் உணர்விற்கும், குழந்தையின் இயல்பிற்கும் ஏற்படும் தவிப்புநிலையைக் குறிக்கிறது.

"துண்டென்றைக்
கட்டிக் கொண்டு
அம்மாவாக முடிகிறது
குழந்தைகளால்....
குழந்தையாக முடியாமல்
அல்லற்பட்டுக் கொண்டிருப்பது

அம்மாக்கள் தான்." (ஆதியில் சொற்கள் இருந்தன, ப- எண்-34)

அம்மாவானப் பிறகு குழந்தைப் பருவத்து மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாத துயரத்தைக் கவிதை வெளிப் படுத்துகிறது.

மரபுகளின் மாற்று வடிவமாகப் பெண்கள் வேலைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதே தவிர, பெண்களின் வாழ்வியல் துன்பங்கள் தொடர்ந்த நிலையே உள்ளதைக் கவிதைகள் உணர்த்துகின்றது.

## எள்ளல்

எள்ளல் என்பதை அவமதிச்சிரிப்பு, இழிவாகப் பேசல், தள்ளல், நகைத்தல், நிந்தை என்றப்பொருள்களில் கூறி யுள்ளார் நா. கதிரைவேற்பிள்ளை. மேலும் மனிதனின் சிறு குற்றங்களையும் அவன் அறியும் வண்ணம் நகைச்சுவை உணர்வுடன் எடுத்தியம்புவதே எள்ளல் சுவையாகும். மக்களின் மனதைப் பண்படுத்தப் பயன்படுத்தும் உத்திகளில் எள்ளல் ஒன்றாகும்.

"மூஞ்சூறு பசு
மயில் எருமை என
விதவிதமான
வாகனமேறி உலகம்
காக்கிறார்கள்
ஆண்கடவுள்கள்
பெண் கடவுள்கள் மட்டும்
பின்தொடர்ந்தே நடந்திருக்கிறார்கள்
சினந்து வெகுண்டெழுந்த காளிக்கு
சிங்கத்தை வாகனமாக்க
துரதிஷ்டவசமாக
சிங்கத்தை அடக்குவதே
காளியின் வேலையாயிற்று."

(ஆதியில் சொற்கள் இருந்தன, ப- எண்-73)

எள்ளல் சுவையில் ஆண் – பெண் சமூக அமைப்பை நுண்மையாய் உணர்த்தியிருக்கிறார். கவிஞர். பெண் சமூகத்திற்கு வெவ்வேறான வேலைச் சுமைகள் இருப்பினும், குடும்பம், அலுவலகம், சமூகம் என அனைத்து இடங்களிலும் அடையாளப்படுத்திக் கொள்வதும் ஒரு பொறுப்பாகிவிட்டது. மேலும் சமூக மாற்றத்தை,

"பாட்டிக்கு மண்குடம்
அம்மாவுக்கு பித்தளைப்பானை
எனக்கோ பிளாஸ்டிக்குடம்
மகளுக்கோ வாய்த்திருக்கிறது
வாட்டர் பாக்கெட்."

(கனவைப் போலொரு மரணம் - 73)

இயல்பான நுட்பத்தில் கவிஞர் எடுத்துரைத்துள்ளதை அறிய முடிகிறது.

## மூல நூல் : –

ஆதியில் சொற்கள் இருந்தன

நீரில் அலையும் முகம்

கனவைப் போலொரு மரணம்

## துணை நூல் பட்டியல் : –

திருக்குறள் – மு. வ. உரை

இன்னொரு தேசிய கீதம் – வைரமுத்து

தமிழ்மொழி அகராதி– நா. கதிரை வேற்பிள்ளை

# ஔவை நாடகத்தில் தமிழர் பண்பாட்டுப் பதிவுகள்

**முனைவர் கோ.கருணாகரன்,**
*இணைப் பேராசிரியர் தமிழ்த்துறை,*
*மதுரைக்கல்லூரி (தன்னாட்சி),*
*மதுரை - 625 011, செல்:94860 63319,*
karunakaranmuthuvayal@gmail.com

## சுருக்கம் (Abstract)

*பண்டையத் தமிழரின் செவ்வியல் கால வாழ்வில் ஐந்து படிநிலைகள் காணப்பட்டன. அவை அன்பின் ஐந்திணை ஒழுக்கங்களாயின. வீரம் சார்ந்த புறஒழுக்கங்களும் ஒருங்கமையப் பெற்றன. இவ்அகப்புற வாழ்வியல் களில் பாண் சமூகப் பண்பாட்டு மரபுகள் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். சங்ககால கலை ஊடகப் பரப்புனர்களாகப் பாணர்கள் வாழ்ந்துவந்தனர். அவர்களுக்கெனச் சிலப் பண்பாடுகளைக் கொண்டிருந் தனர். மன்னர்களையும் செல்வந்தர்களையும் வேளாளர்களையும் சுற்றியே பிழைப்பையும் வாழ்க்கையும் நடாத்தினர். இவற்றை உள்வாங்கிய இன்குலாப் பெண்பாணர்களின் துயரைத் துடைக்கும் முகமாகக் குறிப்பாக, ஔவை பாத்திரத்தை முன்னெடுத்துக் காலங்காலமாக ஔவையின் தோற்றக்குறியீடு ஆண்கள் பார்வையில் வேறுபடும் விதங்களையும், பெண்கல்வியும் பெண்புலமையும் ஆண் உளவியலில் தங்களுக்குத்தானே காயமாக்கிக்கொள்வதையும் ஔவை நாடகம் மூலம் இன்குலாப் விளக்க முற்பட்டுள்ளார்.*

## திறவுச்சொற்கள் (Keywords)

*சட்டாம்பிள்ளை – தொகுசொற் கோடியன் வாடுமுலை*

## முன்னுரை

*புகழ், வீரம், விருந்தோம்பல், ஈகை, பொதுநலம் போன்றவை தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படைகளாகும். அவை: தமிழ் மொழி, தமிழர் தாயகப் பிணைப்பு, தமிழர் மரபுகள், வரலாறு, விழுமியங்கள், கலைகள், சமூகம், பொருளாதாரம், அரசியல் தளங்கள் ஊடாக வெளிப்படக்கூடிய ஒன்றாகும். அவ்வாற்றான் இன்குலாப் 'ஔவை' எனும் நாடகக் கலை ஊடாக, சில தமிழர் பண்பாட்டுப் பதிவுகளை வெளிக்கொணர்ந்துள்ளார். அப்பதிவுகளே இக்கட்டுரையின் ஆய்வுப்பொருளாக அமைகிறது.*

## ஆய்வுப் பார்வைகளில் ஔவையார்

*"ஔவை என்ற பெண்கவி மரபு பல்வேறு காலங்களில் தொடர்ந்திருப்பதை ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். இந்த ஔவைகள் தத்தம் காலங்களில் ஆற்றல் வாய்ந்த கவிதைப் படைப்புகளை விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதும் உண்மை. எனினும் இந்த மரபைத் தொடங்கியவள் சங்ககால ஔவைதான். சங்ககால ஔவை என்று குறிப்பதுகூட ஒரு மரபு கருதிதான். ஏனெனில் எட்டுத்தொகைகளில் பயிலும் ஔவையின் பாடல்களில் அவள் சங்கம் சார்ந்திருந்தாள் என்பதற்கு ஆதாரம் இல்லை. பிற்காலத்தில்*

இருந்த, இருந்ததாகச் சொல்லப்பட்ட ஔவையார்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே சங்ககால ஔவை என்ற தொடரைக் கையாளுகிறேன். அந்த ஔவை பிற்காலத்து வந்த எந்த ஓர் ஔவையின் சாயலுடனும் பொருந்தாதவள். அந்தக் காலத்தின் பெண்குரல் அவளுடையதுதான். அந்தக் காலத்தில் அவள் அறம் போதிக்கவில்லை. ஆடவரைச்சார்ந்து பெண் ஒழுக வேண்டும் என்ற அடிமைத்தனத்தை முன்மொழியவில்லை. காதலை உரக்கப் பாடியவள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவற்றில் அவள் படைப்பு இல்லை. புறப்பாடல்களிலும் அவளது சொற்களிலும் வீரம் கொப்பளிக்கின்றது." "ஔவை என்பவள் அறம் பாடாமல் அகத்தை வெளிப்படையாகப் பாடியவள் என்பது இன்குலாப்பின் கருத்தாக உள்ளது. பட்டையும், கொட்டையுமாய் முருகனைப் பாடிய ஒரு வயதான மூதாட்டியாக ஆத்திச்சூடி பாடிய ஔவையையும், விநாயகரகவல் மற்றும் ஞானக்கோவை பாடிய ஔவையையும் 'தமிழ் மூதாட்டியாக' அடையாளப்படுத்திக் கொண்டிருந்த தமிழ் மரபில் பாட்டும் கூத்துமாய்ப் பாடிவந்த சங்கத்து ஔவையை மேடையேற்றினார் இன்குலாப். அவ் ஔவை துள்ளும் இளமையள். அதியனுடன் கள்ளருந்தி மகிழ்பவள்" என்கிறார் அ.மார்க்ஸ். "முதுமை இயல்பானது, அழகானது. ஆனால் இங்கே முதுமை என்பது ஆடவர் தர்மத்தின் பாடப்பதிவாகப் பார்க்கப்படுவதால் அந்த முதுமை களையப்படுகிறது" என்கிறார் இன்குலாப்.

## 'ஔவை' கருப்பொருளான காரணம்

ஔவையின் முதுமையை களையும் நோக்கில் இன்குலாப் எடுக்கும் ஊடகம் நாடகமாகும். "இன்றைய மேடை நாடகங்களுக்கும் கூத்துக்களுக்கும் பாரதமும் இராமாயணமும் சிலம்பும் கருப்பொருள்களாகின்றன. ஆனால் மேற்கண்ட காவியங்களையும் புராணத்தன்மையும் குறைந்ததும் யதார்த்தம் உடையதுமான பாட்டும் தொகையும் இன்னும் போதுமான அளவில் பயன்படுத்தப்படாமல் உள்ளன என்றும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் இன்னும் சரியாக நம்மால் பற்றப்படவில்லை" என்றும் கூறுகிறார். அதனால்தான் ஔவையை ஒரு கருவியாக எடுத்துக்கொண்டு நாடகமாகப் புனைந்துள்ளார் இன்குலாப். இந்நாடகம் அ.மங்கையின் நெறியாளுகையில் மேடை நாடகமாக நடிக்கப்பெற்றதாகும்.

## நாடக நோக்கமும் கதைமாந்தர்களும்

இது ஒரு நாடக முயற்சி என்றாலும் ஆராய்ச்சி முயற்சியுங்கூட. மிகை கற்பனை சாராத சங்க இலக்கியத்தின் வழியாக வாழ்க்கைப் பற்றிய கண்ணோட்டத்தைக் காட்ட முயல்வதே இந்நாடகத்தின் நோக்கம் என்று கூறுகிறார். அவர் பதினெட்டுக் காட்சிகளை இந் நாடகத்தில் படைத்துள்ளார். சிறுமி, சட்டாம்பிள்ளை, ஔவை, சிறுவன், பாண்மகள், தோழி, இளைஞன், எயினர், எயினி, பாணர், தொகுசொற்கோடியன், நாஞ்சில் வள்ளுவன், மூதாட்டி, தலைவன், பெண் 1,2, அதியன் அஞ்சி, காவலர் 1,2, வீரன் 1,2,3, தொண்டைமான், பெண்குரல், பாடினி, ஔவையார், இளம்பெண் போன்ற பாத்திரங்களைப் படைத்துள்ளார்.

## ஔவை நாடகம் முன்வைக்கும் கேள்விகளும் மரபுடைத்தலும்

கொன்றை வேந்தனில் வரும், 'உண்டி சுருங்குதல் பெண்டிருக்கழகு' எனும் கருத்தை 'உண்டி மிகுதல் ஆண் களுக்கு அழகோ' எனும் கேள்வியை

முன் வைக்கிறது இந்நாடகம். அதனினும் பெண்கள் நெத்திலிக் கருவாடு மாதிரி இருக்கனுமா? எனும் வினாவும் எழுகிறது. இது போன்ற மரபார்ந்த வினைகளிலிருந்து மக்கள் மீட்கப்பட வேண்டும் எனும் தற்காலச் சமூகப்பார்வையினைப் போதிக்கின்றார் இன்குலாப்.

பெண் என்பவள் கூண்டுக் கிளி போன்றவள். இறக்கை வெட்டப்பட வேண்டும். கூண்டுக்குள்ளே இருக்க வேண்டும். அப்போதுதான் கொஞ்சமுடியும். இறக்கை வெட்டுன கிளியைத்தான் பூனை எளிதாய்ப் பிடிக்கும். இந்தக் கிளிதான் சொன்னதைச் சொல்லும் எனும் உரையாடல்கள் முன்வைக்கும் கருத்துக்கள் என்பது, பெண் என்பவளை அழகுப்பதுமைகளாக முன்னிறுத்த வேண்டும். ஆனால் அவள் கற்கவோ, கேள்விக் கேட்கவோ கூடாது. இந்நிலை பரவினால்தான் பெண்களை ஒடுக்க முடியும் என்று ஆண்கள் நினைக்கின்றனர். இதனால்தான் ஆண்கள், காலங்காலமாகப் பெண் களைப் போற்றுகின்றனரோ என்று எண்ணத்தோன்றுகின்றது.

ஔவையின் தொடக்கக் காட்சியே மெரினா கடற்கரையிலிருந்து தொடங்குகிறது. இந்த அணுகுமுறையே ஆசிரியர் ஔவை மேல் பூசப்பட்ட பழமை சாயத்தைத் துடைத்துவிட்டு புது ஒப்பனையை ஆசிரியர் காட்ட முயல்கிறார் என்பது தெளிவாகிறது. ஔவை என்றாலே மக்களுக்கு இன்று நினைவிற்கு வருவது அவ்வை சண்முகி கமல், இரண்டாமவர் டி.கே.சண்முகம், மூன்றாமவர் கே.பி.சுந்தராம்பாள். இந்த நிலையினை மாற்ற முயற்சிக்கின்றார் இன்குலாப். அறிவார்ந்த கருத்துக்களை எடுத்துரைக்கும் எப்பெண்ணாக இருந்தாலும் அவளைப் 'பாட்டி' என்று அழைக்கும் வழக்கம் அக்காலத் தமிழ் மக்களின் பண்பாக இருந்துள்ளது. "ஔவையாரு பாட்டிதான்ஞ், புத்தி சொல்லும் எந்தப் பொண்ணும், எந்த வயசிலும் பாட்டிதான், எல்லோருக்கும் பாட்டிதான்."

பெண்களே ஆண்களை மதிக்க வேண்டும் என்று கூறினால் ஆண்கள் பெண்களைப் பாராட்டுவர். "பெரிய சாதிக்காரனுக்குச் சின்ன சாதிக்காரன் அடங்கி நடக்கவேண்டும் என்று சின்ன சாதிக்காரன் சொன்னால்... பெரிய சாதிக்காரன் அப்படிச் சொல்ற சின்ன சாதிக்காரனைப் பாராட்டத்தான் செய்வான். அது போலத் தான், ஆண்களுக்குப் பெண்கள் அடங்கி நடக்க வேண்டும் என்று என் வயதில் உள்ள மூதாட்டி அல்ல, உன் வயதுச் சிறுமி சொன்னால் கூட ஆண்கள் அப்படிச் சொல்லும் சிறுமிகளைக் கண்டிக்க மாட்டார்கள். பாராட்டத்தான் செய்வார்கள்." பெண்களையும், ஒடுக்கப்பட்டோரையும் இச்சமூகம் எப்படிப் பார்க்கிறது என்பதை இவ் உரையாடல்கள் உணர்த்துகின்றன.

## சங்ககால ஔவையின் புரட்சியும், பிற்கால ஔவைகளும்

தமிழ் இலக்கியப் பரப்பில் மூன்று ஔவைகள் இருந்துள்ளனர். கொன்றை வேந்தன் பாடிய ஔவை, சுட்ட பழமா, சுடாத பழமா எனக்கேட்டு முருகனால் ஏமாற்றப்பட்ட ஔவை, அதியனுக்கு நெல்லிக்கனி தந்த ஔவை இவர்கள் மூவரையும் மையப்பொருளாக வைத்து இந்நாடகத்தைப் புனைந்துள்ளார் இன்குலாப்.

சங்ககால ஔவையினை, கொன்றை வேந்தன் பாடிய ஔவை, "அந்த ஔவை என்னைப் போல இருந்திருக்கமாட்டாள். இப்படி அவள் கூந்தல் நரைத்திருக்காது. இப்படி நெற்றியில் நீறு இருந்திருக்காது. இப்படி

வெள்ளுடை அணிந்திருக்கமாட்டாள். இப்படி முதுகும் கூன் விழுந்திருக்காது. எல்லாத்துக்கும் மேலே இப்படிப் போதனை செய்யுறவளாகவும் இருந்திருக்க மாட்டாள்" எனக் கூறுவதனால் சங்க கால ஔவை இளமையானவள் என்பது இன்குலாப்பின் கருத்தாகத் தெரிகிறது.

"அழகிய ஔவை பாடினி வந்தாள், அறம் போதியாமல் பாடினி வந்தாள்"

இன்குலாப், ஔவையைப் பாடினி என்றும், கூத்துக்காரி என்றும், பாணர்கூட்டத்துத் தலைவி என்றும் பார்க்கும் பார்வை ஒரு புதிய ஆய்வுப் பார்வையாக அமைந்துள்ளது.

சங்க இலக்கியமோ, நவீன இலக்கியமோ நமது வாழ்க்கையோடு தொடர்புடையதாக, சமகாலப் பொருத்தப்பாடுடையவையாக இருக்க வேண்டும் என்பதுதான் இன்குலாப்பின் கோட்பாடு. தமிழகத்தில் பார்க்கப்படாத வரலாற்றை ஒடுக்கப்பட்டோர்,பெண்கள் குறித்த வரலாற்றை, சொல்லப்படாத, சொல்லத் தயங்கிய வரலாற்றைப் பாட்டும் கூத்துமாக ஆக்குவது என்ற இன்குலாப்பின் ஆழ்ந்த விருப்பத்தின் வெளிப்பாடுகளே 'ஔவை', 'குறிஞ் சிப் பாட்டு', 'மணிமேகலை' ஆகிய அவரது மூன்று நாடகங்கள். அதன் முதல் வெளிப்பாடு 'ஔவை'. தமிழ் இலக்கிய வரலாற்றில் பல ஔவைகள் இருந்தனர். அவர்கள் எல்லோரையும் ஒன்றாக்கி, அறஞ்சொல்லக் கூடிய அதிலும் ஆண்களுக்கான அறத்தைப் பேசக்கூடிய வயோதிக ஔவை என்ற மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்ட பிம்பத்தை அகற்றி, எட்டுத் தொகையின் அகப், புறப்பாடல்களிலிருந்து ஔவை பற்றிய புதிய படிமத்தை உருவாக்க முயன்ற இன்குலாப், அந்தச் சங்ககால ஔவையை ஒடுக்கப்பட்டோரின் பிரதிநிதியாக, ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல்கொடுத்த கலகக் காரியாகப் பார்க்கவில்லை. ஆனால் சுதந்திரமாகப் பாடித் திரிந்த ஓர் ஔவையை மூடி மறைத்துவிட்டு, ஆத்திச்சூடி அறம் பாடியவளாகக் காட்டப்பட்டுவந்ததும்கூட அவள்மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறை என்றும், அந்த அம்சத்தை முன்நிறுத்துவதும் கூட பெண்கள் மீதான ஆதி ஒடுக்கு முறையை அம்பலப்படுத்தும் செயல் என்றும் இன்குலாப் கருதியதாக எஸ்.வி.ராஜதுரை குறிப்பிடுகிறார் .

## ஔவை பாணர் குலமா?

"யாழ் மீட்டும் கைகள் மீன் பிடிக்குமா?, ஏன் மீன் பிடிக்கும் கைகளுக்கு யாழ் மீட்ட வராதா?" எனும் உரையாடல் வழிச் சங்ககாலத்து ஔவை யாழ் மீட்டும் பாணர் குலம் என்றும் அவள் மீனும் பிடிப்பாள் என்றும் இன்குலாப் சூசகமாகக் குறிப்பிடுகின்றார். பாணர்களே பாடினிகளாகவும் புலவர்களாகவும் இருந்துள்ளனர் என்னும் மையக்கருத்தும் இவ்வுரையாடகளில் வெளிப்படுகிறது. இக்கருத்தை, பரதநாட்டிய சாஸ்திரம் எழுதிய பரதமுனிவரிடம் ஒப்பிட்டு அறியலாம். ஏனென்றால் பரதவர் என்றால் மீனவர், கடல் வாழுநர் என்னும் பொருள்படும். அதன் அடிப்படையில் பரதமுனிவர் மீனவர்குலத்தில் பிறந்து ஐந்தாம் வேதமாகப் போற்றப்படும் பரதசாஸ்திரத்தை எழுதியுள்ளார் என்றால் மீனவகுலத்தில் பிறந்து ஔவை சங்கப் பாடல்கள் எழுதியதுடன் யாழுமிசைத்திருப்பார் என்பதில் ஐயமில்லை. சங்ககாலத்தில் யாழிசைப்போரை பாணர்கள் என்று அழைப்பது இயல்பானதாகும். அதனால் மீன்பிடித்த ஔவையின் கைகள் யாழ்மீட்டுவதில் ஐயம் தேவையில்லை.

## ஔவை காலத் திருமணமுறைகள்

ஔவை காலத்தில் திருமணம் சடங்காக இல்லை. இப்பொழுதுதான் சடங்காக மாற்றப்பட்டுள்ளது. "ஆணும் பெண்ணும் விரும்பிக் கலந்ததைப் பார்த்தவரும் இல்லை, பறையுமில்லை. நடத்தி வைக்கப் பார்ப்பானும் இல்லை" என்று இன்குலாப் குறிப்பிடுகிறார். இம்முறை தொல்காப்பியருக்கும் முற்பட்ட தமிழ்ப் பண்பாட்டுத் திருமணமுறையாகும். எதனாலோவெனின், தொல்காப்பியர்,

'கற்பெனப்படுவது கரணமொடு புணர' (தொல்.கற்பி.1) என்றும்

'மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே' (தொல்.கற்பி.3) என்றும்

'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப' (தொல்.கற்பி.4)

என்றும் சுட்டுகின்றார். ஔவை, தொல்காப்பியருக்கு முந்தியவள் என்றால் இன்குலாப் குறிப்பிடும் திருமணச் சடங்கில் பார்ப்பான், பறையில்லை என்று கூறுவது ஏற்புடையதாகும். ஆனால் தொல்காப்பியர் குறிப்பிடும் கரணம், இரண்டாம் நூற்றாண்டுச் சிலம்புக் குறிப்பிடும் கோவலன் – கண்ணகி திருமணத்தில் தீவலம் வருவதும், முரசறைவதும் உறுதிப்படுத்துவதாய் உள்ளது. ஔவைகாலத் தமிழ்த் திருமண முறை என்பது இன்னும் மேலாய்வுக்கு உரியதாகும்.

## சூழலியல் பாதிப்பா?

எயினர், எயினி சந்திப்பில் மரங்கள் இல்லை, ஆறுகள் தொலைந்தன. மரங்கள் எல்லாம் வணிகர்கள் வீட்டு மரக்கதவானது. அரசர்கள் கொள்ளை யடிக்கவில்லையா? உழவர்கள் நெல்லைக் கொள்ளையடிக்கிறார்கள். பாணர்கள் மீன்களைக் கொள்ளையடிக் கிறார்கள். பறவைகள் பழங்களைக் கொள்ளையடிக்கின்றன என்னும் கருத்துக்களை இன்குலாப் முன்வைப்பது தன்னைச் சுற்றியிருக்கும் இயற்கை அழியும் ஆதங்கத்தில் அவற்றை அவ்வாறு வெளிப்படுத்துகின்றார் என எண்ணலாம். நெல், மீன், பழங்கள் என்பன மனிதனின் அடிப்படையான உணவுப்பொருள்கள். அவை உற்பத்தியாவதும், அவற்றை உண்பதும் உயிர்களின் ஒரு பரிணாமச் சுழற்சியாகும். அவை கொள்ளையடிக்கப்படுகின்றன எனும் கருத்தை ஆசிரியர் கூறுவது இயற்கைக்கு மாறானதாகும்.

தொகுசொற்கோடியன் எனும் கதைமாந்தரை அறிமுகம் செய்யும் ஆசிரியர் அப்பாத்திரத்திற் கானப் பணியினை இந்நாடகத்தில் காட்டப்படவில்லை. தொகுசொற் கோடியன் என்பது கட்டியங்காரனின் மற்றொரு பெயராகும். நாடகத்தின் கதையினைக் கட்டியுரைப்பது அவனது பணியாகும்.

## தமிழர் யாவரும் ஒரு குடியினர்

மன்னர்கள் தோன்றுவதற்கு முன்பு மக்கள் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு நாட்டைப் பிரிக்கும் கோடுகளுக்கும் கொடிகளுக்கும் முன்பு தாங்கள் ஒரே இனத்தின் கிளைகள் என்பது நன்கு தெரியும். அது மட்டுமன்று. நம் கையில் உள்ள யாழ், முழவு, பறை, குழல், காற்று எல்லை கடக்கும். இசையும் அப்படித்தான். எல்லைக்கோடு, நாட்டுக்கொடி, இசைக்கருவிகளுக்கு எல்லாம் உரிமையுடையோர், பகைவர் எனத் தெரியாது. அவை எல்லா நிலத்திலும் மனத்திலும் பரவிநிற்கும். வேறுபாடுகள் அற்றவை. அவை போன்று மனிதனும் பொதுமையானவன்தான். அவன் ஒரு கிளையிலிருந்து வந்தவன் எனக்

கூறுகிறார். இதன்வழி, இயற்கையோடு மனிதனை இணைத்துச் சமத்துவம் காணும் இன்குலாப், சாதி, மதம் கடந்த சிந்தனையாளர் என்பதையும் பதிவுசெய்கின்றார்.

## தமிழர் போர்ப் பண்பாடு

தகடூர் மண் போர் வேட்கையில் இருக்கிறது என்றும் போர் ஏற்பட்டால் தான் கருவூலம் நிறையும் என்றும் களத்தில் நிற்கும் வீரர்களுக்குப் போர் வெறியூட்டுவதுதான் பாணர்கள் கடமை என்றும் விளக்குகிறார் இன்குலாப். இறந்த வீரர்களுக்குக் கள் படையல் இடும் வழக்கமும் சுட்டப்பட்டுள்ளது. இறந்த வீரரின் தாய், "அந்தப் புலிக்குட்டி இருந்த குகை என்பதற்கான தடயங்கள் இந்தக் கோடுகள், இறந்த செய்தி கேட்ட எனக்கு வாடுமுலை மீண்டும் ஊறிச்சுரந்தன. இதனால் மிஞ்சுவது என் இனம், இந்த மண், நாங்கள் இறுதிவரை போரிட்டு மடிந்தோம் என்கிற பெருமை மிஞ்சும்". இவ்வரிகள் ஈழத்துப்போரை நினைவூட்டுகின்றன.

"அக்காலத்தில் ஆண், காதல் நிறைவேறாவிட்டால் மடலேறு வதாக மிரட்டுவான். கருக்கால் கீறிக் கொள்வான். காதலியின் உருவத்தைத் தூக்கிப்பிடிப்பான். ஆனால் பெண்ணுக்குக் காதல் நிறைவேறா விட்டால் உணர்வை வெளிக்காட்டாமல் ஊமையாவாள். பேயாடுவாள். பெண் உணர்வற்றவளா? பெண்ணுடைய உணர்வை, ஆடவனே! நீ உண்மையில் எதிர்கொண்டதுண்டா? ஆடவர் படைப்பில் பெண் அமைதி காக்கலாம். என் படைப்பில் பெண் ஆரவாரம் செய்வாள். ஆடவர் படைப்பில் பெண் கூண்டுக்குள் முடங்கலாம். என் படைப்பில் அவள் சிறகு விரிப்பாள்" என்று கூறுவது கதைப்பாத்திரக் கூற்றின் சாக்கீட்டில் இன்குலாப்பே தன் கருத்தை ஆழமாய்ப் பதிவுசெய்துள்ளதாகத் தெரிகிறது. பெண்ணை ஒடுக்கினால் முட்டுவேன் என்றும், தாக்குவேன் என்றும் கூறுவது அக்கால பெண்களின் கருத்துச் சுதந்திர வெளிப்பாடாகும். சிறுவெள்ளான் குருகு, சினைக்கெளிறு, நெல்லிக்கனி போன்றவைகள் எல்லாம் குறியீடுகளாக இந்நாடகத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளன.

### முடிவுரை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து நிலக்காட்சிகளும், உரிப்பொருள்களும் இந்நாடகத்தில் கையாளப்பட்டுள்ளன. அதியனைப் பார்த்து, உன் அசைவு ஒவ்வொன்றும் எம் யாழில் இசையாகும். உம் சொல் ஒவ்வொன்றும் எம் நாவில் பாட்டாகும் என்றுகூறுவதும், தமிழகம் முழுவதையும் காலால் அளந்தோம் என்று ஔவை சொல்வதும், இசைமீது மன்னர்களுக்கும், மக்களுக்கும் எத்தகைய ஈடுபாடு இருந்தது என்பதை விளங்கமுடிகிறது. அதுபோல் பாணர்கள் வாழ்வு பரந்துபட்ட அசைவியக்கங்களைக் கொண்டது என்பதும் தெளிவாகிறது. பாணர்கள் வாழ்வு என்பது பரிசுகள்பெறும் வாழ்வாகவும் மன்னர்களை எதிர்நோக்கி வாழும் வாழ்வாகவும் இருந்துள்ளது. காலம் தாழ்த்திய பரிசினைப் பெற ஔவை கோபம் கொள்வதும் பின்பு ஆற்றுவித்து அதியன் விருந்தளிப்பதையும் இந்நாடகம் விளக்குகிறது. அந்திநிலவு தீப்பிடிப்பது போல என்று அதியனைக் குறியீடாகக் கூறுவதும், காதலர்கள் காதலியைக் கானகத்துக்கு அழைத்துச் சென்றால், உடம்பில் உடம்பு புகுவது போன்று அணைப்புக்கிடைக்கும் என்று மெய்யுறுப்புணர்ச்சியை ஒப்பிடுவதும் இங்கு இலக்கிய அகத்திணைப் பண்புகளாகக்கொள்ளலாம். மூன்று ஔவையார்களில் சங்ககாலத்து ஔவை இளமையானவளாகவும் எவ்வித

மரபுகளுக்குள் ஆட்படாதவளாகவும் ஆசிரியர் இந்நாடகத்தில் படைத்துள்ளார்.

**பயன்பட்ட நூல்கள்:**

1. இன்குலாப், ஔவை, அகரம், 15பி1 சரவணா காம்ப்ளெக்ஸ், வெள்ளப் பண்டாரத் தெரு, கும்பகோணம், 612 001, ஜூன் 2000 (இரண்டாம் பதிப்பு).
2. அ.மார்க்ஸ், இன்குலாப் விமர்சனக் கட்டுரை, இணையம்.
3. எஸ்.வி.ராஜதுரை, தினகரன், வாரமஞ்சரி, டிச.12, 2016.

**சான்றெண் விளக்கம்:**

1. இன்குலாப், ஔவை, ஜூன் 2000 (இரண்டாம் பதிப்பு), பக்.45.
2. அ.மார்க்ஸ், இன்குலாப் விமர்சனக் கட்டுரை, இணையம்.
3. இன்குலாப், முற்சுட்டிய நூல், ப.7.
4. மேலது, ப.6
5. மேலது, ப.14.
6. மேலது, ப.15.
7. மேலது, ப.19.
8. எஸ்.வி.ராஜதுரை, தினகரன், வாரமஞ்சரி, டிச.12, 2016.
9. இன்குலாப், முற்சுட்டிய நூல், ப27.
10. மேலது, ப.32.
11. மேலது, ப.37.
12. மேலது, ப.51.
13. மேலது, ப.77.

# புறநானூற்றில் பண்பாடு

நெறியாளர்
**முனைவர் ஜெ.கோகிலா,**
உதவிப் பேராசிரியர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

ஆய்வாளர் **கி.இரா.சிந்து**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

## முன்னுரை:

எட்டுத்தொகை என்பது எட்டு நூல்களின் தொகுப்பு. இது சங்க இலக்கியங்களுள் ஒன்று. இதில் அடங்கிய ஒவ்வொரு நூலும் பலரால் பல காலகட்டங்களில் எழுதப்பட்டுப் பின்னர் ஒருசேரத் தொகுக்கப்பட்டது. அகத்தையும் புறத்தையும் பற்றிய பாடல்களாக இந்நூல்களைப் பகுக்கின்றனர். தொழில் அளவு, பாட்டு, பொருள் ஆகியவற்றால் தொகுக்கப் பட்டமையால் தொகை எனப் பெயர் பெற்றது. எட்டுத்தொகையில் புற நூல்கள் பற்றிய சில பதிவுகள் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளது.

## தமிழர் அறமும் புறநானூறும்:

சமூகத்தின் வாழ்வியல் ஒருங்கு நெறியையே தமிழர் 'அறம்' என்றனர். வடமொழியாளர் கூறும் 'தருமம்' வேறு தமிழர் கூறும் 'அறம்' வேறு.

உழுதெழிலை மேம்படுத்திக் குடிநலம் காத்தல் ஓர் அரசின் தலையாய அறமாக அன்று உணரப்பட்டது. புறநானூற்றின் 35–வது பாடலில் புலவர் வெள்ளைக் குடி நாகனார் இதனைத் தெளிவுபடுத்துகிறார்.

"பகைவர்களை வென்று மன்னர்கள் பெறுகின்ற வெற்றி என்பது, ஏரினால் நிலத்தில் ஊன்றி, விளைந்த நெல்லின் பயனாகும். எனவே, அரசே, எருதுகளின் துணையுடன் பயிர்த்தொழில் புரிந்து மக்களைக் காக்கும் உழவர் குடிக்கு நீ உதவுவாய் எனில், அடங்க மறுக்கும் பகைவரும் அடங்கி வருவர்" என்கிறார்.

> "நளிஇரு முந்நீர் ஏணி யாக,
> வளிஇடை வழங்கா வானம் சூடிய
> மண்திணி கிடக்கைத் தணிதமிழ்க் கிழவர்,
> ----தருகுவை யாயின், நின்
> அடிபுறம் தருகுவர், அடங்கா தேரே"
> (புறம் - 35)

புறநானூறு 182 – ஆம் பாடலில் இளம்பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் தன்னலமற்ற பொதுநல வாழ்வை மெச்சுகிறான். பிறர்காக வாழ்பவர் உள்ள தால்தான் உலகம் உள்ளது என்கிறான்.

"அமிழ்தமே கிடைத்தாலும் தாமே தனித்து உண்ணாதவர், சினம் கொள்ளாதவர், செயலைத் துறந்து உறங்காதவர், அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுபவர், புகழ்தரும் செயலுக்கு உயிரையும் கொடுப்பவர், உலகமே கிடைத்தாலும் பழிச்செயலை நாடாதவர், சோம்பலை உதறியவர், தமக்கென உழைக்காமல் மக்கள் யாவருக்குமாக உழைப்பவர் உள்ளதால் தான் உலகம் உயிர்வாழ்ந்து கொண் டிருக்கிறது" என்று சமூக நலத்தையே முதன்மைப்படுத்துகின்ற அறநோக்கு அந்நாளைய தமிழ் பண்பாக இருந்திருக்கிறது என்பதைத் தான்

இந்தப் புறநதனூற்றுப் பாடல் புலப் படுத்துகின்றது.

**"உண்டால் அம்ம, இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும், இனழதுஎனத்**
**---மாட்சி அனைய ராகித்,**
**தமக்கென முயலா நோன்தாள்,**
**பிறர்க்கென மயலுநர் உண்மை யானே"**
**(புறம் - 182)**

புறநானூற்றுச் சான்றோரின் அறநோக்கில் மக்கள் பரிவும், எந்த செயலையும் திட்டமிட்டு செயல்பட வலி யுறுத்துவதும் முதன்மை பெறுகின்றன. புறம் 184 – இல் பிசிராந்தையார் பாண்டிய மன்னனுக்குக் கூறுகிறார்,

"காய்நெல் அறுத்துக் கவளமாய் யானைக்கு ஊட்டுவதுபோல் அரசன் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். மக்கள்மீது பரிவு காட்ட வேண்டும். வரம்புக்கு உட்பட்டு வரிவாங்க வேண்டும். அறிவார்ந்த கருத்தாளரையே அருகில் வைத்துக் கொள்ள வேண்டும். தரமற்ற ஆரவாரக் கூட்டத்தை அணுகவிடக் கூடாது. திட்டமிட்டுச் செயல்பட்டால் கோடி ஆக்கச் செயல்களை மேற்கொள்ளலாம். நாடும் உயர்வடையும்" என்று அன்றைய புலமைச் சான்றோர்கள் மன்னர்களை விளங்கினார்கள்.

**"காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே,**
**மாநிறைவு இல்லதும், பன்நாட்கு ஆகும்**
**----எடுக்கும் பிண்டம் நச்சின்,**
**யானை புக்க புலம்போலத்,**
**தானும் உண்ணான், உலகமும் கெடுமே"**
**(புறம் -- 184)**

## உழைப்பும் புறநானூறும்:

சங்க கால மக்கள் உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந் தனர். உழைக்காமல் பெறுவது அமுத மாகவே இருந்தாலும் அதனை விரும்ப மாட்டார்கள். உழைப்பின் அறத்தை மக்களுக்கு எடுத்துரைக்கும் விதமாக,

**"கடுங்கண் கேழல் இடம்படி வீழ்ந்தென**
**அன்று அவண் உண்ணாதகி, வழிநாள்,**
**பெருமலை விடரகம் புலம்ப, வேட்டெழுந்து**
**------ஒருத்தல் நல்வலம் படுக்கும்**
**புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து"**
**(புறம் - 190)**

என்னும் பாடலில் பசியுடன் காணப் படும் புலியானது தனது இடப்பக்கத்தில் இறந்து கிடக்கும் காட்டுப்பன்னியினை உண்ணாது, மலைபோல் காட்சி யளிக்கின்ற தன் வலிமையான முயற்சியினால் கொன்று உண்ணத் தொடங்கும். இத்தகைய உழைப்பின் அறவழியினை வலியுறுத்தும் தன்மை இப்பாடலில் அமைந்துள்ளது.

## ஈகையும் புறநானூறும் :

கடல் சூழந்த உலகத்தைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்த மன்னர்களானாலும், இரவு பகல் உறங்காமல் விலங்குகளை வேட்டை யாடும் கல்லாத வறியோனாக இருந் தாலும் இவர்கள் உண்ணப்படும் தானியம் இரண்டு ஆழாக்கு மட்டும்தான். மேலும் இவர்கள் உடுக்கும் உடையும் மேலாடை மற்றும் கீழாடை என்னும் இரண்டுவித ஆடை மட்டுமேயாகும். செல்வத்தின் பயனே பிறருக்கு ஈதல் பொருட்டேயாகும் மாறாக அச்செல்வத்தை காருக்கும் கொடுக்காமல் தான் மட்டுமே சுய நலமாக அனுபவித்தல் கூடாது.

"தெண்கடல் வளாகம்பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்,
றடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
----- செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே, தப்புநபலவே"
(புறம் - 189)

இன்றைய கால கட்டத்தில் பொருளாதார ரீதியாக துன்பம் நேரும்பொழுது பிறரிடம் உதவி கேட்டுப் பெறுவோம் அவ்வாறு கேட்டுப்

பெறும்போது உதவி கிடைத்தால் மகிழ்ச்சியடைவர் ஆனால் மாறாக உதவி மறுப்பின் அவர்களை வெறுத்துவிடுவர். சங்க இலக்கியத்தில் அவ்வாறில்லாமல் அவர்களை மேலும் நேசித்தனர்.

*“ஈஎன இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்,*

*ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று*

*---- வாழியர், ஓரி விசும்பின்*

*கருவி வானம் போல*

*வரையாது சுரக்கும் வள்ளியோய்! நின்னே” (புறம் – 204)*

*‘ஒன்றைத் தா’ என இரத்தல் இழிவானது அவ்வாறு இரந்து நின்றார்க்கு ஒன்றை ‘ஈயேன்’ என்று மறுப்பது அதனினும் இழிவானதாகும். கொள்வாயா என விரும்பிக் கொடுத்தல் இனிது. இவ்வாறு கொடுத்தாலும் கொள்ளோம் என்று கூறுவது அதனினும் உயர்ந்தது. என புறநானூறு இரத்தலுக்கான இலக்கணம் கூறுவதை நம்மால் அறியமுடிகிறது.*

**“ஒல்லுவது ஒல்லும் என்றலும், யாவர்க்கும்**
**ஒல்லாது இல்லென மறுத்தலும், இரண்டும்**
**ஆள்வினை மருங்கின் கேண்மைப் பாலே**
**---- குறுமகள் உள்ளிச்**
**செல்வல் அத்தை சிறக்க, நின் நாளே!”**

(புறம் - *196*)

மேலும், பிறருக்குக் தானம் கொடுப்பதால் புகழ் கிட்டும் என்னும் உண்மையையும், வள்ளல்கள் அழியப் புகழ்பெற்று இன்றும் மக்கள் மனதில் வாழ்வதையும், பரிசில் நாடி வருபவர் களுக்கு பரிசில் மறுப்பது தேடிவரும் புகழினையும் அதனால் வரும் இன்பத் தினையும் இழந்தவராவர் என்பதை எடுத்துரைக்கிறது. இதனை,

**“கழிந்தது பொழிந்ததென வான்கண் மாறினும்**
**தொல்லது விளைந்தென நிலம்வளம்**
**கரப்பினும்,**
**எல்லா உயிர்க்கும் இல்லால், வாழ்க்கை**
**---- இறுக்கும் வள்ளியோய்!**
**பூண்கடன், எந்தை! நீஇரவலர் புரவே”**

(புறம் - *203*)

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

## நட்பின் உயர்வும் புறநானூறும் :

மனித உறவுகளில் வலிமை வாய்ந்த கருவியே நட்புறவு. இரு மனங்கள் ஒன்றுப்பட்டு பழகும் பண்பு நிறைந்த உறவே நட்புறவு. கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த பொழுது, அவனைச் சூழ்ந்திருந்தவர்கள், பிசிராந்தையார் பாண்டிய நாட்டி லிருந்து சோழ நாட்டிற்கு வந்து வடக்கிருக்கும் கோப்பெருஞ்சேழனைக் காணவருவாரோ வரமாட்டாரோ என்று சந்தேகப்பட்டார்கள். அவர்கள் பேச்சைக் கேள்விப்பட்ட கோப்பெருஞ் சோழன், “பிசிராந்தையார் என் உயிரைப் பாதுகாப்பவர் நான் ஆட்சி யிலிருந்த காலத்தில் அவர் வந்து என்னைப் பார்க்காவிட்டாலும் நான் துன்பத்திலிருக்கும் பொழுது அவர் கண்டிப்பாக என்னைப் பார்க்க வருவார்” என்று கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**“கவைக் கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்**
**தாதொரு மறுகின் போதொடு பொதுளிய**
**வேளை வெண்பூ வெண்தயிர்க் கொளீஇ,**
**---- காலை நிற்பினும்,**
**அல்லற் காலை நில்லலன் மன்னே”**

(புறம் - *215*)

வள்ளல் சாத்தன் இறந்தான் என்று அந்த நாட்டில் யாருமே தலையில் சூடிக்கொள்ளவில்லையாம். இதனைப் புலவர் நயம்படக் கூறுகிறார். இளங் குழந்தைகள் கூடவில்லை. வளையல் அணிந்த மகளிர் சூடுவதற்காகப் பறிக்கவில்லை. பாணர் தம் வளைந்த

யாழைத் தொரட்டாகப் பயன்படுத்திக் கீழே இழுத்துப் பரித்துத் தலையில் சூட்டிக்கொள்ளவில்லை. பாடினியும் அணிந்துகொள்ளவில்லை. அப்படி இருக்கும்போது, முல்லைப்பூவே! ஒல்லையூர் நாட்டில் எதற்காகப் பூக்கிறாய்? இப்பாடலால் தெரிவரும் அக் காலத் தமிழர் பண்பாடுகள் கணவன் இறந்தால் மனைவி தன் தலையில் பூ வைத்துக்கொள்ள மாட்டாள். பாணர் முதலான சில ஆடவரும் பூவைச் சூடிக்கொள்வர். ஆண், பெண் குழந்தைகள் பூச்சூடிக்கொள்ளுதல் வழக்கம்.

**"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்**
**நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்**
**பாணன் சூடான் பாடினி அணியாள்**
**---- சாத்தன் மாய்ந்த பின்றை**
**முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே?"**

(புறம் - 242)

பசிய பொன்னை கூத்தர்க்கு வழங்கியவனும் முந்நீராகிய கடலின் தெய்வதத்துக்கு விழா எடுத்தவனுமாகிய நேடியோனால் உண்டாகப் பெற்ற பஃறுளியாறு நல்ல நீரோசையை அந்த ப.றுளியாற்கு மணலினும் பலகாலம் உன் மன்னன் வாழ்வானாக என்று வாழ்த்தும்.

**"ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்**
**---- பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த,**
**முந்நீர் விழவின், நெடியோன்**
**நன்னீர் பறுளி மணலினும் பலவே!"**

(புறம் - 09)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

புறச்சிந்தனையில் அறச் சிந்தனையின் ஆணிவேர் செறிந்திருக்கக் காணலாம்பேரிலக்கியமாககருதப்படும் புறத்தில் வாழ்வியல் சிந்தனைகள் அறநெறிக்கு அடிப்படையானவையாக அமைகின்றன. அதாவது சமுதாயம் என்பது தனி மனிதர்கள் சேர்ந்த கூட்டமைப்பாகும். தனிமனிதர்கள் செய்யும் அறங்கய் சமுதாய மேம் பாட்டை உருவாக்குகின்றன. சமுதாயத்தில் மக்களால் தனிமனித அறத்தைக் கடைப்பிடிக்கப்படும் அறங்கள் சமுதாய அறங்களாகும் அகப் பொருளிலும், சமுதாய அறத்தை புறப்பொருளிலும் காணமுடிகிறது. பண்டைத்தமிழர்கள் மறுவுணர்வுடன், அறவுணர்வும் உடையவர்களாகத் திகழ்ந்துள்ளன் மொத்தத்தில் புறநானூறு சங்கத் தமிழர்களின் வீரவாழ்க்கையினை எடுத்தியம்பும் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கின்றது என்பதை உணரமுடிகிறது.

# சங்க இலக்கியத்தில் பழந்தமிழரின் பண்பாடு

**முனைவர் இரா. சுகுமார்,**
உதவிப் பேராசிரியர், மொழிகள் துறை,
பெரியார் மணியம்மை அறிவியல்
மற்றும் தொழில் நுட்ப நிறுவனம்
(நிகர் நிலைப் பல்கலைக் கழகம்),
வல்லம், தஞ்சாவூர் - 613 403.

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் இறவாப் புகழ்பெற்ற இலக்கியம் சங்க இலக்கியம். இவ்விலக்கியம் பண்டைத் தமிழரின் வாழ்வியல் நெறிகளையும் பண்பாட்டினையும் உலகிற்கு பறைசாற்றி நிற்கும் பெட்டகமாக விளங்குகிறது. இவ்விலக்கியம் வகுத்துள்ள வாழ்வியல் நெறிகளும் பண்பாடுகளும் உலக முழுமைக்கும்; பொருந்தும் ஆற்றலுடையவை. இச்சங்க இலக்கியத்தில் காணலாகும் பழந் தமிழிரின் பண்பாடு குறித்து ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்பாடு

மனிதனின் அகவளர்ச்சியை 'பண்பாடு' என்றும் புறவளர்ச்சியை 'நாகரிகம்' என்றும் குறிப்பர். பண்பாடு, நாகரிகம் இவை இரண்டையும் ஒப்பிடும் போது பெயரளவில் பொருளளவில் வேறுபட்டிருந்தாலும் அவை ஒன்றிற்கொண்டு தொடர்பு உடையதாகவும் பின்னிப் பிணைந்தவை களாகவும்; காணப்படுகின்றது. இதில் பண்பாடு என்னும் சொல் அண்மைக் காலத்தது. இச்சொல்லானது பழந்தமிழ் இலக்கியங்களில் காணப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் இச்சொல் குறித்த பொருள்கள் பழந்தமிழ்ப் பாடல்கள் பலவற்றில் பயின்று வந்துள்ளமையைக் காண முடிகிறது. இவை முறைமை, செவ்வி, உலக ஒழுக்கம் முதலான பொருள்களில் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. இதனை,

"பாடறிந் தொழுகும் பண்பினாரே"[1]
(புறம்.பா.197;14)

"கார்ப்பெயல் கலித்த பெரும்பாட்டு
ஈரத்து"[2] (புறம்.பா.120;2)

"நயனும் நண்பும் நாணும்
நன்குடைமையும்
பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும்"[3]
(நற்.பா.160;1-2)

என்ற பாடல்களின் வரிகளால் அறியலாம்.

## பண்பாட்டின் இலக்கணம்

சங்க இலக்கியங்களில் ஒன்றான கலித்தொகையில் நெய்தற் கலிப் பாடலொன்றில் பண்பாட்டின் இலக்கணத்தை நல்லந்துவனார் என்ற புலவர் குறிப்பிடுகின்றார். இதனை,

"ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு
உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்
அன்பு எனப்படுவது தன் கிளை செறா அமை
அறிவு எனப்படுவது பேதையர் சொல்
நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ணோடாது
உயிர்வெளவல்

பொறை எனப்படுவது போற்றாரை
பொறுத்தல்"[4]
(கலித்.பா.133;6-14)

என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.

## பண்பாட்டின் சிறப்பு

பண்பாடு காலத்திற்குக் காலம், நாட்டிற்கு நாடு, இனத்திற்கு இனம் வேறுபடும் தன்மையுடையது. ஒரு நாட்டின் பெருமைக்கும் சிறப்புக்கும் அங்கு வாழும் மக்களின் பண்பாடு தான் காரணமாக அமைகிறது. இதனை,

"நாடா கொன்றா காடா கொன்றா
அவலா கொன்றோ மிசையா கொன்றா
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"[5]
(புறம். பா.187)

என்ற பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றது.

## ஏறுதழுவுதல்

சங்க காலத் தமழிரின் வாழ்வினை அகம், புறம் எனப் பிரித்தனர். புறவாழ்வு மட்டுமல்லாமல் அகவாழ்விலும் தமிழர்கள் வீரம் செறிந்து காணப்பட்டனர் என்பதற்கு ஏறுதழுவல் சிறந்த எடுத்துக் காட்டாகும். ஆயர்களின் மணவினைச் சடங்குகளில் ஒன்றாகவும் ஏறுதழுவுதல் கருதப்பட்டது. மேலும் ஆயர்களின் வீரவிளையாட்டில் பறையறைதலும், குரவையாடுதலும் நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது. இதனை,

"அவ்வழிப் பறையெழுந்திசைப்பப்
பல்லவரார்ப்பக்
குறையா மைந்தர் கோளெதிரெடுத்த
நறைவலஞ் செயவிடா இறுத்தன ஏறு"[6]
(கலித்.பா.104;29-31)

எனவும்,

"ஆங்கு
குரவை தழீஇயா மரபுளி பாடித்
தேயா விழுப் புகழ்த் தெய்வம் பரவுதும்"7
(கலித்.பா. 103;74-76)

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றது.

"பகலிடக் கண்ணியன் கைதற் குழலன்
சுவல்மிசை கோலசைத்த கையன் அயலது
கொல்லேறு சாட இருந்தார்க்கெம் பல்லிருங்
கூந்தலனை கொடுப்போம் யாம்"[8]
(கலித்.பா.101;39-42)

என்ற பாடல் வரிகளால் ஏறுதழுவலின் சிறப்பை அறியமுடிகின்றது.

## இல்லறப் பண்பாடு

தலைவனும் தலைவியும் இல்லறத்தை நல்லறமாக எண்ணி நடத்துகின்ற போது அந்த இல்லற வாழ்வில் வறுமை வந்தபோதிலும் செம்மையுடன் கடமைகளைச் செய்து மனநிறைவு கொண்டனர். தலைவி வறுமை நிலையில் கூட, பிறந்த வீட்டின் செல்வத்தைப் பராட்டாமல் புகுந்த வீட்டின் வாழ்வைப் பெரிதாகக் கருதிப் போற்றினாள். இதனை,

"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உன்னாள்
ஒழுகுநீர் நுனங்கறல் போலப்
"பொழுது மறுத்து உண்ணும் சிறுமது
கையளே"[9] (நற்.பா.110;10-13)

என்ற பாடல் வரிகளால் அறியலாம். மேலும் குடும்ப வறுமையைப் பெற்றோருக்கும் மற்றோருக்கும் புலப்படுத்தாமல் மறைத்து வாழ்வதைப் பெரிதாகக் கருதிய இல்லறப் பண்பாட்டினை இப்பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

## அன்பு செலுத்தும் பண்பு

பண்பாட்டில் சிறந்து விளங்கியவர்கள் பழந்தமிழர்கள். நிலைப்பெற்றிருக்கும் ஊர் அனைத்தும் நம்முடைய ஊர் என்றும் அங்கு வாழும் மக்கள் அனைவரும் நம் உறவினர் என்றும் மொழி, மதம், இனம், சாதி ஆகியவற்றைக் கடந்து எவ்வித பேத மின்றியும் ஒவ்வொருவரும் பிறரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்ற உயரிய பண்பு வெளிப்படுத்தப்படுகிறது.

இதனை,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"[10]
(புறம்.பா.192;1)

என்ற பாடல் வரியால் தெளியலாம்.

## அரசியற் பண்பாடு

சங்க காலத்தில் முடியாட்சி முறை வழக்கில் இருந்தாலும் அரசர்கள் அதிகாரப் போக்கினை கையாளாமல் அறத்தின் வழி நின்று மிகச் சிறப்பாக ஆட்சி புரிந்தனர். இதனை,

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்"[11]
(புறம்.பா.55;12)

என்ற பாடல் வரியால் உணரலாம்.

ஒரு குழந்தையைப் பேணும் தாயைப் போன்று தன் குடிமக்களைப் பாதுகாத்தல் அரசனின் கடமையாகக் கருதப்பட்டது. இதனை,

"குழவி கொள்வாரின் குடிபுறந் தந்து
நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்"[12]
(பதிற்.6-ம்பத்து.பா.வரி.9-10)

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரோடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்பு மதி"[13]
(புறம்.பா.5;5-7)

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

## போர்ப் பண்பாடு

சங்ககாலத் தமிழரிடையே போர் தவிர்க்க இயலாததாகவும் காலத்தின் கட்டாயத் தேவையாகவும் கருதப் பட்டது. போர் புரிவதில் கூட அறத்தைப் பின்பற்றி வாழ்ந்தனர். போரில் தோல்வியுற்று ஓடும் படைவீரன்; மீது ஆயுதங்களை எய்யமாட்டார்கள் என்பதை அறியமுடிகிறது. இதனை,

"ஒடுங்காத் தெவ்வர் ஊக்கறக் கடைஇப்
புறக்கொடை எறியார் நின் மறப்படை"[14]
(பதிற்.4-ம் பத்து,பா.31;32-33)

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

மேலும் போரில் புறங்காட்டி ஓடாத நிலை
"ஓடாப் பூட்கை ஒண்பொறிக் கழற்கால்"[15]
(பதிற்.3-ம்பத்து,பா.30;40)

என்ற பாடல் வரியால் தெளியலாம்.

"எறியா ரெறிதல் யாவண தெறிந்தோர்
எதிர்சென்றிதலுஞ் செல்லானதனால்"[16]
(புறம்.பா.301;8-9)

என்ற பாடல் வரிகள் மூலம் தனக்கு நிகரான படைபலம் உடையாரையே எதிர்க்கும் பண்புடையவர்களாக விளங்கினர்.

## நட்புறவு

சங்கத் தமிழரின் பண்பாட்டில் சிறந்து விளங்குவது நட்பு. ஏனெனில் ஒருவன் ஈட்டுவதற்கு நட்பைப் போல அரிய பொருள் இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை. அதை ஈட்டிவிட்டால் பிறர் புகமுடியாதபடி நம்மைக் காப்பதற்கு அரிய பொருள் வேறு எதுவுமில்லை.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் நீத்தான் உயிர்நீக்கும் முன் தன் நட்பின் திறத்தை வெளியிட விரும்பியபோது ஆந்தையார் பாண்டிய நாட்டுப் பிசிறி என்னும் ஊரினரே. ஆயினும் அவர் என் உயிரை விரும்பும் உன்னத உயிர் நண்பர். செல்வம் மிகுந்த காலத்தே அவர் என்னைக் கண்டதில்லை அல்லல் காலமாகிய இப்போது என்னைக் காண்பதற்கு வருவார். ஆகவே தனக்குப் பக்கத்தில் வடக்கிலிருந்து உயிர்விட அவருக்கும் ஓரிடம் ஒழித்து வைப்பீராக என்றார். இதனை,

"பிசிரோ னென்ப வென்னுயிரோம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லல் காலை நில்லலன் மன்னே"[17]
(புறம்.பா.215;7-9)

எனவும்,

**"காதற் கிழமையும் உடையவன் அவன் தலை**
**இன்னதோர் காலை நில்லலன்**
**இன்னே வருகுவன் ஒழிக்கு அவற்கு இடமே"[18]**
**(புறம்.பா.216;10-12)**

என்ற பாடல் வரிகளால் தெளியலாம்.

## மனித நேயம்

மனிதரிடத்தும் பிற உயிர் களிடத்தும் காட்டப்பெறும் நேயத்தையே மனிதநேயம் எனக் கருதுவர். சோழமன்னன் பெருஞ்சிக்கல் கிழான் என்னும் குறுநில மன்னனின் மகளை கொடை வேண்டினான். மகள் தர மறுத்தான் சிக்கல் கிழான் போர் மூண்டது. கிழானோ பணிய மறுத்தான். இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மையினைப் பெறாவிட்டால் இவ்வூரே அழிந்துபட நேரிடுமே என்று வருந்தினார் மருதன் இளநாகனார். இதனை,

**"............மழைக்கண் அம்மா அரிவை**
**மரம்படு சிறுதீப் போல**
**அணங்கா யினள் தான் பிறந்த ஊர்க்கே"[19]**
**(புறம்.பா.349;5-7)**

என்ற வரிகள் மூலம் மனிதநேயத்தின் மீது கொண்ட பற்று புலப்படுகிறது.

## விருந்தோம்பல்

இல்லற மகளிரின் இன்றியமையாத பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல். விருந்தினர் முகம் கோணாத வகையில் உள்ளதைப் பகிர்ந்துண்டு மகிழ்ந்தனர். இதனை,

**"தவச் சிறியதாயினும் மிகப்பலர் என்னாள்**
**நீள் நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்**
**இற்பொலி மகடூஉ"[20]**
**(புறம்.பா.331;7-9)**

என்ற பாடல் வரிகளால் உணரலாம்.

இரவுப் பொழுதாயினும் வந்த விருந்தைக் கண்டு மகிழ்கின்ற இயல்பைக் கொண்டவள் தலைவி. இதனை,

**"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள்"[21] (நற்.பா.142;9-11)**

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

## முடிவுரை

பழந்தமிழர் மேற்கொண்டொழுகிய பண்பாடு, இல்லறப் பண்பாடு, பிறரிடத்து அன்பு செலுத்தும் பண்பு, அறத்தின் வழி நின்று ஆட்சி புரிந்த தன்மை, நட்புறவின் மேன்மை, விருந்தோம்பல் பண்பு, போரில் அறத்தைப் பின்பற்றிய நிலை முதலான வற்றை சங்க இலக்கியத்தின் வழி அறிய முடிகிறது. மேலும் புலவர்கள் போரைத் தடுக்கவும், அதனால் நாட்டில் அமைதி நிலவவேண்டும் எனக் கருதி மனிதநேய உணர்வுடன் பாடுபட்டனர் என்பதையும் அறியமுடிகிறது.

# பழந்தமிழர் பண்பாடு

**முனைவர் சு சுதா,**
உதவிப் பேராசிரியர்,
என்.பி.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

தமிழ் மக்களின் பண்பாடே தமிழர் பண்பாடாகும். வரலாற்று ஆய்வாளர்களும், மானுடவியல், புவியியல் ஆராய்ச்சியாளர்களும் முதன் முதலில் மக்களினம் தோன்றிய பகுதியாக தென்னிந்தியாவை குறிப்பிடுகின்றனர். புவியியல் கூறுகளும், நில அமைப்புகளும் இதன் முக்கிய கூறுகளாக அமைகின்றன. பழங்கால மனிதர்கள் நாடோடிகளாக தனித்தனியாக வாழ்ந்தனர். பின்பு அச்ச உணர்வு காரணமாகவும் ஓரிடத்தில் கிடைத்த உணவுப்பொருட்கள் காரண மாகவும் ஓரிடத்தில் கூடி வாழ ஆரம்பித்தனர். பின்பு மனிதர்கள் தங்களது நுண்ணறிவினால் ஆடு, மாடு, எருது, நாய் போன்ற விலங்குகளைத் தம்முடன் இணைத்து வாழ கற்றுக் கொண்டனர். விளைச்சலுக்காக சமவெளிப் பகுதிகளை உருவாக்கினர். தங்களுக்குள் ஒரு தலைமையை உருவாக்கி கோ, கோன் என்று பெயரிட்டு அழைத்தனர். சிறுசிறு கூட்டங்களாக வாழ்ந்த பண்டைய தமிழர்கள் தங்கள் பாதுகாப்பிற்காக உருவாக்கிய குழுத் தலைமையிலிருந்து அரசமுறை தோன்றி வளர்ந்ததாக கூறப்படுகின்றன.

## ஆட்சிமுறை

பழந்தமிழகத்தில் குன்றுகளும், மலைகளும் ஆழ்ந்திருந்த நிலப் பரப்புகளைப் பல பெருநில மன்னர்களும், பல குறுநில மன்னர்களும் ஆட்சி புரிந் திருக்கின்றனர். அவர்கள் நற்குடியில் பிறந்தவர்களாகவும் கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை உடையவர்களாகவும், தன்னலம் இல்லாதவர்களாகவும் காட்சியளிக்கின்றனர்.

> “அதனால் நமரெனக் கோல்கோடாது
> பிறர்எனக் குணங் கொல்லாது
> ஞாயிற் றன்ன வெந்நிரல் ஆண்மையும்
> திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்
> வானத்து அன்ன வன்மையும் மூன்றும்”
> (புறம் பா - 55)

என்று மருதன் இளநாகனார் பாண்டியன் இளவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனின் ஆட்சிச்சிறப்பை எடுத்துரைக்கின்றார்.

## அவையோரும் ஆளுமையும்

அரசனின் அவையில் புலவர் களும், அறிஞர்களும், அதிகாரிகளும் அரசனுடன் இருந்தனர். மன்னர், அரசியோடு அவையில் வீற்றிருக்கும் அதிகாரம் பெற்றிருந்தார். அரசின் அதிகாரமும் உரிமைகளும் நெறிப் படுத்தப்பட்டு சிறந்த நல்லாட்சி புரிய வழிவகை ஏற்படுத்தப்பட்டதை

> “ஐம்பெரும் குழுவும் என்பே ராயமும்
> ஆரச குமரரும் பரத குமரரும்
> கவர்பரிப் புரவியர் களிற்றின் தொகுதியர்”
> (சிலம்பு 1.5.157)

என்று சிலப்பதிகாரம் எடுத்துரைக் கின்றது. அந்த வகையில் சிறந்த

அரசனின் ஆட்சியின் கீழ் இருந்த குடிமக்கள் அம்மன்னனையே உயிராக எண்ணினர்.

### வாணிகம்

தமிழர்கள் அயல் நாட்டவர்களுடனும், கீழை நாட்டவர்களுடனும் சிறப்பான வாணிகத் தொடர்பைக் கொண்டிருந்தனர். சேர நாட்டுத் துறை முகங்களுள் முசிறியும், சோழ நாட்டு துறைமுகங்களுள் காவிரிபூம்பட்டினமும், பாண்டிய நாட்டுத் துறைமுகங்களுள் கொற்கையும் சிறந்த வாணிக இடங்களாக விளங்கின. தமிழகத்தில் அரிசி, அகில், ஆடைகள், ஆரம், இஞ்சி, இலவங்கம், ஏலம், கருங்காலி, மிளகு, முத்து ஆகியன ஏற்றுமதி செய்யப்பட்டன.

**"பொன்மலிந்த விழுப்பண்டம்**
**நாடு ஆர நன்கு இழிதரும்**
**ஆடியல் பெருநாவாய்"**
**(மதுரைக்காஞ்சி பா. 81-83)**

என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது. மேலும் தமிழர்கள் அறநெறி தவறாமல் பண்டமாற்று அடிப்படையில் வாணிகம் செய்திருக்கின்றனர். இது அவர்களின் வாணிகச் சிறப்பை எடுத்துரைப்பதாக இருக்கின்றது.

### கல்வியும் கலைகளும்

தமிழர்கள் தங்களது அறிவையும், ஒழுக்கத்தையும் வளர்த்துக் கொள்ள கல்வியை கருவியாக பயன்படுத்தினர். தனிமனிதனின் வாழ்வையும் நாட்டின் வாழ்வையும் உயர்த்தக் கூடியதாக கல்வி திகழ்கிறது. இத்தகைய கல்வியை

**"பிச்சை புக்காகினும் கற்றல்**
**மிகவினிதே"**
**- (இனியவை நாற்பது, பா.1)**

என்று இனியவை நாற்பது எடுத்துரைக்கின்றது. கல்வி இவ்வுலக இன்பத்தைத் தரும். பிறருக்கு கொடுப்பதால் குறையாது. புகழைப் பரவச் செய்யும், அறியாமை இருளைப் போக்கும் மருந்தாக உள்ளதை,

**"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்**
**தம்மை விளக்குமால் தாம்உளராக் கேடின்றால்**
**எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோய்**
**மம்மர் அறுக்கும் மருந்து"**
**- (நாலடியார், பா.132)**

என்கிறது நாலடியார். ஆக கல்வி என்பது பண்பாட்டை வளர்த்து நற்பண்புகளை வளர்க்கக்கூடியதாக இருக்கின்றது என்பதை இதன் வாயிலாக அறியமுடிகிறது.

### கலைகள்

மனிதனுடைய நல்வாழ்விற்கு உதவுகின்ற எல்லாத் தொழில்களும் கலைகளாகக் கருதப்படுகின்றன. மனிதனுடைய உணர்ச்சியைத் தூண்டி இன்பத்தை அளிக்கின்ற பண்பு கலைகளுக்கு உண்டு. வீடுகள், மாளிகைகள், அரண்மனைகள், மண்டபங்கள், கோயில்கள் போன்றவை கட்டிடக் கலையின் சிறப்புகளை எடுத்துரைக்கின்றன. பல்லவர் காலத்தில் குடைவரைக் கோயில்களில் பாறைச் சுவர்களின் மேற்கூரையில் ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தன. புதுக்கோட்டையிலுள்ள சித்தன்னவாசல் ஓவியங்களும், தஞ்சைப் பெரிய கோயில் ஓவியங்களும் ஓவியக் கலைக்கு சிறந்த சான்றுகளாக திகழ்கின்றன. மணிமேகலை காப்பியம் அழகிய பூங்காவை ஓவியமாக காட்டுகிறது.

**"வித்தக ரியற்றிய விளங்கிய கைவினைச்**
**சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே**
**ஒப்பத் தோன்றிய உவவனம்"**
**- (மணிமேகலை, பா.3: 167-169)**

இவ்வாறு ஓவியங்கள் காட்சிப் படுத்தப்படுதலை இலக்கியங்கள் உவமை, உருவகம், படிமங்கள் மூலமாக காண்கின்றன.

கல்லையும் கசிந்துருகச்செய்யும் பண்பு இசைக்கலைக்கு உண்டு. ஆடலும் பாடலும் இசையோடு சேர்ந்து அமைவதை,

“யாழும் குழலும் சீரும் மிடறும்
தாழ்குரல் தண்ணுமை பாடலொடு இவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து
------------------------------------
கவியது குறிப்பும் ஆடல் தொகுதியும்
பகுதிப் பாடலும் கொளுத்தும் கலை”
- (சிலம்பு அரங்கேற்றுக்காதை, பா.26-34)

என்கிறது சிலப்பதிகாரம்.

சிலம்பின் இந்த வரிகள் ஆடல், பாடல், இசை என்னும் மூன்று கலைகளும் சேர்ந்து இயங்குவதை எடுத்துரைக்கின்றது. இவை போன்றே நடனக்கலை, நாடகக் கலை, மருத்துவக் கலை, சமயக் கலை, தத்துவக் கலை, இலக்கிய கலைகளும் அமைந்து தமிழரின் கலைத்திறனை வெளிப்படுத்துகின்றன.

## உணவு முறைகள்

சுவை மிகுந்த உணவுப் பொருட்களை பழந்தமிழர்கள் உண்டிருக்கின்றனர். அவரவர் வாழ்ந்த நில அமைப்புகளுக்கு ஏற்ப அவர்களின் உணவு பழக்கங்களும் வேறுபட்டன. மருத நிலத்தில் பலவகையான நெல் வகைகள் பயிரிடப்பட்டன. நெல்லைப் புழுக்கிக் காயவைத்து இரும்பு உலக்கையால் குத்தி அரிசியாக்கியதையும், நெற்சோற்றோடு நண்டு கறியையும் சேர்த்து உணவு உண்டதை,

“இருங்காழ் உலக்கை இரும்புமுகம் தேய்த்த
அவைப்புபாண் அரிசி அமலை வெண்சோறு
சுவைத்தான் அலவன் கலவையொடு
பெறுகுவீர்”
- (சிறுபாணாற்றுப்படை, பா.193-196)

என்று கூறுகின்றது சிறுபாணாற்றுப் படை. குறுந்தொகையில் புதிதாக திருமணம் ஆன தலைவி தயிர் உணவு சமைத்து பரிமாறியதை

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்
விரல்” - (குறுந்தொகை, பா. 167)

என்று குறிப்பிடப்படுகிறது. பழந் தமிழர்களின் உணவு பழக்க வழக்கம் என்பது பெரும்பாலும் மரக்கறி உணவோடு புலாலும் உணவாக இருந் திருக்கின்றது. இதன் வாயிலாக மக்கள் தங்களது உடல்நலனைப் பேணக்கூடிய உணவு வகைகளை உண்டிருக்கின்றனர் என்பது புலனாகிறது.

## அணிகலன்கள்

பண்டைய தமிழர்கள் பல்வேறு வகையான அணிகலன்களால் தங்களை அலங்காரம் செய்திருக்கின்றனர். மகளிர் பொன்னரி மாலை, முத்து மாலை போன்ற கழுத்தணிகளை அணியும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர் என்பதை,

“நூலின் வலவா நுணங்கு அரில் மாலை
வால்ஒளி முத்தமொடு பாடினி அணிய”
- (பொருநராற்றுப்படை, பா. 161-162)

என்கிறது பொருநராற்றுப்படை. பண்டைய தமிழகத்துப் பெண்கள் ஆடைகளால் முழுவதும் மறைக்கப் படாத உடலை அணிகலன் பூண்டு மறைத்தனர் என்கின்றார் கே. கே. பிள்ளை (தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும், ப:178). இந்த வகையில் குழந்தைகளுக்கும், ஆண்களுக்கும் தனித்தனியான அணிகலன்கள் பயன்பாட்டில் இருந்ததாக இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. இவை தமிழர்களின் பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் எடுத்துரைப்பனவாக இருக்கின்றன.

## விளையாட்டுகள்

திணை வாழ்வியல் முறை களின் அடிப்படையில் அவரவர் களுக்கான விளையாட்டு முறைகள்

ஏற்படுத்தப்பட்டிருந்தன. குழந்தைகள் கிலிகிலியாடலை ஆட்டுதல், முக்காற் சிறுதேர் இழுத்தல் போன்ற விளையாட்டுகளை விளையாடியதாக சிறுபாணாற்றுப்படை எடுத்துரைக் கின்றது. சங்க காலத்து மகளிர் பொழுது போக்கு அம்சம் நிறைந்த புனலாடுதல், பந்தாடுதல், கழங்காடுதல், சிற்றில் இழைத்தல், ஓரையாடுதல், வண்டல் இழைத்தல் போன்ற விளையாட்டுகளை விளையாடியுள்ளனர். ஆடவர்கள் ஏறு தழுவுதல், நீர் துறைகளில் மூழ்கி மணல் எடுத்து வருதல் போன்ற விளையாட்டுகளில் ஆர்வம் காட்டி யுள்ளனர். ஏறு தழுவுதல் முல்லை நிலத்திற்குரிய வீர விளையாட்டாக கருதப்பட்டதை,

"சிறு அருமுன் பின்னோன் கணிச்சிபோல கோடுசீஇ
ஏறுதொழு புகுத்தனர்"
- (கலித்தொகை, பா. 101)

என்கிறது கலித்தொகை. வீரம் மிகுந்த ஆடவர்களையே பெண்கள் விரும்பியுள்ளனர் என்பது இதன் வாயிலாக வெளிப்படுகிறது.

## அக வாழ்வியல்

மக்களின் அக வாழ்வியல் கூறுகள் களவு, கற்பு என்னும் இருவகைகளில் அமைகின்றன. கற்பு வாழ்விற்கு அடித் தளமாக அமைவது களவு வாழ்வாகும்.

"உளமலி காதல் களவு எனப்படுவது
ஒரு நான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத்து இயல்பினது என்ப"
- (அகப்பொருள் விளக்கம், நூ. 117)

என்கின்றார் நாற்கவிராச நம்பி. களவு வாழ்வு கந்தர்வ மணத்தோடு ஒத்து காணப்படுகிறது. உள்ளம் மகிழ்ச்சி அடைவதற்குரிய காரணமான அன்பு என்பது அன்பின் ஐந்திணையில் அமைகிறது.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கோளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியை
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"
- (தொல். கற்பியல், நூ -1)

என்கிறது தொல்காப்பியம். இந்த வகையில் தமிழரின் மணவாழ்க்கை முறை அமைந்திருந்ததாக இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

தமிழர்களின் வாழ்வியல் கூறுகளான ஆட்சிமுறை, வாணிகம், கல்வியும் கலைகளும், உணவு முறைகள், அணிகலன்கள், விளையாட்டுகள், அக வாழ்வியல் முறைகள் போன்றவை அவர்களின் கலாச்சாரத்தையும், பண் பாட்டையும் எடுத்துரைப்பனவாக இருக்கின்றன.

# சங்க இலக்கியங்கள் உணர்த்தும் பண்பாடும் கலைகளும்

**முனைவர் செல்வத்தரசி,**
தமிழ்த்துறை,
செந்தமிழ்க்கல்லூரி,
மதுரை.

**கோ. சுந்தரி,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ்க்கல்லூரி,
மதுரை

## நோக்கம்:

தமிழ்மொழியில் எண்ணற்ற இலக்கிய, இலக்கணங்கள் உள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதத் தொடங்குபவர்கள் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலின் ஏற்றத்தை எழுதியபின் சங்க இலக்கியத்தை எழுதத் தொடங்குவர்.

சங்ககாலத் தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர் என்பதை உணர்த்துவதில் சங்க இலக்கியங்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. எட்டுத் தொகை, பத்துப்பாட்டு நூல்களில் இடம் பெற்றுள்ள தமிழர்களின் பண் பாட்டையும், அவற்றுள் கலைகள் எவ்வாறு இடம் பிடித்துள்ளன என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

## நாகரிகமும் – பண்பாடும்:

பண்பா என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகின்றது. பண்பாடு பழக்க வழக்கங்களும், நம்பிக் கைகளும் சடங்குகளும் அடங்கிய தொகுப்பாக உள்ளது. பண்பாடு என்பது மக்களைப் பண்படுத்தவும், அவர்களின் வாழ்க்கையைப் பண் படுத்தவும் உருவான ஒன்றாகக் கருதப் படுகின்றது. ஆங்கிலத்தில் ‘பண்பாடு’ என்றும் பெயர்ச் சொல்லின் சிறப்பாக நிலப்பண்பாட்டையும், உளப் பாட்டையும் குறிக்கின்றது – என்று பகத்வத்சல பாரதி கூறுகிறார்.

வள்ளுவர் பெருந்தகையும் இதனைப் பற்றி கூறுகையில்

“பெயக் கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரீகம் வேண்டு பவர்”

எனக் கூறுகிறார்.

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியத்திலும் மனிதன் பண் பாட்டோடு வாழ்ந்த வரலாறுகள் காட்டப்படுகினறன. தன்னுயிரைப் போன்று மன்னுயிரைக் காத்து வற்றார் மற்றார் என்னாது, இன்னார் மனிய என நோக்காது ‘தமர்’ எனக் கோல் கோடாது பிறர் எனக் குணங் கொள்ளா உயரிய பண்பாட்டில் வாழ்ந்தார்கள் என்பதை இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன.

## சங்க காலத்தில் தமிழ்க் கலைகள்:

‘கலை’ என்பது பல்பொருள்களைக் குறிக்கும் ஒருசொல் ‘கலை’ என்பது பெயர்ச் சொல்லாக இருக்கும் பொது இசைக்கலை, நாடக்ககலை, சிற்பக்கலை, கட்டடக் கலை எனப் பலவகைக் கலைகளைக் குறிக்கும். கலையினை ‘மனத் திறத்தின் வெளிப்பாடு என்னும் பொருளில் சிலம்பு குறிக்கின்றது. இக்கலைகள் சங்க கால மக்களின்

பண்பாட்டோடு பின்னிப் பிணைந்து இருத்தலைக் காணலாம். முத்தமிழின் நடுப்பகுதி இசைத் தமிழாகும். இசைப் போரையும், கேட்போரையும் உணர் வினால் இசைவிப்பது 'இசை' எனப்படும். இசை, ஏழ்வகை அடிப்படைகளை உடையது என்று முதன் முதலில் கண்டறிந்தவர்கள் தமிழர்களே.

## சங்க இலக்கியத்தில் இசை:–

சங்க இலக்கியத்தில் தோல் கருவி, தொளைக்கருவி, கஞ்சக் கருவி, நரம்புக்கருவி என நால்வகை இசைக் கருவிகள் இருந்தன. ஒவ்வொரு திணைக்கும் தனித்தனிப் பண்கள் பகுக்கப்பட்டிருந்தன.

குறிஞ்சி – குறிஞ்சிப்பண்

முல்லை – சாதாரிப்பண்

மருதம் – மருதப்பண்

நெய்தல் – இரங்கல்பண்

பாலை – பஞ்சுரப்பண் என்பன.

புண்பட்ட வீரர்களைப் பேய்களிடமிருந்து காப்பதற்குக் காஞ் சிப் பண்ணைப் பாடினர். விளரிப் பண்ணைப் பாடி நரியை வெருட்டினர் என்று புறநானூறு (281, 291) புகலுகிறது. யாதோர் மருதப் பண்ணைப் பாட பொழுது விடிந்தது என மதுரைக்காஞ்சி (657, 658) பேசுகின்றது.

மாலை நேரத்தில் செவ்வழிப் பண்ணை ஆகுளி, முழவு என்றும் கருவிகளோடு இசைந்ததைத்

**"திவவு மெய்ந்நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோடு ஒன்றி
நுண்ணீர் ஆகுளி இரட்டப் பலவுடன்"**

– என்று மதுரைக் காஞ்சி (604 – 606) கூறுகின்றது.

**"அருளா யாகலோ கொடிதே இருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக"**

– எனப் புறநானூறு (புறம் 144) புகலுகிறது.

## சங்க காலத்தில் ஆடற்கலை:–

**"வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்
நாடுபல கழிந்த பின்னற"**

– என்று பெரும் பாணாற்றுப்படை (370 – 371) பகருகின்றது.

விழாக் காலங்களில் மகளிர் கயிற்றின் மேல் நின்றாடும் ஒரு வகை ஆட்டம் பற்றி குறிஞ்சிப்பாட்டில் (192 – 194)

**"சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி
ஆரிக்கூட்டு இன்னியம் கறங்க ஆடுமகள்
கயிறூர் பாணியில் தளரும் சாரல்"**

– என்று குறிப்பிடப்படுகின்றது.

**"ஆடல் மகளிர் பாடல்கொளப் புணர்மார்
தன்மையின் திரிந்த இன்குரல் தீந்தொடை
கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை
நிறுப்ப"**

என்ற நெடுநல்வாடை (67 – 70) வரிகள் வெளிப்படுத்துகின்றன.

போர் செய்வதற்குப் போர்க் கோலம் கொண்டு வந்த அவுணர்கள் மோகித்து விழுந்து இறக்கும்படி திருமகள் ஆடிய கூத்துபாவைக் கூத்து.

**"செருவெங் கோலம் அவுணர் நீங்கத்
திருவின் செய்யோள் ஆடிய பாவை"**

– என்ற அடிகள் மூலம் அறியலாம்.

## சங்க காலத்தில் ஓவியக்கலை:–

பரிபாடலில்,

மதுரைக்கு அடுத்துள்ள திருப்பரங்குன்றின் மேல் முருகப் பெருமானுக்குக் கோயில் இருந்தது. அந்தக் கோயிலைச் சேர்ந்த மண்டபத்தில் ஓவியங்கள் எழுதப்பட்ட மண்டபம் இருந்தது. அஃது எழுது எழில் அம்பலம்

எனப் பெயர் பெற்றிருந்தது. அந்த ஓவியச்சாலை காமவேளின் ஆயுதப் பயிற்சி சாலைபோல் இருந்ததாம். இதனை,

"நின் குன்றத்து
எழுதெழில் அம்பலம் காமவேள் அம்பின்
தொழில் வீற்றிருந்த நகா"

– என்று பரிபாடல் (18) குறிப்பிடுகின்றது.

பூம்புகார் நகரத்தில் மாட மாளிகையில் பல்வேறு சித்திர வேலைப் பாடுகள் பொருந்தி வெண்கோயில் அழகுடன் நிற்பதை பட்டினப்பாலை இவ்வாறு குறிப்பிடுகின்றது.

"தேரோட்டத் துகள் கெழுமி
நீராடிய களிறு போல
வேறுபட்ட வினைஓ வத்து
வெண் கோயில் மாசூட்டும்"

தலையாலங்காலத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன் அரண்மனையில் செம்பினால் செய்யப்பட்ட நெடுஞ்சுவர்களில் அழகிய பூங்கொடி உருவங்கள் ஓவிய மாக வரையப்பட்டன என நக்கீரர் குறிப்பிடுகின்றார். இதனை,

"வெள்ளி யன்ன விளக்கும் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரள் திண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ ஒரு கொடி வளைஇக்
கருவொரு பெயரிய காண்பின் நல்லில்"

என்று விவரிக்கின்றார்.

## சங்க நூல்களில் சிற்பக்கலை:–

கோயில்கள் கட்டும்போதும் சிற்பங்கள் அமைக்கும் போதும் சிற்ப நூலறிந்த சிற்பிகள் நாள் குறித்து, நாழிகை பார்த்து, கயிறிட்டு அளந்து நான்கு திசைளிலும் தெய்வங்களை வணங்கிக் கோயில் கட்டினர். இதனை,

"ஒருதிறம் சாரா வரைநாள் அமையத்து
நூலறி புலவர் நுண்ணிதின் கயிறிட்டுத்
தேஎம் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்பமனை
வகுத்து"

– என்று நெடுநல்வாடை நவில்கின்றது.

நற்றிணைக்குக் கடவுள் வாழ்த்தைப் பாடிய பெருந்தேவனார் திருமாலின் உருவத்தை,

"மாநிலம் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை யாக
விசும்புமெய் யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரியோனே"

– என்று வருணிக்கிறார்.

## கட்டிடக்கலை:–

மனிதனின் தேவை, ஆற்றல் அழகுணர்ச்சிகளின் அடிப்படையில் எழுந்ததே கட்டிடக்கலை. மரங்களும், விலங்குகளும் மிகுந்த தொடக்க காலத்தில் மனிதர்கள் வாழிடங்களை அமைப்பதற்காக காடுகளையும், மரம், செடி, கொடிகளையும் களைந்து இடம் உண்டாக்கிக் கொள்ள வேண்டிய நிலையில் இருந்தான். காட்டினை அழித்து நாட்டினை உருவாக்கினான். மக்கள் வளமாக வாழ குளங்களை அமைத்துக் கொண்டான். இதனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார்

"காடு கொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம் பெருக்கு"

– என்று பட்டினப்பாலையில் (283 – 284) பாடுகின்றார்.

## முடிவுரை:–

கலை என்பது உணர்வின் வெளிப்பாடு. அது உணர்வை வெளி யிடுவதுடன் பிறருக்கு அவ்வுணர்வை ஊட்டும் பெருமை உடையது என்பர் டால்ஸ்டாய். கலை கருத்தின்

உறைவிடம். அழகின் பிறப்பிடம். மகிழ்ச்சியின் மாட்சி. நாகரிகத்தின் ஒளிவிளக்கு. பண்பாட்டின் உரைக்கல் என்று குறிப்பிடுவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த கலையில் தமிழர்கள் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தனர். பல அரியகலைகளைப் படைத்தனர். கலை உணர்வு கொண்ட தமிழர்களின் பண்பாட்டைத் தெரிந்து கொள்வதற்கு அவை அடிப்படைச் சான்றுகளாக அமைந்துள்ளன.

தமிழ் கலாச்சாரம் மொழி, இலக்கியம், இசை, நடனம், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை மரபு, சடங்குகள் போன்றவற்றின் மூலம் ஊடகங்கள், தத்துவம், சமயம் போன்றவற்றை வெளிப்படுத்துகிறது. தமிழர் பண்பாடு பலகாலமாக பேணப்பட்ட, திருத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் குறித்து நின்றாலும் அது தொடர்பான மாற்றத்துக்கு உட்பட்டு நிற்கும் ஓர் இயங்கியல் பண்பாடே என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

## துணைநூற் பட்டியல்:–


தமிழர் நாகரிகமும் பண்பாடும் – டாக்டர் சு. தட்சிணாமூர்த்தி.

சங்ககாலத் தமிழர் வாழ்வு – இராமநாதன் செட்டியார்

தமிழர் வாழ்வியல் – இலக்குவனார் கே.வி.

எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும் – சிதம்பரனார், சாமி

புத்துப்பாட்டும் தமிழர் பண்பாடும் – சிதம்பரனார், சாமி

# சங்க இலக்கியங்களின் பெண்ணியச் சிந்தனைகள்

ஆ.சுரேஷ்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை,
என்பிஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
நத்தம்.

## முன்னுரை:

விலங்குகளோடு ஒரு விலங்கினமாக மனிதன் வாழ்ந்து வந்த காலகட்டத்தில் ஆணும் பெண்ணும் எந்த ஒரு வரைமுறையும் இல்லாமல் வாழ்ந்து வந்தனர் அதேபோல் பெண் தொடக்க காலத்தில் சுதந்திரமாக அனைத்திற்கும் உரிமை உடையவளாக இருந்தாள் அத்தொடக்க காலம் முதல் அடிமை நிலையில் இருக்கின்ற இக்காலம் வரை பெண்களின் நிலையினை வரலாற்றுப் பார்வையில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## தொடக்க காலம்

ஆதி மனிதன் தன் உடல் வலிமையால் விலங்குகளை வேட்டை யாடி உண்டபோது தாயே (பெண்ணே) எல்லாவற்றிற்கும் முதன்மையானவளாக சிறந்திருந்தாள் என்பதை "குழந்தைகளைப் பெற்று பராமரிப்பதனால் மட்டு மல்லாது வாழ்வின் இன்றியமையாத பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் உற்பத்தி யாளராகப் பெண்கள் திகழ்ந்ததனால் ஆதி முதல் சமூக அமைப்பு தாய் வழி சமூகமே என்று 'நொ பேட் பிறிவோல்ட்' என்னும் மானிடவியலாளர்" சாந்தி சச்சிதானந்தன் குறிப்பேட்டில் இருந்து அறிய முடிகிறது.

## பெண்ணியம் குறித்து விளக்கங்களும்:

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல
மாதவ...
செய்திட வேண்டும் அம்மா!"

எனக் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பெண் குலத்தைச் பேசுகிறார்அடக்கம், தியாகம், முதலியவற்றை ஒன்றாக்கி அதற்கொரு பருஉடல் தந்து பெண் என்னும் தெய்வப் பிறவியை உருவாக்கினான் இறைவன் என்பது திரு.வி.க. கண்ட முடிவு. அத்தகைய பெண்ணினம் உரிமை பெறுவதற்கு உருவாக்கப்பட்ட பெண்ணியம் பற்றிய பெண்ணியம் குறித்த விளக்கங்களையும் ஆய்வாக அமைந்துள்ளது. ஐங்குறு நூற்றில் பெண்ணியம் என்பதால் இப்பெண்ணியம் குறித்த விளக்கங்கள் அவசியம் தேவை என்ற கருத்திலும் இவ்வியல் அமைந்துள்ளது.

## பெண்களின் விளக்கம்:

'பெமினிசம்' என்ற ஆங்கிலச்சொல் பெமினா என்ற லத்தின் மொழிச் சொல்லில் இருந்து மருவி வந்ததாகும். பெமினா பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள என்பது பொருளாகும். பெமினிசம் என்ற ஆங்கிலச் சொல் பெண்ணின் உள்ளடக்கியதாக இருப்பினும் ஆண் ஆதிக்கத்தை எதிர்க்கும் எதிர்ப்புக்கு குரலாகவே கையாளப்பட்டு வந்துள்ளது. பெண்ணியம் என்ற சொல்லை உருவாக்கியவர்களும் அதே பொருளில் தான் இச்சொல்லையும் கையாளுகின்றனர் இச்சொல்லில் உள்ள

இயம் என்ற விகுதியே Ism என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவம் தான் தமிழ் மரபின்படி ஒரு கருத்தாளர் அல்லது கருத்து சார்ந்த கோட்பாடு 'இயம்' என்றமையால் 'அம்' என்ற விகுதி கொண்டே சுட்டப்பட்டது.

வள்ளுவம், இளம்பூரணம், பேராசிரியம், நச்சினார்க்கினியம், போன்ற அச்சொல் அமையும் ism வந்த பின்பே அது இயம் ஆயிற்று எனலாம் தேவநேயப் பாவனாராலையே தமிழில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விதி சொல் ஆகிவிட்டது பார்ப்பனியம் தமிழில் பெருவழக்கானதைக் காணலாம் அவ்வகையில் பெண்ணியம் என்ற சொல்லையும் தமிழ்ச் சான்றோர் ஏற்றுக் கொள்வார்.

### பெண்ணின் திறமைகள்:

பெண்ணியத் திறனாய்வு முதலில் பெண்களின் அடிமைப்பட்ட நசுக்கப் பட்ட நிலையினையும் அதிலிருந்து அவர்கள் விடுதலை அடைதலும் பெண்களின் முன்னேற்றம் மற்றும் பெண்களை அடிமைகளாகப் படைத்துக் காட்டும் சமுதாயத்தில் அடிமையை உடைத்து அவர்களை முன்னேற்றம் அடையச் செய்தல் போன்ற பெண்ணியத் திறனாய்வுகளும் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு பெண்ணிய திறனாய்வாகவே அமைகிறது. பெண்ணிய இலக்கியத் திறனாய்வு பெண் விடுதலை இலக்கியத்தின் செயற்பாடுகளும் ஒன்றாக கருதப்படுகிறது. பெண்ணிய இலக்கிய திறனாய்வில் பெண்களின் படைப்புக் களை ஆராயப்படுகிறது ஆனால் இருபாலரின் கருத்துக்களின் ஒற்றுமை வேற்றுமைகளின் சொல்லாடல்களையும் இத்திறனாய்வு ஆராய்கிறது. இலக்கி யங்களில் விரித்துறைகளுக்கும் பெண் களின் சமூகப் பிரச்சனைகள் குடும்பம் சார்ந்த பிரச்சனைகள் பெண்களுக்குரிய பிரச்சனைகள் என்று பெண்ணியப் பிரச்சனைகளைப் பெண்ணியத் திறனாய்வு அமைகிறது.

### பெண்ணிய அணுகுமுறை :

பெண்ணிய அணுகுமுறை பல வகையாக இருப்பினும் அவற்றில்

1. மிதவாதப் பெண்ணியம்
2. சமதர்மப் பெண்ணியம்
3. தீவிரவாதப் பெண்ணியம்

என்று மூன்று அணுகுமுறைகள் முக்கியத்துவம் பெறுகிறது.

### மிதவாதப் பெண்ணியம்:

மிதவாதப் பெண்ணியம் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றியது இவர்களை தாராள வாதப் பெண்ணியம் என்றும் அழைத்தனர் மேற்கத்திய தொடக்க காலப்பெண்ணியம் சமத்துவம் போன்றவற்றை சட்ட திருத்தங்கள் வாயிலாகப் பெற்றுவிட்டால் பெண்கள் உரிமை பெறலாம் என்றும் இப்ப எண்ணியம் நம்பியது "மிதவாத பெண்ணியலாளர், குடும்ப அமைப்பை அப்படியே ஏற்றுக்கொண்டு சமூக பழக்க வழக்கங்களில் மாறுதல்களைக் கொண்டுவர விரும்பினர் இவர்கள் சமூக நிறுவனங்கள் மனப்போக்கு சமூக அமைப்பு ஆகியவற்றில் குடும்ப அமைப்பை பற்றி ஏதும் சிந்திக்க வில்லை சட்டங்களின் தொகுதி சமூகத்தை மாற்றிவிடும் என நம்பினர் அடிப்படையான மாற்றம் தேவை என்பதை உணரவில்லை" என்ற தேவதைத்தா அவர்கள் மிதவாத பெண்ணியம் குறித்து விளக்கம் தருகிறார்.

### 2. சமதர்மப் பெண்ணியம் :

சமதர்மப் பெண்ணியம் என்பது இனம் மற்றும் பால் வேறுபாட்டை ஒழிப்பதை நோக்கமாக கொண்ட

இயக்கமாகும் பெண்கள் ஆண்களைப் போல பொது வேலைகளில் ஈடுபட்டு குடும்ப அமைப்பை அழிக்க வேண்டும் என்பதை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டிருந்தது சமதர்ம பெண்ணியம் ஆண்களை நேரடி எதிரிகளாக கருதாமல் அவர்களை எச்சரிக்கை செய்கின்றது ஆண்கள் தந்தை வழி சமூக அமைப்பின் தலை வணங்கவும் குடும்ப தலைவர்களாகவும் முதலாளிகளாகவும் சொத்துரிமை உடையவனாகவும் வேலை வாங்குபவனாகவும் இருப்பதால் அவர்கள் பெண்களை விட உயர்ந்தவர்களாக சமூகத்தில் பங்கு வகுக்கின்றன ஆண்களிடம் காணப்படும் தன்னலம் மற்றும் சுரண்டல் ஆதிக்க மனப்பான்மை யையும் சமதர்ம பெண்ணிய வாதிகள் எதிர்கின்றனர் பெறுகின்றன பொருளாதார விடுதலையே சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை சமதர்ம பெண்ணியவாதிகளின் வாதங்களாக உள்ளது என்று சமதர்ம பெண்ணியம் குறித்து விளக்கம் தருகிறார்.

### 3. தீவிரவாதப் பெண்ணியம்:

தீவிரவாதப் பெண்ணியம் ஒரு புரட்சிகர இயக்கமாக நடைமுறையில் பெண்ணுரிமையை நிலைநிறுத்த வன்முறையில் தீவிரவாத செயல்களிலும் ஈடுபட்டனர் பெண்கள் உடற்கூற்றின் அடிப்படையில் நசுக்கப்படுகின்றனர் என்பதால் அவர்கள் தம்மை காத்துக் கொள்ளப் பாலியல் சுதந்திரம், கட்டுப்பாடற்ற விடுதலை காதல், பெண் ஓரினச்சேர்க்கை போன்றவற்றை மேற்கொள்வதை வலியுறுத்துகிறது தீவிரவாத பெண்ணியம் பெண் தலைமையை விரும்பியது ஆணை விட பெண் உயர்வானவள் என்று வாதிட்டது பாலியல் ரீதியான அடக்குமுறை புறக்கணிக்கப்பட்டு பாலியல் ரீதியான உழைப்பு பங்கிடும் பொருளியல் வர்க்க அமைப்பும் முக்கியத்துவம் படுத்தப்பட்டது அது சீர்திருத்தமாக அமைந்து போனதால் தீவிரவாத பெண்ணியவாதிகள் உடைத்தலை முதன்மை நோக்கமாக கொண்டனர் இதன் வேர் உயிர்கள் ரீதியா ன குடும்பம் என்பதால் குடும்பத்தையும் முற்றும் ஆக உடைக்க விரும்பினார்கள் என்று தேவதைத்தா தீவிரவாத பெண்ணியம் குறித்து விளக்கத்தை தம் நூல்லி கூறியுள்ளார்.

### ஆன்மீகப் பெண்ணியம்:

மதம் பற்றிய கருத்துக்களையும் விழிப்புணர்வையும் மக்களிடம் உண்டாக்குவதே ஆன்மீக பெண்ணிய மாகும் மதத்தின் அடிப்படையில் பெண்கள் ஒடுக்கப்படுவதை கண்டறிந்த பெண்ணியவாதிகள் அதைப் பற்றிய விழிப்புணர்வை பெண்களிடம் உண்டாக்கவும், மதத்தில் பெண்களுக்கு உரிய உரிமைகளை நிலைநாட்டவும் முயன்றனர் இறைவனுக்கு முன் ஆண் பெண் வேறுபாடு கிடையாது எல்லோரும் சமம் என்பதை வலியுறுத்த ஆன்மீக பெண்ணியம் உருப்பெற்றது.

### கலாச்சாரப் பெண்ணியம்:

கலாச்சார பெண்ணியம் என்பது கவிதை இசை, கலை நாடகம் நாட்டியம் விஞ்ஞானம் மருத்துவம் பெண்ணை மையமாகக் கொண்டு பெண்கள் தங்களது கலை உணர்வை வெளிப்படுத்தி வருவதாகும் பெண் தெய்வ வழிபாட்டை முன் நிறுத்துவது பழைய மரபுக் கலாச்சாரத்திற்கு மாறாக புதிய கலாச்சாரத்தை உருவாக்குவது கலைத்துறையில் ஆணாதிக்கத்தை அகற்றி ஆண் பெண் சமத்துவத்தை நிலை நாட்டுவது இப்பெண்ணியத்தின் நோக்கமாகும் மேலும் இப்ப பெண்ணியம் பற்றிய ரா. பிரேமா அவர்கள் இவ்வகைப் பெண்ணியவாதிகள் மிக அமைதியாக இயங்கக் கூடியவர்கள் என்றாலும்

தீவிரவாத பெண்ணிய அரசியல் சித்தாந்தங்களை ஏற்றுக் கொண்டவர் களரவார்” என்றும் கூறுகிறார்.

### கிறிஸ்துவப் பெண்ணியம்:

கிறிஸ்துவ மடலாலயங்களில் பெண்ணுரிமையை நிலைநாட்ட தோன்றியதே கிறிஸ்துவ பெண்ணியம் ஆகும், கிறிஸ்துவ வேதமாகிய பைபிள் கூறுவதற்கும் கிறிஸ்துவ மடல் ஆலயத்தில் பெண்களை ஒடுக்கி அடக்கி ஆளும் போக்கும் இடையே மாறுபாடு உள்ளது கிறிஸ்துவ மதத்தில் சீர்திருத்தம் வேண்டும் என்றும் மடாலயப் பொறுப்புக்களில் பெண்கள் நியமிக்க பட வேண்டும் என்றும் கிறிஸ்துவப் பெண்ணியம் கூறுகின்றது.

### இல்லற பெண்ணியம்:

பெண்கள் உடலியல் அடிப் படையில் இல்லம் சார்ந்தவர்கள் வெளியுலக பணிகளுக்கு தகுதியற்றவர்கள் தாய் மனைவி என்ற இல்ல பணிகளுக்கு மட்டுமே தகுதி உடையவர்கள் இல்ல பணிகளை செய்யும் தகுதியை வளர்த்து க் கொண்டாள் போதுமானது என்று இப்ப எண்ணியம் கருதுகிறது காலப்போக்கில் பெண்ணியவாதியரதச் சிந்தனைகளால் உந்தப்பட்டு பெண்ணிற்கு இல்ல பணிகள் மட்டுமே போதாது மயமான வெளி உலக பணிகளுக்கும் பெண்கள் என்று இப்பெண்ணியம் கூறுகின்றது.

### சூழல் பெண்ணியம்:

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் பொருட்டு உருவானது சூழல் பெண்ணியம் ஆகும் இவர்கள் ஆணு ஆயுதத்தை போருக்காக பயன் படுத்துவதை எதிர்த்து போராடு கின்றார்கள் சூழலியம் அமைதி உடல் நலம் என்பதை போன்றவற்றை இவர்களின் கோட்பாடாகும் இயற்கைக்கு எதிரான சுற்றுச் சூழலை பாதிக்கும் எந்த ஒரு செயலையும் இப் பெண்ணியம் எதிர்த்து குரல் கொடுக்கின்றது இயற்கை மீதான பாதிப்பு பெண்ணினையும் பாதிக்கிறது என்பதை இப்பெண்ணியம் எடுத்துக் கூறுகிறது.

### தலித் பெண்ணியம்:

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட வன்முறைகளுக்கு ஆளான தலித் பெண்களின் இன்னல்கள் பெண்களின் இன்னல்கள் தீரா உருவாக்கப்பட்டது, தலித் பெண்ணியம் குறித்து உ. வாசுகி அவர்கள் “தலித் மக்கள் மீது கடை பிடிக்கப்படும் தீண்டாமை கொடுமையும், தரக் குடிகளாக அச்சமுதாயத்தில் உள்ள பெண்களையும் தாக்குகிறது எனவே தீண்டாமையும் சாதியை ஒடுக்கு முறையையும் பெண்களின் பிரச்சனை தான்” என்று தலித் பெண்ணியம் பற்றி பேசுகிறார்.

### பெண்ணின் வஞ்சினம்:

காக்கை பாடினியார் என்று பெண்பாற் புலவர் பாடிய பாடல் ஒன்றின் மூலம் பெண்ணின் வீரத்தினை அறியலாம்,

> **“மண்டு அமருக்கு உடைந்தனன்ஆவின்**
> **உண்ட என் முலை அறுத்திடுவென் யான்”**

என்ற புறநானூற்று பாடலில் ஒரு தாய் தன் மகன் போர்க்களத்தில் புறமுது பட்டு இறந்திருந்தால் அவன் பால் உண்ட முளையினை அறுத்திடுவேன் என்று வஞ்சினம் கூறும் வீரப்பெண்ணாகப் படைத்து காட்டி உள்ளார் இதன் மூலம் பெண்ணின் வீர உணர்வு வெளிப் படுகிறது.

### கைம்மை நோம்பு :

சங்க இலக்கியங்களில் பெண்கள் பலவீன மாணவர்களாகவும் படைக்கப் பட்டுள்ளார் பெண்களுக்கு கற்பு நெறி ஓதுக்கப்பட்டதும் பெண்கள் ஆடவனை சார்ந்து வாழ வேண்டும் என்பதையும்,

"வினையே ஆடவர்க்குயிரே வாள்றுதல்
மனை யுரை மகளிருக்கு ஆடவர் உயிர்"

என்று குறுந்தொகை பாடல் வரிகள் வலியுறுத்துகிறது, அக்காலத்தில் கணவனை இழந்த பெண் கைம்மை நோன்பு ஏற்றி வாழ வேண்டும் என்று சமுதாயம் பல கட்டுப்பாடுகளை விதித்தது கடுமையாக இருந்ததால் அதனை வெறுத்து பெண்கள் கை இம்மை நோன்பு நோற்பதைக் காட்டிலும் கணவனோடு உடன்கட்டை ஏறுவது சிறந்தது என்று நினைக்கும் அளவுக்கு கைம்மை கொடுமை இருந்துள்ளது.

## பெண்ணின் வீரம்:

பெண்கள் போர்க்களங்களில் சென்று காவல் காக்கும் வீரமிக்கவர் களாகவும் திகழ்ந்துள்ளனர் என்பதனை

"குறுந்தொடி முன்னங்கைக் கூந்தல்
ஆம் சிறப்புற்றது
இரவு பகல் செய்யும் ஒள்வாள் விரகு
வரிக் கச்சில் பூண்ட மங்கையர்
நெய் உமிழ் சுரையர் நெடுந்திரி
கொள்இக்கையமை விளக்கம் தந்து
தொரும் மாட்ட"

என்ற இம்ம முல்லைப்பாட்டின் மூலம் பாசறையில் காவல் செய்யும் அடிமை களாகவும் பெண்கள் இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

## முடிவுரை:

பெண்ணியம் என்ற சொல் பெமினிசம் என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது பெண்ணிய திறனாய்வு பெண்களின் தனிப்பட்ட பிரச்சனை பெண்களின் குடும்பப் பிரச்சனை என்ற இரு பிரச்சனைகளை மையமாகக் கொண்டு அமைவது தெளிவாகிறது பெண்ணிய மிதவாத சமத்துவம் தீவிரவாதம் என்ற மூன்று நிலைகளில் அமைவதும் இதனை ஒட்டி ஆன்மீக பெண்ணிய கலாச்சார பெண்ணியம் கிறிஸ்துவ பெண்ணியம் இல்லற பெண்ணியம் தலித் பெண்ணியம் போன்றவை அமைவதும் தெளிவாகின்றது மேலும் கருத்தாக்கங்களை பாலியல் அரசியல் அதிகாரம் விடுதலை என்று பெண்ணியவாதிகளால் வகைப் படுத்தப்படுவதையும் அறியமுடிகிறது

# எட்டுத்தொகை அக இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்

**பா. சுரேஷ்**

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,
பசுமலை, மதுரை- 625 004

## ஆய்வுச்சுருக்கம்

தமிழில் தோன்றிய பெருமைமிகு இலக்கியங்களில் சங்க இலக்கியத்திற்கு தனிச் சிறப்புண்டு. தமிழர்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டும் நூலாக இவ்விலக்கியங்கள் அமைகின்றன. பண்டையத் தமிழ் மக்களின் வாழ்க்கையின் நாகரீகத்தை, பண்பாட்டை, கலாச்சாரம், ஒழுக லாறுகளை அறிவதற்கு பண்டைய இலக்கியங்களே சான்றாதாரமாக அமைகின்றது.

மக்களின் அகப்–புறவாழ்க்கையைத் தெரிந்து கொள்ள முதன்மை ஆதாரமாக விளங்குகின்றன. மனிதர்களின் நாகரீகம், பண்பாடு, கலாச்சாரம், இல்லறம், விருந்தோம்பல்,ஈகை முதலிய அம்மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கை முறைகள் மற்றும் தனிமனிதன் பண்பு இவைகளின் அடிப்படையில் தாங்கள் வாழ்ந்த வாழ்வின் மூலம் மிக உயர்ந்த பண்பாட்டினை இவ்வுலகிற்கு அளித்துள்ளனர் என்பதை அக–புற வாழ்வின் வழி அகச்சான்றுகளின் வழி அறிய முடிகின்றது.

## முன்னுரை

சங்க இலக்கியம் கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி மூன்றாம் நூற்றாண்டு வரை தோன்றிய பாடல் களைக் கொண்டு அமைவது. சங்க இலக்கியங்கள் அனைத்தும் மனித வாழ்க்கைக்கு அடிப்படையான அறம், பொருள், இன்பம், வீடுபேறு அடைதல் எனும் நான்கு உறுதிப் பொருள்களை எடுத்தியம்பும் கருவூலமாகத் திகழ்கின்றன. தமிழக வரலாற்றில் சங்க காலத்திற்கென்று தனிச்சிறப்பு உண்டு. பண்டைய தமிழ் மக்களின் பண்பு, நாகரிகம், சமயம்,தொழில் முதலிய வற்றை அறிவதற்குத் தமிழகத்தில் உள்ள கல்வெட்டுகள், பண்டைய நாணயங்கள், செப்பேடுகள், பிற நாட்டார் எழுதி வைத்த குறிப்புகள் முதலியன கருவியாக விளங்குகின்றன. இவற்றைக் காட்டிலும் பண்டைய தமிழ் மக்களின் பண்பாடுகளையும், நாகரிகம், கலாச்சாரம் முதலியவைகளை அறிவதற்கு தமிழ் இலக்கியங்களே சிறந்த சான்றாக அமைகின்றன.

சங்க இலக்கியம் பண்டையத் தமிழரின் பண்பட்ட வாழ்க்கையை படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகும். உலகனைத்தும் தமிழரைப் போற்றிப் புகழ்வதற்குச் சங்க இலக்கிய நூல்கள் அழியா விழுமிய கருவூலங்களாகத் திகழ்கின்றன. அவ்வகையில் பண்டையக்கால தமிழர்களின் காதல், வீரம், மனிதநேயம், ஈகை, விருந்தோம்பல், பழக்கவழக்கங்கள் முதலிய இத்தகையப் பண்பாட்டுப் பதிவுகளை நம் முன்னோர்கள் வடிவமைத்த சங்க இலக்கியங்கள் வாயிலாகப் பகிர்ந்து கொள்வதே

ஆய்வின் நோக்கமாக அமைகின்றது.

## பண்பாடு – விளக்கம்

"பண்பாடு" என்ற சொல் "பண்படு" என்ற கூட்டு வினைச் சொல்லிலிருந்து உருவானதாகும். பண்பாடு என்பது பக்குவம் பெற்ற ஒரு நிலையைக் குறிக்கும் சொல்லாகும். இதனை ஆங்கிலத்தில் "áóìõóêï" என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். உலகில் தோன்றிய ஒவ்வொரு இனத்திற்கும் ஒவ்வொரு விதமான பண்பாடு உள்ளது. மனிதன் தமிழ்பண்பாடு என்ற சொல்லை 1937–ஆம் ஆண்டு டி.கே.சிதம்பரம் முதலியார் அவர்கள் அறிமுகப்படுத்தினார். சங்க இலக்கிய மான எட்டுத்தொகையுள் ஒன்றான கலித்தொகையில் 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" என பண்பாட்டிற்கு (கலித்தொகை) இலக்கணங் கூறுகின்றது.

திருவள்ளுவரும் பண்பு பற்றிக் கூறுகையில்

**"அறம்போனும் கூர்மையே ரேனும்**
**மரம்போல்வர்**
**மக்கட் பண்பு இல்லதாவர்"** (குறள்-997)

என்று தனது குறள் வழியில் குறிப்பிடு கிறார். பண்டைய தமிழ் இலக்கியங்களே சான்றாக அமைகின்றன.

## இல்லறப் பண்பு

குறுந்தொகையில்

**"மனைஉறை வாழ்க்கை வல்லி யாங்கு,**
**மருவின் இனியவும் உளவோ"**
(பா-322(5-6))

என்ற பாடல் வரிகள் இல்லறத்தின் சிறப்பைப் பற்றி கூறுகின்றன. உலக வாழ்வு என்பது இல்லறத்தை நிலைக்களனாய் கொண்டு இயங்குவதாகும். 'இல்லறம்" என்பது வீட்டிலிருந்து வாழும் அறநெறி என்னும் பொருளாகும். இல்லற வாழ்வே மக்களை மாக்களினின்றும் வேறு பிரித்து உயர்த்துவதாகும்.

வறுமையிலும் செம்மை உடையவளாக தலைவி இல்லறம் நடத்துகின்ற பாங்கினை,

**"குப்பை வேளைஉப்பிலி வெந்ததை**
**மடவோர் காட்சிநாணி"**
- (சி.படை-பா.வரி 138-139)

எனும் பாடல் மூலம் தலைவியின் இல்லற மாண்பு வெளிப் படுத்துகின்றன. தலைவனும் தலைவியும் இல்லறத்தை நல்லறமாக மாற்றும் முயற்சியின் பொருட்டு தங்கள் வறுமையிலும் மனத்தால் ஒன்றி வாழ்தலையே பெருமையாகக் கருதினர் என்பதை,

**"ஒன்றன் கூறு ஆடை உடுப்பவரே**
**ஆயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"**
**(கலித்தொகை 18)**

என்ற பாடல் வரிகள் விளக்குகின்றது. இல்லறவாழ்வில் கணவனும் மனைவியும் ஒருமித்தே இணைந்திருக்க வேண்டும் என்பதை ஔவையார் அவர்கள்

**"காதலர் இருவர் கருத்தொருமித்து**
**ஆதரவுபட்டதே இல்வாழ்க்கை"**

என்ற பாடல் பரிகள் மூலம் எடுத்துரைக்கின்றார். இல்லறம் அல்லது நல்லறம் அன்று கொன்றைவேந்தனில் ஔவையார் குறிப்பிடுவதுபோல் சங்க கால மக்கள் தங்கள் இல்லறத்தில் சிறந்து விளங்கியதை நம்மால் உணரமுடிகிறது.

## ஈகைப் பண்பு

பிறருக்கு கொடுத்து உதவும் பண்பே ஈகை எனப்படும். ஒருவன் மிகுதியான செல்வம் உடையவனாக இருந்தால் அச்செல்வம் பிறருக்கு பயன்படும்படி கொடுத்து உதவுவதில் தான் செல்வத்தின் பயனை அடையமுடியும். நம்மை சார்ந்த அனைவரும் வறுமை இல்லாத வாழ்க்கையை வாழவேண்டும் என்று நினைத்தால் மிகுந்த செல்வம் வைத்திருப்பவர்கள் கொடை

செய்ய முன்வரவேண்டும். பிறருக்கு கொடுப்பதன் பொருட்டே அனைவரும் வறுமையில் இருந்துவிடுபடலாம்.

"உண்பதுநாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக்குமே
செல்வத்துப் பயனேஈதல்
துய்ப்போம் எனினேதம்புநபலமே"
- (புறநானூறு - 189)

என்ற பாடல் வரியின் மூலம் நக்கீரனார் ஈகையின் சிறப்பை கூறுகிறார்.

## விருந்தோம்பல் பண்பு

சங்க கால தமிழர் மரபில் பண் பாட்டுக் கூறுகளில் முதன்மை பண்பாக விளங்கியது விருந்து உபசரித்தல் ஆகும். விருந்தோம்பல் எனும் பழந்தமிழர் பண்பாடு தமிழகத்தில் இன்றழவும் ஓரளவு நிலவி வருவதை நாம் அறிய முடிகிறது. தம் இல்லம் தேடிவரும் உற்றார், உறவினர், ஏழைஎளியவருக்கு விருந்தளித்து சிறப்பினை செய்யும் விருந்தோம்பல் என்னும் பண்பாட்டைச் சங்க இலக்கியங்களில் பரவலாக காண முடிகின்றது. விருந்து செய்யும் பொருட்டு சிறந்த பொருளை ஈட்டி வருதல் தலைவனுக்குரிய கடமையாக அமைந்தது. இதனை

"செழுநகர் நல்விருந்து அயர்மார் ஏமுற
விழுநிதி எளிதினின் எய்துகதில்ல
கல்பிறங் காரிடை விளங்கிய
சொல்பெயர் தேஎத்த சுரனிறந் தோரே"

என்று அகநானூறு பாடல் வழி சங்ககால மக்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக மட்டுமல்லாது விருந்தினருக்கு உணவு கொடுப்பதற்காகப் பொருளீட்டச் செல்வதால் அக்கால மக்களின் தலை சிறந்த பண்பாட்டுப் பதிவாக அமைகின்றதை உணர முடிகின்றது.

விருந்தினரைக் கண்டால் முகமலர்ந்து இன்முகத்தோடு வரவேற்கும் சிறந்த பண்பு தமிழர்களிடம் காணப் பட்டதை

"எமக்கேவருகதில் விருந்தேசிவப்பாள் ஆன்று,
சிறய முள் எயிறுதோன்ற
முறுவல் கொண்டமுகம் காண்கம்மே"
(நற்றினை-பா-120)

என்ற நற்றினைப் பாடல் வரிகள் நமக்கு தெளிவுபடுத்துகின்றன.

"மருந்தேயாயினும் விருந்தோடுஉண்"
(கொன்றைவேந்தன்)

என்ற ஔவையாரின் வாக்குக்கேற்ப வாழ்ந்த இனம் தமிழினம் 'விழுப்புண் படாத நாளெல்லாம வீழ் நாள்" என்று மறவன் கருதுவது போல விருந்தினர் வாரா நாளெல்லாம் வீண் நாளாக பண்டையோர் கருதினர். சங்க தமிழ் இலக்கியங்கள் காதல், வீரம், கொடையை மட்டுமன்றி இல்லறத்துக்குரிய அறங்களுள் ஒன்றாக விருந்தோம்பலையும் சிறப்பித்துக் கூறுகின்றன.

## போர் புரிதலில் பண்பாடு

சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் காதலுக்கு மட்டும் முக்கியத்துவம் தராது போருக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர். அதில் சில தனிப்பட்ட அறத்தைக் கையாண்டனர். திடீரென்று போர் மேற்கொண்டு பகை மன்னர்களுக்கும் நெறுக்கடியை ஏற்படுத்ததாமல் போர் புரிவதில் சில விதிமுறைகளையும் அறப் பண்பையும் பின்பற்றி வாழ்ந்தனர். போரிடும் முன்னரே யார் யாரெல்லாம் பாதுகாப்பான இடம் செல்லவேண்டும் என்பதை முரசறைந்து அறிவிக்கப்பட்டதைத் தமிழரின் பண்பாட்டு நாகரீகத்தை

"ஆவும் ஆனியற் பார்ப்பனமாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புலம் வாழ்னர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன் போல் புதல்வர் பெறாயதீரும்

**எம் அம்புகடிவிடதும் நும் அரண் சேர்மின்"**

என்ற பாடல் வரியின் மூலம் புறநானூறு நமக்கு தெளிவுபடுத்துகிறது.

இதில் பசு, அந்தனர், பெண்கள், பிணியுடையோர், பிள்ளைப் பேறு இல்லாதவர்கள் ஆகியவர்கள் பாதுகாப்பான இடத்தை அடைய அறிவுறுத்தப் பட்டதன் மூலம் தமிழர்களின் பண்பாட்டின் உயர்ந்த நிலையை நமக்கு எடுத்துக் காட்டுவததாக உள்ளது.

## முடிவுரை

பண்டையக்கால மனிதர்கள் தங்கள் வாழ்க்கையினை எண்ணம் போல் வாழாது தமக்கென்ற ஓர் எல்லையை வகுத்து ஒரு குறிப்பிட்ட வரன் முறை அடிப்படையில் வாழ்ந்துள்ளனர். சங்க இலக்கிய நூல்கள் அனைத்தும் மக்களின் வாழ்வாதார அடிப்படைக் கூறுகளை உள்ளடக்கிச் சிறந்த பண்பாட்டு கருத்துக்களை எடுத்தியம்புகின்றன. தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் மனித வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகத் திகழ்ந்திருக்கிறது என்ற பேருண்மையில் எள்ளளவும் ஐயமில்லை என்பதனை நமக்கு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

உலகத்தில் பிற நாடுகளில் நாகரீகமும், பண்பாடும் தோன்றுவதற்கு முன்னரே சங்க கால மக்கள் தாங்கள் வாழ்ந்த வாழ்வின் மூலம் மிக உயர்ந்த பண்பாட்டினை இவ்வுலகிற்கு இலக்கியங்கள் வழி அக–புறச் சான்றாதாரங்கள் மூலம் அறிய முடிகின்றது. உரிய பண்பாக தமிழரின் பண்பு சிறப்பு பெறுவதாக அமைகின்றது.

## துணை நூற்பட்டியல்

1. குறுந்தொகை (தெளிவுரை) அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் (மெய்யப்பன் பதிப்பகம்)
2. கலித்தொகை (தெளிவுரை) அறிஞர் ச.வே. சுப்பிரமணியன் (மெய்யப்பன் பதிப்பகம்)
3. அகநானூறு மூலமும் உரையும் – ந. மு. வேங்கடசாமி நாட்டார் (சாரதா பதிப்பகம்)
4. புறநானூறு – மக்கள் பதிப்பு – உரையாசிரியர் புலவர் இரா. இளங்குமரன் (கோவிலூர் மடாலயம்)
5. நற்றினை உரையாசிரியர் புலவர் நா. இராமையா பிள்ளை (வர்த்த மானன் பதிப்பக வெளியீடு)

# சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல்

**முனைவர் ஞா.செல்வராக்கு**
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

## முன்னுரை :

திக்கெட்டும் தமிழர் புகழ் பரவுவதற்கு உயர்ந்த பண்பாடே காரணமாகும்.அதிலும் குறிப்பாக தமிழர்களுக்கே உரிய தலைசிறந்த பண்பு விருந்தோம்பல். நம்மைத் தேடி வரும் நம் உற்றார் உறவினர், ஏழை எளியவர்களுக்கு மட்டுமல்லாமல் நாமும் வறுமையில் வாடும் மக்களைத் தேடிச் சென்று உணவளிப்பதே தமிழர் அறம் எனப்படும். இல்லை என வருவோருக்கு விருந்தளித்து உள்ளம் குளிர மகிழ்வித்து, அதைக் கண்டு, தான் மகிழ்ச்சியடைவதே விருந்தோம்பல் பண்பாகும். சங்க கால மக்கள் முதல் மன்னர் வரை விருந்தோம்பல் பண்பை போற்றும் விதத்தையும், விருந்தோம்பலின் மாண்பையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறம் நிலைபெறும் விருந்தோம்பல்:

மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவது அறம், பொருள், இன்பம் எனும் மூன்றாகும். இதனை,

**"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை"[1]**

என்கிறார் தொல்காப்பியர். அறம், பொருள், இன்பம் எனும் வாழ்வியல் கொள்கைகளை வகுக்கும் பொழுது, மக்கள் அறத்திற்கே முதலிடம் கொடுத்தனர்.மக்களின் வாழ்க்கையோடு இணைந்த இல்வாழ்க்கை, துறவு வாழ்க்கை இரண்டையும் அறம் என்ற சொல்லோடு இணைத்து இல்லறம் , துறவறம் என்றே குறிப்பிட்டனர். தலைவியின் தன்மைகளுள் ஒன்றாக தொல்காப்பியர் குறிப்பிடும்போது,

**"கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்**
**மெல்லியர் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்துபுறந் தருதலும்சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவொள் மாண்புகள்**
**முகம்புகல் முறைமையிற் கிழவோற் குரைத்தல்**
**அகம்புகல் மரபில்வாயில்கட் குரிய"[2]**

எனப் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே' இல்லறத்தின் தலைசிறந்த நெறியாகவும், இல்வாழ்க்கையின் உயிர்நாடி விருந்தோம்பல் என்பதனையும், இல்லாளின் மாண்புகளாக விருந்தோம் பலையும் சுற்றம் ஓம்பலையும் குறிப் பிடுகின்றார்.

தொல்காப்பியர் விருந்து என்பதற்கு புதுமை எனக் குறிப்பிடுகின்றார். இல்லத் திற்கு வந்த புதியவருக்கு உணவளித்து உபசரிக்கும் பழக்கம் அன்பின் அடிப்படையில் இருந்தது. பின் அது இல்லறப் பண்பாடாகவும் தலைவியின் பண்புகளாகவும் திகழ்கின்றது. தமிழர்கள் அகவாழ்விலும், புற வாழ்விலும்

அறத்தின் வழியே செல்லல் வேண்டும் என்பதில் உறுதியோடு இருந்தனர். அறங்களில் தலைசிறந்த அறமாக உண்டி கொடுக்கும் அறம் போற்றப்பட்டுள்ளது என்பதனை,

**"நீர் இன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்"[3]**
(புறநானூறு -18)

என உடலின் பசி நீங்க உணவு கொடுப்பவர்கள் உடலுக்கு உயிர் கொடுத்தவர்கள் ஆவார்கள் என குட புலவியனார் குறிப்பிடுகின்றார்.

## பண்பாடும் நாகரிகமும் :

இல்லத்திற்கு வரும் விருந்தினரை இனிய பார்வையால், இன்முகத்தோடு, ஏழடி முன் சென்று எதிர் நின்று வரவேற்றலும், உண்மையான அன்புள்ளத்தோடு உபசரித்து திரும்பச் செல்லும் போது ஏழடி தூரம் சென்று விடை கொடுத்து அனுப்புவதும் பழந்தமிழர் மரபாகத் திகழ்ந்தது என்பதனை,

**"பால்புரை புரவி நால்குஉடன் பூட்டி**
**காலில் ஏழடிப் பின் சென்று கோலின்**
**தாறு களைந்து, ஏறுஎன்று ஏற்றி"[4]**
(பொருநராற்றுப்படை - 166)

எனவரும் வரிகள் கரிகாற் பெரு வளத்தான், பரிசில் வேண்டி வந்த பொருநனை முகமலர்ச்சியோடு வரவேற்று, புத்தாடை, உணவு வகைகள், பரிசுப் பொருட்கள் கொடுத்து ஏழடி பின் சென்று வழி அனுப்பினான் என்று கூறுவதிலிருந்து, அரசனாக இருந்தாலும் வந்த விருந்தினரை செல்க என்று அப்படியே விடாமல் உபசரித்து வழி அனுப்பிய பாங்கினை உணர முடிகின்றது.

சங்க காலத்தில் வேங்கட நாட்டை ஆட்சி செய்த புல்லி எனும் மன்னனின் அரசாட்சியின் கீழ் வாழ்ந்து வந்த ஆயர்கள், இளைய எருதுகளின் கழுத்தில் கட்டி இருக்கும் மூங்கில் குழலில் புளிச்சோற்றை பசியால் வருவோரின் காதடைப்பு நீங்கும் அளவிற்கு தேக்கிலையில் உணவளிக்கும் முறையினை,

**"வருவழி வம்பலர்ப் பேணி கோவலர்**
**மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி**
**செவிஅடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்**
**புல்லி நல்நாட்டு உம்பர்"5**
**(அகநானூறு - 311)**

என மாமூலனார் பாடல் உணர்த்து கின்றது.

மாலை நேரத்தில் வீட்டு வாசலை அடைக்கும் முன்பு யாரேனும் புதியவர்கள் இருக்கின்றார்களா என்று அறிந்த பின்பே கதவைத் தாளிடும் வழக்கம் இருந்ததனை,

**"புள்ளும் மாவும் புலம்பொடு வதிய**
**நள்ளென வந்த நார் இல் மாலை**
**பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்,**
**வருவீர் உளீரோ? எனவும்**
**வாரார் - தோழி ! - நம் காதலோரே"[6]**
**(குறுந்தொகை - 118)**

எனக் குறிப்பிடுவதிலிருந்து தமிழர்களின் பெருந்தன்மையை அறிய முடிகின்றது.

**"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு"[7]**
**(திருக்குறள் - 86)**

என வள்ளுவனாரும் குறிப்பிடுகின்றார்.

## வறுமையிலும் செம்மை :

வீட்டிற்கு விருந்தினர் வந்தபோது, அவர்களுக்கு உணவு பரிமாற வீட்டில் பொருட்கள் ஏதும் இல்லாத காரணத்தினால், வீட்டில் உள்ள பொருட்களை அடகு வைத்து பொருள் பெற்று விருந்தளித்தனர் என்பதை,

**"---- அவன்எம் இறைவன்; யாம் அவன் பாணர்**
**நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்**
**இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்று இக்**
**கருங்கோட்டுச் சீறியாழ் பணையம் இதுகொண்டு**
**ஈவதிலாளன் என்னாது நீயும் -----"[8]**
(புறநானூறு - 316)

புறநானூற்று வரிகள் புலப் படுத்துகின்றன.

### காக்கை கரைதல் :

புதுமை எனும் பொருளுடைய விருந்தோம்பலை குறுந்தொகையும் குறிப்பிடுகின்றது. முன்பின் அறிமுகம் இல்லாதோரை உபசரித்து மகிழ்தலை விருந்தோம்பல் என்பதனை உணர்த்தும் விதமாக,திண்ணிய தேரை உடைய நல்லி எனும் அரசன் காட்டினுள்ளே இடையர்களின் பசுக்கள் கொடுத்த நெய்யோடு தொண்டி என்ற ஊரில் விளைந்த வயல்களில் நன்கு விளைந்த வெண்மையான நெல் அரிசியால் வெண்மைச் சோற்றை ஏழு பாத்திரங்களில் கொடுத்தாலும் தலைவி யின் துன்பம் நீங்குவதற்காக விருந்தினர் வரக் கரைந்த காக்கையின்பலி என தோழி தலைவனுக்கு கூறுவதாக குறுந்தொகை இயம்புகிறது.

**"பல் ஆ பயந்த நெய்யின் தொண்டி**
**திண்தேர் நள்ளி கானத்து அண்டர்**
**முழுதுடன் விளைந்த வெண்ணல் வெஞ்சோறு**
**எழுகலத்து ஏந்தினும் சிறிது - என் தோழி**
**பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு**
**விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே"[9]** (குறுந்தொகை - 210)

விருந்தினரை உபசரித்து மகிழ் விக்கலாம் என்பதற்காக, காக்கை கரைதலை வரவேற்கும் சங்க கால மக்களின் விருந்தோம்பல் பண்பு போற்று தற்குரியது.

### யானைக்கு கவளமிடல் :

யானை போன்ற விலங்குகளிட மிருந்தும் பரிவு காட்டி விருந்தளித்து மகிழ்ந்தனர் பழந்தமிழ் மக்கள். உயர்குடி மக்களிடம் மட்டுமல்லாமல் ஏழை எளிய மக்களிடமும் பரிவு காட்டி அரவணைத்து உணவிடும் வழக்கம் இருந்துள்ளது.

**"மலிவுடை உள்ளத்தான் வந்துசெய் வேள்வியுள்**
**பண்மணம் மன்னும் பின்இருங் கூந்தலர்**
**கண்ணிமை கனிந்த காலத்தார்,நின்**
**கொடிஏற்று வாரணம் கொள்கவழ மிச்சில்"[10]**
(பரிபாடல் -19)

என்று சங்ககால மக்கள் யானைக்குக் கவளம் கொடுத்து மகிழ்ந்ததனைச் சுட்டுகின்றது.

### கலைகளில் விருந்தோம்பல்:

புகார் நகரில் உள்ள வெள்ளி மகம் கோவிலில் சித்திரங்கள் தீட்டப் பட்டிருந்தது. அதில் புகார் நகரத்தின் இயற்கை அழகு, இம்மையிலும் மறுமையிலும் இன்பம் நிறைந்திருக்கும் விரும்புவோர் மூழ்கிக் குளிக்கும் சூரிய குண்டம், சந்திரகுண்டம் எனும் இரு ஏரிகள்,சோழர்களின் புலிச்சின்னத்தோடு அக்கோவில் காட்சியளித்தது. அக் கோவிலில் வரையப்பட்டிருந்த ஓவியம் தமிழர்களின் விருந்தோம்பலை எடுத்துரைக்கின்றது என்பதனை,

**"புகழ்நிலை இய மொழிவளர**
**அறம் நிலைஇய அகன்அட்டில்**
**சோறு வாக்கிய கொழுங்கஞ்சி ;**
**யாறுபோலப் பரந்துஒழுகி**
**ஏறுபொரச் சேறாகித் தேர்ஓடத் துகள்கெழுமி**
**நீறு ஆடிய களிறு போல ; வேறுபட்ட விளை ஓவத்து**
**வெண்கோயில் மாசு ஊட்டும்"[11]**

(பட்டினப்பாலை - 42 -50)

என்னும் வரிகள் விளக்குகின்றன. புகழ் நிலைபெற தர்மமும் நிலைபெறும் இடத்தில், சோறு ஆக்கி வடித்த கஞ்சி, ஆறு போல பாய்ந்து தெருவெல்லாம் ஓடுகின்றது. அதில் எருதுகள் புரள அச்சோற்று புழுதியை யானை தன்மேல் போட்டுக்கொண்டது போல பல வண்ணச் சித்திரங்கள் வரையப் பட்டுள்ளதன் மூலமாக வருகிறவர் களுக்கு எல்லாம் இடைவிடாமல் உணவுகளை சமைத்து வழங்கி பசியை இல்லையென்றாக்கும், விருந்தளிக்கும் தன்மையை உணரமுடிகிறது.

## அல்லிலும் விருந்தளிக்கும் பாங்கு:

சங்க காலத்தில் போக்குவரத்து வசதிகள் குறைவு என்பதால் வெளி யூருக்குச் செல்வோர் மாலைப் பொழுதில் ஓர் ஊரில் தங்கி, மறுநாள் காலையிலே தொடர்ந்து பயணம் செய்து, வேற்றூருக்குச் செல்வார்கள் .அவ்வாறு மாலைக் காலத்தில் வந்து தங்குவோருக்கு அவ்ஊரில் உள்ளவர்கள் அன்போடு உணவு அளிப்பது ஓர் அறமாகும். மாலை நேரத்தில் மட்டுமல்லாமல் இரவு நேரத்தில் வந்தாலும் சமைத்து உணவிடும் வழக்கத்தை இல்லறத் தலைவி மேற்கொண்டாள் என்பதனை,

> "அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்
> முல்லை சான்ற கற்பின்
> மெல்இயற் குறுமகள் உறைவின் ஊரே"[12]
> (நற்றிணை - 142)

எனும் பாடலில் தலைவியின் பெருமையை தலைவன் தேர்ப்பாகனிடம் உரைக்கும் விதமாக இடைக்காடனார் விளக்கி யுள்ளார்.

## முடிவுரை :

சங்க இலக்கியங்களில் பண்டைத் தமிழர்கள் விருந்தோம்பல் பண்பிலும் பசித்தோருக்கு உணவு வழங்குவதிலும் பண்பாட்டின் அடிப்படையில் சிறந்து விளங்கிய திறத்தினை உணர முடிகின்றது. திசையெட்டும் தமிழர்களின் புகழ் பரவுவதற்கு விருந்தோம்பல் பண்பும் அடிப் படையானது. அறத்தை நிலைநாட்டும் விருந்தோம்பல் பண்பையும்,அனைத்து உயிர்களையும் நம் உயிர் போல போற்றும் நயத்தையும், வறுமையிலும் செம்மையான விருந்தோம்பல் பண்பையும் இக்கட்டுரையின் மூலமாக அறியமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள்:

1) தொல்காப்பியம், (பொருள்) இளம்பூரணம், சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் ப–158
2) மேலது., ப–301
3) புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ப – 50
4) பத்துப்பாட்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ப–87
5) அகநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ப–921
6) குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ப–281
7) திருக்குறள், பி.எஸ். ஆச்சார்யா, நர்மதா பதிப்பகம், ப–108
8) புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ப–691
9) குறுந்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் ப–484
10) பரிபாடல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ப–510
11) பத்துப்பாட்டு, செஞ்சுரி புக் ஹவுஸ், ப–304.
12) நற்றிணை, செஞ்சுரி புக் ஹவுஸ், பக்– 260, 261.

# தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள்

**முனைவர் வெ. நளினி**
(எம்.ஏ., பிஎச்.டி., நெட்) நெறியாளர்
உதவிப்பேராசிரியர்,
கலை மற்றும் மானுட அறிவியல்,
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை - 78,
தமிழ்நாடு, இந்தியா.

**வெ. தனலட்சுமி,**
ஆராய்ச்சியாளர், தமிழ்த்துறை,
கலை மற்றும் மானுட அறிவியல்,
மீனாட்சி உயர்கல்வி மற்றும்
ஆராய்ச்சி நிறுவனம்,
நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 78,
தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை:-

பண்படுவது பண்பாடாகும். பண்படுதல் என்பது சீர்ப்படுத்துதல், செம்மைப்படுத்துதல் எனப் பொருள்படும்.

'பண்பெனப்படுவது பாடறிந்து
ஒழுகுதல்' (கலி.பா.133.8)

என்று கலித்தொகை கூறுகிறது. பண்பாடு என்பது தனிமனித ஒழுக்கத்தையும், தனிமனிதன் என்ற வட்டம் கடந்து குழு வாழ்க்கையையும் ஒரு சமுதாயத்தின் அல்லது பெரும்பகுதியின் முதன்மைப் பண்பாடாகும். சங்ககால மக்கள் வரலாற்றுப் பெருமையும், பண்பாட்டுச் செழுமையும் கொண்டவர்கள் ஆவர். சங்ககால மக்களின் செயல்கள் அனைத்தும் இருபெரும் பிரிவுகளாக இருப்பவை. அவை அகம், புறம் என்ற உணர்வு நிலைகள் ஆகும்.

## விருந்தோம்பல் பண்பு:-

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே இல்லறத்தில் தலையாய நெறியாகும். முன்பின் அறியாத புதிய மனிதர்களை வரவேற்று உபசரிப்பதே 'விருந்தோம்பல்' ஆகும். நம்முடைய உறவினர்களை போற்றி உபசரிப்பது விருந்தோம்பல் அல்ல, விருந்து என்ற சொல்லிற்கு புதுமை என்று பொருள் கூறுகிறார் தொல் காப்பியர். தன் கணவனுடன் ஊடல் கொண்டிருந்தாலும் விருந்தினர் வந்தால் வரவேற்று உபசரிப்பதன் மூலம் தன் சினத்தை மறைத்துக் கொள்வாள் தலைமகள் என்று நற்றிணை விளக்குகிறது.

'அட்டிலோளேஅம்மாஅரிவை
எமக்கே வருக தில் விருந்தே'
(நற்றிணை - 120)

என்று தலைவியின் அமைதியை வியந்த தலைவன் பாடியுள்ளதைக் காணலாம்.

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனின் விருந்தோம்பல் பண்பைக் குறிப்பிடும் பரணர் பெரும உன்னை நாடிவந்த புலவர்கள் உண்பன வற்றை ஓம்பாது உண்ணச் செய்தனை, அவருடன் அமர்ந்து உண்டனை, இன்பச்சுவை நல்கும் பாணர் கூத்தர் முதலியவர் நிரம்பப் பெறுமாறு நீ நல்ல பொன் அணிகளை எல்லையில்லாது தந்தனை என்கிறார். இதனை,

'உறுவர்ஆர ஓம்பாது உண்டு
நகைவர் ஆரநன்கலம் சிதறி'
(பதிற்று55:10-11)

என்று அடிகள் சுட்டுகின்றன.

## உயர்ந்த சிந்தனை:-

சிறந்த வாழ்க்கைக்கு அடிப் படையாக அமைகின்ற உயர்ந்த சிந்தனைகளே பண்பாட்டுக்கு அடிப்படையாகும். இலக்கியங்கள் எண்ணற்ற அறிவியல் சிந்தனை களை எடுத்துரைக்கின்றன. அறிவியல் சிந்தனைகள் நம்மை

நெறிப்படுத்துகின்றன. இதனை,

**நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்,**
**அவ்வழி நல்லை: வாழிய நிலனே !**

என்ற பாடலில் ஔவையார் நாடு, காடு, பள்ளம், மலை இவையெல்லாம் பெருமைக்குரியது அன்று. எங்கு நல்ல ஆடவர் இருக்கின்றாரோ அந்த நிலமே பெருமைக்குரியது என்கிறார்.

நிலத்தில் வாழும் மக்கள் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதனைக் கலித்தொகைப் பாடல் எடுத்துரைக் கிறது.

**‘ஆற்றுதல் என்பது ஒன்று அலர்ந்தவர்க் குதவுதல்**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**பண்பு எனப்படுவது பாடுஅறிந்த ஒழுகுதல்**
**அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை’**
**(கலித்தொகை -133)**

என வாழ்க்கைக்கு எவையெல்லாம் தேவை என்பதை விதிமுறைகளாகக் கூறியுள்ளார் சோழன் நல்லுருத்திரன்.

## இல்வாழ்க்கை:–

இல்வாழ்க்கையில் ஈடுபடும் ஆணுக்கும், பெண்ணுக்கும் இன்றி யமையாதது ஒத்த அன்பு. ஒத்த அன்பே காதலெனப்பட்டது. ஒருவரிடம் இன்னொருவருக்குள்ள பெரு விருப்பத்தைத் தம் இனிய காதல் மொழி களால் வெளிப்படுத்தினர்.

**‘நின்ற சொல்ல நீடு தோன்றினியர்**
**என்றும் என்றோள் பிரிபறியலரே**
**தாமரைத் தன்தாதூதி மீமிசைச்**
**சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்**
**புரையமன்ற புரையோர் கேண்மை’**
**(நற் - 1)**

என்று காதலி தன் காதலனின் ஒழுக்கத் தன்மையைப் போற்றி மகிழ்கின்றாள்.

**“இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயாகியர் என் கணவனை**
**யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே’**
**(குறு - 49)**

என்கிறாள். இப்பிறவியிலும் மட்டுமின்றி மறுபிறவியிலும் அவனே கணவனாக வேண்டும் என்ற விருப்பம் இருவரின் இணைப்பின் அன்பினை வெளிப்படுத்துகின்றது.

மனைவி தன் பிறந்த வீட்டில் செல்வச்செழிப்புடன் வாழ்ந்தபோதும் தனக்கு மாலைசூட்டிய கணவரின் வீடு வறுமையுடையதாக இருப்பினும் தன் தாய்வீட்டை எண்ணாது தன் கணவனின் வீட்டையே பெரிதெனக் கொள்வதாக ஐங்குறுநூற்று பாடல் அழகுறக் கூறுகிறது.

**அன்னாய் வாழி வேண்டன்னைய் நம் படப்பை**
**தேன் மயங்கு பாலினும் இனிய அவர் நாட்டு**
**உவலைக் கூவற்கீழ மானுண்டெஞ்சிய**
**கலிழி நீரே’ (ஐங் - 203)**

மனிதநேயம், வீரச்சிறப்பு பற்றியும் நற்றிணை – 175, புற:1–5, புற:163பாடல், புறம்41:1–3, புறம் 74:1–2, புறம். 335. என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகிறது.

## புறநானூறு சுட்டும் கைம்பெண்களின் பண்பாடு:–

சங்கப்பெண்டிர் கொண்டிருந்த கற்புக் குணங்களுள் நாணமும், பயிர்ப்பும் பண்பாட்டுக் குணங்களாகும். கணவன் பெயர் சொல்லாமை, அவன் சொல்லை தட்டாமை, அவன் குற்றத்தை மறைத்தல், பின்னுண்டல், பின் தூங்கி முன்னெழுதல், விருந்து மிக வரினும் சலியாமை, கணவனில்லாக் காலத்துத் தன்னை அணி செய்யாமை, அவன் இறப்பில் உடன்கட்டையேறல், அவனுக்குப்பின் உயிர் வாழ நேரின் மறுமணம் செய்யாமை ஆகியவை

கற்புடை மகளிருக்கு பண்பாட்டுக் குணங்களாகும்.

சங்க காலத்தில் கணவனை இழந்த மகளிர் கைம்மை மகளிர் எனப்படுவர். இத்தகையோரை இன்று விதவை என்று அழைக்கின்றோம். புறநானூற்றில் இவர்களது நிலையை 'கழிகல மகளிர்', 'உயவற் பெண்டிர்', ' பருத்திப் பெண்டிர்' என பலவாறாகச் சுட்டப்பட்டுள்ளனர். தொல்காப்பியர் நிலையாமையை வலியுறுத்தும் காஞ்சித்திணை துறையில் மனைவியை இழந்த கணவன் நிலையை 'தபுதார நிலை' என்றும் கணவனை இழந்த மனைவியின் நிலையை 'தாபத நிலை' என்றும் சுட்டுகின்றார்.

## காதலி இழந்த தபுதார நிலை:–:

காதலனிழந்த தாபத நிலையும் (தொல் – பொருள் – நூ – 77) என்பது தொல்காப்பியம். தொல் காப்பியத்தில் இவ்விரு நிலைகள் குறிக்கப்பட்டிருப்பினும் சங்க இலக்கியத்தில் கணவனை இழந்த கைம்பெண் நிலையே பேசப்பட்டுள்ளது. கணவனை இழந்து துயரம் தாங்காது பிரிவுத் துயரால் கணவனோடு உடன் இறக்க வேண்டும்.அல்லது கைம்மை நோற்று வாழ வேண்டும் என விரும்பிய நிலையினையே கைம்மை மகளிரின் நிலை உணர்த்துகின்றது.

## மூவகை மகளிர்:–

கைம்மை மகளிரின் மூன்று நிலைகள் விளக்கப்பட்டுள்ளன. அக்கைம்மை மகளிரின் செயல் அடிப்படையில் தலை, இடை, கடை கருதுவர். கணவன் இறந்த செய்தி கேட்டு உயிர் விடுதல் தலைக்கும், இடை என்பது கணவனுடன் தானும் உயிர் மடிதலும்,கடைஎன்பது கணவனோடு உயிர் துறக்காது கைம்மை நோன்பு நோற்று வாழ்வது என்பனவாகும்.

அஃறிணை உயிரினமான மந்தியை குறித்து கடுந்தோட்கரவீரன் என்னும் புலவர் கூறும்போது,

**"கைம்மை உய்யாக் காமர் மந்தி**
**கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி,**
**ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துஉயிர்**
**செகுக்கும்"**(குறுந்தொகை - 69. 2 - 4)

தன் குட்டியை இனத்தோடு சேர்த்துவிட்டு பின்பு தானும் உயிர்மாய்த்துக் கொண்ட மந்தியின் நிலையை குறுந்தொகை கூறுகிறது.

தன் கணவன் கள்வன் அல்லன் என்று மக்களுக்கு தெரிவாகிய பின்னர் இறந்த கண்ணகியின் நிலை சிலப்பதி காரத்தில் சுட்டப்பட்டுள்ளது. இவற்றை நோக்கும் பொழுது மகளிர் தன் கணவனோடு உடன் இருக்காது கடமை கருதியே வாழ்ந்து வந்தனர் என்பது பெறப்படுகிறது. அதனால் நோன்பு நோற்று வாழும் 'கடமை மகளிர்' என்று கூறும் டாக்டர் வ.சுப.மாணிக்கம் கருத்தும் இதற்கு அரண் செய்வதாக அமைந்துள்ளது.

கணவனை இழந்த பெண்டிர் தங்களை ஒப்பனை செய்து கொள்ளா மலும் கூந்தலை கொய்து கொள்ளுதலும் ஆகிய வழக்கத்தை கணவற்கென வாழ்ந்த மகளிர் பிற ஆடவர்க்குத் தம் அழகு விளங்கித் தோன்ற விரும்பாத காரணத்தால் உண்டான பழக்கமாகலாம் என்று மா. இராசமாணிக்கனார் கூறியுள்ளார்.

வேள் ஏவ்வி இழந்த பின்னர் அவனது மனைவி வீட்டை மெழுகி தர்ப்பைப்புல் மேல் படைத்து தானும் உணவருந்தியதை,

**"பிடி அடி அன்ன சிறு வழி மெழுகி,**
**தன் அமர் காதலி புல் மேல் வைத்த**
**இன் சிறு பிண்டம் யாங்கு**
**உண்டனன்கொல்"**(புறநானூறு- 234:2-4)

எடுத்துரைத்துள்ளது.

## கூந்தலை கொய்தல்:–

கைம்பெண்கள் கருமணலை யொத்தும் மெல்லியதும் குவிந்ததுமான கூந்தலை குறைத்துக்கொள்ளும் வழக்கம் இருந்ததை,

**“ஒள் நுதல் மகளிர் கைம்மை கூர,**
**அவிர் அறல் கடுக்கும் அம் மென்**
**குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே”**
**(புறநானூறு - 25:12-14)**

புறநானூறு சுட்டியுள்ளது. தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறி தன்னை எதிர்த்த இரு வேந்தர்களோடு போரிட்டு அவர்களைக் கொன்று அக்காலபோர் மரபுப்படி அவர்களுடைய முரசுகளையும் கவர்ந்து கொண்டான்.

அந்நிலையில் அவனைப் பல வீரர்கள் சூழ்ந்துகொண்டனர். எனினும் வேற்படையால் அவர்களைக் கொல்ல அவன் மனம் இடந்தரவில்லை. ஏனெனில் போரில் இறந்த வேந்தர்களின் மகளிர் பெரும் துயரத்தால் தன் மார்புகளில் அடித்துக்கொண்டு கதறி அழுத வண்ணம் கரிய அழகிய கூந்தலை கொய்தல் கண்டு அவன் உள்ளம் பெரிதும் இறங்கிற்று. இவ்வாறு கல்லாடனார் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியனின் வெற்றி சிறப்பை பாடுகிறார். எனினும் கணவனை இழந்த மகளிர் தம் கூந்தலை கொய்யர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

**“வளையல் அணியாமை**
**வளையல்களை கையில் அணியாமலும்**
**ஊழின் உருப்ப எருக்கிய மகளிர்**
**வாழைப் பூவின் வளை முறி சிதற”**
**(புறநானூறு 237:10-11)**

முறையாக அறைந்து அழும் மகளிர் தம் வளைகள் வாழைப்பூப்போல சிதறி விழுந்த செய்தி பதிவு செய்யப் பட்டுள்ளது.

## அல்லி அரிசியால் ஆன உணவு:–

அல்லி அரிசியால் ஆன உணவை உண்டு வாழ்ந்து வந்தனர். இதனை,

**“சிறு வெள் ஆம்பல் அல்லி உண்ணும்**
**கழி கல மகளிர் போல”**
**(புறநானூறு - 280:13-14)**

முடிகளைந்த தலையைக் கழுவுதலினின்றும் தெளிந்த நீர் வடிய தம் இளமைக் காலத்து அழகிய மாறுபட்ட தழை மாலையாக விளங்கிய சிறிய வெள்ளிய ஆம்பலிடத்து உண்டாகும் அல்லி அரிசியை உண்ணும் அணிகலன் களைந்த கைம்பெண்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை அறியலாம். இதில் வரும் கழிகல மகளிர் என்னும் தொடர், கைம்பெண்கள் கொடியை மட்டுமின்றி எல்லா அணிகலன்களையும் நீக்கிவிடுவதை மரபாக கொண்டிருந்தனர் என்பதை சுட்டுகின்றன. மேலும் அக்கைம்மைப்பெண் வேளைப்பூவை உணவாகக் கொண்டனர் அவர்கள் பாய் கூட இல்லாமல் பருக்கைகளாலான படுக்கையில் படுத்து உறங்கினார் என்பது அறியப்படுகின்றது.

## பச்சிலை உணவு:–

சேரன் குடக்கோ நெடுஞ் சேரலாதன் சோழன் பேர் படகை பெருவிரலையும் கிள்ளியும் ஒருவரை ஒருவர் எதிர்த்த பொழுது இருவரும் இறந்துவிட்டனர். அவர்கள் இருவரும் இறந்ததும் போர் ஓய்ந்தது. அவர்களுடைய பெண்டிர் பச்சை இலையைத் தின்னாமலும் குளிர்ந்த நீரில் மூழ்காமலும் இறந்துபட்ட மன்னரின் மார்பை தழுவி உயிர்நீத்தவராய் களத்தில் கிடந்தனர். இதனை,

**“பெண்டிரும்**
**பாசடகு மிசையார், பனிநீர் மூழ்கார்,**

மார்பகம் பொருந்தி ஆங்கு அமைந்தனரே”
(புறநானூறு - 62:13-15)

என்று கழாத்தலையார் பாடல் கூறுகின்றது. கணவனை இழந்தப் பெண்கள் பச்சிலையை தின்பதும் குளிர்ந்த நீரில் மூழ்குவதும் மகளிர் வழக்கம் என்பது புறப்பாடல்களில் இருந்து தெரிகின்றது.

## ஆம்பல் உணவு:-

தான் இளமையாய் இன்பமுடன் இருந்தபோது அணிதற்குரிய தழை ஆடையாகப் பயன்பட்ட ஆம்பல், தன் கணவனை இழந்து நிற்கும் தற்போதைய துன்பநிலையில் அல்லியிடத்து உண்டான புல்லரிசியைத் தந்து உண்ணும் உணவாக அமைகின்றது என்று

**“இன்னா வைகல் உண்ணும்**
**அல்லிப் படூஉம் புல் ஆயினவே”**
(புறநானூறு - 248:4-5)

தலைவனை இழந்த ஒருத்தி கூறுவதாக ஒக்கூர் மாசாத்தியார் என்ற புலவர் பாடுகிறார். மகளிர் ஆம்பலின் புல்லரிசியை உணவாக கொள்வர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

## தீப்பாய்ந்து இறத்தல்:-

கோப்பெரும்பெண்டு தன் கணவன் பூதப்பாண்டியன் இறந்துபட்டதால் ஆற்றொணாத் துயரமும் தீயில் பாய்ந்து உயிரிழக்க முற்பட்ட பொழுது அவளை சான்றோர்கள் தடுத்தனர். அப்போது அவள் அவர்களை நோக்கி பல்லாற்றானும் அறிவு நிறைந்தவர்கள் உன் தலைவனோடு நீயும் இருப்பாயாக என்று கூறாமல் இருப்பாயாக என்று கூறும் சான்றோர்களே கையால் குளிர்ந்த நீர் சோற்றுடன் புளியுடன் வேகவைத்த வேளை இலையை உணவாக கொண்டு படுக்கையின் கண் பாயும் இன்றி கைம்மை நோன்பால் வருந்தும் பெண் நான் அல்லள். புறங்காட்டில் விறகால் அடுக்கப்பட்ட பிணப்படுக்கை உங்களுக்கு அரிதாகலாம். என் கொழுநன் இறந்தபின் மலர்ந்த தாமரையையுடைய நீர் நிறைந்த பொய்கையும், தீயும் எனக்கு ஒரு தன்மையாகும் என்றுரைத்தாள். இதை,

**“அரும்பு அற**
**வள் இதழ் அவிழ்ந்த தாமரை**
**நள் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே!”**
(புறநானூறு - 246:13-15)

கணவனை இழந்த மனைவி தீப்பாய்வதனைப் புறநானூற்றில் விளக்கப்பட்டுள்ளது. தன் இல்லத்தை அடைந்தவர்களுக்கு சுவையான உணவளித்து அவர்களுடைய துன்பத்தைப் போக்கிய தலைவன் இறந்து விட்டபின் அவனுடைய மனைவி தன் கூந்தலை கொய்தும், வளையலை களைந்தும் அல்லி அரிசி உணவை உண்ணும், தீப்பாய்ந்தும் துன்பநிலையை அடைந்தனர். எனவே பெரும்பாலும் சங்ககாலத்தில் கடுமையான நோன்பு மேற்கொள்வது கணவனை இழந்த மகளிரின் பண்பாடாக இருந்தது எனக் கொள்ளலாம்.

கணவனை இழந்தவர் மறுமணம் செய்து கொள்ளாமல் தம் உடலை வருத்தும் நோய்மேற் கொண்டதும், மனைவியர் தம் கணவர்பால் கொண்டிருந்த ஆழமான அன்பையும், கணவனையே வாழ்க்கையின் உயிராக மதித்து இருந்த தன்மையும் தெளிவாகின்றன. கணவனை இழந்த பெண்டிர் யாருடைய வற்புறுத்தலும் இன்றிதாமே கைம்மை நோன்பை நோற்றனர் என்பது புறநானூற்றுப் பாடல்கள் நன்கு விளக்குகின்றன.

## முடிவுரை:–

தமிழ் இலக்கியங்களில் சங்க பாடல்களின் வாயிலாக தமிழர்களின் வாழ்வும் பண்பாடும் இன்றைய மக்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. பண்டையத் தமிழர் பண்பாட்டில் தலை சிறந்து விளங்கியது விருந்தோம்பலாகும். பழந்தமிழர்கள் பண்பட்ட மனதோடும் உயர்ந்த சிந்தனையோடும் வாழ்ந்து வந்தது, நாம் புகழ்வதற்குரியனவாய் உள்ளன. விழுப்புண்படாத நாளெல்லாம் பயனின்றிக் கழிந்தநாளாக பண்டைத் தமிழர் கருதிய போதும், தமக்கெனச் சிறந்த போரியல் மரபும் நம்பிக்கையும் கொண்டிருந்தனர்.

# கணியான்

**கு.திருமுருகானந்தன்,**
தலைமை ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
தென்னிலை கடவூர்,
கரூர் மாவட்டம் - 621 301

கணியான் வில்லுப்பாட்டு கை சிலம்பு பாட்டு லாவணி போன்ற கதை பாட்டுகளுடன் சேர்ந்ததுதான் கணியான் கூத்தும் இக்கதை பாட்டை கணியான் வகுப்பினர் மட்டுமே கையாளுவதால் இதற்கு கணியான் கூத்து என்று பெயர் செவிக்கு இசையுணர்வைத் தவிர இதில் கண்டு களிக்க நடனமும் உண்டு வசனமும் உண்டு ஆகவே இக்கலையை கூத்து எங்களைப்பது சாலப் பொருந்தும்.

இக்கணியான் கூத்தில் முக்கியமாக மகுடம் எனும் இசைக்கருவி கையாளப்படுவதால் இது மகுட கச்சேரி என்றும் அழைக்கப்படுகிறது 'மகுடம்' என்பது வட்டமான தோலாலான ஒருமுக தாள வாத்தியம் இது தமிழ் வாத்தியத்தில் இரு தலைகளைப் போன்று இருக்கும். கன்றுக் குட்டி அல்லது ஆட்டுத்தோலால் விளிம்புகளில் சற்று பெரிதாக உருட்டி இருக்கும் ஒரே கூத்தில் இரு மகுடங்களாவது இருக்கும். 'வலந்தலை'யாக வாசிக்கப்படும் மகுடத்தில் லய பிரஸ்தாரங்கள் அதிக மாய் இருக்கும். இடந்தலையாக வசிக்கப் படுவது தக்கு சுருதியில் சருவல குகை முக்கியமாகக் கொண்டிருக்கும் இரு மகுடங்களும் சேர்ந்து இயங்கும் பொழுது அவைகளின் லயவின்யாசமும், கோர்வைகளும் அதை இடுப்பில் கட்டிக் கொண்டு மற்றொரு பக்கத்தின் கயிற்றை கையில் பிடித்துக் கொண்டு இரு கைகளாலும் வாசிப்பர். பிரஸ்தாரங்கள் வலது கரத்தினால் அதிகமாகவும் மகுடத்தை அணைத்தவாறு இயங்கும் இடது கரத்தினால் சற்று நிதானித்தம் வாசிக்கப்படும் மகுடங்களைத் தவிர ஜால்ரா எனப்படும் கைத்தாலமும் உண்டு இந்த மூன்று வாத்தியக்காரர்களையும் பக்க மேடங்களைக் கொண்டு நடுவில் பிரதான பாடகர் ஒருவர் மிக லாபகமாய் உடலை வளைத்து ஆடிக்கொண்டே கதையை பாட்டாக பாடி இடையே வசனங்களால் கதையின் கோர்வை விடாதபடி இணைப்பர்.

பக்கமேளக்காரர் மூவரும் தங்கள் வாத்தியங்களை வாசிப்பதை தவிர பாட்டையும் எடுத்து பின்பாட்டாக பாடுவர் இவர்கள் மெய்மறந்து வாசித்துக் கொண்டே பாடிக்கொண்டே அவ்வப்போது வெகு நளினமாய் அவர்கள் இருக்கும் இடத்திலேயே ஆடுவதும் உண்டு. இந்நாள்வரை தவிர பெண் வேடம் தரித்த இரு ஆண்கள் மகுடத்திற்கு ஏற்ப முன்னேறுவர் இவர்கள் பக்கம் நிலத்திற்கு முன் சுற்றி சுற்றி நடனமாடுவர்.

குறைந்தது 6 முதல் 9 நபர்களைக் கொண்டேன் இக்கணியான் கூத்து குழுவினர் தை–மாசி மாதம் முதல் ஆடி – ஆவணி மாதங்கள் வரை கிராமம் கிராமமாய் சென்று அம்மன் கொடை களில் பல்வேறு கிராம தேவதைகளின்

கதைகளை வள்ளி திருமணம்,பார்வதி கல்யாணம், பழையனூர் நீலி, இசக்கி மன்னராஜ சாஸ்தா, நல்லதங்காள், சுடலை மாடன், மதுரை வீரன், முத்து பாட்டன், காந்தரூபன்– காந்தரூபி போன்ற பல்வேறு கதைகளை கூத்தாடுவர் மேற்கண்ட கதைகளை கலைஞர்கள் ஏட்டு கதைகள் என்று அழைக்கின்றனர்.

முன்னோர்களாகிய பெரியோர்கள் எழுதப்பட்ட கதைகளையே பொதுவாக கணியான் கூத்து கலைஞர்களும் வில்லடிச்சான் பாட்டு பாடும் வில்லு புலவர்களும் தங்கள் கச்சேரிகளில் பயன்படுத்துகின்றனர். நீ பாடல்களில் வர்ணம் ஏட்டுகளும் அவற்றை பாடும் விதமும் அனேகமாய் இவ்வித கலைஞர்களும் ஒன்று போலவே கையாளுகின்றனர். பிரதான பாடகரை தொடர்ந்து பின்பாட்டுக்காரர் எடுத்துப் பாடுவதும், அவ்வப்போது ஆமாம், அப்படி என்ற ஏக காலத்தில் அனைவரும் சொல்லுவதும் சில ஸ்வரங்களில் அனைவரும் சேர்ந்து நீட்டி ஒன்று போல நிற்பதும் எல்லாமே இரு கலைகளுக்கும் பொதுவான அம்சங்கள் ஆகும்.

அனேகமாய் கிராமிய வர்ண மெட்டுகளே கணியான் கூத்தில் நிறைந் திருப்பினும் அவ்வப்போது தன்யாசி, தோடி, புகாரி, காம்போதி, நீலாம்பரி, சகானா, போன்ற சாஸ்திரீய ராகங்களும், கிளிக்கண்ணி, நொண்டிச்சிந்து, காவடிச்சிந்து, வர்ண மெட்டுகளும் இடம் பெறுகின்றன. பிரதான பாடகர் வசனம் பேசும்போது கூட மகுடங்களும் ஜால்ராவும் மெதுவாக வாசிக்கப்படுவது கேட்க மிக இனிமையாக இருக்கும். அனைவரும் சேர்ந்து பாடும்போது சலங்கை களுடன் ஆட்டோக்காரர்கள் ஆடும்போது, இவர்களின் வாசிப்பு மிகுந்த விறுவிறுப்பையும் ஓர் உச்ச கட்டத்தையும் அடைகிறது.

கணியான் கூத்து, கிராமங்களில் கோயில்களின் முன்பு கலங்களிலோ இரவு ஒன்பது மணிக்கு மேல் தொடங்கி, விடியும் வரை நடைபெறும். ஒரு காலத்தில், பக்கமேளக்காரரைத் தவிர பிரதான பாடகரே பெண் வேடமும் தரித்து ஆடிப்பாடி, வசனம் பேசி கூத்து நடத்தி வந்தாராம்.

ஒரே கதையை ஒருவரை அபிநயத்து நடித்து காட்டுவதை பரதரே நாட்டிய சாஸ்திரம் 'பாணிகா' என்று அழைக்கிறது. நமது தமிழ் பிரபந்த வகைகளில் உண்டான நொண்டி நாடகம் எனப்படுவது 'பாணிகா' எனும் இந்த நாட்டிய வகையைச் சேர்ந்ததுதான் நொண்டி நாடகங்களில் ஒரு நடிகன் ஒரே கதை முழுவதையும் தானே சொல்லி நடித்து காட்டுவானாம். ஆனால் சமீப காலங்களில் ஒருவரே நடித்து ஆடிக்காட்டி வந்த கணியான் கூத்தில் இப்பழக்கம் மாறி, பொதுமக்களை தவிர உத்தேசித்தோ என்னவோ, இரு தனி ஆட்டக்காரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாட்டக்காரர்கள் பெண் வேடம் தரித்து முகத்தில் அரிதாரத்தால் ஒப்பனை செய்து கொண்டு காலில் சதங்கையும் கட்டிக் கொள்கின்றனர். இவர்களது 'நிருத்தம்' மிகமிக விறுவிறுப்பக உள்ளது. கதக் என்னும் நடன வகையில் காணப்படும் பாத ஜாலங்களில் வேகத்தை இவர்களின் நடனத்தில் ஓரளவு காணலாம் பரதனின் லாசியானங்களில் ஒன்றான பாத பாடம் எனும் வகையை இக்கணியான் கூத்து கலைஞர்கள் வெகு நேர்த்தியாக கையாளுகின்றனர்.

'பாதப்பாடம்' என்பது தாள வாத்தியத்தில் சொல்லுக்கு சொல் ஆடுபவரின் கால் பேசுவதாகும். திஸ்ர

சதுஸ்ர மிஸ்ர வகைகளை இவர்கள் மகுடங்களுடன் சேர்ந்து மாறி மாறி பாத வேதங்களாய் கையாளுவதும் மிகவும் போற்றத்தக்கதாகும். இவர்கள் ஆட்டத்தில் அபிநயம் இல்லை. ஆனால் இவர்களின் அங்க அசைவுகள் கரகாட்டக்காரர்களின் நடனத்தை ஒட்டியதாகவே இருக்கிறது இவர்கள் ஆடாத சமயம் பின் பாட்டுக்காரர் களாகவும் மாறிவிடுவர்.

சாதாரணமாக நெல்லை குமரி மாவட்டங்களில் கிராம தேவதைகளுக்கு பூசையிடும் பூசாரியை கோமரத்தாடி என்று அழைப்பர். இத்தேவதைகளுக்கு விலங்கினங்களைப் பலி கொடுப்பது தொன்று தொட்டு வந்துள்ள ஒரு பழக்கமாகும்.

பலியான விலங்கின் குருதியை ஒரு கொப்பரையில் வைத்திருக்க இத்கூத்தாடும் கணியான் கூத்து முடிந்ததும், தன் உடலில் ஒரு சிறிய வெட்டு காயத்தையாகிலும் செய்து தனது குருதியையும் அத்துடன் சேர்ப்பான். அந்த கொப்பரை குருதியை அம்மனை தன்னிடத்தை கொண்டுள்ள கோமாரத்தாடி எடுத்து குடித்து விடுவான். இந்த வழக்கம் இன்றும் பல கிராமங்களில் நிகழ்ந்து வருகிறது.

“காளி ஊட்டும் (படையல்) கணியான் கூத்தும்” என்பது மாவட்டங் களில் வழங்கும் ஒரு பழமொழி. கூத்து முடிந்ததும் அம்மனுக்கு கற்பூர ஆரத்தி எடுக்கும் சமயம் ‘மங்கள வாழி’ என்னும் மங்களப் பாடலை பாடுவர்.

கணியான் கூத்து அம்மன் கொடைகளை தவிர விசேஷ அழைப்புகளின் போதும் அறுவடை காலங்களிலும் நடைபெறுகின்றன இக்கூத்து குரு முகமாகவே பயிலப் படுகிறது. ஆசான் என்றோ அண்ணாவி என்றோ அழைக்கின்றனர்.

பானாங்குளம் ராமசாமி கணியான் என்பவர் கூத்துக்கு வெகு நேர்த்தியாக வசனம், இசை இவற்றில் சோகம், சிங்கார முதலியவைகளை அமைத்து அமைப்பை ஓர் ஒழுங்கு படுத்திய மாபெரும் அண்ணாவி என்று கணியான்மார் கூறுகின்றனர். பழங்காலம் தொட்டு இவர்கள் இப்பெரும் ஆசான்களில் ஏட்டு கதைகளையே கையாண்டாலும் சமீப காலத்தில் அனேக புதிய கற்பனை கதைகளுக்கும் ஆடத் தலைப்பட்டுள்ளனர்.

சாதாரணமாய் ஒரு கதையை யார் ஒருவர் அதிக நாட்கள் நடத்துகின்றனரோ. அக்குழுவினரே மிகச் சிறந்த குழுவாக கருதுகின்றனர் கிராம மக்கள். கணியான் கூத்துடன் தெருக்கூத்து, சாக்கியார் கூத்து, போன்றவற்றை ஒப்பிடுதல் ஆராய்ச்சிக்குரிய பொருளாகும். பரதர் கூரிய நாடகத்தின் முக்கிய லட்சனங்களை கொண்டுள்ள இக்கூத்தை நெல்லை, குமரி மாவட்டத்தினரைத் தவிர மற்றும் பலரும் அறிய பேணிக்காத்து வளரச் செய்வது கலைவல்லுநர்களின் தலையாய கடமையாகும். இக்கூத்துக் கலையின் மறுமலர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் ஆய்வாளர்கள் மக்கள் ஊக்குவிக்க வேண்டும்.

## மேற்கோள் நூல்கள்

ஆறுமுக பெருமாள் நாடார் எழுதிய சுடலைமாட சுவாமி கதைகள்.

அருணாச்சலம் எழுதிய அகத்திணையியல் உரைவளம்.

நடராஜர் பிள்ளை எழுதிய இசக்கி கதை.

ஏ.கே.பெருமாள் எழுதிய சடங்கில் கரைந்த கதைகள்.

ராமச்சந்திரா எழுதிய கணியான் ஆட்டம்.

சக்திவேல் எழுதிய பொன்னிறத்தால் கதைப்பாடல்.

# புது வாழ்க்கை - சிறுகதை தொகுப்பில் - எளிய மக்களின் பண்பாடும் வாழ்க்கை முறையும்

**முனைவர் மு.செந்தில்குமார்**
உதவிப் பேராசிரியர்,
செந்தமிழ் கல்லூரி,
தமிழ் உயராய்வு மையம்,
54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை.

**ம.தேவி**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ் கல்லூரி,
தமிழ் உயராய்வுமையம்,
54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை.

சங்க இலக்கியங்கள் தொடங்கி நவீன இலக்கியங்கள் வரை பண்பாடு குறித்து பல்வேறு செய்திகளை பதிவு செய்துள்ளன. அந்த வகையில் சு. காந்திதுரை அவர்களின் முதல் சிறுகதை தொகுப்பான "புதுவாழ்க்கை" சிறுகதைகளில் பண்பாட்டை விளக்கும் நிகழ்வுகள் அவற்றை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்பாடு

பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டும் தொடர்புடையது, பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. தலைமுறை தலைமுறையாக அறிவு சார்ந்த நிலையில் கற்றுணர்ந்த நடத்தை முறைகளைக் குறிக்கிறது என்பது அறியப்படுகின்றது, "பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவற்றை உள்ளடக்கியதாகும் கூடவே மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் உள்ளடக்கிய ஒரு முழுமையான தொகுதியாகும்"[1] (ப.11) (பண்பாட்டு மானிடவியல்) தொன்மைப் பண்பாடு என்னும் நூலில் டைலர் விளக்குவதாக பண்பாட்டு மானிடவியல் என்னும் நூலில் பக்தவச்சல பாரதி குறிப்பிடுகின்றார்.

## ஈகைப்பண்பு:

மனிதனாகப் பிறந்தவர் எவராயினும் தம்மிடம் பொருள் இருக்கையில் தன்னை நாடி வருபவருக்கு உதவுவதே மேலான அறமாகும். செல்வத்தின் பயன் ஈதலே என்பதை புறநானூற்றுப் பாடல் பின்வருமாறு விளக்குகிறது.

> "உண்பது நாழி உடுப்பவை இரண்டே
> பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே
> செல்வத்துப் பயன் ஈதல்"[2]
>
> (புறநானூறு 189)

என்ற பாடலுக்கு இணங்க துணிகாரசாமி கதையில் வறுமையில் உள்ள ஒரு சிறுவனுக்கு புத்தாடை வழங்கப்பட்ட நிகழ்வு வெளிப்பட்டுள்ளது. வெடிப்பான சின்னச்சாமியாகச் சிறுவன் சிரிக்க, படிக்கும் பையனுக்குப் பத்தாப்பு வரை யூனிபார்ம் டவுசர், சட்டை யாருக்கும் தெரியாம உனக்குத் தாரேன் சரியா?[3] (புதுவாழ்க்கை துணிகாரசாமி) (ப.62–63)

வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மனிதர்களின் நிலையினை இக்கதை கூறுகிறது, யாரும் உதவுவதற்கு முன் வரதா சூழலில் துணிகாரசாமி உதவுகிறார். அந்த சிறுவனுக்கு பத்தாம் வகுப்பு வரை யூனிபார்ம் தருவதாக கூறுகின்றார். கல்விபயிலும் மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்னும் எண்ணத்தை தனது சிறுகதையில் வலியுறுத்துகிறார்.

'நல்ல மனிதர்' சிறுகதையில் கணவனை விட்டுப் பிரிந்து வந்த பெண்.

தன் தாய், தகப்பன் ஊருக்குச் செல்ல பணம் இல்லாமல் தெருத் தெருவாக அலைந்து கொண்டு இருக்கும் போது ஒரு வீட்டின் முன் நின்று, தண்ணீர், சாப்பாடு கேட்டாள். அவள் ஊர் பற்றி கூறியவுடன் ஊருக்குச் செல்வதற்கான பணத்தை அப்பெண்ணுக்கு கேட்கா மலேயே கொடுத்து உதவினார்.

"தினைத் துணை நன்றி செயினும்
பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்"[4]
(குறள் 104)

தினையளவு உதவியை ஒருவன் செய்தானாயினும் நன்றியுடையவர் அதனைப் பனையளவாக மதித்துப் போற்றுவர்.

இவ்வாறாக முகம் தெரியாத ஒருவர் தக்க சமயத்தில் செய்யும் உதவி மிகப் பெரியது என்பதனை குறள் உணர்த்துகிறது.

## நன்றி மறவாப்பண்பு :

"நிலம்புடை பெயர்வதா யினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி இல்லென
ஆரம்பா பிற்றே"[5] (புறம் 34:5-7)

என்னும் வரிகள் நன்றி மறவாப் பண்பின் உயர்வைச் சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டுகிறது. இப்பாடலில் கூறப்படும் செய்தியினைப் போன்று "இதயம் பேசும்", "துணிக்காரசாமி" கதைகளில் நன்றி மறவாமைப் பண்பு காணப்படுகின்றது.

"இதயம் பேசும்" என்னும் கதையில் வரும் அம்மா கதாபாத்திரமான இருதயம் என்ற பெண் யார் என்று முன் பின் தெரியாத நபர் பழக்கத்தின் காரணமாக இருதயத்தின் மகன் சகாயத்திற்கு தன் சைக்கிளை எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் கொடுத்து உதவுகிறார். சகாயமும் காலப்போக்கில் திருமணம், குழந்தை, வேலை, என்று நன்கு வளர்ச்சி அடைந்திருந்தான். ஆனால் சகாயத்தின் தாய் இருதயம் அந்த சைக்கிளை தன் தம்பி கொடுத்த சீதனமாக எண்ணிப் பேணிக்காத்து வந்தாள்.

"சகாயம் வளர்ச்சி வந்ததும் மறந்து விட்டான். ஆனால் இருதயம்! சைக்கிள் அல்ல, எம் தம்பி, அக்காவுக்குக் கொடுத்த சீதனம் சைக்கிளை மாசம் ஒரு தடவயாவது தொடைக்காமல் விட்டதுல்ல, சைக்கிளில் இருக்கும் இதயம் இருதயத்திடம் பேசும், நான் இருக்கும் வரையில் சைக்கிள் இந்த அறையில தான் இருக்கும். யாரும் மறு பேச்சுப் பேசுவதில்லை. சைக்கிளத் தம்பியாகவே பார்த்தாள்".[6] (இதயம் பேசும்) (ப.44) உறவினர்களே உதவி செய்ய முன்வராத கலாகட்டத்தில் பழக்கத்தின் காரணமாக உதவிய நபரினை மறக்காமல் இருப்பதை இக்கதை விளக்குகிறது.

துணிக்கார சாமி கதையில் சிறுவனாக இருந்த சின்னச்சாமி வளர்ந்து ஒரு நல்ல நிலைக்கு வந்தவுடன் வறுமையான சூழலில் துணிகளை கொடுத்து உதவிய துணிக்காரசாமிக்கு நேரில் சென்று நன்றி கூறுகின்றான். நன்றி மறவாப்பண்புக்கு இலக்கணமாக விளங்குகிறான்.

"என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கன்னு" சொல்லிட்டுக் காலில் ஒரு காகிதப் பொட்டமணத்தை வைத்தான். மனிதன் எதுவும் பேசல, "மலர் அந்த விபூதித்தட்ட எடுத்துட்டு வா" வந்ததும் திருநீறு பூசி வாழ்த்தினார்.

"அய்யா சின்ன மனுஷா கடன் அடைக்க வந்தயாக்கும்?"

"அய்யோ! உங்களப் பார்க்க மட்டுமே வந்தேன் நான் போடுற சட்டை நீங்கள் கொடுத்த அன்புதானே என்னை இந்த அளவுக்கு உயர்த்தியது. நீங்க எனக்கு யூனிபார்ம் டவுசர்

*சட்டைத் தந்நவரு காலம் பூராவும் கடமைப் பட்டிருக்கேன்".[7] (பக் 52–53) (துணிக்கார சாமி)*

*மேற்கண்ட நிகழ்வுகள் நன்றி மறவாப்பண்பை எடுத்துக் கூறுகிறது.*

**கலை உணர்வு:**

*சங்ககாலத்தமிழர் பாணர்களையும், கூத்தர்களையும் போற்றி இசை, கூத்துக் கலைகளை வளர்த்தனர்.*

> **"கழைபாடு இரங்க பல்லியம் கறங்க**
> **ஆடுமகள் நடந்த கொடுங்புரி**
> **நோன்கயிற்று"[8] (நற்-95)**

*என்று வரும் நற்றிணைப்பாடல் வரிகளில் இசைக் கருவிகள் முழங்க நடனமாடும் கூத்துக்கலையினை சங்க காலத் தமிழர்கள் இன்று வரையும் தொடர்ந்து வளர்த்து வருவதை "மரியாதை" கதை வாயிலாக அறிய முடிகிறது. இராமநாதன் பரம்பரையில் எல்லாரும் ஒத்தப்பிள்ளையாக கலையை வளர்த்தனர். ஆனால் இராமநாதனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். இருவரும் கலையை நன்கு கற்றுக்கொண்டு அவர்களும் வளர்த்தனர். பிற்காலத்தில் அவர்கள் இருவரும் நடிகர்களாகவும் வலம் வந்தனர். ஒரு தொழிலை நேர்மையாகவும் அற்பணிப்புடன் செய்தால் அதற்கான பலனை பெறலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாய் இருந்தனர்.*

*"இந்த வரும் நம்ம ஊர்த் திருவிழாவுக்கு யார் கச்சேரிஞ் திண்டுக்கல் அங்கிங்கு இசைக் கச்சேரிஞ் இரண்டாம் நாள் ஆடலும் பாடலும் மூன்றாம் நாள் குறவன் குறத்தி ஆட்டமாக மாறிப் போய்விட்டது. இந்த நிகழ்ச்சிக்கு கிராமத்துச் சார்பாக மாலை, மரியாத இராமநாதனின் மகன்கள் பெற்றார்கள், கூத்தாடி மறுவடிவம் பெற்று இப்பக் கலைஞன் கலை தாகத்துக்கு மேடையில் ஆதங்கம் நிறைந்த கண்களுடன் நாடக நடிகர்களாக மாறிப்போனார்கள்".9 (ப.23) (மரியாதை)*

*இன்றளவும் கலை உணர்வை வெளிப்படுத்தும் விதமாக மரியாதை கதை அமைந்துள்ளது.*

**நிறைவுரை:**

*சு. காந்திதுரை அவர்களின் "புதுவாழ்க்கை" சிறுகதை தொகுப்பில் மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடு, நம்பிக்கைகள், நிலையாமைத் தத்துவங்கள் வெளிப்பட்டுள்ளன.*

**முதன்மை நூல் :**

*சு.காந்திதுரை புதுவாழ்க்கை சிறுகதைகள், சித்ரா பதிப்பகம், சென்னை.*

**துணை நூல்கள் :**

*பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல் மெய்யப்பன் பதிப்பகம்.*

*அ.மா.பரிமணம் புறநூனாறு மூலமும் உரையும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை*

*கு.வே. பாலசுப்பிரமணியன், நற்றிணை நியூ செஞ்சரி புக் அவுஸ் சென்னை.*

# போர்க்கள மெய்ப்பாடுகள்

– அ. தேன்மொழி,
உதவிப் பேராசிரியர்,
மன்னர் திருமலைநாயக்கர் கல்லூரி,
மதுரை.

மக்கள் வாழக்கூடிய பகுதி களம் என்ற சொல்லால் அழைக்கப்பட்டது. களம் என்பதற்கு இடம் (கூடுமிடம், ஒரு செயல் நடக்குமிடம்) என்று பொதுவாகப் பொருள் கூறப்படுகின்றது. ஆடுகளம் என்பது விளையாடுமிடம் என்றும் தொழில் செய்யும் இடம் தொழிற்களம் என்றும் வழங்கப்படுகிறது. அதுபோல் போர் நடக்குமிடம் போர்க்களமாகும். போர் நடைபெறும் போர்க்களத்தின் நிகழ்வுகளை நம் கண்முன்னே தோன்றுமாறு புலவர்கள் இலக்கியங்களில் பதிவுசெய்துள்ளனர். போரில் நடைபெறும் நிகழ்வுகளைப் பலதரப்பட்ட காட்சிகளாக்கி இலக்கியங்கள் விரிவாக விளக்கியுள்ளன. இத்தகைய கள வருணனைகள் போர்க்களக் காட்சிகளை நெஞ்சில் பதிய வைக்கும் முயற்சிகளாக இடம் பெற்றுள்ளன. இக்காட்சிகளின் வழி போர் வீரர்களின் மெய்பாடுகளையும் காண முடிகிறது. வீரத்தினை வெளிகாட்டும் இடத்து வீரர்களிடையே பெருமித உணர்வு மேலோங்கி உள்ளதைக் காணமுடிகிறது. போர்க்களத்தில் எழும் ஒலிகளை கேட்கும் போது ஒருவிதமான அச்சம் மனதில் தோன்றுவதை உணர முடிகிறது. போர்க்களத்தில் பகை நாட்டவரைக் காணும் வீரர்கள் வெகுண் டெழுவதையும் போரில் நிகழும் உயிரிழப்புக்கள் அவலச்சுவையை ஏற்படுத்தியுள்ளதையும்; இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. போரின் இறுதியாக இருதரப்பினரில் யாரேனும் ஒருவர் வெற்றி பெற்று உவகையுடன் நாடு திரும்பியுள்ளனர்.

## பெருமிதம்

போருக்குரிய காரணங்களுள் ஒன்றாக வீரர்களின் மறவுணர்வும், வீரமரணம் பற்றிய நம்பிக்கையும் காணப்படுகின்றன. ‘மறவர்களின் மிகைப்பட்ட மறப்பண்பு போருக்குத் தோற்றுவாயாக அமைந்துள்ளது. தன்னுறு தொழிலினராய் மறவர்கள் விளங்குவதும், அவ்வாறு விளங்கும் மறவர்களின் வீர மேம்பாட்டை வெட்சித் திணைப் பாடல்கள் விளக் குவதும் இதற்குச் சான்றாகும்“[1] எனப் போருக்கு வீரர்கள் மறவுணர்வும் அதனால் ஏற்படும் பெருமித உணர்வும் ஒரு காரணமாக அமைந்துள்ளதை அறிஞர் குறிப்பிடுவர்.

‘அமரில் அமரர் உலகு அடைந்தாலும் சரி வெற்றி வாகை சூடினாலும் சரி, வீரர் தம் வாழ்வும் சாவும் அக்கால மக்களால் பாராட்டப்பட்டன”[2] ஆயர் குலமகளிர் கொல்லேறு தழுவும் வீரனை மணந்து கொள்ள விரும்பியுள்ளனர். காளையின் கொம்புக்கு அச்சம் கொள்பவனை ஆயர்மகள் அடுத்த பிறவியில் கூடக் கணவனாக ஏற்க மாட்டாள் என்பதை,

**"கொல்லோற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளே ஆயமகள்"** (கலி. 103)

என்று குறிக்கிறது கலித்தொகை. வீரனைத் தன் கணவனாகப் பெறுவதனையே பண்டைய பெண்கள் சிறப்பாகக் கருதி பெருமிதம் கொண்டுள்ளனர்.

புறநானூற்றுத் தாய் தன் மகனை வீரன் எனக் கூறிக் கொள் வதிலேயே பெருமைப் பட்டுள்ளதை,

**"வெள்ளை வெள்யாட்டுச் செச்சைபோலத்**
**தன்னோர் அன்ன இளையர் இருப்பப்**
**பலர்மீது நீட்டிய மண்டை என் சிறுவனைக்**
**கால்கழி கட்டிலில் கிடப்பித்**
**தூவெள் அறுவைபோர்ப்பித் திலதே"**
(புறம். 286)

என்றும், தன் மகன் களிறெறிந்து விழுப் புண்பட்டுக் களத்தில் மாண்டான் எனக் கேட்ட நரை முதிர்ந்த தாயொருத்தி அவனை ஈன்ற பொழுதினும் பெரிதுவந்து கண்ணீர் விட்டுள்ளதை,

**"மீன்உண் கொக்கின் தூவிஅன்ன**
**வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்**
**களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை**
**ஈன்ற ஞான்றினும் பெரிதே, கண்ணீர்**
**நோன்கழை துயல்வரும் வெதிரத்து**
**வான் பெயத் தூங்கிய சிதரினும் பலவே"**
(புறம். 277)

என்றும், சங்ககாலத் தாய்மார்கள் மகனின் இழப்பைவிட அவனது வீரச் செயல் கண்டு பெருமிதம் கொண்டதை,

**'கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்**
**செங்களம் துழவுவோள் சிதைந்து வேறாகிய**
**படுமகன் கிடக்கைகாணூஉ**
**ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே!"**
(புறம். 278)

என்றும் புறப்பாடல்கள் எடுத்துரைக் கின்றன.

போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த வீரனைப் பெற்றதாய் தன் மகனின் வீரச்செயல் குறித்துமிகவும் பெருமிதம் கொண்டாள். அப்போது அவளுடைய வற்றிய முலைகளில் பால் ஊறிச் சுரந்தன என்பதை,

**"இடைப்படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய**
**சிறப்புடை யாளன் மாண்புகண் டருளி**
**வாடுமுலை ஊறிச் சுரந்தன**
**ஓடாப் பூட்கை விடலைத் தாய்க்கே"**
(புறம். 295)

என்றுரைக்கிறது புறநானூறு.

ஒரு ஆண்மகன் வீரப் பண்புடையவனாக விளங்குவதையே ஆணும் பெண்ணும் பெருமிதமாக எண்ணியுள்ளனர். ஆண்மக்கள் தம் வீரப்பண்பை வெளிப்படுத்த களம் தேவைப்பட்டது. அந்தக் களம் போர்க் களமாகத் திகழ்ந்துள்ளது. ஆண்மகனின் வீரப்பண்புகளை நிரூபிக்க போர்க்களம் தேவைப்பட்டதால் வீரம் போற்றப்பட்டதோடு பெருமிதமாகவும் கருதப்பட்டது.

## அச்சம்

எட்டுத்திசைகளும் அதிரும் படியாகப் போர்க்களத்தில் ஒலிகள் எழுப்பப் பட்டன. இவ்ஒலிகள் மக்களுக்கு அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி பார்ப்போரும் கேட்போரும் பயந்து நடுங்கும்படியாக இருந்ததோடு மக்களின் காதுகளைச் செவிடாக்கும் தன்மையுடையதாகவும் இருந்துள்ளது. படைகள் போர்க்கெழும் போது எழுந்த ஒலிகளும், போரிட்ட போது எழுந்த ஒலிகளும், வெற்றி பெற்றபோதும் தோல்வியைத் தழுவியபோதும் எழுந்த ஒலிகளும் உலகே நடுங்கும் படியாக இருந்தன என்பதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. வீரக் கழலணிந்த வீரர்கள் போர் முரசின் அழைப்பைக் கேட்க விரும்புகின்றனர் என்பதை,

**"பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை**
**வளிபொரு தெண்கண் கேட்பின்**
**அதுபோரென்னு மென்னையு முளனே"**
(புறம்.89)

என்கிறது புறநானூறு. ஆரவார ஒலியுடன் பகைவர்களைக் கொன்று அழித்ததை,

**"............ வயின் வயின்**
**உடன்று மேல் வந்தவம்ப மள்ளரை**
**வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே அவரை**
**அழுந்தப் பற்றிஅகல் விசும்பு ஆர்ப்புஎழக்**
**கவிழ்ந்து நிலம்சேர அட்டதை**
**மகிழ்ந்தன்று மலிந்தன்றும் அதனினும் இலனே"** (புறம்.77)

என்று புறநானூறு பதிவு செய்கிறது.

குட்டுவன் சேரல் போர் செய்த போர்க்களம் பல்வேறு ஒலிகளைக் கொண்டிருந்தது. உலகில் இருளையெல்லாம் போக்கும் கதிரவன் மறையாத நடுப்பகல் பொழுதில் வெள்ளிய நரிகளின் ஊளையும், கோட்டான்களின் ஓசையையும் உடைய தாகப் போர்க்களம் விளங்கியதை,

**"ஞாயிறு கோடா நண்பகல் மயத்துக்**
**கவலை வெண்ணரி கூஉமுறை பயிற்றிக்**
**கழல்கட் கூகைக் குழறுகுரற் பாணிக்**
**கருங்கட் பேய்மகள் வழங்கும்"**
(பதிற்.22)

என்று பதிற்றுப்பத்து விளக்குகின்றது. போர்க்களத்தில் நரி ஊளையிடுதல், கூகைக்குழறுதல், பேய்மகள் ஆடுதல் ஆகிய நிகழ்வுகள் இரவுப்பொழுதில் நிகழக் கூடியவை. ஆனால் சேரன் பகைவரோடு பொருத போர்க்களத்தில் நடுப்பகலில் இத்தகு ஆரவார ஒலிகளைக் கேட்க முடிகிறது என்பது படிப்போருக்கும் அச்சத்தைக் கொடுப்ப தாக அமைந்துள்ளது.

அச்சத்தைத் தோற்றுவிக்கும் போர் ஒலிகள் இயற்கையை பாதிப்பதோடு மனிதனின் உள்ளத்திலும் அமைதியற்ற நிலையையும் உருவாக்குகின்றன. போருக்கான ஒலியைக் கேட்கும் போது வீரர்கள் தன்னிலையை இழந்து போர் வெறிக்கு உள்ளாகின்றனர். அளவுக்கு மீறிய ஒலிகளால் மனிதன் தன் கேட்கும் திறனை இழக்கவும் வாய்ப்புள்ளது.

## வெகுளி

போர்க்களத்தில் படைகளும் படை வீரர்களும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்ளும் செயல் காண்பவர்களை அதிரவைப்பதாக உள்ளது. போரில் தான் வெற்றிபெற வேண்டும் என்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பல உயிர்களைக் கொன்று குவிக்கும் அளவிற்கு கோபமும் கொலைவெறியும் கொண்டவர்களாகப் போர் வீரர்கள் தோன்றினர். பகைவர்களை அழிக்கும் வேகமும், துடிப்பும், ஆவேசமும் இருப்பதைப் போரிட்ட முறைகளால் அறிய முடிகிறது.

அதியமான் நெடுமான் அஞ்சி போர்க்களத்தில் போரிட்ட செயல் பாட்டை,

**"வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்**
**களம்படக் கடந்த கழல்தொடித்**
**தடக்கை"** (புறம்.91)

என்றும்,

**"நீயேஜயவி புகைப்பவும் தாங்காது ஒய்யென**
**உறுமுறை மரபின் புறநின்று உய்க்கும்**
**கூற்றத்து அனையை"** (புறம்.98)

என்றும் புகழ்கின்றார் ஔவையார்.

அதியமான் எழினிபகைவர் பலரைக் கொன்று வீழ்த்திட வல்ல வனாகத் திகழ்ந்ததை,

**"ஒருவன் ஆர்உயிர் உண்ணாய் ஆயின்**
**நேரார் பல் உயிர் பருகி,**
**ஆர்குவைமன்னோ, அவன் அமர்**
**அடுகளத்தே"** (புறம்.230)

என்கிறது புறநானூறு. மனிதன் தனக்குள் வைத்திருந்த சினம், கோபம், வெறுப்பு போன்றவற்றை ஒன்று சேர்த்து வெளிப்படுத்தும் இடமாகப் போர்க்களம் இருந்துள்ளதை அறிய முடிகிறது. மனித உயிர்களை பொருட்படுத்தாமல் வெற்றி ஒன்றை மட்டும் எண்ணிச்செய்யும் போர்களால் மனித மாண்பு சிதைவதை உணர முடிகிறது.

## அழுகை

உறவுகளே மனித குலத்தை இயக்குகின்றன. போரின் போது பலரும் தன்னுடைய உறவுகளை இழந்து வருந்துகின்றனர். தாய் மகனையும், பிள்ளைகள் தந்தையையும், மனைவி கணவனையும், மக்கள் மன்னனையும் இழந்து துயர் உற்றனர். எழினி தகடூரிலே போர் செய்து போர்க்களத்தில் இறந்தான். பெற்றத்தாயை இழந்த குழவி போல் அவன் சுற்றத்தினர் வருந்தினர். மக்கள் கடும் பசியால் வருந்திய நெஞ் சோடு வாடினர் என்பதை,

**"பொய்யா எழினிபொருது களம் சேர**
**ஈன்றோள் நீத்த குழவிபோலத்**
**தன்அமர் சுற்றம் தலைத்தலை இனையக்**
**கடும்பசி கலக்கிய இடும்பைகூர்**
**நெஞ்சமொடு"** (புறம். 230)

என்கிறது புறநானூறு.

இளையவரும் முதியவருமாக ஊரார் பலர் பகைப்புலத்தை நோக்கிச் சென்றனர். இடைவழியில் நடந்த போரில் முதியவளின் மகன் புண்பட்டுவீழ்ந்தான். பகைவரை முறியடித்துத் துரத்திய பின் தரையில் விழுந்து கிடந்த அந்த வீரனை எழுப்ப முயன்றனர். அவன் எழவில்லை. விழுப்புண்பட்ட அவன் மார்பு மண்ணைத்தழுவப் பிணமாய் கிடந்தான். அவன் இறந்த செய்தி அவன் தாய்க்கு எட்டியது. அவனை நாள்தோறும் பாராட்டி மகிழ்ந்த அந்த முதியவளின் உள்ளம் துயருற்றது. அவளது இரங்கத்தக்க நிலையை,

**"புள்ளார் யாணர்த் தற்றேஎன்மகன்**
**வளனும் செம்மலும் எமக்குஎனநாளும்**
**ஆனாதுபுகழும் அன்னை**
**யாங்கு ஆகுவள்கொல் அளியள் தானே"**
(புறம். 254)

என்கிறது புறநானூறு.

போருக்கு முன்னும் பின்னும் பாரிமகளிரின் நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பாரி மகளிர் மயிலாடும் சோலை சூழ்ந்த குன்றின் மீது ஏறிநின்று போர் தொடுக்க வந்திருக்கும் பகைவரையும் அவர்தம் குதிரைப் படைகளையும் கண்டனர். ஆனால் அப்போது அவர்கள் மனத்தில் அச்சம் தோன்றவில்லை. மாறாக ஆர்வம் தோன்றியது. உடனே அங்கிருக்கும் குதிரைகளை ஒன்று இரண்டு என்று எண்ணத் தொடங்கினர். ஆனால் போருக்குப் பின்பு அவர்கள் கண்டகாட்சி பெரிதும் இரங்கத்தக்கது. சின்னச்சிறு குடிசை, அதைச் சூழ்ந்த முள்வேலி, அருகே பீர்க்கங்கொடி படர்ந்த குப்பைமேடு, அதில் நின்று அவ்வழியே செல்லும் உப்பு வண்டிகளை ஒன்று இரண்டு என எண்ணினர் என்று தந்தையை இழந்த மகளிரின் நிலையைக் கபிலர்,

**"பாரிமாய்ந்தெனக் கலங்கிக் கையற்று**
**நீர்வார் கண்ணேம் தொழுநிற் பழிச்சிச்**
**சேறும் வாழியோபெரும்பெயர்ப் பறம்பே**
**கோல்திரள் முன்கைக் குறுந்தொடிமகளிர்**
**நாறுஇருங் கூந்தல் கிழவரைப் படர்ந்தே"**
(புறம். 113)

**"..........பீரை நாறியசுரை இவர் மருங்கின்**
**ஈத்தலைக் குப்பை ஏறிஉமணர்**

**உப்புலூய் ஒழுகை எண்ணுபமாதோ"**
**(புறம்.116)**

என்று பதிவு செய்கின்றார். போர்க் களத்தில் தன் கணவன் இறந்தான் என்ற செய்தியை அறிந்த மனைவி போர்க்களம் சென்று தன்னுடைய தனிமைத் துயரை நினைத்து கதறிப் புலம்புவதனை புறநானூறு குறிப்பிடுகின்றது.

**"என்திறத்து அவலம் கொள்ளல் இனியே**
**வல்வார் கண்ணி இளையர், திளைப்ப**
**நகாஅல்என வந்தமாறே எழாநெல்**
**பைங்கழை பொதிகளைந் தன்ன விளர்ப்பின்,**
**வளைஇல் வறுங்கை ஓச்சிக்**
**கிளையுள் ஒய்வலோ? கூறுநின் உரையே"**
**(புறம். 253)**

சோழனுடைய போர்க்களத்திலே கணவனை இழந்த பெண்கள் நான்கு திசைகளிலும் அலறி ஓடுகின்றனர். இக்காட்சி மரங்கள் அடர்ந்த சோலையில் பெருங்காற்றுப் புகுந்து வீசுவதைக் கண்டு அஞ்சி மயிலினங்கள் வெவ்வேறு திசைகளிலே சிதறி ஓடுவதைப் போல இருந்தது என்பதை,

**"கடி காவில் காற்றுஉற்றுஎறியவெடிபட்டு**
**வீற்றுவீற்றுஓடும் மயில் இனம் போல்**
**- நாற்றிசையும்**
**கேளிர் இழந்தார் அலமருபசெங்கண்**
**சினமால் பொருதகளத்து" (கள.நா. 29)**

என்று பொய்கையார் குறிப்பிடுகிறார்.

போர், ஒரு தரப்பினருக்கு வெற்றியையும் மற்றொரு தரப்பினருக்குத் தோல்வியையும் தந்தாலும் உயிர் இழப்பு என்பது இரு திறத்துப் படைகளுக்குமே பொருந்தும். போரினால் மக்கள் உறவுகளை இழந்து தங்கள் எதிர்காலம் கேள்விக் குறியாகி நிற்க மிக்க வருத்தத்தையே சந்திந்துள்ளனர். வீரம் போற்றப்பட்டாலும் இழப்பு என்பது மீண்டு வராத ஒன்றாகி நிற்கும் போது வருந்துவதும் அழுவதும் மனித இயல்பு என்பதனை உணர முடிகிறது.

## அவலச்சுவை

இலக்கியங்கள் பலவற்றிலும் இரத்தம் தோய்ந்த போர்க்களம் காட்சிப் படுத்தப்படுகிறது. போர்க்களத்தில் இரத்தமானது ஆற்றுநீர் போலவும் கடல் போலவும் பெருக்கெடுத்து ஓடியது. அதில் மனித உடல்களும், விலங்குகளின் உடல்களும், படைக்கலன்களும் அடித்துச் செல்லப்படுகிறது. இவ்வாறு தமிழ் இலக்கியங்கள் குருதி பாய்ந்த போர்க்களத்தைக் காட்சிப் படுத்துகின்றன.

குருதி பாய்ந்தோடும் போர்க் களத்தை புறநானூறும், பதிற்றுப்பத்தும் காட்சிப் படுத்துகின்றன. என்பதனை,

**"கொய்சுவல் புரவி....**
**வளிவழக் கறுத்தவங்கம் போலக்**
**குருதியம் பெரும்புனல்**
**கூர்ந்தொழிந்தனவே" (புறம். 368)**

என்று புறநானூறும்,

**"நெய்த்தோர் தொட்டசெங்கைமறவர்**
**நிறம்படுகுருதிநிலம்படர்ந் தோடி**
**மழைநாட் புனலினவற்பரந் தொழுக"**
**(பதிற். 49)**

என்று பதிற்றுப்பத்தும் குறிப்பிடுகின்றன.

போர்க்களத்தில் புண்பட்டதாலும் பகைவர்களால் யானையின் தும்பிக்கை வெட்டப்பட்டதால் அவை வலியில் துடித்ததையும், காவலாயிட்ட தோற் பரிசையினையும் கிழித்துக் கொண்டு அம்பு பாய்ந்ததால் குதிரைகள் புல் உண்ண முடியாத நிலையில் இருந்ததையும்,

**"எடுத்தெறி எஃகம் பாய்தலின் புண்கூர்ந்து**
**பிடிகணம் மறந்தவேழம் வேழத்துப்**
**பாம்புபதைப் பன்னபரூஉக்கைதுமியத்...**
**வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்து**

**உண்ணாதுஉயங்கும் மாசிந் தித்தும்''**
(முல்.பா. 68-74)

என்று குறிப்பிடுகிறது முல்லைப்பாட்டு.

போர்க்களத்தில் யானைகளும், குதிரைகளும் அம்பு தைக்கப்பட்டும் வாளால் வெட்டப்பட்டும் வலியுடன் துடித்ததை இலக்கியம் வழி அறிய முடிகிறது. சோழனது போக்களத்தில் யானையின் கழுத்துக்குக் கீழ் மார்புப் பகுதிகளில் வேல் அம்புகள் பாய்ந்து வலியை ஏற்படுத்தின. இந்நிலையில் பாகர் துணையின்றி வலியைப் பொறுத்துக் கொண்டு உடல் நடுங்க யானைகள் நிலங்களில் மலைகள் போன்று கிடந்தன என்பதை,

**"இணைவேல் எழில் மார்வத்து இங்க, புண் கூர்ந்து**
**கணைஅலைக்கு ஓல்கிய யானை, துணை இலவாய்,**
**தொல் வலியின் தீரா, துளங்கினவாய் மெல்ல**
**நிலம் கால் கவவுமலைபோன்றசெங்கண்**
**சினமால் பொருதகளத்து''** (கள.நா. 21)

என்கிறது களவழி நாற்பது.

களவழி நாற்பது போர்க்களம் குருதிபடிந்து குருதிக் கடலாக விளங்கியதை பல பாடல்களில் எடுத்துரைக்கிறது. குளத்தின் கரையிலுள்ள மதகுகளின் வழியாக நீர் பாய்வது போன்று களத்தில் கிடந்த முரசின் வழியாக யானையின் குருதி யானது இடையறாது பெருக்கெடுத்து ஓடியதை,

"ஞாட்பினுள் எஞ்சியஞாலம் சேர், யானைக் கீழ்ப்
போர்ப்பு இல் இடி முரசின் ஊடு போம் ஒண் குருதி
கார்பெயல் பெய்த பின், செங்குளக் கோட்டுக் கீழ்
நீர்த் தூம்புநீர் உமிழ்வ போன்ற புனல் நாடன்
ஆர்த்து அமர் அட்டகளத்து''
(கள.நா. 2)

என்றும், யானைகள் இரத்த வெள்ளத்தில் குளித்ததால் சிவந்த உடலைப் பெற்று சாதி லிங்கமலை போன்று விளங்கியதை,

**"அஞ்சனக் குன்றுஏய்க்கும் யானைஅமர் உழக்கி**
**இங்குலிகக் குன்றேபோல் தோன்றுமே''**
(கள.நா. 07)

என்றும் காட்சிப்படுத்துகிறது.

போர்க்களத்தில் சிதைந்த உடல்களின் நிலை படிப்பவர் உள்ளத்தில் வியப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்துகின்றன. மனிதன் மனிதாபி மான உணர்வை இழந்து தன்னை ஒத்த சக மனிதர்களையும் பிற உயிரினங் களையும் சிதைத்துக் கொன்று குவிப்பது மனித மனம் கல்லாகிப் போனதைக் காட்டுகிறது.

**உவகை**

போரின் வெற்றியைக் கொண்டாடும் விதமாகக் கள் குடித்து மகிழ்ந்துள்ளனர். இதனைத் தொல்காப்பியர் உண்டாட்டு என்று குறிப்பிடுகிறார். போரில் வெற்றிபெற்ற மறவர்கள் கள் உண்டுகளித்து உவகை கொண்டதை இலக்கியம் வழி அறியமுடிகிறது. மன்னர்கள் வீரர் களுக்குத் தன் கையாலேயே கள் வழங்கியுள்ளனர். இதனை,

**'புத்தகல் கொண்டபுலிக்கண் வெப்பர்**
**ஒன்று இரு முறை**
**இருந்துஉண்டபின்றை''** (புறம். 269)

**'நறவும் தொடுமின் விடையும் வீழ்மின்**
**பாசுவலிட்டபுன்கால் பந்தர்ப்**
**புனல்தரும் இளமணல் நிறையப்**
**பெய்மின்''** (புறம். 262)

என்ற பகுதிகள் உணர்த்துகின்றன.

வெற்றிபெற்ற படைவீரருக்கு எப்போதும் ஒளிமங்கிடாத பொன்

மலர்கள் வழங்கப்பட்டதையும் இறையிலி நிலங்கள் வழங்கப்பட்டதையும் போரில் இறந்துபட்ட வீரர்களின் பெயரால் அவர்தம் உறவினர்க்கு ஊர்கள் பரிசளிக்கப் பட்டதையும்,

> "ஓடல் செல்லாப் பீடுடையாளர்
> நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
> நெல்லுடைநெடுநகர்க் கூட்டுமுதற் புரளும்
> தண்ணடைபெறுதல்" (புறம். 287)

என்று குறிப்பிடுகிறது புறநானூறு.

போரில் வென்றசேரன் செங்குட்டுவன் கங்கையின் தென் கரையில் அமைந்திருந்த படைவீட்டில் மகிழ்ந்திருந்தான். தன் மகிழ்ச்சிக்குக் காரணமாகிய தனது படைவீரர்கள் வருக என அழைத்துப் பொன்னால் செய்த வாகைப் பூவினை ஒரு நாள் முழுவதும் கொடுத்துக் கொண்டிருந்தான். அதன் பின் பாடும் வகை அறிந்து பாடிய புலவருக்கும் பரிசில்களை வழங்கினான் என்பதை,

> 'நீணிலமன்னர் நெஞ்சுபுகல் அழித்து
> வானவர் மகளிரின் வதுவை சூட்டு
> அயர்ந்தோர்
> ..........................................................
> புறம் பெறவந்தபோர்வாள் மறவர்
> வருகதாம் எனவாகைப் பொலம்தோடு
> ..........................................................
> பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தன்
> ஆடுகொள் மார்போடு அரசு விளங்கு
> இருக்கையின்" (சிலம்பு. 27(25-47))

என்று குறிப்பிடுகிறது சிலம்பு.

வெற்றிபெற்ற மன்னன் தன் வெற்றியின் மகிழ்வினைத் தம் வீரர் களுடன் பகிர்ந்து மகிழ்கின்றான். அவன் தன் வீரர்களுக்கு விருந் தளித்தும், பரிசளித்தும் சிறப்புச் செய்கின்றான். வீரர்களின் தகுதிக்கு ஏற்ப பொன்னாலாகிய மலர்களையும், இறையிலி நிலங்களையும் தருகின்றான். போரில் இறந்துபட்ட வீரர்களின் உறவினர்களுக்கு ஊர்களைத் தருகின்றான். வீரர்களுக்குப் பரிசுகள் வழங்குவது என்பது மன்னனின் கொடையின் அடையாளமாகக் கருதப் படுகிறது. இது உவகையின் வெளிப்பாடும் ஆகும்.

## முடிவுகள்

போர்க்களத்தில் பல்வேறு வகைப்பட்ட மெய்ப்பாடுகளைக் காண முடிகிறது. வீரர்கள் தங்கள் வீரத்தினை உலகிற்கு வெளிப்படுத்துவதில் பெருமிதம் கொண்டவர்களாக இருந் துள்ளனர். போர்க்களத்து எழும் ஒலிகளும் வீரர்களின் செயல்களும் மனித, விலங்குகளின் குருதி நீரில் குறைவுற்ற உடல்கள், இறந்தவர்களின் உடல்கள் மூழ்கிக் கிடக்கின்ற காட்சிகளும் மனிதர்களிடத்தில் அச்சத்தையும் அவலத்தையும் தோற்று விப்பதோடு வீரர்கள் தன் வீரத்தை வெளிப்படுத்துவதிலும் தன் நாட்டிற்காகக் கடமையாற்றுவதிலும் பெருமிதம் கொண்டதோடு பகை நாட்டு வீரர்களைக் காணும் போது வெகுண்டெழுந்துள்ளதையும் அறிய முடிகிறது. போரின் நிறைவாக வீரர்களுக்குப் பரிசளித்தும் அவர்களை ஊக்குவித்தும் மன்னர்கள் தங்கள் கொடைத்திறனை வெளிப் படுத்தியுள்ளனர். இந்நிலையில் வீரர்கள் தன் நாட்டிற்கு கிடைத்த வெற்றியையும் தனக்கு கிடைத்த பரிசுகளையும் கண்டுமனம் மகிழ்ந்துள்ளனர் என்பது போர்க்கள மெய்ப்பாடுகளாகக் காணப் படுகின்றன.

## சான்றெண் விளக்கம்

1. அரங்க இராமலிங்கம்,சங்க இலக்கியத்தில் வேந்தர், ப.138.
2. கதிர் மகாதேவன், ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம், ப.59.

# சங்க இலக்கியங்களில் தமிழர் பண்பாடு

**முனைவர் அ.தேனமுது**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
செயின்ட் பீட்டர்ஸ் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி
ஆவடி, சென்னை.

## முன்னுரை

ஆதிகாலத்தில் ஆடையின்றி அரைமனிதனாய்த் திரிந்தவன் நதிக்கரையில் நாகரிகம் கண்டு முழு மனிதனானான். நாகரிகமே அவனை தமிழனாய் அடையாளம் காட்டியது. அவனுடைய ஒவ்வொரு பண்பாட்டிலும் நாகரிகத்தைப் பின்பற்றினான். நாகரிகம் வளர வளர பண்பாடும் பண்பட்டது. நம் பண்பட்ட பண்பாட்டைக் கண்டு உலகமே வியந்தது. அன்று முதல் இன்று வரை தமிழரின் பண்பாடு தரணி போற்றும் பண்பாடாய் சிறந்து விளங்குகிறது. இத்தகுச்சிறப்புடைய தமிழர் பண்பாட்டை தரணிக்கு உணர்த்திய பெருமை சங்க இலக்கியங்களையேச் சாரும். பொதுவாக இலக்கியங்களை காலம் காட்டும் கண்ணாடிகள் என்றே கூறுகிறோம். அந்த வகையில் சங்க இலக்கியங்களளைத் தமிழர் பண்பாட்டின் கண்ணாடி என்றே கூறலாம்.

## பகிர்ந்தளித்து உண்போர்

பண்டைத் தமிழகத்தில் மரக்கறி உண்போரும் இருந்தனர். புலால் உண்போரும் இருந்தனர். ஆனால் உணவு காரணமாக அவர்களுக்குள் எந்த வித ஏற்றத்தாழ்வும் இல்லை. பார்ப்பனர்களும் வேளாளர்களும் பாணர்களை தங்கள் மனைகளில் தங்கவைத்து விருந்தளித்து மகிழ்வர் என்று சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. பகிர்ந்துண்ணும் பண்பாடு தமிழக மக்களிடம் அடிப்படையாகவே இருந்தது. சங்க காலத்தில் மன்னர்கள் போரில் பெற்ற செல்வங்களை வீரர்களுக்கும் புலவர்களுக்கும் வாரி வழங்கியதோடு பெருஞ்சோறு படைத்தும் மகிழ்ந்தனர். இதனை,

"சிறிய கட்பெறினே எமக்கீயும் மன்னே!
பெரிய கட்பெறினே
யாம் பாடத் தான்மகிழ்ந்து உண்ணும் மன்னே!
சிறுசோற்றானும் நனிபல கலத்தன்; மன்னே!
பெருஞ்சோற்றாலும் நனிபல கலத்தன்
மன்னே!" -(புறம்-235)

–என்ற வரியில் அவ்வையார் தமக்கு ஊட்டி மகிழும் அதியமானின் அன்பை பாராட்டுகிறார்.

நற்றிணைப் பாடலொன்று தலைவி ஒருத்தியின் பகிர்ந்துண்ணும் பண்பை எடுத்தியம்புகிறது.

"ஆய்மலர் மழைக் கண் தெண் பனி
உறைப்பவும்
.....................................................
கானவன் எய்த முளவு மான் கொழுங்குறை,
தேன் கமல் கதுப்பின் கொடிச்சி,
கிழங்கொடு
காந்தள்அம் சிறுகுடிப் பகுக்கும்"
- (நற்றிணை-85)

என்பதே அவ்வரிகள் ஆகும்.

பொதுவில் வைத்து உண்ணுதல் என்பது சங்க இலக்கியங்கள் காட்டும் மிகச்சிறந்த பண்பாடாகும். இப் பண்பினை,

“படைப்புப் பல படைத்து பலரோடு
உண்ணும்” -(புறம்-188) என்றும்,

“உலகுப்புக திறந்தவாயில்
பலரோடு உண்டல்” (புறம்-234)

என்றும் புறநானூறு கூறுகின்றது. மேலும்,

‘அனங்குடைப் பகலில் கொடுவில் ஆடவர் படுகொலை வெரீஇ’ –– என்று அகநானூறு கூறுகின்றது. இதிலிருந்து அனைவருக்கும் உணவை பகிர்ந்தளித்துத் தானும் உண்டு மகிழ்கின்ற சிறந்தப் பண்பாட்டை உடையவர் தமிழர் என்பதை நம்மால் அறிந்துக் கொள்ளமுடிகிறது.

## இல்லறத்தில் சிறந்தோர்

அன்பும் அறனும் உடையது சிறந்த இல்லற வாழ்க்கை என்பதனை உணர்ந்தவர் நம் சங்க கால மக்கள். ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ் வாங்கு வாழ்வாராயின் அவர்களுக்கு வீடுபேறு தானாக வரும் என்பது தமிழரின் நம்பிக்கையாக இருந்தது. இதுவே தமிழர்களின் இல்லறப் பண்பாடு உயர்ந்ததற்குக் காரணமாக அமைந்தது. இல்லறத்தின் சிறப்பை,

“மனை உறை வாழ்க்கை வல்லியாங்கு மருவின் இனியவும் உளவோ” –என்ற பாடல் கூறுகின்றது. தலைவி ஒருத்தி வறுமையிலும் எவ்வாறு இல்லறம் நடத்துகிறாள் என்பதை,

“குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர்
காட்சி நாணி” -(சிறுபாண்-129-143)

என்று சிறுபாணாற்றுப்படை அழகாக எடுத்தியம்புகிறது. மேலும் தலைவன் தலைவியின் இல்லற வாழ்க்கையின் சிறப்பை,

“நீர் உறை மகன்றில் புணர்ச்சி போல்”
-(குறுந்-57)

என்ற குறுந்தொகை பாடல் மூலம் அறியமுடிகிறது.

ஒத்த வயதுடைய தலைவனும் தலைவியும் மனத்தால் ஒன்றுபட்டு வாழ் வதையே சிறந்த இல்லற வாழ்க்கையாக கருதினர் இதனை கலித்தொகை,

....................................ஓரோ
ஒகை
“ஒன்றன் கூறாடை
உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார்
வாழ்க்கையே
வாழ்க்கை” - (அகம்-121)

என்று கூறுகிறது.

இவ்வாறாக இல்லறத்தைச் சிறப்பாக நடத்தி, சிறந்த மக்களைப் பெற்று மனையறம் காத்த தலைவனும் தலைவியும் தன் முதுமை காலத்தில் பிள்ளைகளிடம் இல்லறக் கடமைகளை ஒப்படைத்து உள்ளத்தால் துறவு கொள்வர். இதுவே தமிழர்களின் இல்லற மாண்பாகும்.

## பண்பட்டப் பெண்ணினத்தார்

சங்க கால பெண்கள் பண்பாட்டில் சிறந்தவர்கள். கணவனே கண்கண்ட தெய்வம் என எண்ணி இல்லறத்தை நல்லறமாய்ப் போற்றியவர்கள். உலகப் பெண்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாய் திகழ்ந்தவர்கள்.கணவன் செய்யும் தவறுகளைப் பொறுத்துக் கொள்ளும் குணமும், கணவன் மீது அளவு கடந்த அன்பு நிறைந்த மனமும் கொண்டவர்கள். நல்ல குடும்பத்துப் பெண்கள் தாமே சமைத்த உணவை தமது கையால் கணவருக்குப் பரிமாறுவதில் அவர்களுக்கு ஒரு தனி

இன்பம். அதை கணவன் சுவைத்து உண்பதைக் கண்டால் அவர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சமையல் செய்யும்போது அவர்கள் அடைந்த துன்பத்தைக் கூட மறந்து விடுவர். இதனை,

"முளி தயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீயிக்:
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீங்புளிப் பாகர்
இனிது என கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒள் நுதல்
முகனே"-(குறு-167)

என்று குறுந்தொகை விளக்குகின்றது.

அக்காலப் பெண்கள் மிகவும் தன்மானம் உடைய பெண்களாக இருந்திருக்கிறார்கள். தனது கணவன் தேடித்தரும் செல்வத்தைக் கொண்டே இல்வாழ்க்கை நடத்தி வந்தனர். தன் கணவன் உயிருடன் இருக்கும்போது தந்தை வீட்டின் உதவியைப் பெறுவது அவமானம் என்று கூட எண்ணினர்.

"அறிவும் ஒழுக்கமும் யாண்டு உணர்ந்தனல்
கொள்?
கொண்ட கொழுநன் குடிவரன் உற்று என
கொடுத்த தந்தை கொள்ளும் சோறு
உள்ளாள்;
ஒழுகுநீர் நுணங்கு அறல்
பொழுதுமறுத்து உண்ணும் சிறுமது
கையளே"- (நற்-110)

– என்ற நற்றிணைப் பாடல் தலைவி ஒருத்தியின் மாண்பை உணர்த்துகிறது. தன் குடும்பம் வறுமையற்றபோதும் தனது தந்தை அனுப்பிய உணவுப் பொருட்களை வாங்குவது அவமானம் எனக் கருதி கணவன் வழியிலேயே அவள் நடக்கின்றாள். வேலை தவறி உண்ணுகின்றாள். இத்தகைய உறுதி யுடையவளாக இருக்கின்றாள் அவள் என்று இப்பாடல் கூறுகின்றது.

பழந்தமிழ் பெண்கள் வீரப் பெண்களாகவும் இருந்துள்ளனர். தங்கள் பிள்ளைகளைப் போர்க்களத்திற்கு அனுப்புவதே குடிப்பெருமையாகக் கொண்டிருந்தனர். அதனை பரம்பரைப் பண்பாடாகவும் எண்ணினர். ஒவ்வொரு தாயும் தன் மகன் புறங்காட்டாமல் போர்புரிய வேண்டும் என்றே விரும்புவார்கள். மார்பில் காயம்பட்டு போரிலே மடியும் மக்களைத்தான் அவர்கள் பாராட்டுவார்கள். தம் மக்கள் புறங்காட்டி ஓடிவந்தனர் என்பதைக் கேட்டால் அவமானம் அடைவார்கள். இத்தகைய கோழை மக்களைப் பெற்றதற்காக வருந்துவார்கள்.

இவ்வாறாக உலகத்திற்கே எடுத்துக் காட்டாய் விளங்கும் மிகச்சிறந்தப் பண்பாட்டை உடையவர்களாக விளங் கியவர்கள் நம் தமிழ்ப் பெண்கள்.

## விருந்தோம்பலை விரும்பியவர்கள்

சங்க கால தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் முக்கியமான பண்பாக விளங்கியது விருந்து உபசரித்தல் ஆகும்.

அரசர்கள் புலவர்களுக்கும், இல்லற வாழ்க்கையில் இருப்போர் தம் உறவினர்கள் மட்டுமின்றி இறையடி யார்கள் மற்றும் யாசிப்போர் போன்ற வர்க்கும் விருந்தளித்து மகிழ்ந்தனர். விருந்தோம்பல் பண்பில் ஈடுபட்டால் வீடுபேறு அடைவார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருந்தது. விருந்து உபசரிப்பதற்காகவே சிறந்த பொருளை ஈட்டுவது தலைவனுக்குரிய கடமையாக அமைந்தது. இதனை,

"செழுநகர் நல்விருந்து அயர்மார் ஏமுற
விழுநிதி எளிதினின் எய்துக தில்ல"

"கல்பிறங் காரிடை விளங்கிய
சொல் பெயர் தேய்த்த சுரநினந்தோரே"

என்று அகநானூறு கூறுகின்றது. மேலும், விருந்தினரைக் கண்டால் முகம்

மலர்ந்து வரவேற்கும் சிறந்த பண்பு தமிழர்களிடம் காணப்பட்டது.

**"எமக்கே வருக! தில் விருந்தே சிவப்பு ஆன்று,
சிறு முள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம் காண்கம்மே"**

– என்ற நற்றிணைப் பாடல் வரிகள் மூலம் தமிழரின் விருந்தோம்பல் பண்பினை அறிந்துக்கொள்ளலாம்.

## அறப்பயனை அறிவுறுத்தியோர்

மக்களின் வாழ்க்கையை மேம் படுத்தும் உயர்ந்த அறங்களையும் பயன்களையும் தமிழர்கள் நன்கு அறிந் திருந்தனர். அவற்றையே தம் வாழ்வில் பெரிதும் பின்பற்றினர். இதனை சங்க இலக்கியமான புறநானூறு வழி நாம் அறிந்துக்கொள்ள முடியும்.

அறம் செய்து வாழ்ந்தால் அவ்வாழ்வில் நிச்சயம் இன்பம் உண்டு என்பதை,

இந்திரர்க்குரிய உணவு அமிர்தம் ஆகும். அந்த அமிர்தமே கிடைத்தாலும் அறிஞர்கள் அதை தனித்திருந்து உண்ணமாட்டார்கள். பிறக்கும் கொடுத்து தாமும் உண்பார்கள். யாரையும் வெறுக்க மாட்டார்கள். பிறர் அஞ்சுகின்ற துன்பத்தைக் கண்டால் தாமும் அஞ்சுவர். தாமதம் இல்லாமல் துன்பத்தை நீக்குவார்கள். சோம்பி இருக்க மாட்டார்கள. புகழ் உண்டாக்கத்தக்க செயலானால் தமது உயிர் போனாலும் சரி அச்செயலை செய்து முடிப்பார்கள். பழி வரத்தக்க காரியத்தை செய்வதானால் இவ்வுலகம் முழுவதும் பரிசாகக் கிடைப்பதாக இருந்தாலும் அதைச்செய்யமாட்டார்கள். பெருந்தன்மை உள்ளவர்கள். தம்முடைய நன்மை ஒன்றையே நினைத்து வாழ் பவர்கள் அல்லர். கொள்கையிலே உறுதி உள்ளவர்கள் எப்பொழுதும் பிறர் நன்மைக்காகவே உழைக்கும் பண்புள்ளவர்கள். இத்தகையவர்கள் இவ்வுலகிலே இருப்பதால் இவ்வுலகில் இன்பம் உண்டு. இது மறக்க முடியாத உண்மை.

**"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிர்தம் இயைவது ஆயினும், இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவுஇலர்;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சி
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழிஎனின்
உலகுஉடன் பெரினும் கொள்ளலர்; அயர்வு இலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கு என முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"**
**- (புறம்-182)**

என இவ்வாறு தமிழ் மக்களுக்கென்று சிறந்த பண்புகள் உண்டு என்பதை புறநானூற்றுப் பாடல் நமக்கு உணர்த்துகின்றன.

இவ்வுலகில் அனைத்துப் பொருட்களும் அழிந்துப்போகும். உயிர்களும் அழிந்துப்போகக்கூடியது. ஆனால் ஒருவர் வாழ்நாளில் பெறு கின்ற புகழ் மட்டுமே என்றென்றும் நிலைத்து நிற்கும். அப்புகழைப் பெறவேண்டுமென்றால் நல்ல காரியங் களைச் செய்ய வேண்டும். புகழ்பெற்று வாழ்வதே சிறந்த வாழ்க்கை என்று பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர். இதனை,

**"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே;
துன்னரும் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க்கு ஈஇயாமையின்
தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே"**
**- (புறம்-165)**

என்றப் புறப்பாடல் உணர்த்துகின்றது.

இவை மட்டுமின்றி, 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற

உயர்ந்த சிந்தனையைத் தமிழர்கள் பெற்றிருந்தனர்.

மேலும், பிறர் தமக்கு செய்த உதவியை மறத்தல் கூடாது. அவ்வாறு மறந்தால் அது மன்னிக்க முடியாத மிகப்பெரிய பாவம். இதனையும் தமிழர்கள் தலைசிறந்த அறமாகப் போற்றி யுள்ளனர். இதனை,

**“ஆன்முலை அறுத்த அறன் இலோர்க்கும்**
**மாண்இழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும்,**
**பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்,**
**வழுவாய் மருங்கின் கழுவாயும் உள, என**
**நிலம்புடை பெயர்வது ஆயினும், ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்என**
**அறம்பாடிற்றே” - (புறம்-84)**

என்று புறப்பாடல் கூறுகின்றது.

## முடிவுரை:

தமிழர் பண்பாடு என்பது இல்லறம், நல்லறம், காதல், நட்பு, வீரம், கொடை, விருந்தோம்பல், பகிர்ந் துண்ணல் என்பன போன்ற மிக நீண்ட வரலாற்றை உடையது. இதனை அவ்வக் கால இலக்கியங்களின் வழி நாம் அறிந்துக்கொள்ளலாம். எனினும் சங்க இலக்கியங்களே பெரும்பாலும் தமிழர்களின் பண்பாட்டு வேரினைக் காட்டுகின்றன என்றால் அது மிகையாகாது.

## துணைநூற் பட்டியல்:

தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்– டாக்டர். கே. கே. பிள்ளை

தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்– டாக்டர். மா. இராசமாணிக்கனார்.

தமிழ்நாட்டுப் பெண்களின் பண்பாடு–சாமி சிதம்பரனார்

தமிழ் பண்பாடு மற்றும் பாரம்பரியம்– எ.மோகன்ராஜ்

## அடிக்குறிப்புகள்:

1. புறநானூறு–235
2. நற்றிணை–85
3. புறநானூறு–188
4. புறநானூறு–234
5. சிறுபாணாற்றுப்படை–(129–143)
6. குறுந்தொகை–57
7. அகநானூறு–121
8. குறுந்தொகை–167
9. நற்றிணை–110
10. புறநானூறு–182
11. புறநானூறு–165
12. புறநானூறு–84

# தரணி போற்றும் தமிழர் பண்பாடு

**திருமதி.பா.நித்யா எம்.ஏ., எம்ஃபில்.,**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர் - 626001

"தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அதற்கொரு குணமுண்டு" என்று தமிழரை அடையாளப்படுத்தினர். வேறு எந்த இனத்திற்கும் மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கு உண்டு. தமிழரின் பண்பாட்டு அடிப்பொருள் இன்று உலகம் முழுவதும் தடம் பதிக்கிறது. பழந்தமிழர் வாழ்வு நிலம் சார்ந்து அமைந்தவை. ஐந்நில வாழ்வே ஐந்திணைகளாக மலர்ந்தது. மனிதன் வாழ்ந்த வாழ்வியலைப் பதிவு செய்யும் மூலங்களுள் இலக்கியம் குறிப்பிடத்தக்க ஒன்று. இலக்கியம் மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகின்றது. சங்க தமிழரின் வாழ்வியலை அறிந்து கொள்ள நமக்குக் கிடைக்கும் ஒரே ஆதாரமாக சங்க இலக்கியம் விளங்குகின்றது. எனவே தான் "பண்டைக் காலத்து மக்களுடைய தினசரி வாழ்க்கை பற்றி குறிப்பிடுகின்றார். மக்கள் வாழ்வியலின் இன்றியமையான உணவு, உடை, இருப்பிடம், தொழில், அரசியலமைப்பு போன்ற பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டது. இத்தகைய பண்பாட்டுக் கூறுகள் சிலவற்றை எடுத்துரைப்பதாக இவ்வாய்வுரை அமைகின்றது.

## பண்பாடு விளக்கம்

"பண்பாடு" என்ற சொல் "பண்படு" என்ற சொல்லிருந்து உருவானதாகும். பண்பாடு என்பது பக்குவம் பெற்ற நிலையைக் குறிக்கும் சொல்லாகும். "பண்" என்பது "இசை" என்று பொருள்படும். "பாடு" என்பது செம்மைப்படுத்துதல் என்பதாகும். தமிழர் பண்பாடு என்பது தமிழ் மக்களின் திருந்திய மனப்பான்மை என்பதாகும்.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்ற கலித்தொகைச் சுட்டிக் காட்டுகின்றது. உலகம் நல்வழியில் இயங்குவதற்கு பண்புடையவர் வாழ்வது மிகவும் பயனுள்ளது.

**"பண்புடையார் பட்டுண்டு உலகம் இதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மண்"**

என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு நிலத்தை ஒட்டி வாழ்ந்த சங்க கால மக்கள் மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுத்துக் கொள்ளாமல் வாழ்க்கை முறைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்டு வாழ்ந்த பெருமைக்கு உரியவர் ஆவர்.

## இல்லற வாழ்க்கை

நம் பண்பாடுகளுள் தலைசிறந்து விளங்குவது இல்லற வாழ்க்கையாகும். இன்றைய காலத்தில் வாழ்க்கையைப் புரிந்துக் கொள்ளாமல் வாழ்ந்து கொண்டிருப்போர் பலர். ஆனால், சங்க கால மக்கள் வாழ்க்கை என்பதற்கு இலக்கணம் வகுத்துக் கொடுக்கின்றனர். ஓர் ஆடையைப் பகுத்தும் உடுத்தும்

வறுமை நிலையிலும் மனம் ஒன்றி வாழும் வாழ்க்கைச் சிறப்பினை,

**"ஒன்றன் கூறாடை யுடுப்பவரே யாயினும்**
**ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை"**
**(கலி)**

என்னும் கலித்தொகை வாயிலாய் அறியலாம். மனம் ஒத்த அன்பே இல்லற வாழ்க்கையின் அடிப்படை என்று குறிப்பிடுகின்றது. கணவனும் மனைவியும் ஒற்றுமையோடு இறுதிவரை வாழ்ந்தாலே வீடுபேறு தானாக வந்தெய்தும் என்பது தமிழன் கொள்கையாக இருந்தது. ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் வாழ்க்கைத் தான் இன்பம் கலந்த வாழ்க்கை. கணவன் அதிகளவு பொன்னும், பொருளும் வைத்திருந் தாலும் தன்மீது அன்பு வைத்திருக்க வேண்டும் என்று மனைவி விரும்புவாள் என்பதனை,

**"இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீ யாகியர் என் கணவனை**
**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே"**
**(குறுந்)**

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

## விருந்தோம்பல்

விருந்து என்பதற்குப் புதுமை என்று பொருள். தொல்காப்பியர் உண்ணும் உணவாயினும் அதனை முன்பின் தெரியாதவர்களும் பகிர்ந்தளித்து உண்ணும் குணம் நம் தமிழர்களிடையே மிகுந்து இருந்தன என்று கூறுகின்றார். நல்லியக் கோடன் தன்னைநாடி வந்த பாணர்களுக்கு பரிசுகள் மட்டுமின்றி விருந்தோம்பலும் செய்தான். தான் அரசனாக இருந்தாலும் விருந்தளிக்கும் போது முன்னின்று செய்யக் கூடியவன். இதனை,

**"பல்வேறு அடிசில் விளங்கப்**
**பொற்காலத்தில்**
**விரும்புவன பேணி ஆளா விருப்பின்**
**தான் நின்று ஊட்டி"**
**(சிறுபாணாற்றுப்படை)**

என்ற பாடலடிகள் சான்று பகிர்கின்றன.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினுள் அறம் வலிமை யுடையதாகக் கருதப்படுகின்றது. இவ் வறத்தினை மேற்கொள்ள பொருள் வேண்டப்படுகின்றது. இப்பொருளைத் தேடுவதற்குத் தலைவன் தலைவிப் பிரிந்து பொருளீட்டும் தன்மையும், அப்பொருளைக் கொண்டு தலைவி விருந்து என்னும் அறம் புரிந்துள்ளனர். சங்க கால மக்கள் பசித்து வரும் புதியவர்களுக்காகச் சிறந்த உணவை நாள்தோறும் அறிவித்தனர் என்பதனை,

**"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியல் பொறையும் நிறையும்**
**வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்"**

என்று தொல்காப்பியம் சங்ககால தலைவியின் விருந்து ஒரு முக்கியக் கடமையாக இருந்ததைக் குறிப்பிடுகின்றது.

### ஈகை

தன்னிடம் உள்ளதை மற்றவர் களுக்குக் கொடுப்பதற்கு உரிய ஆற்றலே ஈகையாகும். ஈகை செல்வப் பெருக்கிலிருந்து பிறப்பது அல்ல. மன வெளிப்பாட்டிலிருந்து உருவானது. ஈகை என்னும் உயர்பண்பு தனிமனிதப் பண்பாக அமைகின்றது. மேலும் கொடுப்பவர் எதிர்பார்ப்புகளைத் தவிர்த்து மனநிறைவுடன் கொடுக்க, அதனை ஏற்பவர்கள் மனநெகிழ்வுடன் பெற்றுக் கொள்ளும் போதுதான் ஈகை என்னும் குணத்தின் அடிப்படையாகும். இதனை தொல்காப்பியர்,

**"ஈயென் கிளவி இழிந்தோன் கூற்று"**
**(தொல்காப்பியர்)**

என்று குறிப்பிடுகின்றார். மேலும்,

"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை
மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரதுடைத்து" (குறள்)

என்று குறளின் வழியாகவும் புலப் படுகிறது. ஈகைப் பண்பில் சிறந்த பெரியோர், ஏனையோர் தம்பால் வந்து வறுமைகூறி இரப்பதற்கு முன்பாகவே விரைந்து அவர்க்கு உதவுவர். இச் செய்தியினை,

"இரந்தோர்க்கு ஈயாது ஈட்டியோன்
பொருள்போல்
பரந்து வெளிப்பட்டது ஆகி
வருந்துக தில்லயாய் ஓம்பிய நலனே"
(அகம்)

என்ற பரணரின் பாடலடியால் அறிய முடிகிறது. பிறருக்கு உதவுவதற்கும் நல்ல உள்ளம் அமைதல் வேண்டும். தன்னிடம் இல்லை என்று வந்தவர்க்கு இல்லை என்று மறுக்காது கொடுப்பது சிறந்த பண்பாகக் கருதப்பட்டது.

### வீரம்

பண்டைய தமிழர்களின் வீரத்தைத் தொல்காப்பியம் புறத்திணை இயல் எடுத்துக் கூறுகின்றது. எதிரி நாட்டுப் படையினைத் தாக்கும் போது கூட ஈரமும், இரக்கமும் இருந்ததைக் காண முடியும். அக்காலத்தில் தமிழரிடம் அறப்போர் முறையே அமைந்திருந்தது. பசுக்களும், பசுவை ஒத்த பார்ப்பனர்களும், பெண்களும், நோயுடையவர்களும், புதல்வர்களைப் பெறாதவர்களும் யாம் அம்பு விடுவதற்கு முன் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுங்கள் என வீரன் ஒருவர் கூறுவதிலிருந்து தமிழரின் அறப்போர் முறை விளங்குகின்றது. போர்க்களத்தில் புறமுதுகு காட்டுவது வீரனுக்கு அழகல்ல. மார்பிலே காயப்பட்டு இறப்பதையே பெரிதும் விரும்பினார்கள். வீரம் என்பது தன்னைவிட பலவீன மானவனோடு சண்டையிட்டு வெற்றி பெறுவது அல்ல; தான் கொண்ட கொள்கையிலே உறுதியுடன் நல்லது. அந்த வகையில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் வீரத்தைக் கூறுகையில், படைபலத்தால் இகழ்ந்துரைத்த பகை மன்னருடன் போரிட்டு வெல்வேன். அப்படி நான் செய்யவில்லை என்றால், என்குல மக்களே என்னை இகழ்ந்துரைப்பர் எனவும், புலவர்களிலே சிறந்தோனாகிய மாங்குடிமருதன் என் நாட்டைப் பாடாது புறக்கணிக்கட்டும் என்றும், இரவலர்க்குக் கொடுக்க முடியாத அளவிற்கு வறுமை என்னைச் சூடிட்டும் என்றும் கூறியிருப்பது தனது வீரத்தின் மீது அவனுக்கிருந்த நம்பிக்கையைத் தெரிவிக்கிறது. இதனை,

"சிறுசொற் சொல்லிய சினங்கெழு
வேந்தரை
அஞ்சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
............................
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் படாது வரைக என் நிலைவரை"

என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது.

### முடிவுரை

தமிழரின் பண்பாட்டு எச்சங்கள் வாழ்வியலின் ஒவ்வொரு தளத்திலும் தன்னை புதுப்பித்துக் கொண்டே இருக்கிறது. உண்ணும் உணவு முதல் உடுத்தும் உடை வரைக்கும் பண்பாடு போற்றப்படுகிறது. பிறப்பு முதல் இறப்பு வரையிலும் ஒவ்வொரு தளத்திலும் தன்னை புதுப்பித்துக் கொண்டே இருக்கிறது. இல்லறம் முதல் துறவறம் வரை பண்பாட்டு வாழ்வியல் பகிரப் படுகிறது. இன்னும் எத்தனை காலங்கள் ஆனாலும் தமிழர் பண்பாடு தலைநிற்கும். தரணி போற்றும் தமிழரின் பண்பாட்டை இந்நாளில் நாமும் போற்றுவோம்.

# நாயன் மார்களின் அருளியல் பண்பாடு

**முனைவர் தி. நெல்லையப்பன்,**
இணைப் பேராசிரியர், தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625021

## முன்னுரை

மனித வாழ்க்கையில் தமிழர்களின் வாழ்வியல் பண்பாடு உலகத்திற்கு எடுத்துக்காட்டாகும். பண்பாடு என்றாலே தமிழன் தான் என்பதை உணரச்செய்துள்ளோம். இலக்கியத்திலும் பண்பாட்டுப்பதிவுகளைத்தேவைக்கேற்ப மொழிந்துள்ள இனமாகவும் தமிழர் இனம் செயல்பட்டுள்ளது. வாழ்வியல் நெறியோங்கும் தன்மை கொண்ட சாதாரண மக்களின் பழக்க வழக்கப் பண்பாடுகளைக் கடந்து இறை அடியார்களான நாயன்மார்கள் செய்த அருட்தொண்டின் வழி ஏராளமான பண்பாடுகளைக் காணமுடி கின்றமையைப் பன்னிரு திருமுறைகள் காட்டியுள்ளன. அந்த வகையில் பன்னிரண்டாம் திருமுறையில் அமைந்த நாயன்மார்களின் பண்பாடுகளை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இறைத்தொண்டோடு வெளிப்படும் பண்பாடுகள்

சைவ நாயன்மார்கள் இறைவனை வழிபடுவது, இறைத் தொண்டுபுரிவது எப்போதும் சிவக்கோலத்தோடு காட்சியளிப்பது பேசுவது, பார்ப்பது, கேட்பது யாவும் சிவமாக இருக்கும். சிவனடியார்களைப் போற்றும் பண்பு அனைத்து நாயன்மார்களிடத்திலேயும் காணக்கூடிய ஒரு பொதுப்பண்பாக உள்ளது. ஆனாலும் சில நாயன் மார்களிடம் காணப்பட்ட தனிப்பட்ட பண்புகள் நம்மை மெய்ச்சிலிர்க்க வைக்கின்றன. இறைவனுக்கே கண் தானம் அளித்த பண்பு மிக்க கண்ணப்பனார், எண்ணத்தக்கவர் தன்னைக் கொன்ற முத்தநாதனுக்கு யாதொரு இடையூறும் ஏற்படாது உயிர்க்கொடைத் தந்த மெய்ப்பொருள் நாயனார் பண்பு உயர்வுடையது.

அடியார்கள் வாசிக்கும் இசைக் கருவிகளுக்கு தோல்வாரும் நரம்புகளும் கொடையாக அளித்த திருநாளைப் போவார், பண்பு, சிவனடியார்களுக்குத் துணி வெளுத்துத்தந்த திருக்குறிப்புத் தொண்டரின் பண்பாடு எண்ணத்தக்கது. தமிழர்களின் பண்பாடு என்பது தொன்மைமிக்கது. இது பண்பட்ட நிலை, அதாவது எண்ணமும் சொல்லும் செயலும் திருந்திய நிலை. “எல்லாருடைய இயல்புகளும் அறிந்த ஒத்த நன்னெறியில் ஒழுகுபவர் பண்பாடு உடையவர் ஆவார். இத்தகையோர் இருத்தலால் தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பது ஆன்றோர் கருத்து. இதனினும் ஒரு படி மேலாகத் “தமக்கென முயலாநோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையால் இவ்வுலகம் உண்டு” என்று கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி கூறியிருப்பது தமிழர் பண்பாட்டுக்குத் தலைச்சிறந்ததொரு சான்றாகும்”[1] என்று லெப.கரு.

இராமநாதன் புலப்படுத்தியுள்ள கருத்து எண்ணத்தக்கது.

மதிசிறந்த அருளாளர்களின் தூய இறைத் தொண்டோடு ஆற்றிய நிகழ்வுகளும் அளித்த கொடைகளும் அளப்பரிய பண்பாட்டின் எச்சங் களாகும். “சிறந்த வாழ்க்கைக்கு அடிப் படையாக அமைகின்ற உளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கின்றோம். அந்த வெளிப்பாடு சுவையுணர்வாகவும் நடை, உடை, பாவனைகளாகவும் தோன்றும். அப்பண்பாடு இல்லாதவனைக் காட்டுமிராண்டி என்கின்றோம். வாழ்வில் பலபல போக்குகள் அமைந்த பல்வேறு நிலைகளையும் இந்தப் பண்பா டென்பது குறிக்கும். உடலைப் பற்றிய நன்னிலை, மனத்தைப்பற்றிய தூய்மை, நிலை, பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும்”[2] என்பர் தெ.பொ மீனாட்சிசுந்தரனர்.

இத்தகைய வாழ்வியல் பண்பாட்டில் அருளாளர்களின் பண்பாடு எண்ணிப்பார்க்கத்தக்கது. அடியார்களாக இருந்து அவர்கள் வழிகாட்டிய பலவற்றையும் நாம் இன்றைய நிலையில் பின்பற்ற வேண்டும். இறை நம்பிக்கையும் வழிபாடும் எவ்வாறு அவர்களால் மீட்டுருவாக்கம் செய்யப் பட்டனவோ அவ்வாறே தமிழர்களின் பண்பாட்டையும் அவர்களின் வாழ்வியில் நெறிகளிலிருந்து கற்றுக் கொள்ளவும் மீட்டெடுக்கவும் வழி வகை செய்யும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

கண்ணே இல்லாத நிலையிலும் கோயில் குளத்தை ஆழப்படுத்திய தண்டியடிகள், தான் ஆளும் ஊரில் தன்னுடைய திட்டங்களான நிழற்குடை, குளம், போன்றவற்றிருக்குத் தனது பெயரை இட்டுக் கொள்ளாமல் திருநாவுக்கரசரின் பெயரை இட்டு வழங்கிய பண்பாடு மிக்க நாயனார் அப்பூதியடிகள், சிவனடியார்களுக்கு வேண்டிய ஆடையும் கோவணமும் கொடையாகத் தந்த அமர் நீதியார், சிவனடியார்களுக்கு அமுது படைத்தே வறுமையான சூழளிலும் நிலத்தில் விதைத்துவிட்ட வந்த நெல்லை எடுத்து வந்து விருந்து படைத்த இளையான் குடிமாறன் பண்பாடு, என்பனவும் நாயன்மார்களின் பண்பாடுகளில் மிகவும் போற்றத்தக்கன. இவையேயன்றிச் சிவனடியார்களுக்கு உணவு அளித்தல் என்பதைப் பல நாயன்மார்களும் செய்துள்ளனர். உணவளித்தே சொத்துக்கள் அழிந்த நிலையிலும் சூதாடிப் பெற்ற பொருள்களையும் சிவனடியார்களுக்கே உணவாக அளித்த மூர்க்கநாயனார், கோயிலைத் தூய்மைப்பணி செய்த திருநாவுக்கரசர், மூர்த்திநாயனார் பூசைக்குரிய சந்தனம் அளிந்த நிகழ்வு கலியநாயனார் திருவிளக்குகளுக்கு எண்ணெய் வார்த்த தொண்டு, குங்குலியக் கலிய நாயனார் குங்குலியம் அளித்த தொண்டு என்று ஒவ்வொரு நாயன்மாரும் தங்களுக்குரிய இறைநெறியோடு இவ்வாறான பொதுத் தொண்டுகள் செய்து அருளாளர்களின் பண்பாடுகளாக வாழ்ந்து காட்டியுள்ளனர். இவற்றை இளைஞர் களும், யுவதிகளும், மாணவர்களும் உணர்ந்து செயல்படவேண்டும். தங்களால் இயன்றவற்றை உதவுதல் என்ற தொண்டைச் செய்தால் இந்தப் பண்பாட்டுக் கருத்தரங்கம் வெற்றி பெற்றதாகும். அதனால் தான் நாயன்மார்களின் வாழ்வியல் பண் பாட்டை மீள்வாசிப்பு செய்துள்ளேன்.

மனித இயக்கம் நேயம் என்பது உணவு, உடை, பொருள்தானங்களாக இருந்த நிகழ்வுகள் அறிவியல் முன்னேற்றத்தில் இரத்ததானமும்,

சிறுநீரகத் தானமும் கண்தானம் போன்றவற்றை அளித்துள்ளனர் மரணத்திற்குப் பின்பும் மீண்டும் இந்த உலகைக் கண்டுகளிக்க உதவும் ஒரே தானம் கண்தானம் மட்டுமே. இதை வழிகாட்டியவர் கண்ணப்பர். கண்களைக் கல்விக்கு ஒப்பிட்டுக் கூறிய வள்ளுவர்,

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப**
**இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு"**[3]

என்றார்.

தஞ்சைவாணன் கோவையில் கண்களைப் போல் சிறந்த உறுப்பு உடம்பில் வேறும் எதுவும் இல்லை என்கிறார்.

**"கண்ணிற் சிறந்த உறுப்பில்லை"**[4]

கண்கள் சிவந்து காணப்பட்ட நிகழ்வை சங்க இலக்கியங்களில் காண முடியும். நற்றிணைத் தலைவியின் குறிப்பால் அறிய முடிகிறது.

**"தலைமருப்பு ஏய்ப்ப கடைமணி**
**சிவந்தறின்**
**கண்ணே கதவ அல்ல நண்ணார்"**[5]

என்பதாகும். கண் சிவத்தலையும் இறைவன் கண்ணில் இருந்து செந்நீர் வருவதையும் உணர்ந்த கண்ணப்பர், அவர்தம் கண்ணை அம்பால் பெயர்த்தெடுத்து இறைவனின் திருக் கண்ணில் அப்பினால் செந்நீர் நிக்கும் என்று கருதி அவ்வாறே செய்தார்.

**"இதற்கினி என்கண் அம்பால்**
**இடந்தப்பின் எந்தையார்கண்**
**அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர் நிற்கவும்**
**அடுக்கும் என்று**
**மதர்த்தெழும் உள்ளத்தோடு மகிழ்ந்து**
**முன் இருந்து தங்கள்**
**முதற்சரமடுத்து வாங்கி முதல்வர்**
**தங்கண்ணில் அப்ப"**[6]

குருதி நின்றது. மறுகண்ணிலும் குருதிவர மற்றொரு கண்ணையும் பெயர்த்து வைக்க முனைந்தபோது இறைவன் தடுத்து அருள் பாவித்தார் என்பது புராண வரலாறாக இருந்தாலும் இன்று அது உண்மையாகியுள்ளமை எண்ணி வியக்கத்தக்க அவர்தம் வீரப் பண்பாட்டை எண்ணுவோம்."[7]

ஒருவர் செய்த தீமையை அன்றே மறக்க வேண்டும் என்ற நெறியை உலகிற்குக் கற்றுத் தந்தவர் மெய்ப்பொருள் நாயனார். தன்னைக் கொலை செய்தவனையே ஊர் எல்லை வரையிலும் பாதுகாப்பாக உயிரோடு அனுப்பத் துணிந்த அருள் உள்ளம் அவருக்கே உரித்தானது.

**"இன்னுயிர் செகுக்கக் கண்டும்**
**எம்பிரான் அன்பர் என்றே**
**நன்னெறி காத்த சேதி நாதனார்**
**பெருமை தன்னில்"**[8]

திருக்குறிப்புத் தொண்டர் சிவ அடியார்களுக்குரிய துணிகளை எல்லாம் வெளுத்துக் கொடுப்பார். இறைவன் இவரை சோதிக்க வேண்டி கந்தை யாடையுடன் வந்ததை அறிந்து அவர் ஆடையை வெளுத்துத்தர முனைந்தார். இதனை,

**"சீதமலி காலத்துத் திருக்குறிப்புத்**
**தொண்டர்பால்**
**ஆதுலராய் மெலிந்து மிக அழுக்கடைந்த**
**கந்தையுடன்**
**மாதவ வேடந்தாங்கி மாலறியா மலரடிகள்**
**கோதடையா மனத்தவர் முன்**
**குறுநடைகள் கொளக்குறுகி"**[9]

என்பதாலும்.

**"திருமேனி வெள்ளீறு திகழ்ந்தொளிரும்**
**கோலத்துக்**
**கருமேக மென அழுக்குக் கந்தையுடன்**
**எழுந்தருளி**
**வருமேனி அருந்தவரைக் கண்டுமனம்**
**மகிழ்ந்தெதிர்கொண்டு**

உருமேவும் மயிர்ப்புளகம் உளவாகப்
பணிந்தெழுந்தார்"[10]

என்பதாலும் அவர்தம், வெளுத்துக் கொடுக்கும் கொடைப் பண்பை அறிய முடிகிறது.

மூர்த்தி நாயனாருக்கு மன்னர் பல கொடுமைகளைச் செய்தாலும் தாம் செய்து வந்த சந்தனத் திருப்பணியைத் தவறாமல் செய்து வந்தார் என்பதை,

"அந்தம் இல வாமிறை செய்யவும்
அன்பனார்தம்
முந்தைம் முறை மைப்பணி முட்டலர்
செய்து வந்தார்
தந்தம் பெருமைக் களவாகிய சார்பில் நிற்கும்
எந்தம் பெருமக்களை யாவர் தடுக்க
வல்லார்"[11]

திருநாவுக்கரசருக்கு சமணர்கள் தராத தொல்லைகள் இல்லை அவற்றை யெல்லாம் பொறுமையாகவும் நிதான மாகவும் இறைநம்பிக்கை என்ற பேராயுதத்தால் வென்றவர். தமக்கு விருந்தளித்த நிலையில் வீட்டில் உள்ள அனைவரோடுந்தான் உண்வேன் என்றதும் இறந்த மகனை மறைந்து வைத்த அப்பூதியடிகளின் செயலை முறியடித்து அவர் தம் மகனையும் பிழைக்கவைத்த பண்புக்கு ஈடு இணையே இல்லை. ஓர் அருளாளர் தூய்மைப்பணியைச் செய்து திருக்கோயில்களின் தூய்மையைப் பேணிய உழவாரப் பண்பாட்டாளர். இன்றைக்கு அவர் செய்து காட்டிய பண்பாட்டுச் செயல் தான் இந்திய நாடே தூய்மை இந்தியா திட்டம்" என்ற ஒன்றை செயல்படுத்தி வருகின்ற மாபெரும் திட்டம் எனவே தமிழர்களின் பண்பாடு என்பது பிறருக்கு எடுத்துக்காட்டாய் அமைவன. ஈடு இணையற்ற நிலையில் அமைவன என்பதை உணர்ந்தால் நாடும், வீடும் நலம் பெறும். நல்ல பண்பாடுகளுக்கு மீட்டுருவாக்கம் தரவேண்டியதும் வழிகாட்ட வேண்டியதும் ஒவ்வொரு கல்வி நிறுவனங்களின் பங்காகும். இதை நான்காம் தமிழ்ச் சங்கம் செம்மையாய் ஈடேற்றியுள்ளது. குறிந்து மகிழ்ச்சி பாராட்டுக்கள்.

## தொகுப்புரை

வாழ்வியல் முறைகளின் நடவடிக்கைகளும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டின் திறவுகோல் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். மன்னர்களும் வள்ளல்களும் பல்வேறு வகையான கொடைகளை அளித்தனர் என்பதுவரலாறு. ஆனால் அருளாளர்கள் அடியார்கள் சிவத்தொண்டோடு, பண்பாட்டு நெறிகள் பவவற்றையும் வாழ்க்கையில் செய்து மீண்டுள்ளனர். அவர்களால் என்ன ஒரு நற்செயலைச் செய்ய வியலுமோ அவற்றை நிறை வாகவும் இறுதி மூச்சு உள்ள வரையும் செய்து காட்டியுள்ளனர், நாயன்மார்கள் செய்தளித்த பண்பாட்டு நெறிகளை இனம், மொழி, கடந்து செய்தால் அதுவே நாயன்மார்களுக்கு நாம் காட்டும் பண்பாடு. இனியன ஏற்போம். ஏற்பனவற்றை மரபாகத் தொடரச் செய்வோம்.

## குறிப்பெண் விளக்கம்

1. லெப.கரு. இராமநாதன், சங்கத் தமிழர் வாழ்வு, ப.112
2. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், தமிழும் பிற பண்பாடும், ப.2
3. திருக்குறள், எண், 392
4. தஞ்சை வாணன் கோவை ப.24
5. நற்றிணை பா.எண்.39
6. சேக்கிழார், பெரியபுராணம், "கண்ணப்ப நாயனார் புராணம்" பா. எண்.822
7. மேலது. பா.எண் 826
8. சேக்கிழார், பெரியபுராணம், மெய்ப்பொருள் நாயனார் புராணம் ப. எண்.490
9. மேலது, திருக்குறிப்புத் தொண்டர் புராணம் ப.எண் 1193

# தமிழர் பண்பாடும் கலாச்சாரமும்

**மு.பவித்ரா,**
டாக்டர் சாகிர் உசேன் கல்லூரி,இளையான்குடி,
முதுகலைத் தமிழ், இரண்டாம் ஆண்டு,
இளையான்குடி, சிவகங்கை மாவட்டம்,

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழர் பண்பாடு தமிழ் மக்களின் பண்பாடாகும். எஞ்சியிருக்கும் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியினை அவர்கள் பேசுகின்றனர். தமிழ்மொழி வெறும் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் கருவி அல்ல...! அது அவர்களின் கலாச்சாரம் ஆகும். பண்பாடு, கலாச்சாரம் என்பது அவர்களின் பழக்க வழக்கம் மற்றும் சடங்கு, வாழ்க்கைமுறை போன்றவை அவர்களின் வாழ்வியலை குறிக்கிறது. அவர்களின் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்த ஒன்றாகவே கருதப்படுகிறது.*

*நாகரிகத்தை இவ்வுலகினிற்கே அறிமுகம் செய்து வைத்தவன் அல்லவா? நம் தமிழன்! இங்கு மனிதன் மனிதனாக வாழ சில பண்பாட்டு நெறிமுறைகள் அவசியம் தேவை. அஃது, இல்லாவிடில் விலங்குகளிடமிருந்து மனிதனை பிரித்துப் பார்க்க இயலாது... என்பதே மறுக்க முடியாத உண்மையாகும். அந்த வகையில் தமிழரின் பண்பாடும், கலாச்சாரமும் சங்க காலம் முதல் சம காலம் வரை எஞ்ஞனம் ஊடுருவி உள்ளதனை பற்றி ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.*

## முன்னுரை

*"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்னும் கணியன் பூங்குன்றனாரின் இப்பாடல் வரிகள் ஒவ்வாரு தமிழனின் உள்ளத்திலும் ஊடுருவி உள்ளதனை இன்றளவும் காணலாம். எல்லா ஊரும் எனது ஊர்... எல்லா மக்களும் எனக்கு உறவினர் என்று நினைத்து வாழும் எண்ணம் தமிழனது பண்பாட்டு கலாச் சாரத்தின் வாயிலாகவே அவனுக்கு கிடைத்தது என்பது ஆகச் சிறந்த உண்மையாகும். தமிழன் எங்கு சென்றாலும் அவனுடனே தமிழ் பண்பாடும், கலாச்சாரமும் புலம் பெயர்கிறது. அவன் செல்லும் இடமெங்கும் தமிழரின் பண்பாடு தலைத்தோங்கி நிற்கிறது. தமிழுக்கும் தமிழ் – பண்பாட்டிற்கும் 5000 ஆண்டு கால வரலாறு உண்டு. தமிழ் கலாச்சாரம், மொழி இலக்கியம், இசை. நடனம், நாட்டுப்புறக் கலை, தற்காப்புக் கலை, ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, விளையாட்டு, உணவு, ஆடை கொண்டாட்டங்கள், சமயங்கள், மரபுகள், சடங்குகள் முதலியவற்றின் வாயிலாக வெளிப்படுகின்றன. அவற்றின் உள்ளார்ந்த ஆய்வு நிலையை இங்கு காண்போம்.*

## கற்பு என்னும் திண்மை

*தமிழர் பண்பாட்டு நெறி முறைகளுள் கற்பொழுக்கம் என்பது முக்கியமான தாகும்.*

**"உயிரினும் சிறந்தது நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந்தன்றெனத்"**
**(தொல்.கள.நூ.1059)**

என்று தொல்காப்பிய நூற்பா கற்பின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது.

"பெண்ணின் பெருந்தக்க யாஉள
கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்"
(குறள் - 54)

என்ற திருக்குறளில், "கற்பு" என்ற மனம் உறுதியுள்ள பெண்ணைக் காட்டிலும் பெருமை தரக் கூடிய பொருள் இவ்வுலகத்தில் வேறு ஒன்றுமில்லை என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின்
உண்டு" (குறள் - 974)

என்னும் குறட்பா வாயிலாக ஆணுக்கும் கற்பு உண்டு என்பது புலனாகிறது.

## களவு – கலாச்சாரம்

தமிழரின் கலாச்சாரத்தில் களவு வாழ்விற்கும் முக்கிய பங்குண்டு. களவையும் கூட தமிழின் நாகரிகமாகவே செய்துள்ளான் தமிழனின் களவு வாழ்விற்கு ஆகச்சிறந்த உதாரணமாக, குறுந்தொகையின் செம்புலப் பெயர்னீரார் பாடல் வரிகளைக் கொள்ளலாம்.

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழியறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே!"
(குறுந்தொகை - 40)

இவ்வளவு நாகரிகமாக தனது காதலினைக் கூறத் தமிழனால் மட்டுமே முடியும்.

## வீர – மரபு

வீரத்தை தமிழனுக்கு யாரும் கற்றுத்தர வேண்டியதில்லை. அது அவனது இரத்ததில் கலந்த ஒன்றாகும். வீரத்தை இவ்வுலகினிற்கே அறிமுகம் செய்தவன் தமிழனாவான். வீரம் தமிழனின் பண்பாட்டு, கலாச்சாரத்தில் ஒன்றிணைந்த ஒன்றாகும். 'தொல்காப்பிய புறத்திணை' போர் மரபாகவே சொல்லப் பட்டுள்ளது. போரில் புறமுதுகிட்டு ஓடாமல் வீரமுடன் உயிர்த்தியாகம் செய்த தனது மகனை கண்டத் தாயின் வற்றிய மார்பிலிருந்து பால் சுரந்தமையைப் புறநானூற்று பாடல் வழியாக அறிய முடிகிறது.

"வாடுமுலை ஊறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே"
(புறம் - 295)

சங்கப் புலவர் ஒக்கூர் மாசாத்தி யாரின் கூற்றுப்படி ஒரு பெண் தன் மகன் போர்க்களத்தை விட்டுத் திரும்பி ஓடி விட்டால். தன் மார்பகங்களை வெட்டத் தயாராக இருந்தாள். தமிழ் பெண்டீரும் வீரத்திற்கு பெயர்போனவர்களாகவே விளங்கினர்.

## சடங்கு முறைகளும், வாழ்க்கை முறைகளும்

தமிழனின் பாரம்பரிய கலாச் சாரத்தில் சடங்கு முறைகளும், வாழ்க்கை முறைகளும், இன்றியமையாத ஒன்றாகும். ஒவ்வொரு சமயத்தவரும் பல்வேறு வகையான சடங்கு முறைகளைப் பின்பற்றி வந்தனர். மழைச் சடங்கு, வளப்பெருக்கு சடங்கு, தைநீராடல், கும்மி கொட்டுதல், கோலாட்டம், திருமணச் சடங்கு, பேயோட்டுதல், நோன்பு, நடுகல் வழிபாடு, பூப்புனித நீராட்டல், கோலமிடுதல் வெறியாடுதல் போன்ற பல்வேறு வகையான சடங்கு முறைகளைப் பின்பற்றி வாழ்ந்து வந்தனர் நம் தமிழர். இவற்றில் பெரும் பாலான சடங்கு முறைகள் இன்றளவும் பின்பற்றப்படுகின்றன.

## பெயர் கூறா பேரிலக்கியம்

தமிழ் பாரம்பரியத்தை பறை சாற்றும் சங்க இலக்கியங்களில் சுட்டி

ஒருவரது பெயர் கொள்ள பெறாது என்பதே தமிழனின் கலாச்சாரப் பண் பாட்டிற்கு ஆகச் சிறந்த உதாரணமாக கொள்ளலாம்.

"புறத்திணை மருநகின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருநகின் அளவுதல் இலவே" (தொல்.அக.நூ-1001)

இதனை விட தமிழனின் நாகரிகத் தினை எடுத்துக்காட்ட வேறு உதாரணம் உண்டோ?

## விருந்தோம்பல் சிறப்பு

"மண்திணி ஞாலத்து வாழ்வோர் கெல்லாம்
உண்டிக் கொடுத்தோர் உயிர்க் கொடுத்தோரே"
(மணிமேகலை- வரி, 95-96)

என்பதற்கிணங்க பசிப்பிணியினை போக்கும் பண்பு தமிழனுக்கே உரிய மகத்தான பண்பு நெறியாகும்.

தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை யெனில் இந்த ஜகத்தினை அழித் திடுவோம் என்றான், பாரதி. தமிழனின் விருந்தோம்பல் பண்பானது அனைவராலும் மதிக்கத் தக்க ஒன்றாகவே விளங்குகிறது என்பதனை திருக்குறள் வாயிலாக அறிய முடிகிறது.

"சொல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"
(குறள் - 86)

விதைத்த நெல்லை எடுத்து அடியார்க்கு அமுது படைத்த மாறனாயநாரின் வரலாறு இன்றளவும் பேசப்படுகிறது, என்பது பெருமைக்குறிய ஒன்றாகும்.

## மணக் கொடை

பெண்மகளை திருமணம் முடிக்க வேண்டி ஆண்மகன் பரிசுப்பொருட்களை வழங்குவது அக்கால மரபு என்பதற்கு எடுத்துக்காட்டாக, குறுந்தொகையில் இடம் பெறும் வெள்ளி வீதியாரின் பாடல் வரிகளை கொள்ளலாம்.

"அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்று நன் றென்னும் மாக்களோடு
இன்று பெரிது என்னும் ஆங்கன தவை"
(குறுந்தொகை - 361)

ஆனால் தமிழ் சமூகத்தில் இது மட்டும் தலைகீழாக மாறிப்போனது ஏன்? என்று அறிய இயலவில்லை. இன்று பரிசுப்பொருள்கள் கொடுக்கும் வழக்கம் பெண்ணிற்கு உரியதாயிற்று.

"அன்று
கண்ணகி
கோவலனுக்காக
சிலம்பை உடைத்தாள்
மதுரையை எரித்தாள்
ஆனால்
இன்றைய கோவலர்கள்
சிலம்புக்காக
கண்ணியை எரிக்கிறார்கள்!"

## தமிழர் குடும்பமுறையும், தமிழர் பரம்பரையும்

குடும்பம், வாழிடம், மணந்தகம், தாய்வழிக் குடும்பம், தந்தை வழிக் குடும்பம், தனிக் குடும்பம், விரிந்த குடும்பம், என்ற ஓர் அமைப்பாக வாழ்ந்து வந்தனர்.

## முடிவுரை

பண்பாடு, கலாச்சாரம் என்பது நம் முன்னோர் நமக்கு இட்டுச் சென்ற எச்சங்கள் ஆகும். அதனைப் பின்பற்றி அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதே நமது தலையாய கடமை யாகும்.

"கலாச்சார பண்பாடு
வரும் காலங்களில் அருங்காட்சிய ஏடுகளில்
மட்டுமே கபணும் காட்சிகளாக
இல்லாமல்,
வளரும் அரும்புகளின்
வளர்ச்சியில்
விதைக்கப்பட்டால் நன்று."

நம் முன்னோர் கட்டி காத்த காலச்சார பண்பாட்டை அதன் சீர் குலையாது நாமும் காப்போம்.

## சான்றெண் விளக்கம்


1. தமிழண்ணல், (உ.ஆ) தொல் காப்பியம், களநூர.1059, ப.350
2. மு.வரதராசன் (உ.ஆ) திருக்குறள், பா.54, ப.13
3. மேலது, திருக்குறள், பா.974 ப.98
4. புலியூர்க்கேசிகன், (உ.ஆ) குறுந்தொகை, பா.40, ப.52
5. புலியூர்க்கேசிகன், (உ.ஆ) புறநானூறு, பா.295, ப.
6. தமிழண்ணல், (உ.ஆ) தொல்காப்பியம், அக.நூர–1001, ப.311
7. துரை.தண்டபாணி (உ.ஆ) மணிமேகலை, பா.வரி, 95–96 ப.90
8. மு.வரதராசன் (உ.ஆ) திருக்குறள், பா.86 ப.09
9. புலியூர்க்கேசிகன், (உ.ஆ) குறுந் தொகை, பா.361 ப.360
10. முனைவர்.உமாராணி (ப.ஆ) சமூக முன்னேற்றத்தில் பெண்கள், ப.52

# குருசாமிக்கோனாரின் அழகர் வர்ணிப்புப் பாடலில் நாட்டுப்புறப் பண்பாடுகள்

நெறியாளர் **முனைவர் பி.ஆறுமுகம்,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

ஆய்வாளர் **கு.பவுர்ணமி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

## முன்னுரை:–

தமிழ் இலக்கியங்களில் முருகன் வர்ணிப்பு, அழகர் வர்ணிப்பு, அம்மன் வர்ணிப்பு, அங்காளம்மன் வர்ணிப்பு, கருப்பசாமி வர்ணிப்பு, மாரியம்மன் வர்ணிப்பு, பச்சையம்மன் வர்ணிப்பு என்று பல வர்ணிப்புப் பாடல்கள் உள்ளன. இவை காலத்தால் கனிந்து அந்தக் காலத்தையே கனிய–வைக்கின்றன எனலாம். அதோடு இவை பல வரலாற்றுத் தகவல்களையும் தன்னகத்தே கொண்டுள்ளன என்றும் கூறலாம். இவற்றில் அழகர் வர்ணிப்புப் பாடல்கள்தான் மிகவும் புகழடைந்தவையாகும். மதுரை மாவட்டத்தில் ஊர்தோறும் இந்த அழகர் வர்ணிப்புப்பாடல்கள் இருக்கின்றன எனலாம். அவற்றில் பல அச்சேறியுள்ளன. சில இன்னும் அச்சேறாமல் உள்ளன எனலாம். அச்சேறிய நூல்களில் மிகவும் குறிப்பிடத்தக்கது குருசாமிக் கோனாரின் அழகர் வர்ணிப்புப் பாடலாகும்.இக் குருசாமிக் கோனாரின் அழகர் வர்ணிப்புப் பாடலில் பதிவாகியிருக்கின்ற நாட்டுப்புறப்பண்பாடுகளை ஆய்ந்து வெளிக்கொணர்வது இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்பாடு – வர்ணிப்பு – ஓர் விளக்கம்

பண்பாடு என்பது “குறிப்பிட்ட நாடு, இடம் போன்றவற்றைச் சேர்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மதம், மொழி, கலைகள் சிந்தனை வெளிப்பாடு, வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டிருக்கும் பொருள்கள் போன்றவற்றின் மொத்தம், கலாச்சாரம் culture” (க்ரியாவின் தமில் அகராதி பக் – 887) ஆகும்.

வர்ணிப்பு அல்லது வர்ணனை என்பது, “நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் விவரிப்பு; இந்த விவரிப்பின் வெளிப்பாடாக அமைந்த பேச்சு அல்லது எழுத்து description! Commentary (க்ரியாவின் தமில் அகராதி ப.1203.) என்று அறியப்படுகிறது. இனி குரு சாமிக்கோனாரின் வர்ணிப்புப் பாடலில் உள்ள பண்பாடுகள் குறித்து ஆராயலாம்.

## சித்திரை நட்சத்திரம் பார்க்கும் பண்பாடு

தமிழரின் திருமணங்களில் மணமக்கள் அம்மி மிதிப்பதும், அருந்ததி நட்சத்திரத்தை அவர்கள் பார்ப்பதும் முக்கிய நிகழ்வுகளாகும். அதுபோல மதுரை மக்கள் சித்திரைத் திருவிழாவைக் கொண்டாட வானத்தில் சித்திரை நட்சத்திரம் வரும் நாளை எதிர்பார்க்கும் வழக்கமும் இருந்து வருகிறது. அழகர் கோயில் பட்டர்தான் சித்திரை நட்சத்திரம் வரும் நாளைக் கணக்கிட்டுச் சொல்வார் என்கிறார்கள். இம்முறையைத் தான் பஞ்சாங்கம் பார்க்கும் பண்பாடு என்று அழைக்கிறார்கள். வானத்தில் சித்திரை

நட்சத்திரம் தோன்றும் நாளில் ஆற்றில் அழகர் இறங்கும் நிகழ்வு நடைபெறும் என்று குருசாமிக் கோனார் வர்ணிப்புப் பாடலில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை,

"தேவரெல்லாம் வைகை நதி போக
செப்பமுடன் நாட்பார்த்து
சித்திரைமாதத்தில் காயாம்பு மேனி
சித்திரை நட்சத்திரத்தில்
சித்திரா பருவத்தில் நரசிங்கமூர்த்தி
விஸ்தாரமாகவேதான்" (வரி 24-29)

என்ற பாடல் வரிகளால் அறியலாம்

### அழகருக்குப் படையலிடும் பண்பாடு:-

அழகர் எழுந்தருளும் மண்டபங் களில் வெள்ளை மண்டபம் என்பதும் ஒன்றாகும். இம்மண்டபம் மூன்று மாவடிக்கு அருகே சூர்யா நகரில் உள்ளது. இம் மண்டபத்தில், அழகர் எழுந்தருளும் நாளில் அழகருக்குத் தேன்குழலும், ஆமை வடைத் தோசையும், படையலிடும் வழக்கம் இன்றும் உள்ளது. குருசாமிக் கோனார் பாடலில் இது பற்றிப் பாடப்பட்டிருக்கிறது. இதை,

............வெள்ளை மண்ட பத்தில்
சாரப் பொழுதினிலே காயாம்பு மேனி
வாராராம் மாயவனும்
வெள்ளை மண்டபந்தன்னை
சுந்தராஜமூர்த்தி விட்டு வெளியேறி
சம்பா வரியில்லோ என்னையனுக்குத்
தளிகை நைவேத்தியமாம்
அன்பான தேன் குழலும்
பச்சைமாலச்சுதனுக்கு ஆமைவடைத்
தோசையுமாம் (வரி 2.8)(பக்-9)

என்ற பாடல் வரிகள் நமக்கு உணர்த்து கின்றன. அதேபோல், மந்திக்குளத்தில் ஒரு மண்டபம் உள்ளது. இந்த மந்திகுளம் மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. இங்கு அழகர் எழுந்தருளும் போது அழகருக்கு சம்பா, பொங்கல், புளியோதரை ஆகியன படையலிடும் வழக்கம் தொன்றுதொட்டு நடந்து வருகிறது. இதை,

"மந்திகுள மண்டபத்தில் நரசிங்கமூர்த்தி
வந் துமிகவே யிறங்கி
பொங்கலுடன் சம்பா என்னையனுக்கு
புளியோதறை முதலால்
சக்கரைப் பொங்கலுடன் மிக்கவே தான்
படைத்து" பக்.எ-10 (பா.வரி 8-10)

என்ற பாடல் வரிகாளால் அறியலாம். அதேபோல் தல்லாகுளம் மண்டகப் படியிலும், அழகருக்குப் படையலிடும் பண்பாடு நிகழ்கிறது. தல்லாகுளம் என்பது தமுக்கம் அருகேயுள்ளது. இங்கு பிரசன்ன வெங்கடா சலபதி திருக்கோயில் உள்ளது. இதைச் சிறிய திருப்பதி என்பர், இங்கு அழகர் எழுந்தருளும்போது, அழகரை, பக்தர்கள்- - வரவேற்கும் பண்பாடு மிகவும் அற்புதமாக இருக்கும். வான வேடிக்கை முழங்க அழகரை பக்தர்கள் வரவேற்பர். இங்கு அழகருக்கு- நெல்சாதம், நெய், தயிர், தேன், பழங்கள், சந்தனம், கஸ்தூரி மஞ்சள், வாசனைப் பூக்கள், ஆகியன படையலிடும் பண்பாடு தொன்றுதொட்டு நடந்து வருகிறது. இதை,

"சம்பாநெற்சாதம் கோவிந்தமூர்த்திக்கு
அன்பாய்ப் படைத்தார்கள்
நெய்பாற் றயிருடனே என்னையனுக்கு
முன்பாய்ப் படைத்தார்கள்."
பக்.எ-10 (பா.வரி 23-33)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

### மண்டகப்படிதாருக்குப் பரிவட்டம் கட்டும் பண்பாடு :-

தமிழர்களின் கோயில் திருவிழாக்களில் பரிவட்டம் கட்டுவம் வழக்கம் ஒரு சிறந்த பண்பாடாகக் கருதப்படுகிறது. பரிவட்டம் என்பது மரியாதைக்குரிய ஒருவருக்கு அவரின் தலையில் கட்டப்படும் துணி ஆகும். பரிவட்டங்களில் கோரப்பரிவட்டம்,

அருதிப்பரிவட்டம் என்று பல வகைகள் உண்டு. அழகர் எழுந்தருளும் விழாவில் சில மண்டகப் படிகளில் மட்டும் பரிவட்டம் கட்டும் நிகழ்ச்சி நடை பெறும். மண்டகப்படி உபயதாரருக்கு அழகர்கோயில் – தேவஸ்தானத்தார் இப்பரிவட்டங்களைக் கட்டுவர். கட்டும் போது, மேளதாளங்கள் முழங்க மரியாதைக்காரருக்கு மாலையிட்டுக் கட்டுவர். இராமசாமி அம்பலக்கார மண்டகப்படியில் இந்நிகழ்ச்சி நடைபெறும் வழக்கம், ஆண்டுதோறும் நிகழ்கிறது. இம்மண்டபம் அவுட் போஸ்ட் அருகே அமைந்துள்ளது. இந்நிகழ்வு குறித்து,

**"ஆரியலுமார்பன் இராமசாமி அம்பலம்**
**அலங்கார மண்டபத்தில்**
**நாதனிளைப்பாரி பரிவட்டங்கட்டி**
**நன்னம பெரு மண்டபத்தில்**
**நீதமுடன் நடந்து ஆதிமூலம்**
**நேர்மையுடன் தான் வரவே" பக்.எ-9**
**(பா.வரி 34-36)**

என்று குருசாமிக் கோனாரின் பாடல் சான்று பகிற்கிறது.

## அழகருக்கு முடியைக் காணிக்கையாகச் செலுத்தும் பண்பாடு:

தமிழர்களின் பண்பாடுகளில், மனிதர்கள் தெய்வங்களுக்குத் தங்கள் முடியைக் காணிக்கையாகச் செலுத்தும் பண்பாடு காலங்காலமாக இருந்துவரும் பண்பாடு ஆகும். மதுரையில் திருப்பரங் குன்றத்திலும், அழகர் கோயிலிலும் பெரும்பாலான பக்தர்கள் தங்கள் முடியைக் காணிக்கையாகச் செலுத்துவர். அதேபோல் ஆற்றில் அழகர் இறங்கும் நாளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் முடியைக் காணிக்கையாக, செலுத்துவதை ஆய்வாளர் களஆய்வின் வழியே நேரில் காணமுடிந்தது. அதுவும் சில பெண் பக்தர்கள் தங்களின் தலைப்பகுதியில் உள்ள முடியின் நுனிப்பகுதியை மட்டும் வெட்டி அந்த முடியை அழகருக்கு காணிக்கையாகச் செலுத்தும் வழக்கத்தையும் ஆய்வாளர் நேரில் காணமுடிந்தது. இந்நிகழ்வையும் குருசாமிக் கோனார் வர்ணிப்புப் பாடல் பதிவு செய்து வைத்துள்ளது. இதை,

**"..................... தலைமுடியை**
**பேரிட்டுத் தான்கொடுத்து மானிடர்கள்**
**எடுத்தார் தலைமுடியை**
**தோண்டியங்கே**
**ஆதிமூலத்து ஆற்றில் தலைமுழுகி**
**வாழ்த்தி யனைவோரும்**
**சுந்தராஜமூர்த்தியைப் போற்றிப்**
**பணிந்தார்கள்" பக்.எ-12,13(1-4) (37,38)**

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

## முடிவுரை:–

குருசாமிக் கோனாரின் வர்ணிப்புப் பாடலில் பதிவாகியிருந்த தமிழரின் நாட்டுப் புறப்பண்பாடுகளான, சித்திரை – நட்சத்திரம் பார்க்கும் பண்பாடு, அழகருக்குப் படையலிடும் பண்பாடு, மண்டகப்படிதாரருக்குப் பரிவட்டம் கட்டும் பண்பாடு, அழகருக்கு முடியைக் காணிக்கையாகச் செலுத்தும் பண்பாடு ஆகியன குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பட்டன.

# புறநானூற்றில் பண்பாட்டுப் பதிவுகள்

**கூ.பழனியம்மாள்**

உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை.
அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஆலம்பட்டி, திருமங்கலம், மதுரை.

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் அனைத்தும் மனித மனத்திற்கு அடிப்படையான அறம், பொருள், இன்பம், வீடுபேறு அடைதல் என்னும் நான்கு உறுதி பொருள்களை எடுத்தியம்பும் கருவூலமாகத் திகழ்கின்றன. தமிழக வரலாற்றில் சங்க காலத்திற்கு என்ற தனிச்சிறப்பு உண்டு. சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் மேற்கணக்கு நூல்கள் என அழைக்கப்படுகின்றன. தமிழருக்கும் வேந்தர்களுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் அவர்கள் மேற்கொண்டு இருந்த பண்பாடு சிறப்பாக கருதப்படுகிறது. சங்க இலக்கியத்தில் காதல், வீரம், மனிதநேயம், விருந்தோம்பல், ஈகை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகிய அனைத்து நிலைகளிலும் தமிழர்களின் பண்பாடு வெளிப்படுத்தப்படுகிறது. தமிழ் இலக்கியங்கள் மக்களின் நாகரீகம், பண்பாடு, கலாச்சாரம், வரலாற்று நிகழ்வுகள், வாழ்க்கை முறை போன்றவற்றை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன. சங்கப் புலவர்களால் செய்யப்பட்ட செம்பொன் சித்திரம் சங்க இலக்கியம் தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டுப் பதிவுகள் பற்றி இவ்வாய்வு எடுத்த இயம்புவதாக அமைகிறது.

## பண்பாடு வரையறை

பண்பாடு என்ற சொல் ‘பண்படு’ என்ற கூட்டு வினைச் சொல்லில் இருந்து உருவானதாகும். பண்பாடு என்பது பக்குவம் பெற்ற ஒரு நிலையைக் குறிக்கும் சொல்லாகும். இதனை ஆங்கிலத்தில் culture என்ற சொல்லால் குறிப்பிடப்படுகின்றனர். ஆதிகாலத்தில் குகைகளில் தனித்து வாழ்ந்த மனிதனை சமுதாயத்தோடு இணைந்து வைத்ததே பண்பாடு தான்.

‘பண்’ என்பது பாடல் அல்லது இசை என்னும் பொருள்படும். ‘பாடு’ என்பது நீட்டல் விகாரம் ‘படு’ என்பது செம்மைப் படுத்துவது என்னும் பொருள்படும் மனிதனை விலங்கிடம் இருந்து வேறுபடுத்திக் காண்பது பண்பாடுதான். தமிழர் பண்பாடு என்றால் தமிழ் மக்களுக்கு புதிய திருந்திய மனப்பான்மை என்ற பொருள். 1937 ம் ஆண்டு டி.கே.சிதம்பர முதலியார் பண்பாடு என்ற சொல்லை அறிமுகப்படுத்தினார்.

## ஈகைப் பண்பு

மனித வாழ்வில் எத்தனை ஒழுக்கங்கள் இருந்தாலும் பொருள் சேர்ப்பதில் மேம்பட்ட ஒழுக்கமும் உண்மையும் இருக்க வேண்டும் உழைத்துப் பெரும் பொருளை இயன்ற அளவு மற்றவர்களுக்குக் கொடுத்து வாழ வேண்டும் என்பதனை

கொடுப்பதில் இன்பம்
பெறுவது இல்லை.

என்ற பொன்மொழி வாயிலாக அறியமுடிகிறது. சொற்பமான இந்த உலக வாழ்க்கையில் நம்மால் முடிந்த அளவிற்கு மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதனை

**ஈ என இரத்தல் இழிந்தன்று அதன் எதிர் ஈயேன் என்றால் அதனினும் இழிந்தன்று கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன் எதிர்கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று.** (புறம் 204)

வல்வில் ஓரியின் ஈகைப் பண்பு பற்றிக் கழைதின் யானையார் குறிப்பிடுகிறார்.

பிறரிடம் பொருளைக் கேட்டு வாழ நினைப்பதே இழிவானது அதைவிட கேட்பவனுக்கு இல்லை என்பவன் இழிவானவன் என்றும், இல்லாதவர்க்கு கொடுத்து உதவுவது உயர்வானது என்றும் கூறுகிறது புறநானூறு. இதன் மூலம் சங்க கால மக்கள் ஈகை பண்பையும் அவர்களின் உயர்ந்த மனப்பான்மையும் அறிய முடிகிறது.

### பகுத்துண்ணும் பண்பு

பண்டைய தமிழ் மக்கள் பகுத்துண்டும் பண்பினை பெரிதாக பின்பற்றி போற்றினர்.

**யாம் பெற்ற இன்பம் பெருக வையகமே திருமூலர்.**

வாக்கிற்கிணங்க தங்களுடைய வாழ்க்கையைப் பின்பற்றினார்கள் தமிழர்கள் கிடைத்தற்கரிய அமிர்தம் கிடைத்தாலும் தான் மட்டும் உண்ணாமல் பகத்துண்டு வாழ வேண்டும் என்ற மனப்பான்மை கொண்டு வாழ்ந்தனர். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்பதனை,

**உண்டாயின் பதம் கொடுத்து**
**இல்லாயின் உடன் உண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன் அண்ணல்**
**என் கோமான் வைந்துதி வேலே** (புறம்-95).

**பாடியவர் -ஔவையார்**
**மன்னன் -அத்தியமான்.**

### ஒற்றுமை உணர்வு

ஒற்றுமையாக இருப்பதே பலம். என்பதே புலவர் இருவேறு அரசர்கள் ஒரு சேர இருந்தமையை நோக்கி இந்த ஒற்றுமை நீடிக்க வேண்டும் என்பதனை

உடன் நிலைத் திரியிர் ஆயினும் பௌவம் உறுத்த இப் பயம்கெளு மாநிலம் கையகப்படுவது பொய் ஆகாதே. (புறம் –58)

புலவர்– காவிரிப்பூம்பட்டினத்துக் காரி கண்ணனார் என்ற பாடல் வழி அறியலாம். தமிழக வேந்தர்கள் பகை கொண்டும் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர் என்றும் புலனாகிறது.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடின் அனைவருக்கும் தாழ்வு என்று பாரதியின் வரிகள் நினைவிற்கு வருகிறது.

### விருந்தோம்பல் பண்பு

தமிழரின் வரலாற்றுக் கருவூலம் என்று அழைக்கப்படும் புறநானூறு கல்வி, பொதுமைப் பண்புகள், கடமைகள் போன்ற பண்பாட்டு விழுமியங்களுடன் விருந்தோம்பலையும் வலியுறுத்துகிறது. கணவர் இறந்தால் பாணர் தம் வறுமைத் துயர் நீங்கும் அளவுக்கு வாரி வழங்குவான் பாடிணிக்கு அணிய பொன்னரி மாலையிணையும், சூட்டிக் கொள்ள பொற்றாமரையும் வழங்கி மகிழ்வான் அவன் இல்லாத நேரத்தில் வந்தவருக்கு இல்லை என்று சொல்லி அனுப்ப மனம் இல்லாமல் வாடித் தவிக்கின்றாள் தலைவி,

உண்டால் அம்மா இவ்வுலகம் இந்திரர் அமிர்தம் இயைவது ஆயினும் இனிது என தமயர் உண்டலும் இலரே, முனிவிலர் ––––––––––––––

––––––––––––––

தமக்கென முயலா நோன் தாள் பிறருக்கென முயலுநர் உண்மையானே. *(புறம்–182)*

புலவர் – கடலூர் மாய்ந்த இளம் பெரும்வழுதி. தனக்கென உழைக்காமல் தம் மக்களுக்கு என முயற்சியுடன் உழைப்பவர்கள் தன் உயிரையும் கொடுப்பார்கள் என்பதற்கு இம் மன்னனைச் சான்றாக புறநானூறு கூறுகிறது. தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த நெல்லை உரலில் இட்டு குத்தி எடுத்து உணவளித்தாள் தலைவி, குரல் உனக்கு விதைத்தினை உரல்வாய்பெய்து சிறிது புறப்பட்ட அன்றோ இலள்.(புறம்)

நேற்று வந்த விருந்தினரை பேணுவதற்கு பொருள் தேவைப் பட்டதால் இரும்பின்னால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன் என்ற செய்தியும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

நெருணை வந்த விருந்தினருக்கு மற்று தன் இரும்புடைப் பழவால் வைத்தனன் என்று இக்கருங்கோட்டு சீறி யாழ்ப் பனயம். விதைத்து விட்டு வந்த நெல்லை அறுத்து வந்து, பின் சமைத்து சிவனடியாருக்கு விருந் தளித்தார் இளையான் குடி மாறநாயனார். செய்தியும் புறநானூற்றல் இடம்பெறுகிறது.

## கடமை உணர்வு

இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு கடமை உண்டு. அதை சரிவர செய்தால் இச்சமூகமே சிறப்பாக செயல்படும் என்பதனை,

ஈன்று புறம் தருதல் என் தலைக் கடனே
சான்றோர் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வெல்வடித்துக் கொடுத்தல்
கொல்லிற்குக் கடனே
நன்னடையாக்குதல் வேந்தருக்கு கடனே
ஒளிறு அருஞ்சமம் முறுக்கி
களிறு எரிந்து பெயர்த்தல் காளைக்கு
கடனே. (புறம் -312)

புலவர் – பொன்முடியார். இவ்வாறாக கடமை உணர்வு பற்றியும், ஒரு குடும்பத்தில் தாய் தந்தையர், தங்களுக்குரிய கடமைகளைச் சரியாக செய்தால் அவர்களின் குழந்தைகள் பேரும் புகழும் பெற்றுத் திகழ்வர் . ஒரு நாட்டில் உள்ள அரசன் தன்னுடைய கடமையைச் சரிவரச் செய்தால் நாட்டு மக்களையும் பாதுகாப்பான் அவனுடைய நாடும் சீரும் சிறப்பும் பெற்றுச் சிறந்த நாடாக திகழும் என்பதை இப்பாடல் வழி அறியமுடிகிறது.

## முடிவுரை

எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறு பண்டையத் தமிழன் வாழ்வியல் பண்பாட்டை செம்மையுற விளக்கும் கலங்கரை விளக்கமாகும். மறத்தில் அறமும் பகுத்துண்டும் பண்பும் விருந்தோம்பல் என அனைவரும் ஒன்றாக என்னும் மனிதநேயமும் பண்டைய தமிழருடைய நிலவியமை புலனாகிறது. இன்றைய நாகரீக உலகில் சிலர் பண்பாட்டை மறந்து வரும் வேளை யில் அவற்றை நினைவு கூறுவது சாலப் பொருந்தும். ஒட்டுமொத்தமாக புறநானூறு சங்கத் தமிழர்களின் பேரழகினையும் பண்பாட்டுக் கூறுகளையும் எடுத்து கருவூலமாக திகழ்கிறது என்பதை உணர முடிகிறது.

## சான்றென் விளக்கம்


1. புறநானூறு மூலமும் உரையும் புலியூர்கேசிகன்.சாரதாப் பதிப்பகம்.
2. தமிழர் நாகரிகமும் பண்பாடும் அ.தட்சிணாமூர்த்தி
3. தமிழ்நாடு பள்ளி பாடப்புத்தக நூல்கள்.

# சங்க இலக்கியத்தில் உணவு

**பேரா.சி.பாக்கிய செல்வரதி**
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத் துறை,
தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரி,
திருச்சி.

## ஆய்வுச்சுருக்கம்

*மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முக்கியமானது உணவு. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே' என்று மணிமேகலைச் சிறப்பிக்கிறது. உணவே மனித வாழ்க்கைக்கு முக்கியமானது எனலாம். சங்ககால மக்கள் உணவிற்கு என்று தனி இடம் வகுத்துள்ளனர். ஊட்டச் சத்து மிகுந்த உணவுகளையே உட் கொண்டனர். பலவகையான நெல்லை விளைவித்ததோடு,சிறுதானியங்களையும் உணவாக உட்கொண்டனர். புலால் மற்றும் கள் இரண்டும் மக்களால் விரும்பி உண்ணப் பட்டதைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் உணவு வகைகளை எடுத்துரைப்பதாக இக் கட்டுரைஅமைகிறது.*

## கலைச்சொற்கள்

*அடிசில், தீம்புளிப்பாகர், வலைஞர், துடரி, களாப்பழம், ஈயல்.*

## முன்னுரை

உணவு கொடுத்து உயிர் ஓம்புதல் தமிழர் வாழ்க்கைமுறை ஆகும். உணவிற்காக பல மைல் பயணம் செய்து நல்ல உணவகங்களில் உணவு உட்கொள்வதை இன்றைய நாட்களில் காண்கிறோம். உணவு என்பது மிகவும் இன்றியமையாதது. பலவகையான அந்நியநாட்டு அறுசுவை உணவுகள் இருப்பினும், தமிழர்களுக்கென்று உள்ள பாரம்பரிய உணவே விரும்பப்படுகிறது. சங்க இலக்கியத்தில் பல உணவு வகைகள், சமையல் குறிப்புகள் இடம் பெறுகின்றன. அவற்றை எடுத்துரைப் பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்பாடு விளக்கம்

பண்பாடு என்பது பண்பட்ட எண்ணமும், சொல்லும், செயலும் ஒருங்கிணைந்து திருந்திய நிலையாகும். 'பண்பாடு என்ற சொல்லை முதன் முதலில் எட்வர்ட் பர்னட் டைலர் என்பவர் *1871* ஆம் ஆண்டு தனது 'தொன்மைப் பண்பாடு' என்னும் நூலில் பயன்படுத்தினார்" *(சி.மணிவளன், இலக்கியச்சாரல், ப.11)* பண்பாடு, நாகரிகம் என்ற சொற்கள் ஒன்றாகவே கருதப்படுகின்றன. சமுதாயத்தின் வளர்ச்சி நிலையே நாகரிகம் ஆகும். பண்பாடு அக, புற வளர்ச்சி என்று கூறுவர். அன்பு, அருள், வாய்மை, தூய்மை, ஒப்புரவு, கண்ணோட்டம், ஈகை, நாணம் ஆகிய மானிட பண்புகளின் வளர்ச்சியே அகப்பண்பாடாகும். உணவு, உடை, உறையுள், சிற்பம், ஓவியம் போன்றவை புறப்பண்பாடாகும். இந்தப் புறப்பண்பாடு நாகரிகத்தோடு இணைந்ததாகும். இருப்பினும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் பிரித்து சங்கப் பாடல்களில் காணமுடியாது. இவை இணைந்த ஒன்றையே காண முடியும். திருவள்ளுவரும்,

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்" (குறள்: 580)

பண்பாட்டை நாகரிகம் என்றே கூறுகிறார். எனவே சங்கப் பண்பாடு என்பது அகவாழ்வோடு தொடர்புடையது எனலாம்.

## உணவு விளக்கம்

உணவு என்பது ஊட்டச்சத்திற்காக ஒரு உயிரினத்தால் உட்கொள்ளப்படும் பொருளாகும். இது பொதுவாக தாவர, விலங்கு மற்றும் கார்போஹைட்ரேட்டுகள், கொழுப்புகள், புரதங்கள், வைட்டமின்களைக் கொண்டுள்ளது. உணவு என்பதற்கு இலக்கியத்தில் பலபெயர்கள் வழங்கப் படுகின்றன. சோறு, புன்கம், மிதவை, பொம்மல், போனகம், அன்னம், ஓதனம், அயினி, அடிசில், பாளிதம், பொருகு, மிசை, பாத்து, அமலை, துப்பு, அசனம், கவளம், சொன்றி, நிமிரம், மடை, புழுக்கல், ஒன்றிய மூரல் ஆகிய சொற்கள் உள்ளன. சமைத்தல் என்ற சொல்லுக்குப் பக்குவப்படுத்துதல் என்று பொருள். பக்குவப்படுத்தி உண்ணும் போது உணவு ஆரோக்கியமானதாக மாறுகிறது. அடுப்பில் ஏற்றிச் சமைப்பதற்கு 'அடுதல்' என்று பெயர். சமையல் செய்ய பயன்படும் இடம் 'அட்டில்' அல்லது 'அடுக்களை' எனப்படும். உணவினை நீரிலிட்டு அவித்தல், அவித்து வேகவைத்தல், வறுத்து அவித்தல், சுடுதல், வற்றல் ஆக்குதல், எண்ணெயிலிட்டுப் பொரித்தல், வேக வைத்து ஊறவைத்தல் எனப் பலமுறைகளில் சமைக்கலாம்.

## நெற்சோறு

சங்க இலக்கியத்தில் பலவகையான உணவுகள் பற்றிய குறிப்புகள் இடம்பெறுகின்றன. மருதநிலத்தில் நூற்றுக்கும் மேற்பட்டநெல் வகைகள் பயிரிடப்பட்டன. இராசா அன்னம் என்பது உயர் வகை நெல்லாகும். பண்டமாற்றில் விலையை அறுதியிட நெல்லே பயன்பட்டது. அரிசியைப் புழுக்கிக் காயவைத்து இரும்பு உலக்கை யினால் குத்தி அரிசியாக்கினர்.

'இருங்காழ் உலக்கை இருப்புமுகம் தேய்த்த
அவைப்புமாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு
பெறுகுவீர்" (சிறுபாண். 193-195)

என்று கூறுகிறது.

எயினர்கள் களர் நிலத்தில் வளரும் ஈச்சம்பழம் போன்ற மேட்டு நிலத்தில் விளைந்த நெல்லால் சமைத்த சோற்றினை நாய் வேட்டையாடிக் கொணர்ந்த உடும்புக் கறியோடு உண்டனர் என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. (பெரும்பாண், 130–132)

மருதநிலத்தவர்கள் வினைஞர் தந்த வெண்ணெற் சோற்றைக் கோழி யிறைச்சியின் வற்றலோடு உண்டனர். (பெரும்பாண், 256–256)

ஒரு பறவையின் பெயர் உடைய நெல்லரிசியால் சமைக்கப்பட்ட உணவு 'பறவைப் பெயர் படுவத்தம்' எனப்படுகிறது. இதனை இராசா அன்னம் என்பர் (அ.தட்சணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.104)

நெற்சோற்றோடு காய்கறி வகை களையும் சேர்த்து உண்டனர். கடுகு இட்டு காய்கறிகளைத் தாளித்தனர் என்று புறநானூறு கூறுகிறது. (புறம். 127, 260)

## சிறுதானிய உணவுகள்

பண்டை தமிழர்கள் நெல்லை மட்டுமல்லாது, சிறுதானியங்களையும் உணவாக உட்கொண்டனர். ஆயர்கள் பெரிய சுற்றத்தைக் கொண்ட நண்டின் சிறு குஞ்சுகளைப் போன்ற திணைச் சோற்றைப் பாலுடன் கலந்துண்டனர்.

(பெரும்பாண். 167–168) உழவர்கள் பூளைப்பூப் போன்றவரகுச் சோற்றை அவரைப் புழுக்கோடு உண்டனர். (பெரும்பாண். 192–196)

### தீம்புளிப்பாகர்

தலைவி தலைவனுக்காக உணவு சமைக்கிறாள். முளிதயிரைத் தனது காந்தள் விரலால் பினைந்துத் தாளிப்பு செய்து தீம்புளிப்பாகர் வைத்து தலைவனுக்குப் பரிமாறுகிறாள் என்று குறுந்தொகைக் கூறுகிறது. (குறுந். 367) புளிக்குப் பதிலாக தயிர் பயன் படுத்தியதை அறியமுடிகிறது.

### மீன் குழம்பு

பலவகையான மீன்களைப் பயன்படுத்தி குழம்பு வைப்பது இன்றும் நடைமுறையில் உள்ளது. புளிக்குப் பதிலாக மாங்கனிச்சாறும், களாப் பழமும், துடரியும், நாவற்பழமும் பயன் படுத்தியுள்ளனர். வரால் மீன் குழம்புக்கு மாவின் தீங்கனி புளியாகப் பயன்பட்டதை புறநானூறு கூறுகின்றது (புறம்: 399)

### ஊறுகாய்

அன்றைய காலத்திலேயே ஊறுகாய் செய்யும் பழக்கம் இருந் துள்ளது. உமணர்கள் வண்டியின் முன் புறத்தில் கயிற்றால் வரிந்துகட்டி வைத்திருந்த ஊறுகாய்ப் பானைமத்தளம் போல் காட்சியளித்ததாகப் பெரும் பாணாற்றுப்படைக் கூறுகிறது. (பெரும் பாண். 55–56)

### பார்ப்பனர் உணவு

ஒவ்வொரு இனத்தவரும் தனக்கென்று தனியாக உணவு பழக்கத்தை வைத்திருந்தனர். பார்ப்பனர்கள் மாதுளங்காயை மிளகுப் பொடியும் கறிவேப்பிலையும் இட்டுப் பசு வெண்ணெயில் பொரித்து உண்டனர் என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. (பெரும்பாண். 306–308) மேலும் பார்ப்பனப் பெண்கள் விருந்தினருக்கு மாவடு ஊறுகாயோடு உணவு பரிமாறினர் என்று பெரும்பாணாற்றுப்படை எடுத்துரைக் கிறது. (பெரும்பாண், 308–310)

### வலைஞர்கள் உணவு

கடலோரத்தில் வாழுகின்ற வலைஞர்கள் குற்றாத கொழியலரிசியைக் கூழாக ஆக்குவர். அகன்ற வாயுடைய தட்டுப் பிழாவிலே ஊற்றி உலர வைப்பர். புற்றாஞ்சோறு போன்ற பொலிவுடைய முனையை இடித்து அதனை அக்கூழொடு சேர்ப்பர். இதனை 2 பகலும் இரவும் அரியாமல் வைத்திருப்பர். அது நன்கு முற்றிய பிறகு விரலாலே அரித்து அக்கள்ளினைத் தண்ணிய மீன் சூட்டோடும் உண்பர். (பெரும்பாண், 275–282)

### புலால் உணவு

தமிழர்களின் உணவில் புலால் மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றது. கோழி, மீன், உடும்பு, ஆடு, பன்றி, முயல், ஈயல், மான் போன்ற வற்றை உண்டனர். மன்னர்கள் புலவர், பாணர்களை விருந்தோம்பும் போது ஊன்சோறே வழங்கி விருந்தோம்பினர் என்று ஆற்றுப்படை நூல்கள் கூறுகின்றன. பன்றியிறைச்சியை விரும்பி உண்டனர். வேடுவர்கள் பன்றியை வேட்டையாடியதைப் பெரும் பாணாற்றுப்படை கூறுகிறது. (பெரும் பாண். 106–111) பகற்பொழுதில் திறந்த வாயையுடைய வேட்டை நாயுடன் கானகம் சென்று வேலிகளில் வலையை மாட்டிவைத்துப் பசிய புதர்களிலிருந்து முயல்களை வெளிப்படச் செய்து அகப்படுத்துவர். அதன் இறைச்சியை விரும்பி உண்டனர். (பெரும்பாண். 111–116) நன்கு புளித்த மோரில் ஈயலை ஊறப்போட்டுப் புளிங்கறி சமைத்துண்டனர். (புறம். 119) ஊன்

துண்டங்களைக் கம்பியிலே கோர்த்து நெருப்பிலே வாட்டி உண்டனர். ஊன் புதைந்த சோற்றை ஊன்துவை அடிசில் என்றுஅழைத்தனர்.

## கள்

கள் உண்டலைத் தவறாகக் கருதாமல் ஆண், பெண் அனைவரும் உண்டனர். வீட்டிற்கு வரும் விருந்தினர் களுக்குக் கள்ளைக் கொடுத்தே விருந்தோம்பல் செய்தனர். வீட்டிலேயே சமைத்த கள்ளைத் ~தோப்பி| எனக் கூறுவர். மறவர்கள் ஆட்டுக்கிடாயினை அறுத்து உண்டு இல்லத்தில் சமைத்த தோப்பியைப் பருகி தண்ணுமை ஒலிக்கத் தம் வலியதோளை உயர்த்தி ஆடினர் என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. (பெரும்பாண், 140–146)

இன்பமாக இருந்த போதும், மன்னர்கள் இறந்தபோதும் கள் உண்ணப்பட்டது. கள் உண்ணல் மக்கள் வாழ்க்கையோடு இரண்டர கலந்ததை புறநானூறு, மதுரைக்காஞ்சி, பதிற்றுப்பத்து ஆகிய நூல்கள் எடுத்துரைக்கின்றன.

## முடிவுரை

பண்டைத் தமிழர் அகத்தோடு இணைந்த புறவாழ்வையே மேற் கொண்டனர். அவர்களின் வாழ்வில் உணவு மிகவும் இன்றியமையாததாக அமைகிறது. ஒவ்வொரு நிலத்தவரும் தங்களுக்கென்று தனி உணவை வைத்திருந்தனர். நெற்சோற்றோடு சிறுதானிய உணவையும் உட்கொண் டிருக்கின்றனர். புளிக்குப் பதிலாக மாங்காயைப் பயன்படுத்தியதை இலக்கியம் கூறுகிறது. இதுவே இன்றும் புளிக்குழம்புகளில் பயன்படுத்து கின்றோம். புலால் உணவும் கள் உண்டலும் மிகவும் இன்றி யமையாததாகிறது. தமிழரின் உணவுகள் ஊட்டச்சத்து மிகுந்ததாக இருந்தமையை அறியமுடிகிறது.

## உதவிய நூல்கள்

1. உ.வே.சா. குறுந்தொகை, உ.வே.சா நூல் நிலையம், சென்னை, 2009.
2. கதிர்முருகு (உ.ஆ), பத்துப்பாட்டு, சாரதா பதிப்பகம், சென்னை, 2009.
3. தட்சிணாமூர்த்தி.அ, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 2021.
4. பாலசுப்பிரமணியன். கு.வே, புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
5. மணிவளன். சி, இலக்கியச் சாரல், பொதிகைத் தமிழ்ச் சங்கம் வெளியீடு, தூத்துக்குடி, 2005.
6. முத்துராமன். ஆ, வாழ்வியல் சிந்தனைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2006.

# ஏலாதியில் வாழ்வியல் அறம்

**முனைவர் சு. பால் மோகன்**
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்
தி.தெ.மா.நா.ச. கல்லூரி
தெ.கள்ளி குளம்

## ஆய்வுச் சுருக்கம்

வாழ்வியல் அறம் என்பது வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் நெறிமுறைகளைப் பற்றிய அறிவை குறிக்கிறது. உலக வாழ்வியலில் நன்மை எது தீமை எது என்று ஆராயும் தன்மையும் தன்னுடைய திறமைகளை அறியும் நோக்கிலும், தனக்கென சுயநலத்துடன் வாழாமலும் பிறருடைய நலனையும் தன்னுடைய நலனாக நினைத்து வாழும் மனிதர்களை பார்ப்பது அரிது. ஆனால் பண்டையத் தமிழர்கள் தன்னுடைய நலனை விட பிறருடைய நலனை பெரிதாக மதித்தார்கள். அவர்கள் சான்றோராக உயர்ந்தார்கள் என்பதை பண்டைய இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் அறநூல்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை அதில் ஏலாதியில் வாழ்வியல் அறம் என்பது வாழ்க்கையின் அத்தியாவசியமான நெறிமுறைகள் மற்றும் உறவுகளைப் பற்றிய ஒரு தத்துவம் அதனடிப்படையில் மனிதனுடைய மனிதாபிமானம், நல்லிணக்கம், விருந்தோம்பல், கல்வி, ஒழுக்கம், இல்லறம் பற்றி ஏலாதியில் கூறப்பட்டுள்ள சித்தாந்தங்களை ஆராய்வது இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு முன்னுரை

நம் முன்னோர்கள் பண்டைக் காலத்தில் குறிப்பிட்ட வரையறை இல்லாமல் வாழ்ந்தனர். குறிப்பாக சங்க காலத்தில் காதலுக்கும் வீரத்திற்கும் நம்மவர்கள் முன்னுரிமை கொடுத்தனர். அதனால் மக்களுடைய வாழ்வியல் ஒழுங்கியலுடன் இல்லை. அதனால் நம்மவர்களை நல்னெறி படுத்தும் நோக்கில் பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றின அவற்றில் மனிதன் அன்றாடம் கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் அறங்களை தொகுத்து கூறியதன் பயனாக அறம் சார்ந்த நூல்கள் தோன்றின. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய பழமொழி மக்கள் நல்ல உடல் நலத்துடன் திடமான மனஉறுதியுடன் நல்வாழ்வியலை வாழ வேண்டும் என்ற நோக்கில் கணிமேதாவியார் ஏலாதி என்ற அறநூலை இயற்றினார். அதில் இயம்பப்பட்டுள்ள வாழ்வியல் அறத்தை இக்கட்டுரையில் காண்போம்.

## வாழ்வியலில் அறம்

மனித வாழ்வியலில் அறம் முதன்மையானதாக போற்றப்படுகிறது. மனிதன் கடைபிடிக்கவேண்டிய வாழ்வியல் அறமாக கலித்தொகையில் நல்லந்துவனார்,

**"ஆற்றுதல் என்பது அலந்தார்க்கு உதவுதல்**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**பண்பு எனப்படுவது பாடறிந் தொழுகுதல்**

**அன்பு எனப்படுவது தன்கிளை செறாமை**
**அறிவு எனப்படுவது பேதையர் சொல்**
**நோன்றல்**
**செறிவு எனப்படுவது கூறியது மறாமை**
**நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை**
**முறை எனப்படுவது கண்ணோடாது உயிர்**
**வௌவல்**
**பொறை எனப்படுவது போற்றாரைப்**
**பொறுத்தல்" (கலி 16)**

வாழ்வியல் அறம் என்பது மனித வாழ்க்கையின் அடிப்படைகளையும் அதன் நோக்கங்களையும் ஒழுங்கு முறைகளையும் பற்றிய தத்துவத்தை உணர்த்துகிறது. "மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே" வாழ்வியல் அறம் என்று கூறுவர். பிறவித்தோறும் மனிதனைப் பற்றிக்கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

**"செயற்பாலது ஓடும் அறனே ஒருவற்கு**
**உயற்பாலது ஓடும் பழி" (குறள் 40)**

மனித வாழ்வின் அடையாளம் இல்லறம் அதனால் தான் ஒருவருடைய வாழ்வில் இல்லறம் சிறப்பு பெற்றால் தான் அவருடைய வாழ்வு முழுமையடையும் அதனையுணர்ந்த நாற்கவிராச நம்பி,

**"பொற்பமை சிறப்பின் கற்பெனப்படுவது**
**மகிழ்வும் ஊடலும் ஊடல் உணர்த்தலும்**
**பிரிவும் பிறவும் மருவியதாகும்"**
**(கற்பியல் 200)**

என்று இல்வாழ்க்கைக்கு விளக்கம் தருகிறார். இதனையுணர்ந்த திரு வள்ளுவர் அன்பும் அறனும் உடைய வாழ்வுதான் சிறப்பாக அமையும் என்று கூறுகிறார்,

**"அன்பும் அறனும் உடைத்தாயின்**
**இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது" (குறள் 45)**

பண்டைய தமிழர்கள் வாழ்வியல் அறமாக பிறருக்கு ஈகை செய்தலை கருதினர். அதுபோல புகழ் எனின் உயிரை கொடுக்க கூட துணிந்தனர். ஆனால் பழி எனின் உலகத்தை பரிசாக கொடுத்தாலும் பழிக்கு அஞ்சி வாழ்ந்தனர் என்பதை கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி,

**"அமிழ்தம் இயைவதாயினும் இனிதுஎனத்**
**தமியர் உண்டலும் இலரே முனிவிலர்**
**துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
**புகழ் எனின் உயிரையும் கொடுக்குவர்**
**பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்"**
**(புறம்)**

என்று வாழ்வியல் அறத்தை விளக்கு கிறார். அதுபோல நல்ல ஒழுக்கம் தான் வாழ்வியல் அறம் என்பதை பட்டினத்தார்,

**"காடே திரிந்தென்ன காற்றே**
**புசித்தென்ன கந்தை கற்ற**
**ஓடே எடுத்தென்ன உள்ளன்பு இலாதவர்**
**ஓங்கு விண்ணோர்**
**நாடோய் கிடை மடு தீசர்க்கும்**
**மெய்யன்ந் நாதியர்பால்**
**வீடேயிருப்பினும் மெய்நான வீட்டின்பா**
**மேவுவரே"**

ஒருவருடைய வாழ்வியல் உண்மைதான் உண்மையான வாழ்வியல் அறம் என்று பட்டினத்தார் வலியுறுத்துகிறார்.

## ஏலாதியல் வாழ்வியல் அறம்

பதினெண்கீழ்க்கண்க்கு நூல்களுள் ஏலாதி அறநூல்களுள் ஒன்று. ஏலாதி என்பது ஏலம், இலவங்கம், சிறுநாவற் பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்ற ஆறு பொருட்களும் ஒரு குறிப்பிட்ட அளவோடு சேர்க்கப்பட்ட ஒருவகை சூரணமாகும். இந்த மருந்துகள் மனித உடலுக்கு வலிமை சேர்ப்பன. அதுபோல இந்நூலில் ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள அறக் கருத்துகள் மனித வாழ்வியலுக்கு அடிப்படையானவை. இதைக் கற்பதனால் அறியாமை

என்ற இருளை நம் மனதில் இருந்து அகற்றி உலகம் மதிக்கும் உன்னதமான வாழ்வியலை ஏலாதி நமக்கு தருகிறது. அதனால் தான் புகழ், செல்வம், கல்வி, வீரம், கொடை, மேன்மை கொள்ளும் சொல் என்ற ஆறு நற்குணங்களும் நற்குடியில் பிறக்கின்றவரிடம் மட்டுமே இருக்கும் என்று ஏலாதி கூறுவதை அறியமுடிகிறது.

**“சென்ற புகழ் செல்வம் மீக்கூற்றம் சோகம்**
**நின்ற நிலை கல்வி வள்ளன்மை - என்றும்**
**வழிவந்தோர் பூங்கோதாய் ஆறும் மறையின்**
**வழிவந்தார் கண்ணே வனப்பு”**

(ஏலாதி 1)

## ஈகை

ஈகை என்பது தமிழரின் பண்பாட்டு மட்டும் தனித்துவமான அடிப்படை அறங்களில் ஒன்றாகும். அதனால் தான் திருவள்ளுவர் உதவி செய்யமுடியாத ஏழைகளுக்கு உதவி செய்தல் ஈகையாகும் என்று ஈகைக்கு விளக்கம் தருகிறார்.

**“வறியார்க்குஒன்று ஈவதே ஈகை**
**மற்றுஎல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து”**

(குறள் 221)

ஈகையின் அடையாளமாக இன்றும் நம்மவர்கள் கடையேழு வள்ளல்களை போற்றுகின்றனர். இவர் களின் மரபுவழி வந்த ஈகை பண்பு ஒவ்வொருவரின் உள்ளத்திலும் இருக்க வேண்டும் என்ற நோக்கில் புறநானூற்று பாடலில் கடையேழு வள்ளல்களான ஓரி, எழினி, பாரி, ஆய், நள்ளி, பேகன், அதியமான் ஆகியோரின் ஈகைபண்புகள் கூறப்பட்டுள்ளனன.

**“பறம்பின் கோமான் பாரியும்**
**பிறங்கு மிசைக்**
**கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்**
**காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த**
**மாறி ஈகை மறப்போர் மலையனும்**
**ஊரது ஏந்திய குதிரைக் கூர்வேல்**
**கவினால் காற்றிக் கொடும்பூண் எழினியும்**
**ஈர்ந்தான் சிலம்பின் இருள் தூங்கும்**
**நளிமுன்**
**அருந்திறல் கடவுள் காக்கும் உயர்ச்சிமைப்**
**பெருங்கல் நாடனே பேகனும் திருந்து**
**மொழி”** (புறம் 15)

ஈகை மனித வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய உயர்ந்த அறங்களுள் ஒன்று. அதனால் தான் கணிமேதாவியார் தவத்தினால் கிடைக்கும் பயனைவிட ஈகை பெரிது என்கிறார்.

**“தவம் எளிது தானம் அரிதுதக் கார்க்கேல்**
**அவம் அரிது ஆதல் எளிதல் அலம் இலா**
**இன்பம் பிறழின் இயைவு எளிது மற்று அதன்**
**துன்பம் துடைத்தல் அரிது”** (ஏலாதி 3)

மேலும் இவ்வுலகில் ஈகை பண்பு உடையவர்களுக்கு தேவர்களுக்கு தவத்தினால் கிடைக்கும் வீடுபேறு நிலையினை அடையலாம் என்பதை,

**“ஒல்லுவ நல்ல உருவவேற் கண்ணனாய்**
**வல்லுவ நாடி வகையினால் - சொல்லின்**
**கொடையினாற் போகஞ் சுவர்க்கந் தவத்தில்**
**அடையாத தவத்தினால் வீடு”** (ஏலாதி 76)

பாடல்வழி அறியமுடிகிறது. வறுமையின் பிடியில் சிக்கி வாழ முடியாத நிலையில் இருப்பவருக்கும், வாய்பேச முடியாதவர்கள், விதவை பெண்கள், அனாதையான குழந்தைகள் வியாபாரம் செய்து வறுமைப்பட்டவர்கள் பார்வை யற்றவர்களுக்கும் அவர்கள் விரும்பியதை கொடுத்தவர்கள் இவ்வையகத்தில் இனிதாக வாழ்வார்கள்.

**“தாயிழந்த பிள்ளை தலையிழந்த பொண்டாட்டி**
**வாயிழந்த வாழ்வினார் வாணிகம்**
**போயிழந்தார்**
**கைத்தூண் பொருளிழந்தார் கண்ணிலவர்க்**
**கீந்தார்**
**வைத்து வழங்கி வாழ்வார்”** (ஏலாதி.78)

இக்கருத்தைத்தான் முதன்முதலில் திருவள்ளுவர் இவ்வுலகில் சிறந்த நிலையில் வாழ்பவர்களை தெய்வ நிலையில் வைத்து புகழ்வார்கள் என்று கூறியதை அறியமுடிகிறது.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"**
(குறள் 50)

## விருந்தோம்பல்

விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாட்டின் உயிர் இது அன்பு பகிர்வு மற்றும் பண்பாட்டை பாதுகாக்கும் பொக்கிஷமாக உள்ளது. விருந்தினர்களை வரவேற்று அவர்களுக்கு மதிப்பளித்து அன்புடன் உறவுகளை பராமரிக்கும் பண்பு விருந்தோம்பலில் உள்ளது. விருந் தோம்பலின் மகத்துவத்தை உணர்ந்த தொல்காப்பியர்,

**"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"**
(கற்பி 11)

என்று விருந்தோம்பலை சிறப்புபடுத்துகிறார். பழந்தமிழரின் அடையாளமாக விளங்கும் சங்க இலக்கிய நூலாகிய நற்றிணையில் இல்லறத்தில் விருந்தோம்பலை நல்லறமாக செய்யும் இயல்பை உடையவள் என்பதை

**"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின் மெல்இயற்**
**குறுமகள் உறைவின் ஊரே"** (நற் 142)

நம் இல்லம் தேடி வரும் விருந்தினரை இனிமையான சொற்களை பேசியும் அவர்கள் தங்குவதற்கு இட மளித்தும் அவர்கள் விரும்பிய உணவு கொடுத்து உபசரிக்கும் பண்பு தமிழர்களின் தலையாய பண்பு என்பதனை கீழ்கண்ட

**"இன்சொல் அளவால் இடம் இனிது ஊண் யாவர்க்கும்**
**வன்சொல் களைந்து வகுப்பானேல் மென்சொல்**
**முருந்து ஏய்க்கும் முட்போல எயிற்றினாய் நாளும்**
**விருந்து ஏற்பர் விண்ணோர் விரைந்து"**
(ஏலாதி 7)

பாடல்வழி அறியமுடிகிறது. தன்னிடம் உணவு என்று வருபவர்களுக்கு அவர்கள் இயல்பு அறிந்து கொடுக்கின்ற தன்மை உடையோர் எந்நாளும் மக்கள் மனதில் அரசாட்சி செய்வார்கள் என்று ஏலாதி அறிவுறுத்துகிறது.

**"ஐயமே பிச்சை யிருந்தவர்க் கூணாடை**
**ஐயமே யின்றி யறிந்தீந்தான் வையமும்**
**வானும் வரிசையாற் றானாளு நாளுமே**
**இனமே யின்றி யினிது"** (ஏலாதி 70)

விருந்தோம்பலின் தன்மையை உணர்ந்த நம் தெய்வப்புலவர் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை முக மலர்ச்சியோடு உபசரிக்க வேண்டும் என்று கூறுவதை அறியமுடிகிறது.

**"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து"** (குறள் 90)

## ஒழுக்கம்

ஒழுக்கம் மனிதரை முழுமையாக உருவாக்கும் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். ஒழுக்கத்தின் மூலம் ஒருவர் தனது அடிப்படையான நோக்கங்களை அறியமுடிகிறது. ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு ஒழுக்கம் அவசியமாய் இருக்கிறது ஒழுக்கம் இல்லாத சமுதாயங்களில் அசாதாரண செயல்கள் போலிகள், மற்றும் குழப்பம் ஏற்படும். ஒழுக்கம் சமுதாயத்தை முன்னேற்றுவதற்கான அச்சாணியாக உள்ளது. அதனால் ஒழுக்கம் ஒவ்வொரு வரும் கடைப்பிடிக்க வேண்டிய நற்குணங்களில் முதன்மையானது. வாழ்வில் ஒழுக்கம் இல்லாமல் வாழ்ந்தால் வாழ்வு சீரற்றதாக மாறிவிடும்.

அதனால் தான் ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்தில் வள்ளுவர்,

“நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்
தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்” (குறள் 138)

என்று ஒழுக்கத்தின் மேன்மையையும் ஒழுக்கம் தவறினால் ஏற்படும் விளைவுகளையும் கூறியுள்ளார். நற்குணங்களை உடையோரும் அதை பின்பற்றி வாழ்வோரும் வின்னவர்களை விட மேலானவர்கள் என்று ஏலாதி கூறியுள்ளதை அறியமுடிகிறது.

“கொலை புரியான் கொல்லான் புலால்
மயங்கான் கூர்த்த
அலை புரியான் வஞ்சியான் யாதும் நிலை
திரியான்
மண்ணவர்க்கும் அன்றி மதுமலிபூங் கோதாய்
விண்ணவர்க்கும் மேலாய் விடும்”
(ஏலாதி 2)

ஒருவருடைய வாழ்வில் பொய் பேசாமல், கள் அருந்தாமல், புலால் உண்ணுதலை தவிர்த்து தீய செயல் களைச் செய்யாமல், பண்பு குறைந்தோர் கூட்டத்தில் சேராமல் வாழ்ந்தால் இவ்வுலகில் புகட்ட வேண்டிய அறநூல்கள் இல்லை என்பதை,

“பொய்யான் புலாலோடு கற்போக்கித் தீயரை
செய்யான் சிறியார் இனஞ்சேரான் வையான்
கயல்இயல் உண் காண்ணாய் கருதுங்கால்
என்றும்
அயல் அயலவா நூல்” (ஏலாதி 14)

பாடல்வழி அறியமுடிகிறது. மேலும் வாழ்வியல் அறநெறியை பின்பற்றி வாழ்பவர்கள் தேவர்களுக்கு எல்லாம் தலைவனாக விளங்கி இறைதன்மையை அடைவார்கள் என்பதை கீழ்காணும் பாடல்வழி அறியமுடிகிறது.

“பொய்யுரையான் வையான் புறங்கூறான்
யாவரையும்
மொய்யுரையா னுள்ளனவும் விட்டுரையான்
எய்யுரையான்
கூந்தள் மயிலன்னாய்! குழிஇயவான்
விண்ணோர்க்கு
வேந்தனா இவ்வுலகம் விட்டு” (ஏலாதி 33)

## வீடுபேறு அடைதல்

மனிதன் வாழ்வில் ஒழுக்கங்களை சரியாக கடைபிடித்து வாழ்ந்தால் வாழ்வின் இறுதியில் வீடுபேறு அடைவான். அறம், பொருள், இன்பம். வீடுபேறு என்ற நான்கும் மனித வாழ்வில் அடையக்கூடிய உயர்ந்த அறமாகும். “வாழ்வில் கற்க வேண்டிய கடின பாடங்களில் ஒன்றுண்டு அதைப் பெரும்பாலோர் கற்பதில்லை இங்கேயே நம்மைக் சூழ்ந்தே சுவர்க்கம் உளது” ஜான் பரோஸ் (tamil-wikikquote.org).

ஒருவர் வாழ்வில் வீடுபேறு அடைந்தால் மனித பிறப்பின் பயனை அடையலாம். அதனால் வாழ்வில் அறச்செயல்களைச் செய்து வீடுபேற்றினை அடைய வேண்டும் என்று நம் முன்னோர்கள் கூறுகின் றனர். வீடுபேற்றினை குறித்து அறிந்த பேக்கன் மனிதனுடைய மனம் அன்பில் இயங்குமானால் உண்மையில் சுழலுமானால் கடவுளிடம் ஓய்வு காணுமானால் அப்பொழுது சுவர்க்கத்தை இப்பூமியிலேயே கண்டு விடலாம். (tamil-wikikquote.org). வீடுபேற்றை அடையும் வழியாக உலகபற்றினை முற்றும் துறக்க வேண்டும் அதனால் தான் திருவள்ளுவர்,

“பொருளல்ல வற்றைப் பொருளென்று
உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு” (குறள் 351)

என்று உன்னதமான மெய்ப்பொருளை உணருவதன் மூலம் வீடுபேற்றினை அடையலாம் என்று கூறுகின்றார். நம் உடலில் உள்ள ஐம்புலன்களை அடக்கினால் வீடுபேற்றினை அடையலாம் என்று திருமூலர் கூறியுள்ளார்.

**"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு**
**மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன**
**மேய்ப்பாரும் உண்டால் வெறியும் அடங்கினாற்**
**பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே"**
**(திருமந்திரம் 2843)**

நம்முடைய பெரியோர்கள் ஆராய்ந்து கூறுவது அரிய தவம் செய்தும் கடவுள் தன்மைக் கூறும் நூல் களைக் கற்றும் அதன்படி வாழ்ந்தால் வீடுபேற்றினை அடையலாம் என்று கணிமேதாவியார் கூறுகின்றார்

**"உயர்ந்தான் றிலைவனென் றொப்புடைத் தானோக்கி**
**உயர்ந்தா னூலோதி யொடுங்கி - உயர்ந்தான்**
**அருந்தவ மாற்றச் செயின் லீடா மென்றார்**
**பெருந்தவஞ் செய்தார் பெரிது"**
**(ஏலாதி 64)**

மேலும் பிறவி என்னும் பெருங்கடலை நீந்த விரும்புகின்றவர்கள் தன்னுடைய மெய்யுணர்வை உணர்ந்து மனதால் உயர்ந்த தவத்தை மேற் கொண்டால் நற்கதியை அடையலாம் என்று ஏலாதி கூறுகின்றது.

**"நாற்கதியுஞ் துன்ப றவை தீர்த்தல் வேண்டுவான்**
**பாற்கதியின் பாற்பட வாராய்ந்து - நூற்கதியின்**
**எல்லை யுயர்ந்தார் தவமுயலின் மூன்றைந்தேழ்**
**வல்லை வீடாகும் வகு" (ஏலாதி 77)**

**முடிவுரை**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக ஏலாதியில் மனிதன் வாழ்வதற்கு தேவையான பல அறக் கருத்துக்கள் தொகுத்து தரப்பட்டுள்ளன. அவற்றை ஆராய்ந்து ஏலாதியில் வாழ்வியல் அறம் என்றத் தலைப்பில் ஈகை, விருந்தோம்பல், ஒழுக்கம் ஆகிய நற்பண்புகளை தழுவி வாழ்ந்தால் மனித வாழ்வின் உயர்ந்த அறமாகிய வீடுபேற்றினை அடையலாம் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை மூலம் அறியமுடிகிறது.

# சங்க இலக்கியத்தில் ஒப்பனைக்கலை

**முனைவர் பா.பிரியா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீசத்குரு சங்கீத வித்யாலயம் இசைக்கல்லூரி,
மதுரை

## முன்னுரை

உலகின் தொன்மையான மொழிகளுள் தமிழ் முதன்மையானது. இது இலக்கிய, இலக்கண வளம் நிறைந்த செவ்வியல் மொழியாகப் போற்றப்படுகிறது. சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகும். இவைதாம் தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக வரலாற்றுப் பெட்டக மாகத் திகழ்கின்றன. சங்ககாலத்தில் வாழ்ந்த தமிழர்கள் பண்பாட்டோடு கலைகளை அமைத்துக் கொண்டனர். மனிதனின் இன்ப துன்ப உணர்வுகளே கலை தோன்றுவதற்கு காரணமாக அமைகின்றன.

மனிதனிடம் காணப்பட்ட போலச் செய்தல் பண்பே கலைகளைத் தோற்றுவித்தது. மனிதன் தன் வாழ்வில் நுட்பமாகச் செய்யும் கலைகள் யாவும் நுண்கலைகள் ஆகும். இவை மனிதனின் மனதிற்கு அமைதியோடு அவர்களின் வாழ்விற்கு அழகும், இன்பமும் தருவன. நுண்கலைகள் இசை, கூத்து, ஓவியம், கட்டிடம், சிற்பம், ஒப்பனைக்கலை என ஆறுவகையாகப் பகுக்கப்பெற்றுள்ளன. ஒப்பனை என்பது ஆடை அணிகளால் அலங்காரம் செய்து கொள்வதாகும். இத்தகைய சிறப்புவாய்ந்த ஒப்பனைக் கலையினை சங்க இலக்கியத்தின் வழி வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஒப்பனைக்கலை – விளக்கம்

இலக்கியம் ஒரு கலை. கலையென்றால் சொல்லுகிற அல்லது சொல்ல விரும்புகிற செய்திகளை அழகும் நேர்த்தியும் படச் சொல்வது காண்போர், கேட்போர் அல்லது படிப்போர் மனதில் சுவையினைவூட்டுவது. மனிதனுடைய மனத்தில் உணர்ச்சியினை எழுப்பி அழகையும் இன்பத்தையும் அளிக்கிற பண்பு அழகுகலைகளுக்கு உண்டு. மனிதன் தன்னுடைய அறிவினாலும், கற்பனையினாலும் அழகுக் கலைகளை அமைத்து அவற்றின் வழியாக உணர்ச்சியையும் அழகையும் இன்பத்தையும் காண்கிறான்.

தமிழரின் முருகியல் உணர்வும் கலைத்திறனும் பழங்காலத்தில் ஒப்பனைக்கலை மூலம் வெளிப்பட்டது. நாகரிக முன்னேற்ற காலம் எனப்படுகின்ற இக்காலத்திற் கூட அத்தகைய ஒப்பனைக்கலை வளர்ச்சி யில்லை. ஆண், பெண் இருபாலரும் இக்கலைக்குரியவர்கள் ஆவார்கள். அழகுப் பொருட்களைப் போல தாமும் அழகாக அமையவேண்டும் என்ற எண்ணத்தின் விளைவே ஒப்பனைக் கலை ஆகும். கூத்து, நாடகம் முதலியவற்றிற்கும் ஒப்பனை இன்றி யமையாதது.

இன்றைய நவீன நாகரிகம் என்பதே நவீன ஒப்பனை என்பதே அக்காலத்திய

ஒப்பனைக்கலையின் மறுமலர்ச்சியே ஆகும். இன்றைய மகளிர் ஒப்பனை இதனை நன்கு உணர்த்துகின்றது"[1] மேலும், உலகமக்களில் தமிழர்கள் ஒப்பனைக்கு முக்கியத்துவம் கொடுத்ததை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. கூந்தல் முதல் பாதம் வரை அவர்கள் பலவித ஒப்பனைகள் செய்து தங்களை அழகு படுத்திக்கொண்டனர்.

## கூந்தல்

கூந்தல் ஒப்பனை சங்ககாலம் முதல் தொன்று தொட்டு இன்றளவும் நீடிக்கிறது. பெண்கள் தங்கள் கூந்தலுக்கு எண்ணெய், வாசனைப்பொருட்கள் பூசி, நிறமும் மணமும் அளித்த தன்மையும், ஐந்து பிரிவுகளாக பிரித்து கூந்தலைக் கட்டிய முறையினையும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கூந்தலில் மணம் வீச நறிய துவர்களைத் தோய்த்து நீரில் குளித்ததை, "மண்ணார் மணியின் வணர் குரல் வண்டார்ப்பத் தண்ணறுந் துவர்பல ஊட்டிச் சலம்குடைவர்" (பரி.10.89–90) என்று பரிபாடல் குறிப்பிடுகிறது. பெண்கள் குளித்து முடித்து, தங்களது கூந்தலை உலர்த்துவதற்கு "புகை வகை தைஇயினர் பூங்கோதை நல்லார்" (பரி.20.27) என்று இனிமையான மணம் உடைய அகிற்புகையை கூந்தலுக்கு ஊட்டியதை எடுத்துரைக்கின்றது.

கூந்தலில் விலை மதிப்பற்ற அணிகலன்களைச் சங்ககாலத்தில் மகளிர் அணிந்திருந்தனர். முடியின் மேல்பகுதி நாரினால் பசும்பொன் தகட்டில் முத்துக்களை நூலில் கோத்து சிலந்தியின் வலை போலத் தோன்றுமாறு அழகாக அமைத்துத் தொங்க விட்டனர். அம்முடியினை நார்முடி என்றும் அதனைத் தரித்த மன்னன் நார்முடிச்சேரல் எனவும் புகழப் பட்டான் என்பதை, "இலங்குமணி மிடைந்த பசும்பொன் படலத்து அவிர் இழை தைஇ, மின் உமிழ்பு இலங்கச் சீர்மிகு முத்தம் தைஇய நார்முடிச்சேரல்" (பதிற்.39.14–17) என்ற அடிகளால் அறியமுடிகிறது.

தலைவி கூந்தலில் பொன்னால் செய்த மகரமீனின் வாயினது வடிவில் உள்ள தலைக்கோலத்தைச் சூடியிருந்தாள் என்பதை, "நரந்தம் நாறு இறுங் கூந்தல் எஞ்சாது நனி பற்றி பொலம் புனை மகரவாய் நுங்கிய சிகிழிகை" (கலி.54.5–6) என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. சிறுவர்கள் தலையில் முத்துவடம் அணிந்தமையை, "பொலம் பிறையுள் தாழ்ந்த புனைவினை உருள்கலன் நலம்பெறு கமழ் சென்னி நகையொடு துயல்வர" (கலி.81.3–4) என்ற கலித்தொகை பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு தலைவன், தலைவி, சிறுவர் அனைவரும் கூந்தலில் பலவித அணிகலன்களால் தங்களை அலங்கரித்துக் கொண்டதை அறியமுடிகிறது.

## முகம்

மனிதனின் உடம்பில் முக அழகு தனித்தன்மை வாய்ந்தது. நெற்றியில் திலகம் இடுதல், அணிகலன்கள் அணிதல், கண்ணுக்கு மை இடுதல், காதில் அணிகலன்கள் அணிதல் என முக ஒப்பனை அமைகின்றது. தலைவி நெற்றியில் திலகம் இட்டிருந்தாள் என்பதை, "நெற்றி விழிநிறைத் திலக மிட்டாளே" என்று பரிபாடல் எடுத்துரைக்கின்றது. நெற்றியில் அணியப் படும் அணிகலன் நெற்றிச் சுட்டி. தலைவி நெற்றியில் மகரமீனின் அங்காந்த வாய்வடிவில் அணிகலன்களைத் தொங்க விட்டதை, "எறிமகர வளைய மணிதிகழ் நுதலியர்" (பரி.10.77) என்ற பாடலடி எடுத்துரைக்கிறது. இவ்வாறு சங்ககாலத்தில் நெற்றியில் அழகுபெற அணிகலன்கள் அணிந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

## காது

ஒப்பனையில் முதலிடம் பெறுவது காது. காதணி அணிகின்ற பழக்கம் மிகவும் தொன்மையானது. சங்க காலத்தில் இலை, தழை, ஓலை போன்றவற்றைக் காதில் அணிந்து அழகுபடுத்திக்கொண்டனர். அசோகினது அழகிய தளிரை தலைவன் தன் ஒரு காதில் செருகி இருந்தான். ஆண்களும் காதில் அணிகள் அணிந்திருந்ததை, "ஒண்பூம் பிண்டி ஒருகாது செறிஇ" (குறிஞ். பா.119) என்ற குறிஞ்சிப்பாட்டு அடிகள் எடுத்துரைக்கின்றன. பொன்னால் செய்யப்பட்ட குழையை தலைவி காதில் அணிந்திருந்தமையினை, "விலங்குவீழ் அரிப்பணி கொலங்குழை தெரிப்ப" (அகம்.351.12) என்ற அகநானூற்று பாடலடிகள் விளக்குகின்றன.

## கழுத்து

கழுத்தில் மலர்மாலைகளும் அணி கலன்களையும் அணிந்து அழகுறத் தம்மை ஒப்பனை செய்துகொண்டனர் சங்ககால மக்கள். இன்று முக்கிய நிகழ்வுகளில் மலர்மாலை அணியப்படுகிறது. ஆவிரை மலர் மாலையை மங்கையர் அணிந் திருந்தமையை, "... மகடூஉ முளரித்தீயின் முழங்குஅழல் விளக்கத்துக் களரி ஆவிரைக் கிளர்பூங் கோதை வண்ண மார்பின் வனமுலைத் துயல்வர" (அகம்.30.12–15) என்ற அகநானூறு பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தம் மார்பில் ஏழு அரசர்களை வென்று அவர்கள் தரித்திருந்த ஏழு மணிமுடிகளையும் கவர்ந்து அவற்றைக்கொண்டு செய்யப்பட்ட ஆரத்தினை மாலையாக அணிந் திருந்தான் என்பதை, "எழுமுடி கெழீஇய திரு ஞெமர் அகலத்து நோன்புரித் தடக்கையைச் சான்றோர் மெய்ம்மறை" (பதிற் – 14.11–12) என்று பதிற்றுப்பத்து எடுத்துரைக்கின்றது. பூவாத பூக்களை யுடைய பொன்னாலாகிய கோதையை கழுத்தில் அணிந்த தலைவனை, "பொடி அழல் புறந் தந்த பூவாப் பூம்பொலன் கோதை" (கலி.54–2) என்ற பாடலடி எடுத்துரைக்கின்றது.

## கை

சங்க காலத்தில் இருபாலரும் கையில் தொடி, வளை அணிந்து தங்களை ஒப்பனை செய்து கொண்டனர். வளையலையும் அகன்ற தொடியையும் முன்கையில் அணிந்திருந்த தலைவியை கபிலர், "வாளரம் பொருத கோணேர் எல்வளை அகன்தொடி செறிந்த முன்கை" (நற்.77.9–10) என்று தம் பாடலடிகள் வழி வெளிப்படுத்துகிறார். ஆம்பல் தண்டினால் வளையல் செய்து அணிந்த மகளிரை, "ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்" (புறம்.63.12) என்ற பாடலடி சுட்டுகின்றது.

இவ்வாறு ஆடவர், பெண்கள், சிறுவர்கள் கையில் பொன்னால் ஆன வளையல்களையும், முத்துக்கள் பதிக்கப் பட்ட வளையல்களையும் அணிந்து தங்களை ஒப்பனை செய்து கொண்டமை தெளிவுறுகிறது.

## இடை

இடையில் அணிவது இடையணி எனப்பட்டது. இடையில் நுண்ணிய அணிகலன்களை அணிந்த தலைவியை, "நுண்பூண் வசிந்து வாங்க நுசுப்பின் அவ்வாங்கு உந்தி" (புற383.11–12) என்று புறம் எடுத்துரைக்கிறது. கை வேலைப் பாடமைந்த பொற்காசுகளையும், அதன் மேலே சிவந்த பவள வடங்களையும் தலைவி இடுப்பில் அணிந்துள்ளதை, "உடுத்தவை கைவினைப் பொலிந்த காசு அமை மைஇல் செந்துகிர்க் கோவை" என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இவ்வாறு அன்றைய காலத்தில் ஆண்,

பெண் இருபாலரும் தங்கள் இடைகளில் இடையணிகள் அணிந்து தங்களை அழகுபடுத்திக் கொண்டனர்.

## கால்

சங்ககாலத்தில் பெண்கள் தங்களின் கால்களில் சிலம்பினை அணிந்திருந்தனர். சிறுகுழந்தைகள் காலில் கிண்கிணி அணிந்திருந்தனர். ஆண்கள் தங்கள் கால்களில் வீரக் கழலை அணிந்திருந்தனர். புதல்வன் காலில் பொன்னாலாகிய அணியை அணிந்திருந்தமையை, "பொற்காற் புதல்வர் புரவியினின்று உருட்டும்" (பட்டி.24) என்று பட்டினப்பாலை எடுத்துரைக்கிறது.

கிண்கிணி அணிந்த சிறுவனை, "காலவை சுடு பொன் வளைஇய ஈர்அமை சுற்றொடு பொடி அழற்புறம் தந்த செய்வுறு கிண்கிணி" என்ற கலித்தொகை அடிகள் சுட்டுகின்றன. பொன்னால் ஆகிய வீரக்கழலை அதியமான் அணிந்திருந்தான் என்பதை, "ஈகைஅம் கழற்கால் இரும்பனம் புடையல்" (புறம்.51) என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

தலைவியின் காலில் சிலம்பு இருந்தமையைப் பெரும்பதுமனார் குறிப்பிடுகையில், "தொடியோள் மெல்லடி மேலவும் சிலம்பே" என்று கூறுகின்றார். திருமணத்திற்கு முன்பு சிலம்பைக் கழற்றும் "சிலம்புகழி நோன்பு" என்ற சடங்கை சங்ககாலத்தில் செய்துள்ளனர். முத்துக்களைப் பரலாக இடப்பட்ட பொற்சிலம்பை காலில் அணிந்த தலைவியை, "முத்து அரிப் பொற் சிலம்பு ஒலிப்ப" என்று நற்றிணை எடுத்துரைக்கிறது.

## முடிவுரை

நுண்கலைகளுள் மனிதனுக்கு அழகினை ஊட்டுவன ஒப்பனையே ஆகும். சங்ககாலம் தொட்டு இன்றுவரை ஒப்பனைக்கலை மக்களிடம் சிறப்பிடம் பெறுகிறது. ஆண் பெண் இருபாலரும் தங்களை அழகுபடுத்திக்கொள்வதில் ஆர்வம் கொண்டவராக திகழ்ந்துள்ளனர். இயற்கையாக கிடைத்த இலைகளாலும், மென்மையான துணியால் ஆன ஆடைகளைப் பின்னர் அணிந்து தங்களை அழகுபடுத்திக்கொண்டனர். அனைவரும் கூந்தல் முதல் கால் வரை பல்வேறு வகையான அணிகலன்களை அணிந்து அலங்கரித்துக்கொண்டதை இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது

## அடிக்குறிப்பு

1. மயிலை சீனிவேங்கடசாமி – தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் ப.509

# அறம் மறந்த பேகனுக்கு அறம் உணர்த்திய புலவர்கள்

**முனைவர் சு.பெர்சியாஜீவபாய்**
உதவிப்பேராசிரியர்
மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி
சென்னை - 6

## முன்னுரை

அன்பும் அறனும் ஒவ்வொரு வீடுகளிலும் உலவ வேண்டுமெனில் ஒவ்வொரு மனிதனும் அகத்தே பண்பாடு உடையவர்களாக வாழ வேண்டும் . ஒருவனுக்கு ஒருத்தி என்பது வார்த்தையில் மட்டுமல்ல , வாழ்க்கையில் வாழ்ந்து காட்ட வேண்டும். அவ்வாறு வாழும் வாழ்க்கை சிறந்து விளங்க வேண்டுமெனில் நாட்டின் ஆட்சி நல்ல வழியில் அமைந்ததாக இருக்க வேண்டும். தன்னலம் இன்றி பொதுநல வாழ்வில் அக்கறை கொண்ட மன்னர்களாக இருக்க வேண்டும். கடையெழு வள்ளல்களில் ஒருவரான பேகன் அருள் நிறைந்த கைவண்மை கொண்டவர். அவருடைய குடும்ப வாழ்விலும் திருப்பம் ஏற்பட்டது. அதனைக் கண்ட புலவர்கள் மன்னனுக்கு இடித்துக்கூறி அறம் உரைத்து மனைவிக்கு அருள் செய்யுமாறு கூறுவதை இக்கட்டுரை வழி காணமுடிகிறது.

## பேகன்

“ கான மஞ்ஞைக்கு கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின்
ஆவியர் பெருமகன் பெருங்கல்
நாடன் பேகனும்”
(சிறுபாணாற்றுப்படை 85 - 87)

“படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம் கோ”
(புறம் 141:11)

மன்னர்கள் புலவர்களுக்கு அருள் செய்வதற்கு காரணம் அவர்கள் மறுமை உலகை அடைய வேண்டும். ஆனால் பேகனோ அளவில்லாமல் கொடுப்பதற்குக் காரணம் பிறருடைய வறுமை துன்பத்தைப் போக்குவதற்கு தான் என்று பரணர் கூறுகிறார். மேலுலகம் இல்லை என்றாலும் பிறர்க்குக் கொடுப்பது சிறந்தது (குறள் 222) என்று வள்ளுவரும் கூறுகிறார். மழையானது வேண்டுமிடம் வேண்டாதயிடம் என்று இல்லாமல் எல்லா இடங்களிலும் பொழியும். அதுபோல மன்னன்பேகனும் பரிசில் பெற வருபவர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு வாரி வழங்கினான் என்பதை “வரையா மரபின் மாரி போல” (புறம் 142 3). பேகனின் வீரத்தைப் புகழ்ந்து பாடும் போது‘படைமடம் படான்’ என்கிறார் .அதாவது தனக்கு எதிர் நின்று யார் போர் புரிகிறார்களோ அந்த வீரர்களிடம் மட்டும் போர் புரியும் குணமுடையவன். வீரர் அல்லாதவர், புறமுதுகிட்டவர்கள், புண்பட்டவர்கள், மூத்த, இளைய வயதுடையவர்கள் மேல் ஒரு நாளும் போர் தொடுத்துச் செல்ல மாட்டான். இப்படிப்பட்ட வீரமும் கொடைச்சிறப்பும் கொண்டவன் பேகன். ஆடவர்களின் நிலை குறித்து ஔவையார்,

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே (புறம்.187)

என்று புறநானூற்றுப் பாடலில் கூறியுள்ளார். வாழும் பூமியில் ஆண்கள் நல்லவர்களாக இருக்கும் பொழுது அந்த நாடு முழுவதும் மேன்மைப் பெற்று இருக்கும். ஒரு தந்தை தன் குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடமையைச் சிறப்பாக செய்தால் அந்த குடும்பம் சிறப்புற்று விளங்கும். அதே தந்தை போதையில் மூழ்கி தன் சுயநலம் பார்க்கும் போது குடும்பமே சின்னா பின்னமாகி விடுகிறது. அதனால் தான் ஆண் தலைசிறந்த தலைமைத்துவப் பண்புடையவனாக இருக்க வேண்டும். தன்னைப்போல பிறரை நேசிக்கும் எண்ணம் இயல்பாக வரவேண்டும். அப்படிப்பட்ட பண்புடையவனாக பேகன் இருந்த போதிலும் அவனிடமும் சில குறைபாடுகள் இருந்ததைப் புலவர் கள் சுட்டிக் காண்பிக்கத் தவறவில்லை.

## குடும்ப நெறி

கணவன் மனைவி பிள்ளைகள் இணைந்து குடும்பம் என்கிற அமைப்பு உருவாகிறது . இதில் கணவன் தவறு செய்து மீண்டும் தன் மனைவியைக் காண வரும்போது மனைவி

> “இம்மை மாறி மறுமை ஆயினும்
> நீயாகியர் என் கணவனை
> யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே”
> (குறுந்.49)

என்று கூறுவதைக் காண முடிகிறது. பெண்கள் கணவனையே தம் இரு கண்களாக வைத்து பாதுகாத்தனர். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். இங்கே மிகப்பெரிய வள்ளலான பேகன் உயிர்களிடம் பேரன்பு கொண்டவன். தன் மனைவியை விட்டு பிரிகிறான். இதனைக் கண்ட புலவர்கள் மன்னன் செய்த தவறை அவனுக்குச் சுட்டிக் காட்டத் தயங்கவில்லை.

## புலவர்கள் அறம் உணர்த்துதல்

புலவர்களின் வறுமையை நீக்குவது மன்னர்களினுடைய கடமை. மன்னனைப் பாடி பரிசில் பெறுவது மட்டுமே புலவர்களினுடைய நோக்கமல்ல. அரசன் அக வாழ்விலும் புற வாழ்விலும் வழி விலகிச் செல்லும் போது பல அறிவுரைகளைக் கூறி மன்னனை நல்வழிப்படுத்தினதை அறிய முடிகிறது.

## மறைபொருளில் உணர்த்துதல்

மலைச்சாரலிலே புலவர்கள் நடந்து வரும் வழியில் ஒரு வீட்டின் வாயிலிலே நின்று புலவர்கள் பாடல் பாடுகின்றனர். அப்பொழுது அந்த மலை நாட்டிற்கு உரியவனான பேகனின் புகழினையும் அவனது மலையையும் குறித்து பாடும் போது ஒரு பெண் கண்ணீரை நிறுத்தாமல் அருவி போல அழுதுகொண்டே இருந்ததால் கண்ணீர் அவளது முலையினை நனைத்தது. அது மட்டுமல்லாமல் அவளது குரலும் குழல் போல புல்லாங்குழல் ஒலிப்பதுபோல மிக மென்மையாக இருந்தது. அவளுக்கு வேண்டியன செய் என அவன் நாட்டு நிலைமையை எடுத்துரைப்பது போல கூறினாலும் வீட்டு நிலைமையை மறைமுகமாக கூறுகின்றார் கண்ணீர் என்பது அன்பின் அடையாளம். அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல்தரும் என்பது குறள். பேகனின் மனைவி கண்ணகி தன் கணவன் மீது கொண்டிருந்த அன்பை அவளது கண்ணீரே வெளிப்படுத்துகிறது .உன் மீது உயிரையே வைத்திருக்கிறாள். உன்னை நேசிக்கிற மனைவியை விட்டு விடாமல் அவள் அழகைத் திரும்ப மீட்டு கொண்டு வா. அவளது அழகிய நலனெல்லாம் கெடாமல் மீண்டும் புதுப்பித்துக் கொடு என்றும் புலவர்கள் கூறுகின்றனர்.

## இடித்துரைத்தல்

தன் கணவன் நல்லூருக்கு எந்நாளும் செல்கிறான் என்று பலரும் கூறுவதைக் கேட்ட பொழுது மையுண்ட கண்களிலிருந்து எப்பொழுதும் கண்ணீர் வருகிறது. அதனால் அவள் கவலை கொள்கிறாள் மனம் நொந்து போகிறாள். இதனை அறிந்த புலவர்கள் அருளாய் ஆகலோ கொடிதே (புறம் 144) என்கின்றனர். பேகனாகிய நீ அவள் கண்ணீரைக் கண்டு அவளுக்கு அருள் செய்யாமல் மீண்டும் மீண்டும் நல்லூருக்கே சென்று வந்தால் கற்புடைய மாதரசி கண்ணகி உயிர் விடுவது உண்மை. அவ்வாறு உயிர் விட்டால் உனக்குப் பழி ஏற்படும். உலகையே கொடுத்தாலும் பழிவருமென்றால் வேண்டாம் என்று வாழ்ந்தவர்கள் உன்னுடைய முன்னோர்கள். அதனால் நீ நல்லூரை விட்டு உன்னூருக்கு வந்து அருள் செய்ய வேண்டும். அவளது அன்பை புரிந்து கொள்ளவேண்டும் என்றும் கூறுகிறார்.

## இரந்து வேண்டுதல்

மயிலின் குளிரினை போக்கிய நீ அருள் உள்ளம் கொண்டவன். மயில் உன்னிடம் எதுவும் கேட்கவில்லை. அது மீண்டும் அந்தப் போர்வை எடுத்து போர்த்திக் கொள்ளுமா என்பதை எல்லாம் யோசிக்காமல் அருள் செய்தவனே! உன்னோடு உறவாடி உன்னோடு உயிர் வாழ விரும்புவளைச் சற்று நினைத்துப் பார். உன் நினை வாகவே இருக்கிறாள். ஆதலால் இன்று இரவே உன் நினைவால் வாடிக் கொண்டிருக்கும் உன் மனைவியின் நோயினை நீ தீர்க்க வேண்டும் .அரும் படர் களைமே (புறம் 145 10). இதுதான் நான் உன்னிடம் கேட்கும் பரிசில் என்று புலவர் கூறுகிறார். எனக்கும் என் சுற்றத்தவருக்கும் வறுமையைப் போக்கும்படி பரிசில் கொடு என்று நான் கேட்க உன்னிடம் வரவில்லை . கண்ணகிக்கு அருள் செய்ய வேண்டும் என்ற பரிசிலையே உன்னிடம் கேட்டு வந்தேன் என்கின்றனர்.

## பரிசில் கேட்டல்

தன்னை நாடி வந்த புலவர்களுக்கு இல்லை என்று கூறாமல் அருள் சுரக்கும் நெஞ்சோடு பரிசில் வழங்குவது பேகனின் மரபு. அதனால்தான் புலவர்கள் அவனிடம் பரிசில் பெற்று மகிழ்ச்சி அடைந்திருக்கின்றனர். வறுமையுற்ற நிலையிலேயே உடுத்திய ஆடைகள் எல்லாம் கந்தைகளான பொழுது கூட அதையெல்லாம் விட்டுவிட்டு அவர்களுக்கு புது ஆடைகளைக் கொடுத்து அவர்களை மகிழ்ச்சி படுத்தியவன் பேகன். வெளிப் புறமாக மட்டுமல்லாமல் மனதளவிலும் அவர்களை மனம் குளிரச்செய்தவன் பேகன். ஆனால் இன்று அவனையே நம்பி இருக்கும் அவன் மனைவி கண்ணகி மட்டும் மனதளவிலே பாதிக்கப்பட்டவளாக இருக்கின்றாள். அதனால் தான் புலவர் எனக்கு பரிசில் தருகின்ற நீ உன்னுடைய அரிவைக்குப் பரிசில் தரவேண்டும். நீ அருள் செய்ய வில்லை என்றால் அவளுடைய துயரத்தின் வெளிப்பாட்டினை உடலிலே காணமுடியும். குளிர்ச்சி பொருந்திய கண்ணினையும் மாமை நிறத்தையும் உடையவள் கண்ணகி அவளது கரிய மயிரை அழுக்குப் போக கழுவி புதுமலரைச் சூட்ட வேண்டும். அதற்கு நீ எம்மோடு வரவேண்டும் என மன்னனிடம் கூறுகிறார் .நான் செவ்வழிப்பண் இசைத்து பரிசில் பெற வந்திருப்பதற்குக் காரணம் அருள் என்னும் பரிசிலை நீ கண்ணகிக்கு தர வேண்டும் என்று பெருங்குன்றூர்க்கிழார் வேண்டுகிறதைக் காண முடிகிறது.

> புது மலர் கஞல இன்று பெயரின்
> அதுமன் எம் பரிசில் (புறம் 147:8-9)

ஒப்பனை செய்யாமல் அகில் புகையின்றி இருக்கும் கூந்தல் மணம் பெறும்படி அவளுக்கு அருள் செய்ய வேண்டும் . இதுவே நான் உன்னிடம் கேட்கும் பரிசில் என்கிறார் அரிசில் கிழார்.

## முடிவுரை

பண்டைய காலத்தில் புலவர்கள் தமக்கென வாழாமல் பிறருக்கு என வாழக்கூடிய வாழ்க்கையை வாழ்ந் தார்கள் என்பதை புலவர்களின் வாழ்க்கையில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது. தமக்காக தன் தேவைகளுக்காக வாழாமல் பிறருக்காக பிறர் நலனுக்காக வாழ்ந்த சான்றோர்களாக புலவர்கள் இருந்ததைத் “தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே” (புறம்.182) என்ற பாடலின் வழி அறிய முடிகிறது. தான் வறுமையுற்றாலும் தன் சுற்றத்தவர் பசியால் வாடினாலும் அன்புடைய மனைவியும் கணவனும் பிரிந்து இருக்கும் போது அவர்களை ஒன்றாக்கி இனிமையான வாழ்வு வாழச் செய்ததை அறிய முடிகிறது .அக வாழ்விலும் புற வாழ்விலும் அரசன் தவறிழைக்கும் போது அறிவுறுத்தி திருத்துபவர்களாக புலவர்கள் இருந்துள்ளனர் . அரசனும் புலவர்களின் அறிவுரையைக் கேட்டு அதன்படி வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

## துணைநூற்பட்டியல்

1. குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், முதற் பதிப்பு, ஏப்ரல் 2004

2. திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், ஒன்பதாம் பதிப்பு, பிப்ரவரி, 2004

3. பத்துப்பாட்டு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், முதற் பதிப்பு, ஏப்ரல் 2004

4. புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், முதற்பதிப்பு ஏப்ரல் 2004

# இன பண்பாட்டில் மாயர்கள்

நெறியாளர்
**முனைவர் சு.மலர்விழி**
உதவிப்பேராசிரியர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

ஆய்வாளர்
**அ.பைசுநிஷா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

## முன்னுரை

நகர மக்களின் திருந்திய வாழ்க்கை தான் நாகரீகம் நாகரீக வாழ்க்கை முறையே அறம், புறம், என இரண்டாக பாவித்துள்ளனர், இயன்றவரை பிறருக்குதவுவதும், கொள்கையும் மானமுங்கெடின் உயிரை விடுவதும், பண்பாட்டுக்கூறுகளாம். சுருங்கச் சொல்லின் உள்ளத்தின் செம்மை பண்பாடும், உள்ளத்திற்குப்புறம்பான உணவு உடை, உறையுள் முதலியவற்றின் செம்மை நாகரிகம் ஆகும். இவற்றின் முறையே அகநாகரீகம் புறநாகரீகம் எனக் கொள்ளினும் பொருந்தும்,

> நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
> செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
> சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
> புன்கண் அஞ்சும் பன்பின்
> மென்கட் செல்வம் செல்வம் என் பதுவே[1]

## எது நாகரிகம்

மாளிகையிற் குடியிருப்பதும், பட்டாடை அணிவதும் –அறுசுவையுண்டி உண்பதும், இன்னியங்கியில் அல்லது புகைவண்டி முதல் வகுப்பிற்குச் செல்வதும் வேலைக்காரரை வைத்தாள் வதும், பொறிகளைக்கொண்டு வினை செய்வதும் இன்பமாய்ப்பொழுது போக்குவதும், செல்வ வாழ்க்கையே அன்றி நாகரிக வாழ்க்கை ஆகாது. மேலும் நெடிய மொழிதல் அரசரால் மாராயம் பெறப்படுதல் கடிய ஊர்தல் விரைந்த செலவினையுடைய குதிரை, யாணை தேர் முதலியவற்றின் மேல் ஏறிச்செல்லுதல் செல்வம் ஆகாது அது நாகரீகமும் அன்று, என்பது. ஞா.தேவநேயப்பாவாணர் அவர்களின் கூற்று அதாவது செல்வமும் பண்பாடும் நாகரீகம் ஆகாது மாறாக.

> பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்.[2] (குறள்.-580)

என நாகரிகம் பற்றி வள்ளுவர் கூறுகையில், நஞ்சு பெயக்கண்டும் உண்டு அமைவர் பயின்றார் தமக்கு நஞ்சிடக் கண்டுவைத்தும் கண் மறுக்க மாட்டாமையின் அதனை உண்டு பின்னும் அவரோடு மேவுவர். நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் – யாவரானும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தினை வேண்டுபவர், நாகரிகம் என்பது கண்ணோட்டமாதல் முந்தை இருந்து நாட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர் என்பதனானும் அறிக அரசர் அவரை ஒறாது கண்ணோடற்பாலது தம்மாட்டுக்குற்றம் செய்துழி என்பது இவ்விரண்டு பாட்டானும், கூறப்பட்டது. இதனையே புறப் பொருளும் ஓர் இடத்தில் கூறுகிறது. அதாவது கருணை உள்ளமும் பண்பாடும் உள்ளவர்கள் தம்முடன் பழகியவர்கள் நஞ்சு கொடுத்தாலும்

அதை அருந்திக்களிப்படைவார்கள் என வள்ளுவர் நாகரீகத்தை பண்பாட்டுடனும் தமிழரின் பன்புகளிலும் ஒட்பீட்டு கூறுகிறார், நாகரீகம் என்பது இது மட்டுமா என்றால்,

மனிதன் தோன்றிய காலத்தில் ஆடையின்றி உறைவிடம் எதுவும் இல்லாது தீயின் பயன் தெரியாது தற்காப்பு முறைகள் அறியாது, மொழி அறியாது விலங்குகள் போல் வாழ்ந்தான் அக்காலம். கிமு 6000 முதல் கி.பி.4000 வரையிலான அந்த இடைப்பட்ட 2000–ம் ஆண்டு கால வாழ்க்கை முறையே மனிதனின் நாகரீக வாழ்க்கைக்கு உந்துதலாக அமைந்தது எனலாம் அக்காலக்கட்டத்தில் தான் மக்களின் நாகரீகம் படியெடுத்து வைக்க ஆரம்பித்தது எனலாம்.

நாகரிக வளர்சியின் களப்பே. பண்பாடு ஆயிற்று. நாகரிகமாக வாடி ஆரம்பித்த மக்கள் தனெக்கென ஒரு வரைமுறையை அமைத்துக் கொண்டனர் அதன் வெளிபாடே பண்பாடு ஆகும். பண்பாடு என்பது கலாச்சாரத்தை வடிவமைத்து கூறும் ஒன்று.

> கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே
> வாளோடு முன்தோன்றிய மூத்தக்குடி
> நம் தமிழ்குடி[3]

பூமியை சூழ்ந்திருந்த நீர்நிலை அகன்று மலைகள் மற்றும் இதர பூமியின் வளங்கள் தோன்றின. இயற்க்கையின் அமைப்பு ஒவ்வொன்றும் தோன்றும் போதே தமிழன் தோன்றி விட்டான் என்றும் ஆயுதங்களோடு காடுமலை சுற்றிதிரிந்து வாழ்க்கை நடத்தியவன் தமிழன் இதுவே: நாகரீகத்தின் ஆரம்பம் ஆகும்.

### நாகரிக வளர்ச்சி பண்பாட்டின் துவக்கம்

சக்கரம் மண்பாண்டம் வீடு, வாசல், நிலம் ஆடை, விவசாயம் என ஓர் அற்புதமான மாறுபட்ட அல்லது வேறுபட்ட சுகமான வாழ்வின் தொடக்கமாய் இருக்கலாம் கருதப் படுகிறது. மனிதன் தனித்து வாழ்வது ஆபத்தானது வசதி குறைவானது என்பதை அறிந்த போது குடும்பம் தோன்றியது, அதற்கு ஒரு தலைவன் தோன்றினான் நெருப்பின் பயன். சக்காரமும் அச்சக்கரத்தின் பயனாக ஆதி மனிதனை நாகரிக உலகத்திற்கு அழைத்துச் சென்றது எனலாம்.

### மாயர்களின் நாகரீக பண்பாடு

தமிழர்கள், நாகர்கள், செவ்விந் தியர்கள் பூர்வகுடியினர், மாயர்கள் என ஆதிதமிழரை பலவாராக அழைத்தனர்.

### குருநிலத்தில் வாழ்ந்தவர்கள்.

1) அடியென் 2) அரனடன் 3) ஏவல்லன் 4) இருளர் 5) கதர் 6)கம்மாரா 7) கணிகரன் 8) கணியன் 9) கட்டு 10) நாய்க்கன் 11) கொச்சு வேலன் 12) கொண்டாகபஸ் 13) கோண்டாரெட்டி, 14) கோரகா 15) கோட்டகுடியா 16) குறிச்சன் குரும்பா 17) குருமன்ஸ் 18) மஹாமலசர் 19) மலை அரையன் 20) மலைபண்டாரம் 21) மலைவேடன் 22) மலைக்குரவன் 23) மலாசர் 24) மலையாளி 25) மலைகண்டி, 26) மன்னை முதுகர் 27) முத்துவன் 28) பல்லேயன் 29) பள்ளியன் 30) பள்ளியார் 31) பணியன் 32)சோளகர் 33) தோடா 34) உரலி 35) நரிக்குறவன். 36) குருவிக்காரன் எனகுறிப்பிடத்தக்க பழங்குடி சமுதாயத்தினர் பலகுக்கிராமங்களில் வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் தமக்கென வாழ்க்கை முறைகளை கையான்டுள்ளனர் ஒவ்வொரு சமுகமும் ஒவ்வொரு தனிச்சிறப்பைக் கொண்டுள்ளனர். அவர்கள் தமக்கென வாழ்க்கை முறைகளை கையாண்டுள்ளனர். ஒவ்வொரு சமுகமும் ஒவ்வொரு தனிச்சிறப்பை கொண்டுள்ளனர், என்பதை அறிய

முடிகிறது. மாயன் இன மக்களும் முதன்மை நாகரிகத்தில் வாழ்ந்த மக்களாக திகழ்கின்றனர்.

## யார் இந்த மாயர்கள்

மாயர்கள் மத்திய அமெரிக்காவில் அதாவது இன்றைய மெக்சிக்கோ என்னும் பகுதியில் குவாத்தமாலா என்னும் இடத்தில் கி.மு. 2600 அளவில் தோன்றி. கி.பி.150 அளவில் உச்ச நிலையை அடைந்தது மேலும், கி.பி.16ம் நூற்றாண்டில் மாயா இனம் வீழ்ச்சியடைந்தது காணமல் போன அக்கால பகுதியின் நாகரீக வளர்ச்சியாக பார்க்கும் போது கணிதம், வானியல், ஆதியில் தொடர்பு, மொழியாக பயன்படுத்திய குறியீடுகள், எழுத்தின் அறிமுகம், கல்வெட்டுகள், விசாலமான நுணுக்கமான கட்டிடக்கலைகால அடிப்படையில் தோன்றி வளர்ந்த நகரங்கள் ஆடை உற்பத்தி, மண்பாண்டத் தொழில், சுடுமண் சிலைகள். ஆடை அணிகலன்கள்,சமய நம்பிக்கைகள், சயமச் சடங்குகள் பிறப்பு முதல் இறப்புவரை வேறுபட்ட பெயரில் வழிபட்ட தெய்வங்கள், தெய்வச்சிலைகள், சிற்பங்கள், பிற நாகரிகங்களுக்கு மாய இன மக்கள் வழங்கிய அறிவியல் சிந்தனைகள், தொழில் நுட்ப அறிவியல், மாயா இன மக்களின் அக்காலம் முதல் இக்காலம் வரை பெரும்பங்கு வகிக்கின்றன.

உலகின் பல நாடுகளின் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மனித பரிணாமம் நடந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவ்வாறான மனிதப்பரிணாமம் இந்தியாவில் நடைபெற்றதற்கு இதுவரை ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை இருப்பினும் இன்றைக்கு ஆறு இலட்சம் வருடங்களுக்கு முன்னரே இந்தியாவின் பல்வேறு வட்டங்களில் கற்கால மக்கள் நாடோடியாக வாழ்ந்ததற்கு உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன, புலிச்சரிதவியலார் இன்றைக்கு 7000 ஆண்டுகளுக்கு முன்னர் நான்கு முறை உலகில் பனிப்படவு ஏற்பட்டதாகவும்,

## மாயர்களின் கட்டிடக்கலை

பண்பாட்டின் ஒரு பகுதி கட்டிடம் சார்ந்ததாகும். குறிப்பிட்ட சமுதாயத்தினரின் பண்பாட்டை காலம் தாண்டி நிற்கும் கட்டிடங்களே எடுத்துரைக்கின்றன. அந்த வகையில் மாயன் இன மக்களால் கட்டப்பட்ட, கட்டிடங்கள் துல்லியமாகச் செதுக்கப் பட்டு ஒவ்வொன்றும் 16 டன் எடை கொண்ட கற்களை ஒன்றன் மீது ஒன்று அடுக்கி அவை பிணைந்து கொள்ள எதோ ஒரு கலவையைப் பயன்படுத்திப் பிரமிடுகள் கட்டப்பட்ட நேர்த்தியைப் பிரமிப்புடன் பேசுகிறார்கள், பிரமிடுகள் மாயர்களால் கட்டப்பட்டது. அதற்க்கு சான்றாக அமெரிக்காவில் உள்ள மெக்சிக்கோ என்னும் பகுதியில் மாயர்கள் கட்டிய பிரமீடு போன்ற அமைப்பிலான கட்டிடங்கள் காணப் படுகின்றன. அதை மாதிரியாக வைத்து கட்டப்பட்டதே. எகிப்தில் காணப்படும் பிரமீடு பெருச்சுவர் ஆகும்.

**விண்முட்டும் வீடுகளையும் முகில் தவழும்**
**மாடங்களையும் எஃகுக்கோட்டைகளையும்**
**எடுப்பித்து தமிழகத்திற்குப் பேரும்**
**பெருமையும் அளித்தனர்.**[4]

மாயன் இன மக்கள் கட்டிடங்கள் மட்டுமின்ற பண்பாட்டை பறைசாற்றும் விதமாக கல்வெட்டுகளையும் நாகரீக வெளிப்பாடுடன் வாழ்ந்த நிகழ்வு களையும் அறிய பெரிதும் உதவுகிறது.

## முடிவுரை

நகரங்கள் தோன்றிய காலத்திலேயே நாகரீகமும் தோன்றலாயிற்று நாகரீகம் படியெடுத்து வைக்கும் காலத்தில் பண்பாடு மேம்பட ஆரம்பமாயிற்று. இதற்மை முதன்மையானேர், மூத்தக்

குடிகள் அவர்கள் சிலர் குறிப்பிடத்தக்க வகையில் வாழ்ந்து வந்துள்ளனர். அவ்வகை இனமே மாயன் இனம், பண்பாட்டில் சிறந்து விளங்கியது மட்டுமின்றி பலநூற்றாண்டுகள் கலித்தும் பெயர் சொல்லும் விதமாக வாழ்ந்து வந்தமை குறிப்பிடதக்கது. தனக்கென ஒரு அரசாட்ச்சி முறை, அரசியல் வடிவம், வடிவம், குடும்பநலன் என பல பண்பாடுகளை பேணி பாதுகாத்துள்ளனர் மாயன் இன மக்கள்.

## அடிக்குறிப்பு

அன்பொடு புணர்ந்த ஐந்திணை உரை ந.கோவேந்தன் ப.89

திருக்குறள்(அரசியல்) – 580 பரிமேலகர் உரை

புறப்பொருள் வெண்பாமாலை

சாத்தான்குளம் அ.இராகவன், நூற்களஞ்சியம் தொகுதி – 10 தொழில்நுட்ட வரலாறு தமிழ் நாட்டுக் கோயிற் கட்டிடக்கலை, ப.114

# காலந்தோறும் பண்பாடு

நெறியாளர்
**முனைவர் சா.கணேசன்**
உதவிப் பேராசிரியர்,
செந்தமிழ்க்கல்லூரி,
மதுரை

ஆய்வாளர்
**பொ.பொன்னுவேல்,**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
செந்தமிழ்க்கல்லூரி,
மதுரை

## முன்னுரை:

சீர்படுதல் செம்மைப்படுத்துதல் எனப்பொருள்படும் எண்ணற்ற கூறுகளால் இணைக்கப்பெற்று, நம்மையை நன்மைக்காகச் செய்து பிறர்க்காக வாழ்வதே உயர்ந்த பண்பும் பண்பாடுமாகும். இதனையே மனவியலாளர் 'கற்றுணர்ந்து பகிர்ந்;து கொள்ளப்படும்'. நடத்தை முறைகளின் தொகுப்பே பண்பாடு என்பர். சங்ககாலம் தொட்டு சமீப காலம் வரை இப்பண்பாடுகள் கடந்து வந்த வழித் தடம் காண்போம்.

## இல்வாழ்க்கை

குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படைத் திருமணம். புகுந்த வீட்டின் பெருமை காத்தல் பெண்ணின் மாண்பு இளமைப்பருவத்தில் தன் தந்தையின் வீட்டில் செல்வ செழிப்புடன் வாழ்ந்த வளர்ந்த தலைவி திருமணம் முடிந்து தன் கணவன் இல்லம் செல்கிறாள். அவளைக் காணச்சென்ற செவிலித்தாய் வறுமையிலும் செம்மையாக இல்லறம் நடத்தும் அழகை வியந்து இத்தகைய அறிவும் ஒழுக்கமும் நிறைந்த பண்பை இவள் எங்கு கற்றாள்? என நற்றாயிடம் கூறுவதாக போதனார் நற்றிணையில்; கூறியுள்ளார்.

'ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும்' (நற்:110)

அனைத்து உயிர்களையும் ஆட்டு விக்கும் சொல் காதல், அன்பை மறைக்கவும் வேண்டும் பயன்பாடு கருதி வெளிப்படுத்தவும் வேண்டும். மரபின் நாகரிகம் குறைவு படாது தலைவியை தலைமகன் சந்திக்கும் இடத்தைச் சொல்ல வந்த தோழி மேகத்திடம் கூறுவதுபோல் தலைவனிடம் குறிப்பால் வெளிப்டுத்துவது பண்பாகும். இதனை,

'பெருங்கடல் முகந்த இருநகிளைக்
கொண்மூ
இருண்டு உயர் விசும்பின் வலனேர்பு
வளைஇப்'' (அகம் : 188)

என அகநானூறு சுட்டுகிறது.

அன்பும் அறனும் நிறைந்த இல்லற வாழ்வை விரும்பும் காதலர்கள் இரு வீட்டார் சம்மதம் பெற காத்திருப்பர். தலைவியை மணம் முடிக்க விரும்பிய தலைவன் தன் பெற்றோர் மற்றும் ஊர்ப்பெரியவர்களிடம் போதும் என்று சொல்லும் அளவு பொன்னும் பொருளும் கொடுத்தனுப்பி தலைவியின் பெற்றோரிடம் அனுமதி பெற்றான் என வெள்ளிவீதியார் குறிப்பிடுகிறார்.

'தண்டுடைக் கையர் வெண்டலைச்
சிதவலர்'(குறு:146)

தலைவன் மணம் முடிந்தவுடன் தன் மனைவியை தன் இல்லத்திற்கு அழைத்து வரும்பொழுது அவனின் தாய் தலைவியின் காலில் கிடக்கும்

சிலம்பைக் கழற்றி, சிலம்புகழி நோன்பு என்னும் சடங்கு செய்வாள் என சங்க இலக்கியம் சுட்டுகிறது.

"நம்மனை சிலம்பு கழீஇ அயரினும்"
(ஐங்குறு:399)

## நிர்வாகப் பண்பு

'அளவுக்கு மீறினால் அமிழ்தமும் நஞ்சாகும்' உழைப்பின் பலன் கருதி வருமானம் குறைவாக இருப்பினும் செலவிடல் மிகையாகாமல் இருத்தல் சிறப்பு. ஏனெனில் வரவு அறிந்து வாழா விட்டால் மானம் அழிந்து மதி கெட்டு ஊரார் தூற்றும் பழிக்கு ஆளாவர் என்கிறார் ஔவையர்.

'ஆன முதலில் அதிகம் செலவானால்'
(நல்வழி:25)

இதனையே வள்ளுவரும்,

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை" (குறள்:478)

## வேளாண்மை:

உழவு உலகிற்கு அச்சாணி என்று வள்ளுவரும் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாரதியும் போற்றக்காரணம் மனித உயிர்கள் வாழ அடிப்படையாக விளங்குவது வேளா ண்மை என்பதால்தான் இத்துறையிலும் நம் முன்னோர்கள் சில பண்பாட்டை விதித்துள்ளனர்.

மருத நில மக்கள் நெல்லை வயலில் அப்படியே விதைத்து வளர்க்கும் வழக்கம் இல்லாதவர்கள். உழவர்கள் உழுத வயலில் வைகரைப் பொழுதில்; நடுகை ஆட்கள் நாற்று நட்டதையும் நாற்றாங்காலில் வளர்க்கப்பட்ட பயிர் பறிக்கப்பட்டுப் பின்னர் வயலில் நடப்படும் பழக்கம் இருந்ததையும் கூறியுள்ளனர்.

"பெருநெற் பல்கூட்டு எருமை உழவ
நீர்; உறு செறுவின் நாறுமுடி அடுத்த
நின்" (நற்:60:2-8)

அறுவடைக்காலத்தில் நெற் குவியலை உழவர்கள் தங்களின் இல்லங்களில் குதிர்களில் சேர்த்து வைப்பார்கள். மேலும் களத்தில் இருந்து வரும் இரவலர்களுக்கு நெல்லை வாரி வழங்கும் கொடைப் பண்பும் மிளிர்வதைக் காணலாம்.

'பெருங்களம் தொடுத்த உழவர் போல்
இரந்தோர் வறுங்கலம் மல்கவீசி'
(அகம்:30:8-9)

மண்ணைப் பார்த்தால் அது உன்னைப் பார்க்கும் என்பர் நம் முன்னோர். இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய். நிலத்தின் வளத்தை அக்கறையுடன் நன்முறையில் பராமரித்தால் பதிலுக்கு அதுவும் மனித தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்யும்.

நிலத்துடனான உறவு குடும்ப உறவை வலுப்படுத்தும் என்பதில் நம்பிக்கை கொண்டவர்கள் நாம். வருவாய் குறைவாக இருப்பினும் நில உரிமை நிலம் சார்ந்த வேளாண்மை ஆகியவற்றை ஒரு பண்பாடாகக் கொண்டவர்கள். நாம் இன்று ச{ழலியல் மாற்றத்தால் கிராமங்கள் தங்கள் முகவரி இழந்து ஏதிலியாய் வாழும் நிலை உருவாகிவிட்டது. இதனை அழகிய பெரியவன்,

'வெட்டுண்டன் மரங்கள் வான் பொய்த்தது'

எனப் பதிவிடுகிறார்.

## மனிதநேயம்

பிற உயிர்களையும் தம் உயிர்போல் நேசிக்கும் பேருள்ளம் கொண்டதால்தான் முல்லைக் கொடி படரத் தேர்தந்த பாரியின் செயலும், கடும் குளிரில் வாடிய மயிலுக்கு போர்வை தந்த பேகனின் செயலும் அறியாமையால் செய்தது என எண்ணாமல் இஃது அவர்களின் ஈகை

உணர்வு. இச்செயலே இவர்களின் பெருமையை இன்றும் பறைசாற்றுகிறது. இத்தகைய உயிர்நேயப் பண்பைத்தான் "அறிமடமும் சான்றோர்க்கு அணி" என்பர்.

**"சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய**
**வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்**
**கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய"**
**(சிறுபாண்:184-87)**

'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்னும் மகாகவி பாரதியின் நீட்சியாக கூவும் குயிலும் கரையும் காகமும் விரியும் எனது கிளைகளில் அடையும் என சாதி மதம் கடந்த மனித நேயத்தை வெளிப்படுத்தியுள்ளார் இன்குலாப்.

**"எந்த மூளையில் விசும்பல் என்றாலும்**
**என்செவிகளில் எதிரொலி கேட்கும்"**
என்கிறார்.

## உறவுமுறை

தமிழ்ச்சமூகத்தின் அடையாளப் பெருமிதமாக விளங்கும் உயரமைப்பு உறவு முறையாகும். பெற்றோரை வணங்கும் நற்பண்பு கூறுகையில், உடலும் உயிரும் கொடுத்த இவர்களுக்கு கைமாறாக இவ்வுலகினைக் கொடுத்தாலும் ஈடாகாது. அவர்கள் பாடிய தாலாட்டு வானோர்க்கும் கிட்டாத மங்களத்திருப்பாட்டு என்கிறார். மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள்.

**"உடல் உயிர் சகலமும் நீர்தந்ததே யன்றி**
**உண்டோ இனி வேறு**
**..............................................................**
**வானினும் அமரர்க்கு வருமோ இதுபோல்"**
**(கண்ணி:22-27)**

நாம் வாழ்வில் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இன்பமும் துன்பமும் சில உறவுகளால் வந்தே தீரும். எல்லாவற்றையும் இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டு அதில் நல்லதைக் கற்றுக்கொள். ஏனெனில் இந்த மனித இருப்பு ஒரு விருந்தினர் இல்லம் என்கிறார் என்.சத்தியமூர்த்தி.

எங்கும் பரம்பொருளாக நிறைந்திருக்கும் இராமனைப் பண்பின் படிமமாகத் காட்டும் கம்பர். இராமன் தன் தந்தை தாய் மீதான அன்பு உடன் பிறப்பியம் ஆகியவற்றின் எல்லை கடந்து வேடர்குல குகன், வார சுக்ரீவன், எதிரியின் தம்பி வீடணன் என தன் உறவை விரிவு செய்கிறான்.

**'குகனோடு ஐவர் ஆனேம்**
**முன்பு: பின் குன்று சூழ்வான'**
**(கம்பராமாயணம்:6507)**

## மறமும் மானமும்

தமிழரின் நாகரிகம் முல்லை மருத நிலங்களில் கால்கொண்டு, தமிழர்தம் வாழ்வோடு பின்னிப்பிணைந்து இளைஞர்களின வீரத்தைப் பெருமைப் படுத்தும் பண்பாட்டு நிகழ்வு ஏறு தழுவல். காளையின் கொம்புக்கு அச்சம் கொண்டு பின் வாங்கும் ஆண்மகனை ஆயமகள் மறுபிறவியிலும் கூடக் கணவனாக ஏற்கமாட்டாள். இக் கருத்தினை,

**"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளே ஆயமகள்" (கலி:130:63-67)**

'மானமும் அறிவும் மனிதற்கு அழகு' எனும் தன்மான உணர்வுடையோர் நம் முன்னோர். நாயைக் கட்டுவது போல் சங்கிலியில் கட்டி தாகத்திற்கு கேட்ட தண்ணீர் காலம் தாமதமாக வந்ததால் பருகாமல் மறுத்த கணைக்கால் இரும்பொறையின் மனவலிமை பாடலாக

**'தொடர்படு ஞமலியின் இடர்படுத்து**
**இரீஇய' (புறம்:74)**

## நம்பிக்கைகள்

காலந்தொட்டு மக்களிடம் நல்ல காரியம் செய்வதற்கு நல்ல நாள் பார்க்கும் வழக்கம் உண்டு. இதனையே

தொல்காப்பியம்

'நாளும் புள்ளும் பிறவற்றின்
நிமித்தமும்' (புறத்திணை:30)

என்கிறது. புத்தாடை அணிவதற்கு ஞாயிறு வியாழன் ஆகிய நாட்கள் சிறந்தது. வீட்டுக்கூரையின் மேல் காக்கை உட்கார்ந்து கரைந்தால் விருந்தனர் வருவர்.

'விருந்து வரக் கரைந்த காக்கையது
பவியே' (குறு:210)

மழை பெய்யாமல் பொய்த்தால் ஊரில் பஞ்சம் ஏற்படும. அதனால் மழைச்சோறு எடுத்து வழிபடுவர். மழை பெய்யவில்லை எனில் காட்டிற்கும் செல்ல முடிவு செய்து பாடிக்கொண்டே வாங்கிய பானை, அகப்பை, பழையமுறம் போன்றவற்றைத் தலையில் வைத்தவாறு; ஊரை விட்டு வெளியேறும் பொழுது மழை பெய்யத் தொடங்கும் என்பது நம்மவர் நம்பிக்கையாகும்.

## முடிவுரை:

ஆயுளின் பெருமை ஆண்டுகளில் இல்லை நாம் வாழும் முறையில் தான் உள்ளது. நீண்ட நாள் வாழ வேண்டும் என்பது பலரின் ஆசை நன்றாக வாழவேண்டும் என்பது ஒருசிலரே. அந்த வகையில் நம்முன்னோர்களும் காலந்தோறும் நாகரிகத்திலும், நம்பிக்கையிலும், உயிர்ப்பண்பிலும், உளவியலிலும் உறுதியுடன் வாழ்ந்தனர் என்பதை புறந்தள்ள யாராலும் இயலாது.

## பார்வை நூல்கள்:

பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல்

பூமணி, பூமனி சிறுகதைகள்

தி.சு. நடராாசன் தமிழின் பண்பாட்டு வெளிகள்

அழகிய பெரியவன், தகப்பன்கொடி

மாயூரம் வேதநாயகம்பிள்ளை, சர்வ சமய சமரசக்கீர்த்தனை

மசானபு புகோகா, ஒற்றைவைக்கோல் புரட்சி

அ.கௌரன், பழந்தமிழர் வழிபாட்டு மரபுகள்

# தமிழ் வரலாற்றில் பண்பாட்டுப் பதிவுகள்

**திருமதி. இரா. மணிமேகலை**

துறைத்தலைவர், வரலாற்றுத் துறை.
அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஆலம்பட்டி, திருமங்கலம்,

## ஆய்வுச் சுருக்கம்

தமிழக வரலாற்றில் சங்க இலக்கியத்திற்கென்று தனிச்சிறப்பு உண்டு சங்க காலம் என்பது 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. சங்க காலத் தமிழருக்கு பெருமை சேர்க்கும் வகையில் அவர்கள் மேற்கொண்டிருந்த பண்பாடு சிறப்பாகக் கருதப்படுகிறது பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கையை நாகரீகத்தை பண்பாட்டை குழுக்களாறுகளை அறிவதற்கு உதவின பண்டைய இலக்கியங்கள். மக்களின் அக வாழ்க்கை புற வாழ்க்கையைத் தெரிந்து கொள்ளவும் பயன்படுகிறது. பண்பாடு என்பது பண்படுதல் எனப்படுகிறது. கற்கால முதல் தற்காலம் வரையில் பல்வேறு இலக்கியங்களில் வளர்ந்து வருகிறது நமது பண்பாடு.

பண்பாடு என்பது தனிமனித ஒழுக்கத்தையும் தனி மனிதன் என்ற வட்டம் கடந்து குழு வாழ்க்கையையும் ஒரு சமுதாயத்தின் அல்லது பெரும் பகுதியின் முதன்மைப் பண்பாடாகும். இத்தகு பெருமை மிகும் பண்பாட்டை அறிந்துகொள்வதற்குதமிழ்இலக்கியங்கள் சிறந்த துணையாக அமைகின்றன. மனிதர்கள் தம் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உரிய அறிவையும் திறமையையும் பண்பாடு அளிக்கிறது. தனிமனிதனின் சிறந்த செயல்களே பண்பாடாக மாறுகின்றன. மக்களின் வாழ்க்கையில் பண்பாட்டிற்கு முக்கியத்துவம் தருவதாகவும் ஆய்வு கட்டுரை மூலம் நாம் தெளிவாக காண்போம்.

## பண்பாட்டுப் பொருள் விளக்கம்

பண்பாடு என்பது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களையும், அத்தகைய செயற்பாடுகளுக்குச்சிறப்புத் தன்மைகளையும் முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீடு அமைப்புக்களையும் குறிக்கின்றது. பண்பாடானது இசை, இலக்கியம், வாழ்கை முறை, உணவு, ஓவியம், சிற்பம், நாடகம், திரைபடம் போன்ற மனிதருடைய கலைப் பொருள்களிலும் நடவடிக்கைகளிலும் வெளிப்படுகின்றது. தமிழர் பண்பாடு பல காலமாக பேணப்பட்ட மனிதன் சமுதாயத்தின் ஓர் அங்கம். எனவே, மனிதன் பேசும் மொழி, அணியும் ஆடை, உண்ணும் உணவு, வாழும் முறை, செய்யும் பணி, எண்ணங்கள் ஆகியவை அவன் சார்ந்த சமுதாயத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வாயில்களாகக் கருதப்படுகின்றன.

## பண்டைத்தமிழரின் கொடைப்பண்பு

தமிழ் வரலாறு, இலக்கியம், பொருளியல், சட்டம், மன்னர்கள் அளித்த நிவந்தங்கள், ஊர்க் கொடைகள் ஆகியவற்றிலிருந்து அக்கால மன்னர்கள், படைத்தலைவர்கள் ஆகியோரின் பண்பாட்டினை அறிந்து கொள்ளலாம். உதாரணமாக, இரண்டாம்

நந்திவர்மனின் படைத்தலைவனாகிய உதயசந்திரன் என்பவனின் படைத்திரளைக் குறிப்பிடுகிறார். அவனுக்கு பாலச்சங்கரையில் இருந்த ஒரு கிராமத்தின் உரிமையை அளிக்கின்றான், நந்திவர்மன். அதன் பெயர், குமாரமங்கலம். வெள்ளாட்டூர் என்றிருந்ததை உதயசந்திரமங்கலம் என்று பெயரிட்டு அதை 108 பிராமணர்களுக்கு கொடை அளித்தான் குபேந்திரன். இச் செய்திகளை செப்பேடுகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். இவ்வாறு மன்னர்களின் வரலாற்றை சொல்லிச் செல்லும் கேகேபிள்ளை இணையாகவே தமிழகப் பண்பாடு வரலாற்றையும் சொல்லிச் செல்கின்றார்.

## அகழாய்வுகள்

தமிழ்நாட்டில். பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் நடத்தப் பட்டு வருகின்றன. இந்த அகழாய் வினுடைய முன்னோடி என்று 1863 ஆம் ஆண்டு அலெக்சாண்டர் கன்னிங்காம் அகழ்ஆய்வின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். அவர்தான் அகழாய்வுணை தொடங்கியவரும் கூட. அகழாய்வு என்பதே பூமிக்கு அடியில் உள்ள பொருட்களை தோண்டி எடுத்து அதிலுள்ள மக்களுடைய வாழ்க்கை வரலாற்றை வெளிப்படுத்துவதே அகழாய்வு எனப்படுகிறது.

## அகழாய்வில் கிடைத்த பொருட்கள்

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்ச நல்லூரில் கிடைத்த அகழாய்வுப் பொருட்கள், நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள், பழங் காலத்துப் பானை ஓடுகள், மணிகள், சிறு கலங்கள், இரும்புக்கருவிகள், கற் கருவிகள் ஆகிய கிடைத்தன. இதன் மூலம் பண்டைய தமிழரின் புழங்கு பொருள்களை அறிய முடிகிறது.

## அகழாய்வு நடைபெறும் இடங்கள்

ஈரோடு மாவட்டம் கொடுமணல், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள பூம்புகார், தஞ்சை மாவட்டம் பழையாறை, தாராசுரம், சிவகங்கை மாவட்டத்திற்கு அருகில் உள்ள கீழடி, ஆகிய இடங்களில் பல்வேறு அகழாய்வுகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கன.

## கல்வெட்டுக்கள்

கரூர் மாவட்டத்தில் புகளூர் என்ற ஊரில் உள்ள மலையில் வெட்டப் பட்டுள்ள கல்வெட்டு ஒரு இயற்கை குகைத்தாளத்தில் வெட்டப்பட்டுள்ளது. செங்காயன்பண் என்ற சமணப் பெரியவருக்குசெல்லரும்முறைஎன்றசேர அரசனின் மகன் பெருங்கடுங்கோனின் மகன் இளங்கடுங்கோ இளவரசராக இருந்த பொழுது இந்த குகைத்தளத்தை உருவாக்கி கொடுத்ததை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. மூன்று தலைமுறை அரசர்களின் கல்வெட்டு பற்றிக் குறிப்பிடுகிறது.

"மூதா அமண்ணன் யாற்றூர்
செங்காயபன்
கோ ஆ............ல்லிரும் பொறை மகன்
பெருங்கடங்கடுங்கோன்
இளங்கடங்கோ இளங்கோ ஆக
அறும்பித்த கல்." - தொல்காப்பியம்.

## செப்பேடுகள்

செப்பேடு என்பவை பழங்காலத்தில் மன்னர்களின் கோவில் தானங்கள், வம்சாவழிப் போர்க் குறிப்புகள், மரபுவழிக் கதைகள் போன்ற நிகழ்வுகளைப் பதித்து வைப்பதற்கு பயன் படுத்தப்பட்ட உலோகத்தகடாகும். இவை பழங்காலத்தைப் பற்றி அறிய உதவும் தொல்லியல் சான்றுகளாக இருந்து வருகின்றன. இவற்றில் சென்னை அருங்காட்சியகத்தில் இருக்கும் 280 செப்பேடுகளைப் படியெடுக்க

முயற்சியும் எடுக்கப்பட்டுள்ளது.

திருவாலங்காடு செப்பேடு, அரியலூர் செப்பேடு, ஆனையர் கோட்டை செப்பேடு, ஆழ்வார்பேட்டை செப்பேடு, கூரம் செப்பேடு, எட்டயபுரம் செப்பேடு, வேள்விக் குடி செப்பேடு, என பல்வகையான செப்பேடுகள் காணக்கிடைக்கின்றன

இயற்கையாக ஓலைச்சுவடிகளை அழிப்பது போல செப்பேடுகள் அழிவ தில்லை. எனவே, பண்டைய மக்கள் செப்பேடுகளைப் படிக்கவும் பாதுகாப்பது மட்டுமின்றி பூமியில் புதைத்தும் வைத்தனர். மேலும் பல செப்பேடுகள் உருவாக்கப்பட்டு பத்திரங்களாக மாறின. செம்பின் உபயோகத்திற்காக பல செப்பேடுகள் அளிக்கப் பெற்றன. இவற்றை மீறி சில செப்பேடுகள் தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டன. செப்பேடுகள் அவை கிடைத்த இடத்தைக் கொண்டு அவை இருக்கும் இடத்தைக் கொண்டும் பெயரிடப்படுகின்றன. செப்பேடுகளை அவை கிடைக்கும் இடத்தை மட்டும் வைத்து அந்த இடத்திற்கே உரியது என்று கூறி விடவும் முடியாது ஏனெனில் செப்பேடுகளை எடுத்துச் செல்வது எளிமையாக இருப்பதன் காரணமாக ஓரிடத்திற்குரியவை வேறுபட்ட தொலைவான இடங்களில் கூட கிடைத்திருக்கலாம். இவ்வாறு நமது தமிழகர்களின் பண்பாடானது செப்பேடுகளின் வழியே அறிய முடிகிறது.

## ஓலைச்சுவடிகள்

பாறைகளில் எழுதி வந்த தமிழர்கள் பிற்காலத்தில் பனை ஓலையைப் பயன்படுத்தத் தொடங்கினர். எழுதுகோல் கண்டுபிடிக்கப்பட்ட காலம் வரை பனை ஓலையில் எழுதுகின்ற முறை ஆசிய நாடுகள் அனைத்திலும் இருந்திருக்கிறது. இவ்வாறு எழுதப்பட்ட அனைத்தும் எழுத்தோலைகள் எனப் படுகின்றன. நூலாக எழுதப்பட்ட ஓலைகள் கட்டிதொகுக்கப்பட்டுள்ளன.

“பாட்டுப்புறம் எழுதிய கட்டமைச் சுவடி என்பது” - பெருங்கதை

“மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு
முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்”
- தமிழ்விடுதூது

தமிழரின் இலக்கிய புதையல்களாக திகழ்ந்த சுவடிகளை தொகுத்தும் பாது காத்தும் வைத்திருந்த வள்ளல்கள் பலராவர். அவர்களில் ஒரு சிலர் இல்லங்களில் சுவடிகளை நிரப்பி சுவடி நூலகங்களாக மாற்றிப் பாதுகாத்தனர். நாமும் நம்முடைய முன்னோர்களின் பண்பாடுகளை அறிந்து கொள்வதற்கு ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்து இளைய தலைமுறையினருக்கு பண்பாடு பற்றி அறிய வைப்போம்.

## முடிவுரை

பண்டைய தமிழரின் வாழ்வியல் பண்பாட்டை செம்மையுற விளக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்வது பண்பாடு, மறத்தில் அறமும், வேளாண்மை முறை குறித்த சிந்தனையும், பகுத்துண்டும் பண்பு நலனும், ஒற்றுமை உணர்வும் மனித சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் கல்வியின் பெருமையும், இந்த உலகத்தில் இயல்பான தன்மைகளையும் நாட்டை சிறப்புற செம்மையாக ஆட்சி செய்த மன்னனின் பெருமையும், கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், செப்பேடுகள், அகழாய்வுகள், தொல்லியல் சான்றுகள் பண்பாட்டுக் கூறுகளையும் எடுத்துரைத்து வரலாற்று கருவூலமாகத் திகழ்கிறது என்பதை உணரமுடிகிறது.

## பார்வை நூல்கள்

*தமிழக வரலாறும் பண்பாடும் – மா.ராஜமாணிக்கனார்.*

*சென்னை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை– 2005 வடிவ விளக்கம்*

*சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் கிடைத்த ஓலைச்சுவடிகள்.*

From History collection *தமிழ்நாட்டு கல்வெட்டுகள். – ஆர்.சிவநாதம்.*

## அடிக்குறிப்புகள்

*1. கலித்தொகை பாடல் எண்: 133,8*

*2. தமிழ்விடு தூது*

*3. தொல்காப்பியம்.*

# இரமணிச்சந்திரன் புதினங்களில் பெண்களின் அறப்பண்பாடு

நெறியாளர்:
**இரா.வெங்கடாசலம்**

**வி.மதி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம்,
அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி- 635 001.

## முன்னுரை:

பெண்கள் இன்று பல சாதனைகள் படைத்து முன்னேறி வருகின்றனர். விண்வெளியிலும் தங்களுடைய தடத்தைப் பதித்து வருகின்றனர். ஆனாலும் இன்றும் சமுதாயத்தில் பெண்களுக்கான உரிமைகளும், சுதந்திரமும் மறுக்கப்பட்டே வருகின்றன. பெண்மையின் அறம் போற்றப்பட்டால் மட்டுமே நாட்டின் அறமும் போற்றப் படும் என்பதை உணர்ந்தவர் ஆசிரியர் இரமணிச்சந்திரன். தம்முடைய புதினங் களின் வாயிலாக பெண்களின் அறப்பண்பாட்டைப் பற்றி ஆசிரியர் பதிவு செய்துள்ள கருத்துக்களை ஆய்வு செய்து வெளிக்கொணர்வதே இக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது

## ஆசிரியர் இரமணிச்சந்திரன்:

பெண் எழுத்தாளர்களில் திருமதி ரமணிச்சந்திரன் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் பெரும்பாலும் சாதாரண குடும்ப சூழலையே கதைக்களமாக அமைத்து அழகுற உணர்வுகளை வெளிக்காட்டுவதில் திறன் பெற்றவர். பெண்களின் வாழ்க்கைச் சிக்கலையே மையக்கருவாக அமைத்து தன்னுடைய புதினங்களை வடிவமைத்தவர். இவர் தன்னுடைய புதினங்களின் முடிவுகளை மகிழ்ச்சியாகவும் இனிமையாகவும் முடிப்பதையே வழக்கமாகக் கொண்டவர். வன்முறை, சோகம், கவர்ச்சி போன்ற உணர்வுகளை ஆசிரியர் விரும்புவதில்லை. ஆகையால் இது போன்ற உணர்வுகளை தனது புதினங்களில் இடம்பெறாமல் பார்த்துக் கொண்டார்.

## ஆசிரியர் கூறும் பெண்களுக்கான அறம்:

இல்லற பெண்களின் அறம் போற்றுதற்குரியதாகும். ஆசிரியர் தம்முடைய புதினங்களில் இல்லறப் பெண்களின் அறத்தைப் பற்றி பல இடங்களில் வரையறை செய்துள்ளார். ஆசிரியர் படைத்துள்ள பெண் கதா பாத்திரங்கள் கற்பு நெறியில் சிறந்து ஒழுகுபவளாகவும், தனக்கு ஏற்படும் பிரச்சனைகளை தானே தீர்க்கும் திறன் பெற்றவளாகவும், தன் குடும்பத்தைத் தானே முன்நின்று சீரோடும் சிறப்போடும் நடத்துபவளாக படைத்திருப்பார்.

“தனிமனிதனின் வாழ்வும் பொது வாழ்வும் சீராக இயங்கத் தனி மனிதன், அரசு போன்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கத்தின் அடிப் படையிலான நெறிமுறைகள் அல்லது கடமைகள்” என்று அறத்தை வரையறை செய்கிறது தமிழ் அகராதி. (க்ரியாவின்– தற்காலத் தமிழ் அகராதி– ப–76)

பெண் என்பவள் மெல்லுணர்வு களை கொண்டவளாக இல்லாமல் புதியதோர் உலகைப் படைப்பவளாக இருக்க வேண்டும். இதுவே

பெண்களின் வெற்றிக்கான அறம் என்று படைத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

**"அறம் கெட அறியா தாங்கு"**
**(நற்றி- 400-8)**

**"அறமெனப்படுவது யாதெனக் கேட்டின்**
**மறவாதிது கேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்ட தில்லெனக் காவலன் உரைக்கும்"**
**(மணி- 85-88)**

என்று அறத்தைப் பற்றி நற்றிணையும், மணிமேகலையும் எடுத்துரைக்கிறது.

**"அழகு காட்டி அசத்த நினைக்கும்**
**அழகு பதுமைகளா நீங்கள்**
**அறிவியல் உலகில் சாதனை நிகழ்த்தும்**
**மறவியல் உயிர் அல்லவா நீங்கள்"**
**(ஜெ. செல்வகுமாரி - பெண்ணியம் பேசுகிறேன்- ப-49)**

என்று பெண்களின் நிலையை உயர்த்தி இன்றைய நவீன உலகின் இணையற்ற சக்தியாக அறத்தைப் பின்பற்றுவதில் ஆலமரமாய் திழைத்திருப்பதையும் பதிவு செய்துள்ளார்.

## பெண் கல்வியில் அறம்:

ஆண்களுக்கு சமமாக பெண்களும் கல்வி கற்று வருகின்றனர் என்பது உண்மையே. ஆயினும் இடைக்காலத்தில் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. இன்று பெண் கல்வி மேலோங்கி வளர்ச்சிப்பாதையில் சென்றாலும் சில இடங்களில் பெண் கல்விக்கான அங்கீகாரம் கிடைப்பதில்லை. பெண்கள் படித்திருந்தாலும் வேலைக்குச் செல்லாமல் வீட்டினுள் அடைந்துக் கிடக்கும் அவல நிலையே ஆட் கொண்டுள்ளது. ஆனால் ஆசிரியர் படைத்துள்ள பெண்கள் அறத்தோடு நின்று கல்வி கற்றலைப் பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.

"உன்னை தழுவிடிலோ கண்ணம்மா" என்னும் புதினத்தில் வசீகரனை கரம் பிடித்து உயர்ந்த வசதிகளோடு இருந்த போதிலும் கதாநாயகி அபரஞ்சி தன் கல்வியை அறத்தோடு தொடர்ந்தாள் என்பதை பதிவு செய்துள்ளார். "சொர்க்கத்திலே முடிவானது" எனும் புதினத்தில் கதாநாயகி மஞ்சரி, தந்தையை இழந்த நிலையில் தாயின் பேராசைக்கு ஆட்படாமல் தன் கல்வியின் துணைக் கொண்டு அறத்தோடு சமூகத்தில் அவள் மேற்கொள்ளும் போராட்டங்களைப் பதிவு செய்துள்ளார்.

**பெண்ணடிமை விலங்கை உடைக்கும்**
**பேராற்றல் கல்வி**
**அடிமையாய் வீட்டினுள் கிடந்தவளை**
**ஆளச் செய்தது கல்வி**
**சம்பிரதாயம் எனும் சங்கிலியை**
**சமர் செய்து உடைத்தது கல்வி**
**குடத்திலிட்ட விளக்கறிவாய் இருந்த பெண்ணை**
**குன்றிலிட்ட விளக்காய் மாற்றியது கல்வி**
**தனியாய் நிற்கும் பெண்களுக்கும்**
**தன்னம்பிக்கைக் கொடுப்பது கல்வி**
**பாரதி கண்ட புதுமைப் பெண்ணை**
**பாரினில் ஈன்றெடுத்தது கல்வி**
**நாட்டு முன்னேற்றத்தின்**
**நாடித்துடிப்பு பெண் கல்வியே**
**(வி. மதி - முனைவர் பட்ட ஆய்வாளர்)**

இவ்வாறு ஆசிரியர் தம்முடைய புதினங்களில் பெண் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளார். மேலும் அறத்தைப் பின்பற்றி எப்படி கல்வி கற்றனர் என்பதைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

**"உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களரனையர் கல்லா தவர். (குறள்-406)**

என்று வள்ளுவர் கல்லாதவரின் இழிநிலையை எடுத்தியம்புகிறார்.

**"கல்வியில்லாத பெண்கள் களர் நிலம் அந்நிலத்தில்**
**புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள்**

விளைவதில்லை"
(இராமலிங்கம். த- தமிழ் சுவையும் அருட்சுவையும்- ப-66)

என்று பாரதிதாசன் கல்லாத பெண்களைக் களர்நிலம் என்கிறார்.

"மலைவாழை அல்லவோ கல்வி வாயார
உண்ணுவாய் போய் என் புதல்வி
விலை போட்டு வாங்கவா முடியும் கல்வி
வேளைதோறும் கற்று வருவதால் படியும்
படியாத பெண்ணாய் இருந்தால் கேலி
பண்ணுவார் இவ்வூரார் தெரிந்தால்"
(இராமலிங்கம். த- தமிழ் சுவையும் அருட்சுவையும்-ப-66)

என்று பாரதிதாசன் பெண் கல்வியின் அவசியத்தை உணர்த்தியுள்ளார்.

## குடும்பச் சூழலில் பெண்களின் அறம்:

குடும்பச் சூழலில் பெண்கள் அறத்தோடு நின்று தம் வேலைகளை மிகவும் திறம்பட செயல்படுவதைத் தம்முடைய புதினங்களில் வரும் பெண் கதாபாத்திரங்கள் மூலம் விளக்கிக் காட்டியுள்ளார்.

"தண்ணீரிலே தாமரைப்பூ" எனும் புதினத்தில் பவானி எனும் பெண் தனக்கு நிகழும் பிரச்சனைகளை சதுர்யமாகவும், பொறுமையுடனும் கையாளும் திறத்தை எடுத்துக்காட்டியுள்ளார். அறத்தோடு அவள் மேற்கொள்ளும் செயல்களை மிகவும் அழகாக வடிவமைத்துள்ளார்.

வெகு நாட்களாக குடிபோதையில் இருந்த சுந்தரவதனம் மனம் திருந்தி பவானியிடம் இவ்வாறு கூறினான்.

"அம்மா சொல்படி மறுவாழ்வு மையத்துக்குப் போய் குடியை அடியோடு குணப்படுத்திக் கொள்ளப் போகிறேன் என்று அவன் கூறவும் பவானி ஆறுதல் அடைந்தாள்" (தண்ணீரிலே தாமரைப்பூ– ப–137)

இவ்வாறு "ஆண்மையின் செயலாற்றலுக்கும் அறிவாற்றலுக்கும் பெண்மையின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். குடும்ப வாழ்க்கையின் எல்லா நலன்களுக்கும் அடிப்படையாய் இருப்பது பெண்மைதான். சிறுமி, மங்கை, மனைவி, மருமகள், மாமியார், பாட்டி என்று பல பெயர்களுடன் உலவும் பெண்மை குடும்ப நலத்திற்கும், குடும்ப ஒற்றுமைக்கும், குடும்ப முன்னேற்றத் திற்கும் பாடுபட வேண்டும் என்பதே நமது வேண்டுதலாகும்". (K.வெங்கட்ராவ்– பெண்மை– ப–9)

ஆசிரியரின் படைப்பில் பெண்ணானவள் பன்முகத்தன்மையுடன் அறத்தோடு நின்று குடும்பச் சூழலை கையாளும் விதத்தினை புலப் படுத்துகிறார்.

## பெண்கள் ஆளுமையில் அறத்தோடு நிற்றல்:

பெண் எழுத்தாளரான ஆசிரியர் பெண்களின் மனநிலையை தெளிவாகப் புரிந்து கொண்டவராய் தம் புதினங்களைப் படைத்துள்ளார். பெண்கள் அறத்தோடு வாழ்தல் அவசியமாகும் ஆதலால் பொறுமை, சினத்தை அடக்குதல், அன்பு, கற்பு நெறி தவறாமை, பொய் பேசாமை போன்ற வாழ்வியல் நெறியோடு வாழ்தலே சிறப்பானது என்று எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

"உன் முகம் கண்டேனடி" எனும் புதினத்தில் மஞ்சரியின் போராட்டங் களையும் துணிவையும் எடுத்துக் காட்டியிருப்பார். தாய் தந்தையை இழந்து, பணம் இல்லாததால் காதலை ஒதுக்கிய காதலன், காதல் தோல்வியால் பாதிக்கப்பட்டு பின்பு அறத்தோடு தன் ஆளுமையை வெளிப்படுத்திய திறத்தை வெளிக்காட்டியுள்ளார் ஆசிரியர்.

**"மாதர் தம்மை இழிவு செய்யும்**
**மடைமையை கொளுத்துவோம்**
**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடந்து வந்தோம்"**
**(தேவிரா. முனைவர்-தமிழ் இலக்கிய தகவல் களஞ்சியம்-ப-34)**

என்று பெண்ணிற்கு உரிமை வழங்குதல் வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார்.

"கணவனின் தனித் தன்மையை ஏற்றுக் கொள்ளும் குடும்பத்திலும் மனைவியின் ஆளுமையை ஏற்றுக் கொள்ளும் குடும்பத்திலும் இருவரும் ஒருவருக்கொருவர் இணையான உரிமை கொடுத்து வாழும் குடும்பத்திலும் கணவன் மனைவி உறவில் சிக்கல் எழுவதில்லை" என்று நா. வேலம்மாள் குறிப்பிடுகின்றார் (நா. வேலம்மாள்– தமிழ் நாவல்களில் பொருளாதார சிக்கல்கள்–ப–302).

## பெண்களின் சமூக அறம்:

சமூகத்தில் சிறப்பாக செயல்படுவதில் முக்கியத்துவம் வாய்ந் தவர்கள் பெண்கள். ஆசிரியர் படைக்கப்பெற்ற பெண்கள் அதிக சமூக அக்கறை கொண்டவர்களாகவும், குடும்ப அமைப்பினை அறத்தோடு நின்று பேணிக் காத்து சமுதாய வளர்ச்சிக்குத் துணை நிற்பவளாக படைத்துக் காட்டியுள்ளார்

**"தற்காத்துத் தற்கொண் டாற் பேணித் தகைசான்ற**
**சொற்காத்துச் சோர்விலாள்பெண்"**
**(குறள்-56)**

உடலாலும் உள்ளத்தாலும் தன்னைக் காத்து தன் கணவனின் நலன்களில் கவனம் வைத்து குடும்பத்திற்கு நலம் தரும் புகழைக்காத்து அறத்தைக் கடைபப்பிடிப்பதில் சோர்வடையாமல் இருப்பவளே பெண் என்று வள்ளுவர் கூறுகிறார்.

ஆசிரியர், பாலியல் சீண்டலினால் பாதிப்புக்குள்ளாகும் பெண்களின் நிலைப்பாட்டை பல புதினங்களில் பதிவு செய்துள்ளார். "தண்ணீரிலே தாமரைப்பூ" எனும் புதினத்தில் பவானி எனும் பெண் பாலியல் சீண்டலில் இருந்து தன்னைக் காக்க மிக துணிவுடன் செயல்பட்ட விதத்தையும் அதிலிருந்து அறத்தோடு வெளிவரும் திறனையும் மிக அழகாக காட்சியமைப்புடன் விளக்கி யிருப்பார் ஆசிரியர்.

**"பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள்"**
**(நான்மணிக்கடிகை- 92)**

நல்ல பெண்ணானவள் காவல் இல்லாவிட்டாலும் கற்பொழுக்கத்தையே மேற்கொண்டொழுகுவாள். இத்தகு சிறப்புமிக்க பெண்களின் நிலைப்பாட்டை தம் புதினங்களின் வாயிலாக உருவாக்கி காட்டியிருப்பார் ஆசிரியர்.

## முடிவுரை:

அறம் என்பது ஒழுக்க நெறியில் நடத்தலே ஆகும். ஆசிரியர் படைத்துள்ள பெண்கள் எவ்வகையிலும் ஒழுக்க நெறியில் தவறாமல் குடும்பத்தை பேணிக் காப்பதிலும், சுய ஒழுக்க முறைகளை பின்பற்றுவதிலும் தலையாய கடமையாக எண்ணி முடித்துக் காட்டுவார்கள் என்பதை நம்மால் அறிய முடிகிறது. பெண்களின் துணிவு, நம்பிக்கை, போராடும் திறன், நல்ல மதிப்புகளோடு எவ்வாறு சமூகத்தில் பிரச்சனைகளை மேற்கொண்டார்கள் என்பதை ஆசிரியரின் புதினங்களின் வாயிலாக அறிய முடிகிறது. பெண்கள் அறப்பண்பாட்டைக் காத்து குடும்ப சூழல் பாதிக்காத வகையில் சமூகம் வளம் பெற வாழ்ந்த வாழ்வியலை தம் புதினங்களில் பதிவு செய்துள்ளார். ஆசிரியரின் அறச் சிந்தனைகளையும், செயல்களையும் தாம் படைத்த பெண்களின் கதாபாத்திரம் வாயிலாக வெளிக்கொணர்ந்ததை இக்கட்டுரையின்

வாயிலாக நம்மால் தெளிவாக உணர முடிகிறது.

### துணைநூற் பட்டியல்:


1. தற்காலத் தமிழ் அகராதி – க்ரியா பதிப்பகம், மூன்றாம் பதிப்பு–2020, சென்னை–600 041
2. சிதம்பரனார். சாமி – 'மணிமேகலை காட்டும் மனித வாழ்வு', மணி மலர் பதிப்பகம், முதற் பதிப்பு – டிசம்பர்–2013, சென்னை–600 006.
3. இரமணிச்சந்திரன் – 'சொர்க்கத் திலே முடிவானது', 'தண்ணீரிலே தாமரைப்பூ', 'உன் முகம் கண் டேனடி' அருணோதயம் பதிப்பகம், முதற்பதிப்பு–2001, சென்னை.
4. நாராயணசாமி. இரா – 'திருக்குறள் இனிய உரை', பதினைந்தாம் பதிப்பு–2014, சென்னை– 600 098
5. K.வெங்கட் ராவ் – 'பெண்மை', ஸ்ரீ மாருதி விநாயகம் ப்ளிகேஷன்ஸ், முதல் பதிப்பு–2003, சென்னை–600 014
6. திரு. புன்னைவனநாதன் பு.சி – பதினெண் கீழ்க்கணக்கு– நான்மணிக்கடிகை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், டிசம்பர் –2007, சென்னை –18.
7. ஜெ. செல்வகுமாரி – 'பெண்ணியம் பேசுகிறேன்' (பக்–49)
8. இராமலிங்கம். த– 'தமிழ் சுவையும் அருட்சுவையும்'–(பக்–66)
9. தேவிரா. முனைவர் – 'தமிழ் இலக்கிய தகவல் களஞ்சியம்' – (பக்–34)
10. நா. வேலம்மாள் – 'தமிழ் நாவல் களில் பொருளாதார சிக்கல்கள்' (ப–302)

# அகநானூற்றில் பண்பாட்டுப் பதிவுகள்

**மு.மயில்,** எம்.ஏ., பி.எட்., டி.ஜி.டி.,
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஆலம்பட்டி, திருமங்கலம், மதுரை-625706

## முன்னுரை

பண்படுதல் என்பது சீர்படுத்துதல், செம்மைப்படுத்துதல் எனப் பொருள்படும்.

'பண்பெனப்படுவது பாடறிந்து
ஒழுகுதல்' (கலி.பா.133.8)

என்று கலித்தொகை விளம்புகிறது.

பண்பாடு என்பது தனிமனித ஒழுக்கத்தையும் தனி மனிதன் என்ற வட்டம் கடந்து குழு வாழ்க்கையையும் குறிக்கும். இத்தகு பெருமை மிகும் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு தமிழ் இலக்கியங்கள் சிறந்த துணையாக அமைகின்றன.மனிதர்கள் தம் அடிப்படைத் தேவை களை நிறைவேற்றுவதற்கு உரிய அறிவையும் திறமையையும் பண்பாடு அளிக்கிறது. தனிமனிதனின் சிறந்த செயல்களே பண்பாடாக மாறுகின்றன. மக்களின் வாழ்க்கையில் பண்பாட்டிற்கு முக்கியத்துவம் இருப்பதால் தான் மக்கள் இணக்கமாக வாழ முடிகிறது. அகநானூற்றில் பண்பாட்டுப் பதிவுகளை எடுத்தியம்புவதே இக்கட்டுரை.

## பண்பாட்டு பொருள் விளக்கம்

பண்பாடு என்பது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களையும், அத்தைகைய செயற்பாடுகளுக்குச் சிறப்புத் தன்மைகளையும் முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீடு அமைப்புக்களையும் குறிக்கின்றது. பண்பாடானது இசை, இலக்கியம், வாழ்கை முறை, உணவு, ஓவியம், சிற்பம், நாடகம், திரைப்படம் போன்ற மனிதர்களுடைய கலைப் பொருள் களிலும் நடவடிக்கைகளிலும் வெளிப்படுகின்றது. தமிழர் பண்பாடு பல காலமாக பேணப்பட்ட மனிதன் சமுதாயத்தின் ஓர் அங்கம். எனவே, மனிதன் பேசும் மொழி, அணியும் ஆடை, உண்ணும் உணவு, வாழும் முறை, செய்யும் பணி, எண்ணங்கள் ஆகியவை அவன் சார்ந்த சமுதாயத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தும் வாயில்களாகக் கருதப்படுகின்றன.

## நட்பு பண்பாடு

பிறருக்கு கொடுத்து வாழும் வாழ்வே சங்க காலத்தின் உயிர்ப்பண்பாய் விளங்கியது. பழந்தமிழர்கள் காதலையும் வீரத்தையும் தம் இரு கண்களாகக் கொண்டனர்.தமிழர் பண்பாட்டில் ஒன்றான நட்பினை முதன்மையாகக் கொண்டு அகநானூற்றுப் பாடலில் நட்பிற்கு இலக்கணமான பாடல் ஒன்றில் நள்ளிரவு வேளையிலே, மேகம் இடிமுழங்கும் ஒலியைக் கேட்ட, மூங்கிலைத் தின்று கொண்டிருக்கும் பெரிய யாரையாவது. அதனைப் புலியின் முழக்கம் என்று எண்ணி அச்சங்கொண்டு பெரிய மலையின் பிறப்பிடங்கள் எல்லாம் எதிரொலி செய்யுமாறு கதறிதாகப் பெயர்ந்து ஓடிக்கொண்டிருக்கும். அத்தகைய

*பெரிய மலை நாடன் அவன்.அவனுடன் நாம் கொண்ட நட்பானது. என் நட்பின் சிறப்பினை கூறும் பாடலாக,*

**'காண் இனி-வாழி,தோழி!_பானாள்,**
**மழைமுழங்கு ஆர்வம் கேட்ட, கழைதின்**
**மாஅல் யானை புலி செத்து வெரீஇ,**
**இருங்கல் விடரகம் சிலம்பப் பெயரும்**
**பெருங்கல் நாடன் கேண்மை இனியே,**
**(அகம்-232,5)**

*என்று அகநானூறு நட்பு பாராட்டுகிறது. தமிழர்கள் நட்பு பாராட்டுவதற்கும் இப்பாடல் உணர்த்துகிறது.*

## பழந்தமிழரின் திருமண பண்பாடு

*'மணம்' என்றால் 'கூடுதல்' என்பது பொருள். இதன் வேர்ச்சொல் 'மண்' என்றும் மண்ணுதல் என்றும் கழுவுதல், தொங்குதல், கலத்தல், கூடுதல், அழகு பெறுதல், மணத்தல், இணைதல் என பலபொருளும் வழங்க பெறுவதாக சொற்பொருள் அகராதிகள் விளக்கம் தருகின்றன. திருமணம் நிகழ்வு பற்றிய முக்கியத்துவத்தை வள்ளுவர் கூறும் குறள் பின்வருமாறு,*

**'உடம்போடு உயிரை என்ன மற்றன்ன**
**மடந்தையொடு எம்மிடை நட்பு'**
**(குறள்:1122)**

*என தலைவன், தலைவி உறவு முறையினைக் கூறுகிறார். அகநானூறு பாடலில் மகனைப் பெற்றெடுத்த தேவர் பொருந்திய அழகிய வயிற்றிலே உடைய தூய அணிகலன் அணிந்த மகளிர்கள் நால்வர் கூடி நின்றனர் கற்ப்பினின்றும் வழுவாவது நன்றாகிய பல வகைகளிலும் உதவியாக நின்று, நின்னை மனைவியாக பெற்ற நின் மணவாளனை பேணிக்காக்கும் துணை வியாக நீ ஆவாயாக! எனக் கூறி அவளை வாழ்த்தினர்.நீரோடு குளிர்ந்த இதழ்களையுடைய பூக்களையும் நெல்விதையும் கலந்து அவள் தலையிலே தூவினர். மிக்க கரிய அவள் கூந்தலிலே அவை குறுங்கே சேர்ந்து கிடந்தது. அங்ஙனம் மங்கள நீராடிய பின் வதுவை மனமும் நிகழ்ந்து முடிந்தது என்று அகநானூறு பாடலில்,*

**'புதல்வற் பயந்த திதலை அவ்வயிற்று**
**வால்இழை மகளிர் நால்வர் கூடிக்,**
**கற்பினின் வழாஅ நற்பல உதவிப் பெற்றோர்**
**பெட்கும் துணையை ஆக-என**
**நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி**
**பல்இருங் கதுப்பின் நெல்லோடு தயங்க**
**வதுவை நன்மணம் கழிந்த பின்றைக்.'**
**(அகம்-86.15,18)**

*என திருமண நிகழ்வினை அகநானூறு பாடலில் தமிழரின் பண்டைய திருமண நிகழ்ச்சிகளை முறையாக கூறியுள்ளது. இந்த மணவிழாவிலே சிலப்பதிகாரத்துப் போல மாமுது பார்ப்பன் மறைவழி காட்டிய நிகழ்ச்சியை ஏதுமில்லை.நல் நாள் பார்த்தல் புத்தாடை உடுத்துதல் பெருஞ்சோறளித்தல், மங்கல மகளிர் வாழ்த்தல்,தமர்அளித்தல் போன்ற வைகளே நிகழ்ந்துள்ளன.*

## விருந்தோம்பல் பண்பாடு

*தமிழர்களின் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த சிறப்பிற்குரியது தொல் காப்பியம். பெண்களுக்குரிய சிறந்த பண்புகளில் ஒன்றான விருந் தோம்பல் அமைந்தமையை,*

**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோர் மாண்புகள்**
**(தொல்-1102)**

*என தொல்காப்பியம் விருந்தின் மேன்மையினை கூறுகிறது. அக நானூற்றில் தந்தை மீன் பிடித்து கொணரும் முன்னே தந்தைக்கு உப்பு விற்ற பொருளால் சோறும் கறியும் ஆக்கிக் கொணர்பவர் எம் இன மகளிர் என்று பின்வரும் அகநானூறு பாடல் வரி உணரலாம்,*

**உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு**
**அயிலை துணர்ந்த அம்புளிச் சொரிந்து**
**கொழுமின் தடியொடு குறுமகள்**
**கொடுக்கும். (அகம்-60.5,6)**

எனத் தமிழர்களின் பண்பாடு என்பதை பரதவ மகளானவள் மெல்லினது அரிசி சோற்றில் அயிரை மீனை இட்டும் புளிக்கறியையும் கருவாட்டையும் உணவாக அளித்தாள் என்பதை விருந்தோம்பல் சிறப்பினை அகநானூறு படம்பிடித்துக் காட்டுகிறது.

## உடையில் பண்பாடு

சங்க காலத்தில் ஆடையில் தூய்மையையும் மென்மையையும் விரும்பினர். சங்க காலத்தில் மகளிர் தழையுடை மரவுரி ஆகிய இயற்கை ஆடை அலங்காரங்களையும் பருத்தியாலும், பட்டாலும் நெய்யப்பட்ட உடைகளையும் அணிந்திருந்தனர். ஆடை எடுப்பதற்கு முக்கியத்துவம் வாய்ந்தது பருத்தி. இதன் முக்கியத்துவத்தை பின்வரும் புறப்பாடல் உணர்த்துகிறது,

'கோடைப்பருத்தி வீடுநிறைபெய்த
மூடைப் பண்டம்' (புறம்-393)

என்று புறநானூற்றில் என் கிழிந்த ஆடையைக் களைந்து பகன்றையின் பூப் போன்ற நல்ல ஆடையைத் தருக. செல்வத்தையும் குறையின்றி ஈக பெருமானே என்று உடையிலும் பண்பாடு நிறைந்ததாக புற இலக்கியம் கூறுகின்றது.

தலைவன், தலைவி அன்பில் வெளிப்படும் பண்பாடு.

தலைவன் பொருள் தேடுவதற்காக தலைவியை விட்டு பிரிந்து செல்வது என்பது தமிழர் மரபு அவ்வாறு செல்லும் தலைவன் மீண்டும் வீடு திரும்பும் வரை தலைவனையே நினைத்து கற்பு நெறியாக தலைவி இல்லத்தில் இருப்பாள். அந்நிகழ்வு இருவரின் அன்பின் பண்பாட்டாக வெளிப்படுகிறது.என்பதை பின்வரும் அகப்பாடல் வழி அறியலாம்.

**'அலங்கல் அம்சினைக் குடம்பை புல்லெனப்**
**புலம்பெயர் மருங்கிற் புள்எழுந் தாங்கு,**
**மெய்இவண் ஒழியப் போகி, அவர்**
**செய்வினை மருங்கிற் என் உயிரே!'**
**(அகம்-113.25-27)**

என்ற பாடல் பருத்த அடிமரத்திலே கிளைத்த அசையும் அழகிய கிளையிலே யுள்ள தன் கூடானது தனித்து ஒழியத் தான் பெயர்ந்து போக எண்ணிய புலத்திடத்தினை நோக்கிப் பறவையானது புறப்பட்டுச் சென்றாற் போல, என் உடலானது இவ்விடத்தே கிடந்து தனித்து ஒழியுமாறு கைவிட்டு, என் உயிரானது அவர் வினைசெய்து கொண்டிருக்குமிடத்திற்கே புறப்பட்டுப் போவதாக! என்று தலைவன் பிரிந்து சென்றாலும், தலைவி தன் நெஞ்சினை தேற்றும் பொருட்டு அழாதே பொறுத்திருத்தலுக்கும் உரியவர் ஆவோமே! என்று அன்பில் வெளிப்படும் பண்பாட்டை அகநானூறு கூறுகிறது.

## முடிவுரை

எட்டுத்தொகை நூல்களும் ஒன்றான அகநானூறு அகம் சார்ந்த கருத்துக்களின் பண்பாட்டையும் கூறுகிறது. நட்புக்கு இலக்கணமாக நீதி நூல்களில் பல கருத்துக்கள் இடம்பெற்றாலும், அகநானூற்றில் நட்பின் பண்பாடு வெளிப்படுகிறது. தமிழர் முக்கிய நிகழ்வான திருமண நிகழ்ச்சியில் வெளிப்படும் பண்பாடும் அகம் கூறுகிறது. விருந்தோம்பல், ஆடை, தலைவன் தலைவியின் அன்பில் வெளிப்படும் பண்பாடு போன்றவைகளை அகநானூறு கூறும் இலக்கியப் பண்பாடுகளை இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் தெளிவாக உணர்ந்து கொண்டோம்.

## பார்வை நூல்கள்.

1. கலித்தொகை--உரை: புலியூர்க் கேசிகன் சாரதா பதிப்பகம் சென்னை – 600014.

2. அகநானூறு–உரை:புலியூர் கேசிகன் சாரதா பதிப்பகம் சென்னை – 600014.

3. திருக்குறள்– திருவள்ளுவர்

4. தொல்காப்பியம் – தொல்காப்பியர் கழக வெளியீடு.

5. புறநானூறு–உரை: புலியூர் கேசிகன் சாரதா பதிப்பகம் சென்னை – 600014.

## அடிக் குறிப்புகள்.

1. கலி.பாடல் எண்: 133, 8
2. அகம் பா.எண்: 232,5
3. குறள்எண்:1122 அதிகாரம்113.
4. அகம் பா.எண்: 60,15–18.
5. தொல் நூற்பா:1102
6. அகம் பா.எண்:60,5–6
7. புறநானூறுபா.எண்:393,12–13
8. அகம் பா.எண்:113,25–27.

# மோகனாங்கி - தஞ்சைப்படையெடுப்பு (சமயங்களை முன்வைத்து)

நெறியாளர்:
**முனைவர்**
**தா. இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி**
உதவிப் பேராசிரியர்

**ப. மரியதேவநேசம்**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் கலையியல்புலம்,
எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம்
காட்டாங்குளத்தூர் - 603203

## முன்னுரை :

கதைகள், அவை கூறும் கருத்துக்களுக்கு ஏற்ப, பல்வேறு வகைகளாக உள்ளன. அவற்றுள் வரலாற்றை உள்ளடக்கிப் புனையப்படும் புதினங்கள் வரலாற்றுப் புதினங்கள் எனப்பட்டன. இவற்றிற்கு ஆரம்பப் புள்ளியாக அமைந்தது, 1895– இல் வெளிவந்த, தி.த. சரவண முத்துப்பிள்ளையின், மோகனாங்கி எனும் புதினமே ஆகும். இப்புதினம், நாயக்கர் கால வரலாற்றின் ஒரு சிறுபகுதியை எடுத்துக்காட்டுகிறது. மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கர் வாழ்வின் ஒரு முக்கிய நிகழ்வான, தஞ்சாவூர் படையெடுப்பு குறித்து இப்புதினம் விரிவாக விவரிக்கிறது. இப்புதினத்தின் ஆசிரியர், தி.த. சரவண முத்துப்பிள்ளை, சுவடியியல் நூலகத்தில் பணிசெய்தக் காலத்தில், அவர் தெரிந்து கொண்ட தகவல்களைக் கொண்டு, ஒரு ஆய்வின் அடிப்படையில், எழுந்ததே, இப்புதினம் ஆகும்.

## சரவணமுத்துப்பிள்ளை:

இலங்கையை சேர்ந்த சரவண முத்துப்பிள்ளை, 1864 – 1896 கால கட்டத்தில் வாழந்து வந்தவர் ஆவார். இவர் தனது இளமைக்கல்வியை இலங்கையில் முடித்துவிட்டு, சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும், பிரசிடென்சிக் கல்லூரியிலும் படித்து தத்துவத்தில் பட்டம் பெற்றார். பின்னர், சென்னை பிரசிடென்சிக் கல்லூரியின், கீழ்த்திசை சுவடியியல் நூலகத்தின் பொறுப்பாளராகப் பணியாற்றினார். இவர், முத்துக் குமாரசாமி இரட்டை மணிமாலை, தமிழ்பாஷை, தத்தை விடு தூது முதலியன இவரது படைப்புகள்.

## மோகனாங்கி:

தனது நாட்டின் நலன்கருதி தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிராப் பள்ளிக்கு (திருச்சி) மாற்றிய மதுரை மன்னர், சொக்கநாத நாயக்கர் பிறநாடுகளின் நிர்வாகங்களைக் குறித்து தெரிந்துகொள்ள எண்ணி, மாறு வேடத்தில் தஞ்சையை நோக்கிச் செல்கிறார். அங்கு தஞ்சை இளவரசி மோகனாங்கி மீது காதல் வயப்படுகிறான். அவளும் தன்மீது காதல் வயப்பட்டதை அறிந்து கொண்ட மன்னன், அவளைப் பெண் கேட்டு, தூது அனுப்புகிறார். ஏற்கனவே மோகனாங்கியை மணக்க எண்ணியிருந்த அவளது மாமன்மகன் அரங்கநாதர், கோவிந்தாச்சாரியார் உதவியுடன் அந்த தூதை ஏற்கா வண்ணம் மன்னனின் மனதை மாற்றிவிடுகிறார்.

இதனால் இருநாடுகளுக்கும் இடையே போர்மூளுகிறது. இறுதியில், திருச்சினாப்பள்ளி படைகளே வெற்றி பெறுகிறது. தோல்வி தன்னை நெருங்கு வதைக் கண்ட தஞ்சை மன்னர் விஜயராகவ நாயக்கர், அந்தப்புரத்தை தீ வைத்துக் கொளுத்திவிட்டு, தானும் போரிட்டு வீரமரணம் அடைகிறான். அங்கிருந்து தப்பிச் சென்ற மோகனாங்கி, சொக்கநாதருடன் திருச்சினாப் பள்ளிக்குச் செல்கிறாள். இருவருக்கும் திருமணம் நடைபெறுவதோடு புதினம் நிறைவு பெறுகிறது.

## வரலாற்றுப் பின்னணி :

விஜயநகர பேரரசினை ஆண்ட முக்கியமான இராசப்பரம்பரையினர், நாயக்கர்கள் ஆவர். இவர்களுள், வலிமையான பேரரசராகத் திகழ்ந்தவர், கிருஷ்ண தேவராயர் ஆவார். இவருக்குப் பிறகு, விஜயநகரப் பேரரசு சிதறுண்டுப்போனது. அதன் சில பகுதிகளாகத் திகழ்ந்தவையே, மதுரை, தஞ்சை, செஞ்சி நாயக்க அரசுகள். மதுரையைத் தலைநகராகக் கொண்டு, 1600 – களில் ஆட்சிசெய்த நாயக்கமன்னர் சொக்கநாத நாயக்கர், மதுரை நாயக்க வரலாற்றில் ஒரு முக்கியப்புள்ளியாகத் திகழந்தவர் ஆவார். இவரது காலத்திலேயே, மதுரை ஆட்சி ஆட்டம் காணத்தொடங்கியது. தனது நாட்டில் பிறர் ஆட்சி நுழைவதை விரும்பாத இவர், தனது நாட்டைப் பாதுகாக்க வேண்டி, தலைநகரை மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றினார். எனினும், அந்நாட்டைக்காக்க இயலவில்லை. சுல்தானியப் படைகள் அவ்வப்போது தங்களின் கைவரிசையைக் காட்டிக் கொண்டே இருந்தனர். இவர்களின் தொல்லையைப் பொறுக்க இயலாமல், பெரும் பணம்கொடுத்துப் போரைத் தடுத்துக் கொண்டே வந்தார். எனினும், அவர்களுக்கு உதவியாய் இருந்த தஞ்சையை கட்டுக்குள் கொண்டுவர எண்ணி தஞ்சை மீது படையெடுத்தார். இதற்கு வேறொரு காரணமும் இருந்தது. தனது இருபத்து இரண்டாம் வயதில் தனது தளவாயான இலிங்கம நாயக்கரின் மகள் மங்கம்மாவைத் திருமணம் செய்து கொண்டப்பின்னர், எட்டு ஆண்டுகள் கழித்து, தஞ்சை நாயக்கர் விஜயராகவ நாயக்கரின் புதல்வியையும் மணக்க எண்ணினார். விஜயராகவர், அதற்கு உடன்பட மறுத்ததால் சொக்கநாதர் தஞ்சையைத் தாக்கினார்.

## சொக்கநாதரின் தூதும் சமயப் பூசலும் :

மனித மனம் நிலைகொள்ளாதது. அதைக் கட்டுப்படுத்தி வைக்க உதவும் வழிமுறையே சமயங்கள் ஆகும். தமிழ்நாட்டில் பலதரப்பட்ட சமயங்கள் காணப்பட்டன. அவற்றுள், முதன்மை யாகக் காணப்பட்ட சமயங்கள், சைவமும் வைணவமும் ஆகும். சமணமும் பௌத்தமும் தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்தியக் காலக்கட்டத்தில், சைவமும் வைணவமும் சிறிது வலிமை இழந்து காணப்பட்டன. பின்பு, நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றிய காலத்து சமண, பௌத்த சமயங்கள் தங்கள் ஆதிக்கத்தை இழந்தன. சைவம் மற்றும் வைணவம் இடையிலான சண்டைகள் மற்றும் விவாதங்கள் புதிதல்ல. ஒரு நாட்டில் சைவம், வைணவம் இரண்டும் மன்னனால் வேறுபாடு இல்லாது மதிக்கப்பட்டாலும், சைவர் களுக்கும் வைணவர்களுக்கும் இடையே சிறுசிறு பூசல்கள் நிகழ்வது வாடிக்கையாயிருந்தது. மோகனாங்கி புதினத்தில் இதனைக் காணலாம்.

மதுரைநாயக்கப் பரம்பரையில் வந்த முத்து வீரப்ப நாயக்கரின் மகனான சொக்கநாத நாயக்கரின் குடும்பத்தினர், சிவனை வழிபடும் சைவர்கள் ஆவர். அவரது காலக்கட்டத்தில் தஞ்சையை ஆண்ட மன்னர், விஜயராகவ நாயக்கர்.

இவரது குடும்பத்தினர், இரங்கநாதரை (பெருமாள்) வழிபடக்கூடியவர்கள். விஜயராகவ நாயக்கர், தனது அரசாங்க அலுவல்களைக் கவனிப்பதைவிட, இரங்க நாதரை வழிபடுவதையே தனது வாழ்வின் முக்கியமான குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

"அவர் மனமெல்லாம் ரங்கநாதர் மேலிருக்கேயொழிய இராச்சியத்தின் மேல் சிறிதுங் கவனங் காணோம்."

அந்தணர்களைப்பெரிதும்மதிப்பது மட்டுமின்றி, எந்தவொரு செயலைச் செய்வதாயினும் அவர்களுடைய ஆலோசனை யின்றி எதுவும் செய்யார். அவருடைய இந்த குணத்தைப் புரிந்து கொண்ட கோவிந்தாச்சாரியார் எனும் அந்தணன், மன்னனை தனது தனிப்பட்ட நன்மைக்காக பயன்படுத்திக் கொண்டான். எனினும், மன்னன் மீது உண்மையான அன்போ மரியாதையோ கொண்டவரல்லர்.

"இவர்வாக்குப் பெரும்பாலும் விஜயராகவ நாயக்கருக்குத் தெய்வ வாக்குப் போன்றது. இவரை அரசன் மிகவும் கவுரவப்படுத்தி வந்தனன். ஆயின் இவர் தன்னயத்தைக் கருதிச் சகலதுஞ் செய்து வந்தவரே யொழிய அரசன்மேற் பட்சம் வைத்திருந்த வரன்று"

விஜயராகவரின் ஒரே மகள் மோகனாங்கி. மோகனாங்கியை மணம் புரியும் நோக்கத்துடன் தூதனுப் பிய சொக்கநாதரை, சைவர் எனும் காரணத்தைக் கொண்டு அவமானப் படுத்தி அனுப்பினார்.

"சொக்கநாதன் தன்னை மறந்தாப் போலிருக்கு. அல்லது போனால் அவ்வளவு தைரியமாகப் பெண் பேசி அனுப்பான். குரங்கின் கையில் பூ மாலையகப்பட்டாற் போல ஒரு இராச்சியம் தன் கையிற் கிடைக்கவே கண் மறைந்து போயிற்றா? "

இதன் மூலம் விஜயராகவரின் வைணவ உறுதி வெளிப்படுகிறது. இறுதியாக நடைபெற்றப் போரில் தோற்றப்பின்பும்கூட, தனது மகள் ஒரு சைவரை மணப்பதை விரும்பாத அவர், முழு அந்தப்புரத்தையும் வெடிமருந்து வைத்துக்கொளுத்தினார்.

## சமயம் ஒரு காரணம் :

மனிதர்கள் தங்களைப் பக்குவப் படுத்திக் கொள்ள சமயங்கள் உருவாகின. ஆனால், காலப்போக்கில் அவை மனிதனை அதற்குள்ளாக ஆழ்த்தி விடுகின்றன. பிறர் மீது அன்பு கொள்வதே சமயத்தின் சாராம்சம் என்பதை அறியாத மனிதன் பிற மனிதர்களை வெறுப்பதற்கு ஒரு காரணமாக அதை பயன்படுத்திக் கொள்கிறான் என்றே சொல்ல வேண்டும். தஞ்சையைப் போலவே ஒரு அரசின் தலைவனான, சொக்கநாதர், தன்னிடம் பெண் கேட்டு அனுப்பும் போது, வேறு எந்த குறையும் இல்லாத பொழுது சமயம் என்பது அங்கு ஒரு தடைக்கல்லாக இருந்தது.

" திருச்சினாப்பள்ளியிலே சொக்க நாதரிருக்கிறாரே அவருக்குச் செய்தாலென்ன?"

"சொக்கநாதருக்கு கொடுப்பது சிறப்பாயிராது. உங்கள் வமிசமெங்கே அவர்கள் எங்கே? ஆனையும் பூனையும் போலல்லவோ இருக்கும்ஞ் நாம் இழிந்த இடத்திலே வேண்டுமாயிருந்தால் பெண் கொள்ளலாம். பெண்ணைக் கொடுப்பது மாத்திரம் உயர்ந்தவர்களுக்காவது சமமானவர்க்காவது கொடுக்க வேணும். நாமொருகாலும் மோசம் போகக்கூடாது. அவரது குலமோ உயர்ந்த குலமல்ல... இதெல்லாந்தவிர அவர் சைவனாச்சே. ஒரு வைஷ்ணவப் பெண்ணைக் கொண்டு போய்ச் சைவனுக்குக் கொடுப்பது

போல மகாபாதகம் வேறுண்டோ? ”

சைவருக்கு வைணவப் பெண்ணைக் கொடுப்பதைக் காட்டிலும் அவள் சாதல் நலம் என எண்ணும் எண்ணம் தோன்றும் அளவிற்கு சிலர், சமயங்கள் குறித்த ஒரு தவறானப் புரிதலை மக்களிடையே ஏற்படுத்தி வைத்துள்ளனர். இதுவெறும் தன்னலமே ஒழிய வேறில்லை. தன்னைப் பிறர் முன்பு உயர்ந்தவனாகக் காட்டிகொள்ள விரும்பும் ஒருவனே, இவ்வாறான எண்ணங்களை ஏற்படுத்துகிறான். அதனால் குழம்பும் மனிதர்கள், அவர்களை விட, தனது மரியாதை என்பது தனது சமயத்தை நாம் கட்டிக் காப்பதிலேயே உள்ளது என நம்புகிறார்கள்.

“சொக்கநாத ரென்னமோ பெண்ணைக் கேட்டு வரப்போகிற தில்லை. அவர் தானாரென்பதை மறந்து பெண்ணைக் கேட்க வேணும். அப்படிக் கேட்டனுப்பினால் அது நமக்குப் பெரிய அவமரியாதை செய்ததாகும். ஏன் அம்மணி, நான் தான் ஒரு பிராமணனிருக்கிறேன். ஒரு சூத்திரன் வந்து என் வீட்டிலே பெண்ணைக் கேட்டால் அது எனக்கு எவ்வளவு மரியாதை செய்ததாகும். அப்படியொருவன் துணிந்து கேட்டால் இராசாசும்மா விட்டுவிடுவாரா?”

பிற மனிதர்களை உடலளவிலோ மனதளவிலோ துன்புறுத்தல் பெரும் பாவம், அது சமயத்தையே இழிவுபடுத்தும் செயலாக இருக்க, அத்தகைய கொடும் செயலை குற்றவுணர்வின்றி சிலர் தங்களின் நலத்தை மட்டுமே எண்ணி செய்கின்றனர்.

## முடிவுகள் :

தன்னலம் கருதும் சிலரால் ஒரு நாடே அழிந்த கதை தான் மோகனாங்கி. சமயத்தை சமயமாக மட்டும் பார்க்கும் ஒரு கண்ணோட்டம் இருந்திருந்ததாயின் இப்போர் அங்கு எழுந்திருக்க வாய்ப்புகள் குறைவு. சமயப்பற்று என்பது மனிதனிடம் இருக்க வேண்டிய ஒன்றே! அதுவே அவனை நிலைப்படுத்தும். ‘அன்பே சிவமாவதாரும் அறிந்த பின், அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே’ அன்பே சமயத்தின் அடிப்படை என்பதை அறிந்தபின், அன்பு ஒன்றே உயர்ந்த தாயிருக்கும்.

## துணைநூற்பட்டியல்


தி.த. சரவணமுத்துப் பிள்ளை, மோகனாங்கி, 2023, சென்னை – 77.

வே.தி. செல்லம், தமிழக வரலாறும் பண்பாடும், 2017, சென்னை – 108.

குடவாயில் பாலசுப்ரமணியன், தஞ் சாவூர், 2009, தஞ்சாவூர் – 613 007.

அ. ராமசாமி, தமிழ்நாட்டு வரலாறு, 2011, சென்னை – 98.

அ.கி. பரந்தாமனார், மதுரை நாயக்கர் வரலாறு, 1966, சென்னை – 01.

# குறுந்தொகையில் மக்கள் வாழ்வியல்

நெறியாளர்: முனைவர் பெ. இந்துராணி
உதவிப்பேராசிரியர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

ஆய்வாளர் சே. மலையரசன்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

## முன்னுரை

மனித வாழ்வினை படம் பிடித்து காட்டும் உன்னதப் பணியை இலக்கியங்கள் மேற்கொண்டு வருகின்றன. இலக்கியத்தைக் காலத்தின் கண்ணாடி என்று அழைக்கலாம். இவ்வகையில் சங்க இலக்கியங்கள் முழுமையும் தமிழர்களின் ஒப்பற்ற வாழ்வியலை படம் பிடித்து காட்டும் வண்ணம் அமைந்துள்ளன. கடைச்சங்க காலத்தில் உருவான தொகை நூல்களில் குறுந்தொகை அகவற்பாவால் அமைந்த அகப்பொருள் பலவாகும். நல்ல குறுந்தொகை என பாராட்டப்படும். இந்நூலில் அன்பின் ஐந்திணை, முற்பொருள் இயற்கை, தமிழர் வாழ்வு போன்ற அனைத்து நிலைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் பண்டைய கால தமிழர்களின் அகஒழுக்கங்களையும், புற ஒழுக்கங்களையும், பழக்க வழக்கங் களையும், பண்பாடுகளையும் திறம்பட எழுதி உள்ளது. முற்காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் வாழ்வியலை செம்மை யாக இயக்கி வந்தனர். அவ்வகையில் தமிழர்களின் வாழ்வியல் கூறுகளை குறுந்தொகையில் எடுத்து இயம்பி வந்துள்ளது என்பதை இனம் காணும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

## இல்லறச் சிறப்பும் இனிமையும்

இல்லறம் என்பது சமூக கட்டமைப்பாகும். காதலர்கள் இருவரும் கணவன் மனைவியாகும் பொழுது குடும்பம் எனும் கட்டமைப் பிற்குள் வருகின்றனர். இல்லற வாழ்வு சிறக்க இனிமை பெற கணவன் மனைவி இருவரும் விட்டுக் கொடுத்தல் புரிந்துணர்தல் போன்ற உன்னத பண்பினை மேற்கொள்பவராக இருத்தல் வேண்டும். கற்பொழுக்கத்தில் தள்ளப்பட்ட கணவன் மனைவியின் மாண்பினை பின்வரும் பாடல் நன்கு புலப்படுத்துகின்றது.

> “முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
> சுழூவுறுகலிங்கம் கழா அது உழக்
> குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
> தான் னுழந் தட்ட தீம்புளிப் பாகர்
> இனிது தெனக் கணவ னுண்டலின்
> நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல்
> முகனே” (குறுந் 167)

இப்பாடலில் மனைவி சமைத்த உணவு சுவையாக இருப்பதாக கணவன் பாராட்டி மகிழ்கின்றான். இல்லறம் சிறக்க வாழ்வில் ஒருங்கமைவோடு பயணிக்க கணவன் மனைவி ஒரே கோட்டில் பயணித்தால் நலம் விளையும் என்பதை இப்பாடல் புலப்படுத்துகின்றது.

## விருந்தோம்பல்

தமிழர்களின் தலைசிறந்த பண்பாக விருந்தோம்பலை கொள்ளலாம் தம்மை

நாடிவரும் விருந்தினரின் மனம் மகிழும்படி உணவளிக்க மகிழ்வது தமிழர்களின் உயர்ந்த குணமாகும் விருந்தோம்பல் வாழ்வியல் அறங்களில் ஒன்றாக பணிக்கப்பட்டுள்ளது. குறுந் தொகைப் பாடலில் புதிய விருந்தினர் வருகையை காக்கை உணர்த்துவதாகவும் விருந்தினரை எதிர்பார்த்து வரவேற்கும் குணம் கொண்டவர்களாக தமிழர்கள் விளங்கியதைக் காணமுடிகிறது.

**“திண்தேர் நள்ளி கானத்து அண்டர்**
**விருந்துவரக் கரைந்த காக்கையது**
**பலியே”** (குறுந்210)

## கல்வியைப் போற்றுதல்

சங்க கால தமிழர்கள் வாழ்க் கையில் காதலும் வீரமும் கல்வியும் செல்வமும் சிறந்தோங்கி செழுமையுற்று விளங்கினர். கல்வியின் பெருமையை நன்கு உணர்ந்திருந்தனர். எனவே தான் வள்ளுவப் பெருந்தகையும் ஒளவை பாட்டியும் கல்வியின் சிறப்பை பலரும் போற்றுகின்றனர்.

**“அன்னாய்! இவ்வோர்இளமாணாக்கன்**
**தன்னூர் மன்றக் தென்னன் கொல்லோ?”**
(குறுந்-33)

என்ற பாடல் அடியில் கல்வி பயின்றால் மட்டுமே வறுமையிலிருந்து விடுபட்டு தன் சொல்லாட்றலால் செல்வமும் புகழும் பெற முடியும் என தலைவி தோழிக்கு உரைக்கிறாள்.

## பண்டமாற்றும் பண்பாடு

சங்ககாலத்தில் ஒரு பொருளுக்கு நிகராக மற்றொரு பொருள் பண்ட மாற்றம் செய்யப்படும் என்பது திணை அடிப்படையில் அமையும்.ஒரு திணையில் சென்று பண்ட மாற்றம் செய்யும் வழக்கம் இருந்தது. அதன் அடிப்படையில் குறுந்தொகையிலும்,

**“உப்பை மாறி வெண்ணெல் த்ரீ இய**
**உப்புவிளை கழனிச் சென்றனள்”**
(குறுந் 269)

உப்பை விற்று வெண் ணெல்லை வாங்கி வரும் பொருட்டு உப்பு விளையும் களத்திற்குச் சென்றாள். என்ற கூற்றிலிருந்து உப்பிற்கு நிகராக வெண்ணெல் பண்டமாற்றம் செய்யப் படுவதை அறிய முடிகிறது.

### உடை

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உணவுக்கு அடுத்தார் போல் இடம்பெறுவது உடையாகும். உடை மனிதனுக்கு மானத்தைக் காக்கும் கவசம் போன்றது. குறுந்தொகையில் தழையினால் ஆள உடையை உடுத்தினர் என்பதனை,

**“கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சி”**
(குறுந் 80)

கூந்தலைப் போன்ற நெற்றிப் பிடையுடை ஆம்பலின் முழுமையான செறிந்த இலைகளைத் தளையாடையாக உடுத்தியதனை அறிய முடிகிறது.

**“அயவெள் ளாமல் நெறித்தழை**
**தித்திக் குறங்கின் வளழ்மாறு அலைப்ப”**
(குறுந் 293)

என்ற பாடலின் மூலம் பரத்தை ஆம்பலினால் ஆன ஆடையை அணிந்தமையை அறிய முடிகிறது.

## பொருள்வயிற் பிரிதல்

சங்ககாலத்தில் தலைவன் பொருளினை தேடி பிரிந்து சென்று பொருளீட்டு தேடி வந்தபின் தலைவியை மணந்து கொள்ளுதல் மரபு. தலைவன் பொருள் வயிற் பிரிந்து செல்வது தலைவிக்குத் துயரம் தருவதாக கூறுவதில் இருந்து தலைவன் பொருள் வயிற் பிரிதலினை,

**“பொருள் வயிற் பிரிவார் ஆயின் இவ்**
**உலகத்துப்**

பொருளே மன்ற பொருளே
அருளே மன்ற ஆகும் இல்லதுவே"
(குறுந் 174)

என்ற பாடலின் வழி இவ்வுலகில் எல்லோகும் உயர்வாக ஏற்றுக் கொள்வது பொருள் ஒன்றே தான் சுருத்தைப் பெற முடிகிறது. தலைவன் தலைவி மீது அருளுடையார் ஆயினும் பொருளின் பொருட்டாக தலைவியைப் பிரிந்து செல்வது தகாது என்ற கூற்றின் வழிப் பொருள் வயிற் பிரிவினை அறிய முடிகிறது.

## நம்பிக்கையே வாழ்க்கை

"புனவன் கூடவைப் பொன் போல்
சிறுதினை" (குறுந் 133)

என்ற பாடலில் கிளி உண்டதால் துண்டாகி நின்ற தினைப் பயிர் மழையில் தளைதார் போல தன் தலைவன் தன்னை மணந்தால் தான் மீண்டும் வரம் பெறுவேன். "இழந்த நலனையும் பெறுவேன் என்பது தலைவி கூற்று வலிமை நீங்கிய போதிலும் சாகாமல் இன்னும் உயிரோடு இருப்பதற்கு காரணம் நம்பிக்கையே, வாழ்க்கைக்கு அடிப்படை என்பதை உணர்த்துவதற்காகத்தான் என்கிறாள் தலைவி.

## தலைக் கட்டுதல்

"தண்டுடைக்கையர், வெண் தலைச்
சிசுவலர்" (குறுந் 146)

என்ற பாடலில் திருமணம் தொடர்பான பேச்சு வார்த்தை நடைப்பற்ற காலங்களில் பெரியோர்கள் தங்கள் தலைகளிலே துணியால் "தலைக்கட்டு கட்டி" கொள்ளும் நிலையை உணர்த்துகின்றது இதனால் பெரியோரை மணம் பேச விடும் அக்கால வாழ்வியல் நெறி உணர்த்தப்படுகிறது.

## உழவுத்தொழில்

மழையை எதிர்பார்த்து உழவு தொழிலை செய்த மனிதன் பின்பு ஏரி,குளம், அணை என்ற நீர்நிலைகளில் மழை நீரை சேமித்து உழவுத் தொழிலை செய்து வந்தனர்என்பதனை,

"அருவிப் பரப்பின் ஜவனம் வித்துப்"
(குறுந் 100)

என்ற பாடலில் குறிஞ்சி நிலத்தின் மலைகளில் இருந்து வீழ்கின்ற அருவிநீரை உழவுத் தொழிலுக்கு பயன் படுத்தியதையும், ஐவனம் என்னும் நெல் விதைத்து களை நீக்கி அறுவடை செய்ததையும் அறிய முடிகிறது.

## கவண்கல் வீசுதல்

சங்க கால மக்கள் புள் விரட்டவும் போர் செய்யவும் தற்காப்புக்காகவும் பயன் படுத்திய ஒரு கருவியே கவண் கல்லாகும். தினைப்புனம் காப்போர் கவண் கல்லை வீசி ஒலி எழுப்பியதை,

"யானை மீண்டையேளே, என் நலனே, ஏனல் காவலர் கவண் ஒலி வெர் இ" (குறுந் 54)

என்ற பாடலின் மூலம் அறிய முடிகிறது.

## பரத்தமை ஒழுக்கம்

சங்க காலத்தில் பரத்தம்மை ஒழுகுதல் சமுதாயத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பரத்தம்மை ஒழுகுதல் இழிவு என சமுதாயம் கருதவில்லை. தலைவி மட்டுமே பரத்தமை ஒழுகுதல் இழிவு என கருதினால் இருப்பினும் பரத்தமை சென்று வந்த தலைவனை ஏற்றுக் கண்டு இல்லறம் நடத்தினாள். தலைவன் தன் தேரினை அலங்கரித்துச் சென்று இரவு முழுவதும் பாத்ததையரை ஒழுகினாள். விடிந்த பின் பரத்தம்மை ஒழுகிய அடையாளங்களுடன் தன் இல்லத்திற்கு பிரிந்து வரும் பொழுது தலைவி தலைவரின் செயல் மறந்து ஏற்றுக் கொள்ளுதல் உளவியல் ஆகும்.

"காலை எழுந்து கடுந்தேர் பண்ணி
வால் இழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்லல்உளரன்பெரிது என

மறு வரும் சிறுவன் தாயே
தெறுவக அம்ப இத்திணைப் பிறத்தல்லே" (குறுந்-45)

என்ற பாடலின் மூலம் அறிய முடிகிறது.

## முடிவுரை

குறுந்தொகையில் மனிதவாழ்வியல் அறங்கள் தொகுத்துரைக்கப்பட்டுள்ளது. தனி மனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு என அனைத்து கூறுகளையும் எடுத்தியம்பி யுள்ளது. தமிழர்களின் வாழ்வு சிறக்கவும் செழிக்கவும் நல்லதொரு வாழ்வியல் அறங்களை குறுந்தொகை எடுத்தியம்பி யுள்ளதை மறுக்க இயலாது

# அப்துல் ரகுமானின் ஆலாபனை கவிதையில் பண்பாட்டு மானிடவியல் பதிவுகள்

**முனைவர் பே.மஹேஸ்வரி,**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்முத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி, 642001, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

## முன்னுரை

தமிழ் இலக்கியம் நீண்ட நெடும் வரலாற்றை உடையது. காலத்தின் கண்ணாடியான இலக்கியத்தில் அவ்வக்கால தனிமனித மற்றும் சமூகம் சார்ந்த செயல்பாடுகள் உள்ளடக்கமாயின. காலமாற்றத்தின் விளைவால் மனிதனை நெறிப்படுத்தும் நீதி இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. பின் நாகரீக வளர்ச்சி வலுப்பெற, விஞ்ஞானம் உலகில் நடைபயில இலக்கியங்களின் உள்ளடக்கத்திலும் மாற்றம் ஏற்படலாயிற்று. இதுகாரும் மனிதனை நெறிப்படுத்திய இலக்கியங்கள் இக்காலகட்டத்தில் மனிதனை நெறிப்படுத்தலோடு சமூகத்தில் நிகழும் இன்னல்களைச் சுட்டிக்காட்டியும், தனிமனிதனை வழிப்படுத்தும் கருத்துக்களைக் கட்டாயப் படுத்தியும் அரசியல் தனிமனிதக் கலாச்சாரம் மாற்றம் பெற்று சுயநலத்தோடு செயல்படும் போக்கினையும் சுட்டிக்காட்டி, அதனை நெறிப்படுத்தியும் தன் செயலினைச் செவ்வனே செய்து வருகிறது. இவ் விலக்கியங்களில் காணலாகும் மனிதன் மற்றும் மனிதன்சார் கருத்துக்களை மானுடவியலின் துணை கொண்டு ஆராய்வது சரியானதாகும். அவ் வகையில் கவிதை இலக்கியங்களுள் சாகித்ய அகாதெமி விருது பெற்ற அப்துல் ரகுமான் அவர்களின் 'ஆலாபனை' கவிதை தொகுப்பிற்குள் இடம்பெற்றுள்ள மானுடப் பதிவுகளைப் பண்பாட்டு மானிடவியல் கூறும் பண்பாட்டு நெறிகளை எடுத்துரைக்கிறது இக்கட்டுரை.

## பண்பாடு

பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களிடமிருந்துப் மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. மக்கள் தலைமுறை தலைமுறையாக குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறை களும், பழக்கவழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு.

மனிதப் பண்பாடு ஒரு பொதுத் தன்மையைக் கொண்டிருந்தாலும், இடம், காலம் இனத்திற்கேற்ப தனக்கே உரிய தனிப் பண்புகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

> பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்.
> (கலி.பா.எ 133)

என்கிறது கலித்தொகை.

பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவற்றையும் மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும். என்பது மானிடவியலறிஞர் எட்வர்ட் பர்ண்ட் டைலரின் வரையறையாகும். (ப.மா.ப.152)

## பண்பாட்டு மானுடவியல்

மனிதனைப் பற்றிய அறிவியலான மானிடவியலின் பரப்பு கடலென விரிந்ததாகையால் அதில் ஈடுபடும் மானிடவியலார் அவரவர் விருப்பத்திற் கேற்ப ஒரு குறிப்பிட்ட பரப்பை மட்டும் முதன்மையாக எடுத்துக் கொள்கின்றனர்.

இதனடிப்படையில் மானிட வியலானது பின்வரும் நான்கு முதன்மை யான பிரிவுகளாகப் பாகுபடுத்தப் படுகிறது.

உடல்சார் மானிடவியல் (Physical Anthropology)

பண்பாட்டு மானிடவியல் (Cultural Anthropology)

தொல்லியல் (Anthropology)

மொழியியல் (Linguistics) *(ப.மா.68)*

இவற்றுள் உலகம் முழுவதும் எண்ணிலடங்கா வகையில் பரவி வழும் சமுதாயங்களின் பண்பாட்டைக் காலப் பரிமாணங்களுடன் ஆராயும் மானிடவியல் பிரிவே பண்பாட்டு மானிடவியலாகும்.

## ஆலாபனை கவிதைத் தொகுப்பில் மானிடவியல் பதிவுகள்

### அன்புத்தத்துவம்

உலகில் அனைத்தையும் வெல்லக்கூடிய திறன் அன்பு என்ற ஆயுதத்திற்கே உண்டு. எதிரையையும் நட்பாக்கிக் கொள்ளக் கூடிய இவ்வாயுதம் மனிதனின் சுயமரியாதையைச் செழிக்க வைப்பது. மேலும், மனிதனை மனிதனாக வாழவைக்கும் ஆசான். அகிம்சையால் அனைத்தையும் மாற்றும் திறன் இதற்கே உண்டு. இறைவனும் அன்பும் என்ற தூண்டிலில் சிக்கிக்கொள்கிறான் என்பதனை,

**அன்பு**

**........**
**மர்மங்களைப்/ பூட்டி வைத்திருக்கும்**
**வாழ்க்கைக் குகையின்/ வாசற்கல்லைத்**
**திறக்க அதுவே,**
**சீசேம் மந்திரமாக இருக்கிறது/**
**சகலமும் அதனால் வந்தவை**
**சகலமும் அதற்காக வந்தவை/**
**அந்தத் தூண்டிலில் தான்**
**இறைவனும்/ சிக்கிக் கொள்கிறான்**

**(ஆலா.ப.72)**

என்ற கவி வரி விளக்குகிறது. இது குறிப்பிட்ட இனத்திற்கோ, நாட்டிற்கோ, மனிதருக்கோ அன்றி அனைவருக்கும் பொதுவான நடத்தையாகும். இது இயல்பாய் வெளிப்படுவது என்பதை இக்கவிதை வெளிப்படுத்துகிறது.

### எதிர்பார்ப்பும் நடைமுறையும்

குழந்தை உலகில் தோன்றியதும் அது யாராவது ஒருவரின் சாயலில் இருந்தாக வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் மறைமுகமாகக் கட்டாயமும் ஏற்பட்டுவிடுகிறது. காரணம் எவரொருவரின் சாயலிலும் இல்லை யாயின் பெற்றவளின் நடைமுறையில் தவறுள்ளதாய் உலகமத்தியில் எண்ணம் தோன்றி வாழ்வை அர்த்த மற்றதாக்கிவிடும். அதேபோல் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லையாயின் குழந்தை மீதுள்ள பற்று குறையத் தொடங்கி விடும். இது போன்ற உளவியல் ரீதியான குழப்பங்கள் ஏற்படக் கூடாது என்பதற்காகவே இயற்கை யிலேயே யாராவது ஒருவரின் சாயலில் தோற்றம் பெறுவது, நடைமுறை வாழ்வில் நிகழ்வது. மேலும் ஒருவரைப் போன்றுள்ளது இக்குழந்தை என்று கூறிக்கூறி அக்குழந்தையின் சுயம் இழந்து மாதிரியின் செயல்பாட்டைப்போல் செயல்படத் தொடங்குகிறது. இந் நிகழ்வினைக் கவிஞர்,

நீ பிறந்தவுடன்/ தொடங்கி விடுகிறது/
நீ யார் மாதிரி/ இருக்கின்றாய் என்ற
பிரச்சனை/ அப்பா மாதிரியோ/
அம்மா மாதிரியோ/ குறைந்த பட்சம்
தாத்தா மாதிரியோ/ நீ இருந்தாக வேண்டும்.
/இங்கே/
நீ நீயாக இருப்பதை யாரும்
விரும்புவதில்லை. (ஆலா.ப.80-81)

என்ற கவி வரி விளக்குகிறது. இம்மனநிலை மனிதர்கள் மத்தியில் வெளிப்படையாகத் தெரிகிறதா? இல்லை. உள்ளார்ந்து இருக்கின்ற பொதுக்குணமாக உள்ளது. இக்குணம் ஏதாவது ஒரு சூழ்நிலையில் வெளிப்பட்டு ஒரு சில அடிப்படை குணங்கள் மனிதருக்குப் பொதுவானது என்பதனைத் தெரிவிக்கிறது. இது மனித சமுதாயத்தில் உறவின் சிறப்பை மேம்படுத்தாமல் சந்தேக உணர்வை வெளிப்படுத்துகிறது. இதுபோன்ற நிகழ்வுகளால் பண்பாட்டுச் சீரழிவு கூடாது என்பதை எடுத்துரைப்பதாகக் கவிதை அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

## நவீன வாழ்வு

வாழ்க்கையில் குறிப்பிட்ட சிறுசிறு நிகழ்வும் மனிதனை மகிழ்ச்சியின் ஆழத்திற்கு இட்டுச் செல்பவையாகவும், திரும்பப் பெற இயலாததாகவும் இருக்கின்றது. இன்றைய மனிதனின் மனப்போக்கு பணம் ஒன்றே மகிழ்வைக் கொடுக்கக் கூடியது என்றெண்ணி வாழ்வின் மகிழ்வைத் தொலைத்துச் சென்று கொண்டு இக்கிறது. இச்சூழ் நிலையினைக் கவிஞர்,

உன் மனைவி கொலுசில்
உன் குழந்தையின் சிரிப்பில்
உன் அண்டை வீட்டுக்காரரின்
கை அசைப்பில்
தெருவில் போகின்ற அந்நியனின்
திரும்பிப் பார்த்தலில்
வாழ்க்கையின் சங்கீதம் ஒலிக்கிறது
நீயோ கேட்பதே இல்லை (ஆலா.ப.40)

என்று அனுபவிக்காத வாழ்வின் மகிழ்ச்சி தரும் நிகழ்வினைக் கூறி மனிதனின் மனப்போக்கினை எடுத்துரைக்கிறார். இப்போக்கானது இந்நவீன யுகவாழ்வில் அனைவரிடமும் காணக்கூடிய ஒரு பொதுவான நடத்தை முறையாக உள்ளது. இதிலிருந்து மனிதமனம் பணம் ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு கடிவாளமிட்டுச் சென்று கொண்டிருப்பதனை உணர்ந்து கொள்ள முடிகிறது.

## நிலையாமை மீதான பற்று

மனிதர்களின் மனம் கிடைக்காத ஒன்றின் மீது அதிகப்பற்றுக் கொள்ளும் தன்மையது. மேலும், எந்தப் பொருளின் மீது அதிகப்பற்று கொள்கின்றானோ அப்பொருள் ஒவ்வொருவரிடமும் நிலைத்து நிற்கும் தன்மையற்றதாகவே இருக்கும். தன்னிடம் நிலைத்து நிற்கும் ஒன்றின் மீது அதிகப் பற்றுக் கொள்வ தில்லை என்பதனைக் கவிஞர்.

பறிபோகதவற்றின் மீது பிரியம்
உண்டாவதில்லை (ஆலா.ப. ப.120)

என்ற கவி வரி வழி விளக்குகிறார். எல்லா மனிதருக்கும் நிலைத்து நிற்கும் தன்மையற்ற செல்வத்தின் மீதும், இளமையின் மீதும், அழகின் மீதும் அதீத பற்று இருக்கவே செய்கிறது. துறவிகள் கூட முன் பற்றுக் கொண்டு அவை நிலையற்றது என்பதனை உணர்ந்து பின் பற்றினை முற்றிலும் துறந்தவராகவே வாழ்கின்றனர். ஆக, மனிதராகப் பிறந்த அனைவருக்கும் நிலையற்ற பொருளின் மீது ஆசை கொள்வது பொதுக்குணமாகவே உள்ளது. ஆக நிலையற்ற பொருள் மீதுள்ள மனிதர்களின் பற்றினை இக்கவி வரி வழி அறிந்து கொள்ள முடிகிறது.

## வெற்றி தோல்வி

முரண்களால் போடப்பட்ட பாதையில் பயணம் செய்வதே வாழ்க்கை. இதில் இன்பத்தையும், துன்பத்தையும் ஒன்று போல் அனுபவிக்கும் மனம் மற்றும் திறனுடையவர்கள் மிகச்சிலரே. வெற்றியினால் பேரானந்தமும், தோல்வியினால் துவண்டும் போகின்றவர்களே ஏராளம். இவ்வகை பொது குணத்தினைக் கவிஞர்,

**வெற்றியோ ஒரு போதை/ அதில் தான்/**
**நாம் நம்மை இழக்கிறோம் /**
**தோல்வியே நீதான்**
**நான் சம்பாதிக்கும் பணம்/**
**வெற்றியைக் கூட/ அதனால்/**
**வாங்க முடியும். (ஆலா.ப.60)**

என்று, வெற்றிக்கு அடிமையாதல் மனிதனிடமுள்ள பொதுக்குணம். வெற்றியினால் கர்வமும் தோல்வியினால், தன்னம்பிக்கையையும் இழந்து விடக் கூடாது என்று குறிப்பிடுகிறார்.

## பழமையும் புதுமையும்

ஒரு குலத்திற்கு, இனத்திற்கு, சமூகத்திற்கு, நாட்டிற்கு என்ற தனித்தனி பொது வழக்குகள் நடைமுறையில் உண்டு. காலத்திற்குக் காலம் அவற்றில் மாற்றமும் புதுப்பித்தலும் நிகழும். கவிஞர் உலகத்தாருக்குரிய பொது வழக்காக,

**அறிந்தவனுக்கு/ எது பழமையோ**
**அதுவே/அறியாதவனுக்குப்/ புதுமை**
**(ஆலா.ப.90)**

என்கிறார். இக்கருத்து ஆறறிவுடைய அனைவருக்கும் பொதுவானதாகும். இக்கவி வரி மனிதனின் இருவேறு மனநிலையைப் புலப்படுத்துகிறது.

## மனிதன் அன்றும் இன்றும்

இன்றைய நவீனயுகம் மனிதனை இயந்திரமாக மாற்றிவிட்டது. மனிதனும் அதற்கு அடிபணிந்து வாழ்கிறான். நவீன வளர்ச்சி ஊடுருவாத கிராமங்களில் மனிதன் மனிதனாகவே வாழ்கிறான். விஞ்ஞான வளர்ச்சி கண்ட நகர்புற மனிதர்கள் ஆறாம் அறிவான சிந்திக்கும் திறனை இழந்து, மனிதப்பண்புகளை மறந்து ஐந்தறிவுடைய மிருகங்களாக ஏறத்தாழ மாறிவிட்டனர். இச்சூழ்நிலை யினைக் கவிஞர்,

**மலையின் மேல் இருந்த/ ஆதிமனிதனே,**
**நீ காட்டில்/ மனிதனாய் இருந்தாய்/**
**நாமும் நாட்டில்/**
**மிருகங்களாய் இருக்கிறோம்.**
**(ஆலா.ப.152)**

என்ற கவி வரி மூலம் எடுத்துரைக்கிறார். நாகரிகத்தின் வளர்ச்சியினால் பெரும் பான்மையினரின் வாழ்க்கை முறை மாற்றம் பெற்று, மனிதப்பண்புகளை இழந்து வாழ்வதான இக்கவிவரி விளக்குகிறது.

## வாழ்க்கைத் தத்துவம்

வாழ்க்கை என்பது இரு வழிப்பாதை கொண்டது. இதில் இன்பம், துன்பம், என்ற இருவழியைக் கடந்தே தீர வேண்டும். துன்பம் இருந்தால் தான் இன்பத்தின் தன்மையை உணர முடியும். ஆனால், மகிழ்ச்சியை ஏற்கும் மனம் துன்பத்தினை ஏற்கத் தயாராக இல்லாமல் துன்பத்தினை எதிர் கொள்ளும் திறனற்று தானாக வாழ்வை முடித்துக் கொள்கிறார்கள். இப்போக்கினை மாற்ற இலக்கியங்கள் இன்பம், துன்பம் வெற்றி தோல்வி நிறைந்ததே வாழ்க்கை நெறி என்று கூறி தன்னம்பிக்கையை ஊட்டுகின்றன. ஆனால், கவிஞர் அப்துல் ரகுமானேோ ஒரு படி முன் சென்று,

**போராட்டமே/ உன்னைக் கூர் தீட்டும்/**
**சாணக் கல்லாய் இருக்கிறது,**
**ஒவ்வொரு/ போராட்டத்தின் போதும்/**
**நீ புதிதாகப் பிறக்கின்றாய்**
**ஒவ்வொரு/ போராட்டத்திற்குப் பிறகு**

**உனக்கே நீ தெரிகிறாய்/**
**உன்னிலிருந்து உதித்த நீ /**
**உன்னைவிட வலிமையான நீ/**
**உன்னை விட உயர்ந்த நீ/**
**புதிய நீ. (ஆலா.ப.87)**

என்று அன்றாடமும் இயந்திரமாய் இயங்கப் போராட்டம் தேவை என்று கூறுகிறார்.

## மானுடச் செழிப்பே உலகச் செழிப்பு

மனிதன் விலங்கின் பரிணாம வளர்ச்சியே. சிந்திக்கும் திறன் ஒன்றே மனிதனை விலங்கினத்திலிருந்து வேறுபடுத்துகிறது. ஆனால் மனிதன் சிந்திக்கும் திறனை இழந்து வாழ்கிறான். இப்போக்கினை மாற்ற கவிஞர்,

**பறவைகளின் சுதந்திரத்தை/**
**விலங்குகளின் கள்ளங் கபடமற்ற தன்மையை/**
**மனிதன் கற்றுக் கொண்டிருக்கலாம்/**
**இந்த உலகம்/ அழகாக இருக்கும்.**
**(ஆலா.ப.111)**

என்கிறார். வீடு தொடங்கி நாடு வரை எல்லை வகுத்தும் ஒவ்வொரு செயலுக்கு கட்டுப்பாடுகள் விதித்தும். சுயம் என்ற ஒன்றை இழந்து வாழும் போக்கினை மாற்றவே பறவைகளைப் போல் எங்கும் கட்டுப்பாடுகள் இன்றி எல்லை வகுக்காது சுதந்திரமாக வாழ நெறிப்படுத்துகிறார். மேலும், விலங்குகள் தனக்கென்று பதுக்கலையோ, பிறரை வருத்தி வாழ்வதோ இல்லை. கள்ளம் கபடமில்லாது வாழும் விலங்கின் குணத்தினை சுயநலமே உருவமாக, படுக்கலே மூச்சாக பிறரை வருத்தி தான் வாழும் மனிதன் கற்றுக் கொண்டால் உலகம் அழகுடையதாக அமையும் என்கிறார். ஆக, மனிதன் மிருகமாக வாழாமல், பறவை மற்றும் விலங்கு களைப் போல் வாழ்தல் நலம் என்று கூறுவதிலிருந்து மனிதனை நெறிப் படுத்துதலை அறியமுடிகிறது.

## கீழ்நோக்கிச் செல் உயர்வாய்

வாழ்வை அர்த்தமுள்ளதாக வாழ நினையின் மனிதர்க்குரிய மனிதப் பண்புகளைப் பின்பற்ற வேண்டும். பொய்யும் களவும் செய்யாது, தாழ்ந்தும், விட்டுக்கொடுத்தும், சகிப்புத் தன்மையோடும் அறம் செய்தும் வாழ்தல் வாழ்வை பயனுடையதாக்கும். இவ்வாறு வாழாது, தானே உயர்ந்தவன் என்று எவருக்கும் பணியாது கர்வத்துடன் வாழும் மனிதர்கள் ஒவ்வொரு துறையிலும் இருக்கவே செய்கிறார்கள். அத்தகையோரை நோக்கி, கவிஞர்,

**நீரைப் போல்/ கீழ் நோக்கி செல்**
**கீழே செல்லும் நீர்தான்/**
**மேலே செல்கிறது/**
**நீரை விட/ மேலே செல்வது எது?**
**(ஆலா.ப.146)**

என்று வினவி தாழ்ந்து போதலின் உயர்வை எடுத்தியம்புகிறார். மனிதர்களும் தாழ்ந்தும், பணிந்தும் விட்டுக்கொடுத்தும் செல்வார்களேயானால், யாவரும் அறைய முடியாத உயரத்தினை அடையலாம் என்று வாழ்வில் உயர்வடைய வழிமுறையைக் கூறி நெறிப்படுத்துகிறார். அதோடு, தாழ்வு மனப்பான்மை என்று எண்ணாது உயர்வதற்கான வழிமுறை என்று எண்ணிக் கொண்டால் வெற்றி பெறலாம் என்ற கருத்தையும் எடுத்துரைக்கிறார்.

## முடிவுரை

மனிதர்களை மனிதப் பண்பு டையவர்களாக மாற்றுபவை விழுமியங் களே. கவிதைகளில் மானுடம் செழிப்படையும் வகையிலான விழுமியங்கள் இடம்பெற்றுள்ளது. மனிதர்கள் வழிதவறிச் செல்லும் போது இவ்விலக்கியங்கள் நல்வழிப் படுத்துகின்றன. சமூக நோக்கினையும், தனிமனித மேம்பாட்டின் மேல் உள்ள ஆத்மார்த்தமான ஈடுபாட்டினையும்

உணர்த்துகிறது. கவிஞர்களின் தனித்திறனும், சமூகப் போக்கும் அவர்களுக்கான தனி அடையாளத்தினை உருவாக்கியுள்ளது என்பதனை உணர்ந்து கொள்ள முடிகிறது.

## துணைநின்ற நூல்கள்

அப்துல் ரகுமான் – ஆலாபனை, கவிக்கோ பதிப்பகம், 20 முதல்

கடல்வழிச்சாலை, வால்மீகி நகர், சென்னை, முதற்பதிப்பு – 1995.

பக்தவத்சல பாரதி – பண்பாட்டு மானுடவியல், அடையாளம் பதிப்பகம், 1205/1

கருப்பூர்சாலை, புத்தானந்தம் 621319, திருச்சி மாவட்டம், பதிப்பு – 2011.

விசுவநாதன்.அ – கலித்தொகை (மூலமும் உரையும்) (உரையாசிரியர்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41–பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600098, ஆறாம் பதிப்பு – 2017.

# மல்லர் இனமக்களின் வாழ்வியல்

**முனைவர் சோ.முகுந்தன்,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
என் பிஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
நத்தம், திண்டுக்கல்.

## அறிமுகம்

இன்றைய காலகட்டத்தில் எத்தனையோ மனித இனங்கள் தோன்றி வளர்ச்சி அடைந்திருக்கின்றன. அவ்வாறு வளர்ச்சியடைந்த இனங்களின் அடிச்சுவட்டின் வரலாறானது உண்மையானதுமாகவும், ஏற்றுக்கொள்ளத் தக்கவகைகளிலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதை அந்தந்த இனங்களின் பலவாரான தொன்மக்கதைகளே நமக்குப் பறைசாற்றுகின்றன. அதன் அடிப்படையை உணர்த்தும் விதமாகவும், அந்தந்த இனத்தின் தனிப்பட்ட சிறப்பு மிகுந்த அடையாளமாகவும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிறுதெய்வங்களைக் கொண்டு வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு நடத்தப்படும் குலதெய்வ வழிபாடுகளில் குறிப்பாகத் தென்தமிழகத்தில் பெண் தெய்வ வழிபாடுகளே அதிக அளவில் காணப்படுகின்றன. ஆண் தெய்வ வழிபாடுகள் ஓரளவே காணப்படுகின்றன.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், செமினிப்பட்டி கிராமத்தில் அழகு மலையானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு “அருள்மிகு சொக்கம்மாள்” என்னும் பெண் தெய்வத்தைக் குலதெய்வமாக வணங்கி வரும் மல்லர் இனமக்கள் இன்று செமினிப்பட்டி, மேலச்சின்னணம்பட்டி, சம்பகுளம், பெரியஇளந்தைகுளம், கோணப்பட்டி, கோவில்பட்டி (சிலுக்குவார்பட்டி), மேட்டுப்பாளையம், சில்லார்பட்டி, கச்சைகட்டி, சென்னை போன்ற பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.” மல்லர் குலதெய்வமான அருள்மிகு சொக்கம்மாள் என்னும் பெண் தெய்வ வழிபாட்டையும், இவ்இனம் சார்ந்த மக்களின் வாழ்வியலையும் ஆய்வது இவ்ஆய்வின் நோக்கமாகும்.

## மல்லர் இனமக்களின் தோற்றம்

மல்லன் என்பதற்கு வீரமாமுனிவர் சதுரகராதியில் ‘ஓரரசன்’ என்றும் ‘வலியோன்’ என்றும் பொருள் கூறுகின்றார்.

“ஆரம்ப காலகட்டத்தில் மல்லர் இனத்தைச் சேர்ந்த கிழவர்கள் பட்டூர் என்ற கிராமத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் என்று மல்லர் இனமுதியவர்கள் கருதுகின்றனர்.” என்று திரு. பாண்டி (மேளம்) கூறுகின்றார். மல்லர் இனமக்களின் வழிபாடுகள் மல்லர் இனமக்களின் வழிபாடுகளைப் பொதுவான வழிபாடுகள் மற்றும் தனிப்பட்ட தம்மல்லர் இனத்திற்கான வழிபாடுகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். பொதுவான வழிபாடுகள் அனைத்து இனமக்களும் கொண்டாடும் பொதுவான வழிபாடுகளான பொங்கல்

விழா வழிபாடு போன்ற வழிபாடுகளில் மல்லர் இனமக்களும் சிறப்பாக ஈடுபடுகின்றனர்.

### தனிப்பட்டவழிபாடுகள்

### கேப்பைரொட்டி

"தை மாதம் மற்றும் ஆடிமாதங்களில் கேப்பை ரொட்டியை எண்ணை இடாமலும், உப்புப்போடாமலும், எச்சில்படாமலும் முதலில் மூன்று சுடப்படுகிறது. அப்படிச் சுடப்படுகின்ற மூன்று கேப்பை ரொட்டிகளையும் அருள்மிகு சொக்கமாளுக்கு மூன்று தளுகைகள் வைத்துப்படைத்து அதில் ஒன்றைத் தன்கூடப் பிறந்த திருமணமான பெண்பிள்ளைகளுக்கும் மற்றொன்றை மாமன்மார்களுக்கும் மீதமுள்ள இன்னொரு ரொட்டியைத் தங்கள் குடும்பத்தினரும் குடுத்து வழிபட்டு உண்டு மகிழ்கின்றனர்." என்று திரு.பாண்டி (மேளம்) கூறுகின்றார்.

### கம்மங்கருது

"தைமாதம் புதியகம் மங்கருதைக் காட்டிலிலிருந்து அறுத்த முதல்நாள் அருள்மிகு சொக்கம்மாள் திருக்கோவிலில் உள்ள கூறையில் கொண்டு வந்து கட்டி வழிபடும் வழக்கம் தொடர்ச்சியாக இம்மக்களிடம் உள்ளது. அவ்வாறு கட்டப்படும் கம்மங்கருதைக் கசக்கி எடுத்துக் கொண்டு அதை தாம்சமைக்கும் போது கம்மங்கருதையும் சேர்த்து சமைத்து பின் அதை தம்வீட்டிலேயே குலதெய்வமான சொக்கம்மாளுக்குப் படைத்து வழிபடுவதை இன்று வரை வழக்கமாகக் கொண்டுள்ளனர்." என்று திரு.பெரியசாமி (பெரியசாமியாடி) கூறுகின்றார்.

### பனியாரம்

பொதுவாக மல்லர் இனமக்கள் பனியாரம் என்னும் உணவுப் பொருளை வீட்டில் சமைக்கமாட்டார்கள். அதை மீறி சமைத்தால் ஏதேனும் ஒரு தீய நிகழ்வானது வீட்டில் நடைபெறும் என்று மல்லர் இன பெரியவர்கள் நம்புகின்றனர். இதைப் போன்றே மாசி மாதங்களில் மல்லர் இனமக்கள் வீடுகளில் பயிறு வகைகளை வறுக்கவோ அல்லது அவிக்கவோ மாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### திருவிழா

அருள்மிகு சொக்கம்மாள் என்னும் பெண் தெய்வத்தைக் குலதெய்வமாக வணங்கி வரும் மல்லர் இனமக்கள் இருபத்தோரு தெய்வங்களைக் கொண்டு வழிபாடு செய்யப்படுகின்றனர். அவற்றில் முதன்மையாக,

1. அருள்மிகு சொக்கம்மாள் (தாயம்மாள் க.பெ பனிக்கர்)
2. அருள்மிகு பெரியசாமி (பெரியசாமி த.பெ பனிக்கர்)
3. அருள்மிகு கோவில் பூசாரி (ஜெயராமன் த.பெ சோலைமலை)
4. அருள்மிகு சின்னச்சாமி (அழகுமலை த.பெ அழகன்)
5. அருள்மிகு உருளைக் கருப்பு (இராசா த.பெ அழகர்சாமி)
6. அருள்மிகு நரசிங்கமூர்த்தி (இராசா த.பெ இராமு)
7. அருள்மிகு கோமாளி (மலைச்சாமி த.பெ முத்தழகன்)
8. அருள்மிகு சந்தனக்கருப்பு (மோனேஷ் த.பெ முத்துக் கிருஷ்ணன்)
9. அருள்மிகு ஆண்டிச்சாமி (சுந்தரராசு த.பெ கருப்பன்)
10. அருள்மிகு நாகம்மாள் (கார்த்திகை ராணி க.பெ கண்ணன்)

11. அருள்மிகு பொண்ணழகு (சுகந்தி க.பெ நேரு)

போன்ற தெய்வங்கள் தற்காலத்தில் வழிபாட்டுத் தெய்வங்களாகக் கொண்டு மல்லர் இனமக்கள் வழிபட்டு வருகின்றனர். இத்தெய்வங்கள் தாம் தங்களைக் காத்து அருள்பாழித்து வருகின்றன. என்று நம்புகின்றனர். இக்கோவிலில் வாசப்படி காத்தான் (குணசேகரன் த.பெ அழகர்சாமி) என்பவர் கோவிலின் வாசப்படியையும் காத்துவருகிறார்.

திருவிழா தொடங்குவதற்கு முந்தைய நாள் பூஜைக்குத் தேவையான பழங்களை வாங்க நிலக்கோட்டைக்கு நடந்தே செல்லுதல் இந்நிகழ்வைப் பழம் கட்டச் செல்லுதல் என்று மல்லர் இனப் பெரியோர்கள் அழைப்பார்கள். "திருவிழாவிற்கு, முதல் நாளுக்கு முந்தியநாள் மாலை அருள்மிகு உருளைக் கருப்புச்சாமி அருள் இறங்கி பழங்கட்டி வருவதற்காக அங்குக் கூடிநிற்கும் மல்லன் பங்காளிகளைக் கைநீட்டி, நீ என்று ஒரு குறிப்பிட்ட ஆட்களைப் பிரித்து நிலக் கோட்டைக்குச் சென்றுவரக் கட்டளையிடும். அதற்குத் துணைக்கு யார் வருவார்கள் என சாமியால் பிரிக்கப்பட்டவர்கள் கேட்க அதற்குச் சாமி நீங்கள் என் கோட்டைக்குப் போங்க அங்க நா எவரேனும் ஒருவர் உருவில் வந்து உங்களுக்கு உதவி புரிவேன் என்று கூறும். அதேபோல் மறுநாள் காலையில் கோட்டைக்குச் சென்றவுடன் பழங்கட்ட வந்தவர்களுக்கு உதவி செய்வதற்கென்றே முதல் நாள் சாமி சொன்னது போல் ஒருவர் வந்து உதவி செய்வார் என்றும் இதை அதற்கு முன்னர் கோட்டைக்குச் சென்றவர்கள் வந்து சாமி கூறியது போல் எங்களுக்கு ஒருவர் வந்து உதவிசெய்தார் என்பார்கள்" என்று இதைத்தான் நம் முன்னோர்களும் கடைபிடித்துள்ளர் என்றும் திரு.பெரியசாமி (பெரிய சாமியாடி) கூறுகின்றார்.

## முதல்நாள் திருவிழா

சித்திரை மாதத்தில் அந்த அருள்மிகு அழகர்மலையான் வைகை ஆற்றில் இறங்கபோவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக அருள்மிகு சொக்கம்மாள் கோவில் திருவிழாவானது தொடங்குகிறது. (முன்னொரு காலத்தில் அருள்மிகு சொக்கம்மாள் கோவில் திருவிழாவானது ஏழிலிருந்து 15 நாட்கள் வரை திருவிழாக்கள் நடந்ததாக மல்லர் இனபெரியவர்கள் கூறுகின்றனர்)

திருவிழா தொடங்குவதற்கு ஐந்து நாளுக்கு முன்பாக அருள்மிகு சொக்கம்மாள் கோவிலுக்குப் பாத்தியப் பட்ட தெய்வங்களை அழைத்து திருவிழா நடத்துவதற்கான அனுமதியைப் பெறுகின்றனர். அருள்மிகு சொக்கம்மாள் கோவில் திருவிழாவானது வருட வருடம் சித்திரை மாதம் மதுரை அழகர் கோவில் திருவிழாவிற்காக என்று கொடியேற்றம் தொடங்குகின்றதோ அன்றிலிருந்து மல்லர் இனமக்கள் காப்புக் கட்டிக்கொண்டு தாங்களும் மனதளவிலும் பிறருக்குத் தீங்கு செய்யாது சுத்தமாக இருக்கின்றனர்."

அழகர்கோவில் சென்று தீர்த்தமாடி வருதல் அன்று மாலை இருத்தோரு சாமிகளையும் இறக்கி அனுமதி வாங்கி பின் செமினிப்பட்டிக்குக் கிழக்கே அமைந்துள்ள ஊர்ணி சென்று அங்கிருந்து கோவிலுக்குத் தீர்த்தத் தண்ணீர் கொண்டு வருகின்றனர். ஏற்கனவே அதிகாலையில் கோவில் பூசாரி மற்றும் மாமன் மச்சானால் கொண்டு வரப்பட்ட கோவிலில் உள்ள அழகுமலையானின் தீர்த்தமும் கலந்து மல்லர் இனமக்கள் தங்களது வீடுகளுக்கு எடுத்துச் செல்கின்றனர். பின்பு தங்கள் மாமன் மச்சான் மற்றும்

உறவினர்களுக்குப் புது மண்ணால்ஆன மண்பானைகளை எடுத்து அதில் சமைத்து மாமன் மச்சான்கள் மற்றும் உறவினர்களுக்கு உணவு சமைத்து தமது இல்லங்களில் உண்ணச் செய்வதற்குச் சட்டிபானை போடுதல் என்று மல்லர் இனப் பெரியவர்கள் கூறுகின்றனர்.

புதுபானையில் சமைத்த இந்த உணவினை முன்னமே தனது குடும்பத்தினருக்கும் மற்றும் மாமன் மைத்துனர்களுக்கும் மூன்று வித தளுகைகள் வைத்து அவர்களுடைய பங்கை அவர்களுக்குக் கொடுத்து உண்டு மகிழ்கின்றனர். அன்று இரவு அனைத்துத் தெய்வங்களையும் இறக்கி கோவில் வீட்டிலிருந்து தண்ணீர்க் கிணற்றிற்குச் சென்று பெட்டி கழுவுதல் மற்றும் அலங்காரம் செய்தல் நிகழ்வு நடைபெறும் அதனைத் தொடர்ந்து தெய்வங்கள் தங்களது கச்சைகளைக்கட்டி கோவில் வீடு திரும்புதல் போன்ற நிகழ்வு நடைபெறும்.

## இரண்டாம் நாள் திருவிழா

இரண்டாம் நாள் நிகழ்வாக காலை மற்றும் மாலை செமினிப்பட்டி கிராமத்தைச் சுற்றிவலம் வருதல் இந்நிகழ்வை ஊர்விளையாடுதல் என்பர்.

## மூன்றாம் நாள் திருவிழா

மூன்றாம் நாள் நிகழ்வாக காலை மற்றும் மாலை செமினிப்பட்டி கிராமத்தைச் சுற்றி வலம் வருதல் இந் நிகழ்வை ஊர் விளையாடுதல் என்பர்.

## நான்காம் நாள் திருவிழா

நான்காம் நாள் நிகழ்வாகக் காலையில் அருள்மிகு சொக்கம் மாளுக்குப் பொங்கல் வைத்து வழிபடுதல் நிகழ்வு நடைபெறும். அந்நிகழ்வானது புதிதாக வயலில் விளைந்த பச்சை நெல்லை உலக்கையால் கோவில் முன்பு உரலில் உலக்கையால் கையால் குத்தி எடுத்து அதை நையப்புடைத்துப் பதப்படுத்திப் பின்பு அம்மளுக்குப் புது மண்பானையில் பொங்கல் வைத்து உப்பில்லாமல் படைப்பது இவர்களுடைய ஆண்டாண்டு காலப் பழக்கமாக உள்ளது. அதைத் தொடர்ந்து அப்பொங்கலை எடுத்து அம்மனுக்குப் படைத்த பின்பு அனைத்து மக்களுக்கும் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

பெரிய வீட்டுக்காரர்களின் பெண்கள் மற்றும் சாமியாடிகள் இப் பொங்கலை வைக்கின்றனர். அதனை அடுத்து அனைத்துச் சாமிகளையும் இறக்கி அருள்வாக்குக் கேட்கப் படுகிறது. அதில் குறிப்பாக அருள்மிகு காவக்காரச் சின்னக்கருப்பு என்று சொல்லக்கூடிய காவக்காரச் சின்னச் சாமியை அழைத்தவுடன் அந்தத் தெய்வமானது அதற்குண்டான சுயரூபமாகக் கோவிலை மூன்று முறை வலம்வருகிறது. பின்பு பட்டிதொட்டி எல்லாம் நான்காத்துக் கொள்கிறேன் என்றும் உறுதி கூறுகிறது. இதை மல்லர் இன மக்கள் நல்லவாக்காக எடுத்துக் கொள்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து அடுத்து அருள்மிகு நரசிங்க மூர்த்தி என்று சொல்லக்கூடியத் தெய்வத்தை அழைத்தவுடன் அதனுடைய சுய ரூபத்தை காட்டிதனக்கு உண்டான சிறிய பூத்திரியை மூன்று முறை தனது வாய்க்குள்ளிட்டு வெளியே எடுத்து நல்ல அருள் வாக்கைக் கூறி திரி எடுத்து ஆடுகிறது. அதற்கு அடுத்த படியாக அருள்மிகு உருளைக் கருப்பு என்று சொல்லக்கூடிய தெய்வத்தை அழைத்தவுடன் அதனுடைய சுய ரூபமாகக் கோயிலை உருண்டு வலம் வந்து கோவிலுக்கு எதிரே உள்ள மாமன் மச்சான் வீட்டிற்குச் சென்று தண்ணீர் குடித்து விட்டுப்பின்பு தனது இடத்திற்கு வந்து பெரியபூத்திரியை

வைத்து தனக்குண்டான மொழியில் பேசி அதனிடம் உரையாடிய பிறகு அத்தெய்வமும் மூன்று முறை பெரிய பூத்திரையை வாயுனுள்ளே வைத்து எடுத்த பிறகு கோவிலில் திருவிழா முதல் நாள் அன்று வேயப்பட்ட கூரையில் நெருப்பு வைக்கிறது அருள் இறங்கி வைக்கப்படும் அந்நெருப்பானது கூரையில் மூன்று முறை வைக்கப்படுகிறது. அப்படி வைக்கப்படுகின்ற அந்த நெருப்பின் மூலமாக கூரையில் தீப்பற்றுதல் இல்லாமல் இருப்பதைக் கண்டு மல்லர் இனமக்கள் தங்களை உருளைக் கருப்பும் காக்கும் என்கின்ற நம்பிக்கையை உடையவர்களாக இருக்கின்றார்கள். அதனை அடுத்து அருள்மிகு சந்தனகருப்பு, அழைத்தவுடன் அதனுடைய சுயரூபத்தைக்காட்டி மக்களைக் காப்பதாக அருள்வாக்குக் கூறுகிறது. அதனை அடுத்து அருள்மிகு ஆண்டிச்சாமியை அழைத்தவுடன், அதனுடைய சுயரூபமாக தன்னுடைய கால்களில் சாட்டையால் அடித்து மக்களையும் பட்டிதொட்டியையும் காப்பேன் என்று உறுதி கூறுகிறது.

அன்று இரவு அழகர்மலையான் வைகைஆற்றில் மறுநாள் இறங்கும் நிகழ்வினைக் காணவும் வைகை ஆற்றில் திரியை அனைக்கவும் மதுரைக்குச் செல்லுதல். மறுநாள் காலையில் அருள்மிகு அழகர்மலையான் வைகையாற்றில் இறங்குவதைப் பார்த்தவுடன் கோவிலுக்குத் திருப்புதல் நிகழ்வு நடைபெறும்.

## ஐந்தாம் நாள்

கறைபங்கப்படும் அதாவது பங்களிகள் அனைவருக்கும் அவரவர்குரிய பங்கினை வழங்கும் நிகழ்வு மற்றும் திருவிழா வரவு செலவு கணக்குகள் சரிசெய்வது போன்ற நிகழ்வுகள் நடைபெறும்.

## மல்லர் இனமக்களின் தொழில்கள்

மல்லர் இனமக்களின் ஆரம்பகாலத் தொழில் ஆடு, மாடு மேய்த்தல் என்றும் அவர்களுக்கு ஏற்ற ஏதாவது ஒரு வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டனர் என்றும் மல்லர் இனம் சார்ந்த பெரியவர்கள் கருதுகின்றனர். தற்காலத்தில் தங்களுக்குத் தெரிந்த தொழில்களைச் செய்து வாழ்ந்து வருகின்றனர்.

மல்லர்இன மக்களின் நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும்.

மல்லர்இன மக்களின் வாழ்வியலில் பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு சில கட்டாயச் சடங்குமுறைகள் மற்றும் சம்பிரதாயங்கள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

பிறப்புத் தொடர்பானச் சடங்குகள்

ஒரு குடும்பத்தில் குழந்தைப் பிறக்கும் நிகழ்ச்சி அனைவராலும் மகிழ்ச்சியோடு வரவேற்கப்படுவதாகும். குடும்ப வாழ்க்கையில் ஒரு பெண் அடையும் பேறுகளுள் சிறந்த பேராகக் கருதப்படுவது மகப்பேறுஆகும். இதனைத் திருவள்ளுவரும்,

> "பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை அறிவறிந்த
> மக்கட்பேறு அல்ல பிற" (குறள் - 61)

அறிவுடைய நல்லமக்களைப் பெறுவதே இல்வாழ்க்கையின் மிகப் பெரிய செல்வமாகும் என்கிறார் திருவள்ளுவர். மல்லர் இன சமுதாயத்தில் ஒரு பெண் கருவுற்ற நாளில் இருந்து குழந்தையைப் பெற்றெடுத்து, அது வளர்ந்து வரும் நாள் வரை நடைபெறும் சடங்குகளை மூன்று வகைகளாகப் பிரித்துக் கூறுவர்.

1. பெண் கருவுற்றிருக்கும் போது செய்யும் சடங்குகள்

2. குழந்தை பிறந்த தினத்தன்று செய்யும் சடங்குகள்,

3. குழந்தை பிறந்த பின்னர் செய்யும் சடங்குகள்

என்பனவாகும். பெண் கருவுற்றிருக்கும் போது செய்யும் சடங்குகள்

பெண் கருவுற்றிருக்கும் சமயத்தில் செய்யும் சடங்குகளை மூன்று பிரிவு களாகப் பிரித்துக்கையாள்வர்.

1. மூன்றாவது மாதம் மருந்துக் களிக் கிண்டிக் கொடுத்தல்

2. ஒன்பதாவது மாதம் கட்டுச்சோறுக் கொடுத்தல்

3. மகப்பேற்றிற்காகத் தாய்வீட்டிற்குப் பெண்ணை அழைத்து வருதல் என்று கூறுகின்றனர். ஒரு பெண் தாய்மைப் பேறு அடைந்திருப்பதை முழுகாமல் இருக்கிறாள், மாசமாக இருக்கிறாள், ஈருயிராக இருக்கிறாள் என்ற சொற்களால் கூறுவர். தாய்மைப் பேறு அடைந்திருக்கும் நிலையில் சோர்வும், ஓய்வும் பயனளிக்காது என்பது இவர்களின் நம்பிக்கையாகும். தாய்மைப்பேறு அடைந்த பெண்ணின் சோர்வையும், பயத்தையும் போக்கும் பொருட்டுச் சடங்குகளை மேற்கொள்கின்றனர்.

## மருந்துக் களிக் கிண்டிக் கொடுத்தல்

தாய்மைப் பேறு அடைந்த பெண்ணுக்கு மருந்துக் களிக்கிண்டிக் கொடுத்தல் நிகழ்ச்சியானது இச் சமூகத்தில் மூன்றாவது மாதத்தில் நடைபெறுகிறது. அதாவது கணவன் வீட்டில் இருக்கும் தன் மகளுக்குத் தாய் தந்தை மற்றும் உறவினர்கள் மருந்துக் களிக்கிண்டிக் கொடுக்கிறார்கள். இதில் பச்சரிசி, மிளகு, சுக்கு, ஏலக்காய் ஆகிய பொருட்கள் கலந்திருக்கும். பின் அதில் நல்லெண்ணெய் விட்டுக் களிக்கிண்டித் தன் மகளுக்குத் தருகிறார்கள். மேலும் பூ, பலகாரங்கள், பழங்கள் போன்றவையும் தருகிறார்கள் கருவுற்றிருக்கும் பெண் சுவைபட உண்ணவும் இனிமைக்காக உப்பும், காரமும் சேர்ந்த உணவையும் கொடுக்கிறார்கள்.

## கட்டுச்சோறு கட்டிக் கொடுத்தல்

பெண் கருவுற்ற ஏழாவது மாதத்திலோ அல்லது ஒன்பதாவது மாதத்திலோ நிகழ்த்தப்பெறும் நிகழ்ச்சியே கட்டுச்சோறு கட்டிக்கொடுத்தல் எனக் குறிப்பிடுவர். குறிப்பிட்ட ஒரு நல்லநாளில் பெண்வீட்டாரும். அவர்களின் உறவினரும் மொத்தமாகச் சேர்ந்து பெண் இருக்கும் கணவன் வீட்டிற்குச் செல்வர். அப்போது புளியோதரைச் சோறு, தயிர்ச்சோறு, எலுமிச்சைச்சோறு வடை, அதிரசம், பாயாசம் போன்ற உணவுகளைக் கருவுற்ற பெண்ணிற்குக் கொடுப்பர். பின் பெண்ணிற்குப் புதுப்புடவை அணிவித்துக் கிழக்கு நோக்கி அமரவைத்து உணவினைத் தருவார்கள். கிழக்கு நோக்கி அமர்வதால் வாழ்வில் வளம் உண்டாகும் என்று நம்புகின்றனர். எல்லோருக்கும் தான் கருவுற்ற செய்தி தெரிய வேண்டும் என்பதே இச்சடங்கின் நோக்கம் என்கின்றனர்.

## காயமருந்து கொடுத்தல்

''குழந்தையைப் பெற்ற தாய் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதற்காக மருந்து கொடுப்பது இவர்களின் வழக்கமாகும். அவ்வாறு கொடுக்கப்படும் மருந்துகளில் காய மருந்து கொடுத்தல் என்பது முக்கிய மான ஒன்றாகும். அதாவது குழந்தை பெற்ற பெண்களுக்கு மருந்தாகத் திப்பிலி, கருப்பட்டி முதலிய பொருட்களைக் கருஞ் சீரகம், பெருங்காயம் ஆகியவற்றோடு நன்றாக அரைத்து மாவாக்கி அதனுடன் வெள்ளைப்பூண்டு, நல்லெண்ணெய் ஆகியவற்றைச் சேர்த்துக் கிண்டி எடுப்பர். இது 'இலேகியம்' போன்று

ஆகிவிடும். இதனையே காயமருந்து என்கிறார்கள்.”

இம்மருந்தைக் குழந்தையைப் பெற்ற தாய்க்குக் காலையும், மாலையும் சிறிதளவு கொடுக்கிறார்கள். இதனை இருபது நாட்களுக்குத் தொடர்ந்து கொடுக்கிறார்கள்.

## திருமணச் சடங்குகள்

திருமணத்தின் போது மல்லர் இனமக்கள் மணமகனுக்குப் பட்டால் ஆன வேட்டி மற்றும் சட்டையை உடுத்துகின்றனர். பெண்கள் வெள்ளைச் சீலையை உடுத்துகின்றனர்.

## இறப்புச் சடங்குகள்

முதியோர் இறந்தால் செய்யும் சடங்குகள் இறப்பு ஒருவர்க்கு உறக்கம் போன்றது. மக்களுடைய ஒவ்வொரு நாளும், வாழ்வும் சமயத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. பிறந்த வினாடி முதல் இறக்கும் வினாடி வரை அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் ஏதாவது ஒரு சடங்கினைச் செய்து கொண்டு தான் இருக்கின்றனர். இச்சடங்குகள் மனிதன் இறந்த பின்னரும் தொடர்கின்றன.

உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதை விட்டு வேறு இடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது என்கிறார். மேலும்,

> **“உறங்குவது போலும் சாக்காடு உறங்கி**
> **விழிப்பது போலும் பிறப்பு”**
>
> **(குறள் - 399)**

என இறப்பைப் பற்றியும்,

> **“குடம்பைத் தனித்து ஒளியப்புள் பறந்தற்றே**
> **உடம்போடு உயிரிடை நட்பு”**
>
> **(குறள் - 338)**

என உயிரும் உடம்பும் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

## இழவு சொல்லி அனுப்புதல்

மல்லர்இன மக்கள் இழவு சொல்லி விடுதல் என்பதைக் கேதத்திற்கு அனுப்புதல் என்றும் கூறுகின்றனர். இறந்தவர் வீட்டார் எழுதிக் கொடுக்கும் ஊர்ப்பெயர்களை வாங்கிக் கொண்டு இச்சமூகத்தினர் வாழும் ஊர்களில் இழவு சொல்லிவருவர். இன்று தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக இத்தகைய முறை மாற்றப்பெற்றுள்ளது.

## இறந்தவரை அமரச்செய்தல்

வயதானவர்கள் இறந்தால் இறந்தவரைக் குளிப்பாட்டி அவர் மேல் பன்னீர் தெளித்து அமரச் செய்வர். பின்னர் நெற்றியில் திருநீருபூசி, சந்தனம், பவுடர்பூசி அலங்கரித்தப் பின்னர் ஒரு ரூபாய் நாணயத்தை நெற்றியில் வைக்கின்றனர். பிறகு பெஞ் சில் அமரச்செய்து இருகால் பெருவிரல் களையும் ஒன்றாகச் சேர்த்துக்கட்டுவர். பின்னர் நாடியில் நாடிக்கட்டுக் கட்டுகின்றனர்.

## தேர் கட்டுதல்

கப்பல் தேர், கோயில் கருவறை போல் தேர் அமைத்து அலங்காரம் செய்கிறார்கள். நாகவடத் தேர் போன்ற தேர்களைக் கட்டுவதற்குத் தேவையான பச்சை மரங்களை ஊர்ப் பொதுமக்களே கொண்டு வந்து சேர்க்கின்றனர்.

## கோடி கொண்டு வருதல்

கோடிச்சேலைகளைக் கொண்டு வருவது பிறந்த வீட்டிலிருந்து துணிகளை எடுத்து வருகின்றனர். இதன் நோக்கம் இறந்தோர்க்கு நினைவு செலுத்தி அவர் வீட்டில் உள்ள அனைவரும் புத்தாடை அணிந்து துக்கத்தை மறந்துவிட வேண்டும் என்பதற்காக என்று கூறுகிறார்கள்.

## இறந்தோரைத் தேரில் ஏற்றுதல்

இறந்தாரைத் தேரில் தூக்கிவைத்து நன்றாகக் கட்டி அலங்கரிப்பர். இசை வாத்தியங்கள் முழங்கதூக்கிக் கொண்டு

செல்கின்றனர். சனிக்கிழமை ஒருவர் இறந்தால் தேரின் மேல் கோழிக்குஞ் சினைக் கட்டித் தூக்கிச் செல்வார்கள். இதன் நோக்கம் ‘சனிப் பிணம் தனியே போகாது’ என்பதே ஆகும். அந்தக் கோழிக்குஞ்சினையும் சுடுகாட்டில் இறந்தவருடன் சேர்த்தே புதைக்கின்றனர்.

## நிறைவுரை

*மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், செமினிப்பட்டி கிராமத்தில் அருள்மிகு அழகுமலையானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு அருள்மிகு சொக்கம்மாள் என்னும் பெண் தெய்வத்தைக் குலதெய்வமாக வணங்கி வரும் மல்லர் இன மக்கள் பட்டூரில் இருந்து வந்தவர்கள் என்று சொன்னாலும் அதற்கு முன் இவர்கள் வேறு ஏதேனும் பகுதியிலிருந்து வந்தனரா என்பது ஆய்விற்கு உரியதாகும். அருள்மிகு சொக்கம்மாள் என்னும் பெண் தெய்வத்தின் வரலாற்று ஆய்வானது இன்னும் நீண்டு கொண்டு போகின்றது என்பதை உணர முடிகின்றது. மல்லர்இன மக்களின் வாழ்வியல் சார்ந்த வரலாறு இன்னும் நீண்டு கொண்டு தான் செல்கிறது. எனவே இக்கட்டுரையில் உள்ளது ஓர் அளவு இல்லாதது உலகளவு என்பதை அறிய முடிகின்றது.*

## பார்வைநூல்கள்

*1. அகத்திய தாசன்., வழிபாட்டு வரலாறு., நாட்டுப்புறவியல் ஆய்வுக் குடில்., வல்லம் – 627 809. முதல்பதிப்பு – 2004.*

*2. இராமநாதன்.ஆறு., நாட்டுப் புறவியல் களஆய்வு நெறிமுறைகள், தென்னிந்திய மொழிகளின் நாட்டுப் புறவியல் கழகம், திருவனந்தபுரம் – 695 033.*

*3. லூர்து.தே. (ப.ஆ). இ., நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி – 1981. முதல்பதிப்பு – 2003.*

# சங்கத் தமிழ் காட்டும் தமிழர் பண்பாடு

நெறியாளர் **முனைவர் பூ.பூங்கோதை**
இணைப்பேராசிரியர்,
துறைத்தலைவர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

**– மு. முத்து முருகன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

உலகின் தொன்மையான குடிகள் ஒன்றானது தமிழ்க் குடி. பண்பாட்டையும் நாகரிகத்தையும் உலகமெங்கும் பரவச் செய்த பெருமைக்கு உரியது.

**பொய்யகல நாளும் புகழ் விளைத்தல் என் வியப்பாம்?**
**வையகம் போர்த்த வயங்கொலிநீர்**
**கையகலக் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே**
**வாளோடு முன் தோன்றிய மூத்த குடி.**
**-ஐயனாரிதனார்**
**(புறப்பொருள் வெண்பா மாலை)**

**பாடறிந் தொழுகுதல் பண்பாடு**
**- கலித்தொகை(130)**

என்றும்,

**பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மண் - குறள் (996)**

என்றும், இலக்கியங்கள் எடுத்தியம்பும் வழி புலனாகின்றது.

பண்படு என்ற சொல்லிலிருந்து தான் பண்பாடு பிறந்திருக்க வேண்டும். 'பண்பாடுதல்' என்பது அதற்கு முந்தைய சொல்லாக இருந்திருக்க வேண்டும் என்று ஆய்வுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. டி கே சிதம்பரம் முதலியார் அவர்கள் பண்பாடு என்று சொல்லை முதன் முதலில் 1937இல் பயன்படுத்தியிருக்கிறார்.

## அறம்:–

அறங்கூறும் அவையங்கள் தமிழ் நாட்டில் இருந்ததற்கு புறநானூறு மதுரைக்காஞ்சி நூல்கள் சான்றாக உள்ளன.

அறம் அறக்கண்ட நெறி மான் அவையம் – புறநானூறு. மதுரையில் இருந்த அபயம் துலாக்கால் போல நடுநிலை மிக்கது என்கிறது மதுரைக் காஞ்சி.

**எறியார் எறிதல் யாவணது எறிந்தோர்**
**எதிர் சென்று எறிதலும் செல்லான்**
**- புறநானூறு (301)**

தம்மைவிட வலிமை குறைந்த தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

**இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்**
**அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்**
**- (ஏணிச்சேரி முடமோசியார்-புறநானூறு)**

இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறு பிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு கூடாது என்று தெரிவிக்கிறது..

## சமத்துவம்:–

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**-புறநானூறு**

உலக ஒருமைப்பாட்டை ஓங்கி உரைத்தவர் கணியன் பூங்குன்றனார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் -குறள் 972
உருவுகண்டு எள்ளாமை வேண்டும்
-திருக்குறள்(667)

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்
இட்டார் பெரியோர் இடாதார் இழி குளத்தார்
பட்டாங்கில் உள்ளபடி -ஔவையார்.

ஆண் பெண் என்ற இயற்கையில் அமைந்த இரண்டு வேறுபாடுகளை தவிர வேறு பிரிவுகள் இல்லை என்பதைச் சொல்ல உலகில் இப்படி ஒரு பாடலை எவரும் எழுதியது இல்லை.

மனிதன் தனியானவன் அல்லன்; அவன் சமூகக் கடலின் ஒரு துளி– என்பதைத் தமிழ் இலக்கியங்கள் அன்றே பதிவு செய்திருக்கின்றன.

### இல்லறம்:–

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது- திருக்குறள்.(45)

இல்வாழ்க்கையில் அன்பு தான் பண்பு அறம் செய்வதுதான் பயன் என்று உலகப் பொதுமறை தெரிவிக்கிறது.

ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை
- கலித்தொகை (18)

மனம் ஒன்றி வாழ்வதே இல் வாழ்க்கை என்பதை இதைவிடத் தெளிவாகச் சொல்லும் உலக இலக்கியம் ஏதுமில்லை!

அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை அதுவும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று
-குறள்.(49)

தொல்காப்பியம் எழுத்து சொல் பொருள் என்று இலக்கணம் இயம்புகிறது. பொருள் இலக்கணத்தை விரிவாக உலக மொழிகள் எதுவும் தெரிவிக்கவில்லை.

குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணி

என்று சிறுபாணாற்றுப்படை வரிகள் தெரிவிக்கின்றன.

காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இல்வாழ்க்கை என்கிறார் ஔவையார்.

நீர் உறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவு அரிது ஆகிய தண்டாக்
காமமொடு-குறுந்தொகை (2-6)

### ஒழுக்கம்:–

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்-திருக்குறள்(131)

உயிரினும் மேலாக ஒழுக்கத்தைப் போற்றி வளர்த்தவர்கள் தமிழர்கள்.

மானம் அழிந்தபின் வாழாமை
முன்னினிதே-இனியவை நாற்பது
நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்
தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும் - திருக்குறள்(131)

ஒழுக்கம் என்று சொன்னாலே அது நல்லொழுக்கத்தை தான் குறிக்கிறது. தீயொழுக்கம் துன்பத்தைத் தரும் என்கிறார் வள்ளுவர்.

திட்டியின் விடமன்ன கற்பின் செல்வியை விட்டிலையோ?– என்று கம்பரும் கற்பு நெறி பற்றிக் குறிப்பிடு கிறார்.

### விருந்து போற்றுதல்:–

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத்தவர்க்கு
-திருக்குறள். (86)

வாழை இலை விருந்து தமிழர்களின் அடையாளம்.

விருந்தினரும் வறியவரும் நெருங்கி உண்ண

**மேன்மேலும் முகம் மலரும் மேலோர்**
**போல-கலிங்கத்துப் பரணி**

இல்லத்தில் நடைபெறும் விருந்தின் போது உவக்கும் விருந்தினர் முகத்தைப் போரில் இறந்துபட்ட வீரர்களின் உடல்களைக் கழுகுகள் கொத்தித் தின்னும் போதும் அவ் வீரர்களின் முகம் மலர்ந்து இருப்பதாக உவமை கொண்டு செப்புகிறார் செயங் கொண்டார்.

**அமிழ்தம் இயைவதாயினும் இனிது**
**எனத் தமியர் உண்டலும் இலரே...**
**- புறநானூறு(182)**

சேர்ந்து உண்ணும் பண்பாட்டைத் தமிழர்கள் கொண்டிருந்தனர் என்பதற்கு கடவுள் மாய்ந்த இளம் பெருவழுதியின் இந்த வரிகள் சான்றாக உள்ளன.

**அல்லில் ஆயினும் விருந்து வரின்**
**உவக்கும் - நற்றிணை (142)**

இரவு நேரத்தில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ச்சியோடு வரவேற்று உபசரிப்பதே நமது பண்பாடு.

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து**
**- திருக்குறள் (90)**

என்று முகம் வேறுபட்டு நோக்கினால் கூட விருந்தினர் முகம் வாடும் என்பதைத் தெளிவு படுத்துகிறது உலகப் பொதுமறை.

**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள். மாண்பு**
**-தொல்காப்பியர்.**

**இருந்தோம்பி இல் வாழ்வதெல்லாம்**
**விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தல் பொருட்டு**
**-குறள்(81)**

**பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்**
**வருவீர் உளீரோ ?-குறுந்தொகை (118)**

வாயிற் கதவை இரவில் அடைக்கும் முன்னர் இல்லத்தரசி கேட்பதாக இடம்பெற்ற குறுந்தொகை வரிகள் விருந்து போற்றுதலின் இன்றியமையாமையை எடுத்துரைக்கும்.

இல்வாழ்க்கையின் அடையாள மாக விருந்து தமிழர் பண்பாட்டில் இடம்பெற்று இருக்கிறது.

**வீரம்:–**

**குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆள் இல்அன்று என்று வாளின்**
**தப்பார் - புறநானூறு**

ஏறு தழுவுதல், வீரருக்கு நடுகல் வைத்தல், வீரம் செறிந்த ஆடவரையே மகளிர் விரும்பி மணத்தல் தமிழரின் பண்பாடு என்பதை சங்க இலக்கியங்கள் தெளிவு படுத்துகின்றன.

முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும் மருத நிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தி யோடும் பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழி லோடும் பிணைந்தது ஏறு தழுவுதல். அன்பையும் வீரத்தையும் ஒரு சேர வளர்த்தெடுக்கும் தமிழனின் வீர விளையாட்டு இதுவாகும்.

**எழுந்தது துகள் ஏற்றனர் மார்பு**
**கவிழ்ந்தன மருப்பு கலங்கினர் பலர்**
**- கலித்தொகை (102)**

தமிழர் பண்பாட்டில் விளைந்த நன் முத்துகளைக் கோக்கக்கோக்கமாலை பெரிதாகும். சூடும் கழுத்துக் கொள்ளாது! அன்றலர்ந்த மலர்களாய் என்றும் இருக்கும் சங்கத்தமிழ்ப் பூக்காடு! அதில் நானோர்தும்பி!

## துணைநூற் பட்டியல்

புலியூர்க் கேசிகன் –குறுந்தொகை

பரிமேலழகர்– திருக்குறள்

இராமநாதன் செட்டியார் – சங்ககாலத் தமிழர் வாழ்வு

# பண்பாட்டியல் நோக்கில் நற்றிணை

**முனைவர் சு.முருகவேல்,**
தமிழ் உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
திருநெல்வேலி தெக்ஷிண மாற நாடார் சங்கம் கல்லூரி,
தெ.கள்ளிகுளம், திருநெல்வேலி.

## ஆய்வுச்சுருக்கம்

எட்டுத்தொகையுள் முதன்மை நூலாக அமைந்திருக்கும் நற்றிணை சங்க கால மக்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துகின்றன. எனவே நற்றிணை பாடல்களை ஆராயும் போது பண்டையத் தமிழர்களின் பண்பாட்டையும் வாழ்வியல் முறை களையும் பழக்கவழக்கங்களையும் வீரத்தையும் அறிந்து கொள்ளலாம். அந்த வகையில் நற்றிணை பாடல்களில் சமூகப் பண்பாடு, தொழில் பண்பாடு, உணவுப் பண்பாடு, புறப்பண்பாடு என்னும் நான்கு வகைகளில் பண்பாடு சார்ந்த செய்திகளை ஆராய்வது இக் கட்டுரையாகும்.

## முன்னுரை

உலகில் பல்வேறு விதமான மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் பிறப்பு முதல் இறப்பு வரை யிலான அவரவர்களுக்கென்று ஒவ்வொரு விதமானப் பண்பாடுகள் காணப்படு கின்றன. அவற்றில் தமிழர்களின் பண்பாடே தலைசிறந்த பண்பாடாக கருதப்படுகிறது. அத்தகைய தலை சிறந்த பண்பாட்டை சங்க இலக்கியங்களின் வழி தெளிவாக அறியமுடிகிறது. எட்டுத்தொகையுள் முதன்மையான நூலான நற்றிணையில் தமிழர் பண்பாட்டை ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

## பண்பாடு

ஒரு சமுதாயத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை அமைப்பு முறையின் வெளிப்பாடே பண்பாடு என்றும் மக்கள் சமுதாய உணர்வுடன் வாழ்க்கையைச் சீராக நடத்திச் செல்லும் முறையே பண்பாடு ஆகும். பண்டையக்கால மக்கள் பயன்படுத்திய ஆடை, அணிகலன் அவர்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், அவர்களின் விளையாட்டுகள், வழிபாட்டு முறைகள் எனப் பலவற்றையும் பண்பாட்டிற்குள் காணலாம்.

"குறிப்பிட்ட இடத்து மக்களின் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், கலைகளும், சிந்தனையை வெளிப் படுத்தும் முறைகளும் பண்பாடு"[1] என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பொருள் உணர்த்துகிறது. "பண்பாடு மனிதனின் கைவண்ணத்தைப் புலப்படுத்துகிறது தலைமுறைத் தலைமுறையாக மக்கள் குழுவாகச் சேர்ந்துக் கற்ற நடத்தை முறைகளும் பழக்கவழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியேப் பண்பாடு என்றும் பண்பாடு என்பது மக்களால் அவர்களின் தேவைகளை நினைவு செய்துக் கொள்கின்றனர்"[2] என மாலினோசுக்கி விளக்கம் கூறியுள்ளார்.

## சமூகப்பண்பாடு

பண்டைத் தமிழ்ச்சமூகத்தின்

பண்பாடு, பழக்கவழக்கம், வாழ்க்கை முறை, குடியிருப்பு முறை, கடவுள் வழிபாடு, வாழ்க்கை நெறிகள், நிமித்தங்கள், மூடப்பழக்கவழக்கங்கள், பலியிடுதல் என்பன போன்ற சமூகப் பண்பாடுகளானது அவர்களின் வாழ்வியல் நிலத்திற்கேற்றவாறு மாறுபடுகிறது. ஐவகை நிலத்தில் வாழ்ந்த பண்டையத் தமிழ்மக்கள் அவர்களின் நில அமைப்புக்கேற்றவாறு சமூகப் பண்பாட்டியலும், பழக்கவழக்கத்திலும் வேறுபட்டு இருப்பதனை நற்றிணை வெளிப்படுத்துகிறது.

பழந்தமிழர்கள் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று உண்டு என நம்பினர். நற்றிணையில் கடவுள் நம்பிக்கை பற்றிய செய்திகளை அறியமுடிகிறது. தமிழர் எந்த ஒரு செயலைத் தொடங்குமுன் கடவுளை வழிபட்டுத் தொடங்கும் பழக்கம் பண்டைய காலத்திலிருந்தே மேற்கொண்டிருந்தார்கள். தன் நிலத்தில் விளைந்த விளைபொருட்களையும் தான் வேட்டையாடி வந்த வேட்டை பொருட் களையும் கடவுள்முன் படைத்து பின் உண்ணும் பழக்கம் இருந்ததையும் நற்றிணைப் பாடல்வரிகள் சான்று காட்டுகிறது. இதனை,

**“எரி மருள்வேங்கைக் கடவுள் காக்கும்**
**குருகு ஆர் துழனியின் இதணத்து ஆங்கண்**
**ஏதிலாளன் கவலைகவற்ற”**[3]

என்றும் அதாவது குருகுகள் ஆரவாரம் செய்யும் வயற்கரையில் அமைந்ததும் கடவுள்நிலை பெற்றதும் அயலான் ஒருவன் செயலைத் தோன்றி கவலை வருத்திட மார்பகம் ஒன்றினை அறுத்த திரும்பா உண்ணி நின்றிருந்தாள். அத் தெய்வத்திடம் தன் தலைவன் பிரிவினை தாங்காது வினையினை முடித்து தன்னுடன் கூடிவாழ அத்தெய்வத்திடம் வழிபட்டாள் என்ற செய்தியினை நற்றிணைப் பாடல்வரிகள் சுட்டுகிறது.

**“நல்வகை மிகுபலிக் கொடையோடு உருக்கும்**
**அடங்காச் சொன்றி, அம்பல் பாணர்**
**விடக்குடைப் பெருஞ்சோறு உள்ளுவன இருப்ப**
**மழை அமைத்து உற்ற மால் இருள் நடு நான்”**[4]

என்ற பாடல் மழைவேண்டியும் நல்ல பற்பல வகை மிகுந்த பலிச் சோற்றுக் கொடையோடு புதிய ஊன் துண்டங்களோடு கூடிய பெருவிருந்தாகப் பெறுவதற்கு அக்காக்கை கருதியிருக்கும் என்றும் பழந்தமிழர்கள் சடங்குமுறை குறித்து நற்றிணை மெய்ப்பித்துள்ளது.

## தொழில் பண்பாடு

பண்டையத் தமிழர்கள் நிலத்தின் அடிப்படையில் பலத் தொழில்களைச் செய்தனர். ஒவ்வொரு மனிதனும் அவன் சார்ந்த நிலத்தின் சூழலை வைத்து அவர்களுக்கானத் தொழிலை மேற்கொண்டனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை திணைகளிலும் அவற்றிற்கேற்ற தொழில் களையும் மேற்கொண்டனர்.

குறிஞ்சிநில மக்கள் மருதநில மக்களைப் போலவே வேளாண்தொழில் சிறந்து விளங்கினர். மருதநிலத்தில் நெற் கதிர்களை எருதுகளைக் கொண்டு அடிப்பதைப் போன்றே குறிஞ்சி நிலத்திலும் நெற்கதிர்களை அடித்து குவித்து வைத்திருந்தனர் என்ற செய்தியினை,

**“வேங்கைக் கண்ணியர் எருது எறிகளமர்**
**நிலம் கண்பன்ன அகள்கண் பாசறை”**[5]

என்னும் பாடலால் அறிய முடிகிறது.

## உணவுப்பண்பாடு

தமிழகத்தில் பல்வகை உணவுகளும், பக்குவமுறைகளும் வழக்கத்தில் தொடர்ந்து வருவது போலவே

உணவு பற்றிய பழக்கவழக்கங்கள் தொன்றுதொட்டு கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. பண்டையத் தமிழர் களிடையே உணவ உருவாக்கும் முறை காணப்பட்டதென்பதை நற்றிணையின் மூலம் அறியலாம். இதனை,

"ஆக வன முலைக் கரைவலம் தெறிப்ப
அழுதனள் உறையும் அம்மா அரிவை
விருந்து அயர் விருப்பொரு வருந்தினள் அசை இய
முறுவல் இன் நகை காண்கம்"[6]

என்ற பாடல் வரிகளல் உணவு சமைக்கும் முறையினை எடுத்துக் காட்டியுள்ளது. விருந்தோம்பல் பண்பினை,

"பழன யாமைப் பாசடைப் பார்த்து
கழனி காவலர் சுரி நந்து உடைக்கும்
தொன்று முதிர் வேளிர், குன்றூர் அன்ன என்
நல் மனை நனி விருந்து அயரும்
கை தூவின்மையின் எய்தாமாறே,"[7]

என்று நற்றிணைப் பாடல் இவற்றை வயலின் கண் உள்ள யாமையின் பசுமைமிக்க இலை போன்ற முதுகில் வயலைக் காவல் புரியும் உழவர் வளைந்த நத்தையை உடைத்துத் தின்னுகின்ற பழமைமிக்க குன்றூர் போன்ற எனது நல்ல இல்லத்தின் கண் வருகின்ற விருந்தினரை ஓம்புவதில் கையொழியாமையினால் இவ்வாறு நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களை சுவைமிக்க ஊன்உணவாக விருந்தினருக்கு விருந்து உபசரித்தலை நற்றிணைப் பாடல் வரிகள் சிறப்பித்துக் காட்டுகிறது.

## புறப்பண்பாடு

சங்க காலத்தை வீரயுகம் என்கிறோம். சங்க இலக்கியத்தில் சித்தரிக்கப்படும் போர்களையும், வீரத்தையும், தொடர்பானச் சூழல் களையும் புறப்பண்பாடு எனலாம். போர் குறித்த செய்தியை,

"புறவு அணி கொண்ட பூ நாறு கடத்திடை
கிடின் என இடிக்கும் கோல் தொடி மறவர்"[8]

என்ற நற்றிணை பாடல் வரிகள் மூலம் வெளிப்படுத்துகிறது. அதாவது மறக்குணமிக்க வீர வாளை அணிந்த மறவர்கள் கூர்மைமிக்க அம்பினாற் செய்யும் கொடுந்தொழிலை உடையவர். அம்மறவர்கள் அஞ்சாது உம்மோடு போர் செய்தலைக் கருதிவந்தனர். அவர்களை அமரில் நீவிர் அஞ்சாது போரில் வாள்வீசி சண்டையிட்டு பகைவீரனை வெற்றி அடைந்த செய்தியை நற்றிணை நமக்கு காட்டுகிறது.

பண்டைத்தமிழர்கள் தங்களுக்குத் தேவையான ஆயுதங்களை கற்களை கொண்டும், இரும்புக்கருவிகளைக் கொண்டும் செய்தனர். இக்கருவிகளைக் கொண்டு போர்புரிந்த செய்தி நற்றிணை யில் இடம்பெற்றுள்ளது. இதனை,

"கொடுவிற் காணவன் கோட்டுமா தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி போல
சேயரி பரந்த மா இதழ் மழைக்கண்"[9]

என்கிறது நற்றிணை.

## முடிவுரை

பண்பாடு என்பதன் விளக்கம் ஆராயப்பட்டதைத் தொடர்ந்து, நற்றிணை பாடல்களில் காணப்படும் பண்பாட்டுக் கூறுகள் சமூகப்பண்பாடு, தொழில் பண்பாடு, உணவுப் பண்பாடு, புறப்பண்பாடு என்னும் நான்கு வகையாக ஆராயப்பட்டுள்ளன. வழிபாட்டு முறைகளில், வேட்டையாடிய உணவைக் கடவுள்முன் படைத்து பின் உண்ணும் பழக்கம் இருந்ததையும் சில சடங்கு முறைகள் இருந்ததையும் நற்றிணைப் பாடல்கள் சுட்டுகின்றன. குறிஞ்சிநில மக்கள் மருதநில மக்களைப் போலவே வேளாண்தொழில் சிறந்து விளங்கினர் என்பதையும் நற்றிணைப் பாடல்களில் காணமுடிகிறது. சங்க கால மக்கள்

உணவை சமைத்து உண்டனர் என்பதும் விருந்தோம்பல் பண்பில் உயர்ந்து விளங்கினர் என்பதும் நற்றிணைப் பாடல்கள் வழி அறியமுடிகிறது. வீரத்திலும், போர்களிலும் தமிழர்கள் தனித்துவம் பெற்றி விளங்கியமையும் இக்கட்டுரையின்வழி அறியமுடிகிறது.

## குறிப்புகள்


1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.669, க்ரியா வெளியீடு, சென்னை, 1997.
2. சி.பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.182, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 1990.
3. பாலசுப்பிரமணியன்,கு.வெ., (உ.ஆ), நற்றிணை, பா.எ.216, பா.வ.6–8, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை, 2004.
4. நற்றிணை, பா.எ.281, பா.வ.4–7
5. நற்றிணை, பா.எ.125, பா.வ.9–10
6. நற்றிணை, பா.எ.81, பா.வ.6–9
7. நற்றிணை, பா.எ.280, பா.வ.6–10
8. நற்றிணை, பா.எ.48, பா.வ.5–6
9. நற்றிணை. பா.எ.75, பா.வ.6–8

# தமிழர் பண்பாட்டு

நெறியாளர்
**முனைவர் மா.செல்வத்தரசி**
உதவிப் பேராசிரியர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

ஆய்வாளர்
**அ.முருகேஸ்வரி**
முனைவர் பட்டம் ஆய்வாளர்
செந்தமிழ்க்கல்லூரி,மதுரை.

## முன்னுரை

தமிழருடைய வாழ்க்கையில் தலைசிறந்தது பண்பாடு ஆகும்.உலகம் முழுவதையும் தாயகமாக கொள்வது, உறவு கொள்வதே, நட்புகொள்வது தமிழரின் பண்பாடு ஆகும்.எனவேதான் புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனார் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்‘என்று பாடினார். மனிதகுலத்தின் மிகப் பழமையானது பண்பாடு, அதிலும் மிகச்வும் சிறப்பானது தமிழர் பண்பாடு ஆகும். தமிழரின் பண்பாடு உலகம் முழுவதிலும் இன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதை பண்பாட்டின் வாயிலாகத்தான் அறிய முடிகிறது. காதல், வீரம், விருந்தோம்பல், ஈகை, ஒருமைப்பாடு நாகரீகம், வாழ்க்கை முறை, போர் போன்றவை உணவை நாகரீகமாக சமைத்தவன் தமிழனே என்று பெருமை கொள்ள வேண்டும். சங்க இலக்கியங்கள் காதல், வீரம்,கொடை மற்றும் இல்லறம் அறமாகிய விருந்தோம்பலை கடைப்பிடித்து உள்ளனர். விருந்தோம்பல் தமிழரின் பண்பாட்டுக் கூறுகளின் உயிநாடியாக கருதப்படுகிறது. பண்பாடு ஒரு இலக்கிய கருப்பொருளாக கொள்ளப்படுகிறது. சங்க இலக்கியங்களைச்சான்றாதாரமாகக் கொண்டு பண்பாட்டுக் கூறுகள் இடம் பெறும் திறத்தினை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

## பண்பாடு:

மனித குலத்தின் மிகப் பழமையான பண்பாடு இந்திய பண்பாடு ஆகும். இந்திய பண்பாட்டை வடிவமைப்பதற்கு இந்திய சமயங்களான இந்து பௌத்தம் சமனம் மற்றும் சீக்கிய சமயங்கள் முக்கிய பங்காற்றி உள்ளதை அறியமுடிகிறது. ஒரு நிலையில் இந்தியா பல பண்பாடுகள் அல்லது கலாச்சாரங்களில் கலவை என்றாலும் சீன ஐரோப்பிய ஆப்பிரிக்க பூர்வீக அமெரிக்க பண்பாடுகள் போன்ற ஒரு தனித்துவமான பொது பண்பாடு இந்தியாவுக்கு உண்டு. இப் பண்பாடு பல முனைகளில் இருந்து பெறப்பட்ட தாக்கங்களை உள்வாங்கி வெளிப்பட்டு நிற்பதை காணமுகின்றது. வட இந்தியா ஆசிய பெரு நிலப் பரப்பை ஆக்கிரமித்து இருந்ததால் அது தென்னிந்தியாவை காட்டிலும் பல்வேறு ஆளுமைகளுக்கும் அல்லது தாக்கங்களும் உட்பட்டது எனலாம்.சில வரலாற்று அறிஞர்கள் தென்னிந்தியா தொடர்வாரி ஆக்கிரமிப்புகளுக்குள் உள்ளானதால் உண்மையான இந்தியப் பண்பாடு தென்னிந்தியாவிலேயே கூடுதலாக வெளிப்பட்டு நிற்பதாக வலியுறுத்துகின்றனர். தென்னிந்தியாவின் தென்கிழக்கு ஆசிய தொடர்புகள் இலங்கையுடனான உறவு, பிற கடல் வழி தொடர்புகள் இந்திய பண்பாட்டின் உருவாக்கத்திலும் பரவுதலிலும் முக்கிய கூறுகளாக அமைந்துள்ளன.

## தமிழர் பண்பாடு:

தமிழர் பண்பாடு பல காலமாக பேணப்பட்டு திருத்தப்பட்டு, செம்மைப் படுத்தப்பட்டு மேம்படுத்த பட்டு அம்சங்களை குறித்து காதல், வீரம், நட்பு, விருந்தோம்பல், ஈகை, கொடை, ஒருமைப்பாடு, நாகரீகம், வாழ்க்கை முறை, போர், போன்றவை பண்பாக் கூறுகளாக கருதப்படுகின்றன. பண்பாடு ஒரு இலக்கிய கருப்போருளாக கூறப் படுகிறது. ஒரு நிலையில் பண்புகள், புரிந்துணர்வுகள், வாழ்வியல் வழிமுறைகள், சமூக கட்டமைப்பு அறிவு பரல்கள் என்பவற்றை குறிப்பிடுகின்றது. மோழி, உணவு, இசை, நம்பிக்கைகள் தொழில்சார் தெரிவுகள், கருவிகள் போன்றவையும் பண்பாட்டுக்குள் அடங்கப் பெறுகின்றன.

பண்பாடும் உலக பார்வையில் பண்பாடு நாகரீகம் அடைந்தோர் நாகரீகமற்றோர் அல்லது பழங்குடியினர் முதலிய வேறுபாடுகளுக்கு இடம் அளிப்பதாக காணப்படுகிறது. சங்ககாலத் தமிழ் மக்கள் தெளிந்த அறிவுடன் கலைத்திறன் வல்ல நல்வாழ்வும், சிறந்த பெருந்தன்மையோடு கூடிய வாழ்க்கை, சுயமரியாதை, அழகுணர்ச்சி, மாறாத அறிவு வேட்கை போன்றவை பேரளவில் நிறைந்த பன்முக சிறப்பு வாய்ந்தது அவர் தம் வாழ்க்கையைத் துன்பம் குறைந்த தாகவும் இன்பம் நிறைந்ததாகவும் எளிமை மிக்க தாயும் ஆக்குவதற்கு மனிதன் இயயற்றிக் கொண்ட உயரியக் கொள்கையே பண்பாடு என்பதாகும். மனிதன் காலங்காலமாகப் பின்பற்றி வரும் பழக்க வழக்கங்களே நாளடைவில் சிறப்புப் பெற்ற பண்பாடுகளாக வளம் பெறுகின்றன. ஒவ்வொரு இடத்திற்கும், மக்களுக்கும் ஏற்ப பண்பாடுகள் வேறுபாடுகின்றன.

## வாழ்க்கை முறை :

பண்பாடு என்றால் “ஓர் இனத்தாரின் கொள்கைகள் கோட்பாடுகள், நோக்கங்கள், வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், சமூகச் சட்டங்கள் சமயங்கள், அரசியல் அமைப்புக்கள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், பொழுதுபோக்கு, விளை யாட்டுகள் ஆகியவற்றையெல்லாம் குறிக்கும் அத்தகைய பண்பாட்டில் தமிழர் பண்பாட்டை ஈராயிரத்து ஐநாறு ஆண்டு களாகத் தமிழ் மக்கள் வளர்ந்து வந்த இலக்கியங்கள், கலைகளும் நமக்கு இன்று பறைசாற்றுகின்றன. நல்லுணர்வும், திறமான அறிவும், அரிய மரபும் கொண்டிருந்தனர்.

## உணவு

உலகில் முதன் முதலில் உணவை நாகரீகமாக சமைத்தவன் தமிழனே என்றும் முதன் முதலில் குழம்பு செய்வதை தமிழகத்திலேயே என்றும் ஞா.தேவநேயப் பாவாணர் தாம் எழுதிய தமிழர் வரலாறு என்ற நூலில் குறிப்பிடுவதை அறிய முடிகின்றது. இஞ்சி, இலவங்கம், ஏலக்காய், மிளகு போன்றவைகளை முதன் முதலில் தமிழர்கள் தான் பயிரிட்டனர் என்பதை க.தா.திருநாவுக்கரசும் தம் தமிழ் பண்பாடு என்ற நூலில் பதிவு செய்துள்ளார். பழந்தமிழர்களின் உணவில் அரிசியே முதன்மை இடத்தை பெற்றிருந்தது. இந்த அரிசியினை ஐந்து வகைகளாகப் பிரிக்கப்படுகின்றனர். கடைக்கன்னி அரிசி, மக்கள் உணவில் சேர்த்து உள்ளதை ஆறிய முடிகின்றது. பல்வேறு நெல் வகைகள் இருந்துள்ளதை காண முடிகின்றது. இந்த நெல் வகைகளை 23 என்று முக்கூடற்பள்ளு இலக்கியம் கூறுகின்றனர்’ சித்திரக் காலி,வாலான், சிறை மீட்டான் மணல் வாரி’ செருசாலி, செந்நெல், போன்ற நெல் வகைகள் உள்ளன உமிப்போக குத்துவதற்கு முன்னர் பயன்படுத்தும் அரிசையை தமிழர் புழுங்கல் அரிசி என்று குறிப்பிட்டார்கள். குத்தப்பட்டு

உமியும்,தவிடு நீக்கிய அரிசையை குத்தல் அரிசி என்றும், சத்தம் செய்யப்படதா அரிசையை கொழியல் அரிசி என்றும் கூறுகின்றனர். தமிழர் புழுங்கல் அரிசியை மிகவும் விரும்பி உண்டனர்தமிழர்கள் உணவில் அரிசியே அதிகம் பயன்படுத்தப்படும். சோற்றை வேறாகப் பிரித்து அறிய இயலாத ஊணும் துவையலுமாகக் காணப்படும்.

**நிலம் பெறு திணி தோள் உயர ஓச்சி**
**பிணம் பிறங்கு அருவத்து, தணங்கை ஆடி,**
**சோறு வேறு என்னா ஊண் துவை**
**அடிசில்** (பதி.45.11-13)

பகைவரைத் தோல்வியடையச் செய்து அவர்பால் பொருள்களை கள்ளை விற்றலையுடைய கடை தெருவில் கள்ளுக்குரிய சிறந்த விலையின் பொருட்டு கொடுத்ததற்கு இடமாய் இருப்பது வெள்வரகு பயிரையும் கொள்ளு பயிரையும் உடையதும் ஆகிய கரம்பாகிய வலிய காட்டு நிலத்தில் சென்று தங்கி இருந்து அங்கு விளையும் வெள்வரகு சோற்றினை உண்பதன்றி செந்நெல்லாகிய உணவை அறியாதிருந்தர்.

**வெள்வரகு உழுத கொள்ளுடைக் கரம்பைச்**
**செந்நெல் வல்சி அறியார் நத்தம்**
(பதி 75.11-12)

## விருந்தோம்பல்

சங்க இலக்கியங்களில் காதல், வீரம், கொடை மட்டுமின்றி இல்லற அறம் ஆகிய விருந்தோம்பலை சிறப்பித்தது போற்றினர் விருந்தோம்பல் தமிழரின் உயிர்நாடியாகவும் பசிப்பிணி போக்க கூடியவர்களாகவும் தமிழர்கள் இருந்தள்ளனர்.மன்னன் விருந்து போன்றறலை அறம் என்று கருது கின்றனர் “மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி” என்று மன்னனை போன்று மக்களும் விருந்தோம்ப கூடிய மனப் பான்மையைப் பெற்றிருந்தனர் மன்னன் விருந்தளித்த மாண்பினை சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தை பாடிய குமட்டூர் கண்ணனார் என்ற புலவர் நெடுசேரலாதனை வாழ்த்தும் முகாமாக பல ஆண்டுகளாக உலகத்து உயிர்கள் எல்லாம் அறியுமாறு மேகம் மழை பொழிவதாயினும் பரிசில் மக்கள் பசியறியாதவாறு ஈவான் என்று போற்றிப் பாடுகிறார். நீண்டாள் பசியை போக்க மாமிசம் கலந்த வெண் அணிகலன்களையும் வழங்கி சிறப்பித்துள்ளதை அறிய முடிகிறது.

**எஃகு போழ்ந்து அறுத்த வாள் நிண**
**கொழும் குறை**
**மை ஊன் பெய்த வெண்ணெய் சோறு**
**நானை அமை கள்ளின் தேறலோடு மாந்தி**
(பதி.12:16-23)

இந்திரனிடம் அமிர்தம் பெற்றாலும் அதனை தனியாக உண்ணாமல் பகிர்ந்து உண்ணும் பண்பு பழந்தமிழ் மக்களிடம் இருந்துள்ளது கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதியின் பாடலின் மூலம் தலைமை சான்றுவனும் ஆகிய எம் வேந்தன் சிறப்புடையவன்.வேந்தனின் கூறிய நுனியை அறிய மூடிகிறது.

**உண்டாயின் பதம் கொடுத்து**
**இல்லாயின் உடன் உண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன்**
(புறம் 95.6-9)

## இசை

சங்க இலக்கியங்களில் இசைக் கருவிகள், பண்கள், இசைவாணர்கள் பற்றிய செய்திகள் இடம் பெறுவதை காணமுடிகிறது. இசை கலை மிகவும் தொன்மையான திணை வாழ்க்கைக் காலத்திலேயே ஒவ்வொரு நிலத்திற்கும் பன் வகைகளும், இசைக்கருவிகள் தோன்றி இசையை மேலும் வலுவடைய செய்தன பல்வகையான இசைக் கருவிகளை இசைத்து இசை கலையை வளர்த்துள்ளனர். என்னும் தொல்காப்பியம் நூற்பா இசைத்தமிழ்ன்

தொன்மையை காட்டுகிறது.

**அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிய இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்**
**(தொல்.33)**

இலக்கியங்களில் குறிப்பாக பாணர்கள் பற்றிய செய்திகள் அதிக மாகவே இடம்பெறுகின்றன. பண் இசைத்து பாடுவதாலும் பண்ணுக்கு ஏற்றப் பாடல்களை எழுதுவதாலும் அவர்கள் பாணர்கள் என்று அழைக்கப் பட்டனர்.

## யாழ் வாசிப்பில் அரனை புகழ்ந்து பாடுதல்

யாழ் இசைத்து பாடுபவர்கள் யாழ்ப்பாணர்கள் என்று அழைக்கப் படுவர் சிறுபாணாற்றுப்படையில் யாழ் இசைத்து அரசனைப் புகழ்ந்து பாடும் செய்திகள் இடம் பெற்றுள்ளன. ஐம்பெரும் குறவர் முதியோர்க்கு குவித்த கைகளை உடையயோய், வீரர் படைக் கருவிகள் எறிவதற்கு காட்டின மார்பினை உடையோய், ஏரினை யுடைய குடிமக்களுக்கு நிழல் செய்த செங்கோலை உடைய அரசனே என்று அரசனை யாழ் இசைத்து பாடுகின்றனர்.

**ஏரோர்க்கு நிழன்ற கோலினை எனவும்**
**தோரோர்க்கு அழகுன்ற வேலினை எனவும்**
**நீ சில மொமியா அளவை (சிறு.226-235)**

## கொடை

ஈகை, கொடை, கற்பகம் என்றும் பொருள் தருகிறது சென்னை பல்கலைக்கழக தமிழ் பெயர் அகராதி தமிழ் அகர முதலி கொடை என்ற சொல்லுக்கு ஈகை தியாகம் போன்ற கையாண்ட ஆநிரையை இரவலர்க்கு கொடுத்தும். ஈகைக்கும் கொடைக்கும் உள்ள வேறுபாட்டினை கூறுகின்றனர்.

**உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**செல்வந்துப் பயனே ஈதல் (புறம் 187:6-7)**

உடுக்கப்படுபவை அரை ஆடை, மேலாடை என இரண்டே இவை போல பிற உடல் உள்ள தேவைகளும் ஒன்றாகவே இருக்கின்றன.உண்பது உடுப்பது ஆகிய செயல் இரண்டிலும் அரசனும் ஆண்டியும் ஒன்றாதலால் பெற்ற செல்வத்தால் செய்ய வேண்டி யதே ஈதலாழ் என்று உலகோர்க்கு எடுத்துரைக்கிறது.

## முடிவுரை

பண்டைத் தமிழர்கள் பண்பட்ட வாழ்வினை பண்பாட்டுடன் வாழ்ந்துள்ளனர் என்பதை இக்கட்டுரை யின் வாயிலாக அறிய முடிகிறது. யாழிசைத்து இறைவனுக்கு தொண்டு செய்யும் பண்பாடு இசையின் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது. தமிழ் சமுதாயத்தின் நல்ல துணை யாக வரலாறு தோறும் நிற்பவை இலக்கியங்களே அத்தகைய இலக்கியங் களின் துணைக் கொண்டு தான் சமுதாயத்தில் பண்பாடு, வாழ்வு, வளர்ச்சி, வெற்றி, கொள்கைகள் இன்னும் பல பண்பாட்டுக் கூறுகளை அறிய முடிகிறது இசை தமிழர் உணவு முறைகள் போன்ற பற்றியும் பல்வேறு இலக்கியங்களில் இடம்பெற்ற செய்திகள் மேற்காணும் கட்டுரைகளில் கூறப்படுவதே இவ்வாய்வின் முடிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

## குறிப்புகள்

1. பேராசிரியர் அ.மாணிக்கம் எம்.ஏ., அறிஞர் அண்ணா நூற்பதிப்புக் கழகம் புறநானூறு (2013), பத்துப் பாட்டு (2013), சென்னை 17
2. பரிமேழகர் உரை (2014 )புலியூர்க்கேசிகன் பூம்புகார் பதிப்பகம் சென்னை –13
3. தொ.பரமசிவன் (2022)பண்பாட்டின் வாழ்வியல் அம்பத்தூர் சென்னை.

# தமிழ் இலக்கிங்களில் பண்பாட்டு வளங்கள்

**முனைவர் போ.முனியாண்டி**
தமிழ்த்துறைத் தலைவர்
அன்னை பாத்திமா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஆலம்பட்டி, திருமங்கலம், மதுரை -625 706

'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' 'பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்' என்னும் தொடர்கள் பண்பாட்டின் மேன்மையை எடுத்தியம்புகின்றன. பண்டைத் தமிழர் சீர்த்த நாகரிகமும் உயர்ந்த பண்பாடும் கொண்டிருந்தனர். இலக்கியங்கள் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பதற்கு ஏற்ப மக்களின் வாழ்வியல்களையும் பண்பாட்டையும் காக்கும் கருவூலமாகவும் திகழ்கின்றன. சங்கப்பனுவல்களில் பண்பாட்டுப் பதிவுகளை எடுத்தியம்புவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## நில அமைப்பு முறை :

பண்டைத்தமிழர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நிலஅமைப்பு முறையில் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். தனக்கு கிடைத்துள்ள இயற்கைச் சூழலுக்கு ஏற்ப வாழ்க்கை முறைகளை வகுத்து பண்பட்ட உள்ளத்தோடு வாழ்ந்து வந்தான். சங்க இலக்கியங்கள் பண்பாட்டுக் கருவூலமாகவேத் திகழ்கின்றன.

## விருந்தோம்பல் :

'விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே'[1] என்பான் தொல்காப்பியன். மருந்தே ஆயினும் விருந்தோடு உண்"[2] என்றார் ஔவையார்.

"செல்விருந்தோம்பி வருவிருந்து
பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்த வருக்கு"[3]
குறள் எண்-86

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"[4]
குறள் எண்- 82

என்றுரைத்தான் வான்புகழ் வள்ளுவன்.

இல்லறத்தின் தலையாய நெறியாக விருந்தோம்பல் பின்பற்றப்பட்டது. முகமலர்ந்து உபசரிக்கும்போது விருந்துப்பொருள் உப்பில்லாக் கூழாக இருந்தாலும் சிறந்தது என்பதை

"ஒப்புடன் முகம் மலர்ந்து
உபசரித்து உண்மை பேசி
உப்பில்லாத கூழிட்டாலும்
உண்பதே அமுதமாகும்
முப்பழமொடு பாலன்னம்
முகம் கருத்து ஈவாராயின்
கப்பிய
பசியினோடு கடும்பசி ஆகுமன்றோ"[5]

என்ற பாடலால் அறியலாம்.

## வள்ளுவரும்

"மோப்பக் குழையும் அனிச்சம்
முகந்திரிந்து
நோக்கக் குழையம் விருந்து"[6]
குறள் - 90

என்று கூறியுள்ளார்.

திருவிழாக்காலங்களில் பெரிய பானைகளில் உணவு தயாரித்து சுற்றத் தாருக்கும் விருந்தினருக்கும் பைந்நிணம் கலந்த நெய் சோற்றை விருந்தாக வழங்கியுள்ளனர் என்பதை

**"சாறு அயர்ந்தன்ன மிடா அச்சொன்றி**
**வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப**
**மலரத் திறந்த வாயில் பலருணப்**
**பைந்நிணம் ஒழுகிள நெய்மலி அடிசில்**
**வசையில் வான்திணைப் புரையோர் கடும்பொடு**
**விருந்துண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை**
**நின்னோடு உண்டலும் புரைவது**
**என்றுஆங்கு"**[7]

குறிஞ்சிப்பாட்டு பா-வரி *205 -212*

## அஃறிணைப் பொருளையும் உறவினராக நினைக்கும் பண்பாடு:

ஒரு புன்னை மரத்தின் நிழலில் தலைவனைச் சந்தித்து மகிழும் தலைவி தோழிகளோடு விளையாடும்போது மறந்த புன்னைக் கொட்டை வளர்ந்து மரமாகியது அன்னை இந்த புன்னை மரம் உன்னை விடச் சிறந்தது உனக்கு சகோதரியாகும் என்று பன்னை மரத்தின் விறப்பினைக் கூறினாள். நெய் பால் பெய்து இனிது வளர்த்து வந்தேன். எனது சுகோதரியின் நும்மொடு பேச நாணமாக உள்ளது. எனக்கூறும் தலைவியின் கூற்றால் அஃறிணை உயிரினையும் சகோதரியாகப் பார்க்கும் பண்பாட்டினை அறியலாம். இதனை

**"விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ்முளைஅகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப**
**நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று**
**அன்னை கூறினால் புன்னையது சிறப்பே**
**அம்ம நாணுதும் நும்மொடு நகையே"**[8]

*நற்-172*

என்ற நற்றிணைப்பாடல் புலப்படுத்து கிறது.

## இல்லறப் பண்பாடு :

பண்டைத்தமிழர் இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு வாழ்ந்தனர். திருமணம் முடித்து தலைவனது இல்லத்திற்குச்சென்றதலைவியைஎண்ணி வருந்திய நற்றாய்க்கு செவிலித்தாய் கூறும் மறமொழியில் தலைவியின் இல்லற மாண்பு புலப்படுகிறது. "தலைவி செல்வந்தர் வீட்டுப்பெண். தன் வீட்டில் செல்லமாக வளர்ந்தவள். அவளுக்கு சமைத்துப் பழக்கமில்லை. தலைவனின் இல்லத்தில் எவ்வாறு இருக்கின்றாளோ" என்று வருந்துகின்றாள் நற்றாய். அதனைக் கண்ட செவிலிதாய் தலைவி மோர்க்குழம்பு வைத்து பரிமாறியதையும் கணவன் இனிது என்று உண்டதால் மகிழ்ந்த தலைவியையும் தான் கண்தாகக் கூறுகின்றாள். இதனால் தலைவியின் இல்லற மாண்பினை அறியலாம். இதனை

**"முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாதுடீகஇக்**
**குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவனுண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல்**
**முகனே"**[9] குறு-*167*

என்ற குறுந்தொகைப்பாடல் புலப்படுத்து கிறது.

இல்லறத்தில் தலைவனும் தலைவியும் மனஒருமித்து வாழும் வாழ்க்கையே சிறந்தது. இதனை ஐங்குறுநூற்று செவிலக் கூற்றுப்பத்து பாடலில் காணலாம். தலைவன் தன் புல்வனைத்தழுவ மென்மொழிப் புதல்வன் தாயோ இருவரையும் தழுவி உறங்குகின்றாள் இக்காட்சி உலகம் முழுவதும் கிடைத்தால் கிடைக்கும் இன்பத்திற்கு நிகரானது என்கிறாள் செவிலி இதனை

"புதல்வன் கவையினன் தந்தை மென்மொழிப்
புதல்வன் தாயோ இருவரும் கவையினள்
இனிது மன்றஅவர் கிடக்கை
நனிஇரும் பரப்பின் இவ்உலகுடன் உறுமே"[10]
ஐங்.பா.எண் -9 (செவிலிக் கூற்றுப்பத்து)

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலால் அறியலாம்.

## வீரத்திலும் விவேகம் :

பண்டைத் தமிழர் காதலையும் வீரத்தையும் தம் உயிரென மதித்தனர்.

வீரத்திலும் பண்பாட்டைக் கையாண்டனர். படைக்கலம் இல்லாதவரோடு போரிடுவதில்லை. போர் செய்வதற்கு முன் நாட்டு மக்களின் பாதுகாப்பை மனதில் கொண்டு செயல்பட்டனர். போரிடுவதற்கு முன் பறையறைந்து அறிவித்தனர். இதனை

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வரைப் பெறாதீரும்
எம்அம்பு கடிவிடுதும்
நும் அரண் சேர்மின் என"[11] புறம் :9

## கற்றலில் பண்பாடு :

கல்வி கற்றல் இன்றியமையாத ஒன்று. பிச்சை ஏற்றாவது கற்க வேண்டும் என்றுரைக்கின்றார் அதிவீரராம பாண்டியன்

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"[12]
வெ.வே. பா -34

கல்லான் மூத்தவனை இவ்வுலகம் மதியாது இளைஞனாயினும் கற்று இருந்தால் அவனைப்பாராட்டும் இவ்வுலகு. இதனை

"திரியழல் காணின் தொழுப விறகின்
எரியழல் காணின் இகழ்ப ஒருகுடியில்
கல்லாத மூத்தானைக் கைவிட்டு கற்றான்
இளமை பாராட்டும் உலகு"[13]
நாண்.பா.63

நன்மரம் எது என்று ஆராயின் காட்டகத்தே அடர்ந்து நிற்கும் மரங்களெல்லாம் நன்மரமல்ல. ஆனால் கல்வி கற்காமல் சபை நடுவே நீட்டோலை வாசிக்க இயலாமல் நிற்பவனை நன்மரம் என்கிறது மூதுரை. இதனை,

"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன்; மரம்"[14] மூதுரை பா- 13

என்ற பாடல் மூலம் அறியலாம்.

## வணிகத்தில் பண்பாடு :

பண்டைத் தமிழகத்தில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என நான்கு வருணத்தார் வாழ்ந்தனர். அவரவர் செய்யும் கடமைகளில் பண் பாட்டைப் பின்பற்றினர். வணிகர்கள் வணிகத்தை பண்பாட்டோடு நடத்தி வந்தனர். வணிகத்தில் கொடுக்கும் பொருள் குறைவு படாது கொள்வதும் மிகை கொள்ளாது வியாபாரம் செய்தனர் என்பதை கடியலூர் உருத்திரங் கண்ணனார் பட்டினப் பாலையில் பதிவு செய்துள்ளார்.

"கொள்வது உம் மிகை கொள்ளாது
கொடுப்பது உம்குறை படாது"[15]
பட்டின- பா- 210-211

## வள்ளுவரும்

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணி
பிறவும் தமபோற் செயின்"[16]
குறள் எண் -120

என்று குறிப்பிட்டுள்ளார்.

## கொடைப் பண்பாடு

பண்டைய தமிழர் வீரத்தில் சிறந்து விளங்கியதைப் போல வள்ளல் தன்மையிலும் சிறந்து விளங்கினர். வலது

கை கொடுப்பதை இடது கை அறியாது வழங்கும் தன்மை பெற்றிருந்தனர். திருவள்ளுவரும்

“ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு”[17] குறள்-231

என்று குறிப்பிட்டுள்ளார். புறநானூறோ செல்வத்துப் பயனே ஈதல் என்று குறிப்பிடுகிறன்றது.

“தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக்குமே
அதனால் செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே”[18]
புறம்-189

சங்க கால சோழன் நலங்கிள்ளி “ஈயென இரப்பவர்களுக்கு தன் நாட்டையே வழங்கும் வள்ளல் தன்மை உடையவனாகக் காட்சியளித்தான். மேலும் தன் இன்னுயிரையும் ஈவதற்கு இசைந்தான். இக்கருத்தினை

மெல்ல வந்தென் நல்லடி பொருந்தி
ஈயென இரக்குவர் ஆயிற் சீருடை
முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்
இன்னுயிர் ஆயினுங் கொடுக்குவன்....[19]
புறம் - 73

## முடிவுரை

பண்டைய தமிழர் காதல், வீரம், கொடை, விருந்தோம்பல், பிற உயிர்களை மதித்தல், தொழில் ஆகியவற்றில் பண் பாட்டுடன் செயலாற்றியதோடு வருங்கால சந்ததியர் பின்பற்றுவதற்கு ஏற்ற பின்புலங்களை பதிவு செய்துள் ளனர். பண்பாடு காப்போம் பார் போற்ற உயர்வோம்.

## அடிக்குறிப்புக்கள்

1. தொல்காப்பியம்
2. கொன்றை வேந்தன்
3. புலியூர்க் கேசிகன், திருக்குறள் உரை புதிது, பக்.731
4. மேலது, பக்.731
5. விவேக சிந்தாமணி
6. புலியூர்க் கேசிகன், திருக்குறள் உரை புதிது, பக்.732
7. குறிஞ்சிப்பாட்டு
8. புலியூர்க் கேசிகன், சங்க இலக்கியம், பக்.177
9. மேலது, பக்.176
10. மேலது, பக்.567
11. மேலது, பக்.12
12. வெற்றிவேற்கை
13. புலியூர்க் கேசிகன், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.
14. மூதுரை
15. புலியூர்க் கேசிகன், சங்க இலக்கியம
16. புலியூர்க் கேசிகன், திருக்குறள் உரை புதிது, பக்.735
17. மேலது, பக்.749
18. புலியூர்க் கேசிகன், சங்க இலக்கியம், பக்.192
19. மேலது, பக்.90

# தமிழர் வாழ்வியலில் அடைக்கலம் போற்றல்

**முனைவர் பீ. மெர்சிகுளோரி,**
உதவிப்பேராசிரியர்,
தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை
மற்றும் அறிவியல் கல்லூரி,
பெரம்பலூர்.

## முன்னுரை

உலக மொழிகளிலேயே தமிழ்மொழி மட்டும் தான் வாழ்வியலுக்கான இலக்கணத்தை வகுத்துள்ளது. தமிழர்கள் தங்களது வாழ்க்கை முறையினை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐவகை நிலங்களாகப் பகுக்கப்பட்டு ஒரு வரையறை கொண்டு வாழ்ந்து வந்தனர். உலகப் பண்பாடுகளிலேயே தமிழர் பண்பாடு மிகச்சிறந்த பண்பாடாக உலகளவில் போற்றப்பட்டு வருகிறது. ஒருவனுக்கு ஒருத்தி, விருந்தோம்பல் உறவுகளைப் போற்றுதல் போன்றவை தமிழர் பண்பாட்டுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இவ்வுலக உயிரினங்கள் அனைத்தும் ஏதோ ஒன்றைச் சார்ந்தே வாழக்கூடிய சூழல் உள்ளது. அவ்வாறு தன்னிடம் அடைக்கலம் அடைந்தவர்களைக் காப்பாற்றுவதே சிறந்த சால்பும் செம்மையும் கொண்ட சான்றோனுக்கு எடுத்துக்காட்டாகும்.

## பிறர்நலம் பேணல்

பிறருக்கு உதவி செய்யும் பண்பு மனிதப்பண்புகளில் குறிப்பிடத் தக்கதாகும். சிலப்பதிகார மதுரைக்காண்டத்தில் அடைக்கலக் காதை என்ற ஒருகாதையே இடம் பெறுகிறது. கோவலன் தன் பொருளை யெல்லாம் இழந்து பொருளீட்டுவதற்காக மதுரைக்குச் சென்ற போது கண்ணகிக்கும், கோவலனுக்கும் மாதரி தன் இல்லத்தில் அடைக்கலமளிக்கிறாள். தங்களை அடைக்கலமாக வந்தோரைக் காக்க வேண்டும் என்ற அறநெறியினைக் கடைபிடித்து வாழ்ந்துள்ளனர். புகைவனின் தம்பி என்றும் பாராது தன்னை அடைக்கலமாக அடைந்த வீடணனுக்கும் புகலிடம் தந்தவன் இராமபிரான். பிறரது துன்பங்களைத் தன்னுடையவை போல் பாவித்து அத்துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதே உயர்ந்த பண்பாகும்.

"தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"
(புறநானூறு 182)

என்று புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது. தனக்குக் கிடைத்த அரியவகை ஆயுள் நீட்டிக்கும் நெல்லிக் கனியைத் தமிழ்மீது கொண்ட பற்றின் காரணமாக அதியமான் ஔவைக்குக் கொடுத்தான். தன் கன்றை இழந்து நீதி கேட்ட பசுவிற்காக தன் மகனையே தேர்க்காலில் இட்டான் மனு நீதிச்சோழன். தன்னிடம் அடைக்கலமாக வந்த புறாவிற்காக தன் தொடைச் சதையை அரிந்து கொடுத்தான் சிபிச்சக்கரவர்த்தி. குளிரில் நடுங்கும் மயிலின் துயர் துடைக்க தன் போர்வையைக் கொடுத்தான் பேகன். தேர்க் காலில் பட்டால் துன்பப்படுமோ என்று நினைத்து தன் தேரையே

முல்லைக்குக் கொடுத்தான் பாரிவேந்தன். இப்படி பிறர் துன்பத்தைத் தன் துன்பம் போல் நினைப்பவர்கள் தமிழினத்திற்கே பெருமை சேர்ப்பவர்கள்.

**"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலின் பெரிது" (திருக்குறள் 103)**

முன்பின் தெரியாத ஒருவருக்கு உரிய நேரத்தில் செய்யப்படும் உதவி சிறியதாயினும் அது கடலைவிடப் பெரியதாக எண்ணப்படும் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். முற் காலத்தில் பசுவுக்கு முதுகு தினவெடுத்து அரிக்கும் போது உராய்ந்து கொள்வதற்காக, அப்பசுக்கள் உலாவும் இடங்களில் ஆவுரிஞ்சுக்கல் என்னும் கல்லை நட்டுவைப்பர். அதேபோல் பழங் காலத்தில் வீடு கட்டும்போது சிட்டுக் குருவிகள் வந்து தங்குவதற்கு மரத்தடுப்பு வைத்திருப்பர். இவ்வாறு அனைத்து உயிர்களையும் பாதுகாக்கும் மனிதநேயம் தமிழர்களிடம் காணப்பட்டது.

**"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்"**
**(புறநானூறு 195)**

என்ற வரிகளுக்கேற்ப வாழ்ந்து காட்டியவர்கள் நம் தமிழர். பிறருக்கு உதவுதல் என்பதை சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

**"பிறர்நோயும் தம்நோய் போல்போற்றி அறன்அறிதல்**
**சான்றவர்க்கு எல்லாம் கடன்"**
**(கலித்தொகை 139)**

என்ற பாடல்வரிகளால் தமிழர் பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதினர் என்பது புலனாகிறது.

**ஈகை**

மனிதனாய் பிறந்துவிட்ட பிறகு, தான் மட்டும் வாழ்ந்துவிட்டுச் செல்லாமல் மற்றவர் வாழ்க்கைக்காகவும் சிறிதளவாவது சிந்திக்க வேண்டும். அப்படிப்பட்ட மனப்பக்குவம் உள்ளவன் மேலான இடத்தில் வைத்து சமூகத்தால் போற்றப்படுவான். வீரத்தில் சிறந்து விளங்கிய மன்னர்கள் கொடை வள்ளல்களாகவும் திகழ்ந்தனர். அரசர்கள் தம்மை நாடிவந்த புலவர், பாணன், பாடினி, கூத்தர், விறலி போன்றோர்க்குப் பொருள் கொடுப்ப தோடு நின்றுவிடாமல் உடுக்க உடையும், உண்ண உணவும் கொடுத்து மகிழ்ந்தனர்.

**"வறியவர்க்கு ஒன்றுஈவதே ஈகை மற்றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீரது உடைத்து"**
**(திருக்குறள் 221)**

எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் ஒருவருக்கு ஈவதே உயர் பண்பாகும் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். ஈகையின் சிறப்பை அறிந்தவர் ஈதல் செய்யமுடியாத நிலையில் தன்னையும் தானமாகக் கொடுக்கும் தகுதியைப் படைத்தவர்களாக இருந்திருக்கின்றனர். மகாபாரதக் கதையில் கர்ணனுக்கு கவச குணடலம் தான் மிக முக்கியம். அதை இழந்தால் தனக்கு தோல்வி நேரிடும். தன் உயிரையே இழக்க நேரிடும் என்பது கர்ணனுக்குத் தெரியும். இருப்பினும் தன் உயிரையும் பொருட்டாகக் கருதாமல் கர்ணன் மனமுவந்து தன்னுடைய கவசகுண்டலத்தைக் கழற்றிக் கொடுத்தான்.

**"நீயோ தர்மம் செய்யும்போது உன்தர்மம் அந்தரங்கமா யிருப்பதற்கு உன்வலதுகை செய்கிறதை உன்இடது அறியாதிருக்கக்கடவது" (பைபிள். மத்தேயு 6: 3)**

நாம் ஒருவருக்கு உதவி செய்யும் போது மற்றவர்களுக்குத் தெரியாமல் செய்ய வேண்டும்.

**"இல்லா இடத்தும் இயைந்த அளவினால் உள்ள இடம்போல் பெரிது உவந்து மெல்லக் கொடையொடு பட்ட குணம் உடைய**

மாந்தர்க்கு
அடையாவாம் ஆண்டைக்கதவு”
(நாலடியார் 19)

தன்னிடம் வந்து இல்லை என்று கேட்பவருக்கு இல்லை என்று கூறாமல் இருக்கின்ற பொருள்களைக் கொடுத்து உதவுவதே தமிழர் பண்பாகும்.

## பகுத்துண்ணல்

பாரோர் போற்றும் சிறந்த அறங்களுள் ஒன்று பகுத்துண்ணல். இதனை வள்ளுவர்,

“பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை”
(திருக்குறள் 322)

என்ற பாடலின்வழி பகுத்துண்ணாமை கொலைக்கு நிகரானது என்னும் கருத்தை எடுத்துரைக்கிறார். பகுத்துண்ணல் என்பது மனிதர்களோடு மட்டுமன்றி நம்மைச்சுற்றியுள்ள மிருகங்களோடும், பறவைகளோடும், இன்ன பிற உயிரினங்களோடும் இருக்க வேண்டும் என்பது பொருளாகும்.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்”
(புறநானூறு 192)

என்ற கணியன் பூங்குன்றனாரின் பாடல் வரிகள் அனைவரையும் தம் உறவினராகக் கருதும் தமிழரின் மனப்பாங்கை எடுத்துரைக்கிறது. பழங்காலத்தில் வீடுகட்டும் போது ஒவ்வொரு வீட்டிலும் பெரிய திண்ணைகள் அமைத்து கட்டுவர். ஏனெனில் கால் நடையாக நடந்து செல்லும் வழிப் போக்கர்கள் களைப்படையும் போது தங்கி ஓய்வெடுப்பதற்காக இவ்வாறு திண்ணைகளை அமைத்தனர்.

“பெற்றது மகிழ்ந்து சுற்றமிருத்தி
ஓன்பது உண்டு கூம்பாதுவீசி”
(புறநானூறு 47:4)

வறுமையில் வாடிய புலவர் பெருமக்கள் வள்ளல்களிடம் சென்று பாடி தாம் பெற்ற பரிசுப் பொருள்களைத் தாம்மட்டுமே வைத்து அனுபவிக்க மாட்டார்கள். தன்னோடு சேர்ந்த சுற்றத்தார்களுக்கும் கொடுத்து மகிழ்வர் என்று கோவூர்கிழார் இப்பாடலின்வழி எடுத்துரைக்கிறார்.

“பகுத்துண்டொகுத்த வண்மை”
(பதிற்றுப்பத்து)

பிறரோடு பகிர்ந்துண்டு வாழும் பண்புடையவராகச் சங்கத்தமிழர்கள் வாழ்ந்துள்ளனர்.

## விருந்தோம்பல்

சங்ககாலத்தில் பெரிதும் போற்றப்பட்ட அறம் விருந்தோம்ப லாகும். தொல்காப்பியர் பெண்ணின் இலக்கணம் கூறும்போது விருந்தோம்பல் பண்பாட்டையும் சேர்த்துக் கூறுகிறார். வரக்கூடாத நேரத்தில் விருந்தினர்வரினும் முகம்கோணாது பேணும் பெண்ணை நற்றிணையில் காண்கிறோம்.

“அல்லிலாயினும் விருந்துவரினும்
உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியால்”
(நற்றிணை 142)

அதேபோல் இல்லத்தாள் விருந்தினர்களை உபசரிப்பதில் போற்றப் படுகிறாள். காரைக்கால் அம்மையார் தனது கணவன் கொடுத்தனுப்பிய கனிகளுள் ஒன்றனை சிவனடியார்க்குக் கொடுக்கிறார். இதனை,

“நல்லநறு மாங்கனிகள் இரண்டினில்
ஒன்றைக்கொண்டு
வல்விரைந்து வந்தனைந்து படைத்து
மனமகிழ்ச்சியினால்
அல்லல் தீர்ப்பவர் அடியார்தமை அமுது
செய்வித்தார்” (பெரியபுராணம் 20)

என்ற பெரியபுராணப் பாடல் விளக்குகிறது. தன்னைத் தேடிவரும் விருந்தினரை நாள்தோறும் உபசரித்து வாழ்பவன் வாழ்க்கை வறுமையெனும்

துன்பத்தால் அழிவதில்லை. இதனை,

“வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவத்து பாழ்படுதல் இன்று”

(திருக்குறள் 83)

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். தமிழர்கள் தங்களுடைய குடும்பம் வறுமையில் இருந்தபோதிலும் மற்றவர்க்கு விருந்து போற்றிச் சிறப்பித்துள்ளார்கள். அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் இளையான்குடி மாற நாயனார். மழைநாள் இரவில் இல்லம் வந்த சிவனடியாருக்கு உணவு படைக்கும் நோக்கத்தோடு மனைவியின் ஆலோசனையைக் கேட்டு அடியாருக்கு விருந்து படைத்தார். தம்மை நாடிவரும் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று உண்டி முதலியவைகளை அளித்துமிக்க அன்போடும் ஆர்வத்தோடும் அவர்களை உபசரிப்பது இல்வாழ்க்கைக்கு தலைசிறந்த பண்பாகத் தமிழர்கள் போற்றினர். ‘மருந்தாயினும் விருந்தோடு உண்’ என்பது ஔவையின் வாக்கு. தமிழர்கள் விருந்தினர் வராத நாட்களை வீணான நாட்களாகக் கருதினர். தேவர்கள் உலகத்திலுள்ள அமிழ்தமே கிடைத்தாலும், தான் மட்டும் உண்ண விரும்பாதவர்கள் தமிழர்கள்.

## முடிவுரை

தமிழர்கள் அறத்தையும், வீரத்தையும் இருகண்ணெனக் கொண்டு வாழ்ந்தனர். போர்களத்தில் ஒரு வீரன் வெற்றியடைந்து கிடைத்த பொருள் களைக்கூட தான் மட்டுமே அனுபவிக்க வேண்டும் என எண்ணாமல் தனது சுற்றத்தார்க்கும் பகிர்ந்தளிப்பான். ஒவ்வொருவரும் தன் தேவைகளையும், தன்னைச் சார்ந்தவர்களின் எதிர் பார்ப்புகளையும் பூர்த்தி செய்ய முயற்சிக்கிறான். பிறருக்கு பேருதவிகளை செய்துவரும் ஒருவர் இறந்த பின்பும் பேசப்படுவான். மனிதன் இன்னொரு மனிதனைப் பற்றி யோசிக்கும் நிலை யிலேயே மனிதாபிமானம் தோன்றுகிறது. தமிழர்களின் தலைசிறந்த பண்பான அடைக்கலம் போற்றலில் பிறருக்கு உதவும் பண்பு, ஈகை, பகுத்துண்ணல், விருந்தோம்பல் அனைத்தும் உள்ளடங்கு கிறது.

# நற்றிணையில் பண்பாட்டுப் பதிவுகள்

**சு.ராஜலட்சுமி,**
முழு நேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
பதிவுஎண்- *19111244022010,*
தமிழ்த்துறை மற்றும் தமிழியல் ஆய்வு மையம்,
சாராள்தக்கர் கல்லூரி(தன்னாட்சி),
திருநெல்வேலி - 07,

நெறியாளர்:
**முனைவர் ஆ.ஜோஸ்பின்ரேணுகா,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
ஹோலிகிராஸ் ஹோம்சயின்ஸ் கல்லூரி,
தூத்துக்குடி

இணைநெறியாளர்
**முனைவர் சா.தேவநேசம்மேபல்,**
இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்,
தமிழ்த்துறை மற்றும் தமிழியல் ஆய்வு மையம்,
சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி-07.

## முன்னுரை

ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், புரிந்துணர்வுகள், வாழ்வியல் வழிமுறைகள், சமூக கட்டமைப்புகள், மொழி, உணவு, இசை, சமயம், நம்பிக்கைகள், தொழில்சார் தெரிவுகள், கருவிகள், போன்றவை பண்பாட்டுக்குள் அடங்கும். பொதுவாக இது மனிதரின் நடவடிக்கைகளை குறிக்கிறது எனலாம். இது பண்பாட்டின் வெவ்வேறு வரைவிலக்கணங்கள், மனித செயல்பாடுகளை விளக்கி கொள்வதற்கான அல்லது அவற்றை மதிப்பிடுவதற்குரிய அளவுருக்களான வெவ்வேறு கோட்பாடுகளை பிரதி பலிக்கிறது எனலாம். சங்க இலக்கியம் முழுவதும் பண்பாட்டை அடிப்படை யாகக் கொண்டது எனலாம். எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்கள் எனப்படும். எட்டுத் தொகையில் முதலாவதாக கூறப்படுவது நற்றிணை ஆகும். இதனை 'நற்றிணை நானூறு' என்றும் கூறுவர். இதில் பண்பாட்டை பற்றி ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## பகுத்துண்ணுதலின் சிறப்பு

தமிழரின் தலைசிறந்த பண்பாடு களில் ஒன்று பகுத்துண்ணுதல் ஆகும். வீட்டிற்கு வரும் உறவினர்களை மட்டு மல்லாமல் நம்மை சுற்றி இருக்கும் சுற்றத்தார் அனைவருக்கும் பகுத்து கொடுத்து அவர்களை அன்போடு உபசரித்து முகம் மலர உள்அன்போடு உணவு வழங்கியிருப்பதை சங்க கால மக்களிடமிருந்து அறிய முடிகிறது. இதனை,

**"கல்லதர் அரும்புழை அல்கிக் கானவர்
வில்லி தந்த வெண்கோட்டு ஏற்றை
புனை இருங் கதுப்பின் மனையோள் கெண்டி
பகுக்கும் நெடுமலை நாட!"**

**(நற்றிணை - பாடல் எண் : *336*)**

கானவன் அம்பு தொடுத்து ஆண் பண்றியைக் கொன்றான். அக்கானவன் கொன்ற ஆண் பன்றியின் இறைச்சியை அவன் மனைவி தன் சுற்றத்தினருக்குப் பகிர்ந்து கொடுத்தாள்.

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை."**

**(திருக்குறள் - எண் : *322*)**

கிடைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல் அறநூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையான அறமாகும்.

## நட்பின் சிறப்பு

நட்பின் சிறப்பு என்பது அன்பின் அடிப்படையில் நல்லொழுக்கம் உடையவர்களின் நட்பாகும். நல்ல நட்பு என்பது நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்க வேண்டும். படிக்கும் பொழுதெல்லாம் ஒரு நல்ல நூல் இனிமையும் நன்மையும் தருவது போல், பழகப்பழக நல்ல நட்பும் நண்பர்களும், இனிமையும் நன்மையும் பயக்க வேண்டும். இதனை,

**"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்"**
**(நற்றிணை- பாடல் எண் : 355)**

நட்பு மிகுந்தவர்கள், நம்பிக்கைக்கு உரியவராகின் நஞ்சாக இருந்தாலும் நாகரிகப் பண்பு உடையவர்கள் ஏற்று உண்பார்கள். என்பதை நற்றிணை வழி அறிய முடிகிறது. இதனை வள்ளுவர்,

**"பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்."**
**(திருக்குறள் - எண் : 580)**

தம்மோடும் நெருங்கப் பழகியவர் நஞ்சை அளிப்பினும் மாறுபடாது உண்ணத் தலைப்படுபவர் நற்பண்பாகிய நாகரிகம் உடையவர்.

## கொடைச்சிறப்பு

கொடை என்பது ஒருவர் கொடுக்க மற்றொருவர் பெற்றுக் கொள்ளும் நிலையில் உள்ளதாகும். செல்வச் சிறப்புடன் வாழ்பவர்கள் 'செல்வத்து பயன் ஈதல்' என்று பெருமிதத்தோடு பிறருக்கு கொடுத்தார்கள். அவ்வாறு பிறருக்கு கொடுப்பதில் அரசாட்சி புரிவோர் முதன்மை இடம் பெற்று திகழ்ந்தனர். கொடுக்கப்படும் கொடைத் தன்மை பல்வேறு நிலைகளில் நிகழ்ந்துள்ளது. அரசன் தன்னுடைய பொருளை கொடையாக கொடுத்தல், திறை பொருளை கொடையாக கொடுத்தல், போர் வழியாக பெறப்பட்ட பொருட்களை கொடையாக கொடுத்தல் என பல வகையாகக் கொடை சிறப்பு கூறப்படுகிறது. இதனை,

**".................ஓங்கு செலல்**
**கடும்ப கட்டு யானை நெடுமான் அஞ்சி**
**ஈர நெஞ்சமோடு இசை சேண் விளங்கத்**
**தேர் வீசி இருங்கை போல,**
**மாரி இரீஇ மான்றன்றால் மழையே."**
**(நற்றிணை - பாடல் எண் : 381)**

நடையோடு விரைந்து செல்லும் யானைப்படையும், விரைந்து தாவி செல்லும் குதிரைப்படையும் உடையவன் நெடுவான் அஞ்சி ஆவான். அவனுடைய புகழ் நெடுந்தலைவு பரவுமாறு அரசாட்சி செய்ய அவனுடைய அரசவையில் இருப்பவர்களுக்குத் தேர்களையே பரிசிலாக வழங்குபவன். அது போல் மேகமானது நிலைத்திருந்து மழை பெய்ய தொடங்கியது.

**"பாரி பாரி என்று பல ஏத்தி**
**ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே."**
**(புறநானூறு - பாடல் எண் : 107)**

இதனால் சான்றண்மை மிக்க பெரும்புலவர்கள் ஒத்த கருத்துடையவர்களாய், மெய்த் தன்மையைப் பகரும் சிறப்புடையவர்கள் என்பது விளங்குதல் ஆம். நெடுமான் அஞ்சி, வள்ளல் தன்மைக்கும் அது மாரிக்கும் உவமையாகி இயற்கையின் எழில் போற்றுவதும் சிறப்பிற்குரியது.

## புகழ், இல்லறம், ஈதல் சிறப்பு

குன்றாத புகழும், இல்லறமும், கொடைத்தன்மையும் தவிர வாழ்க்கைக்கு ஆக்கம் தரக்கூடியது வேறு எதுவும் இல்லை. இதனை,

**"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்**
**அசையுடன் இருந்தோர்க்கு**
**அரும்புணர்வு இன்ம் என."**
**(நற்றிணை - பாடல் எண் : 214)**

புகழ் இம்மைக்குரிய இல்லறம் இன்பம், மறுமைக்குரிய இன்பம் நல்கும் கொடை, ஆகிய மூன்றினையும் ஒருவன் இன்றியமையாது அடைதல் வேண்டும்.

**"வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய**
**வாழ்வாரே வாழா தவர்."**
**(திருக்குறள் - எண் : 240)**

தாம் வாழும் வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழ்கின்றவர். புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழாதவர்.

**"தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இதுகொள்**
**தாமரைக் கண்ணான் உலகு."**
**(திருக்குறள் - எண் : 1103)**

தாமரைக் கண்ணனுடைய உலகம், தாம் விரும்பும் காதலியரின் மெல்லிய தோள்களில் துயிலும் துயில் போல் இனிமை உடையதோ!

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு."**
**(திருக்குறள் - எண் : 231)**

வறியவருக்கு ஈதழ் வேண்டும், அதனால் புகழ் உண்டாக வேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிருக்கு ஊதியம் ஆனது வேறொன்றுமில்லை. ஈதழ் என்பது மறுமைக்கும் இன்பம் தரக் கூடியதாகும்.

## முடிவுரை

சங்ககால மக்களின் பண்பாட்டு எச்சங்கள் வாழ்வியலின் ஒவ்வொரு தளத்திலும் தன்னை புதுப்பித்துக் கொண்டே இருக்கிறது. உண்ணும் உணவு முதல் உடுத்தும் உடை வரைக்கும் பண்பாடு போற்றப்படுகிறது. பிறப்பு முதல் இறப்பு வரைக்கும் வாழ்வியலின் ஒவ்வொரு நகர்விலும் பண்பாடு கடைபிடிக்கப்படுகிறது. இல்லறம் முதல் துறவறம் வரை பண்பாடு வாழ்வியலில் பகிரப்படுகிறது. உயர்வான எண்ணங்களையும், தனிமனித ஒழுக்கத்தையும், பண்பாடுகளையும் சங்க இலக்கியம் பறைசாற்றுகிறது. சங்க இலக்கியத்தின் ஒரு அங்கமான நற்றிணை வழி இதனை அறிய முடிகிறது.

## துணை நூற்பட்டியல்


*இராமசுப்பிரமணியம்.வ.த, உரை யாசிரியர், நற்றிணை, மூன்றாம் பதிப்பு – டிசம்பர்–2018, திருமகள் நிலையம், தி.நகர், சென்னை –600 017.*

*துரைசாமிப்பிள்ளை.சு.ஔவை, உரையாசிரியர், புறநானூறு, தொகுதி 1, 2, முதற்பதிப்பு – 2009, பூம்புகார் பதிப்பகம், சென்னை – 600 108.*

*நாராயண வேலுப்பிள்ளை.எம், உரை யாசிரியர், திருக்குறள், மார்ச் – 2015, நர்மதா பதிப்பகம், தியாகராய நகர், சென்னை – 600017.*

Nagar, Chennai – *600017*.

# இலக்கியங்கள் உணர்த்தும் பண்பாட்டு விழுமியங்கள்

நெறியாளர் **முனைவர் பெ.இந்துராணி**
உதவிப் பேராசிரியர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

ஆய்வாளர் **க.ரேவதி,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

இலக்கியம் என்பது இலக்கை இயம்புவது. தான் தோன்றிய சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, அரசியல், சமய நிலை முதலானவற்றை நேரடியாகவோ மறைமுகமாகவோ உணர்த்தி நிற்கும் மக்களின் உணர்வுக்கு உவகையளிப்பது 'கலை' என்றால் நுண்ணிதின் உணர்ந்து மகிழுமாறு திகழ்வது நூண்கலையாகும். அத்தகைய நுண்கலைகழுள் இலக்கியமும் ஒன்று காலத்தைக் காட்டும் கண்ணாடியாக திகழும் தமிழ் இலக்கியங்கள் மனிதர் களின் நாகரிகம் கலாச்சாரம் பண்பாடு வாழ்க்கை முறை போன்றவற்றை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன.

பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்
(கலி. பா.133)

என்று கலித்தொகை நவில்கிறது சுயமரியாதை, அழகுணர்ச்சி, மாறா அறிவு போன்றவை அதிக அளவில் நிறைந்த பன்முகச் சிறப்பு வாய்ந்த வாழ்க்கையை வாழ்ந்த தமிழர் பண்பாட்டை இலக்கியங்களும் கவிஞர்களும் நமக்கு இன்று பறைசாற்றுகின்றன. அத்தகைய இலக்கியம் என்ற ஆழ்கடலில் மூழ்கி மக்களின் பண்பாட்டுப் பதிவுகள் என்ற முத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்பாடு விளக்கம்

பண்பாடு என்பது பக்குவம் பெற்ற ஒரு நிலையைக் குறிக்கும் சொல்லாகும் இதனை ஆங்கிலத்தில் culture என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். Culture என்ற ஆங்கிலச் சொல் cult அல்லது cultus என்ற இலத்தின் மொழி யிலிருந்து தருவிக்கப்பட்டது. மேலும் இதன் பொருள் பண்படுத்துதல் அல்லது விளைவித்தல் அல்லது செம்மைப் படுத்துதல் என்பதாகும்.

பண்பாடுதல்என்ற சொல்லி லிருந்து தோன்றியது பண்பாடு ஆகும். பண் என்பது பாடல் அல்லது இசை என்னும் பொருளாகும். பாடு என்பது படு என்பதன் நீட்டல் விகாரம். படு என்பது செம்மைப்படுத்துவது என்னும் பொருள்படும். மனிதனை விலங்கினத்தில் இருந்து வேறுபடுத்தி காட்டுவதும் பண்பாடு தான். தமிழ்ப் பண்பாடு என்ற சொல்லை 1937 ஆம் ஆண்டு டி.கே.சிதம்பரம் முதலியார் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

"நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"
(புறம் 195)

என்று புறநானூறு குறிப்பிடுகிறது. நல்வினை செய்யவில்லை என்றாலும் தீவினையைச் செய்யாதீர்கள் என்ற தனிமனிதப் பண்பாட்டை சங்க நூல் குறிப்பிடுவதனை அறிய முடிகிறது.

"பண்புடையார் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மண்" (குறள் 996)

என்பது வள்ளுவர் வாய்மொழி. உலகம் நல்வழியில் இயங்குவதற்கு பண்பாடு அல்லது பண்புடையார் வாழ்தல் மிகவும் பயனுள்ளது என்னும் கருத்தினை பகர்வதாய் அமைகின்றது.

## விருந்தோம்பல் பண்பு

பண்டைய தமிழரின் வாழ்வு அறத்தின் அடிப்படையாக அமைந்தது. அற வாழ்க்கையின் முழுமை அன்பு என்ற பண்பால் உயர்வடைந்தது. அன்பு என்பதே அனைத்திற்கும் ஆதாரமாக அமைந்தது. அறம், பொருள், இன்பம், வீடுபேறு அடைதல் நூலின் பயன் என்று கூறுவர். இவற்றுள் அறம் வலிமை உடையதாக கருதப்படுகின்றது இத்தகைய அறத்தினை மேற்கொள்ள பொருள் தேவைப்படுகிறது. இவ் வகையான பொருளைத் தேடுவதற்கு தலைவன் தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் சொல்லும் தன்மையையும் அப் பொருளைக் கொண்டு தலைவி செய்த விருந்து என்ற அறப் பண்பும் சங்க பாடல்களில் புலவர்கள் பதிவு செய்துள்ளனர்.

**"செழுநகர் நல்விருந்து அயர்மார், ஏமுற**
**விழுநிதி எளிதினின் எய்துக தில்ல-**
**.........................................**
**கல்பிறங்கு ஆரிடை விலங்கிய**
**சொல்பெயர் தேஎத்த சுரன் இறந்தோரே"**
**(அகம்.205)**

என்ற அகநானூற்று பாடல் வழி சங்க கால மக்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக மட்டுமல்லாது விருந் தினருக்கு உணவு கொடுப்பதற்காகப் பொருளீட்டச் செல்லுதல் அக்கால மக்களின் தலைசிறந்த பண்பாட்டுப் பதிவாக அமைகின்றது. இதனையே திருவள்ளுவர்,

**செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு (குறள்86)**

என்ற வரிகளில் விருந்தோம்பல் சிறப்பினை குறள் வழி தெளிவு படுத்துகிறார். சங்ககால மக்கள் பசித்து வரும் புதியவர்களுக்காக சிறந்த உணவை நாள்தோறும் அளித்தனர்.

**"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் என்ன கிழவோள் மாண்புகள்**
**(தொல். 1098)**

இன்று தொல்காப்பியர் சங்க கால தலைவியின் மாண்புகளில் விருந்து புறந்தருதலை ஒரு செயலாகக் குறிப்பிடுவதைக் காணலாம்.

## இல் வாழ்க்கை

இல் வாழ்வில் ஈடுபடும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இன்றியமையாத ஒத்த அன்பே காதல் எனப்பட்டது ஒருவரிடம் இன்னொருவருக்குள்ள பெரும் விருப்பத்தைத் தம் இனிய காதல் மொழிகளால் வெளிப்படுத்தினர்.

**"நின்ற சொல்லர்; நீடுதோன்று இனியர்;**

**என்றும் என் தோள் பிரிபு அறியலரே'**
**தாமரைத் தண் தாது ஊதி, மீமிசைச்**
**சாந்தில் தொடுத்த தீம் தேன் போல,**
**புரைய மன்ற, புரையோர் கேண்மை"**
**(நற்.1)**

என்று நற்றிணையில் காதலி தன் காதலனின் ஒழுக்கத் தன்மையைப் போற்றி மகிழ்கின்றாள்.

**"அன்னாய் வாழி வேண்டு அன்னை நம் படப்பைத்**
**தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**
**உவலை கூவல் கீழ**
**மான் உண்டு எஞ்சிய கழிலிநீரே" (ஐங்.203)**

மனைவி தன் பிறந்த வீட்டில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த போதும் தனக்கு மாலை சூட்டிய கணவனின் வீடு வறுமையுடையதாக இருப்பினும் தன் தாய் வீட்டை என்னாது தன்

கணவனின் வீட்டையே பெரிதெனக் கொள்வதாக ஐங்குறுநூற்றுப் பாடல் கவினுற பகர்கின்றது.

**"இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயா கியரென் கணவனை**
**யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே."**
**(குறுந் 49)**

என்ற குறுந்தொகையில் இப்பிறவியில் மட்டுமல்லாது மறுபிறவியிலும் அவனே கணவனாக வேண்டும் என்ற விருப்பம் இருவரின் அன்பின் இணைப்பினை வெளிப்படுத்துகின்றது.

வறுமையிலும் செம்மை உடைய வளாக தலைவி எவ்வாறு இல்லறம் நடத்துகிறாள். என்பதனை,

**"குப்பை வேளை உப்பிலி வெந்ததை,**
**மடவோர் காட்சி நாணிக்"**
**(சிறுபாண். பா.வரி 137-138)**

எனும் பாடல் மூலம் தலைவியின் இல்லற மாண்பு வெளிப்படுகின்றது. மேலும் நான்மணிக்கடிகையில் இல்லறம் பற்றிப் பாடல் வரி குறிப்பிடுகையில்,

**"மனைக்கு விளக்காகிய வாள்நுதழ்"**
**(நாண் 105)**

என்று இல்லறம் நன்றாய் அமைவதற்கு காரணமாய் அமைபவள் பெண்தான் என்பது உணர்த்தப்படுகிறது.

## ஈகை பண்பாடு

இல்லையென்று வருபவர்களுக்கு உணவு, உடை, பொன் பொருள் கொடுத்து வாழும் பண்பு தமிழர்களின் பண்பாடே ஆகும். திருக்குறளில் ,

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு."**
**(குறள் 23)**

என்று ஈகையின் சிறப்பு உணர்த்தப் படுகிறது. ஒருவன் மிகுதியான செல்வம் உடையவனாக இருந்தால் அத்தகைய செல்வம் பிறருக்கு பயன்படும்படி வாழ்தல் தான் சிறந்த வாழ்க்கை. தன்னை நாடி பொருள் கேட்டு வந்தவர்களுக்கு பொருள் கொடுத்து உதவுதல் பண்டைய தமிழர் மரபு. பிறருக்கு உதவும் போதுதான் அங்கே செல்வத்தின் பயனை அடைய முடியும். நம்மைச் சார்ந்த அனைவரும் வறுமை இல்லாத வாழ்க்கை வாழ செல்வம் வைத்திருப்பவர்கள் கொடை செய்தல் வேண்டும் அதன்படி தமிழன் வாழ்ந்தான் என்பதனைப் பின்வரும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

**"உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;**
**பிறவும் எல்லாம் ஓரொக் குமே;**
**அதனால், செல்வத்துப் பயனே ஈதல்;**
**துய்ப்பேம் எனினே, தப்புந போலவே!"**

என்ற நக்கீரனார் பாடல் மூலம் ஈகையின் சிறப்பு கூறப்படுகிறது.

## போர் புரிதல் பண்பாடு

சங்ககால மக்கள் போருக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். தனிப்பட்ட அறநெறிகளை மேற்கொண்டனர். போரின் போது யார் யாரெல்லாம் பாது காப்பான இடம் செல்ல வேண்டும் என்பது முரசறைந்து அறிவிக்கப்பட்ட பண்பட்ட நாகரிகத்தை உடையது என்பதனை,

**"பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்,**
**எம்அம்பு கடிவிடுதும், நுன்அரண் சேர்மின்"**
**(புறம் 9)**

இதில் பசு, அந்தணர், பெண்கள், பிணி உடையோர் ஆகியவர்கள் பாதுகாப்பான இடத்தை அடைய அறிவுறுத்தப்பட்டனர். அறுவகை பருவங்களில் வேனிற் பருவமும் கூதிர் பருவமும் போர்க்குரிய பருவங்களாக கருதினர்.

"கூதிர் வேனில் என்று இரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய
வகையினும்" (தொல்.புறத்.75)

என்ற தொல்காப்பிய நூற்பா வலியலாம் போரில் வீர மரணம் எய்தும் ஒருவனுக்கு நடுகல் எடுப்பது பண்டைய மரபு. இத்தகைய மரபை ஒட்டி எழுப்பப்பட்ட நடுகல்லைச் சுற்றி இரும்பாலான வேல் கேடயம் போன்ற ஆயுதங்களை நிறுத்தி அரண் அமைப்பது வழக்கமாக இருந்தது என்பதனை,

"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி,
ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து
வீழ்ந்தெனக்,
கல்லே பரவின் அல்லது,
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே."
(புறம் 335)

பகைவரை எதிர்த்து நிற்கும் ஆற்றலுடைய தந்தங்களைக் கொண்ட யானையையும் கொன்று தானும் போரில் இறந்தான் இவ்வீரனுக்கு நடுகல் நட்டும் நெல்லை தூவியும் வழிபட்டனர் என்ற செய்தியும் அறிய முடிகிறது.

## முடிவுரை

தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் மனித வாழ்க்கையை படம்பிடித்து காட்டும் காலக் கண்ணாடியாக திகழ்ந்திருக்கிறது. சங்கத்தமிழர் விருந்தோம்பலை அறமாக போற்றி யுள்ளனர். தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு தான் மட்டும் இல்லறம் நடத்தாமல் வரியவர்களுக்கு ஈதல் எனும் கோட்பாட்டை கொண்டு தன்னால் இயன்ற மட்டும் முறையாக விருந்தோம்பல் செய்து சங்கமக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தினர். பகுத்து வழங்கல், நன்றி மறவாமல் புகழ்பட வாழ்தல், பயன் கருதாத கொடுத்தல் குடும்ப ஒற்றுமை என்று தமிழர்களின் சிறப்பினை கூறிக் கொண்டே இருக்கலாம்.

## துணைநூற் பட்டியல்

புலவர் கா.கோவிந்தன், தமிழர் வரலாறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1989

புலவர் கா.கோவிந்தன், தமிழர் தோற்றமும் பரவலும், சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், 1989

முனைவர் க.த.திருநாவுக்கரசு, தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 2009

# அகநானூற்றில் குறிஞ்சித் திணை ஒழுக்காறு

**ரா. லோக தர்ஷினி**
முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு
அன்னை மகளிர் கல்லூரி
புன்னம்சத்திரம் கரூர்.

## ஆய்வுச் சுருக்கம்

*அகநானூற்றில் குறிஞ்சித் திணை பாடல்களில் தலைவன் தலைவியை காண்பதற்கு பகல் மற்றும் இரவு வேளையில் வருகின்றான். அவனது வரவினை முடிவு செய்பவளாக தோழி இருக்கின்றார். பகலில் வரும் தலைவனை இரவில் வா என்றும் இரவின் வரும் தலைவனை பகலில் வா என்றும் தலைவியை இப்போது சந்திக்க இயலாது என்றும் விரைவாக திருமணம் செய்து அழைத்து செல் என்றும் கூறுவதாக தோழி விளங்குகிறார். களவு, காதல் வாழ்க்கையில் தலைவன் தலைவியின் ஒழுக்க நிலையையும் அந்த ஒழுக்கத்திற்கு தோழி துணையாக இருப்பதை ஒரு மரமாக அமைந்துள்ளது. அதைப் பற்றி கூறுவதாக கட்டுரை அமைகிறது.*

## முன்னுரை

*உலக மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கென வகுக்கப்பட்ட பொருள்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். இந்நான்கனுள் இல்வாழ்க்கைக்கு அடிப்படையாய் இருப்பதோடு இம்மை பயப்பதையும் விளங்குவது இன்பம் இவ்வின்பமே அகத்திணை என தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. இது காதல் (களவு), இல்லறம் (கற்பு) என்னும் இருவகை ஒழுக்கங்களைக் கொண்டது. இதில் அகநானூற்றின் நிறைவுப்பகுதியாக அமைந்துள்ள நித்தியக் கோவையில் குறிஞ்சித்திணை மூலம் தலைவன், தலைவி, தோழி, நற்றாய்,செவிலி, பரத்தை இவர்களின் ஒழுக்கங்களை பற்றி விரிவாக ஆராய்ந்து எடுத்துரைப்பது இக்கட்டுரை நோக்கமாகும்.*

## அகநானூறு குறிப்பு

*எட்டுத்தொகை நூல்களில் ஒன்று அகநானூறு. இந்த நூல் 400 பாடல்களைக் கொண்டு 145 புலவர்கள் பாடியுள்ளனர். பாண்டியன் உக்கரப்பெருவழுதி என்ற மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க உப்பூரிகுடிகிறார் மகனார் உருத்திரசன் மன் என்ற புலவர் இந்த நூலைத் தொகுத்துள்ளார். அகநானூற்றில் 13 அடி சிற்றெல்லையும் 31 அடி பேரெல்லை கொண்டு விளங்குகிறது. அதனால் அகநானூறு மூன்று பகுதிகளாக பிரிக்கப் பட்டுள்ளது. அவை*

*1–120 "களிற்றியானை நிறை" (120 பாடல்கள்)*

*121–300 "மணிமிடை பவளம்" (180 பாடல்கள்)*

*301–400 "நித்தியக் கோவை" (100 பாடல்கள்)*

*அதனால், இதற்கு "நெடுந்தொகை" என்று பெயரும் உண்டு.*

நித்திலக்கோவை.

அகநானூற்றில் இப்பகுதியில் நூறு பாடல்கள் அமைந்துள்ளது. அவற்றில், பாலை –50, குறிஞ்சி –20, முல்லை –10, மருதம் –10 ,நெய்தல் –10 என்று வகைப்படுத்தப்படுகிறது. பாலைத் திணையில் அமைந்துள்ள பாடல்கள் முழுவதும் பிரிவு உணர்த்தும் பாடல்களாக அமைந்துள்ளன. தலைவன் பொருள் தேடி செல்வதும் பிரிவில் தலைவியின் உடல் வேறுபாட்டை உணர்ந்து தோழி கூறுவதும், தலைவன் பொருட் வாயிற் பிரிவு மேற்கொள்வதை தவிர்க்காத பொழுது தலைவி தன் நெஞ்சுக்கு கூறும் விதமாகவும், உடன் போக்கு சென்ற தலைவியை நினைத்து நற்றாய் புலம்புதாகவும் பாடல்கள் அமைந்துள்ளது. குறிஞ்சித் திணையில் தலைவன் சிறைப்புறமாக இருக்க தோழி தலைமகட்குக்கூறும் பாடல்கள் இரவு குறியில் வர வேண்டாம் என்று வற்புறுத்தும் பாடல்கள் என்று அமைப்பில் பாடல்கள் அமைந்துள்ளன. முல்லைத் திணையில் பாசறையில் தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறும் விதமான பாடல்களும் வினைமுற்றி மீண்டும் வரும் தலைவனிடம் தோழி கூறும் விதமான பாடல்களும் இடம் பெற்றுள்ளன. மருதத்திணையில் தோழி தலைவனுக்கு வாயில் மறுத்ததும், தலைமகனுக்காக தலைவியிடம் பேசும் தோழியையும் காணமுடிகின்றத. நெய்தல் திணையில் பகல் குறியில் வந்த தலைவனை வரைவுகடாவும் தோழியும், தலைவன் தோழியிடம் வேண்டாம் அதற்கு இணங்க தலைவிடம் எடுத்துக் கூறி அவளை சந்திக்க வைக்கும் தோழியையும் இங்கு காண முடிகின்றது.

குறிஞ்சித்திணை ஒழுக்காறு

பகலே சிறைப்புறமாக தோழி தலைமகட்டுகுச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. இரவு வருவனைப் 'பகல் வருக' என்றது. தலைமகன் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது. இரவு குறி வந்த தலைமகனை வரவு விலக்கிவரைவு கடாயது அல்ல குறிப்பட்டுப் போகின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. இரவுக் குறிச் சிறைப்புறமாக தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது. அல்லகுறிப்பட்ட தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது. தலைவன் சிறைப்புறமாக இருக்க தோழி சொல்லெடுப்ப தலைவி சொல்லியது. வரைந்து எய்திய பின்றை, மணமனைக்கண் சென்ற தோழிக்குத் சொல்லியது. வரைவுமளிந்து சொல்லிய தோழிக்கு தலைமகள் சொல்லியது. பகலே சிறைப்புறமாகத் தலை மகட்குச் சொல்லியது. பிரிவிடை வேறுபட்ட தலைமகன் வற்புறுத்தும் தோழிக்குச் சொல்லியது. அல்ல குறிப்பிட்டுப் போகா நின்ற தலை மகன் தன் நெஞ்சுக்குச் சொல்லியது. பின்னின்ற தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகட்டுக் குறைநயப்பக் கூறியது. காமம் மிக்க கழிப்பட கிழவியால் வரைவிடத்துக் கண் தலைவன் வரைவினின்றும் போந்த ஆற்றோடு பிலந்து சொல்லியது. என்ற அடிப்படையில் கூற்றுகள் அமைந்துள்ளன. இவற்றின் பொதுவான பண்பு தலைவியைக் தலைவன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் புலனாகின்றது.

களவு ஒழுக்கம்

தலைவன் தலைவி பின்பற்றுகின்ற இக்களவு வாழ்க்கை தொண்டு தொட்டு மக்களால் சிறப்பிக்கப்படுகின்ற ஒழுக்கம் ஆகும். சங்க இலக்கியத்தில், ஆணும் பெண்ணும் திருமணத்துக்கு முன் அல்லது அப்பால் வீட்டாருக்கு தெரியாமல் சந்தித்துப் பழகுவது களவு எனப்பட்டது. களவு குடும்பக் கட்டுபாட்டுப் பிறகு துணையை தேடிக் கொள்ளும் முறையாகும். களவில்

காதல் உதிர்தால் "களவு வெளிப்படும் முன்னரோ வெளிப்பட்ட பின்னரோ", "பெற்றோர் உடன்பாட்டுடனும், உடன்பாடு பெறாமலும்" திருமணம் நடைபெறும்.

**"களவு கற்பெனக் கண்ணிய ஈண்டையோர்**
**உள நிகழ் அன்பின் உயர்ச்சி மேன"[1]**
**(இறை. களவியல் - நூற்பா. -60)**

களவு, கற்பு என்று கருதுவது உள்ளத்தில் நிகழ்வதோர் அன்பின் உயர்வின் மீது கொள்ளப்படும் ஒழுக்கம்.

## கற்பு ஒழுக்கம்

உள்ளம் ஒத்த தலைவனும் தலைவியும் திருமணம் செய்து கொண்டு கணவனும் மனைவியாய் இல்லறம் நடத்துவதை கற்பு ஒழுக்கம் என்கிறோம்.

**"கற்பு எனப்படுவது கரணமொடு புணர**
**கொளற்கு உரி மரபின் கிழவன் கிழத்தியை**
**கொடைக்கு உரி மரபினோர் கொடுப்ப**
**கொள்வதுவே."[2] (தொல்.பா -140)**

கற்பு என்று சொல்லப்படுவது ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் அவர்களது பெற்றோர் ஊரார் அறியும் படி சில கடமைகளைச் செய்து சேர்ந்து குடும்பம் நடத்தும்படி விடுவது. அப்போது பெண்ணின் பெற்றோர் தம் பெண்ணைக் கொடுக்க, ஆணின் பெற்றோர் அவளைப் பெற்றுக்கொள்வர். இதுவே கற்பில் சிறந்த ஒழுக்கமாக கருதப்படுகிறது.

## தலைவனின் ஒழுக்கம்

**"சிறந்துழி ஐயம் சிறந்தது என**
**இழிந்துழி இழிவே கட்டலான்"[3]**
**(தொல். கா-பா. 91)**

தலைவன் தலைவியை தனி இடத்தில் காண்பான் அவளுடைய தோற்ற பொலிவும் அவளைக் கண்ட இடமும் சிறப்பாக அமையின் தலைவனுக்கு தலைவியைப் பற்றி ஐயம் தோன்றுகிறது இதுவே, தலைவனின் ஒழுக்கமாக கருதப்படுகிறது.

## தலைவியின் ஒழுக்கம்

தலைவியின் மீது அளவு கடந்த அன்புடையவன் தலைவன் தலைவியும் அவ்வாறே தலைவன் மீது அன்பு கொண்டவள் தலைவனது அன்பு முழுமையும் தனக்கே உரியது என்ற எண்ணம் உடையவள் தலைவி தலைவன் பரத்தையர் மீது அன்பு கொண்டு அவளுடன் இணைந்து வாழ்பவன் இதை அறிவு தலைவி தலைவனிடம் ஊடல் ஏற்படும் அந்த ஊடலையும் மீறி தலைவன் மீது அன்பு கொள்பவள் தலைவி இதுவே தலைவியின் ஒழுக்கமாக கருதப்படுகிறது.

**யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்**
**யாரினும் யாரினும் என்று,[4] (குறள் 1314)**

தலைவனின் முழு அன்பும் முழுமையாக தனக்கே கிடைக்க வேண்டும் என்ற தலைவியின் உள் உணர்வை காட்டுகிறது.

## மடலேறுதல்

மடல் ஏறுதல் என்பது ஆண்களுக்கு மட்டுமே உரியது. பெண்கள் மடல் ஏற மாட்டார்கள் என்பது மரபு ஆகும். காமம் காரணமாகப் பெண்களும் துன்பம் அடைவர். ஆனால், அவர்கள் மடல் ஏறுதல் என்பது இல்லை.இந்த மரபை வலியுறுத்தும் வகையில்,

**கடல்அன்ன காமம்உழந்தும் மடல் ஏறாப்**
**பெண்ணின் பெருந்தக்கது இல்[5]**
**(குறள் பா -1137)**

கடல் போன்ற மிகுந்த காமத்தால் துன்பம் ஏற்படும். அவ்வாறு துன்பம் வந்தாலும் பெண்கள் மடல் ஏறாது அதைப் பொறுத்துக் கொள்வர். எனவே, பெண்களின் பொறுமைபோல் பெருமை மிக்கது வேறு ஒன்றும் இல்லை என்பது இதன் பொருள் ஆகும்.

## தோழியின் ஒழுக்கம்

களவு, கற்பு இரு நிலைகளிலும் பெரும்பங்கு இருப்பவள் தோழி. இளமையில் தலைவியின் உள்ளத்தை போற்றிக் காப்பவள் தோழி. அறிவுசார்ந்த அக்காலப் பெண்ணுலகிற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றவள் தோழி என்கிறார் "புலவர் குழந்தை". அரிய நட்புடையவராய் அன்னையாய் அமைச்சராய் விளங்கும் தோழி தலைவியின் வாழ்வு வளம்பெறச் செய்யும் சேவை பெரிது என்று கூறப்படுகிறது. தலைவன் தலைவியை இரவுக்குறியில் சந்திப்பான். ஆனால் தோழி இரவுக்குறி ஆபத்தானது என்று பகற்குறியில் சந்திக்குமாறு கூறுவாள் இரு தோழியின் ஒழுக்கமாக கருதலாம். தலைவனிடம் தோழி தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ளுமாறு கூறுவார் இது தோழியின் ஒழுக்க நிலை,

## பரத்தையர் ஒழுக்கம்

தலைவனுடைய பாலியல் தேவையை நிறைவு செய்பவளாக வரும் பணத்தையின் இடம் அக இலக்கிய மரபில் முக்கியமானது. தலைவியை போன்று சமூக பாதுகாப்பு எதுவும் இவளுக்கு கிடையாது. இது ஒரு வகை பலவீனமாக இருந்தாலும் கூட, அதுவே அவளுக்குப் பலமானதும் கூட தலைவியைப் போன்று அச்சம்,மடம், நாணம்போன்ற ஆணாதிக்கப்போக்குகள் கொண்ட கருத்தியங்களின் அழுத்தம் பரத்துக்கு கிடையாது. பரத்தை சுயமாக பொருள் ஈட்டிபிழைப்பவள். எனவே சுதந்திர மானவளாக வாழ்கிறாள். பரத்தை என்ற சொல் முதல் முதலில் தொல்காப்பியத்தில் இடம்பெறுகிறது.

"பரத்தையும் அகற்சியின் பிரிந்தோள்
குறுகி"[6] (தொல். கா-பா. 44)

"மாயப்பறத்தை உள்ளிய வழியும்ன"[7]
(தொல். கா- பா.145)

"பரத்தை வாயில் நால்வருக்கும்
உரித்தே"[8] (தொல். கா-பா. 220)

இவ்வாறு தொல்காப்பியத்தில் ஒன்பது இடங்களில் பரத்தை என்கிற சொல் இடம்பெற்றுள்ளது. பரத்தைப் பற்றி வரையறையை காணும் பொழுது திருமணம் என்ற நெறியின்றிக்கற்பு என்னும் கட்டுப்பாடின்றி ஒருவரையோ, பலரையோ, நாடுகின்ற பெண் என்று கூறலாம்.

## நற்றாய் ஒழுக்கம்

தலைவன் தலைவியைக் கொண்டு தலைக்கழிந்தபோது நற்றாய் புலம்புவாள்.

"தன்னும் அவனும் அவளும் சுட்டி."[9]
(தொல். கா. பா-39)

தலைவி தலைவனிடம் உடன் போக்கு சென்றுவிடுவாள் அப்பொழுது நற்றாய்தான் மகளின் நிலையை நினைத்து வருந்துவாள். களவு வாழ்க்கை பற்றி நன்றாய் தன் மகளோடும் மகளின் கிழவனோடும் நேருக்கு நேர் பேசும் வழக்கம் இல்லை.

"கிழவன் தன்னோடும் கிழத்தி தன்னோடும்
நற்றாய் கூறல்முற்றத் தோன்றாது."[10]
(தொல். கா,பா. 493)

தலைவனோடும் தலைவியோடும் நேரடியாக தலைவியின் தாய் பேசுவது என்பது முழுமையாக நடைபெறவில்லை.

## செவிலியின் ஒழுக்கம்

செவிலித்தாய் என்பவள் தோழியின் தாயாகவும் தலைவியின் வளர்ப்பு தாயாகவும் திகழ்கிறாள். செவிலின் நற்றாய்க்கு தலைவியின் காதலை கூறி அறத்தோடு நிற்கிறாள் இது செவிலியின் சிறந்த ஒழுக்கமாக கருதப்படுகிறது.

## பகல்குறி, இரவுக் குறி

குறி இரு வகைப்படும் என்று தொல்காப்பியம் சுட்டுகின்றது. பகலில்

நிகழும் கூட்டம் ஊர் புறத்தேயும் இரவில் நிகழும் கூட்டம் இல்லின் புறத்தேயும் நடைபெறும். தலைவன் களவொழுக்கத்தில் இருக்கின்றான்.. திருமணத்தினைப் பற்றிய எண்ணம் எதுவும் இன்றி களவு வாழ்க்கையினை நீட்டிக்க எண்ணுகின்றான். அதனால் தலைவியை காண்பதற்கு வருகின்றான். தலைவனின் வரவினை அறிந்து கொண்ட அவள் சிறைப்புரமாக இருக்க தோழி தலைவியிடம் களவொழுக்கத்தினை அன்னை அறிவாள். அதனால் தலைவியைக் காண்பது அரிதாகும் என்று குறிப்பிட தலைவன் கேட்க கூற்று நிகழ்கின்றது. இதனை,

**"வெறிக்கமழ் சோலை நயந்துவிளல யாடலும்**
**அரியபோலும் காதல் ஆம் தோழி"[11]**
**(அகம் 302)**

பகலில் வந்த தலைவனை குறிப்பால் உணர்த்திய தலைவியைக் காண முடிந்தது அதுபோன்று இரவுக்குறி வந்து செல்லும் தலைவனை இரவினில் வர வேண்டாம் பகலில் வருக என்று கூறும் தோழியைக்காண முடிகின்றது. தலைவன் களவொழுக்தத்தில் அதிகம் நாட்டம் கொண்டு தலைவியைக் காண இரவினில் வருகின்றான். அவ்வாறு வரும் வழியில் அருமையினை எடுத்துக் கூறி இரவினில் வருவதை தவிர்த்து பகலில் வருகை என்று தோழி கூறுகின்றான். இரவினில் வரும் வழியில் மேகங்கள் ஆலங்கட்டியுடன் மழை பெய்தமையால் அருவி/ பெருக்கெடுத்து ஓடி வரும் காவலர்கள் இருப்பார்கள் விலங்கினங்கள் துயர் ஏற்படும் ஆதலால் இரவு வரவனைத் தவிர்த்து பகலில் வரவேண்டும் என்று தோழி கூறுகின்றாள். இதனை,

**"இரவின் வருதல் எவனோ?**
**பகல் வரின்"[12] (அகம்.308)**

என்று கூறுவதால் அறியலாம்.

## அல்ல குறி

பகல் குறி, இரவு குறி இருவகைக் குறியிலும் அல்ல குறியிடுதல் நடைபெறும் அப்பொழுது தலைவனும் தலைவியும் தன்நெஞ்சிக்குக் கூறிக்கொண்டு சென்று விடுவார், அவ்வகையில் தலைவன் இரவு குறி வருகின்றான் அல்ல குறிப்பட்டு விடுகின்றது தலைவியை காணாது செல்லும் நிலையில் தான் நெஞ்சுக்கு ஆறுதல் கூறிக்கொண்டு தலைவன் செல்லுகின்றான். இதனை,

**"அருங்கல வெறுக்கையின் அறியோள் பண்பு நினைந்து**
**தேம்பினை வாழி என் நெஞ்சே."[13]**
**(அகம் 372)**

என்று வழி உணர முடிகின்றது இதனை தோழியின் ஒழுக்கமாகவும் கூறப் படுகிறது.

## முடிவுரை

அகநானூற்றில் நித்திலக் கோவையில் குறுஞ்சித் திணையில் அமைந்துள்ள பாடல்களில் தலைவன் தலைவிக்காக பொருள் தேட செல்லுவான் அதில் தலைவனின் ஒழுக்கம் நிகழும். தலைவி தலைவன் மீது அதிகமான அன்பு கொள்வதால் அதில் தலைவியின் ஒழுக்கம் காணலாம். தோழி செவிலியிடம் தலைவியின் காதல் பற்றி கூறுவாள் அதில் தோழியின் ஒழுக்கம் நிகழுகிறது.. பரத்தை சுயமாக பொருளீட்டி வாழ்வதால் பரத்தையின் ஒழுக்கம் நிகழுகிறது தலைவி தலைவனுடன் உடன்போக்கு சென்று விடுவாள் அதை அறிந்த நற்றாய் செவிலி இருவரும் வருந்தி அவர்களை தேடி செல்வார்கள் இதில் அவர்களின் ஒழுக்க நெறியாக காணலாம் இதில் குறிஞ்சி திணையில் கூறப்படும் ஒழுக்கறு பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. ஞா.மாணிக்கம், இறையனார் அகப்பொருள், ப–218
2. முனைவர் சா. திருஞான சம்பந்தர், தொல்காப்பியம், கதிர் பதிப்பகம்–, 2020, ப.149
3. மேலது, ப.98
4. மு.கருணாநிதி, திருக்குறள், ப.138
5. மேலது, ப.120
6. முனைவர் சா. திருஞான சம்பந்தர், தொல்காப்பியம், கதிர் பதிப்பகம் 2020, ப.32
6. மேலது, ப.151
7. மேலது, ப.–207
8. மேலது, ப.26
9. மேலது, ப.337
10. ச. வே. சுப்பிரமணியன் சங்க இலக்கியம் (எட்டுத்தொகை) மூன்றாம் பதிப்பு 2015, ப.357
11. மேலது, ப.–364
12. மேலது, ப.–435

# தமிழர் பண்பாட்டில் தொன்மத்தின் மீதான நம்பிக்கை

**முனைவர் மா.லோகநாயகி**
கவுரவ விரிவுரையாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி),
மதுரை - 02.

## முகவுரை

பண்டைத் தமிழ்ச்சமுதாயம் தமது மொழியறிவின் உருவாக்கத்தால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாய்மொழியாகப் பாடப்பட்ட பல்வேறு பாடல்களை காலப்போக்கில் எழுத்தறிவின் கண்டுபிடிப்பால் இலக்கியமாக்கிக் கொண்டன. இம்முயற்சி இலக்கியம் தோன்றிய தொடக்ககாலத்தில் அல்லது அதற்கு சற்றே முன்பிருந்த கால மக்களிடம் வாய்மொழி வழக்காறுகளாக அன்று வழக்கத்திலிருந்தவற்றின் நீட்சி எனச் சொல்லலாம். அதேபோல், ஒரு மொழியின் இலக்கிய அறிவின் உச்சமாக அம்மொழியில் தோன்றிய இலக்கண நூல் உருவாக்கங்களையும் குறிப்பிடலாம். ஏனெனில், இலக்கியங்களைப் போலவே இலக்கண நூல்களும் வழிபாட்டுத் தொன்மங்கள் குறித்த கருத்தியல்களை பரவலாகப் பதிவுசெய்துள்ளன. இவ்வாறு பண்டைத்தமிழர் பண்பாட்டில் இடம்பெற்றுள்ள தொன்மம் குறித்த நம்பிக்கைகளை அக்கால இலக்கியங்கள் வழி பின்வருமாறு அறியலாம்.

## தொன்மம் – பொருள் விளக்கம்

தொன்மம் என்பது நமக்குள் புதிதாக உருவாவதன்று அது நம் பிறப்பிலிருந்தே உண்டு என்பதை, “தொன்மமானது மனத்தின் விழிப்பு நிலையில் ஆழ் மனத்தில் கருப்பெறுகின்றது. நம்மைக் கேட்காமலேயே உடல் வளர்வதைப் போலவே இயற்கையாகவே தொன்மங்கள் உரம் பெறுகின்றன.” (கதிர்.மகாதேவன், தொன்மம், ப.19) என்கிறார்.

“தொன்மம் என்பது புனிதமான உண்மை (Sacred Trued) என்கிறது அமெரிக்கானா கலைக்களஞ்சியம். மேலும், தொன்மம் செயல்பாட்டின் அடிப்படையில் சடங்குகளுடனும் சமயங்களுடனும் தொடர்புடைய சமுதாயம் சார்ந்த கதை” (யாழ்.சு.சந்திரா, தொன்மவியல் கட்டுரைகள், ப.49) என்றும் கூறுவர்.

‘Mith’ என்ற ஆங்கிலச் சொல் ஆலவா என்ற கிரேக்கச் சொல்லின் வேர்ச்சொல்லாகும். இதற்கு நிகரான தமிழ்ச் சொல்லாக ‘தொன்மம்’ கையாளப்பட்டு வருகிறது. கடவுள் பற்றியும் உயர்மனிதர்கள் பற்றியும் அமைந்த செய்திகள் தொன்மத்தில் அடங்கும்.

## தொன்மம், பழமரபுக்கதைகள்:

தொன்மம், பழமரபுக்கதைகள் இரண்டும் ஒற்றுமையுடையதாக இருப்பினும் இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. தொன்மம் கடவுளர் செயல்களை விரித்துரைப்பது பழமரபுக் கதைகள்

மனிதர்களை முதன்மைப்படுத்துவது. சமயம் சார்ந்தும் சடங்குகளைப் பற்றியும் விளக்குவதும் தொன்மத்தில் அடங்கும். இதுபோன்று பழங்கால இலக்கியங்களிலும், இலக்கியங்கள் பேசும் மனித வாழ்வியலிலும் கடவுளை முன்னிறுத்துவதும், கடவுளை வாழ்த்துவதுமான ‘தொன்மை மரபு’ எல்லாநாட்டு இலக்கிய மரபிலும் காலந்தோறும் இருந்துள்ளதை அறிய முடிகின்றன. குறிப்பாக, கடவுளர்களில் ஆண் தெய்வம், பெண்தெய்வம் என்ற இருவேறு நிலைகள் பின்பற்றப் பட்டுள்ளன. அவை நில அமைப்புகளுக்கு ஏற்றவாறும், அங்கு நிகழும் நிகழ்வுகளுக்கு ஏற்றவாறும் கற்பிதம் செய்யப்பட்டுள்ளன. பெண் தெய்வம் குறித்த கருத்தியல்கள் மற்றும் புனைவுகள் சற்று குறைவாகவே இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

பண்டைத் தமிழ்ச்சமுதாயம் தமது மொழியறிவின் உருவாக்கத்தால் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாய்மொழியாகப் பாடப்பட்ட பல்வேறு பாடல்களை காலப்போக்கில் எழுத்தறிவின் கண்டுபிடிப்பால் இலக்கியமாக்கிக் கொண்டன. இம்முயற்சி இலக்கியம் தோன்றிய தொடக்ககாலத்தில் அல்லது அதற்கு சற்றே முன்பிருந்த கால மக்களிடம் வாய்மொழி வழக்காறுகளாக அன்று வழக்கத்திலிருந்தவற்றின் நீட்சி எனச் சொல்லலாம். அதேபோல், ஒரு மொழியின் இலக்கிய அறிவின் உச்சமாக அம்மொழியில் தோன்றிய இலக்கண நூல் உருவாக்கங்களையும் குறிப்பிடலாம். ஏனெனில், இலக்கியங்களைப் போலவே இலக்கண நூல்களும் வழிபாட்டுத் தொன்மங்கள் குறித்த கருத்தியல்களை பரவலாகப் பதிவுசெய்துள்ளன.

## இலக்கியங்களில் – தொன்மம்

இம்மண்ணில் நன்கு ஆண்டு அனுபவித்து நாகரித்திலும் பண் பாட்டிலும் முதிர்ச்சியடைந்த நெடிய வரலாற்றுக்கு உரியவர்களால்தான் சங்கஇலக்கியம், தொல்காப்பியம், திருக்குறள் போன்ற ஒப்பற்ற நூல்கள் பலவற்றை உருவாக்க முடியும் என்பது தெளிவு. தமிழ்ப் பேரினம் இப்பெருமையை பெற்றுச் சிறக்கிறது என்று சொன்னால் அவர்கள் கடந்து வந்த பாதை அளவிடற்கரியது. அதனால், அத்தொல்குடி மக்களின் (தமிழ்) மொழியானது காலத்தால் மிகவும் தொன்மையானது என்பதனை முதலில் உணரவேண்டும்.

அந்தவகையில், தொன்மம், தொன்மை என்பது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டின் வரலாற்றை அறிவதற்கும் ஆய்வதற்கும் மிகுந்த பயனளிக்கிறது. தொன்மம் என்பது குறிப்பிட்ட ஒரு பண்பாட்டில் வாய்மொழியாகக் காலங் காலமாகச் சொல்லப்பட்டு வருகின்ற புராணம், இதிகாசம், பழமரபுக்கதைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. அதன்வழி வந்த அறிவார்ந்தவர்கள் பிற்காலங்களில் அதனை நன்கு ஆராய்ந்து எழுத்து வடிவில் வடித்துத்தந்ததால் அவை இலக்கியங்களாக இன்று கிடைக்கப் பெற்றுள்ளன. சங்ககாலப் புலவர்கள் தாம் சொல்லவந்த கருத்தினை மக்களிடையே செம்மையாகப் பதிவு செய்வதற்கு தொன்மங்களையும் உவமைகளையும் உருவகங்களையும் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளனர். தொன்மங்கள்தான் மனிதவாழ்க்கைக்கு எண்ணற்ற தத்துவங்களையும் உருவாக்கித் தந்திருக்கிறது. எனவேதான், இன்றுவரை இலக்கியவாதிகள் நல்ல

அறங்களையும், அறிவுரைகளையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு தொன்மங்களையும் உவமைகளையும் தொடர்ந்து பயன்படுத்துவதில் விருப்பம் காட்டுகின்றனர்.

தொன்மங்கள் ஒவ்வொரு சமுதாயத்தின் அங்கமாய் அமைந்து அந்தந்தச் சமுதாயத்தின் நெறிமுறைகளையும் மாற்றங்களையும் வெளிப்படுத்துவனவாய் அமை கின்றன. தொன்மங்கள் கற்பனையில் எழும் படைப்புகளாய் இருந்தாலும், நடப்பியலுக்கு அப்பாற்பட்டனவாய் இருந்தாலும் சமுதாய வாழ்க்கை நெறிகளையும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் பிற பண்பாட்டுக் கலப்பையும் பழஞ்சமுதாய எச்சங்களையும் வாழ்வின் வளர்ச்சிப் போக்குகளையும் வெளிப்படுத்து வனவாய் அமைந்து நடைமுறை சார்ந்த மாற்றங்களைக் காட்டும் ஆவணங்களாக உள்ளன. அந்த வகையில் மனிதஇனத்தின் பிரதிநிதிகளாக விளங்கும் ஆண் பெண் என்ற இருபாலினர் குறித்த தொன்மங்கள் சங்ககாலத்தில் வாழ்ந்த அவர்களின் இருப்பையும் பழங்கால நிலையையும் நன்கு வெளிப்படுத்துவனவாய் அமைந்திருக்கின்றன. குறிப்பாக, சமய வழிபாட்டுத் தொன்மங்கள் அன்றைய மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டு அரசியலையும் பறைசாற்றுவனவாக உள்ளன.

தமிழ் இலக்கியங்களில் தொன்மங்கள் சார்ந்த பண்டைய புராணச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. இப்புராணச் செய்திகள் தற்கால வாழ்வியல் சிக்கல்களை எடுத் துரைப்பதற்கு மாற்று வடிவில் பயன் படுகின்றன. இராமாயண, மகாபாரத செய்திகள், அகநானூறு, நற்றிணை, கலித்தொகை ஆகிய இலக்கியங்களில் தொன்மச் செய்திகளாக இடம் பெற்றுள்ளன. இராவணன் 'கயிலை' மலையைத் தூக்க முயன்ற செய்தியைக் கபிலர் கலித்தொகையில் குறிப்பிடும் பொழுது,

**"இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்**
**உமையமர்ந்து உயர்மலை இருந்தன னாக**
**ஐயிரு தலையின் அரக்கர் கோமான்**
**தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுத்து அம்மலை**
**எடுக்கல் செல்லாது உழப்பவன் போல"**
**(கலித்தொகை.38)**

என்ற பாடலின் வாயிலாக இராமாயணக் கதையை விளக்கியுள்ளார். அதேபோல், கலித்தொகை 25 ஆவது பாடலில், மகாபாரதக் கதையில் பாண்டவர்கள் தங்கியிருந்த அரக்கு மாளிகைக்கு கௌரவர்கள் தீ மூட்டிய போது, பாண்டவர்களில் வலிமை பொருந்திய வீமன் தன் சகோதரர்களை காத்த செயலால் பாண்டவர்கள் தப்பித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. இக் குறிப்பினை,

**"வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர் பெற்ற**
**முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்,**
**ஐவர் என்று உலகு ஏத்தும் அரசர்கள் அகத்தராக்,**
**கை புனை அரக்கு இல்லைக் கதழ் எரி சூழ்ந்தாங்குக்,**
**களி திகழ் கடாஅத்த கடும் களிறு அகத்தவ,**
**முளி கழை உயர் மலை முற்றிய முழங்கு அழல்,**
**ஒள் உரு அரக்கு இல்லை வளிமகன் உடைத்துத் தன்**
**உள்ளத்துத்தன் உள்ளத்துக் கிளையோடு உயப்போகுவான் போல,**

**எழு உறழ் தடக்கையின் இனம் காக்கும் எழில் வேழம்,**
**அழுவம் சூழ் புகை அழல் அதர்பட மிதித்துத் தம்**
**குழுவொடு புணர்ந்து போம் குன்று அழல் வெஞ்சுரம்**
**இறந்திரால் ஐய! மற்று இவள் நிலைமை கேட்டீமின்!"**
**(கலித்தொகை.25)**

எனவரும் பாடல் பதிவு செய்துள்ளது. இப்பாடலின் பொருளாவது, 'உன் இன்பக்கொடை இல்லாவிட்டால் இவள் வாடிப்போவாள் என்று தோழி தலைவனிடம் கூறுகிறாள். அதாவது, 'வயக்குறு மண்டிலம்' என்பது 'மூன்றாம் பிறை' என்பதாகும். இதற்கு வடமொழிப் பெயர் 'திரிதியை', இந்தத் திரிதியையின் பெயர் பெற்றவன் மகாபாரதக்கதை நிகழ்ந்த அத்தினாபுரத்தின் சக்கரவர்த்தி 'திருதிராட்டிரன்' ஆவான். இந்த திருதிராட்டினனின் மகன்களில் முதியவன் 'துரியோதனன்'. இவனது சூழ்ச்சியால் 'ஐவர்' என்று பெயர் பெற்ற பாண்டவர்கள் அரக்கு மாளிகையின் உள்ளே இருந்தனர். துரியோதனன் தமது கைத்திறத்தினால் கட்டப்பட்ட அந்த அரக்கு மாளிகைக்கு அவனே தன் கையால் தீ மூட்டினான். பாண்டவர்களில் மிகுந்த வலிமையுடைய 'வீமன்' தம் தாயையும் சகோதரர்களையும் தீயில் மாய்ந்து விடாமல் அன்று காத்து நின்றான். அது போல, உயர்ந்து அடர்ந்த மலையில் உள்ள மூங்கில்காட்டில் 'காட்டுத் தீ' பற்றிக்கொண்ட போது அங்கிருந்த ஆண்யானை தன் இனமான பிற யானைகளையெல்லாம் நெருப்பு தாக்காதவாறு தன் கால்களால் நெருப்பை மிதித்து அணைத்து காத்து நிற்கும் காடு அது. அத்தகைய கொடிய காட்டைக் கடந்து செல்லும் ஐயனே! இவள் நிலைமையைக் கேட்டருள்க!' என்பதாக மேற்கண்ட கலித்தொகைப் பாடலின் பொருண்மை அமைந்துள்ளது.

ஆக, கலித்தொகை என்னும் காலப்பழமையுடைய சங்க இலக்கிய நூலில் அக்காலத்திற்கு முன்னர் நிகழ்ந்த ஒரு வரலாற்றுக் குறிப்பை சங்கப் புலவர் உவமையாக எடுத்தாண்டுள்ளார் என்னும் போது இங்கு இதனை 'தொன்மம்' சார்ந்த கருத்தியலாகவே மதிப்பிட முடிகிறது. ஆனால், பண்டைத்தமிழர் இலக்கண இலக்கியங்களை தொகுத்தவர்களும், தொடக்ககால உரையாசிரியர்களும் இதுபோன்ற கருத்தமைவு அமைந்த பாடல்களை இடைச்செருகல்களாக இணைத்திருக்கலாம் எனவும் கருத இடமுண்டு.ஏனெனில்,தமிழர்இலக்கியமும் வரலாறும் அத்தனை தனித்தன்மை உடையதாகவே பெரும்பாலும் அடையாளம் காணப்பட்டிருக்கும் சூழலில், இதுபோன்ற ஆரியப் புனைவுகள் தமிழிலக்கியத்திற்குள் இடம் பெற்றிருப்பதை ஆய்வுக்கண் கொண்டு நோக்கும் பொழுது சற்றே ஐயத்திற்கு இடமளிப்பதாகவே இருக்கிறது.

பாரத வரலாறு கிமு.1000 ஆவது ஆண்டில் நடைபெற்றதாக வரலாற்று அறிஞர்கள் சொல்வர். சங்கஇலக்கியப் புறப்பாடல் ஒன்றில் தருமபுத்திரனைப் பாடிய கௌதமனார் ஒரு வரலாற்றுக் குறிப்பினை தமது பாடலில் பதிவு செய்துள்ளார். பாரத வரலாறு நிகழ்ந்தது மேற்சொன்ன காலமெனில், இப்புறப் பாடலில் இடம்பெறும் மன்னனும் அக்காலத்தவராகவே இருக்கவேண்டும் என அறியமுடிகின்றன.

**"அலங்கு உளைப் புரவி ஐவரொடு சினைஇ**
**நிலம் தலைக்கொண்ட பொலம் பூந் தும்பை**

ஈர் ஐம்பதின்மரும் பொருது, களத்து ஒழிய
பெருஞ் சோற்று மிகு பதம் வரையாது
கொடுத்தோய்."(புறநானூறு.2:13-16)

என்ற புறப்பாடலில் பாராட்டப்பெறும் சேர மன்னரொருவன், நூறு கௌரவர்கள் படைகளுக்கும், ஐந்து பாண்டவர் படைகளுக்குமிடையே நடந்த மகாபாரதப் போரின் போது அவ் வீரர்களுக்கு பெருஞ்சோறு அளித்தான் என்ற வரலாற்றுக் குறிப்பு இடம்பெற்றுள்ளது. எனவேதான், இச்சேர மன்னன் 'பெருஞ்சோற்று உதியன்' என்ற சிறப்புப்பெயரும் பெற்றான் என்கிறது தமிழக வரலாறு. மேற்சொன்ன பாரத வரலாறு உண்மையாயின் இம்மன்னனும் பாரத காலத்தவன் என்பதில் ஐயமில்லை. மேலும், சங்ககாலத் தமிழர்களின் வரலாறு பிற நாகரிகங்களை விட காலத்தால் முந்தியது என்பதும் இதனால் தெளிவாகின்றன.

## உலகப் பண்பாட்டில் தொன்மங்கள்

சுமேரிய இலக்கியத்தில் உலகத்தின் தோற்றம், கடற் பேரழிவுகள், உழவுத்தொழில் கருவிகளின் தோற்றம், கடவுளர் பிறப்பு, பாதாள உலகம் ஆகியவை சார்ந்து தொன்மச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. கிரேக்கத்தின் இலியடும், ஒடிசியும் தொன்மக் களஞ்சியங்களாக விளங்குகின்றன. ஹீசியட் எழுதிய 'தியோஜினி' என்ற இலக்கியம் கடவுளர்களின் பிறப்பையும், வாழ்க்கையையும் பற்றிக் கூறுகின்றன. இவை போன்ற பல இலக்கியங்கள் பல்வேறு தொன்மச் செய்திகளைத் தாங்கியுள்ளது. "ஒரு சமுதாயத்தின் அமைப்பு, சட்டவிதிகள், ஒழுக்கமதிப்பு ஆகியவற்றின் அடித்தளமாய் அமைகின்ற முக்கியமான சமுதாய ஆற்றலே தொன்மம். இது நம்பிக்கைகளை ஒழுங்குபடுத்தித் தொகுத்தமைப்பதுடன் நடைமுறைச் செயற்பாட்டை வழிப்படுத்துவதாயும் ஒழுகலாற்று விதிகளைப் பயிற்றுவிப்பதாயும் அமைகின்றது. இது சடங்கு உள்ளிட்ட அனைத்து வாழ்வியற் கூறுகளிலும் ஊடுருவி நிற்கின்றது" (M.I.Steblin kamenskij, Mith. P.30) எனும் மாலினோஸ்கியின் கருத்து சமுதாயத்துடன் தொன்மம் கொண்டுள்ள தொடர்பை விவரிக்கிறது.

"உலகில் ஒருகாலத்தில் பேசப்பட்ட இயற்கையான பேச்சு, நுண்ணிய சிந்தனைகளை வெளிப்படுத்துவது, கவிதைகட்கு அடிப்படையானது, உண்மை நிகழ்வு அல்லது வரலாற்று நிகழ்வுகளின் கற்பனை வடிவமாய் அமைவது, மனித இனம் முழுமைக்கும் பொதுவான அடிமனத்திலிருந்து எழுவது, இது மனித இனத்தின் கனவு, அமுக்கப்பட்ட ஈடிபஸ் குற்றவுணர்வின் மாறுபட்ட வெளிப்பாடு, சடங்கோடு தொடர்புடையது" (க.பஞ்சாங்கம், இலக்கியத்தில் தொல்படிவங்கள், 8–11) என்ற கருத்துகளும் தொன்மம் குறித்து முன்வைக்கப்படுகின்றன.

## முடிவுரை

மனிதனின் மனத்தோடு மிக நெருக்கமான உறவுடைய தொன்மம் அது தோன்றிய காலந்தொட்டு ஒரே மாதிரியாக இருப்பதில்லை. காலந் தோறும்ஏற்படும்சமுதாய மாற்றங்களுக்கு ஏற்றவகையில் ஒவ்வொரு சமுதாய மாற்றத்தையும் பிரதிபலிப்பதாய்ச் சமுதாய மாற்றத்திற்கேற்ப மாற்றம் அடைவதாக உள்ளது. எந்த ஒரு சமுதாய உற்பத்தியும் மாற்றத்துக்கு உட்பட்டது. அந்த வகையில் சமுதாயத்தின் விளைபொருளாய் உள்ள

தொன்மமும் சமுதாய மாற்றத்தின் பல்வேறு கூறுகளையும் வெளிப்படுத்தும் ஆவணமாகவே உள்ளது எனலாம்.

**பார்வை நூல்கள் :**


1. பரிமணம்.க., பாலசுப்பிரமணியன். கு.வெ., (முதன்மை ப.ஆ) – (சங்க இலக்கியம்) ‘எட்டுத்தொகை, பத்துப்பாட்டு’ நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு, சென்னை 98. முதற்பதிப்பு – 2004.
2. கதிர் மகாதேவன் – ‘தென்மம்’ செல்லப்பா பதிப்பகம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை. முதற்பதிப்பு – ஏப்ரல் 2009.
3. பரிமேழலகர்., (உ.ஆ) – ‘திருவள்ளுவர் திருக்குறள்’ கங்கை புத்தக நிலையம், சென்னை, நான்காம் பதிப்பு – 2002
4. பஞ்சாங்கம்.கா (மொ.ஆ) – ‘இலக்கியத்தில் தொல் படிமங்கள்’ அன்னம் வெளியீடு, முதற்பதிப்பு – 1988.
5. வானமாமலை.நா – ‘தமிழர் பண்பாடும் தத்துவமும்’ அலைகள் வெளியீட்டகம், சென்னை – 24, முதற்பதிப்பு – 2015.

# பொருநராற்றுப் படை உணர்த்தும் பண்பாடு

**முனைவர் கு.வாணி ஜமுனா**
கௌரவ விரிவுரையாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி(த)
மதுரை-02.

## முன்னுரை :

தமிழிலக்கிய வரலாற்றில் பொற்காலமாகக் காணப்படுவது சங்க காலமாகும். மக்கள் தங்கள் உயிரினும் மேலாக ஒழுக்கத்தை கருதினர். அவ் வொழுக்கத்தை உருவாக்கும் ஆற்றல் வாய்ந்த கருவிகளில் இலக்கியமும் ஒன்று. படிப்போர்க்கும் இன்பம் தரும் வகையில் நுண்ணறிவு வாய்ந்த அறிஞர்கள் தம் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் முறைப்படுத்தி எழுதுவது இலக்கியம் எனப்படும்.

மனித இனம் அறிவு நிலையில் வளர்ந்து, சிறந்த ஒழுக்க நெறிகளைப் பின்பற்றும் சமூகமாக மாறுவதைப் பண்பாடு என்று கூறலாம். ஒரு சமுதாயத்தை இனங்காட்டி அதன் பெருமை சிறப்புகளை எடுத்தியம்பும் கால கண்ணாடியாகப் பண்பாடு திகழ்கின்றது. பண்பாடு என்ற சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினடங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகின்றது. மனிதன் மட்டுமே பண்பாட்டைக் கொண்ட விலங்காவான்.

ஒரு சமுதாயத்தின் வளர்நிலை களும் தளர்நிலைகளும் அந்தச் சமுதாயம் உருவாக்கிய இலக்கியங்களில் படிந்திருப்பது இயல்பு. இந்த இயல் பினைக் காட்டுவதில் சிறந்து நிற்பவை ஆற்றுப்படை இலக்கியமாகும்.

ஆற்றுப்படுத்துதல், பரிசு பெற்று வந்த கலைஞன் வறுமையில் வாடித்திரியும் மற்றொரு கலைஞனை, தான் பரிசில் பெற்று வந்த வள்ளலிடம் வழிப்படுத்தும் மனிதநேயப் பண்பாட்டை பறைசாற்றும் ஒப்பற்ற இலக்கியக் கருவூலமாக ஆற்றுப்படை நூல்கள் சிறந்திலங்குகின்றன.இவ் வகையில் பொருணாற்றுப்படை உணர்த்தும் பண்பாடு குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## ஆற்றுப்படை இலக்கணம்

ஆற்றுப்படை என்பது சங்கச் சான்றோர் பாடிய பாட்டு வகைகளுள் ஒன்று ஆகும். ஆற்றுப்படையாவது ஆற்றின்கண் படுப்பது என்பது ஆகும். ஆறு என்பது வழி, படுப்பது என்பது செலுத்துவது ஆகும். அதாவது ஒருவர் செல்ல வேண்டிய வழித்துறைகளைக் கூறி அவற்றைப் பின்பற்றிச் செல்லுமாறு செலுத்துவது எனலாம்.

மிகுதியான செல்வம் பெற்ற ஒருவன் பொருள் செல்வம் பெற விரும்பிச் செல்லும் ஒருவனை வழிபடுத்துதல், வழிகாட்டுதல் ஆற்றுப்படை இலக்கியம் ஆகும். ஆற்றுப்படை இலக்கியத்தின் தோற்றம் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தோன்றியுள்ளது. இது ஒரு சிற்றிலக்கிய நிலையில் வளர்ந்துள்ளதைப் பத்துப்பாட்டில் காண்கிறோம்.

**“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீ இச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்”**
(தொல். 1037)

என வரும் தொல்காப்பியப் புறத்திணை இயல்நூற்பா ஆற்றுப்படையின் இலக்கணத்தைச் சுட்டுகிறது.

## பொருநராற்றுப்படை

**பெருநல்லான் உழையீரா கெனப்
பொருநனை ஆற்றுப்படுத்தன்று**

என்று புறப்பொருள் வெண்பாமாலை பொருநராற்றுப்படைக்கு இலக்கணம் வகுக்கின்றது. அங்ஙனம் பரிசில் பெற்ற பொருநன் ஒருவன் பரிசில் பெற விரும்பிய மற்றொரு பொருனனை கரிகால் பெருவளத்தானிடம் ஆற்றுப் படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் பாட்டுடைத்தலைவன் கரிகாற் பெருவளத்தான். பாடியவர் முடத்தாமக் கண்ணியார். இடையிடையே வஞ் சியடிகள் விரவி வந்த ஆரிரியப்பாவால் ஆன 248 அடிகளைக் கொண்டது.

திருவிழாவில் பொருநர்கள் கூடித் தங்கள் கலைத் திறனைக் காட்டிப் பின்னர் விழா முடிந்தவுடன் வேற்றூர் நாடிச் செல்வதாக இப்பாடல் தொடங்குகின்றது. அப்போது அவ் வழியாக வந்த மற்றொரு பொருநன் இவர்களைச் சந்தித்துத் தான் கரிகால் பெருவளத்தானிடம் பரிசில் பெற்ற பெருபான்மையை எடுத்துக் கூறி கரிகாலனிடம் அவர்களை ஆற்றுப் படுத்துகின்றான். அப்போது கரிகாலனின் வீரத்தையும் வெற்றிச் சிறப்பையும், விருந்தோம்பும் பண்பையும், கொடையையும் விரிவாக புகழ்ந்துரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது.

இம்மன்னன் உருவப் பஃறேர் இளஞ் சேட் சென்னி என்னும் அரசனுடைய மகன் பன்பதை “உருவப்பஃறே ரிளையோன் சிறுவன்” (பொருந.130) என வரும் பொருநராற்றுப்படை அடியால் உணரலாம். இவன் தாய் வயிற்றில் கருவாய் இருக்கும் போதே இவன் தந்தை இறந்தான். இதனால் இவன் கருவிலிருக்கும் காலத்திலேயே அரசுரிமை பெற்றுப் பிறந்தான் என்பதை “தாய் வயிற்றிலிருந்து தாயமெய்தி” (பொருநராற்றுப்படை –132) என்ற அடியால் உணரலாம்.

## பண்பாடு

எது ஒன்று காலத்தால் மாறு படாமல் புழக்கத்தில் இருக்கின்றதோ அதனைப் பண்பாடு எனலாம். எனினும் இப்பண்பாடு நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம் மாறுபடக் கூடியதாக இருக்கும். இப்பண்பாடு குறித்து பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை குறிப்பிடுகின்றனர்.

‘பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயல் படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அந்தந்தச் சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. இது உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது’

‘மக்கள் தலைமுறை தலை முறையாக குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும்’ (பக்தவத்சலபாரதி, 2003:151)

**“பண்புஉடையார்ப் பட்டுஉண்டு உலகம்
அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்”** (குறள்-996)

பண்பு மிகுந்தவர்களிடத்தில் பொருந்தி இருப்பதாலேயே உலகம் அழியாமல் இயங்கிக் கொண்டிருக்கிறது

என்னும் வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப பண்புடையவர் திகழ்ந்தனர். என்பதை நாம் சங்க இலக்கியத்தின் வாயிலாக அறிகிறோம். “பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்” என வரும் கலித்தொகை பாடலடியின்; மூலம் பண்பு என்பது நடையினை அறிந்து ஒழுகுதல் என்று சொல்லப்படுகிறது.

உலகம் போற்றும் உயிர் பண்பினை சொல்லாலும், செயலாலும் அதனைத் தம் இனத்தவருக்கு கற்பிக்க வேண்டும். எல்லோருடைய இயல்புகளையும் அறிந்து மனமொற்றி நன்னெறியில் ஒழுக வேண்டும். இத்தகையோரைப் பண்பாடுடையவர் என்கிறோம்.

## பகிர்ந்து உண்ணும் பண்பு

பகிர்ந்து உண்ணும் பண்பை,

“யான் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்”

என்ற திருமூலரின் பாடலை அடிப்படையாக் கொண்டுதான் பொருநர் ஆற்றுப்படையில் காணப்படும் மக்களின் இயல்பு அமைந்துள்ளது. அவர்கள் தான் மட்டும் உண்டு வாழ்ந்தால் போதாது. தன்னைப் போல் உள்ள மற்றவர்களும் எல்லா உடமை களும் பெற்று வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் என்பதை பொருநராற்றுப்படையின் மூலம் அறிய முடிகிறது.

கரிகாற் பெருவளத்தானிடம் பரிசில் பெற்று வந்த ஒரு பொருநன் மற்றொரு பொருநனை அம்மன்னனிடம் நீயும் செல் என்று கூறுவதிலிருந்து அன்றைய உயர்ந்த பண்பை நம்மால் அறியமுடிகிறது.

புகழால் மேம்பட்டவனே! என பரிசில் பெறாத பொருநனை அழைத்து, பசிக்கொடுமையினால் உன்னுடைய சுற்றத்தாரும் பசியிலிருந்து நீங்க வேண்டுமானால் காலம் நீட்டிக்காமல் உடனே செல்வாயாக! குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தரம் என்னும் இசைகள் ஏழுக்கும் உரிமை உடையவனே! வௌவால் முதலிய பறவைகள் நன்கு பழுத்த பழங்கள் உள்ள மரங்களை நாடிச்செல்லும். அதுபோல் நான் முன்பு வறுமையில் துயருற்றபோது கரிகால் பெருவளத்தானிடம் சென்று பரிசுகள் பெற்றேன். அதுபோல் நீயும் கரிகால் பெருவளத்தானிடம் சென்று பரிசுபல பெறுவாயாக என்று பரிசுபெற்ற பொருநன் பரிசு பெறாத பொருநரை ஆற்றுப்படுத்துகிறான். இதன் மூலம் அன்றைய உயர்வான பண்பை நம்மால் அறிய முடிகிறது.

## விருந்தினரை மதிக்கும் மாண்பு

கரிகாற் பெருவளத்தானின் அரண்மனை பகைவர்களோ தேவை யற்ற மனிதர்களோ நுழைய இயலாத அளவிற்கு மிகுந்த காவலினை உடையது. ஆனால், புலவர்களுக்கும், கலைஞர்களுக்கும், விருந்து வேண்டி வருபவர்களுக்கும் எத்தகைய கட்டுப் பாடுமின்றி மன்னனைக் காண அரண்மனைக்குள் நுழையலாம் என்ற கட்டளை விதித்திருந்தான் கரிகாலன். இதனால் வறுமையில் இளைத்திருந்த பொருநனின் உடலையும், அவனது இசைக்கருவிகளையும் கண்ட வாயிற்காவன் அவன் ஓர் இசைக் கலைஞன்தான் என்று முடிவு செய்து அப்பொருநனைத் தடுக்காது உள்ளே அனுப்பினான். இதனை,

**பழுமரம் தேடிய பறவையின் யானுமவன்
இழுமென் சும்மை இடனுடை வரைப்பின்
நகையுநர்த் தடையா நன்பெரு வாயில்
(பொரு: 64-66)**

என்ற பாடல் வரிகள் தெரிவிக்கின்றன. இதனால் விருந்தினர்களை மதித்துப் போற்றிய கரிகாலனின் சிறப்பு

புலப்படுகின்றது.

**அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவாள் இல் (குறள் :84)**

என்ற குறளின் கருத்திற்கிணங்கத் தம்மை நாடி வந்த பொருநனை விருப்புடன் முகம் மலர்ந்து வரவேற்றான் கரிகாலன். இந்தப் பொருநனைத் தன் கண்களில் எப்போதும் படும்படி தன் அண்மையில் அமரச் செய்து கொண்டான். இதனை,

**கேளிர் போல கேள்கொளல் வேண்டி**
**வேளாண் வாயில் வேட்பக் கூறி**
**கண்ணில் காண நண்ணுவழி இரீஇ**
**பருகுஅன்ன அருகா நோக்குமொடு**
**உருகுபவை போல் என்பு குளிர்**
**கொளீஇ (பொரு : 74-78)**

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

கலைஞர்கள் கடத்தற்கரிய நிலங்களைப் பல நாட்கள் கடந்து தன்னைக் காண வந்தமையால் அவர்கள் மட்டுமல்லாது அவர்களின் உடையும் நைந்து கிடப்பதைக் கரிகாலன் கண்டான். நெடுவழி வந்த அவர்களின் வருத்தம் தீர இனிய முகத்துடன் வரவேற்று தாயுள்ளம் கொண்டவனாக, அவர்களின் பாசி போன்ற பழைய ஆடையை நீக்கிப் பாலாவி போன்ற புத்தாடையை அணியச் செய்கின்றான். கரிகாலன் தந்த ஆடையானது இழை செல்கின்ற வழி எது என்று அறிய முடியாததாய் மிக நுட்பமாக நெய்யப் பட்டிருந்ததை,

**துன்னர்ச் சிதாஅர் துவர நீக்கி**
**நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து**
**அரவுஉரி அன்ன அறுவை நல்கி**
**(பொரு : 81-83)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. புத்தாடை அணிவித்த பின்னர் கலைஞர்கள் வழிவந்த களைப்பு நீங்க, அழகிய அணிகளை அணிந்த, இனிய புன்னகையுடன் வீற்றிருக்கும் ஏவல் மகளிர் பொற்கலத்தில் மதுவினை வார்த்து அவர்களுக்குப் பருகக் கொடுத்தனர். இதனை,

**இளையணி வனப்பின் இன்னகை மகளிர்**
**போக்குஇல் பொலங்கலம் நிறைய பல்கால்**
**வாக்குபு தரத்தர வருத்தம் வீட**
**ஆர உண்டு பேர்ஞர் போக்கி**
**(பொரு : 85-88)**

என்று பொருநராற்றுப்படை விளக்கி நிற்கின்றது. தன் மன வருத்தமெல்லாம் நீங்கும் படியாக பொருநன் நிறைய கள்ளினைப் பருகி மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்பட்டான் என்பதை இச் செய்தியால் அறியலாம்.

விருந்தும் மருந்தும் மூன்று நாட்கள் என்பது முதுமொழி. முதல்நாள் வாழை இலையில் விருந்து, இரண்டாம்நாள் தையல் இலையில் விருந்து, மூன்றாம் நாள் கையில்தான் விருந்து என்று கூறும் அளவிற்கு இன்றைய காலத்தில் விருந்தோம்பல் பண்பு குறுகிய கண்ணோட்டம் பெற்றுள்ளது. ஆனால், கரிகால் பெருவளத்தான் தம்மை நாடி வந்த புலவர்களை, கலைஞர்களை ஒரு நாள் இரு நாட்கள் மட்டுமல்லாமல் பல நாட்கள் விருந்தோம்பியுள்ளான். அதிலும் முதல் நாள் இருந்த அதே மனநியையும், விருப்பும், அன்பும் அவர்கள் விடைபெற்றுச் செல்லும் வரை நிலைத்து இருந்ததைக் காணுகையில் வியப்பு மேலிடுகின்றது. அவ்வாறு, கரிகால்பெருவளத்தான் கலைஞர்களைப் போற்றி பலநாட்கள் விருந்தோம்பியதை உணர்த்துகின்றன. கன்றை ஈன்ற தாய்ப்பசு தன் கன்றை விருப்பிப் பார்ப்பது போன்று இரவலனை ஆர்வத்தோடு பார்த்து பரிசுகள் பலவற்றைக் கொடுத்து மகிழ்வு படுத்தினான். இவ்வாறு இரவலர்களைக் கூட சமமாக நினைத்து வாழும் உயர்ந்த பண்புடைய சமுதாயமாக அக்காலச்

சமுதாயம் காணப்பட்டது.

## விருந்தோம்பலறம்

விருந்து பேணுதல் தமிழர் தம் தலையாய பண்பாடு. தம் சுற்றத் தார்க்கு மட்டுமின்றி முன்பின் தெரியாத அயலவருக்கும் தம்மிடம் உள்ள சிறந்த உணவை விருந்தாக அளித்து மகிழ்ந்தனர். தமிழர்களின் இல்லற வாழ்வின் இயல்பினை அளக்க உதவும் அளவுகோலாக விருந்தோம்பல் திகழ்கின்றது. விருந்தோம்பலின் சிறப்பே பயனடைந்தவர்கள் காட்டும் மனநிறைவில்தான் உள்ளது. ஆகவேதான் அகநிலையில் மட்டு மல்லாமல் புறநிலையிலும் தன்னை நாடி வருபவர்களை முகம் கோணாது வரவேற்று விருந்து உபசரித்தனர்.

விருந்தினராகத் தமது உறவினரன்றி, புலவர், பாணர், பொருநர், கூத்தர், விறலியர் போன்றோரும் வந்தனர். அவர்களுக்கு உண்டி, உறையுள் தந்து விருந்தோம்பிய பழந்தமிழரின் சிறப்பினை ஆற்றுப்படை நூல்கள் விளக்குகின்றன. இல்லறத்தின் சிறப்பு விருந்தோம்பலாகும் என வள்ளுவர் கூறியுள்ளார். இவர் விருந்தோம்பல் பற்றி ஒரு அதிகாரத்தையே படைத் துள்ளார். சாவா மருந்தெனினும் விருந்தினரைப் புறக்கணித்து உண்ணாத மாண்புடையராக மக்கள் காணப்பட்டதை,

> "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
> மருந் தெனினும் வேண்டாற்பாற்
> நன்று" (குறள்-82)

என்னும் குறள் தெளிவுவடுத்துகிறது. விருந்தினர் வந்தால் தாங்கள் இருக்கும் ஆசனத்தை விட்டு எழுந்து வரவேற்க வேண்டுமென நாலடி 143 கூறுகின்றது.

தம்மை நாடி வந்த கலைஞர்கள் பசித்துன்பத்தால் வருந்துகின்ற நிலையைக் கண்ட கரிகாலன் அவர்களுக்கு இனிய உணவு தந்து உபசரித்தான். அருகம்புல்லைச் செழுமையாக உண்டதனால் பருத்த கால்தொடையை உடைய செம்மறியாட்டின் வெந்த இறைச்சியையும், பரிய தசைத் துண்டத்தையும் முகம் மலர கொடுத்து அவர்களை மகிழ்வித்தான். இதனை,

> காழின் சுட்ட கோழ்ஊன் கொழுங்குறை
> ஊழின் ஊழின் வாய்வெய்து ஒற்றி
> (பொரு : 114 - 115)

என்ற வரிகள் தெரிவிக்கின்றன. மேலும்,

> வேறுபல உருவின் விரகு தந்து இரீஇ
> (பொரு: 117)

> அவிழ்ப்பதம் கொள்க என்று இரப்ப
> முகிழ்த்தகை
> முரவை போகிய முரியா அரிசி
> விரல்என நிமிர்ந்த நிரல் அமைப்
> புழுக்கல் (பொரு:111-113)

என்ற பாடலடிகளால் கொழுத்த இறைச்சி, பல வடிவப் பணியாரங்கள், அரிசிச்சோறு ஆகியன பொருநருக்கு விருந்தாக அளிக்கப்பட்டது என்பது தெரிகின்றது. இவையாவற்றையும் கழுத்து வரை வந்து நிரம்புமாறு பொருநர்கள் உண்டனர். இரவும் பகலுமாக இறைச்சியை மென்று மென்று தின்றதால் தன் பற்களும் உழுத கொழுவைப் போன்று முனை மழுங்கி விட்டனவென்று பொருநன் கூறுகின்றான்.

> கொல்லை உழுகொதழு ஏய்ப்ப பல்லே
> எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி
> உயிர்ப்பிடம் பொறா அது ஊண்முனிந்து
> (பொரு:117-119)

எனும் பாடலடிகள் வாயிலாக அறிய முடிகின்றது. இதனால், இரவலர்களுக்கு அருகிலிருந்து அரசன் உணவு பரிமாறிய திலிருந்து விருந்தினரை ஓம்பும் முறை தெரிய வருகின்றது.

## ஈகைப்பண்பு

ஈகை என்னும் பண்பு தனி மனித சிந்தனையில் உருவாகி சமுதாயப் பயனுடையதாக அமைகின்றது. வறுமையில் வாடும் மக்களுக்குத் தம்மால் இயன்ற உதவியைச் செய்கின்ற பொழுது அச்செயல் உயர்ந்ததாகப் பலராலும் போற்றப்படுகிறது. கொடுப்பவர் எதையும் எதிர்பாராமல் கொடுக் கிறார். பெறுபவர் உள்ளம் மகிழ்ந்து பெற்றுக் கொண்டு வாழ்த்துகிறார். இதனால் ஈந்து உவக்கும் இன்பம் பிறக்கிறது. இந்த உயர் சிந்தனை பிறரையும் ஈர்க்கிறது. எனவே தான் வள்ளுவர்,

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு**

(குறள் 231)

என்று பாடியுள்ளார். அழியும் தன்மையுடைய பொருட்செல்வத்தைத் தமிழர்கள் போற்றிப் பாதுகாக்கும் செல்வமாகக் கருதாமல் என்றும் நிலைத்து நிற்கும் அருட்செல்வத்தையே செல்வமாக மதித்துப் போற்றினர்.

செல்வத்தின் தன்மையை,

**நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்**
**செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே**
**சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கண் செல்வம் செல்வம்என் பதுவே**

(210: 5-9)

என்று நற்றிணை கூறுகிறது.

உள்ளவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவுவதைக் கடமையாகக் கொள்ள வேண்டும் என்பதைப் புறநானூறு சுட்டிக் காட்டுகிறது. எத்துணை ஏழை செல்வந்தர் என்ற வேறுபாடுகள் இருப்பினும் அடிப் படையில் மனித இனம் ஒன்றேயாகும். அனைவர்க்கும் பசியுணர்ச்சியும் இன்ப துன்ப உணர்ச்சிகளும் சமமே. எனவே மனிதனுக்கு நாழி அளவு உணவும் உடலை மறைக்க இரண்டு உடைகளும் போதுமானவை. பிற உணர்வுகளும் பொதுவானவையே. எனவே தான்,

**செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்பேம் எனினே தப்புந பலவே**

(189)

என்று அறிவுரை கூறுகிறார் நக்கீரர். ஈகையை நற்செயலாக எண்ணிச் செய்ய வேண்டுமே அல்லாமல் புகழையும் மறுமைப் பயனையும் நோக்கமாகக் கொண்டு செய்யலாகாது எனக் கருதினார்கள்.

**எத்துணை ஆயினும் ஈதல் நன்றென**
**மறுமை நோக்கின்றோ அன்றே**
**பிறர் வறுமை நோக்கின்று** (114)

என்று பாடுகிறார் பரணர். கொடுத்து கொடுத்து வறுமையுற்றவர்களைப் புலர் உலகம் பாராட்டியுள்ளது. மன்னர் களும் கடையெழு வள்ளல்களும் தம் ஈகைத் திறத்தினால் புலவர்களைக் கவர்ந்துள்ளனர். இவர்கள் இரவலர்க்கும் புலவர்களுக்கும் பரிசிலர்க்கும் வாரி வழங்கித் தம் புகழை நிலைநாட்டியுள்ளனர்.

சில நாட்கள் மன்னர்களுடன் தங்கியிருந்த பொருநன் முதலியோர் விடைபெற எண்ணியவர்களாய் கரிகாலனிடம் வந்து கூறினர். கரிகாலனோ வெகுண்டவனாய் என்னை விட்டு விரைவில் போகின்றீரோ என்ற வருத்தத்துடன் கேட்டான். பின்பு பொன்னாலாகிய தாமரைப் மலரைப் பொருநன் தலையில் சூட்டுகின்றான். பொன்னரி மாலையோடு முத்து மாலையைப் பாடினி சூடத் தருகின்றான். இத்தகு நிலையை,

**சுரிஇரும் பித்தை பொலியச் சூட்டி**
**நூலின் வரவா நுணங்குஅரில் மாலை**

வால்ஒளி முத்தமொடு பாடினி அணிய
(பொரு 160 - 163)

என்பதால் அறியலாம். மேலும்,

துடிஅடி அன்ன தூங்குநடைக் குழவியொடு
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்க என
தன்அறி அளவையின் தரத்தர
(பொரு:125-127)

என்ற பாடலடிகளால் கரிகாலன் உடுக்கைக்கண் போன்ற அடிகளையுடைய கன்றுகளோடு, படிகளையுடைய களிற்று யானைகளையும், பொருநன் விரும்பிய பல்வேறு ஆடை அணிகலன்களையும் மிகுதியாகக் கொடுத்தான் என்பது தெரிகின்றது. அதன் பிறகு கன்றுகளோடு பிடியானையும், களிற்று யானையையும், ஆடை, அணிகலன் களையும் கொடுத்து யானைக் கொம்பால் செய்த நான்கு குதிரைகள் கட்டப்பட்ட தேரிலே இரவலர்களை வழியனுப்புகிறான் என்பதை,

"பால் புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலின் ஏழடி பின்சென்று, கோலின்
தாறு களைந்து ஏறுஎன்று ஏற்றி"
(பொருந.165-167)

என்ற பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

## முடிவுரை

தமிழ் இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் விழுமிய உணர்வுகளையும் உயரிய நோக்கங்களையும், வெளிக் காட்டும் படைப்புகளாகத் திகழ்கின்றன. இவ்வாறான பொருநராற்றுப்படை என்னும் அரும்பெரும் நெறிப்படுத்தலின் வழியே பண்டைத் தமிழ் மக்களின் பண்பாட்டின் பெருமிதங்களை அறிய முடிகின்றது.

# அகநானூறு காட்டும் பண்பாடு

**கோ.விஜயராஜன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 21

## முன்னுரை

ஒரு சமுதாயத்தின் செயல்பாடு களிலிருந்து அச்சமுதாயத்தின் பண்பாட்டை அறியலாம். பண்பாடு என்பது சமூக வளர்ச்சியை காட்டக் கூடியது. மக்களின் செம்மையான வாழ்க்கை முறையை பண்பாடு வெளிப் படுத்துகிறது. சமுதாயம் மக்களின் உணர்வுகளை மையமாகக் கொண்டது மட்டுமல்லாமல் மக்களின் தேவையை நிறைவேற்றுவதாகவும் சமுதாயம் அமைகிறது. சமுதாயம் சிறந்த வகையில் அமைய அதன் பண்பாடு அடிப்படையாக அமைகின்றது. மக்களின் வாழ்க்கையில் பண்பாட்டிற்கு முக்கியத்துவம் இருப்பதால்தான் மக்கள் இணக்கமாக வாழ முடிகிறது. பண்பாட்டால் மக்கள் வாழ்க்கை தனித்துவம் பெறுகிறது.

ஒரு மனிதனின் ஆளுமையை உருவாக்குவதில் அவனது பண்பாட்டு விழுமியங்களுக்கு இடம் உண்டு. ஒவ்வொரு பண்பாடும் நடத்தை விதிகளை வரையறை செய்து வைத் திருப்பதோடு, அப்பண்பாடு சார்ந்த மக்களின் அடிப்படை வாழ்க்கை முறையை தீர்மானிப்பதிலும் பெரும் பங்கு வகிக்கின்றது எனலாம். இந்த வகையில் சங்க இலக்கியங்களில் காணப்படும் பண்பாட்டு விழுமியங்களை அகநானூற்று பாடல்கள் மூலமாக காண இக்கட்டுரை முற்படுகின்றது.

## பண்பாடு சொற்பொருள் விளக்கம்

'பண்பாடு' என்ற சொல் சங்க இலக்கியத்தில் 'பண்பு' என்ற சொல்லிலே வழங்கப்பட்டு வந்துள்ளது. காலம் மாற்றத்திற்குப் பிறகு 'பண்பாடு' என வழங்கப்பட்டு வந்தது. 'பண்பாடு' என்பது பண்பு+பாடு என பிரிந்து பொருள் தரும். "பண்பு என்ற சொல்லிற்கு குணம், இயல்பு, தன்மை, முறை, செய்கை, என்ற பொருளையும் 'பண்படுதல்' என்ற சொல்லிற்கு செப்பம், சீர்திருத்துதல்"[1] என்ற பொருண்மையை தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது.

'பண்பாடு' என்னும் சொல்லை டி.கே.சி. முதன்முதலில் பயன்படுத்தியுள்ளார். ஆயினும் தொல்காப்பியர் காலத்தில் பண்பு என்னும் சொல் வழக்கில் இருந்துள்ளதை

"இசையினும் குறிப்பிடும் பண்பிலும்
தோற்றி"2

என்ற நூற்பாவின் வழி அறியலாம்.

"'பண்பாடு' என்ற சொல் 'பண்படு' என்ற வினைச் சொல்லிலிருந்து உருவாக்கம் பெற்றுள்ளது எனலாம். 'செயற்படு' என்ற வினையிலிருந்து 'செயல்பாடு' என்ற சொல் உருவானது போல 'பண்படு' என்ற வினை யிலிருந்து 'பண்பாடு' என்ற சொல் உருவாகியிருக்கிறது எனலாம். எனவே 'பண்பாடு' என்ற சொல் 'பண்' என்ற

வேர்ச்சொல்லை கொண்டு அமைந்துள்ளது எனில் தகும். 'பண்' என்பதற்கு இசைப்பாட்டு, நிறை, குதிரைக்கல்லணை, இசை என்ற பொருளும் உண்டு."[3]

"'பண்' என்பதற்கு சுவரம், காளாபிஷேகம், கை, அழகு, சௌலப்பியம், வார்த்தை கோடு, அணி"[4] என்ற பொருளை தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது.

"'பண்படுத்தல்' என்பதற்கு சீர்திருத்துதல், நிலம் முதலியன செப்பமாதல் என்றும் 'பண்பட்டவன்' என்பதற்கு கல்வி அறிவும் அனுபவமும் உள்ளவன்"[5] என்றும் தமிழ் அகராதி கூறுகின்றது.

"'பண்படு' என்பதற்கு உழுது பயிரிடுவதற்கு ஏற்றவாறு சீரடைதல், பண்பட்ட நிலை அடைதல் என்ற பொருளையும் 'பண்பாடு' என்பதற்கு குறிப்பிட்ட இடத்து மக்களின் பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும், கலைகளும், சிந்தனையை வெளிப்படுத்தும் முறைகளும், மக்களின் சிந்தனை வெளிப்பாடு"[6] என்ற பொருளை மற்றொரு தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது–.

நாம் பண்பாடு என்னும் சொல்லால் இன்று குறிப்பிடுபவனவற்றை நம் முன்னோர்கள் பண்பு, பண்புடைமை, சால்பு, சான்றாண்மை போன்ற சொற்களில் குறிப்பிட்டுள்ளனர். பண்பு, பண்படு, பண்பாடு ஆகியவை உறவுடைய சொற்களாக தமிழில் வழங்கி வருகின்றன. வாழ்க்கையில் மனிதன் முழு நிறைவை அடைவதற்காக மேற்கொள்ளும் முயற்சியின் பயனாக அமைவது பண்பாடு எனப்படும்.

## பண்பாடு வரையறைகள்

பண்பாடு மனித சமூகம் சிந்திக்கத் தொடங்கிய கால முதலே மனித விடத்து தோன்றியதாக கூறுவர். பண்பாடு என்பது முன்னோர்கள் வாழ்வில் வகுத்த ஒழுங்கு முறையான வாழ்க்கை முறை. இவை மக்களின் மன உணர்வுகளையும் எண்ணங்களையும் அறிவு திறனையும் பிரதிபலிக்கின்றது. பண்பாடு குறித்து அறிஞர்கள் பலரும் பல்வேறு வரையறைகளை அளிக்கின்றனர்.

"ஓரினம் மற்றொரு இனத்தோடு பகைமை அற்று உதட்டால் அல்லாமல் உள்ளதால் ஒன்றியும், ஒன்றுதலால் உள்ளத்தில் நிகழும் பிற நிகழ்ச்சிகளும், செயல்களும் பிறகும் யாவும் தனி மனிதனுக்கும் தனி சமூகத்திற்கும் தனி நாட்டிற்கும் தனி இனத்திற்கும் என்றில்லாமல் எல்லோருக்கும் ஒப்ப இருக்கும் வகையில் வழிகாட்டுவதே பண்பாடாகும்"[7] என்பர்.

"சமூகங்கள் பல சேர்ந்து ஒரு சமுதாயமாக பின்னிப்பிணைந்து இயங்கும் பொழுது உருவாகும் வாழ்க்கை நெறி, பழக்கவழக்கங்கள், கலை உணர்வு, சிந்தனை முதிர்ச்சி ஆகிய அனைத்தும் இணைந்து ஒருவகை சமுதாய சிந்தனையாக வெளிப்படுவதும் மனிதனுடைய உள்ளத்து உணர்வுகள் பண்பட்டு, பதப்பட்டு, செம்மை நலமுறுவதும் பண்பாடாகும்."[8]

"பண்பாடு என்பது இன்ன வகைத்து என்று காண இயலாவிடினும் பண்பாடு உள்ளமையால் தான் இந்த உலகம் நிலைத்து நிற்கிறது என்பதை உணர இயலுகின்றது" என்பர். எனவே "கட்டுக்கடங்கிய திருந்திய மனித உணர்வுகளே பண்பாடு"[9] எனலாம்.

## மக்கட் பண்பு

மனிதனின் சிந்தனை, வளர்ச்சி நிலையை அடிப்படையாகக் கொண்டது. அன்பு, கருணை, இரக்கம் போன்ற நிலைக்கலன்களை மையமிட்டு மனிதன் வாழ்கின்றான். மனிதனின் சிந்தனை ஆற்றல் மூலமாக பண்பு தோன்றுகிறது.

ஆதிகாலத்தில் இருந்த மனிதனின் பகுத்தறிவு காரணமாக பின்னாளில் மனிதன் மாற்றமடைந்துள்ளான். மனிதனின் சிந்தனையிலிருந்து தோன்றுகின்ற நிலைகள் அனைத்தும் மனிதன் சார்ந்து இருக்கும் சமூகத்தின் பண்பாட்டை விளக்கும் வண்ணம் அமைகின்றன.

**"உண்டால் அம்ம இவ் வுலகம் - இந்திரர்**
**அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதெனத்**
**தமியர் உண்டலும் இலரே முனிவு இலர்"**[10]

என்ற பாடல் பண்பாட்டின் நிலையில் உயர்ந்து, அக்கால மக்கள் எவ்வகைப் பண்பாட்டுடன் வாழ்ந்தனர் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

சேரிகளை கொண்ட தலைமையும் பழமையும் கொண்ட ஊர் மக்கள் கையில் பொருளின்றி வரும், முன்பு அறியாத புதியோரை காக்கும் பண்பினை அறிந்தவர்கள் என்று அகநானூறு காட்டும். இதனை

**"தோகைக் காவின் துளுநாட்டு அன்ன**
**வறுங் கை வம்பலர்த் தாங்கும் பண்பின்**
**செறிந்த சேரி செம்மல் மூதூர்"**
**(அகம்.15)**

என்ற பாடலால் அறிய முடிகின்றது

## காதல் பண்பாடு

பழந்தமிழர்கள் காதலையும் வீரத்தையும் தம் இரு கண்களாக கொண்டனர். ஆணும் பெண்ணும் திருமணத்திற்கு முன் தம்முள் ஒத்த அன்புடையவராகி பெற்றோரும் மற்றொரும் அறியாது வாழ்தலே களவு. தலைவனை மனம் புரிந்து கொண்ட தலைவி தன்னையும் தன் தலைவனையும் காத்து அறநெறியோடு மகிழ்வும், ஊடலும், பிரிவுமாய் இல்லறத்தில் இனி தொழுகி புகழடைவதே கற்பு.

மனம் ஒன்றிப்போன காதலர்கள் தங்கள் ஐம்புலன்களின் வழியாக இன்பம் அனுபவிப்பார்கள். ஈருடல் ஒருயிர் என்னும் நிலையில் அவர்கள் வாழ்க்கை அமையும். காதலர்கள் ஒருவர் மேல் ஒருவர் கொண்ட அன்பினை அகப்பாடல்களில் காண முடிகிறது. இத்தகைய காதல் வாழ்வினை

**"உயிர்கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பின்**
**செயிர்தீர் நெஞ்சமோடு செறிந்தோர் போல**
**தையல்! நின்வயின் பிரியலம் யாம்."**
**(அகம்.205)**

என்பதால் அறியமுடிகிறது.

குறுந்தொகையில் உள்ள பாடல் ஒன்றில் தலைவியானவள் தலைவன் மீது கொண்ட அன்பினை அளவிட முடியாத நிலையில்

**"நிலத்திலும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர் அளவின்றே சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு**
**பெருந்தே னிழைக்கும் நாடனோடு நட்பே"**[11]

என்று கூறுகின்றாள். காதல் பண்பாட்டில், அக வாழ்வின்வழி இலக்கியங்கள் அக்கால மக்களின் தமிழ் பண்பாட்டை வலியுறுத்துகின்றன.

## அகநானூறு குறிப்பிடும் களவு ஒழுக்க பண்பாடு

பெண்களுக்கு மதிப்பளித்தலும் பெண்ணின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தலும் பண்டைய அக இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. மணப்பருவம் எழுதிய தலைவன் தலைவி தாமாகவே கூடும் கூட்டத்தினை களவு என்பர். தலைவன் தலைவி ஒழுக்கத்திலும் பண்பாடு தெரிகிறது. பண்பாட்டில் அக்கறையுடையவளாக தலைவியும் தோழியும் விளங்குகின்றனர். தலைவன் தலைவியை தினை புணத்தின் கண்ணே கண்டதும் காதல் கொள்கிறான். அவனுடைய அரவணைப்பை தலைவி விரும்பினாலும் தன் விருப்பத்தை முதலிலேயே

தலைவனிடம் தெரிவித்து விடக்கூடாது என்பதற்காக தலைவனிடம் கடும் சொற்கள் கூறி அவனை விட்டு விலகி நிற்கும் மாண்பை,

**"சூர மகளிரின் நின்ற நீ மற்று**
**யாரையோ? எம் அணங்கியோய்!**
**உண்கு என**
**சிறுபுறம் சுவையினனாகி அதற்கொண்டு**
**இருபெயல் மண்ணின் ஞெகிழ்வு, அஞர்**
**உற்ற என்**
**உள் அவன் அறிதல் அஞ்சி உள் இல்**
**கடிய கூற கை பிணி விடாஅ" (அகம்.32)**

என்ற பாடல் விளக்குகின்றது.

## அறத்தோடு நிற்றல்

களவு கற்பாக மாற வேண்டியது அறமாதலின் அதனை உரியவரிடம் உரிய நேரத்தில் உரிய வகையில் வெளிப் படுத்தும் செயல் அறத்தோடு நிறுத்தல் எனப்பட்டது. களவு ஒழுக்கமான காதல் ஒழுக்கத்தை முறையே வெளிப்படுத்துவது அறத்தோடு நிற்றலாகும்.

"அறம் எனப்படுவது பல பண்புகளையும் தழுவிய பொதுச் சொல்லாயினும், ஈண்டு பெண்ணுக்கு உரிய முதற்பண்பான கற்பையே குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடிப்பில் நின்று களவு ஒழுக்கத்தை பெற்றோருக்கு வெளிப்படுத்துதல் என்பது இத்துறையின் பொருள். பெற்றோருக்கு அறிவித்தல் தோழியின் நோக்கம் இல்லை. அவ் வண்ணம் அறிவிப்பது தலைவி கற்பு நெறிப்பட்டு விட்டால் என்பதனை முதன்மையாக வலியுறுத்துவதே அவள் நோக்கம்"[12] என்பர்.

அறத்தோடு நிற்றலில் சிறப்பான பண்பாட்டை சங்க இலக்கியம் நெறிப்படுத்திக் காட்டுகின்றது. களவு ஒழுக்கத்தில் தலைவனின் மேல் விருப்பம் தோன்றிய தலைவி தான் அறத்தோடு நிற்றலை தொடங்கி வைக்க கூடியவள். தன் உயிரினும் மேலான தோழிக்கு தலைவியும், தன்னை பெற்ற தாயாகிய செவிலிக்கு தோழியும், தலைவியை பெற்றெடுத்த நற்றாய்க்கு செவிலியும், தன் இல்ல தலைவனாகிய தந்தைக்கு நற்றாயும், அறத்தோடு நிற்க வேண்டும் என்பதே சங்க இலக்கியம் காட்டும் மரபாகும்.

களவு ஒழுக்கத்தில் ஒழுகும் தலைவியின் அகவாழ்வை கற்பொழுக்க மாக மாற்றி சமுதாயத்தில் அவளுக்கு நன்மதிப்பை பெற்று தருவதில் தோழி மிகுந்த அக்கறை உடையவளாக செயல் படுகிறாள். அதனாலையே தலைவியின் உடல் மெலிவு கண்டு தாய் வினவியதும் தலைவியொருத்தி தோழியிடம் அறத்தோடு நிற்கிறாள்.

**"மலர் தார் மார்பன் நின்றோர் கண்டோர்**
**பலர் தில், வாழி, தோழி! அவருள்**
**ஆர் இருட் கங்குல் அணையொடு பொருந்தி**
**ஓர் யான் ஆகுவது எவன் கொல்**
**நீர் வார் கண்ணொடு நெகிழ் தோளேனே?"**
**(அகம்.82)**

## தோழி அறத்தோடு நிற்றல்

நாணமும் கற்பும் மகளிர் காக்கத் தகும் இரு பேரொழுக்கங்கள். ஆனால் நாணத்தை விட்டேனும் கற்பை தலையாக போற்றி ஒழுக வேண்டும் என்பது தமிழர் கண்ட மனையியல் கோட்பாடு. அக இலக்கியத்தில் தோழி எல்லையற்ற உரிமையுடையவள். தலைவியின் உரிமையையும் செயலையும் தன் உரிமையாக கொள்ளும் உறவு உடையவள் எனினும் தலைவியின் விருப்பின்றி அறத்தோடு நிற்கும் உரிமை மட்டும் தோழிக்கு இல்லை. இதனை

**"அறத்தோடு நிற்கும் காலத் தன்றி**
**அறத்தியல் மரபிலர் தோழி"[13]**

என்று தொல்காப்பியர் சுட்டுகிறார்–.

### வரைவு கடாதல்

சங்க கால மக்கள் இல்லற வாழ்க்கையை பெரிதும் பாராட்டி வந்தனர். ஒருவனும் ஒருத்தியும் இணைந்து வாழ்வாங்கு வாழ்வா ராயின் அவர்களுக்கு வீடுபேறு தானாக வந்தெய்தும் என்பது தமிழரின் கொள்கையாக இருந்தது. அக் காரணத்தினாலையே அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பாலேயே தமிழரின் பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக கொள்வது மரபு.

“களவு ஒழுக்கமானது இரண்டு மாத காலத்திற்கு மேல் நீடிக்க கூடாது என்பது மரபு”[14] அதனாலையே தோழியும் தலைவியின் மேல் அக்கறை கொண்டு பண்பாட்டிற்கு ஏற்ப தலைவியின் களவு ஒழுக்கத்தை கற்பொழுக்கமாக மாற்ற முற்படுகிறாள்.

தோழி ஒருத்தி தலைவனிடம் தலைவியின் களவு ஒழுக்கம் பலருக்கு தெரியும் முன்பே விரைவில் அவனை மணந்து கொள் என்று கூறுகிறாள். இதனை,

> **“என் ஆம்கொல்லோ தோழி - மயங்கிய**
> **மையற் பெண்டிற்கு நொவ்வலாக**
> **ஆடிய பின்னும் வாடிய மேனி**
> **பண்டையின் சிறாவதுஆயின் இம்மறை**
> **அலர் ஆகாமையோ அரிதே அஃ்தான்று”**
> **(அகம்.98)**

என்ற பாடல் உணர்த்துகின்றது. இப் பாடலில் அடிப்படையாக வேலன் வெறியாட்டு நிகழ்ந்தபின் இக்களவு ஒழுக்கம் பலரும் தூற்றும் வண்ணம் இருந்துவிடக் கூடாது என்ற பண்பாட்டு உணர்வுடன் தோழி அடையும் கவலையும் புலனாகின்றது.

### கற்பின் மாண்பு

பெண் தன் உயிரைக் காட்டிலும் நாணத்தை போற்ற வேண்டும். அந் நாணத்தை விட கற்பு சிறந்தது என போற்ற வேண்டும். கற்பை பேணுவதற்கு உயிர், நாணம் இவற்றை விட வேண்டி இருந்தால் தயங்குதல் கூடாது என்பதனை,

> **“உயிரினும் சிறந்தன்று நானே! நானினும்**
> **செய்தீர் காட்சிக் கற்பு சிறந்தன்று என**
> **தொல் லோர் கிளவி”**[15]

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் கற்பின் திறத்தை பற்றி குறிப்பிட்டுள்ளார்.

### திருமணப் பண்பாடு

சங்க கால திருமணத்தில் மணமக்களுக்கு சடங்குகள் செய்யப் பட்டன. மணமகளை அலங்கரித்து அருகம்புல் கிழங்கில் உள்ள குளிர்ச்சியான அருகம்புல்லை வெண்மையான நூலில் கட்டி அணிவித்துள்ளனர். அக்கால திருமணத்தில் தாலி கட்டும் வழக்கம் இல்லை. எனினும் முதிய மங்கல மகளிர் நால்வர் கூடி நெல்லும் பூவும் கலந்த நீரை சொரிந்து வாழ்த்துதல் மரபு இருந்துள்ளதை

> **“நீரோடு சொரிந்த ஈர்இதழ் அலரி**
> **பல் இருங் கதுப்பின் நெல்லொடு**
> **தயங்க”. (அகம்.86)**

என்ற அடிகள் தெளிவுபடுத்துகின்றன. சான்றோர் முன்னிலையில் திருமணம் நடைபெற்றுள்ளது. சுற்றத்தாரும் திருமண நிகழ்வில் பங்கேற்று உள்ளனர். எட்டுத்தொகை நூல்களில் அக நானூற்றில் மட்டும்தான் சங்ககால திருமணம் முறை பெரும்பாலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

### விருந்தோம்பல் பண்பு

தமிழர் பண்பாட்டின் சிகரமாக விருந்தோம்பல் பண்பு விளங்குகிறது. இல்லறத்தின் சிறப்புகளில் ஒன்று விருந் தோம்பல் பண்பாடு. தன் இல்லம் நாடி வருபவரை உபசரித்தல் இல்லத்தோர் கடமையாகும். தமிழர் தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை ஓம்புவதும்

சுற்றத்தாரை உபசரிப்பதும் இரப்பார்க்கு ஈதலும் முக்கிய பண்பாக போற்றி வந்தார்கள்.

விருந்தோம்பல் என்பது புதிய வர்களை வரவேற்று உணவு அளித்தலும் பசி என்று வந்தவர்களுக்கு உண்ண உணவு கொடுப்பதும் ஆகும். இதனையே "விருந்தே தானே புதுவதன் மேற்றே" என்று தொல்காப்பியம் சுற்றுகின்றது.

இல்லறத்தோர் ஒரு புதியவரின் காதடைப்பு நீங்க இளைய எருதுகளின் கழுத்தில் கட்டி உள்ள மூங்கில் குழாயில் புளிச்சோற்றை அடைத்து தேக்கிலையில் வைத்து பகிர்ந்து அளித்தனர் என்பதை

> "வருவழி வம்பலர் பேணி கோவலர்
> மழவிடைப் பூட்டிய குழா அய்த் தீம்புளி
> செவி அடை தீரத் தேக்கிலை பகுக்கும்"
> (அகம்.311)

இப்பாடலில் பசியில் காது அடைத்து விடும் என்ற பேச்சு வழக்கில் கூறும் வழக்கத்தையும் குறிக்கின்றது. "பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்" என்ற வள்ளுவர் மொழிக்கு ஏற்ப அகநானூற்று தலைவனும் தலைவியும் உணவை பகுத்து தேக்கிலையில் விருந்தோம்பலை செய்ததை இது விளக்கி நிற்கின்றது.

## தலைவியை விட ஏகை சிறந்தது என்ற பண்பு

தலைவியின் அன்பை விட சிறந்தது ஈகை என எட்டுத்தொகை நூல்கள் குறிப்பிடுகின்றன. ஔவையார் ஆத்திசூடியில் "ஈவது விளக்கேல்" என்றும் "ஈதல் இன்பம்" என்றும் குறிப் பிட்டுள்ளார். பிறருக்கு கொடுப்பதன் மூலம் ஏற்படும் மகிழ்ச்சியை சான்றோர் உணர்வர். பிறருக்கு கொடுப்பதன் மூலம் கொடுப்பவர்களின் செல்வம் குறையாது கொடுப்பவர்களின் செல்வம் அதிகரித்துக் கொண்டே போகும். ஈதலின் சிறப்பை உணர்ந்த நம் பழந்தமிழர் பொருளீட்டலின் அவசியத்தையும் நன்கு உணர்ந்திருந்தனர். பொருளீட்டத் தூண்டிய நெஞ்சிடம் தலைவன்,

> "இவளினும் சிறந்தன்று ஈதல்".
> (அகம்.131)

எனக் குறிப்பிட்டுள்ளான்.

எனவே ஈதல் என்னும் கொடை பண்பாட்டில் தமிழர்களின் உன்னதத்தை அறிந்து கொள்ள முடிகின்றது.

## முடிவுரை

சங்க கால தமிழரின் வாழ்க்கை மனித சமூகத்திற்கு ஒரு சான்றாக அமைகிறது. பழந்தமிழரின் உணர்வு களையும் எண்ணங்களையும் காட்டும் விதமாக இலக்கியங்களில் பண்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அக்கால மக்கள் சிறந்த பண்பாட்டுக் கூறுகளை தமக்குள் வகுத்துக் கொண்டு வாழ்ந்துள்ளனர். பழந்தமிழர்கள் விட்டுச் சென்ற பண்பாட்டு எச்சங்கள் இன்றும் சமுதாயத்திற்கு ஒழுங்கு முறையான வாழ்க்கை முறையினை எடுத்துக் காட்டும் விதமாக அமைகின்றது என்பதனை இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. ந.சி. கந்தையா, (தொ.ஆ.) தமிழ் அகராதி, பக்.469
2. தொல்.உரியியல், நூ.1
3. பிங்கல முனிவர், பிங்கல நிகண்டு, பக்.460
4. எஸ்.சௌந்திரபாண்டியன், தமிழ் அகராதி, பக்.58
5. Tamil Lexicon Vol.IV, Part 1, (1982) P.2454.
6. பா.ரா. சுப்பிரமணியன், கிரியாவின் தற்கால தமிழ அகராதி, பக்.269

7. அ.மு. பரம சிவானந்தம், சமுதாயமும் பண்பாடும், பக்.225
8. க.த. திருநாவுக்கரசு, தமிழ் பண்பாடு, பக்.1
9. அ. கிருட்டிணன், தமிழர் பண் பாட்டியல், பக்.2
10. புறம்.182
11. குறுந்.3
12. வ.சுப.மாணிக்கம், தமிழ்க் காதல், ப.1
13. தொல்.கற்.45
14. இரா.ஜெகதீசன் (ப.ஆ.) அகநானூறு ஆய்வு கோவை, பக்.1428
15. தொல்.கள.23